


விகடன் பிரசுரம்

பாகம்-1

தென்னாட்டுச் செல்வங்கள்




படைப்பு:
'இறையருள் ஓவியர்'
சில்பி

தென்னாட்டுச் செல்வங்கள்

(பாகம் 1)

தென்னாட்டுச் செல்வங்கள்

(பாகம் 1)



படைப்பு:

'இறையருள் ஓவியர்' **சில்பி**

விகடன்
பிரசுரம்

Title :
THENNAATTU SELVANGAL (Volume I)
SILPI

ISBN : 978-81-8476-440-6

விகடன் பிரசுரம்: 674

நூல் தலைப்பு:
தென்னாட்டுச் செல்வங்கள் (பாகம் 1)

படைப்பு :
அமரர் சில்பி

முதற்பதிப்பு : நவம்பர், 2012

விலை : ₹ 650
(இரண்டு பாகங்கள் சேர்த்து)

பதிப்பாளர்:
பா.சீனிவாசன்

ஆசிரியர்:
இரா.சரவணன்

முதன்மை உதவி ஆசிரியர்:
அ.அன்பழகன்

தலைமை உதவி ஆசிரியர்கள்:
எம்.நாகமணி, கே.பாசுமணி, சிவராஜ்

முதன்மை வடிவமைப்பு:
மு.ராம்குமார்

விகடன் பிரசுரம்
757, அண்ணா சாலை, சென்னை-600002.
எடிட்டோரியல் பிரிவு போன்: 044-28524074 / 84
விற்பனை பிரிவு போன்: 044-42634283 / 84
e-mail: books@vikatan.com

சிலை வடிவச் சிற்பங்களின் சித்திர வேலைப்பாடு!

கருவிலேயே கலைஞனாக உருவெடுப்பவர்களின் புகழ், காலத்தால் மறையாது. அவர்கள் மெய் உருக உழைத்த உழைப்பின் பலன்களை எப்பேர்ப்பட்ட சக்தியாலும் கரைத்துவிட முடியாது. தெய்வீகச் சிற்பங்கள் தரும் ஆத்ம அமைதியை நாடிச் செல்லும் எண்ணத்தின் வெளிப்பாடு, மாபெரும் நோன்பாகவே அமைந்துவிடும். அப்படி, சிலை வடிவச் சிற்பங்களைச் சித்திர வேலைப்பாடுகளாக வெளியிடுவது, அதுவும் தெய்வீகச் சிற்பங்களைத் தெளிவான சித்திரங்களாக வரைவது என்பது, கிடைத்தற்கரிய பெரும்பேறு.


தீர்க்கமான பார்வை, தெய்வீக மோன நிலை, தூரிகையைத் தாங்கிய விரல்கள், உதடுகளில் புன்னகை பிரியாத அழகு மலர்ச்சி, நெற்றியில் படிப்படியான விபூதிக் கோடுகள், நடுவில் குங்குமப் பொட்டு இவையே மாபெரும் கலைஞனாக விளங்கும் சில்பியின் மறக்க முடியாத அடையாளங்கள். வரைகலையையே தன் வாழ்வாக எண்ணி, வாழ்வின் ஒவ்வொரு கணமும் தன் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தி, ஆன்மாவின் ரகசிய தாக்கங்களையும், அறிவு தொட முடியாத ஞானத்தின் சிகரங்களையும், வார்த்தைகளால் விளக்க முடியாத தத்துவங்களையும் தன் ஓவியங்களில் வெளிப்படுத்தியுள்ளார் சில்பி.

கருவறைக்குள் வீற்றிருக்கும் தெய்வங்களின் அமரத்துவம் வாய்ந்த வண்ண ஓவியங்கள் மட்டுமின்றி மதுரை, கிருஷ்ணாபுரம், திருநெல்வேலி, தென்காசி, சங்கரன்கோவில், தாடிக்கொம்பு, ஆவுடையார்கோவில்... எனத் தமிழகமெங்கும் பரவிக் கிடக்கும் திருக்கோயில்களின் ராஜ கோபுரங்கள், விமானங்கள், தூண்கள், மண்டபங்கள், சிலை ரூபங்கள், கலாசாலைகள்... எனச் சிற்பக் கலைச் செல்வங்களைத் திரட்சியான கோட்டோவியங்களாகப் பதிவு செய்துள்ளார் சில்பி. மேலும், சித்திரங்களே சிலாகித்தபடி சொல்லும் புராண - இதிகாச நிகழ்வுகளைத் தொகுத்து, சொக்கத் தமிழில் அவர் சொல்லியிருக்கும் அழகும் அற்புதமானது.

1948 - ஜனவரி தொடங்கி 1961 - ஏப்ரல் வரையில் விகடன் இதழில் சித்திரப் படைப்பில் முத்திரை பதித்து வெளிவந்தவற்றைத் தொகுத்து, வாசகர்களுக்கு நூல் வடிவில் கலை விருந்து படைப்பதில், விகடன் பிரசுரம் பெருமைகொள்கிறது.


பல்வேறு விதமான ஆராய்ச்சிகளுக்கும், தொல்பொருள் தொடர்பான நூல் வடிவங்களுக்கும் துணை புரியும் அற்புதத் தொகுப்பு இது. நூலினுள் நுழைந்துவிட்டால், அதன் அற்புத சுவையிலிருந்து மீளவும் மனம் வராது. இந்த நூல், கலா ரசிகர்களின் கலைக் கருவூலமாகவும், படித்து, ரசித்துப் பாதுகாக்க வேண்டிய பொக்கிஷமாகவும் என்றென்றும் விளங்குவது திண்ணம்.

– ஆசிரியர்



அமரர் சில்பி

ஒரு நண்பர்...



"64-வது நாயன்மார் சில்பி!"

கோபுலு

அமரர் எஸ்.எஸ்.வாசன் அவர்கள், 1941-ம் வருடம் ஆனந்த விகடன் பக்கங்களைப் புதுப் பொலிவோடு உருவாக்க விரும்பினார். பத்திரிகையைத் திறந்த உடனே கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கும் வகையில் அருமையான சித்திரங்களும் இருக்கவேண்டும் என விரும்பினார். அவருடைய எண்ணத்தை ஈடேற்றும் விதமாக பொறுப்பாசிரியர் தேவன் அவர்களும் ஆர்வமாகச் செயல்படுவார். அப்போதுதான், எஸ்.எஸ்.வாசன், தேவன், மாலி ஆகியோர் ஒன்று சேர்ந்து தீபாவளி மலருக்காக புதிய கான்செப்ட் கொண்டுவந்தார்கள்.

விகடனுக்கென்றே திறமையான ஓவியர்கள் காலம் காலமாக அமைவார்கள்; அது விகடனின் வரம். அந்த நேரத்தில், விகடன் ஓவியக் குழுவில் கோலோச்சிக்கொண்டிருந்தவர் என் குருநாதர் 'மாலி' என்கிற மகாலிங்கம் அவர்கள். புதிய ஓவியர்களை விகடனுக்கு அறிமுகப்படுத்த வேண்டும் என்று தணியாத தாகம்கொண்டவர். அவர், 1941-ல் அறிமுகப்படுத்திய ஓவியர்கள்தான் 'சில்பி'யும் நானும். 'புலியூர் மகாதேவன் ஸ்ரீநிவாஸன்' என்ற பெயரைத்தான் பின்னாளில் 'சில்பி' என்று மாற்றி வைத்தார் மாலி.

அப்பா மகாதேவன் நாமக்கல்லில் மரக்கடை வைத்திருந்தார். 1919-ல் பிறந்த ஸ்ரீநிவாஸன் அங்கேயே படித்து வளர்ந்து வந்தார். சிறுவயதிலேயே மற்ற பாடங்களைப் படிப்பதைவிட சித்திரங்கள் வரைவதில்தான் அதிக நாட்டம் கொண்டிருந்தார். நாமக்கல் ஆஞ்சநேயர் கோயிலில் ஓர் ஓரமாக அமர்ந்து சிலைகளையும் தூண்களையும் பார்த்து வரைந்துகொண்டே இருப்பார். தேசியப் பெருங்கவிஞர் நாமக்கல் ராமலிங்கம் பிள்ளை அவர்கள் சிறந்த ஓவியராகவும் இருந்ததால் ஸ்ரீநிவாஸனின் ஓவியத் திறமையை அறிந்து, சென்னை-எழும்பூரில் உள்ள ஓவியப் பள்ளியில் (SCHOOL OF ARTS) சேர்ந்து மேலும் பயிற்சி பெறும்படி அறிவுரை கூறி அனுப்பினார்.

அப்போது, ஓவியப் பள்ளியின் முதல்வராக இருந்த தேவி பிரசாத் ராய் சௌத்ரி அவர்கள், ஸ்ரீநிவாஸனின் ஓவியத் திறமையைப் பாராட்டி, பள்ளியில் சேர்த்துக்கொண்டு அவருக்குப் பக்கபலமாக இருந்து ஊக்கம் கொடுத்தார். அப்போது இவருடைய கையில் பணம் இருக்காது. கன்னிகா பரமேஸ்வரி தர்மசாலையில் தங்கி இருந்து, சாப்பிட்டுவிட்டு ஓவியப் பள்ளிக்குச் செல்வார்.

அப்போதுதான், (1941-ல்) விகடனுக்கு தன் ஓவியங்களை எடுத்துச் சென்று மாலியைச் சந்தித்தார். அவருடைய ஓவியங்களைப் பார்த்து மனம் குளிர்ந்த மாலி, அப்போது தயாராகிக்கொண்டு இருந்த விகடன் தீபாவளி மலரில் அனைத்து ஓவியங்களையும் வெளியிட ஏற்பாடு செய்தார். அதில் அவருடைய கையெழுத்து 'பி.எம்.ஸ்ரீநிவாஸன்' என்றுதான் இருக்கும்.

கதைகளுக்குப் படம் வரைவதைவிட கோயில் கோபுரங்கள், கருவறைச் சிலைகளை வரையச் சொல்லித்தான் மாலி அவருக்கு ஊக்கம் கொடுப்பார். "சிலை வடிப்பவர் சிற்பி... சிலைகளுக்குச் சித்திரமாக உயிர் கொடுப்பவரும் 'சில்பி'தான்" என்று அவருடைய பெயரை மாற்றி உலகம் அறியச் செய்தார் மாலி.

நான் முதன்முதலில் சில்பியைப் பார்த்தது கும்பகோணத்தில்தான். 1941-ல், அங்கிருக்கும் ஓவியப் பள்ளியில் நடந்த ஓவியக் கண்காட்சியைப் பார்க்க மாலியுடன் சில்பியும் வந்திருந்தார். என்னுடைய ஓவியங்களைப் பார்த்துவிட்டு 'நீங்கள் வரைந்த ஓவியமா... நல்லா இருக்கே' என்றவர், தான் சென்னை ஓவியப் பள்ளியில் பயிற்சி பெற்று வருவதைத் தெரிவித்தார். மாலி அவர்களும் என்னிடம், 'சென்னைக்கு வந்தால் அலுவலகத்துக்கு வாருங்களேன்' என்றார். அதன் பிறகுதான், நானும் சென்னைக்கு வந்து குருநாதர் மாலி அவர்களைச் சந்தித்தேன். நான் வரைந்து கொடுத்த ஒரு ஜோக் படத்தை விகடன் அட்டைப்படமாக வெளியிட்டார்கள்.

1945, ஜனவரி முதல் தேதி, நானும் சில்பியும் விகடனில் முழுநேர ஓவியர்களாகச் சேர்ந்தோம்.



பரணீதரன், சிவம், சாமா, சில்பி, ஸிம்ஹா, சித்ரலேகா, (பின்புறம்) ஸாரதி, கோபுலு, சீனிவாஸராவ்

சில்பி, என்னைவிட ஐந்து வயது மூத்தவர். அதிகமாகச் சிரிக்கமாட்டார். அரைப் புன்னகையில் உதடுகள் பிரியாத முகமலர்ச்சியோடு இருப்பார். நெற்றி அகலமாக இருக்கும். அதில் மூன்று திருநீற்றுக் கோடுகளும், குங்குமப் பொட்டும் ஓவியம்போலவே மிகவும் நேர்த்தியாக இருக்கும். மிகவும் ஆசாரமாக இருப்பார். சிவன் மீது பூரண பக்தி. காபி குடிக்க மாட்டார். விகடன் அலுவலகத்துக்குச் சாதாரணமாகத்தான் வருவார், போவார். படாடோபம் இருக்காது.

'விகடன் தீபாவளி மலர்' தயார் செய்யும்போதெல்லாம் மாலியுடன், சில்பியும் நானும் சேர்ந்தே இருப்போம். பரணீதரன், ஸிம்ஹா, சித்ரலேகா, ஸாரதி, சிவம், சாமா எல்லோரும், 'தீபாவளி மலர்' வேலைகள் முடியும் வரை இரவும் பகலும் கூடவே இருப்பார்கள். ஒரே திருவிழாதான்.

1946-ல், குருநாதர் மாலி உடல்நலக் குறைவால் மறைந்துவிட்டார். அதன் பிறகு, 1948-ல், 'தென்னாட்டுச் செல்வங்கள்' என்கிற தலைப்பில், சில்பியின் ஓவியங்களை விகடனில் ஒவ்வொரு வாரமும் வெளியிட வேண்டும் என்று தேவன் ஏற்பாடு செய்தார். அதற்காக தமிழ்நாட்டில் இருக்கின்ற பிரபலமான கோயில்களில் உள்ள சிற்பங்களை வரைய ஆயத்தம் செய்துகொள்ளச் சொன்னார்.

உடனே சில்பி, காஞ்சிபுரம் சென்று மகா பெரியவரிடம் ஆசீர்வாதம் வாங்கிக்கொண்டார். 'சிவபுராணம்', 'சிவஸ்தல மஞ்சரி', 'சிவநேச சித்தர்கள்', 'ஸூத்ரமாலா' போன்ற புத்தகங்களை வாங்கிவந்து படிப்பார்.

படம் வரைய, சாதாரண 'இண்டியன் இங்க்'தான் பயன்படுத்துவார், அதுதான் Year proof. மைக்கூடு, வண்ண வில்லைகள், பேப்பர், பேனா, பென்சில், பிரஷ் எல்லாமே அலுவலகத்தில் கொடுப்பார்கள்.

மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுக்குப் போய் அங்கிருக்கும் பிள்ளையார் சிலையை முதன்முதலாக வரைவது என்று முடிவானது. மதுரையில்தான் முக்குறுணி பிள்ளையார், சித்தி-புத்தி பிள்ளையார், பானை வயிற்றுப் பிள்ளையார்... என விதவிதமான பிரமாண்டமான பிள்ளையார் சிலைகள் இருக்கும். அப்படி 'ஊர்த்வ கணபதி' சிலையைத்தான் முதலில் வரைந்து 'பிள்ளையார் சுழி' போட்டார் சில்பி. தான் வரைந்த சிலைகளைப் பற்றிய குறிப்புகளை ஒரு தாளில் எழுதிக் கொண்டுவந்து, அந்தப் படங்களைப் பற்றி தேவனிடம் விளக்கிச் சொல்வார். தேவன்தான் அதை நயமாக எழுதுவார்.

கோயில்களுக்குக் கிளம்புவது என்றால் உற்சாகமாகக் கிளம்பிவிடுவார் சில்பி. தனியாகத்தான் போவார். விகடன் ஆபீஸில் 200 ரூபாய் அட்வான்ஸ் வாங்கிக்கொள்வார். கோயில் பக்கத்திலேயே இருக்கும் லாட்ஜ்களில் '5 ரூபாய் அறை' எடுத்துத்தான் தங்குவார். ஹோட்டல்களில் சூடாக பார்சல் வாங்கி வந்து அறையில் வைத்துச் சாப்பிடுவார். நாலணா சாப்பாடு. வெங்காயம் சேர்த்துக்கொள்ளமாட்டார். அனாவசிய செலவு செய்யவேமாட்டார். செலவு போக மீதிப் பணத்தை ஆபீஸுக்கு வந்ததும் ஒப்படைத்துவிடுவார்.

அவருடைய துணிகளை அவரே துவைத்து உடுத்திக்கொள்வார். பச்சைத் தண்ணீரில்தான் குளிப்பார். குளிக்காமல் எந்த வேலையையும் தொடங்கமாட்டார். நாள் தவறாமல் பூஜை செய்வார். காஞ்சிப் பெரியவரை திசைநோக்கி வணங்கி எழுவார்.

எந்தக் கோயிலுக்குச் சென்றாலும், முதலில் அந்தக் கோயில் குருக்களைப் பழகிக்கொள்வார். குருக்கள் வீட்டில் சாப்பிடுவார். அவருடன் காலை, மதியம், மாலை பூஜைகளில் கலந்துகொள்வார். கோயிலில் மக்கள் கூட்டம் அடங்கிய பிறகு, கருவறையின் முன் உட்கார்ந்தார் என்றால், 'கருமமே கண்ணாயினார்'தான். வேலையை முடிக்காமல் தூங்கமாட்டார்.

வண்ண ஓவியங்கள் வரைவதில் மிகவும் தேர்ந்தவர். கருவறையில் இருக்கும் சிலையை, கற்பனையைச் சேர்த்து வரையமாட்டார். உள்ளது உள்ளபடி, நிழல் ஒளியோடு, கண்ணால் கண்டதை மட்டுமே வரைவார்.

சில்பியின் ஓவியத்தில் தெய்வங்கள் தாமே வந்து நிற்கக் காரணம் அவருடைய பக்திதான். 'கோயில் கருவறையில் இருக்கும் தூண்டாமணி விளக்கின் மங்கிய ஒளியில் அந்த அருள் முகத்தை எப்படித்தான் வரைகிறாரோ?' என்ற ஆச்சரியம் எல்லோருக்கும் இருக்கும். 'வண்ணத்தின் கலவைகளை சரியான அளவில் அமைத்துக்கொள்வதுதான் எனது செயல். காட்சி கொடுக்கும் அந்த தெய்வம்தான் என் விரல்களோடு இணைந்து தம்மையே வரைந்துகொள்ளும்! படைப்பின் முழுமைக்குக்

காரணம் அந்தப் பரம்பொருள்தான்!' என்று சில்பி அமைதியாகச் சொல்வார்.

தெய்வ ஓவியங்களைப் பூர்த்தி செய்யும்போது, அந்த தெய்வங்களுக்கு, தானே ஆபரணங்களைப் பூட்டுவது போல பரவசமடைவார். வரைந்து முடித்த ஓவியங்களை காஞ்சிபுரத்துக்கு எடுத்துச் சென்று பரமாச்சாரியாரிடம் காட்டி, பூரண ஆசி பெற்றுக் கொண்டுதான் திரும்புவார். அதன் பிறகு, அந்தப் படம் அச்சாகி வெளியில் வரும் போது நிறைய வீடுகள் கோயிலாக மாறியிருக்கும்!



கோபுலுவின் திருமணத்தின்போது
குடை பிடிக்கிறார்
மாப்பிள்ளைத் தோழர் 'சில்பி'!

குறைந்த வெளிச்சத்தில்கூட இவ்வளவு நுணுக்கமாகப் படம் வரைந்து குவித்த சில்பி, கடைசிக் காலம் வரை கண்ணாடி போட்டுக்கொள்ளாமல் கூர்மையான பார்வையுடன் இருந்தார்.

விகடனில் 22 வருடங்கள் பணியாற்றி இருக்கிறார். அலுவலகத்தில் சில்பியுடன் பழகும்போது, உடன் வேலை செய்யும் ஓவியர் என்றுதான் தெரியுமே தவிர, மிகப் பெரிய ஓவிய மேதையாக, தமிழக மக்கள் மனதில் பதியப்போகிறார் என்று அப்போது தெரியவில்லை. இறைவனின் அருளாசி பெற்ற சில்பி, கொண்டாடப் படவேண்டியவர் என்பதைப் போகப்போகத்தான் அனைவரும் புரிந்துகொண்டார்கள்.

சிவபெருமானுக்குத் தொண்டு செய்தே அவரது புகழைப் பரப்பி, அவனின் திருவடி சேர்ந்தவர்கள் 63 நாயன்மார்கள். சிவபெருமானை வரைந்தே அவரது புகழைப் பரப்பிய சில்பியை, '64-வது நாயன்மார்' என்றே அழைக்கலாம்.

1951-ல், என்னுடைய திருமணம் கும்பகோணத்தில் நடைபெற்றபோது நிறைய ஓவியர்கள் வந்திருந்தார்கள். ஊர்வலத்தில் சில்பிதான் எனக்கு குடை பிடித்து நடந்து வந்தார். புகைப்படத்தைப் பாருங்கள்... அவருடைய எளிமையான தோற்றம் தெரியும்.

அவருடன், திருப்பதி, தஞ்சாவூர், கும்பகோணம், திருவையாறு, மகாபலிபுரம்... இப்படி நிறைய ஊர்களுக்குச் சென்றிருக்கிறேன். அவருடன் திருவையாறு சென்றிருந்தபோது, தியாக பிரம்மம் வீட்டில் ஒரு வாரம் தங்கி இருந்து, தினமும் காவிரி ஆற்றில் குளித்துவிட்டு கோயிலுக்குச் செல்வோம். மண்டபத் தூண்களை இவர் வரையும்போது மக்கள் அமைதியாக நின்று வேடிக்கைப் பார்ப்பார்கள்.

1952-ல் திருப்பதிக்குச் சென்று ஒரு வாரம் தங்கி இருந்தோம். ஸ்பெஷலாகக் கவனித்தார்கள். கோயிலுக்குள் எங்கு சென்றாலும் தடை இல்லை. குருக்கள் மூலமாக காலை பிரசாதம், இரவு பிரசாதம் வந்துவிடும். கூட்டம் குறைந்ததும், சந்நிதி ஓரத்தில் நிலைப்படியில் உட்கார்ந்து படம் வரைவார். இரவில் வெகுநேரம் உட்கார்ந்திருப்பார்.

மயிலாப்பூரில் சில்பி இருந்த காலத்தில், தீபாவளியைக் கொண்டாட அவரும் நானும், கையில் தீபாவளி மலருடன் கொத்தமங்கலம் சுப்பு வீட்டுக்குச் சென்றுவிடுவோம். அந்தப் பகுதி முழுவதும் வெடி வெடித்து ஒரே கொண்டாட்டமாக இருக்கும்.

உச்சந்தலையில் சின்ன சிண்டு முடிந்திருப்பார். ஒரு முறை, முடிவெட்டச் சென்றபோது பார்பர் அதை வெட்டிவிட்டார். உடனே கோபித்துக்கொண்டவர் எதுவும் பேசாமல் துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டு எழுந்து வந்துவிட்டார். அவருடைய கேரக்டரை ஜோக்காகப் போட்டு அவரிடமே காட்டியிருக்கிறேன். ஹ்யூமர் சென்ஸ் உள்ளவர். ஜோக்கை ரசிப்பார். மென்மையாகச் சிரிப்பார்.

1967-ல், விகடனில் இருந்து வெளியே வந்த சில்பி, பம்பாய் சென்று 'பவன்ஸ் ஜர்னல்' பத்திரிகையில் வேலைக்குச் சேர்ந்தார்.


சில்பியின் மனைவி பெயர் பத்மா. வீட்டில் சில்பி கடைப்பிடித்து வந்த ஆசாரம் குறையாமல் பணிவிடை செய்து வந்தவர். இரண்டு குழந்தைகள் - மகன் மகாலிங்கம், மகள் சாரதா. 1968-ல், மனைவி பத்மா உடல் நலக் குறைவால் காலமாகிவிட்டார். மனைவி இருந்தவரை உற்சாகமாகத்தான் இருந்தார். அதற்குப் பிறகு, குழந்தைகளின் மீது பற்று இருந்தாலும் ஒரு துறவியைப்போல தன் வாழ்க்கையை அமைத்துக்கொள்ள விரும்பி, வானப்பிரஸ்தம் மேற்கொண்டு, சென்னை-மயிலாப்பூர் அப்பர்சாமி தண்ணீர்த் துறைக்கு எதிரே வாடகை வீடு ஒன்றில்தான் தன் துறவு வாழ்க்கையைத் தொடங்கினார். அங்கே, பொள்ளாச்சி மகாலிங்கம் கொடுத்த வேலைகளை ஆர்வத்துடன் செய்து கொடுத்துக்கொண்டு இருந்தார். சிரமங்களையும், சந்தோஷங்களையும் சமமாகப் பாவிக்கக் கற்றுக்கொண்டார். மற்றவர்களுக்கும் உணர்த்துவார்.

1983, ஜனவரி மாதம், 'சில்பி' என்கிற ஓவியமேதை, தான் பிறந்ததற்கான அடையாளங்களை இந்தப் பூவுலகில் ஓவியங்களாக நிலைநிறுத்திவிட்டு, காலத்துடன் ஐக்கியமாகிவிட்டார்.

வரலாறு ஆகிவிட்ட 'சில்பி'யின் சிறப்புகளை, வருங்கால தலைமுறையினருக்குத் தெரியப்படுத்தும் வகையில், அவர் நமக்கு 'ஆனந்த விகடன்' வழியே அளித்த பொக்கிஷங்களைப் பிரதானப்படுத்தி, 'தென்னாட்டுச் செல்வங்கள்' என்னும் நூலை வெளியிட்டு அவரைப் பெருமைப்படுத்தும் விகடன் நிறுவனத்துக்கும், நிர்வாக இயக்குநர் பா.சீனிவாசன் அவர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சித்திரங்களின் பிறப்பிடங்கள்...


மதுரை 15
கிருஷ்ணாபுரம் 29
திருநெல்வேலி நெல்லையப்பர் 40
தென்காசி 43
சங்கரன்கோவில் 52
தாடிக்கொம்பு 54
ஆவுடையார்கோவில் 60
திருப்பேரூர் 72
குடந்தை 85
சுசீந்திரம் 94
ஸ்ரீவில்லிப்புத்தூர் 113
தாராசுரம் 122
பழையாறு 140
பட்டீஸ்வரம் 166
திருவலஞ்சுழி 172
திருப்பரங்குன்றம் 178
திருச்செந்தூர் 182
சுவாமிமலை 186
திருச்செங்கோடு 188
தாரமங்கலம் 194
நாமக்கல் 206
காஞ்சிபுரம் 219
வேலூர் 241
திருபுவனம் 273
கங்கைகொண்ட சோழபுரம் 312
தஞ்சை பெரிய கோயில் 332
கரந்தை 419
கண்டியூர் 430
திருப்பூந்துருத்தி 453
சிதம்பரம் 468



மதுரை... முதல்வன்!

சிற்பக் கலையின் சிகரமாக விளங்கும் செல்வங்களைப் புனிதமான தேவாலயங்களில் நாட்டி வைத்து என்றென்றும் அழியாதபடி நம் முன்னோர்கள் பத்திரம் செய்திருக்கிறார்கள். தூண்தோறும், மண்டபம் தோறும் சிற்பிகள் தங்கள் கைத்திறமையையும் மனோ தர்மத்தையும் காண்பித்து, கல்லிலே கனவுகளை மெய்ப்பித்து இருக்கிறார்கள்; உயிரற்ற கற்பாறைகளிலும் நவரசங்களைக் கொண்டுவந்து இருக்கிறார்கள். மெழுகைக் குடைவதுபோல் பாறையைக் குடைந்து, பிரமாண்டமான அளவுகளில், சிந்திக்கவும் முடியாத வகைகளில், சிற்றுளிகளை ஏவி, இந்த மேதாவிகள் சிருஷ்டித்துள்ள காரியங்கள் பிரமிக்க வைக்கின்றன. இம்மாதிரியான அமரத்வம் பெற்ற சிற்பங்களில் சிலவற்றை, இதோ உங்கள் பார்வைக்கு!

மதுரை மீனாட்சி கோயிலில், ஆயிரங்கால் மண்டபத்தின் முன்வாசல் ஸ்தம்பத்தில் காணப்படும் ஊர்த்வ கணபதிதான் இங்குள்ள சிற்பம். சுமார் 400 வருடங்களுக்குமுன், நாயகர் ஆட்சிக்காலத்தில் இந்தச் சிற்பம் உருவாக்கப்பட்டது என்கிறது சரித்திரம்.



நடராஜ நடனம்!

சிற்பிகளின் உள்ளத்தையும் ரசிகர்களின் மனத்தையும் ஏக காலத்தில் வசிகரித்திருப்பது நடராஜரின் திருவுருவம்.

இந்தச் சிற்பங்களிலே சிறப்பானதும், ஜாக்கிரதையாகப் பாதுகாக்கப்பட்டு வந்திருப்பதும் ஆன ஒன்றுதான் இங்கு இருப்பது. ஒரே கற்பாறையில் அபூர்வமான வேலைப்பாடுகளுடன் இதை சிருஷ்டி செய்தவர் சில்பாச்சாரியர் ஸுமந்திரமூர்த்தி என்பவர். இதை அவர் உருவாக்கி வரும்போது, கலை ஆர்வம் பூண்ட மதுரை மன்னன், சிற்பிக்கு வெற்றிலை மடித்துக் கொடுத்ததாகவும் ஒரு கதை உண்டு. கதை உண்மையோ இல்லையோ, மன்னர்கள் ஊக்கி வளர்த்ததனாலே இந்தக் கலை, உலகுக்கே அதிசயமாக நம் நாட்டிலே வளர்ந்திருக்கிறது.

மதுரைப் புது மண்டபத்தில் கம்பீரமாக நிமிர்ந்து நிற்கும் இந்தச் சிற்பம், மேற்கூறிய உண்மைக்கு ஒரு சாசுவதமான சாசனமாக விளங்குகிறது என்பதில் சந்தேகமில்லை.


காளி தாண்டவம்!

நாட்டியப் போட்டி மிகுந்த உத்வேகத்துடன் நடக்கிறது. நடனம் புரிபவர்கள் என்ன சாமான்ய மானவர்களா? பிரபஞ்சத்தையே ஆட்டி வைக்கும் நடராஜனும், மகா காளியும்தான்!

நேரம் போகிறது; ஒருவருக்கொருவர் எள்ளளவேனும் சளைப்பவர்களாகக் காணோம். யார் தோற்றவர், யார் ஜயித்தவர் என்பது விளங்காமல் கலக்கமுறும் சமயத்திலே, நடராஜனின் குண்டலம் நழுவிக் கீழே விழ, அதைத் தமது கால் விரல்களாலே அவர் எடுத்துக் காதிலே அணிந்துகொள்கிறார்! 'காலைத் தூக்கி நின்றாடும் கடவுளை'க் கண்ட காளி, வெட்கித் தலைகுனிந்து, தன் தோல்வியை ஒப்புக்கொள்கிறாள். இந்தக் கதையைச் சித்திரிப்பவையே... எதிர்புறம் இருக்கும் நடராஜரின் சிற்பமும், கண்களிலே கனல் பறக்க ஆவேசத்துடன் ஆடும் இந்தக் காளியின் சிலாரூபமும்.

கதையிலே காளி தோற்றாள். ஆனால், சிற்பச் சிறப்பிலே, மேதையின் திறத்திலே, நாட்டிய ஆவேசத்திலே இந்தக் காளியை நடராஜரின் சிற்பத்துக்குச் சற்றும் சளைக்காதவாறு செய்திருக்கிறார் சில்பாச்சாரியர் ஸ்ரீஸுமந்திரமூர்த்தி. மதுரைப் புது மண்டபத்திலே எதிர் எதிரே நிற்கும் இந்த இரு சிற்பங்களும் கலைத் தெய்வத்துக்கு அழகுமிக்க காணிக்கைகள் என்பதில் அபிப்பிராய பேதமிராது.





கலைவாணி வீணை!

மகான்கள், மேதாவிகளுடைய உருவெளித் தோற்றங்களையும் பகட்டற்ற பான்மையையும் போலவே சிறப்பு மிகுந்த சிற்பங்களும் தங்கள் மேன்மையைச் சொல்லாது சொல்கின்றன. காலத் திரை மேலும் மேலும் மூடியும், சமூக பழக்கவழக்கங்கள் மாறுபாடு அடைந்து வந்தும்கூட அவை நின்ற நிலையிலேயே, எந்தக் காலத்திலும் பண்பட்ட மனங்களிலே தங்கள் யோக்யதையை அறிவுறுத்தி வந்திருக்கின்றன.

சிற்ப சாஸ்திரத்திலே சிகரமான செல்வங்களைச் சிருஷ்டி செய்துவிட்டுப் போன மேதாவிகள், தங்கள் சிருஷ்டிகளுக்கு என்று அமரத்வம் படைத்த தேவர்-தேவிகளையும், சிரஞ்சீவித்வம் பெற்ற கதைகளையுமே தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள். நாட்டின் நாகரிக வளர்ச்சிக்கும், கலை ஆர்வத்துக்கும் எடுத்துக்காட்டாக அவற்றை அமைத்தார்கள்.

மதுரை ஆயிரங்கால் மண்டபத்தில் காணப்படும் இந்தச் சிற்பச் செல்வம், ஓர் அழகுச் செல்வமும்கூட என்பதை மறுக்க முடியாது. சரஸ்வதிதேவியின் தாடங்கங்களும் கழுத்தணிகளும் இடையணிகளும் எழில் உருவமும், கரங்கள் தாங்கும் வீணையும் - எல்லாவற்றுக்கும் மேலாகப் பிரசன்னமான முகமண்டலத்திலே பரவியிருக்கும் கருணா விலாசமும், 'இந்தச் சிற்பம் உணர்ச்சியற்ற கருங்கல்லினால் ஆனதுதானா?!' என்று பிரமிக்க வைக்கிறது. இதை நோக்கும் கலா ரசிகனுடைய இதயத்திலே, வீணையின் நாதமும் தேவியின் இன்குரலும் கேட்பது போன்ற உணர்வு ஏற்பட்டாலும்கூட ஆச்சரியமில்லை.

அர்த்தநாரீஸ்வரர்

பிடிவாதமாகச் சக்தியை நீக்கி, சிவன் ஒருவனையே ஆச்ரயிப்பது என்று உறுதிக்கொண்ட ஒரு முனிவரைப் பரிசோதிப்பதற்கு என்றும், சிவனும் சக்தியும் சேர்ந்ததே ஈஸ்வராம்சம் என்ற உண்மையை உணர்த்துவதற்கு என்றும், அர்த்தநாரீயாகத் தோன்றினான் பரமேஸ்வரன் என்பது கதை.

இடது பார்ச்சுவத்திலே பார்வதியும் வலது பார்ச்சுவத்திலே சிவபெருமானுமாக சகல லட்சணங்களுடன் உருவாக்கப் பெற்றுள்ள இந்த அர்த்தநாரீஸ்வரரின் சிற்பத்தை, மதுரைப் புது மண்டபத்தில் தரிசிக்க முடிகிறது.

அற்புதமான இந்தச் சிற்பத்தை ஒரு முறை நோக்கிய உடனேயே, இது ஒரு கலா விற்பன்னனின் சிருஷ்டி என்பது புலனாகிவிடும். தம்முடைய கலைத்திறனை ஒட்டுமொத்தமாக உபயோகித்திருக்கிறார் சிற்பி என்றே சொல்லத் தோணுகிறது.

சிவபெருமானுடைய பாகத்திலே ஆண்மைக்கு உரித்தான புஜ பலத்தையும் தைர்ய - வீர்ய - கம்பீர்யத்தையும், சக்தியின் ஸ்வரூபத்திலே அங்கங்களின் மென்மையையும் முகமண்டலத்தில் கருணையின் பிரதிபலிப்பையும் திறம்பட கொணர்ந்திருக்கிறார் சிற்பி.





வீரபத்திரர்... அகோரம்!

ஜகன்மாதாவான ஸதிதேவி, தனது பதியை நிந்தனை செய்யும் தகப்பன் தக்ஷனின் முன்னிலையில் உயிர் நீத்தாள் என்று அறிந்ததும் மகாதேவனது புருவம் நெற்றியில் ஏறியது. சிரசில் உள்ள கங்கையில் நீர்க்குமிழிகள் காணப்பட்டன. ஆபரணமாக விளங்கிய ஸர்ப்பங்கள் உஷ்ணம் தாங்கமாட்டாமல் சுருண்டன. கோபத்தினால் சிவந்த இரு கண்கள், இயற்கையிலேயே அக்னி ஸ்வரூபமான நெற்றிக்கண்ணைப்போல் தோன்றின. சங்கரனது ரௌத்ரத்தைக் கண்டு சர்வப் பிரபஞ்சமும் நடுக்கமுற்றது. சூரிய - சந்திரர்கள் மறைந்து, நட்சத்திரங்கள் உதிர்ந்தன. சப்த சாகரங்களும் கலங்கின. வீரபத்திரர் தக்ஷணமே ஆவிர்ப்பவித்தார்.

பிரளய காலாந்தகர்போல் அவர், ஊர்த்வ கேசமும் பர்வதம் போன்ற மார்புமாக, பிரமத கணங்கள் புடைசூழ, தக்ஷனின் யாகசாலையில் பிரவேசித்து அட்டகாசம் செய்தார்.

அப்பேரொலியைக் கேட்டே பலர் மூர்ச்சை அடைந்தனர்; பலர் ஓடினர்; இன்னும் பலர் ஒளிந்தனர். அந்த யாகத்தில் கலந்து கொண்டிருந்த சூரியனுக்குப் பல் போயிற்று; சந்திரன் கலைகளை இழந்தான் அக்னியின் கரங்களை வெட்டி, விஷ்ணுவின் சக்கரத்தை விழுங்கி ஏப்பமிட்டார் வீரபத்திரர். தக்ஷனின் சிரம் இடம்பெயர்ந்து அக்னியின் வாயில் விழுந்தது. தன் சிரத்துக்கும் ஆபத்து நேராமல் இருக்க, அக்னியும் அதை பஸ்மமாக்கினான்.

இப்படியாக, ருத்ர கோபத்தின் ஒரு கோடியை வீரபத்திரர் காண்பித்த கதை பிரசித்தமானது. இந்த இரு பக்கங்களிலே காணப்படும் சிற்பங்கள் அவருடைய இரு ஆவேசங்கள்தாம். ஒன்று அக்னி வீரபத்திரர்; மற்றொன்று அகோர வீரபத்திரர்.

முதலில் உள்ளவருக்குப் பெயர் அவ்விதம் ஏற்பட்டதன் காரணம், தலையில் அக்னியின் ஸ்வரூபத்துக்கு அறிகுறியான கிரீடம் இருப்பது. அதி உக்கிரமானவர் அகோர வீரபத்திரரே. கோரப்பற்களும், பருத்த உதரமும், கைகளிலே நீண்ட கத்தி, கேடயம், திரிசூலம், உடுக்கை, வில், வாள், மழு முதலியவற்றையுமாக நெஞ்சிலே நடுக்கத்தை ஊட்டும் சொருபத்தின் சிருஷ்டி. 'கடலைக் குடிக்கட்டுமா? மூவுலகத்தையும் பொடி செய்யட்டுமா? ஜீவராசிகளைச் சாம்பலாக்கட்டுமா?' என்ற கேள்வி களைக் கேளாமலே கேட்கின்றன கனல் கக்கும் கண்கள். அங்க அமைப்பிலும் அழகிலும் மனோதர்மத்திலும் பிரமாதமான சிறப்புடன் உருவாகியிருக்கும் இவ்விரு சிலைகளும் சில்பாச்சாரியர் ஸ்ரீவீரண்ணாச்சாரியர் செய்தது என்று தெரிகிறது.

மதுரை ஸ்ரீசுந்தரேசர் ஆலயத்தில் கம்பத்தடி மண்டபத்தில் இவை இருக்கின்றன. வீரபத்திரர்கள் நிற்கும் நிலையும், ஒவ்வோர் அம்சத்துக்கும் அளிக்கப்பட்டிருக்கும் சிரத்தையும் பிரதான்யமும், மென்மையான நுணுக்க வேலைப்பாடுகளும் அன்றும் இன்றும் என்றுமே ரசிகர்களின் வியப்புக்கும் பாராட்டுக்கும் பாத்திரமாகத்தான் இருக்கும். பிரமாண்டமான இந்தச் சிற்பங்கள் ஒவ்வொன்றும் ஒரே கல்லில் செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்க விஷயமாகும்.





ஊர்த்வ தாண்டவம்!

மதுரை பெரிய கோயிலுக்குப் போய்வந்தவர்கள் உள்ளத்திலே மறக்க முடியாததோர் உணர்ச்சியை உண்டாக்கும் சிற்பங்களில் முதல் ஸ்தானம் பெறுபவை பத்ரகாளி, ஊர்த்வ தாண்டவர் இரண்டுமேதான்.

சக்தியினுடைய ஸ்வரூபமான காளிக்கு நான்கு கரங்கள்; பத்ரகாளியோ ரௌத்ரத்தின் அவதாரமாக எட்டுக் கைகளுடன், கோரப்பற்களும், பருத்த ஸ்தன்ய பாகங்களுமாக, சிம்மத்தின் மீது ஆரோஹணித்து மகிஷாசுரனைத் தனது காலடியில் மிதித்துக்கொண்டு, பார்க்க பயங்கர ஸ்வரூபியாகவும், அச்சத்துக்கு அறிகுறியாகவும் விளங்குபவள். ஒவ்வொரு கையும் ஆயுதம் தாங்கி நிற்கிறது. தைலாபிஷேகத்தினால் கருத்துத் தோன்றும் உருவத்திலே, குங்கும அர்ச்சனைகளினால் சிவப்பு வர்ணம் தோன்றுவது இந்தப் பயங்கரத்தை மிகைப்படுத்தியே காட்டுகிறது. அம்பிகையின் கோபம் சமனமாகும்வண்ணம் பக்தர்கள் வெண்ணெயை மேலே வீசிவிட்டுச் செல்வது காளியின் தேகமெங்கும் அடையாளமாக இருக்கிறது.


சிவனும் காளியும் நாட்டியப் போட்டியில் ஈடுபட்டதும், இருவரும்


சமமாகவே வெகுகாலம் தாண்டவம் ஆடி வர, யார் ஜயித்தவர் என்று தேவதேவர்கள் அறியமாட்டாது திணறிய சமயம், சிவபெருமான் ஊர்த்வ தாண்டவ கோலத்தில் 'காலைத் தூக்கி நின்றாடவே', காளி வெட்கித் தலைகுனிந்தது பிரசித்தமான கதை. அந்த ஆவேசத்தைதான், இந்த நர்த்தனமிடும் மகா காளியின் ரூபத்திலே உக்கிரமும் பயங்கரமும் பிரதிபலிக்கக் காண்கிறோம்.

ஊர்த்வ தாண்டவருடைய தோற்றத்திலே அதே வேகமும் துடிதுடிப்பும் காண்கிறது. விபூதி அபிஷேகத்தில் மூழ்கியுள்ள இந்தப் பரமனின் சிற்பத்திலே சர்வ லட்சணங்களும், பத்ரகாளி சிற்பத்தைப் போலவே பூர்த்தியாகியுள்ளது.

350 வருடங்களுக்கு முன்பு மதுரையில் வீரப்ப நாயக்கர் ஆட்சி செய்த காலத்தில், சிற்பாசாரியர் ஸ்ரீவீரண்ண ஆசாரியார் சிருஷ்டித்த மகோன்னதமான சிற்பங்கள் இவை. தெய்விக அம்சம் பூர்ணமாக பொருந்தி இருக்கவே; பொது ஜனங்களின் பூஜைக்கு உகந்ததாக, மதுரைக் கோயிலில் ஒரு பிரதானமான ஸ்தானத்தை இவை பெற்றுள்ளன.

அழகிலும் மென்மையிலும், சாமுத்ரிகா லட்சணங்களிலும் அப்பழுக்குச் சொல்ல முடியாத வகையிலே, ஒரே கல்லில் தாராளமான ஆக்ருதிகளிலே செய்யப்பட்டுள்ள இவை, சிற்ப சாஸ்திரத்திலே உயர்ந்த இரு சிருஷ்டிகள் என்பதில் அபிப்பிராய பேதத்துக்கு இடமில்லாதபடி அமைந்துள்ளன. இந்தச் சிற்பங்கள், ஆலயத்துக்கே ஓர் அலங்காரமானத் தோற்றத்தை அளிக்கின்றன.






திருக்கல்யாணம்

பாண்டிய மன்னன் மலயத்வஜனின் செல்வக்குமாரி தேவி மீனாட்சியை, மகேஸ்வரரான சுந்தரரேசர் மணந்துகொண்ட கண்கொள்ளாக் காட்சியைத்தான் வலது புறத்திலே அற்புதமானதொரு சிற்பமாகக் காண்கிறோம். 'முக்தா ஹார லஸத் கிரீட'ங்களோடு கூடிய திவ்யாபரண பூஷிதையாகவும், பீதாம்பரங்களால் அலங்கரிக்கப்பட்டவளாகவும், ப்ரும்ம ஸுரேந்திரர்களால் பணி செய்யப்பட்டவளாகவும், கருணா சமுத்திரமாகவும் விளங்கும் அம்பிகை, சிவபெருமானுடைய வாம பாகத்திலே இருக்க, தேவாதிதேவன் சர்வ மங்கலமான கோலத்திலே அருகே நிற்கிறார். பசுபதியின் இடது கையிலே அபய முத்திரை; ஜடா மகுடத்தின் மேலே பிறை. இந்த ஜகன் மோகன தம்பதியின் கைகளிலே மலர்ந்த முகத்துடன் திருமால் தாரைவார்க்கிறார்.

முனிபுங்கவர்கள் கீழே ஹோமங்கள் நடத்துகின்றனர். தேவ கன்னிகைகள் வீணா வேணு மிருதங்க வாத்தியங்கள் சகிதமாக நடனமாடுகிறார்கள். ஒரே கல்லில் சிருஷ்டியானது இந்தச் சிற்பம். மதுரை மீனாட்சி கோயிலில் இருக்கும் இந்தக் கோலாகலமான காட்சி பக்தனையும் ரசிகனையும் ஒருங்கே பரவசமாக்கினால் அதில் ஆச்சரியம் இல்லை.

இந்தப் பக்கத்தில் காணப்படும் சிற்பம் தேவகன்னிகையும் குழந்தையும். இது, மதுரைப் புது மண்டபத்திலே உள்ளது. இதன் வரலாறுகள் பற்றிப் பலவகைப்பட்ட அபிப்பிராயங்கள் இருக்கின்றன. எனினும், சிற்பத்திலே சிலாகிக்கத் தக்க அம்சங்கள் உள்ளது என்பதில் ஒற்றுமை மட்டுமே இருக்க முடியும்.



சில்பி



வராகர்... நரசிம்மர்!

மாயக்கண்ணனை, ஜகன் மோகனனை, வெண்ணெய் உண்ட வாயனை, அந்தப் பொல்லாத கள்ளழகனைத் தனது நாட்டுக்குக் கொண்டுச் செல்ல விரும்பிய ஒரு மன்னன், பதினெட்டுப் பேரையும் அவர்கள் உதவிக்கு ஒரு 'கறுப்பு தெய்வ'த்தையும் அனுப்பி வைக்கிறான்.


அரசர்களுக்கெல்லாம் அரசனும், அடியார்களுக்கு அடியனுமான அந்தத் திருமேனியான், அர்ச்சகர் கனவில் சூழ்ச்சியை விளக்கவே, பாண்டிய மன்னன் இந்தப் பதினெண்மருக்கும் தக்க சிக்ஷை செய்வித்து, கள்ளழகருக்கும் பதினெட்டுப் படிகளுடன் கோயில் கட்டுவித்தான். இதன் பின்னர் கோயிலின் பாதுகாப்புக்காக ஒரு கோட்டையையும் நிர்மாணித்துவிட்டான் அந்தச் சுந்தரப் பாண்டியன்.



அழகர் கோயிலைப் பற்றிய இந்தக் கதையைக் கொண்டு, எத்தனை எத்தனையோ தீராத வழக்குகள் நீதி ஸ்தலம் போகாமல் தீர்க்கப்பட்டு இருக்கின்றனவாம். 'பதினெட்டாம் படியில் நின்று சத்தியம் செய்து கொடுத்துவிட்டால்' இரு தரப்பாரும் திருப்தி அடையத் தயாராக இருந்தார்கள்.

இந்தக் கோயிலிலும், மதுரை யம்பதியை அடுத்திருக்கும் மணம் கமழ, அமர சிற்பங்கள் சில தென்படு கின்றன.

இந்த இரு பக்கங்களிலும் வெளியாகி இருக்கும் ஸ்ரீவராக மூர்த்தியும் ஸ்ரீநரசிம்ம அவதாரமும் அழகர் கோயில் சிற்பங்கள்தான். நரசிம்மருடைய ஆவேசத்தையும் வராகத்தினுடைய பல பராக் கிரமத்தையும் அமர்க்களமாகப் பிரதிபலிக்கும் சிருஷ்டிகள் இவை.



உலகளந்தான்...

மகாபலி சக்கரவர்த்தியின் கதை, நாராயணனே யாசித்துக் கொண்டுவந்த கதை.

அதிபராக்கிரமசாலியாகவும், தீவிர சிவபக்தனாகவும் இருந்த பலி, மூன்று லோகத்துக்கும் ஏக சக்ராதிபதியாக இருந்தான். ஹிம்சை பொறுக்காத தேவர்கள் திருமாலை வேண்டினர்.

வேறு எவ்விதத்திலும் பலியை வெல்ல முடியாது எனக் கண்ட பகவான், வாமன ரூபத்துடன் அவன் முன்பு வந்தார். யாசகம் செய்யும்போதே, உடம்பு குறுகும் என்பதை நிரூபிப்பதுபோல் இருந்தது அவர் தோற்றம். மூன்று அடி மண் கேட்டு, அவன் அதை ஒப்புக்கொண்டதும் விஸ்வரூபம் எடுத்து பூமியை ஓர் அடியாகவும் ஆகாசத்தை ஓர் அடியாகவும் அளந்து, மூன்றாவது அடியை பலி சக்கரவர்த்தியின் தலையிலேயே வைத்து, அவனை பாதாள லோகத்துக்கு அனுப்பிவைத்தார்.

பாதாள லோகத்துக்குத் தள்ளப்பட்டாலும் சொன்ன சொல் தவறாத பலியின் பிரதாபம் ஓங்கி உயர்ந்தது. பகவானின் அவதார காரியம் முடிந்தது.

மதுரையை அடுத்த அழகர் கோயிலில், தசாவதார சிற்பங்களில் ஒன்றாக விளங்கும் இந்த வாமன அவதாரமும் இருக்கிறது. இங்குள்ள சிற்பங்கள் எல்லாமே ஓர் உயர்ந்த ரகத்தைச் சேர்ந்தவை. எனினும், முன்பு வெளியான நரசிம்ம - வராக அவதாரச் சிற்பங்களுடனேகூட இதுவும் குறிப்பிடத்தக்க லட்சணங்கள் பெற்றது.

கிருஷ்ணாபுரம்...


மனோதர்மத்தில் மிகச் சிறந்து, வேலைத்திறனில் மிக உயர்ந்து விளங்கும் சிற்பச் செல்வம் ஒன்றைக் காண நேரும்போது, அதை அனுபவிக்கும் முன்பு, 'இதை எப்படிச் செய்ய முடிந்தது? மனிதர்கள் செய்ததா இது!' என்ற பிரமிப்பு ஏற்படுவது சாதாரணம். இந்த பிரமிப்பு - பரவச உணர்ச்சி சற்று நீங்கியப் பிறகுதான், சிற்பங்களின் அழகையும் அவற்றில் காணப்படும் நுட்பங்களையும் கண்டு ஆனந்திப்பது சாத்தியமாகிறது.

திருநெல்வேலியிலிருந்து சுமார் ஆறு மைல் தூரத்தில் இருக்கும் கிருஷ்ணாபுரத்து அமர சிற்பங்களைப் பார்க்கும்போது, ஒவ்வொருவருக்கும் இந்த வியப்பும் பிரமிப்பும் மனப்பூரிப்பும் ஏக காலத்திலே ஏற்படும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. உண்மைக் கலைப்பித்தருக்கு இந்தச் சிருஷ்டிகளின் அருகில் இருந்தும் வரவும் மனம் இருக்காது.

சிற்பியின் செழுமையான மனோ தர்மத்திலே ஒரு மலை நாட்டு வேடுவன் கதை உதயமாகிறது. கதையின் கற்பனைத் திறனையும் சந்தர்ப்ப விசேஷங்களையும் சோபிக்கச் செய்ய அந்தக் கற்பாறை உதவியதா அல்லது அந்தக் கற்பாறைதான் கதையின் சிருஷ்டிக்கு மூலக்காரணம் ஆயிற்றா என்று நிச்சயமாகச் சொல்லி விடுவதற்கில்லை.

கல்லிலே இயற்கையாக ஓடும் ஒரு செவ்வரியைச் சிற்பி எப்படி உபயோகித்துக்கொண்டார் என்பது, கற்பனைக்கு எட்டாத ஒரு மர்மமாகவே இருக்கிறது. கதையும் கல்லும் இன்று ஒன்றாகத் திரண்டு, கற்பனையும் கல்லுளியும் ஒருமிக்க இழைந்து இரண்டறக் கலந்து, உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் மகத்தானதொரு சிற்ப ஜாலமாகத் திகழ்கிறது!

அழகிலே முதல்வளான ஓர் அரசகுமாரி நீராடிவிட்டு, தனது



அளகபாரத்தை ஓர் அழகான சொருக்காகப் போட்டுக்கொண்டு ஒய்யாரமாக நடந்து வருகிறாள்.

தோழிகள் பிரிந்ததுகூட, உல்லாசத்தில் இறங்கிவிட்ட அவள் உள்ளத்திலே உறைக்கவில்லை. திடீரென்று எஃகுத் தகடுகளென அகன்ற மார்பும், யானைத் தும்பியென பலம் பொருந்திய கரங்களுமாக, அசாத்தியமான பராக்கிரமம் பொருந்திய ஒரு வேடுவத் தலைவன், அவள் முன் தோன்றுகிறான். பார்க்கிறான்; அழகைப் பருகுகிறான்; இதயத்தையும் பறிகொடுத்துவிடுகிறான். மறு கணம் மன்னன் மகளைத் தனது தோளிலே ஏற்றிக்கொண்டு சடுதியில் சென்றுவிட முயல்கிறான்.

ஒரு கணம் திகைத்து வாயடைத்துப் போன மங்கை, மறு கணம் பயந்து கூச்சல் போடுகிறாள். குதிரைக் காலடி சத்தம் அதிதுரிதமாகப் பக்கத்தில் கேட்கிறது. ஆயுதபாணிகளான அரச சேவகர்கள் நாலாபுறமும் சூழ்ந்துகொள்கிறார்கள். ஆனால் வேடுவத் தலைவனோ கலங்கினவன் இல்லை. தான் எடுத்துச் செல்லும் சௌந்தரிய தேவதையை எப்படியும் தன் இருப்பிடம் கொண்டுபோய்விட எண்ணி, அவளைக் கீழே இறக்காமலே அவர்களை எதிர்க்கிறான். அவன் துணிச்சல், சிப்பாய்களைக்கூடச் சற்று தயங்கச் செய்கிறது. எனினும் ஒரு சிப்பாய் தன் ஈட்டியால் வேடுவனைக் குத்திக் காயப்படுத்தி விடுகிறான். குருதி வெள்ளமாகப் பெருகுகிறது. கல்லிலே ஓடும் செவ்வரியைத்தான் இந்த ரத்த ஆறாகச் சிற்பி உபயோகித்துக்கொண்டு பிரமாதமானதொரு சிலாரூபத்தைச் செய்து முடித்துவிட்டார்.

சிற்ப விசேஷங்களைப் பற்றி எழுதி அடங்காத வகையிலே அமைந்துள்ளது சிருஷ்டி. கல்லிலே ஆன சிற்பமா அல்லது சதையும் ரத்தமும் கொண்டு செய்யப்பட்ட உடல்களா என்று அடிக்கடி நினைக்கும்படி நரம்புகள் சுருக்கங்கள் உள்படக் கல்லிலே காணப்படுகின்றன! ஒவ்வொரு முகபாவம், ஒவ்வோர் அங்க அமைப்பு, பார்வை, நிலை அவ்வளவிலும் அதே ஜீவன், அதே மேதை பிரதிபலிக்கின்றன.

பரபுருஷன் தன்னைத் தூக்கிச் செல்வதால், அரசகுமாரி ஒரு கையினால் தன் முந்தானையை இழுத்துப் போர்த்திக்கொள்கிறாள். வேடுவன் செல்லும் வேகத்தில் காற்று அதனூடே புகுந்து முகத்தைத் திறக்கிறது. மற்றொரு கையினால், தான்

கீழே விழுந்துவிடாதபடி வேடுவனின் சிகையைப் பற்றியிருக்கிறாள். தன் ஆபத்து நிலையை உணர்ந்து ஏற்பட்ட திகிலின் இடையே, தனக்குத் துணைவர்கள் அணுகிவிட்டார்கள் என்ற மகிழ்ச்சியும் கலந்து முக மண்டலத்தில் ஒரு மோகனமான புன்முறுவலாகப் பரிணமிக்கிறது.


வேடுவன் சாமான்யப்பட்டவன் அல்ல; சிப்பாய்களின் கையில் இரும்பு ஆயுதங்கள் என்றால், அவனிடம் இரும்பு இதயமே இருக்கிறது! ராஜகுமாரியைத் தூக்கியிருப்பதால் உடல் சற்றே வளைந்தும் கழுத்து நரம்புகள் புடைத்தும் காண்கின்றன.

அவனுடைய கையாள் ஒருவனைச் சிப்பாய் சிண்டைப் பிடித்து அமுக்கி, அதே கையினால் அவனுடைய கத்தியை உபயோகிக்க முடியாமல் தடுத்துக் கொண்டு, மறு கையினால் கேடயத்தையும் பற்றி இழுத்து அவனைத் திணற அடிக்கிறான். மேலும், தனது பற்களையும் உபயோகித்து, எதிரியின் காதைக் கடித்துப் பணியச்செய்ய முயலுகிறான். மற்றவனோ, தன் கைகள் தடைபட்டுப்போனதால், சிப்பாயின் கால்களுக்கு இடையில் தன் காலைக் கொடுத்து அவனைத் தள்ளுகிறான்.

இந்த அமர்க்களத்திலும்கூட அரசகுமாரிக்குச் சிறிதும் ஆபத்து நேர்ந்துவிடக்கூடாது என்று ஜாக்கிரதையாக கவனித்துக் கொள்கிறார்கள் சிப்பாய்கள்! வேடுவனை நெருங்கும்போதே, குதிரை லகானையும் இழுத்துப் பிடிக்கிறார்கள். குதிரையின் லாடத்தில் அடிக்கப்பட்டிருக்கும் ஆணிகளைக் கூடக் காட்ட மறக்கவில்லை சிற்பி!



இங்கு காணப்படும் சிற்பத்தைப் பற்றிப் பல வகைப்பட்ட கதைகள் வழங்குகின்றன. அதிபலசாலியான மலைநாட்டுப் பெண் ஒருத்தி அரசகுமாரன் ஒருவனைத் தூக்கிச் செல்கிறாள். மீசையுள்ள அந்த ஆண்மகன்கூட, பெண் கையில் காணும் கிளிக்கு மனதை இழந்தோ அல்லது அவள் அழகுக்கு மயங்கியோ, பலத்துக்கு அஞ்சியோ, அடங்கித்தான் போகிறான். எதுவாயினும், அணு அணுவாகக் கவனம் செலுத்தி மனித உருவத்துக்கும் உணர்ச்சிகளுக்கும் அமர வாழ்வு அளித்த பெருமை இதன் பிரம்மாவைச் சேரும்!



மலை அதிர்ந்தன...

வீரபத்திரருடைய சிலைகள் எங்கெங்கெல்லாமோ இருக்கின்றன. புராண ஐதிகங்களுக்கு மாறுபடாமலும் இருக்கின்றன. ஆனால், 'வீரரில் வீர'னாக, சிவபெருமானின் ரௌத்ரத்திலே அவதரித்து, வீரமும் கோபமும் ஏக காலத்தில் தாண்டவம் ஆடும் காட்சியைக் கிருஷ்ணாபுரத்துச் சிற்பத்திலே மட்டும்தான் காணலாமாம்!

இந்த ரூபத்தை நோக்கும்போது, *'மலை அதிர்ந்தன, மாதிரம் அதிர்ந்தன ...அதிர்ந்தன வானவர் தொகுதி'* என்ற கவியின் அற்புதமான வர்ணனைகூட, கற்பனையற்ற அப்பட்டமான உண்மைதானோ என்ற நம்பிக்கை உண்டாகிறது. ஒரு கையிலே கேடயம்; இன்னொரு கையிலே தோமரம்; 'கல்லிலே கனல் பிறக்கிற'தற்கு அத்தாட்சியாகக் கோபக்கண்களும் கோரப்பற்களும் முறுக்கு மீசையும்! இந்த வீரபத்திரருக்கு அதிக கைகள் ஆயுதங்கள்கூட இல்லை. எனினும், அதிபயங்கரத் தோற்றத்தை அனாயாசமாக எப்படிக் கொண்டு வந்திருக்கிறார் சிற்பாசாரியர் என்று நினைக்கும்போது, நம் ஆச்சரியம் எல்லை மீறியதாகிறது. தூக்கிய கால், அழகாக வளைத்து ஒருவித பிடிமானமும் இல்லாமல் நிற்கிறது. சிற்பத்தில் நுணுக்கமான வேலைப்பாடுகளோ அபாரம், அனந்தம்.

சிற்பக் கலை அடைந்திருந்த மகோன்னத நிலையை எடுத்துக் காட்ட, இந்த ஒரு சிற்பமே போதுமானது என்றாலும் அது மிகையாகாது!

அமர நாட்டியம்!

கோபக் கனலைக் கல்லிலே காண்பிக்க உள்ள அதே திறனைக் கொண்டு சௌந்தரிய சிகரத்தையும் சிருஷ்டிக்கத் தயங்கிவிட மாட்டோம் என்பதை நிரூபிப்பதுபோல் இந்தத் தேவகன்னிகையின் சிற்பத்தை உருவாக்கியிருக்கிறார் கிருஷ்ணாபுரத்துச் சிற்பி. தேவ சபையிலே நடனப் போட்டி நடக்கிறது; மங்கையர் விதவிதமாக உடை உடுத்தி, தெரிந்த வித்தைகளையெல்லாம் காண்பித்து விடுகிறார்கள். கடைசியிலே வருகிறாள் இந்தப் பெண். ஒரு கையிலே பூச்செண்டு; இன்னொரு கையிலே மாதுளம் பழம். இவை கீழே விழாதபடி வெகு நேர்த்தியாக நடனம் ஆடுகிறாள். அவளுடைய ஆபரணங்கள் ஜொலிக்கின்றன; முத்து ஹாரம் உயிர் பெற்றதுபோல் கூடவே குதித்து ஆடுகிறது. அந்த அமர நாட்டியத்தைக் காண்பவர்கள் உள்ளங்களும் கூடவே நடனம் புரிகின்றன!

ஒவ்வோர் அவயவத்திலும் ஒவ்வோர் ஆபரணத்திலும் அங்க அசைவிலும் சிற்பி காண்பித்திருக்கும் கவனம், நம்மை பிரமிக்க வைக்கிறது. கல்லினாலான சிற்பம்தான் இது என்பதைக்கூட மறந்து, முத்து ஹாரத்தைக் கழட்டிவிட முடியுமோ என்றுகூட மயங்கச் செய்கிறது. இந்தக் கட்டழகியின் உருவத்தை சிலாரூபமாக்கியுள்ள சிற்பாசாரியரின் கற்பனா லோகத்திலே உதயமாகியிருக்கும் தேவ சபையும், நர்த்தனக் காட்சியும், போட்டா போட்டி வேகமும், நம் உள்ளத்திலும் எழும்பி நிரந்தரமாகப் பதிந்துவிடுகின்றன!






கர்ணார்ஜுனர் போர்!

கிருஷ்ணாபுரத்துச் சிற்பப் பொக்கிஷத்திலே விசேஷ ரத்தினங்களில் இரண்டென மதிக்கப்படுபவை இந்த இரு சிற்பங்கள். அஞ்ஞாத வாசம் செய்துவிட்டுப் பாண்டவர்கள் கௌரவர்களுடன் போர் தொடுத்துவிட்டார்கள்.

அர்ஜுனனுடைய சௌரியம் ஓங்கி நிற்பதைக் கண்டு கலங்கின. திருதராஷ்டிரனின் மகனுக்குக் கர்ணனின் ஞாபகம் வருகிறது. பார்த்தனின் பரம வைரியாயிற்றே அவன்!

தவிர, அவன் கையிலே அஸ்திர உருவிலே அர்ஜுனனை அழிப்பதென்ற விரதத்துடன் வந்திருக்கிறது ஒரு நாகம்!



இந்த மகா வீரர்களுக்கு இடையே போர் மூளுகிறது. சம பலமுள்ள இந்த 'சகோதரர்'களில் யார் கையால் யார் வீழ்வான் என்று மூவுலகமும் திகைத்து இமை கொட்டாது பார்த்து நிற்க, கர்ணன் கடைசியாக நாகாஸ்திரத்தை உருவிவிட்டான். இதுதான் இடது புறத்திலே, நாம் காணும் காட்சி. வலது புறத்திலே, கண்ணன் தனக்குத் துணை நிற்கும் தைரியத்திலேபோல் பல்குனன் புன்னகையுடன் தோன்றுகிறான்.

கதையின் முடிவு யாவரும் அறிந்ததே. 'தலைக்கு வந்தது தலைப்பாவுடன் போயிற்று' என்பதையொட்டி, மாயக் கிருஷ்ணன் சூழ்ச்சியால் நாகம், கிரீடத்தை மட்டும் தள்ளிவிட்டுப் பலனின்றி வீழ்கிறது.

சிற்ப நுணுக்கங்கள் சகலத்தையும் ஒருங்கே வெளிப்படுத்தும் இந்தச் சிலைகளிலே, அமர சிற்பியானவர் வில்லைக்கூடக் குடைந்து காட்டிவிட்டார்! கர்ணார்ஜுனர்களின் முகபாவத்திலே தீரமும், அனாயாசமாக ஜயிப்போம் என்ற வீரமும் தாண்டவம் ஆடுகின்றன.

ஆனால், பரிதாபப்படக்கூடிய அம்சம் ஒன்றும் இந்த உன்னத சிற்பத்துக்கு ஏற்பட்டுவிட்டது! எண்ணுதற்கரிய முறையிலே செய்யப்பட்ட கர்ணனின் தனுஸை எந்த 'ரசிக'னோ முரட்டு பலப் பரீசை செய்து உடைத்துவிட்டான்!

இந்த மகத்தான சிற்பம் பின்னமாகும் முன் எத்தனை கம்பீரமாக இருந்திருக்கும், அதைக் காணும் கலா ரசிகர்கள் எத்தனை எத்தனை உள்ளம் மகிழ்ந்திருப்பார்கள் என்பதையெல்லாம் நாம் கற்பனை செய்து பார்த்துக்கொள்ள வேண்டிய நிலையிலேதான் இருக்கிறோம்!



ரதிதேவி

பாண்டிய நாட்டு அரசனாக விளங்கிய விஸ்வநாத நாயக்கரின் குமாரரான கிருஷ்ணப்ப நாயக்கர் சௌரியத்தில் சிறந்தவராக இருந்ததோடு, பக்தியிலும் தர்மத்திலும் ஈடு இணையற்றவராக விளங்கியவர். அவர் தமது பெயரில் கிருஷ்ணாபுரத்தை ஏறக்குறைய 400 வருடங்களுக்கு முன்பு அமைத்து, விஜயநகர சிற்பிகளைத் தருவித்து அரங்க மண்டபத்தையும் உருவாக்கினார். இந்த அரங்க மண்டபத்திலேதான் வீரபத்திரருடைய அமர சிற்பமும், அன்னப்பறவையின் மீது அமர்ந்திருக்கும் ரதிதேவியின் சிலையும் இருக்கின்றன.

இந்த ரதிதேவியின் சிற்பத்தில் காணப்படும் வேலைப்பாடுகள் அனந்தம். அன்னத்தின் மீது கம்பீரமாக ஆரோகணித்திருக்கும் அழகுத் தெய்வம், சிங்காரித்துக்கொள்ளும் அவஸ்தையில் இருக்கிறாள். அலங்காரம் சரியாக இருக்கிறதா என்று கண்ணாடியில் பார்த்துக்கொள்கிறாள். அவள் முகத்திலும் ஒவ்வோர் அவயவத்திலும் சிற்பி காண்பித்திருக்கும் கவனமும் வேலைப்பாடும் பிரமிக்கச் செய்கின்றன. ரதியின் மூக்குத் துவாரத்தைக்கூடக் குடைந்து உண்மைக்கு ஒற்றுமையாகச் செய்துவிட்டார் சிற்பி.

கிருஷ்ணப்ப நாயக்கர் தமது தான-தர்மங்களால் 'தென்கடல் நாதன்' என்ற பட்டப்பெயரைப் பெற்றாராம். அவர் சிற்பத்துக்குச் செய்துள்ள தொண்டை என்றென்றும் நாம் காண்கிறோம்.

காதல் பேசும் சிற்பம்!

கிருஷ்ணாபுரத்திலே ஒவ்வொரு கல்லும் ஒரு கதை சொல்கிறது என்றால் மிகையாகாது. இங்குக் காணப்படும் அழகிய ராஜகுமாரியின் சிலையும் ஒரு ரஸமான காதல் கதையைச் சொல்கிறது.

இந்த மங்கைக்குப் பரவச மூட்டுகிறது, ரிஷிகுமாரன் ஒருவனின் எழில் உருவம். இதயத்தை அவன்பால் பறிகொடுத்து விட்டு, அவனை இடைவிடாது பின்பற்றுகிறாள். எளிதிலே இந்தப் பெண்மானின் கண்ணோக்குக்கு அடிமையாகிவிட விரும்பாத ரிஷிகுமாரன், வயோதிக வடிவத்துடன் அவள்முன் தோன்றுகிறான்.

அவள் ஏமாந்துவிடுபவள் அல்ல. "நீ எப்படியிருந்தால் எனக்கென்ன! நீ ஒருவனே என் ஆசை மணாளன்!" என்று, வலது கரத்தினால் தன் தீர்மானத்தை வெளியிடுகிறாள். இதுவே சிற்பம்.

வனப்பு மிகுந்த இந்தச் சுந்தரி, சர்வாபரண பூஷிதையாகக் காதல் ததும்பும் நயனங்களுடன் நிற்கும்போது, ரிஷிகுமாரன் வசமிழந்து, தனக்குத் தபஸிலே இன்னும் பக்குவம் ஏற்படவில்லை என்பதை உணர்கிறான்; அவளையே மணக்கிறான். ஒரு நல்ல சிற்பம் இது.





புருஷாமிருகம்!

தர்மநெறி தவறாதவர் தரும புத்திரர் என்பதை விளக்கிக்காட்ட, மகாபாரதத்தில் ராஜஸூய யாகம் நடக்குமுன் ஒரு சம்பவம் நிகழ்கிறது. தனது எல்லையில் இருந்து ஓடி வரும் பீமனை ஒரு புருஷாமிருகம் துரத்தி வருகிறது. அதன் எல்லையில் ஒரு காலும் தன் எல்லையில் ஒரு காலுமாக பீமன் இருக்கும்போது, அது பிடித்துக்கொண்டு வம்புக்கு இழுக்கிறது. பிடித்தவனும் பிடிபட்டவனும் தருமரிடம் மத்யஸ்தத்துக்குப் போகிறார்கள். தம்பி என்றும் பாராத அந்த தர்மசிரேஷ்டர், புருஷாமிருகத்தின் பிரதேசத்தில் இருந்த பகுதி அதற்கு இரையாகும் என்றும், மிகுதி தனக்குச் சேரும் என்றும் நீதி வழங்குகிறார்!

இடது பக்கத்துச் சிற்பத்திலே இருக்கிறார் தருமர். வலது பக்கத்தில் ஓங்கின கரமும் நகங்கள் நிறைந்த பாதங்களுமாக நிற்கிறது, புருஷாமிருகம். ஒரு பயங்கரமான - விசித்திரமான - சிருஷ்டி; பக்கத்தில் புஜபலத்துக்குரிய சகல லட்சணங்களுடன், சற்றும் விட்டுக் கொடுக்காத மனோபாவத்துடன் பீமன் காணப்படுகிறான்.

கிருஷ்ணாபுரத்துக் கோயிலில், ரங்க மண்டபத்தில் ஒரே தூணில் இரு புறங்களிலும் அமைந்திருக்கும் இந்தச் சிற்பங்கள் கலா ரசிகனை வெகுநேரம் முன்னால் நிறுத்திக்கொள்வதிலும் அவனது மனக்கண்ணைவிட்டு அகலாமல் நிரந்தரமான இடம் பெறுவதிலும் ஆச்சரியம் என்ன!




நெல்லையப்பர் ஆலயம்

திருநெல்வேலிச் சிற்பங்களைக் குறிப்பிடும்போது, நெல்லையப்பர் ஆலயத்தில் இடம் பெற்றுள்ள உயர்ந்த இந்தச் சிற்பங்களைக் கூறாமல் இருக்க முடியாது. கிருஷ்ணாபுரத்துச் சிற்பங்களில் காணப்படும் நுணுக்கங்களும் நுட்பமான வேலைப்பாடும் இவற்றில் காணப்படவில்லை என்றாலும்கூட, இவற்றிலே அங்க லட்சணங்களும், முகபாவங்களும் சரிசமமான அளவிலே உயர்ந்து காண்கின்றன என்பதை மறுக்க முடியாது.

இந்தப் பக்கத்தில் இருப்பது வீரபத்திரரின் சிலை. பலமுறைகள் பல ஆலயங்களில் காணப்பட்டதெனினும் கவர்ச்சியிலும் சிறப்பான வேலைத் தரத்திலும் சிறிதும் பின்வாங்கவில்லை.

எதிர்ப்புறத்தில் காணப்படும் சிலைகள் ஒரு பழங்கதையை அடிப்படையாகக் கொண்டவைதான். கர்ணார்ஜுனர்கள் குருக்ஷேத்திரப் போருக்கு ஆயத்தமாக இருக்கும் காட்சி. இதில் வருந்தத்தக்க விஷயம் என்னவென்றால், பழங்கதையாகவே கலையின் பெருமையையும் மதிப்பையும் அறியாதவர்கள் கிருஷ்ணாபுரத்துச் சிற்பத்தில் செய்திருப்பதுபோலவே, கர்ணனின் வில்லை ஒடிக்க முயன்று, அதில் வெற்றியும் அடைந்திருக்கிறார்கள்!




சில்பி

யார் இந்த வீரன்?



ஒரு கல்லிலே எத்தனை நுணுக்கங்கள், நுட்பங்கள், சன்ன வேலைப்பாடுகள் எல்லாம் காண்பிக்க முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாகச் சில உயர்ந்த சிற்பங்களைப் பொறுக்கி எடுத்தால், அவற்றில் ஒன்றாக இருக்கும் திருநெல்வேலியில் ஸ்ரீ நெல்லையப்பர் கோயில் சந்நிதிக்குப் போகும் வழியில் உள்ள இந்தச் சிற்பம்.

இது யாரைக் குறித்தது என்பதைப் பற்றிய அபிப்பிராய பேதம் இருக்கிறது எனினும், வீரபத்திரருடைய தளபதி என்பது பெரும்பாலோரின் ஊகம் எனத் தெரிகிறது. வலது கரத்தில் கத்தி; இடது கரத்தில் வளைந்த கொம்பு வாத்தியம் - இரண்டிலும்தான் எத்தனை அலங்காரங்கள்! வில்போல் வளைந்த இடை, வீரனின் உடல் வலுவைக் குறிக்கிறது; மார்பு விலா எலும்புகளும், விரல் நகங்களும் அதே சமயத்தில் சிற்பியின் கையிலே சிற்றுளி செய்திருக்கும் சன்ன வேலைப்பாடுகளை உணர்த்துகின்றன.

பக்கவாட்டிலே நின்று நோக்கினால், முத்து ஹாரங்களும் உத்தரீயமும் தனிப் படத் தொங்கும் ஆச்சரியத்தைக் கண்டு பிரமிப்பு அடைகிறோம்! கவனித்து நோக்குபவர்கள், உடலிலுள்ள இயற்கைச் சுருக்கங்கள்கூட சிற்பியின் கவனத்துக்குத் தப்பிவிடவில்லை என்பதைக் காணலாம்.



தென்காசி ரதி-மன்மதன்

புராணங்களில் இணைபிரியாக் காதலுக்குச் சாட்சியாக நின்று, ரூப செளந்தரியத்தின் சிகரம் எனப் புகழ்பெற்ற தம்பதி ரதியும் மன்மதனுமே. கரும்புவில்லினாலே புஷ்ப பாணங்களைத் தொடுத்து, காதலர்களின் உள்ளங்களைத் தூண்டிவிட்டுவரும் மன்மதன், ரதியின்பால் அந்யோந்யமான பாசம் கொண்டதும், அந்த ரதிதேவியும் தனது நாதனுக்காகவே வாழ்ந்ததும் காதல் உலகிலே மிக ரஸமான கதையாகும். இந்த மன்மதன் தனது கை வரிசையை ஜடாதாரியாகிய



பரமசிவனிடமும் காண்பிக்கப் போனதும், அந்த முக்கண்ணனின் கோபக் கனலில் தீய்ந்து பஸ்மமானதும், ரதி புலம்பியதும் காம தகனப் படலமாக சிரஞ்சீவித்வம் பெற்றுவிட்டன.

ஆண்மையுடன் அழகையும், கம்பீர்யத்துடனே காதலையும் மன்மதன் உருவத்தில் காணலாம். ஆபரணங்கள் ஏராளமாகப் பூண்டு, பெண்மையை மயக்க இவன் தயாராகக் காட்சி அளிக்கிறான். கரும்புவில் ஒரு 'டிரேட் மார்க்' போன்று ஒரு கரத்திலே திகழ்கிறது. ஒரு கரத்திலே புஷ்பக்கணை, அங்கங்களில் முரட்டுத்தனம் முழுதும் காணப்படாமல், கற்பாறையிலேயே

ஒருவிதமான மென்மையும் குழைவும் இருப்பதாக ஒரு பிரமை ஏற்படச் செய்கிறது சிற்பம். விரல்கள் தோறும் நகங்கள், கரும்பிலே கணுக்கள், கணுக்கள் தோறும் முத்துக்கள், கரும்பின்மேல் தோகைகள், தோகைகளிலே உள்ள நரம்புகள் - இத்தனையும் பாறையிலே குடைய முடியும் என்பதற்குச் சிறப்பான நிருபணமாக இருக்கின்றன இந்தச் சிற்பங்கள். குறும்புப் புன்னகையும் கண்களிலே விஷமப் பார்வையுமாக இருக்கிறான் மன்மதன்.

இந்த அழகுக் காதலர்களைத்தான் தென்காசியில் ஒரு சிற்பி பிரமாண்ட அளவில் சிலாரூபங்களாக ஸ்ரீ காசி விஸ்வநாதர் ஆலயத்தில் நிறுத்திவிட்டார்.

இந்த மன்மதன் இதயத்தையும் எட்டிப்பிடித்த ரதிதேவி, 'நடையிலே அன்னப்பேடு' என்ற வர்ணனையை மிஞ்சும் விதமாக அழகின் ஒரு சின்னமான அன்னபட்சியே அவள் வாகனம். ஒரு கரத்திலே அதன் லகானை வெகு ஒய்யாரமாகப் பற்றி, இன்னொரு கரத்திலே புஷ்பச் செண்டு பிடித்து நாஸூக்காக அதை ஒட்டும் பாவனை. இந்த ஆரணங்கின் செவியொன்றில் கிளி சதா கொஞ்சிக்கொண்டும் சேதி சொல்லிக்கொண்டும் இருக்கிறது. அங்க லட்சணங்கள், ஆபரணச் செல்வங்கள் அனைத்தும் அப்பழுக்குச் சொல்ல முடியாத முறையில் தயாராகி இருக்கின்றன.




மகா தாண்டவர்

தென்காசிச் சிற்பங்களில், பிரமாண்டமான அளவில் இருப்பதுடன்கூட உயர்தர வேலைப் பாட்டினாலும், வெளிப்படுத்தும் மேதையினாலும் சிறந்து விளங்குவது, மகா தாண்டவருடைய சிற்பம்.

மதுரையில் பத்துக் கைகளுடன் காட்சியளிக்கும் நடனராஜரைப் பார்த்து அதிசயித்து இருப்பவர்கள், இங்கே பதினாறு கைகளும் சற்றும் பின்வாங்காத அங்க அமைப்பு அழகுகளுடனும் கம்பீரமாக நிற்கும் சிலைக்கு முன்பும் பிரமித்து நிற்பார்கள்(வலது பக்கத்தில் உள்ள சிற்பம்). ஓவியங்கள் தீட்டும்போது பிழைகள் ஏற்பட்டாலும், ஓரளவு திருத்தி அமைப்பது சாத்தியமாயிருக்கும். இவ்வளவு பெரிய அளவிலே ஒரே கற்பாறையில் இத்தனை நுட்பமான வேலைப்பாடுகளுடன்கூட, சாமுத்ரிகா லட்சணங்கள் பிறழாமல் ஒரு சிற்பத்தைச் சிருஷ்டி செய்த சிற்பாச்சாரியரின் திறனை எத்தனை புகழ்ந்தாலும் தகும்.

இந்தப் பக்கத்தில் இருப்பது காளியின் சிலை. இந்த உக்ர தேவதையின் சிற்பமும் சிலாகிக்கத்தக்க அங்க லட்சணங்களுடன் தத்ரூபமாகச் செய்து நிறுத்தப்பட்டு இருக்கிறது.


சில்பி



நடன மாதர்கள்...

எத்தனை நூற்றாண்டுகள் பின்னோக்கிப் பார்த்தாலும் பிரம்ம சிருஷ்டியிலே பெண்கள் ஆபரணப் பிரியைகளாகத்தான் இருந்திருக்கிறார்கள். அலங்கார சிங்காரங்களில் ஆசை வைத்து, மனிதன் மனதைப் பறிகொடுக்கச் செய்யும் இயல்புடையவர்களாகவே வாழ்ந்திருக்கிறார்கள். தென்காசிக் கோயிலில் ஸ்வாமி சந்நிதியை நோக்கும் இந்த நடன மாதர்கள் இருவரின் சிற்பங்களும், பார்க்கும் ஒவ்வோர் ஆடவனின் உள்ளத்திலும் ஒரு புயலை வருவிக்கும் வகையில் அமைந்துவிட்டன.

இந்தப் பக்கத்திலுள்ள நடன சுந்தரி தனது அளக பாரத்தை ஒரு பெரிய முடிச்சால் முடித்து, 'கொண்டையுள்ளவள், இடதுபுறம் போட்டாலும் வலதுபுறம் போட்டாலும் நன்றாகத்தான் இருக்கும்' என்பதை நிரூபிக்கிறாள். பெண்களின் உடன் பிறந்ததான நாணம், இவள் நிற்கும் நிலையிலே புலனாகிறது. உடல் வனப்பும், கங்கணங்கள் பூண்ட உருட்சியான கரங்களும், கண்களில் தோன்றும் காதல் ஒளியும், கல்லான உருவமானாலும் கல்லான இதயத்தையும் கரைக்கவல்லது என்பதற்கு நிரூபணமாக அமைந்திருக்கிறது. எந்தக் காதலனைப் பார்த்து அவள் ஜாடை செய்கிறாள் என்று விவரிக்க ஆதாரம் எதுவும் இல்லையென்றாலும், இந்த மாது 'சொல்லிவிட்டுப் போ! என் அலங்காரம் போதுமா?' என்று கேட்கும் தோரணையில் நிற்பதாகவே தோன்றுகிறது.



இங்கு உள்ளவள், சற்று ஒடிசலானவள்; ஆனால், ஒய்யாரத்தில் ஓர் அணுவளவும் குறைந்தவள் இல்லை. தன் சௌந்தரியத்தைப் பற்றி இவளுக்கு சந்தேகம் துளிக்கூட இல்லை. காலை வைத்து நிற்கும் பாவனையிலும், அலட்சியமாக வலது கரத்தை உயரத் தூக்கித் திலகம் வைத்துக்கொண்டு இடது கரத்தில் கண்ணாடி பார்ப்பதும், கேசத்தை சொகுசாக வாரி நுனியில் முடிச்சிட்டு இருப்பதும், தன்னம்பிக்கையின் சின்னங்களே! நாட்டிய அரங்கத்திலே இவள் வந்து நின்றால், இவளுடன்கூட அத்தனை நெஞ்சுகளும் ஆடும் என்று இவள் எதிர்பார்த்தாலும் ஆச்சரியம் இல்லை.


சிற்பியின் கையிலே மெழுகுபோல் இந்தப் பாறைகள் சொன்னபடி கேட்டிருக்கின்றன. இந்த நடன மாதர்களின் கேசத்தில் காட்டப்பட்டிருக்கும் வேலைத்திறத்தை முதலில் மெச்சுவதா, ஆடை அணிகளிலே தோன்றும் மென்மையான வரிகளைக் கண்டு பிரமிப்பதா, முகத்திலும் அங்க அவயவங்களிலும் பிரதிபலிக்கும் பாவ பூர்வமான உணர்ச்சிகளைச் சிலாகிப்பதா - என்று சொல்லமாட்டாமல் கலா ரசிகர்கள் திகைத்துத் திணறத்தான் வேண்டும். வாய் திறந்து கொஞ்சிப் பேசச் சித்தமாக இருக்கும் தேவகன்னிகைகளை நினைப்பூட்டும் இந்தச் செல்வங்கள் இரண்டும், பார்ப்பவர்களைக் கற்சிலைகளாகத் தங்கள் முன் நிறுத்திக் கொண்டுவிடுகின்றன!



வேணு கானம்...

கண்ணன் குழலை எடுத்துவிட்டால் சப்த லோகங்களும் அந்த மோகன கானத்தில் மயங்கினவாம். தென்காசி வேணுகோபாலன் சிற்பத்தின் முன்னால் நிற்கும்போது வேணுகானம் ஒலிப்பது போன்ற பிரமை பக்தர்கள் - ரசிகர்களுக்கு ஏற்படுகிறதாம். அதனால்தானோ என்னவோ படமெடுத்த ஸர்ப்பமும் காலடியில் நின்ற நிலையில் இருக்கிறது! அத்தனை சிறப்புடன் அதை உருவாக்கியிருக்கிறார் சிற்பி. அலங்காரங்கள் அணி பணிகளுக்கு ஒரு குறைவில்லை. சங்கு - சக்கரங்களுடன்கூட ஒரு நீண்ட கரும்பையும் ஏந்தியிருக்கிறான் அழகன். சிற்றுளியின் சக்தி அபாரம் என்பதை நிரூபிக்க, கரும்பின் கணுக்களையும் ஊதும் குழலையும் இயற்கையாகக் குடைந்துவிட்டார்.

இதேபோல் எதிர்ப்பக்கத்தில் அக்னி வீரபத்திரரைத் திரிசூலமுடன் இதர ஆயுதங்களுடன் அமைக்கப்பட்டுள்ளது. அதிபயங்கரமான இந்த உருவம் உதட்டை பற்களால் கடித்தவண்ணம் நடைபோட்டு வரும் பாவத்தில் உருவாகி இருக்கிறது. சடையில் காண்பித்திருக்கும் அக்னி, கண்களிலும் வீசுகிறது. முகத்திலே கோர நகை; பலமுள்ள புஜங்கள்; கரங்களிலே சீறும் ஸர்ப்பங்களே ஆபரணங்கள். ஒரு முறை பார்த்தாலும் மறக்க முடியாத காட்சி.


சில்பி



சங்கரன்கோவில்...

'அமர சிற்பங்கள்' எனப் பெயர் பெற்றுள்ள சிலைகளில் சிலவற்றுக்கு, சுடர் வீசும் கதைகளும் கூடவே சிரஞ்சீவியாக வந்திருக்கின்றன. சங்கரன்கோவிலில் காவற்காரன் சிற்பத்தை ஒட்டி அழகிய, தெய்விகமானதொரு வரலாறு உண்டு.

கோயில் கோபுரத்தைத் தாண்டி உள்ளே செல்லும் இடத்திலுள்ள இந்தச் சிற்பம், சாதியில் புலையனான காவற்காரன் ஒருவனுடையது என்பதை அறிந்தவுடனேயே அந்த நாளில் - தொள்ளாயிரம் வருடத்துக்கு முன்பு - மனிதனின் பெருமை சாதிக் கோட்பாடுகளைக் கடந்து நின்றது என்பதற்குச் சிறப்பான சான்று என ஊகித்துவிடலாம்.

புராணக் கதையில் பார்வதி தேவியின் சாபத்துக்கு இலக்காகி விடுகிறான் மணிக்கிரீவன் என்னும் தேவன். பூவுலகில் காவற்காரனாகப் பிறந்து, புன்னைவனத்தில்

வாழ்கிறான். கரிவலம் வந்த நல்லூரில் இருந்த பால்வண்ண நாதருக்கு இந்த ஊரிலே ஒரு பூந்தோட்டம் உண்டு. அதைச் செப்பனிடுவதும் காவற்காரன் செய்துவந்த பணிகளில் ஒன்று.

ஒரு நாள் உயர்ந்து வளர்ந்திருந்த பாம்புப் புற்று ஒன்றை அவன் வெட்டி வந்த காலத்தில், ஒரு பாம்பின் வாலை அகஸ்மாத்தாகத் துண்டித்துவிடுகிறான். அதோடு, அருகிலே இருந்த சிவ லிங்கமும் அவன் திருஷ்டியில் விழுகிறது. பாம்புக்குத் தான் செய்த அபசாரத்தையும் சொல்லி, சிவலிங்கம் காணப்படுவதையும் தெரிவிக்க, மன்னர் உக்ர பாண்டியரிடம் ஓடுகிறான்.

திருநெல்வேலியில் பொருனை ஆற்றின் கரையில் உள்ள மணலூரில் அரசாண்டு வந்த உக்ர பாண்டியர், சிறந்ததொரு சிவ பக்தர். மதுரையம்பதியின் மன்னாதி மன்னனான சொக்கநாதனையும் மீனாட்சியம்மனையும் அடிக்கடி வழிபாடு செய்பவர். காவற்காரன் புற்றை வெட்டிச் சிவலிங்கத்தையும் கண்ட அதே நேரத்தில், அவருடைய யானை கொம்பினால் தரையைக் குத்திக் கீழே விழுந்து புரண்டது. மன்னர் திகைத்து, இந்த நிகழ்ச்சிக்குக் காரணம் தெரியாது இருந்த சமயத்தில், புன்னைவனத்தில் நடந்த விவரங்களைக் காவற்காரன் வந்து கூறினான்.

பாண்டியர் சென்று, புற்றையும் புற்றிடங்கொண்டாரையும், வால் கூழைப்பட்ட ஸர்ப்பத்தையும் கண்டார். அப்போது அசரீரி ஒன்று கேட்டது. அதன் ஆணைக்கு இணங்க, பாண்டியர் காடு கெடுத்து நாடாக்கி, சங்கரநாராயணனின் கோயிலையும் கட்டி, ஊரையும் தோற்றுவித்தார்.

சைவமும் வைஷ்ணமும் சமரசமாக இருக்க சங்கரநாராயண ஸ்வாமியின் உருவமும் இரு மூர்த்திகளின் வடிவத்தையும் தாங்கி இருக்கிறது. இரு சமயத்தாரும் சமமாகத் தொழுது வருகிறார்கள். இந்த ஸ்தல புராணத்தின் ஆதிகர்த்தாவாகிய காவற்காரனின் சிலாரூபம்தான் கோபுர வாசலுக்குள் நின்றுகொண்டிருக்கிறது.

ஒன்பது நூற்றாண்டுகளுக்கு முன்பு ஆகிய சிற்பம். காவற்காரர்கள் உபயோகிக்கும் கொம்பு வாத்தியத்தின் தலைப்பை கையில் பிடித்திருக்கிறான் அவன். அஜாக்கிரதையினாலோ வேறு காரணத்தினாலோ, சிற்பத்திலே இந்த வாத்தியத்தின் பெரும் பாகம் பிற்காலத்தில் உடைந்திருக்கிறது.

கட்டுமஸ்தான தேகம்; தெய்வ பக்தி உள்ளவன், தூய்மையான இதயம் படைத்தவன் என்பதை முகத்தின் பொலிவு காட்டுகிறது. இவன் இத்தனை பராக்கிரமம் உள்ளவனானாலும், காவல் வேலை செய்து கீழ்ப்படியும் சுபாவம் உடையவன் என்பதை விளக்குவதை போல், உடலில் ஒரு பணிவும் காண்கிறது. ஆபரண அலங்காரங்கள் இருக்கின்றன. ஆனாலும், மற்றச் சிற்பங்களுக்குள்ளபடி அபரிமிதமான அணிபணிகள் இல்லை. இச்சிற்பத்துக்குப் புகழ் தேடிக் கொடுக்க அதன் வேலைப்பாடுகளே போதும். எனினும், சந்தேகத்துக்கு இடம் வைக்காமலே, ஓர் அழகிய ஐதீகத்தை அதன் பின்னணியாகச் சேர்த்துக் கொண்டிருக்கிறார் அதன் சிருஷ்டி கர்த்தா.

மிகப் பழமையானது எனினும், பார்க்க வேண்டிய தென்னாட்டுச் செல்வங்களிலே ஒன்றுதான் இது.




தாடிக்கொம்பு...

திண்டுக்கல்லில் இருந்து ஆறு மைலில் உள்ள தாடிக்கொம்பு, ஒரு காலத்தில் உன்னத நிலையில் இருந்திருக்கிறது என்பதற்கு அத்தாட்சி, இங்கே நாம் காணும் உயர்ந்த சிற்பங்கள்தான். சிற்ப சாஸ்திர விற்பன்னர்களே மூக்கின் மேல் கை வைக்கும் அளவுக்கு மேன்மையுடன் இங்குள்ள சிலாரூபங்கள் காணப்படுகின்றன.

இந்தப் பக்கத்தில் இருப்பவர் உலகளந்த பெருமாள். வாமன ரூபத்தில் வந்து, பூமியை ஓர் அடியாகவும் ஆகாயத்தை ஓர் அடியாகவும் அளக்கும் திருக்கோலம். எட்டுக் கைகள், சம்பூர்ண அலங்காரங்கள்; மணி மார்பின் வலதுபுறத்திலே லட்சுமியின் இருப்பிடம் குறிக்கப்பட்டிருக்கிறது.

வலதுபுறத்தில் இருக்கும் சிற்பம், அர்ச்சுனன் வாக்கைக் காப்பாற்ற, கண்ணன் சக்கரத்தை அனுப்பி சூரியனை மறைத்து மாலைக் காலம் வந்துவிட்டது போல் தோன்றச் செய்த கட்டம். ஒரே கல்லில், ஒரு தூணின் முன்பக்கத்தில் மிக அழகாக அமைந்துள்ளது. பதினாறு கைகளையும் குடைந்து சர்வ லட்சணங்களுடன் தயாராகியுள்ள அமர சிற்பம் இது என்பதில் சந்தேகம் இல்லை.


சில்பி



துஷ்டநிக்கிரகம்...

"இந்தத் தூணிலே இருக்கிறாரா உன் மகாவிஷ்ணு?" என்று கேட்ட ஹிரண்யகசிபுவிடம், பக்த சிரோமணியான பிரகலாதன் "இருக்கிறார்!" என்று உறுதியுடனே பதில் கொடுத்தான். தன்னை நம்பின பாலன் வார்த்தையை மெய்ப்படுத்த பரந்தாமனும் நரசிம்ம ரூபத்தில் சப்த லோகங்களும் கிடுகிடுக்கும் கோர சத்தத்துடன் வெளிப்பட்டு, ராட்சதனை வதம் செய்தார்.

தாடிக்கொம்பு சிற்பங்கள் இரண்டு, இந்தக் கதையில் வரும் இரு காட்சிகளை பயங்கர ரஸம் சிறிதும் குன்றாமல் எடுத்து விளக்குகின்றன. பக்கத்திலே தனித்து நிற்க அச்சம் அளிக்கும் வகையிலே, சிம்மத்தின் கர்ஜனை கேட்கிறதோ என்ற பிரமையூட்டும் முறையில், சிற்பி தம் வேலைப்பாட்டை முடித்துக் காண்பித்திருக்கிறார்.

வலதுபுறத்துச் சிற்பம், யுத்தம் நடப்பதைக் காட்டுகிறது. மூர்த்தியின் பெரிய உருவத்தின் முன், வீரம் பேசிய அரக்கன் சிறுத்துக் காணப்படுகிறான். நரசிம்மம், கேடயம் பிடித்த அவன் கரம் ஒன்றை ஒரு கையாலும், கத்தி பிடித்த கையை மற்றொரு கையாலும் அலட்சியமாகப் பிடித்து, அவன் இடுப்பையும் அசைக்க முடியாதவண்ணம் அமுக்கிக்கொள்கிறார்.



ஹிரண்யனின் கன்னத்தில் விழப்போகும் அறை பிரமாதமானதாகத்தான் இருக்கப் போகிறது, அதில் சுருண்டு விழாமல் அவன் தப்பமாட்டான் என்று நமக்கு நிச்சயம் தோன்றுகிறது.

இடது பக்கம் இருக்கும் சிற்பம் தத்ரூபமாக சம்ஹார கோலத்தைக் காட்டுவது. மடியின்மீது வைத்து இரு கைகளாலும் அவனைக் கிழித்து மாலையாக அணியப் போகிறார் விஷ்ணு.

தூணிலிருந்து புறப்பட்ட பெருமான் தூணிலேயே கோர ரூபத்துடன் கண்களில் அனல் வீசக் காணப்படுகிறார்!



கருட வாகனன்...

இந்தப் பக்கத்தில் நிற்பவன் மன்மதன், விஷமப் புன்னகையுடன். கரும்பு வில் அழகாக வளைந்து, தனியாகக் கையில் கொடுக்கப்பட்டதுபோல் விளங்க, வலது கரங்கள் இரண்டிலே புஷ்பச் செண்டுகள் ஒன்றன்பின் ஒன்றாக பிரயோகத்துக்குத் தயாராக இருக்கின்றன. நான்கு கரங்கள் கொண்ட தென்காசி மன்மதன் சிலைக்கு அளவில் சிறிதுதான் என்றாலும், ஆறு கைகளுடனும் அதற்குச் சற்றும் குறையாத அழகுடனும் அமைந்திருக்கிறது இது.

மகா விஷ்ணு கருடாழ்வாரின் மீது ஆரோகணித்து, யுத்த சந்நத்தராகக் கிளம்பும் கோலம் எதிர்பக்கத்துச் சிற்பம். முன்னோக்கி வருவதுபோல் ஒரு பிரமையை உண்டாக்குகிற வேகம் தோன்றுகிறது. எந்தத் துஷ்டனுக்கோ காலம் குறுகி விட்டதைக் காண்பிக்கிறது, அவசரமாக ஓர் அம்பை உருவும் கரம்! பிரமாண்டமான சிலைதான் எனினும், சிறு விஷயங்களில்கூடச்



சிற்பாசாரியர் முழு கவனம் செலுத்தியிருக்கிறார். உயர்ந்த சிற்பமாகையால், எந்த மூர்க்கன் திருஷ்டியிலோ பட்டு, இரு பின்னங்கள் ஏற்பட்டுள்ளன.


இவையும் தாடிக்கொம்பு சிற்பங்களே!

ஆவுடையார்கோவில்

பழங்காலத்திலே தென்னாட்டில் சிற்பங்கள் எழுப்ப ஒப்பந்தம் செய்துகொள்ளும் சிற்பாசிரியர்கள் ஒரே ஒரு நிபந்தனை போடுவார்களாம். 'ஆவுடையார் கோயில் திருப்பணிக்குப் புறத்தி' என்பதே அந்த நிபந்தனை.

அதன் பொருள், அந்த க்ஷேத்திரத்திலே காணப்படும் சிற்பங்களுக்கு நிகராகச் செய்யச் சொன்னால், தங்களால் இயலாது என்பதுதான். இப்படித் தொழிலில் மேதாவிகளாலேயே பாராட்டப்பட்ட சிற்பங்கள், சோழ நாட்டில் ஆசைக்குக்கூட ஒரு கற்குன்று காணப்படாத பிரதேசத்தில் எழும்பி விட்டன என்றால், அது ஆச்சரியத்திலும் ஆச்சரியம் அல்லவா?




சில்பி

மிகப் புராதனமானது ஆவுடையார் கோயில். மாணிக்கவாசகர் இதைக் கட்டினார் என்றும், இங்கேதான் தட்சிணாமூர்த்தி குருந்தை விருட்சத்தடியில் யோக பீடத்தில் அமர்ந்து 'ஆத்மநாதர்' என்ற திவ்ய நாமத்துடன் உபதேசம் செய்தார் என்றும் புராணம் கூறுகிறது.

அரூபமான ஈஸ்வரனாகையால் சாதாரணமாக சிவாலயங்களில் உள்ள நந்தி, துவஜஸ்தம்பம், சண்டிகேஸ்வரர் முதலிய அம்சங்கள் காணப்படவில்லை. பக்தராகிய மாணிக்கவாசகருக்கே சகல உத்ஸவாதிகளும் செய்யப்படுகின்றன.

ஆவுடையார் கோயில் சிற்பங்களைக் காணும்போது 'எப்படிச் செய்தார்கள்?' என்ற பிரமிப்பு ஏற்படாமல் இராது. அங்குள்ள கொடுங்கைகளைக் காணும்போது எத்தனை பிரமாண்டமான பாறாங்கற்களை எடுத்து எவ்வளவு மெல்லிய அளவில் செதுக்கி ஒரு தகரத்தகட்டை அனாயாசமாக வளைப்பதுபோல் வளைத்து இருக்கிறார்கள்! என்று வியப்படைகிறோம்.

எங்குமே சிற்பிகளின் மனோதர்மத்தில் முதல் ஸ்தானம் பெற்றுள்ளவர் வீரபத்திரர்தான். இவ்வூர் ரணவீரபத்திரர் சிற்பத்துக்கு மதுரையைவிடப் பெரிய ஆக்ருதி; அதிபயங்கரமான ரூபத்துடன் தக்ஷன் தலையை அறுத்தெறியும் கோலம். ஈஸ்வரனின் அம்சம் என்பதற்கு முத்திரையாகக் கண்டத்தில் இருந்து தொங்குகிறது சிவலிங்கம். சிற்பத்தில் காண்பிக்கப்பட்டுள்ள அதே சிரத்தையை இதர அம்சங்களிலும் சிற்பி காட்டியிருக்கிறார். தலைக்கு மேலுள்ள அலங்காரத்தில், சல்லடைபோல் வெகு சந்நமான ஓட்டைகளைச் செய்து முடித்திருப்பது சாமான்யம் அல்லவே!

இங்கு இருக்கும் சிலை பத்திரகாளியினுடையது. சிவனாரிடம் தோற்று வெட்கிக் குனிந்து, ஆவேசம் குன்றிய முகபாவம். கைகளைப் பிசைந்து கொள்கிறாள். மதுரை, தென்காசிச் சிற்பங்களில்கூட எட்டே கைகள்தான்; இங்கே பன்னிரண்டு!



தலத்தின் கதை...

பாண்டிய மன்னனிடம் மாணிக்க வாசகர் அமைச்சராக இருந்த காலத்திலே, 49 கோடி பொன்னுடன் குதிரை வாங்கச் சென்றார். திருப்பெருந்துறை என்னும் ஆவுடையார்கோவில் வந்ததும், அவர் மனம் ஆத்மநாதக் கடவுளிடம் பதிந்துவிடுகிறது. 'பரம்பொருளுக்குப் பயன்படாத செல்வம் இருப்பதில் என்ன பயன்?' என்ற எண்ணம் ஏற்படவே, கோயில் திருப்பணியைத் தொடங்கி முடித்துவிட்டு அங்கேயே தங்கிவிடுகிறார்; சிவபெருமானிடம் உபதேசமும் பெறுகிறார்.

பாண்டியன், தனது பணமெல்லாம் வேறு வழியில் விரயமாகிவிட்டதைக் கேள்விப்பட்டதும் சினந்து, மாணிக்க வாசகரைச் சிறை செய்து வரும்படி ஆக்ஞாபிக்கிறான். பக்தன் துயரம் நீக்க, நரிக்குடியில் உள்ள நரிகளைக் கயிலாச நாதன் பரிகளாக்கி, சிவகணங்களைக் கொண்டு அவற்றை ஆரோகணிக்கச் செய்து, அரசன்முன் கொண்டு நிறுத்துகிறான்! அரசன் முகமலர்ந்து போகிறான். பின்னர், பரிகள் நரியான கதை யாவரும் அறிந்ததே. இந்தக் கதையைச் சித்திரிப்பதுதான் இந்த பக்கத்தில் உள்ள சிற்பம்.

அடுத்தப் பக்கத்தில் ஈசனே மாறு வேடத்தில் குதிரையில் வீற்றிருக்கிறான். குதிரையின் கடைக்கண் பார்வையும், சாரதியின் விஷமச் சிரிப்பும், வந்திருப்பவை உண்மையில் பரிகள் அல்ல என்பதைக் குறிக்கின்றன. உட்கார்ந்திருக்கும் அனாயாசமான பாவமும், குதிரையின் அங்க லட்சணங்களும் பிரமிக்கவைக்கும் வகையில் தோன்றிவிட்டன. குதிரையின் பற்கள் நிஜமாக இருப்பவைபோல் வெண்மையும் பிரகாசமுமாகக் காண்கின்றன. குதிரையின் காலடியில் பரிகள் நரிகளாக மாறி ஓடுவதைச் சிறிய அளவில் காட்டியிருக்கிறார் சிற்பி.

ஆவுடையார் கோயில் சிற்பங்களிலே அஸ்வரூடர் சிலைகளில் ஏழு செய்யப்பட்டன. அவற்றிலே மூர்த்தி விசேஷம் அதிகமாக உள்ள ஒன்றைப் பூஜைக்கு எடுத்து வைத்துக்கொண்டு, மிகுதியை வெவ்வேறு இடங்களில் வைத்துவிட்டார்கள். அடுத்த பக்கத்தில் இருக்கும் சிற்பம் இவற்றில் ஒன்றுதான். ஒரே கல்லில் அமைந்த பிரமாண்டமான உருவம். பத்தடி உயரம்; பத்தடி அகலம். எனினும், சின்னஞ்சிறிய அம்சங்களிலும் அபாரமான கவனம் செலுத்தியிருக்கிறார்கள். குதிரையின் குளம்பு, வில், அம்பறாத் தூணி, கத்தி - ஒவ்வொன்றும் தத்ரூபமாக




சில்பி



அமைந்துவிட்டன. குதிரைப் பாய்வதைச் சற்று ஒதுங்கி நின்று பார்க்கும்போதுதான், எவ்வளவு பெரிய கல்லில் எத்தனை குடைந்த பின் இந்த உருவம் சிருஷ்டியாகி இருக்கிறது என்பதை நம்மால் ஊகிக்க முடியும்.

ஆவுடையார் கோயில் சிற்பங்களில் கொடுங்கைகள் பெயர் போனவை. இவற்றை வளைந்து வளைந்து, ஓர் அங்குல கனம் வரையில் இழைக்கப் பட்டு அழகாக எங்கும் காணப் படுகின்றன. இவற்றைப் பார்க்கும்போது பழங்காலச் சிற்பாசாரியர்கள் தங்கள் வேலைப்பாடு ஆவுடையார் கோயிலுக்கு அடங்கலாகத்தான் இருக்க முடியும் என்று நிபந்தனைகள் செய்துகொண்டதில் ஆச்சரியமில்லை என்று அறிகிறோம்.

பரம்பொருளின் திருப்பணியில் தம்மை மறந்த பக்த சிகாமணியான மாணிக்கவாசகர் கதையைக் கேட்கும்போது உள்ளம் உருகுகிறது. அந்தக் கதையின் பிரதான சம்பவங்கள் அமர சிற்பங்களாகக் கண்முன் நிற்கும்போது பரவசம் ஏற்படுவதில் என்ன ஆச்சரியம்?



ஆடல் காணீரோ...

ஆவுடையார் கோயில் நடன சபையில் ஸ்வாமி சந்நிதிக்கு எதிரே அமைந்துள்ள அழகான சிலைகளில் வீரபத்திரன் சகாவின் சிலையும் ஒன்று. தனது எஜமானனின் வீரத்துக்கும் ரௌத்ரத்துக்கும் எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது இந்தச் சிலை. பருமன் இல்லாவிட்டாலும் வஜ்ரம் பாய்ந்த உடல். ஒவ்வோர் அங்கமும் பலத்தின் அறிகுறியாகக் காண்கிறது.

இடது மீசையை ஒரு கையினால் முறுக்கிவிட்டுக்கொண்டும், கொம்பு வாத்தியத்தை அதே கரத்தில் இடுக்கிக் கொண்டும் இருக்கிறான். வலது கரத்தில் உறுவின கட்கம். இடுப்பிலே ஒரு பட்டம். வயிறு தளதளவென்று அமைந்து, சுவாசத்தினால் எழும்பி இறங்குவது போன்ற பிரமையை உண்டாக்குகிறது. தலையைத் தூக்கி மேலே ஒய்யாரமாக ஒரு நாடாவினால் முடிந்துகொண்டிருப்பது வெகு அற்புதம். காதிலே குண்டலங்கள், தலையின் இரு புறமும் குஞ்சங்கள், தலைக்கு


மேலே வளைவாக ஆபரணங்கள் - இவற்றில் எல்லாம் குடைந்து குடைந்து உளிகள் முனைந்திருப்பது அபாரம். பொதுவாகக் கோயில் சிற்பங்களிலே மிகுந்த கவனத்துடன் பாதுகாக்கப்பட்டு இருப்பவை இந்த ஊர் சிற்பங்கள்தான். எனினும்கூட, இந்த அழகிய சிலையில், கத்தியும் கொம்பும் பின்னமாகியிருப்பது ஒரு பெரிய குறைதான்.

இந்தப் பக்கத்தில், ஸதஸில் ஜம்ஜம்மென்று வந்து நிற்கும் நாட்டியப் பெண்ணின் உருவம். மதிமயக்கும் வதனம். அழகிய குஞ்சலங்களும், சந்திர- சூர்ய பிரபைகளுடன்கூடிய தலையணிகளும், ஆவுடையார் கோயில் வேலைப்பாடு என்பதற்குச் சாட்சி!

இரு கைகளிலேயும் பூச் செண்டுகளைப் பிடித்திருக்கிறாள். சிறுத்த இடையும் பருத்த தனங்களும், வளை பூண்ட உருட்சையான கைகளும், சிலை லட்சண பூர்வமானது என்பதைப் பறைசாற்றுகின்றன. கணுக்கால்களிலும், முழங்கால்களிலும் மணிகளும் சலங்கைகளும் நடன அரங்கத்தில் எழும் 'ஜல்ஜல்' என்ற ஓசையை ஞாபக மூட்டுகின்றன. பெண்மையின் மயக்கு, பூர்ணமாக அமைந்துள்ளது.

இந்தச் சிற்பம், சிற்பாசாரியனின் உள்ளத்தில் பதிந்துள்ள சௌந்தரியத்தின் ஒரு பிரதிபலிப்பே என்று லகுவில் ஊகித்துவிடலாம். இன்றேல், கற்பாறைக்குள்ளும் ஓர் இதயத்தைச் சிருஷ்டி செய்து காண்பிப்பது சாமான்யம் அல்லவே!





ஹாஸ்ய ரசம்!

சிற்பங்களுக்குப் பெயர்போன ஒவ்வோர் ஊரிலும் தவறாமல் காணப்படும் வீரபத்திரருடைய உருவம், ஆவுடையார் கோயிலிலும் இருப்பதில் வியப்பில்லை. எங்கும் பல ஆயுதம் தாங்கிய பல கரங்களும் பிரமாண்டமான அங்க அமைப்புகளும் கொண்டு இந்த ருத்ரமூர்த்தி பயங்கரத்தை உண்டாக்குவார். ஆனால், ஆவுடையார் கோயிலில் சிற்பி வெகு எளிதான முறையிலே இந்தப் பெரிய காரியத்தைச் சாதித்துக் கொண்டிருக்கிறார்!

வீரபத்திரனின் ஒரு கையில் உள்ள பலத்தை நொடியிலே கண்டு கொள்கிறோம். நீண்ட கத்தியின் மீது அதைத் திருப்பும்போது, கால்கள் எழும்ப, பற்கள் கடித்துக்கொள்ள, கண்களிலே கனல் பறக்க, கல்லான சரீரம் மேலும் கெட்டிப்பட்டுக் குத்திட நிற்கிறது. கத்தி, தக்ஷனின் உடலில் ஊடுருவிப் பாய்ந்திருக்கிறது.

அலங்கார ஆடம்பரங்கள்கூட அதிகம் இல்லை. சந்தர்ப்பத்துக்குத் தேவை இல்லாத ஆயுதங்களும்கூட இல்லை. தக்ஷனை வதம் செய்வது ஒன்றே குறி என்று விளங்க வைக்கும் பாவம் மட்டும் பயங்கரத்தைச் சிருஷ்டி செய்விக்கப் போதுமானது. இந்தச் சிற்பத்தில் ஜடை அலங்காரம் வெகு நூதனமாகவும் விசித்திரமாகவும், பெண்கள் ஜடையைப்போல் பின்னித் தொங்கவிடப்பட்டு இருக்கிறது.

இங்கு நிற்பது ஒரு குறத்தியின் சிலை. ஆஹா! எத்தனை மேதையுடன், எத்தனை பொறுமையும் கொண்டு இந்தச் சிற்பி கருங்கல்லையே ஓலைபோல் முடைந்து காட்டி விட்டார்! இடது கையில் குறத்திப் பிடித்திருக்கும் கூடை ஓர் இழை தவறாது விளங்குகிறது. கையில் அடுக்கு அடுக்காக வளையல்கள். வரிவரியாகக் கொண்டை; அதில் மணி மணியாக ஆபரணங்கள். ஒவ்வொரு மாலையிலும், ஒவ்வோர் ஆடையிலும், சிற்பாசாரியர் செலவு செய்திருக்கும் பிரயாசை நம்மைத் திகைக்க வைக்கிறது. தொங்கும் முந்தானையில் உள்ள எண்ணற்ற வேலைப்பாடுகள் மயக்கமடையச் செய்கின்றன. விரல்களிலே வளர்த்துக் கொண்டுள்ள நகங்களில்கூட இயற்கையைப் பார்க்க முடிகிறது. சற்று முகபாவத்தைப் பார்த்துவிட்டாலோ, எங்கே குறி சொல்ல ஆரம்பித்துவிடுவாளோ குறத்தி என்று நினைக்கும்படி உயிர் பெற்ற தெய்வப் பெண்போல் கண்களாலேயே பேசுகிறாள்.

இந்த அமரச் சிற்பத்தின் அடியில் காணப்படும் இரு சிற்பங்களில் சிறிது ஹாஸ்ய ரசமும் தோன்றுகிறது. குறவன் - குறத்தி காதல்; தன் இதயத்தைக் காதலன் காதலியிடம் ஒப்புவிக்கிறான்.

இன்னொரு சிற்பத்தில், ஒருவன் தின்பண்டம் தின்ன, மற்றொருவன், 'அதை எனக்குத் தா' என்று கேட்கிறான்.






ஸ்ரீ பிட்சாடனர்...

ஆவுடையார் கோயில் யோகாம்பிகை அம்மன் சந்நிதிக்கு எதிரே நின்று, மனதைக் கவரும் சிற்ப ஜாலத்தைத்தான் இங்கு காண்கிறோம். ஆதிமத்யாந்தரகிதரான ஈஸ்வரன், ஸ்ருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் ஆகியவற்றிலே மூன்றாவது கோலத்தில் காண்கிறார். கோபாக்கிரந்தராக, திரிசூலத்துடன் அழிக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார். ஒரு தேவபுருஷன் மமதையினால் சிவ கோபத்துக்கு உள்ளாகி, அதன் பலனாக ராட்சஸ உருப்பெற்று அக்கிரமங்களில் ஈடுபட, பரமசிவன் அவனை மிதித்து, திரிசூலத்தினால் வதம் செய்கிறார். கயிலாசபதியின் பாதம் பட்ட மாத்திரத்தில், அவனுக்குப் பழைய ஞாபகங்கள் ஏற்படவே, தன் பிசகை உணர்ந்துகொண்டவனாகக் கைகூப்பித் தொழுகிறான்.

சிற்பத்திலே பரமசிவன் உடலழகு பிரமாதமாக அமைந்துவிட்டது. ஆபரணங்களின் நுட்பமான வேலைப்பாடுகள் இதர சிற்பங்களில் போலவே சிறப்பாக அமைந்துள்ளன. வலதுபுறத்தில் காண்பதும் பரமசிவனின் இன்னொரு திருக்கோலமே. பிட்சாடன மூர்த்தியாகக் காட்சி தருகிறார் பிரபு.

முன்னொரு காலத்தில் தாருகா வனத்து ரிஷிகள் சிவபக்தியைத் துறந்து, ஆகமங்களினால் மட்டுமே மேன்மை அடைந்துவிடலாம் என்று செருக்குற்று இருந்த காலத்தில், ஈசன் அவர்களுக்குப் புத்திப் புகட்ட மோகினியை அனுப்பி வைக்கவும், அவ்வளவு பேரும் மாயையில் சிக்குண்டனர். பரமனும் பிட்சாடனர் உருவிலே எல்லையற்ற அழகுடன் வீதியில் யாசித்து வர, ரிஷி பத்தினிகள் அந்தப் பேரெழிலுக்கு மனதைப் பறிகொடுத்து மயங்கினார்கள். பின்னரும் ரிஷிகள் தங்கள் அபசாரத்தை உணராதவர்களாக, இதற்கெல்லாம் சிவபெருமானே ஆதிகாரணம் என்பதைத் தங்கள் ஞானத்தால் அறிந்து, ஒரு வேள்வி செய்கிறார்கள். அதிலிருந்து வெளிப்பட்ட மான், முயலகன், ஸர்ப்பம் ஆகியவற்றைச் சிவபெருமானைக் கொல்வதற்கு அனுப்ப, அவற்றையே ஈசன் கரத்துக்கு ஓர் அபரணமாக ஏந்திக் கொள்கிறான். இது, புராண வாயிலாக நாம் அறியும் ஒரு கதை.


ஸ்ரீகயிலாசநாதனின் மேனியில் புராணம் கூறும் வனப்பு முழுவதையும் காண்கிறோம். முகமண்டலத்தின் காருண்யம் ஈர்க்கிறது. கரங்களில் திகழும் ஆயுதங்கள் தத்ரூபம். ஆனாலும் பயப்பட தேவையில்லை என்பது போன்ற சிற்பத்தின் நளினம்... சிற்பாச்சாரியரின் கலைத் திறனுக்குச் சான்று!



திருப்பேரூர் அழகு!

கோயமுத்தூருக்கு வெகு அருகிலே உள்ள 'திருப்பேரூர்' என்ற பாடல் பெற்ற சிவ ஸ்தலத்திலே சிற்பக் கலையின் அதிவிற்பன்னர்கள் ஒரு காலத்தில் தங்கள் சிற்றுளித் திறமைக்குச் சாசுவதமான அத்தாட்சிகளைச் செய்து வைத்துவிட்டார்கள். 'பேரூர்' என்பது பெயருக்கொப்ப பெரிய ஊராக அந்த காலத்தில் உன்னத நிலையில் இருந்ததென்று சரித்திரக்காரர்கள் கூறுகிறார்கள். கயிலாசநாதனின்பால் உள்ளத்தைப் பறிகொடுத்த பக்திமான்கள் இந்த க்ஷேத்திரத்திலே இருந்து இறந்த ஆத்மாக்கள், பரம்பொருளின் சாந்நித்யமாகிய 'பெரிய ஊரை' அடைவார்கள் என்று பொருள் கொண்டார்கள்.

பேரூரைப் பற்றிய அழகியக் கதை ஒன்றும் வழங்கி வருகிறது. காடும் வளமும் வனப்பும் பொங்கித் திகழ்ந்த இந்தப் பூமியில் தேவலோகவாசியான காமதேனு, அதன் கன்று துள்ளி விளையாடுவதைக் கண்டு மகிழ்ந்து இருந்ததாம். அப்போது கன்றின் முன்னங்கால் ஒரு புற்றிலே புதையுண்டு,






அதை விடுவித்துக்கொள்ள மாட்டாமல் குரல் கொடுக்கவும், காமதேனு விரைந்து சென்று தனது கொம்பினால் புற்றை முட்டியதாம். அதனுள்ளிருந்து ரத்தம் பீறிட்டு அடிப்பதைக் கண்டதும் பதைபதைத்துப் புற்றைக் கலைத்துப் பார்த்தது. அங்கே எம்பெருமான் லிங்க வடிவமாக மறைந்து இருப்பதையும், சிரசிலே காமதேனுவின் கொம்புக் குறியும் கன்றின் குளம்புக் குறியும் பட்டிருப்பதையும் கண்டு, மன்றாடி மன்னிப்பு வேண்டியதாம். ஈசன் திருவுள்ளங்கொண்டு, அங்கேயே கோயிலும் கொண்டாராம். காமதேனு 'பட்டி' கொண்டதால், 'பட்டீஸ்வரர்' என்ற பெயரையும் பரமன் தாங்குகிறார்.

இந்தப் பெருமை பெற்ற ஸ்தலத்தின் ஆலயத்தில், வெள்ளிச் சபையின் எட்டுத் தூண்களையும் சிற்பிகள் தங்கள் வேலைத்திறனால் அமரத்வம் பெறச் செய்துவிட்டார்கள். தென்னாட்டில் வேறு சில இடங்களில் காண்பவை போன்ற பிரமாண்டமான சிலைகள் இங்கே இல்லை. எனினும், நுட்ப வேலைப்பாட்டிலும் மனோதர்மத்திலும் மிக மிக உயர்ந்த சிற்பங்களுக்கும் ஈடுசொல்லும் அளவில் அவை உருவாகியிருக்கின்றன. இங்கே சிற்பம் தாங்காத தூணே கிடையாது எனலாம். வேலைப்பாடுகள் மிகுதியில்லாத சிற்பமே இல்லை என்று துணிந்து கூறலாம். சிற்பங்களில் இயற்கைக்கு மாறாதபடி விரல்கள், விரல் நகங்கள், சதைப் பிடிப்புகள், நரம்புத் தாரைகள், எலும்புக் குறிகள் - அவ்வளவும் காண்கிறோம்.

யாளி தாங்கிய தூண் ஒன்றைக் காணும் போது இதை எங்கே ஆரம்பித்து எங்கே முடித்தார்கள் என்று வியந்துபோகிறோம். கல்லிலே குடைந்தார்களோ அல்லது உலோகம்போல் உருக்கி வார்த்தார்களோ என்று ஒரு கணம் ஐயமுறச் செய்யும் வேலைப் பாடுகள் நிறைந்துள்ளன. யாளியுடன் பின்னிப் பிணைந்துகொண்டிருக்கும் யானை, அதில் அங்குலம் அங்குலமாகச் சிற்றுளி செய்திருக்கும் அபார வேலைகள் பிரமிக்க வைக்கின்றன. தூணின் கீழே வேணுகோபாலன் குழல் இசைக்க, ஒரு மாடு வளைய வந்து நக்குகிறது. அதன் நாக்கைக்கூடத் தத்ரூபமாகக் காண்பித்துவிட்டார் சிற்பி! கானத்தில் தன் வயமிழந்து இன்னொன்று மேலே நோக்குகிறது. தூணின் உயரே ஒரு கின்னர ஸ்திரீ... அன்னத்தின் உடலும் மனித முகமுமாகக் காணப்படுகிறாள். சின்னஞ்சிறிய உருவம்தான் என்றாலும் பூர்த்தி பெற்றிருக்கிறது இது.

இங்கு, ஆகு வாகனத்து ஐங்கரப் பெருமான் நர்த்தனமிடும் அற்புதமான காட்சியைப் பார்க்கிறோம். விநாயகரின் உதரம் தளதளவென்று மெருகிட்டுத் தோன்ற, கால்கள் சதைப்பற்று உள்ளவை போலவே அமைந்துள்ளன. மூஞ்சூறுக்குப் பூட்டியிருக்கும் அணிபணிகள் ஏராளம். திருவாசியின் வேலைப்பாட்டைக் கூர்ந்து கவனித்தாலும் ஓர் அப்பழுக்குச் சொல்ல முடியாது.

சிவபக்தியில் சிறந்து, தெய்வ அனுகிரகம் பெற்ற சிற்பிகளால், சிற்பக்கலை ஓங்கித் தழைத்து உன்னதமாக இருந்த காலத்திலேதான் இதுபோன்ற அமர சிற்பங்களை மனதினால் நினைக்கவும், கைகளால் இயக்கவும் சாத்தியமாகும் என்று கூறினால் அது மிகையாகாது.




கதை சொல்லும் சிற்பம்!

சிற்பக் கலை உன்னதமாக ஓங்கியிருந்த காலம் அது. சிற்ப மேதாவிகளின் பரம்பரையும் வாழையடி வாழையாகவே வளர்ந்து வந்தது. இதற்குப் பெரும் அத்தாட்சியாக ஒரு ரஸமான கதையைச் சொல்கிறது பேரூர் பெரிய சிற்பம் ஒன்று.

சிற்பாசாரியர் ஒருவர், தமது மகன் பிறந்த காலத்திலே குடும்பத்திலிருந்து பிரிந்துவிட்டார். குமாரன் பிறந்து வளர்ந்து, தகப்பனின் மேதையுடனே பிரகாசித்தான். தகப்பனாருக்குப் பிள்ளையைப் பற்றித் தெரியாது. அந்தக் காலத்திலே அவர் பேரூர் சிவாலயத்திலே பிரமாண்டமான இரு தூண்களில் தம் சிற்றுளித் திறனைக் காண்பித்துக்கொண்டிருந்தார். எதிர் எதிராக நிறுத்தப்பட்ட அவ்விரு தூண்கள் ஒவ்வொன்றிலும் சர்வ அலங்காரங்களும் சகல லட்சணங்களும் பொருந்திய ஓர் அசுவத்தின்மீது ஒரு வீரன் உட்கார்ந்து ஒரு வியாக்ரத்தின் (புலியின்) உடலை, ஈட்டிக்கொண்டு குத்துகிறான். புலியும் சும்மா இல்லை. அது ஒரு மனிதனைத் தாக்கியிருக்கிறது; மனிதனும் தனது கூரியக் கத்தி முனையை அதன் மார்பில் ஒருபுறம் பாய்ச்சி மறுபுறம் கொண்டுவந்துவிட்டான். காயமடைந்த வியாக்ரத்தின் உக்கிரம், உயிருக்கு மன்றாடும் மனிதனின் முகபாவம், முதுகை வளைத்துப் பலமாக நீண்டதோர் ஈட்டியைப் பாய்ச்சும் குதிரை வீரனின் உடலமைப்பு, இவ்வளவுக்கும் மேல் அசுவத்தின் வெகுண்ட வீரப் பார்வை - ஒவ்வொன்றும் அபாரமாக, வர்ணனைகளையெல்லாம் மிஞ்சி, உருவாகிவிட்டன.

சாதாரணமாக, பல உருவங்கள் கொண்ட பெரிய சிற்பங்களில் ஒவ்வொன்றையும் குடைந்து தனித்தனியே காண்பியாமல் பாறையிலே செதுக்கிவிடுவதுதான் வழக்கம். இங்கேயோ, குதிரை, அதன்மீதுள்ள வீரன், அதன் அடியில் மனிதன் என்று ஒவ்வொன்றாகக் குடைந்து எடுத்துவிட்டார் சிற்பி. அவசியமான சிற்சில இடங்களில் மட்டுமே சன்னப் பிடிப்புகளைக் காணலாம். தவிர, தூணிலே சிறிய அளவிலே அன்னமும் தேவகன்னிகையும், யாளியுமாக மேலும்


சில்பி

பல உருவங்களையும் குடைந்திருக்கிறார்.

இந்தச் சிற்ப ஜாலத்தைக் கண்டு வியக்காதவர் இல்லை. இதைப் பார்த்துவிட்டுப் போக, ஜனங்கள் திரள் திரளாக வந்தார்கள். வருடங்கள் கடந்தன; அதன் பெருமை மங்கவே இல்லை; அதற்கு நிகராகச் செய்பவரும் இல்லை.

சிற்பாசாரியர் பெருமையில் மூழ்கி இருந்த சமயத்தில், ஓர் இளைஞன் தோன்றினான். சிற்பக் கலையிலே தான் வல்லவன் என்று கூறிக்கொண்டான். இரு தூண்களையும் பார்வையிட்டு, தலையை ஆட்டி, ஒன்றில் ஒரு குறை இருப்பதாக தைரிய மாகச் சொன்னான்.

"என்ன குறை?" என்று சீறினார் முதிர்ந்த சிற்பி.


''பொறுக்கி எடுத்த கல்லே சரியானதல்ல!'' என்றான் இளைஞன்.

"நிரூபிக்க முடியுமா?" என்ற கர்ஜனையைக் கண்டு அவன் நடுங்கிவிடவில்லை. தன் சிற்றுளியினால் குறிப்பிட்ட தூணைத் தட்டி உடைத்தான். உள்ளே இருந்தது ஒரு தேரை, சிறிது ஜலம், கொஞ்சம் மணல்! பெரிய சிற்பி பிரமித்துப்போனார். அவர் ஆச்சரியம் பேரானந்தமாக மாறியது, அந்த இளைஞன், தான் காணாத தன் மகன்தான் என்பதை அறிந்துபோது! சிற்பி மகன் சிற்பி என்பதில் இனி சந்தேகமென்ன! இந்தத் தூண்களில் பின்னம் அடையாத தூணைத்தான் படத்தில் காண்கிறோம்.

இங்கு நாம் காண்பது ஆறுமுகன் சிற்பம். கம்பீரமாக நடைபோடும் பாவனையிலே நிற்கும் மயூரம் சிவபாலனின் வாகனமாக அமைந்த பெருமிதத்துடன், ஸர்ப்பம் ஒன்றைக் கவ்விக்கொண்டு நிமிர்கிறது. அதன் தோகை அழகை இன்றெல்லாம் பார்க்கலாம். ஐயனின் திருக்கரங்களின் அமைப்பும், மார்பிலே விளங்கும் மணி மாலைகளும், இடையைச் சுற்றியுள்ள அலங்காரங்களும், எல்லாவற்றுக்கும் மேலாக அருள் வதனத்திலே சுரக்கும் தேஜஸும் பக்தன் உள்ளத்தைப் பாகாய்க் கரைக்கவைக்கும் என்பதில் ஐயமில்லை.

திருவாசியில் கொடிகள் போலும், கிரீடங்களில் மணிகள் போலும் நுட்பமாக வேலை செய்திருப்பதை ஓர் அற்புதம் எனலாம்.





'விருச்சிக' அற்புதம்!

பேரூர்ச் சிற்பங்களில் முக்கியமாக நாம் காணும் ஒரு விசேஷம், அவையெல்லாம் ஒருவித பழுப்பு நிறமுள்ள கற்களிலே செதுக்கப்பெற்று, சருமமும் உதிரமும் படைத்த இயற்கை மானிட உருவங்கள்தானோ என்று ஐயம் கொள்ளும்படி அமைக்கப்பட்டிருப்பதுதான். இந்த இரண்டு பக்கங்களிலும் காணப்படுபவை சாதாரணமாக சிவாலயங்களில் இடம் பெற்றுள்ள அகோர - அக்னி வீரபத்திரர்களின் சிற்பங்களே!

இந்தப் பக்கத்தில் அகோர வீரபத்திரரின் கனல் பறக்கும் கண்கள், முறுக்கிவிடப்பட்ட மீசை, தாம்புக்கயிறு மாலை, தக்ஷன் உடலிலே ஒருபுறம் பாய்ந்து மறுபுறம் வெளிப்பட்டுள்ள கத்தி - இவற்றை நெஞ்சில் குளிரூட்டும்படி அமைந்து விட்டன. நுட்ப வேலைப்பாடுகளைக் கவனிக்கும்போது உள்ளங்காலுக்கும் அடியில் பாதக் குறடுகள் முதல் உச்சந்தலைக்கும் மேலே திருவாசி வரை பிரமாதமான செதுக்கல்களைக் காண்கிறோம். பாதக் குறடுகளைக் குடைந்திருப்பதைக் கண்டு பிரமிப்பதா, திருவாசியில் செதுக்கியிருக்கும் திறனை வியந்துகொள்வதா, காதுக்


குண்டலங்களைப் பார்த்து ஆச்சரியப் படுவதா என்று திணறுகிறோம்.

இத்தனை வேலைத்திறனுக்கும் சளைக்காத வகையில் அக்னி வீரபத்திரன் எதிரே நிற்கிறான். சூலத்தின் ஒரு முனையில் வரிவரியான ஒரு குஞ்சலம்; மார்பிலே சிவாபரணமாக விளங்கும் ஸர்ப்பத்தை யக்ஞோபவீதமாகத் தரித்திருக்கிறான். கரங்களிலும் பாம்புகளே அணிகள். இடையில் எண்ணற்ற தாமரை மொட்டுகள்; அவற்றில் இருந்து தொங்குகின்றன முத்துகள். தவிர, மண்டையோட்டு மாலை ஒன்று தொங்குகின்றது. முத்துகளையும் மணிகளையும் வாரி இறைத்திருக்கிறார் சிற்பி.

சாதாரணமாக, தக்ஷன் உருவம் சிறிதாகவே சிற்பங்களில் கண்டிருக்கிறோம். இந்த ஊர் தக்ஷன் நன்றாகக் கொழுத்துக் காண்கிறான். அந்த உருவத்தில்தான் எத்தனை கவனம் செலுத்திவிட்டார் சிற்பி! குடைந்தெடுக்கப்பட்டுள்ள பாதக்குறடுகள் மார்பையும் கரங்களையும் அமுக்க, நீண்ட சூலம் நெற்றியைத் துளைக்கிறது. தன் சக்தி செத்துவிட்டதென்று கண்ட தக்ஷன், கேடயம் பிடித்த கையைத் தளர்த்திவிட்டான். அவன் வாயைக் கூர்ந்து கவனிக்கும்போது, திறந்திருக்கும் உதடுகளுக்குள் உள்ளே பல் வரிசை தெரிகிறது. அதைப் பார்த்த ரசிகர் அசந்துபோகிறார்!

இத்தனை லட்சணங்களுடன்கூட, இந்தச் சிலை நிற்கும் கம்பீரமான நிலையையும், தூணில் அதிகப் பிடிப்பு இல்லாமல் தனித்திருக்கும் தோற்றத்தையும் கண்டவுடனேயே சிற்பாசாரியரின் மேன்மையான கலைத்திறனை நாம் ஒப்புக்கொண்டு விடுகிறோம்.

ஆனால், அவர் மேலும் ஒரு வேலை செய்து நம் மதிப்பை ஊர்ஜிதம் செய்துகொண்டுவிடுகிறார். சிலையின் தோள்பட்டைக்குமேல் ஒரு தேளைத் தத்ரூபமாகக் காட்டி இருப்பதைத்தான் குறிப்பிடுகிறோம். கிடுக்கி போன்ற முன் - முள்ளுகள், மணி மணியாக நீண்ட வால், வளைந்த கொடுக்கு இவற்றை அசல் விருச்சிகமே ஏமாந்து போகும்படி இருக்கின்றன. ஏன், கொடுக்கு நுனியை நாம் தடவினால், கடுப்பது போன்ற பிரமை ஏற்பட்டால்கூட வியப்பில்லை!



கஜ சம்ஹாரர்!



சிவபெருமான் கஜ உருவத்தில் வந்த ஓர் அசுரனைக் கொன்று, தோலை உரித்த காட்சியைத்தான் இங்குக் காண்கிறோம். யானைத் தோலை நன்றாக விரித்துப் பிடித்துக்கொண்டும், இடது பாதத்தினால் யானையின் தலையை மிதித்துக்கொண்டும் இருக்கிறார் ஈஸ்வரர். வலது கால் அழகாக உயர்ந்து காணப்படுகிறது. நாலாபுறமும் யானையின் நான்கு கால்கள் தொங்க, ஈசனின் தலைக்கு மேலே யானையின் வால் தெரிகிறது.

மார்பிலே உள்ள மணிமாலையில் மணிகள் ஒன்றுடன் ஒன்று கோத்திருப்பது போல் செய்திருப்பதும், யானைத் தோலை இயற்கைக்கு ஒட்டியவாறு காண்பித்து இருப்பதும் சிற்பியின் பிரமாதமான சாமர்த்தியத்துக்கு அறிகுறிகளாகும்.

இதுவும் பேரூரில் இருக்கும் ஒரு நல்ல சிற்பம்.



அழகு... பிட்சாடனர்!

பேரூர் பிட்சாடன மூர்த்தியின் சிற்பத்தைப் பார்க்கும் ஒவ்வொரு பக்தரும் ரசிகரும் மனதினுள், 'அடடா! பிரபு அப்படியே இறங்கி வந்துவிடும் பாவனையில் அல்லவா இருக்கிறார்!' என்று எண்ணினால், அதில் ஆச்சரியம் இல்லை. திருவாசிக்கும் சிலாரூபத்துக்கும் சம்பந்தமே இல்லாமலும், ஒவ்வோர் அங்கமும் உலோகத்தில் வார்த்தெடுத்தார்போல் தனித் தனியாகச் செதுக்கியும் இருக்கிறார் சிற்பி.

இந்தச் சிற்பத்தின் பிரதானமான விசேஷம், அதன் நுணுக்கமான வேலைப்பாடுகள்தான். மணிகள், மாலைகள், அரைஞாணாகவும் யக்ஞோபவீதமாகவும் திகழும் ஸர்ப்பங்கள், நன்றாகக் குடையப் பட்ட பாத ரக்ஷைகள் எல்லாம் ஒன்றையொன்று மிஞ்சும் திறமையுடன் செய்யப்பட்டுள்ளன. மூர்த்தியின் ஜடையில் கை கூப்பியவாறு காணப்படும் கங்காவின் உருவம் சிறியதுதான்; எனினும், லட்சணம் மிகுந்தது.

ஊர்த்வ தாண்டவர்!

பேரூர்ச் சிற்பங்களின் உயர்வுக்குக் காரணம் என்னவாக இருக்கும் என்று ஆராய்ச்சி செய்து பார்த்தவர்கள், ஒருவித முடிவும் செய்திருக்கிறார்கள். முறையே தாடிக்கொம்பு, தாரமங்கலம், பெரிய பாளையம், பேரூர் ஆகிய நான்கு ஸ்தலங்களிலும் சிற்பங்களையும் அவற்றின் லட்சணங்களையும் நன்கு கவனித்து உருவாக்கிய சிற்பாசாரியர் ஒருவரேதான் என்பதும், ஒவ்வோர் ஊரிலும் அவருடைய மனோதர்மமும் வேலைநுட்பமும் மேலும் மேலும் உயர்ந்துகொண்டு வந்து கடைசியில் பேரூரில்தான் உச்ச நிலையை அடைந்தது என்பதும் அவர்கள் கட்டிய முடிவு.

இந்த ஊரிலுள்ள சிற்பச் செல்வங்களையும், ஒவ்வொன்றிலும் அற்புதமாக வெளியாகியுள்ள பாவங்களையும், வேலைப்பாடுகளையும் காணும்போது, இந்த முடிவு சரியானது என்றே ஒப்புக்கொள்ள வேண்டும்.

அப்படி மகோன்னதமான ஜீவகளையும் அங்க லட்சணங்களும் பெற்ற பேரூர்ச் சிற்பங்களிலே பிரமாதமான வேலைப்பாட்டுக்கு அத்தாட்சியாக ஊர்த்வ தாண்டவருடைய சிற்பம் கம்பீரமாக நிற்கிறது. எங்கெங்கெல்லாம் கல்லில் குடைந்தெடுக்க முடியுமோ அங்கெல்லாம் குடைந்து, உருவங்களில் ஒவ்வோர் அங்கமும் தனித்தனியாகக் காட்சி தரும்படி செய்து கொடுத்து விட்டார் சிற்பாசாரியர்.


தென்காசிச் சிற்பத்தைப் போலவே இங்கும் பரமேஸ்வரனுக்குப் பதினாறு கரங்கள் இருக்கின்றன. எனினும், அங்க பாவங்களில் சிற்சில மாறுதல்கள் இருக்கின்றன.

இரு கைகளால் உடுக்கு அடிக்கும் பாவம் வெகு அழகாகவும் லாகவமாகவும் செய்யப்பட்டுள்ளது. உடுக்கும், கைகளின் வளைவும் இயற்கையாக அமைந்திருக்கின்றன. பெருமான் உடலிலே அணி-பணிகளோ அமோகம். ஒவ்வொன்றும் தனித் தனியே சார்த்தியதுபோல் பிரமை உண்டாக்குகிறது.

சிலையின் வலதுபுறத்தில் பிரம்மன் தாண்டவத்துக்குத் தாளம் போடுகிறார்; இடதுபுறத்தில் முகுந்தன் டங்காவைத் தட்டுகிறார். பிரம்மனுக்கு ஐந்து தலைகளும் இருக்கின்றன. ஐந்தாவது சிரம் கிள்ளி எறியப்பட்டதற்கு முன்புள்ள தோற்றம் போலும்! சங்கு-சக்கரங்களுடனும் கருணை மிகுந்த வதனத்துடனும் காணப்படும் வைகுந்த நாதன், தன் மார்பிலே ஹாரங்களைச் சொரிந்திருக்கிறார்.

பரம பக்தையான காரைக்கால் அம்மையாரும், அவள் பெற்ற வரத்துக்கு இணங்க ஈசன் கால் நிழலில் இடம் பெற்றுவிட்டாள். சிறிய உருவமே எனினும், அவள் முகத்தில் அந்தக் கிடைத்தற்கரிய குதூகலத்தின் எக்களிப்பு நன்கு புலனாகிறது.

இந்த மூன்று சிலாரூபங்களும் சிறிய அளவில்தான் இருக்கின்றன. எனினும், தனித்தனியாகக் குடைந்து செய்யப்பட்டிருப்பது சாதாரணமாக எதிர்பார்க்கக்கூடியது அல்ல.



ஈஸ்வரன் நிற்கும் கோலமும், ஒரு காலை உயர்த்தி எதிர்நோக்கும் நிலையும், தேஜோன்மயமான முக விலாசமும் இந்தத் தெய்விகக் கலையின் வெற்றிக்கு எடுத்துக்காட்டுகள் என்பதில் சந்தேகம் இல்லை. பிரபுவின் ஜடையும், கிரீடமும், கரங்கள் தோறும் திகழும் பல பல சிவச் சின்னங்களும், சிற்பாசாரியரின் கவனம் ஒருபோதும் அணு அளவும் தவறவில்லை என்பதை நிரூபிக்கப் போதுமானவை.



மகா காளி

சிவபெருமானுக்கு எதிராக நின்று நடனமாட 'ஆணவ'த்துடன் வந்த பெண்மையின் உருவமே மகா காளி. சிற்பாசாரியர் மனோதர்மத்தில் வீரபத்திரனது தோற்றத்துக்கு இணை சொல்லக்கூடிய அளவு இடம் பெற்றது இவ்வுருவமும்.

இப்பேரூர்க் காளியின் சிலையிலும் மதுரைக் காளியின் கம்பீர்யமும் லட்சணமும் காண்கிறோம். ஆபரணங்கள் ஆயுதங்கள் எல்லாம் சம்பிரமமாக அமைந்திருக்க, அங்க லட்சணங்களும் பாவமும் பரிபூர்ணமாகச் சமைந்துவிட்டன. அரையில் காணும் மணிகளாலான அணிகளும், மார்பகத்தில் புரளும் மாலைகளும், பராசக்தி நடக்கும்போது அசைவது போன்ற பிரமையை ஏற்படுத்துகின்றன. ஓர் உயர்ந்த சிற்பம்.


குடந்தை ராமர் கோயில்!



பிரமாண்டமான ஒரே கல்லில் ஆஜானுபாகுவான ஓர் உருவத்தைக் கண்டு பிரமிப்பு அடைந்தவர்களுக்குக் கும்பகோணம் ஸ்ரீராமஸ்வாமி கோயில் சிற்பங்கள், வேறொரு வகையான வியப்பையே உண்டாக்க வேண்டும்.

சிற்பி ஒரு தூணை எடுத்துக் கொண்டால், அதன் நாலா புறங்களிலும் பல சிருஷ்டிகளைச் செய்து, ஒவ்வொன்றிலும் ரசிகரை ஈடுபடுத்தி விடுகிறார். சிலாரூபங்களின் அங்க லட்சணங்களிலும், பிரபைகள், கொடிகள் அணி-பணிகளிலும் அதிசயிக்கும் வேலைப்பாடுகளைச் செய்திருக்கிறார்.

உயர்ந்ததொரு விஷயத்தையோ பண்டத்தையோ குறித்துச் சொல்லும் போது, 'கோயிலில் வைத்துக் கும்பிட வேண்டும்!' என்பது தென்னாட்டு வழக்கம். இந்த ஊரில் இங்கே அமர சிற்பங்கள் கோயிலில் இருப்பதுடன்கூட, ராமர் சிலைக்கு எண்ணெய்க் காப்பு இட்டு, மலர் மாலைகளால் அலங்காரம் செய்து வழிபாடு செய்கிறார்கள். 'நரசார்த்தூலன்' என்று கவி வாக்கினால் அழைக்கப்பட்ட ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி, இங்கே ஒரு கையில் அம்பும் மற்றொரு கையில்


சில்பி


தனுஸுமாக வீரச் சின்னங்களுடன் நிற்கிறார். எனினும், முக மண்டலத்தில் பிரபுவின் ஸௌலப்யம், அரும்பும் புன்னகையினால் நன்கு வெளியாகிறது. அருகிலே ஜனக ஸுதை நிற்கும் பாவம், பார்ப்போரை மயக்கித் தன் முன் சிலைபோல வெகு நேரம் நிறுத்தி வைத்துக்கொள்கிறது.

இந்தக் கோயிலில் சிரஞ்ஜீவியும் பக்த சிகாமணிகளிடை முழு முதல் ஸ்தானம் வகிப்போனுமாகிய ஆஞ்சநேயர் இல்லாத ஸ்தம்பம் கிடையாது. ராகவன் நாமம் உச்சரிக்கப்படும் இடமெல்லாம் இருப்பவன் வாயு புத்ரன் என்பதற்கு வேறுவிதமான அத்தாட்சி தேவையே இல்லை. பரமனின் முன்னிலையில் தன் பராக்கிரமத்தை ஒடுக்கிக்கொண்டு, வாலை மடக்கிக்கொண்டு கூப்பின கரங்களுடன் சாத்வீகமாக நிற்கும் நிலையே ஒரு தனிக் காட்சிதான்!

தூணின் மேலே பட்டாபிஷேகக் கோலத்தில் சீதா - லட்சுமணர்களுடன் காணப்படுகிறார் ஸ்ரீராமர். சின்னச் சின்ன உருவங்களே என்றாலும் வெகு அழகாகக் காண்கின்றன. நடுவிலே சப்த ரிஷிகள் வால்மீகிக்கு ஆசீர்வாதம் செய்கிறார்கள். கீழே ஒரு வேடுவக் குடும்பம் காணப்படுகிறது. ஒரு கையில் வில், ஒரு கையில் கதை, தோளில் அம்பறாத் தூணி; பக்கத்தில் மனைவி மக்களும், ஒரு நாயும்கூட! கற்பாறையில் இவ்வளவு நுணுக்கங்களையும் கொண்டு தர முடியுமா!? என்று பிரமிப்பே ஏற்படுகிறது.

இந்த ஆலயத்திலுள்ள சிற்பங்கள் தாங்கும் ஸ்தம்பங்கள் எல்லாமே, ரஸ்தா உயர்ந்திருப்பதால் புதைந்து போயிருக்கின்றன. ஆகவே, மறைவாக இருக்கும் பாகங்களிலும் சிற்பச் சிறப்பு மங்காமல் இருக்குமென்று தைரியமாக ஊகிக்கலாம்!


சிற்ப தேவதைகள்!



சிற்பாசாரியரின் மனக்கண் முன் உருவாகிய அப்ஸர உருவங்கள் சிலவற்றைக் கும்பகோணம் ராமஸ்வாமி கோயிலில் இருந்து சேகரித்துக் கொடுத்துள்ளார் சித்திரக்காரர். யாளியின் மீது ஆரோகணித்திருக்கும் கன்னிகையிடம் வாஸ்தவமாகவே ஒரு கிளி அல்ல, பல கிளிகள் கொஞ்சுகின்றன. வலது முன் விரலைத் தூக்கி நிறுத்தி, அதன்மேல் ஒரு கிளி உட்கார்ந்திருப்பதாகக் காண்பிக்கும் திறனை எவ்வளவு மெச்சினாலும் தகும். யாளியின் வாயிலிருந்து உயர எழும்பும் கொடியிலுள்ள மொக்குகளைக் கொத்தும் கிளிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாக அமைந்துள்ளன. அப்ஸர ஸ்திரீதான் என்ன! அங்க லட்சணங்கள், ஒயிலாக நிற்கும் நிலை, முகவிலாசம் இவ்வளவும் காண நிற்கிறாள். அளக பாரம் அவிழ்த்து விட்டால் தரையைத் தொடும் என்பதை அறிவுறுத்துகிறது.


கீழே சிங்கத்தின் மீது ஆரோகணித்து இருக்கும் பெண், தனது கூந்தலை வேறு விதமாக முடிந்து இருக்கிறாள். எனினும், முதல்வளுக்கு எந்த அழகிலும் குறைந்தவள் அல்ல. வேறு இரு நாரீமணிகளின் உருவங்களும் புலனாகின்றன.

இந்தப் பக்கத்தில் உள்ள தூண், எந்த நாட்டுக்கும் மதிப்பளிக்கும் ஒரு சிற்பச் சித்திரம். எதிரே பத்தினிகளுடன் தஞ்சை மன்னன், வலதுபுறத்தில் மகா விஷ்ணுவை கருடாழ்வார் சுமந்து செல்கிறார்; பாரம் தாங்காது கழுத்து வளைந்து முதுகு பணிந்திருப்பதையும், முன்னோக்கிச் செல்வதுபோல் உடலில் வேகம் தென்படுவதையும் பார்த்தவர்கள் மறக்க முடியாது. உயரே சீதா கல்யாணம்; பக்கத்தில் கஜேந்திரனுக்கு மோட்சம் அளித்த காட்சி. சிறு சிறு சிற்பங்கள் என்றாலும், சிற்றுளி குடைந்து குடைந்து அற்புதமாக வேலை செய்திருக்கிறது!


சில்பி

சாரங்கபாணி கோயில்


கும்பகோணம் ஸ்ரீசாரங்கபாணி கோயில், உயர்தரமான சிற்பங்கள் சிலவற்றுக்கு இருப்பிடமாக இருக்கிறது. சிற்பங்கள் அளவில் சிறியவை எனினும், போற்றத்தக்க பல அம்சங்களுடன் விளங்குகின்றன. இந்தப் பக்கத்திலும் அடுத்த பக்கத்திலும் அம்மாதிரியான உயர் சிற்பங்களில் ஆறு சிற்பங்களைக் காணலாம்.




வேணுகோபாலன் சௌந்தரியத்தின் சொரூபமாக நிற்கிறான்; மெய்ம்மறந்து பசுக்கள் கீழே சமைந்துவிட்டன. கஜேந்திரனுக்கு கருடாரூடராக வந்து அபயம் அளிக்கும் ஆதிமூலம், ஓர் அழகான சிற்பம். இதில் கருடாழ்வாரின் பரபரப்பு, கவனத்தைக் கவர்வதாக இருக்கிறது. கர்ப்பக்கிரகமும் முன் மண்டபமும் ரத அமைப்பில் கட்டப்பட்டு இருக்கின்றன. அந்த ரதத்தை யானைகள் இழுப்பதாகவும் காட்டியிருக்கிறது. அதைத் தாங்கும் விக்கிரகங்களில் ஒன்றாக ஒரு நாட்டியப்பெண்ணின் உருவம் அமைந்திருக்கிறது. அதையும் முந்தையப் பக்கத்தில் காணலாம்.

இடதுபுறத்தில் உள்ள மூன்று சிற்பங்களும் அதிக உயரம் இல்லை. எனினும்கூட, உலோகத்தில் ஸ்தபதி கடைந்து எடுத்தாற்போல், ஒவ்வோர் அங்கமும் தனித்தனியே செதுக்கப்பட்டு பூர்ணமான உருவங்களாக இருக்கின்றன. ஆடையும் அலங்காரமும் குறைவின்றி அமைந்துவிட்டன.

இங்குள்ள மூன்று சிற்பங்களில் ஒன்று, ஹிரண்யகசிபுவின் வதம்; இரண்டாவது, உலகளந்த பெருமாள் ஒரு காலால் வானத்தை அளக்கிறார். உயரத் தூக்கியுள்ள காலை பிரம்மா பூஜை செய்கிறார். மூன்றாவது சிற்பம் சீதா, லட்சுமணருடன்




சில்பி

ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தி; பாதத்தின் அடியில் ஆஞ்சநேயர் பணிவுடன் காணப்படுகிறார்.

இதேபோல் ஸ்ரீநாகேஸ்வர ஸ்வாமி ஆலயத்திலும் அவசியம் கவனிக்க வேண்டிய சிற்பங்கள் இருக்கின்றன. இடதுபக்கத்தில் அவற்றில் சிலவற்றைக் காணலாம். மேலே முறையே அர்த்தநாரீஸ்வரர், விநாயகர், மகிஷாசுரமர்த்தினி ஆகியோர் காணப் படுகிறார்கள். மூன்றும் அழகான முறையில் தயாராகி, நுட்பமான வேலைப்பாடுகள் உள்ளவை.

அபிஷேகம், பூஜை, ஆராதனை எல்லாம் நடக்கின்றன. அர்த்தநாரீஸ்வரர் உருவிலே வலது பாகம் ஈஸ்வரனும் இடது பாகம் அம்பிகையுமாக லட்சண பூர்வமாகச் செய்திருப்பதைக் காணலாம். சாதாரணமாக, விநாயகர் விக்கிரகங்களில் துதிக்கையில் ஒரு கொழுக்கட்டை இருப்பதுண்டு. இதில் ஒரு தட்டு நிரம்பப் பணியாரம்! மகிஷாசுர மர்த்தினி சிற்பத்தின் விசேஷம், பின் கைகள் இரண்டிலும் வைஷ்ணவ கோலத்தில் சங்கு சக்கரதாரியாக அம்பிகை தோன்றுவதாகும்.

கோயிலின் முன்புறத்தில், நடராஜர் சந்நிதியில் கல் ரதம் இருக்கிறது. குதிரை இழுக்க, ரதம் பெரிய அளவில் உருவாகியிருக்கிறது. பல பேர் சேர்ந்து இழுத்தால் நகர்ந்துவிடுமோ என்று பிரமிக்கத்தக்க ஒரு வேலை இது. ஓர் அதிசயிக்கத்தக்க அம்சம், இதன் சக்கரம். சுமார் பத்தடி உயரத்தில், நிஜ ரதங்களில் கழட்டிப்போடும் சகடம் போலவே தோன்றுகிறது. சக்கரத்திலே பன்னிரண்டு ராசிகளும் செதுக்கப்பட்டுக் காண்கின்றன.

சுசீந்திர பொக்கிஷம்!



'சிற்பக்கலையிலே நுட்ப வேலைப்பாடுகள் அதிகமாகிக்கொண்டே வந்து, திருவிதாங்கூரில் அது ஒரு சிகரத்தையே அடைந்துவிட்டதோ!' என்ற எண்ணம் உண்டாகும் வகையில் அமைந்துவிட்டன அங்கேயுள்ள சிற்பங்கள்.

அவற்றை நாம் பார்க்கும்போது, ஸ்வர்ணத்தில் செய்யப்படும் நகாசு வேலைகளைக் கற்களிலே காணும் அற்புதம் இங்கே நடந்திருப்பதை உணர்கிறோம். இவற்றை பூர்த்தியாக, எத்தனை காலம் பிடித்திருக்குமோ; எவ்வளவு பொறுமையும் உழைப்பும் தேவையாக இருந்திருக்குமோ என்று பிரமிப்பு அடைகிறோம். இங்கும், அடுத்தடுத்த பக்கங்களிலும் உள்ள சிற்பங்கள், திருவிதாங்கூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த சுசீந்திரத்துக் கோயிலில் காணப்படுபவையாகும்.

மூஷிக வாகனத்தில் ஆரோகணித்து இருக்கும் ஐங்கரப் பெருமானை, செம்பரான் மண்டபத்தில் ஒரு தூணில் தரிசிக்கிறோம். மோதகம் உண்டு சும்மா வீற்றிருக்கும் பிள்ளையார் அல்ல அவர். கஜமுகாசுரனைப் போரில் மடக்கி, அவன் துதிக்கையைப் பாசம் ஏந்திய தமது கையினால் அசைக்க முடியாதபடி பிடித்துக்கொண்டு இருக்கிறார். அவருடைய துதிக்கை கதையைச் சுழட்டிக்கொண்டு இருக்கிறது.

இங்கே தீபம் ஏந்தி நிற்கும் மாது, தனது லாவண்யத்தை உணர்ந்து உபயோகிப்பவள். கொண்டை அலங்காரமும், மோகனப் புன்னகையும், மயக்கும் உடல் நெளிவும் அவள் பருவத்துக்கு மேலும் உதவியாகிவிட்டன. கையில் இருக்கும் தீபம் கிளியை ஞாபகமூட்டி, 'கிளி ஏந்திய கிளி'யாக விளங்குகிறாள் நங்கை. இந்தச் சிற்பம், பழங்கால தாசி குலத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணைக் குறிப்பது என்றும், சுமார் 350 வருடங்களாக இதே நிலையில் இருந்து, ஏராளமான ரசிகர்களைக் கவர்ந்தது என்றும் அறிகிறோம். அவள் பெயர் மாலைக் குட்டி சீதை அம்மாள் என்பதாம்.

இளைய நாயினார் மண்டபம் சுப்பிரமணியர் சந்நிதியில் இரு பக்கங்களிலும் உள்ள சிற்பங்களில் இதுவும் ஒன்றாகும்.

அடுத்த பக்கத்திலுள்ள கருட சிற்பம், அதன் சிறப்பினாலேயே அம்மண்டபத்துக்கு 'கருட மண்டபம்' என்ற பெயரைச் சம்பாதித்துக் கொடுத்து விட்டது. 300 வருடங்களுக்கு முன் மதுரை மன்னன் திருமலை நாயக்கன் இம்மண்டபத்தையும் கட்டி, இந்தச் சிலையையும் அதில் பிரதிஷ்டை செய்தான்.

கருடன் சிலை ஆஜானுபாகுவாக நிற்கிறது. இரு பக்கங்களிலும் நெருக்கமாகத் திருமலை நாயக்கன் மற்றும் அவன் குடும்பத்தினருடைய சிலைகள் இருக்கின்றன. இவை, அபூர்வமான வேலைப்பாடுகளால் இதர




சில்பி

சிற்பிகளைப் பிரமிக்க வைப்பதோடு, உலகப் பிரசித்தியே அடைந்து விட்டன. அரம் கொண்டு ராவி ராவி, வேலை முடிக்கப்பட்டது போன்ற பிரமையை உண்டாக்குகின்றன. மதுரைச் சிற்ப வேலைகள் முடிந்தபின் இவை தொடங்கப்பட்டிருந்ததால், அவற்றில் காணப்படும் நயம் முழுதும் இங்கு வந்துவிட்டதாக ரசிகர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

கை கூப்பி நிற்பவன் திருமலை நாயக்கன். அவன் பக்கத்தில் வெற்றிலையை ஒரு கையில் வைத்துக் கொண்டு இன்னொரு கையால் மடித்துக்கொடுக்கும் பாவனையில் அடப்பக்காரன் சிலையும் கவனிக்கத் தக்கது. அவன் தலைமுடிச்சின் உருவமும், வெற்றிலையை நீட்டும் பாவமும், தான் ஒரு பெரிய காரியத்தைச் செய்கிறோம் என்று முகத்தில் தோன்றும் பெருமையும் வெகு தத்ரூபமாக விழுந்துவிட்டன.

கருடாழ்வாரின் சிற்பத்தில் கிரீடம், தாடங்கம், தோள் வளைகள், கச்சை - எங்குமே நுணுக்கமான வேலைகளைக் கவனிக்கலாம். இடுப்பைச் சுற்றி சன்னமாக ஒரு ஸர்ப்பம் வளையமிடுவது வெகு அழகாக இருக்கிறது. மன்னனின் முதுகு வளைவும், உதரம் முன்னுக்குச் சாய்ந்து இயற்கையாக இருப்பதும் திருஷ்டியைத் தப்ப முடியாது. ஒரு புஷ்பச் சரம் கழுத்தை அலங்கரிக்கிறது. இடையில் சொருகின கத்தியும் காதிலும் கணுக்கால்களிலும் அணி-பணிகளும் உண்மையில் நல்ல திறனை வெளிப்படுத்துகின்றன. திருமலை நாயக்கன் இம்மண்டபத்தை நிரப்புவதில் அதிக காலமும் சிரத்தையும் செலவு செய்தான் என்றால், அது காலங்கடந்து நின்று பலரின் சிந்தையைக் கவரும் என்பதை நன்கு உணர்ந்தே செய்திருக்க வேண்டும்!

இவ்வளவு அபாரமான வேலையைச் செய்து முடிக்கத் திருமலை நாயக்கன் கையாண்ட ஒரு யுக்தியும் கதையாக வழங்கப்படுகிறது இங்கே.

கற்பொடி ராவி எடுக்கப்பட வேண்டியது, மிக அதிகமாக இருந்ததை உணர்ந்திருந்தான் மன்னன். ஆகவே, வேலை நடக்கும்போது இதில் ஈடுபட்ட மூன்று சிற்பிகளுக்கும், அன்றாடம் ராவி எடுக்கும் கற்பொடிகளுக்குச் சமமான எடை பொன்னும் வெள்ளியும் தருவதாக வாக்கு அளித்திருந்தான். அவ்வாறே தினம் தினம் வழங்கியும் வந்தான். இப்படியே வெகு காலமாகியும் வேலை மட்டும் பூர்த்தியாகாதது கண்டு சந்தேகப்பட்டுக் கவனித்தபோது, சிற்பிகள் பேராசையால் சிறிது சிறிது ராவிவிட்டு, வேறு கற்பொடியைக் கலந்து சன்மானம் பெற்று வந்திருக்கிறார்கள் என்பது தெரிந்து போயிற்று! அதற்காக மன்னன் ஒன்றும் செய்துவிடவில்லை. வழக்கம்போல் பொன்னும், வெள்ளியும் வழங்கியே வந்தான். வேலை பூர்த்தியான பின் நாயக்கன், இந்தக் 'குற்றவாளி'களை ஆற்று மணலில் கழுத்தளவு புதைக்கச் செய்து, பட்டத்து யானையைக் கொண்டு இவர்களின் சிரங்களை இடறச் செய்தானாம்! இதையும் ஒரு சிற்பமாகவே கீழே வலது புறத்து மூலையில் காணலாம்.

அமர சிற்பங்கள்...




சா சிந்திரத்துச் சிலைகளைப் பார்க்கும் ஒவ்வொரு தடவையும் இவற்றைச் செய்திருக்கும் சிற்பிகளுக்கு ஒரே ஒரு சக்திதான் இல்லாமல் போய்விட்டது என்பதை உணர்கிறோம். உருவத்துக்கு உயிர் அளிக்கும் திறன் மட்டும் இவர்கள் கையில் இருந்தால், இன்று இந்த அமர சிற்பங்கள் பிரம்ம சிருஷ்டிக்கு அணு அளவும் குறைபாடு காண முடியாதபடி நம்மிடையே நடமாடிக்கொண்டிருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை!

அதிநுட்பமான வேலைப்பாடு களையும், இயற்கைக்கு ஈடு காண்பிக்கும் அங்க அமைப்புகளையும், அபாரமான முகபாவங்களையும் காணும்போது, இவற்றைப் பற்றிய வர்ணனைகளை எங்கே ஆரம்பிப்பது, எங்கே நிறுத்துவது என்று திணற வேண்டித்தான் வருகிறது.

வலது பக்கத்திலே, கையில் கத்தி ஏந்தி யுத்த சன்னத்தனாகக் கிளம்பும் திருமலை நாயக்கன் சிற்பமும் சரி, அவன் கைப்பற்றி அருகே நிற்கும் அவன் மனைவி (தஞ்சை மன்னனின் மகள்) உருவமும் சரி, சிற்ப சாஸ்திரத்தில் விற்பன்னர்களைக்கூடப் பிரமிக்க வைத்திருக்கிறது என்றால் மிகையாகாது.

வழுவழுப்பான உடலிலே ஹாரங்கள் தொங்குகின்றன. இதர ஊர்களின் சிற்பங்களில் ஆபரணம் என்றால் அதிக சன்ன வேலைகளில் ஈடுபடாமல் பார்ப்பதற்கு ஆபரணமாகத் தோன்றும்படி செய்வார்கள். இங்கேயோ குடைந்து குடைந்து, ஒவ்வொன்றையும் தனியே கழட்டி எடுத்து விடுகிறாப்போல் செய்திருக்கிறார்கள்! ஹாரம் ஹாரத்தின் மேல் படிந்திருப்பதையும், முத்து மாலைகளில் ஒவ்வொரு முத்துடன் இடையே ஓடும் நூலிழையையும்கூடச் செய்து முடித்தார்கள் என்றால், அந்தச் சிற்ப சக்கரவர்த்திகளை எப்படி


சிற்பி



புகழ்வது! நாயக்க மன்னன் இடையில் சொருகியிருக்கும் பிச்சுவாவையும் கத்தியையும்கூட உருவித் தனியே எடுத்துவிடலாம்! காதின் மேற்புறத்திலே ஒரு சிறு துளை செய்து அதில் தொங்கும் சிறிய முத்து ஒன்றே இதன் சிருஷ்டி கர்த்தாவின் கைத்திறனைக் கண்டு அசந்துபோக வைக்கிறது.

இந்தப் பக்கத்தில் கை கூப்பி நிற்கும் சிலையையும் இதே உயர்ந்த அளவில் மதித்துவிட வேண்டியதுதான். அதில் போலவே இந்தச் சிற்பத்திலும் கச்சையின் முனையெங்கும் தத்ரூபமான முத்துச்சரங்கள் வேலை செய்யப்பட்டிருக்கின்றன. பின்னால் உள்ள தூணுடன் இரண்டொரு பிடிப்புகளே இருக்கின்றன. ஆகையால், இவ்வுருவங்களைப் பார்க்குந்தோறும் உண்மையில் அந்த மன்னனையே நிறுத்திவைத்து அலங்காரம் செய்திருக்கிறார்களோ என்று மயங்கவே வேண்டியிருக்கிறது!

இடதுபுறத்திலுள்ள சிற்பம் உலகளந்த பெருமாளுடையது. இது முடிந்து 400 ஆண்டுகளுக்கு மேலாக ஆகியிருக்க வேண்டுமென்று தெரியக் கிடக்கிறது. மற்ற நல்ல சிற்பங்களைப் போலவே தயாராகி இருப்பதுடன்கூட கவனிக்க வேண்டிய சில அம்சங்களும் இதில் உண்டு.

பெருமாள் காலை உயரத் தூக்கியதும், தலையைச் சாய்த்துக்கொண்டிருப்பதில் இயற்கை தோன்றுகிறது. கீழே ஒருபுறம் கண்ணிழந்த சுக்ராச்சாரி சோகமே உருவாக உட்கார்ந்திருப்பதையும், எதிர்ப்புறத்தில் மகாபலி சக்கரவர்த்தி வாமனருக்கு தாரைவார்ப்பதையும் சிற்பங்களாக்கி உள்ளார்கள்.

உயரே, வானத்தில் மேகக்கூட்டத்தில் இருந்து காணப்படுபவர்களைப்போல் பிரம்மாவும் இரு தேவர்களும், இந்திரனும் வெளிப்படுகிறார்கள். அவர்கள் முறையே பெருமாளின் பாதங்களை பூஜித்து அர்ச்சித்து அபிஷேகம் செய்யும் காட்சி அது. அளவில் சிறிய சிற்பமே எனினும் அழகில் குன்றியதே அல்ல என்று நிச்சயமாகச் சொல்லலாம்.




சுயம்வர தேவி...

சிந்திரத்துச் சிலா ரூபங்களைப் பார்த்து வியந்துபோகும் ரசிகர்களுக்கு வேறோர் ஆச்சரியமும் சிற்பாசாரியர் வைத்திருக்கிறார். திருமலை நாயக்கன் சிலையிலே செவிகளிலும் நாசிகளிலும் துவாரங்கள் தெரிகின்றன. ஒரு மெல்லிய ஈர்க்குச்சியை மூக்கில் நுழைத்தால், அது காது வழியாக வெளியே வருகிறது!

முன்பு நாம் பார்த்த சிலைகளுக்கு ஒப்பான சிலைதான் வலது பக்கத்தில் காணும் சுயம்வர தேவியினுடையதும். இது, கோயில் ஊஞ்சல் மண்டபத்தின் பின்னே இருக்கிறது. உருவம் சிறிதாயினும், கவர்ச்சி பெரிதுதான். இந்த மண்டபம் கி.பி.1537-ல் கட்டி முடிக்கப்பட்டதென்று சில சாசனங்கள் கூறுகின்றன.

அதிரூபவதியான இம்மங்கை தன் கையிலுள்ள ஹாரத்தை யார் கழுத்திலோ போட வருபவள்போல் தோன்றுகிறாள். இவளது பூர்ண எழிலிலே மனதைப் பறிகொடுத்திருக்கும் கலை அன்பர், 'கல்நெஞ்சுக்காரி ஆனதாலேயே அசையாது இப்படி ஆசைக் காட்டி நிற்கிறாளோ!' என்று அங்கலாய்த்திருந்தாலும் ஆச்சரியம் இல்லை; அவ்வளவு தூரம் இதன் ஆகர்ஷண சக்தியைச் சொல்லலாம். தத்ரூபமான புஷ்பமாலை பின்னம் அடைந்திருப்பதைப் பார்த்தால், வேறு யாருக்கும் இவள் அதைப் போட்டுவிடாதபடி எந்த ரசிகரோ வேண்டுமென்றே செய்திருப்பார் என்றுகூட ஊகிக்கச் செய்கிறது!




சில்பி

ஊஞ்சல் மண்டபம்...

சுசிந்திரத்துக் கோயிலில் ஊஞ்சல் மண்டபத்தைத் திட்டம் அமைத்து உருவாக்கியவர்கள் 'தேரூர், பெரிய மூத்தபிள்ளை' என்ற கௌரவ பட்டப் பெயர் பெற்ற பரம்பரையைச் சேர்ந்தவர்கள் என்றும், 1583-ம் வருடம் இதைச் செய்து முடித்தார்கள் என்றும் இங்குள்ள சிலா சாசனங்கள் மூலம் தெரிய வருகிறது.

கோபுர வாசலைத் தாண்டி, கோயிலுக்குள் செல்வதற்கு முன் உள்ள இந்த மண்டபம், அதன் சிற்பச் செல்வங்களைக் கொண்டு... இங்கு வருபவர்களையெல்லாம் சிறிது நேரமாவது நிறுத்தி வைத்துத் தன் பெருமையைப் புகட்டாமல் விட்டதில்லை.

சிற்பங்கள் நிறைய இருக்கின்றன; அவற்றில் பெரும்பான்மையானவை 'சிருங்கார' ரஸத்தை அடிப்படையாகக் கொண்டவை. லட்சண பூர்ணமான முறையில், பாவம் ததும்பும் உருவங்கள். ஆகையால், உயிர்பெற்றவையோ என்று அடிக்கடி பிரமிப்பை உண்டாக்குகின்றன.


இவற்றின் அங்க அமைப்புகளைக் கண்டு அதிசயித்து, அலங்கார ஆபரணங்களை ஆராய்ந்து ஆச்சரியப்பட்டுப்போகும் ரசிகர், மண்டபத்தைவிட்டு வெளி வரும்போது தனக்குப் பழக்கமான - பல நாள் பரிச்சயமுள்ள - சிலருடன் அந்தரங்கமாக அளவளாவிவிட்டு வந்தது போன்ற உணர்ச்சியுடனேயே வருகிறார்.

அமரக்கலைக்கும் அழகுக்கும் பொலிவுக்கும் பெருமைக்கும் இருப்பிடமாக இருந்துவரும் இந்த இடம், ஒரு காலத்தில் கலை விரோதிகளின் கண்ணுக்குத் தப்பவில்லை என்பதும், அவர்கள் கரங்களின் துர்-ஆக்ரமிப்புக்கும் இலக்காகி இருக்கின்றன என்பதும் எளிதில் புலனாகிவிடுகிறது.

அப்பழுக்குச் சொல்ல முடியாத சிலையிலே ஒரு மூளி, சௌந்தரிய தேவதை என்று வர்ணிக்க வேண்டிய உருவத்திலே ஒரு பின்னம் - இப்படியாகக் காண்கிறது. இதெல்லாம் சந்தாசாகிப் 200 வருடங்களுக்கு முன்னால் இங்கே அட்டகாசம் செய்தான் என்பதற்கு 'அழிக்க முடியாத' சின்னங்கள் என்று சொல்லப்படுகிறது.


வலது பக்கத்தில் காணும் இரு பெரிய சிலைகள் - தெய்வப் பிறவிகளும், காவியங்களிலே கீர்த்தி பெற்றவர்களும், தூய காதலின் நிரந்தர ரூபங்களுமான ரதியும் மன்மதனும். சிருங்கார ரஸத்துக்குத் தவறாத எடுத்துக்காட்டாக இவர்களின் சிலைகளைச் செதுக்கிய சிற்பாசாரியர்கள், மனித உள்ளத்தில் இருந்துவரும் இவர்களின் கற்பனா உருவங்களுக்கு ஒருபடி மேலாகவே செய்து காட்டிவிட்டார்கள் என்றால் மிகையாகாது.

அழகனை 'மன்மதனோ' என்றும், அழகியை 'ரதியோ' என்றும் பேச்சில் குறிப்பிடுவது நம் நாட்டு வழக்கம். இந்தச் சிற்ப அழகன் - அழகிகளைக்



காணும்போதே, 'இவன் மன்மதன்தான்; இவள் ரதிதான்' என்ற நிச்சயம் நமக்குள் ஏற்பட்டுவிடுகிறது.

புருஷ சௌந்தரியத்துக்கு லட்சியமாக நிற்கிறான் மன்மதன். பலமுள்ள உடல்தான்; ஆனால், அதற்கு அழகு மெருகு கொடுத்திருக்கிறது. வேண்டிய அளவு மாலைகள், தோள்வளைகள், கங்கணங்கள் இருக்கின்றன; கச்சையும் கச்சிதமாக அமைந்திருக்கிறது. இவை இல்லாவிட்டால்கூட இந்த ஆள்



அழகன் என்பதை ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும்: அப்படிப்பட்ட திறமையான அங்க அமைப்பு! தன்னையும் தன் பாணத்தையும் மிஞ்சிவிடும் ஆள் ஒருவன் மூன்று உலகிலும் இல்லை என்ற அலட்சிய பாவத்தைப் புன்னகையாக வெளியிட்டு வெகு நாஸூக்குடன் ஒரு புஷ்ப பாணத்தை வலது கையில் உருவிவிட்டான். இடது கரத்தில் இலங்கும் கரும்பு வில்லின் மேல் ஒரு கிளியையும், புஷ்பக்கணையைக் கொத்திக்கொண்டு இன்னொரு கிளியையும் காட்டி, மன்மதன் இருக்குமிடமெல்லாம் காதலர் ஜோடி உண்டு என்பதை நிரூபிக்கிறார் சிற்பி! 'அப்பாடா! எத்தனை அழகு இவன்' என்று அந்தப் பளுவைத் தாங்கத் திணறும் தோரணையில் கீழே யானைகளின் உருவங்கள்.


'நடையிலே அன்னப்பேடான' ரதிதேவி, உண்மையிலேயே ஓர் அன்னத்தின் மீது ஆரோகணித்து எதிர்நோக்கி வருகிறாள். வேகமாக வரும் அன்னம் எங்கே அவளைப் பின்னால் தங்க விட்டுவிடுமோ என்று பிரமிக்கத் தோன்றும்படி, தூணுக்கும் சிற்பத்துக்கும் வெகு சொற்ப சம்பந்தமே காணப்படுகிறது. கொண்டையின் அழகு வசீகரிக்கச் செய்கிறது; உட்கார்ந்திருக்கும் தோரணையும், லகானைப் பிடித்தும் செண்டை வீசி ஓட்டுவதும் வெகு கவர்ச்சிகரமானவை. தென்காசியில் சிறந்து விளங்கும் ரதியின் சிலையை இது உடனே ஞாபகமூட்டுகிறது. லகானைப் பிடித்திருக்கும் இடது கரம் அதிகம் பின்னம் அடைந்து காண்பது மனத்தை மிகப் புண்படுத்தாமல் இராது என்பதும் திண்ணம்.

இதே மண்டபத்தின் கன்னி மூலையில் அமைந்திருக்கும் தூணில் உள்ள கர்ணன் சிலை இங்கு இருக்கிறது. நாகாஸ்திரம் பிரயோகம் செய்யும் தருணம். சந்தா சாகிப்பினுடைய கைங்கரியமாக வில்லும் பாம்பும் பின்னமாக்கப்பட்டு இருக்கின்றன. ரசிகர் சிலையைப் பார்வையிடும்போதே சிற்பாசிரியரின் கைத்திறனைப் பல இடங்களில் காணத் தவறமாட்டார்.

சுசீந்திரம் - அனுமன்!



யாரும் நுழைந்துவிட முடியாத கட்டுக் காவல்களுடன் 'அருவி நீர் ஒழுகு கண்ணா'ளாக சீதாதேவியை ராவணன் சிறை வைத்திருந்த அசோக வனத்தினுள்ளும் புகுந்து சென்று, கண்டு வணங்கி, கணையாழியைக் கொடுத்துச் சூடாமணியைத் தாங்கித் திரும்பி விட்டான், அண்டர் நாயகன் அருள் - தூதனான அனுமான். வந்த காரியம் - 'மும்மையாம் உலகம் தந்த முதல்வர்க்கும் முதல்வன் தூதனாக' வந்த காரியம் - வெற்றிகரமாக முடிந்துவிட்டது. ஜனக ஸுதையின் உள்ளத்தில் நம்பிக்கை ஊட்டிய பின்னர், அந்த லோகமாதாவின் வாக்கினாலேயே, 'இங்ஙனம் இருத்தி!' என்ற பெறுதற்கரிய ஆசியையும் பெற்றாகிவிட்டது.



இருந்தாலும், வாயுபுத்ரன் லங்கை விஜயம் செய்தான் என்று 'தச கண்ட'னுக்கு ஒரு கோடி காட்ட வேண்டாமோ? அனுமந்தனுடைய மனம் அடித்துக்கொள்கிறது. உத்ஸாக - வெறியே அதிலே பிறந்துவிட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் கவிச்சக்கரவர்த்திக்கும் கவிதை - வெறி வந்துவிடுகிறது. இரண்டும் சேரவே, லங்கை மாநகரம் பட்ட பாட்டைக் கேட்கவும் வேண்டுமா?

முடிந்தன, பிளந்தன
முரிந்தன, நெரிந்த
மடிந்தன, பொடிந்தன
மறிந்தன, முறிந்த
இடிந்தன, தகர்ந்தன
எரிந்தன, கரிந்த
ஒடிந்தன, ஒரிந்தன
உதிர்ந்தன, பிதிர்ந்த!

என்று அதைச் சிதைத்துத் தள்ளிவிட்டான் விஸ்வ ரூபத்தை எடுத்துக்கொண்ட ஆஞ்சநேய மூர்த்தி.

"ராமச்சந்திரப் பிரபுவின் தூதன் அனாயாசமாக விளைவிக்கக்கூடிய நாசம் இதுவென்றால், அந்த மூர்த்தியே புறப்பட்டு வந்தால் என்ன ஆகும், பார்த்துக்கொள் ராவணா!" என்று எடுத்துக்காட்டுகிறது அந்தச் செயல். அதோடு மாருதியின் கண் முன்னே ராகவன் உருவம் சதா நின்று, ராவணன் தீச்செயலை

எடுத்துக்காட்டிக்கொண்டே இருந்திருக்க வேண்டும்!

ராமாயணத்தில் சுந்தர காண்டத்தின் அழகுக்கு அழகு கொடுத்திருப்பது, பக்திப் பிரவாகமும், தியாகப் பெருக்கும், பராக்கிரமச் சிறப்பும் பெற்ற ஆஞ்சநேயனுடைய பிரபாவம்தான். பக்தர் இதயங்களை என்றென்றும் விட்டு நகராதபடி அவன் அங்கே அஸ்திவாரம் போட்டுக்கொள்கிறான். அந்தச் சிரஞ்ஜீவி, சஞ்சீவி பர்வதத்தைத் தூக்கிக்கொண்டு வானவீதியில் விரையும்போது, அதிலிருந்து ஒரு துண்டு விழுந்துவிட்டதாகச் சொல்லப்படும் திருவிதாங்கூர் சமஸ்தானத்தில், சுசீந்திரத்துக் கோயிலில் இருக்கும் ஆஞ்சநேயன் சிலையையே இடது புறத்தில் காண்கிறோம்.

சீதையின் வாக்குப்படி, 'பதினான்கு உலகங்கள் அழிந்தாலும் அழியாம'லிருக்கும்படி பதினாறு அடியில் தயாரிக்கப்பட்டதோ என்று நினைக்கும்படியாக, கம்பீரமாக நிற்கிறது இந்தச் சிலை. ஸ்ரீராமர் சந்நிதிக்கு எதிரில் கைகூப்பிக்கொண்டு, 'பிரபு எப்போது கூப்பிடுவார், பணி செய்யும் பாக்கியம் கிட்டும்' என்ற பாவனை பரிபூர்ணமாகத் தோன்ற இருக்கிறது உருவம். மிகப்பெரிய வால் சுருண்டு காண்கிறது!


பல வருடங்களுக்கு முன்பு செய்யப்பட்ட சிலாரூபம் என்றாலும், சமீப காலத்தில்தான் பிரதிஷ்டை செய்யப்பட்டதற்கு ஒரு காரணம் சொல்லப்படுகிறது. இது பூர்த்தியடையும் முன்பு சந்தாசாகிப்பினுடைய ஆக்கிரமிப்பு ஏற்பட்டு, சிலைக்கு அவனது படைகளால் பாதகம் விளைந்துவிடுமோ என்று அஞ்சும் நிலையும் வந்தது. அப்போது இதை மறைவாகப் புதைத்துவிட்டார்கள். சுமார் 100 வருடங்களுக்கு முன்பே பெயர்த்தெடுத்து சுமார் 50-60 வருடங்களுக்கு முன்புதான் பூர்த்தியும் செய்தார்கள்.

ஆஞ்சநேயனின் உருவத்தைப் பார்த்தாலே மனதில் அச்சமும், சாகசமான செயல்களின் ஞாபகமும் ஏற்படும்படி செய்கிறது. ராம - லட்சுமணர்களை ஒரு காலத்தில் தூக்கிய அகன்ற தோள்கள், ராமபக்தியில் விம்மி நிற்கும் மார்பு, அரக்கர்களை அறைந்து மாய்த்த வலுவான புஜங்கள் - இவையெல்லாம் பெற்ற இந்த உருவமும், மகாகவியின் இதயத்தில் நித்ய வாசம் செய்த ஆஞ்சநேய உருவமும் ஏறக்குறைய ஒன்றாகத்தான் இருந்திருக்க வேண்டும் என்று ஊகிக்கிறோம்.

சிற்பத்தை உருவாக்கிய கலைச் செல்வர்களும், ரசிகர்கள் கொடுக்கும் 'சபாஷ்' பட்டத்தைப் பெற்றுக் கொள்வதுடன்கூட, ஆஸ்திகர்களின் நன்றிக்கும் பாத்திரர்களாகி, 'ஒரே கல்லில் இரு காரியங்'களைச் சாதித்துக் கொண்டார்கள் என்று கூறினால், அது மிகையாகாது.

சுசி–இந்திரம்...


சொல்லும்போதே சுவை தட்டும் பெயர் சுசிந்திரம். அந்த க்ஷேத்திரத்தில்தான் சாபத்தினால் களங்கம் அடைந்த இந்திரன், சாப விமோசனம் அடைந்து பரிசுத்தனாக ஆனதாக ஸ்தல புராணம் கூறுகிறது. 'சுசி-இந்திரம்' என்ற பெயர் ஏற்பட்ட காரணமும் அதுவேதானாம். அர்த்தஜாமத்தில் தினமும் இங்கே இந்திரன் வந்து பூஜை செய்வதாக



ஓர் ஐதிகமும் இருந்து வருகிறது. தவிர, மும்மூர்த்திகளும் பதிவிரதா சிரோமணியான அனுஸூயா தேவிக்குத் தரிசனம் கொடுத்ததும், அத்ரி முனிவர் சிரஞ்ஜீவியாக வாழ்ந்து வருவதும் இங்கேதான் என்று கூறப்படுகிறது. இவ்வூரில் கோயில் கொண்டுள்ள மூர்த்திக்கு 'ஸ்தாணுமாலயப் பெருமாள்' (ஸ்தாணு-மால்-அயப் பெருமாள்) என்ற நாமதேயம் பெற்றவர்.

பழம்பெருமைகள் பெற்ற இந்த ஸ்தலத்தின் சிற்பச் சிறப்பும், இதை ஆண்ட மன்னர்களின் பிரபாவமும் இரண்டாயிரம் வருடம் வரை, தொடர்ச்சியாகப் பல வகைப்பட்ட எழுத்துகளாலான சிலா சாசனங்கள் மூலமாகக் காண்கிறோம். சோழ, பாண்டிய மன்னர்களும், விஜயநகர அரசர்களும், திருவிதாங்கூர் ராஜாக்களும் செய்து வைத்துள்ள திருப்பணிகள், அந்த நாளைய செழிப்பையும் வைபவங்களையும், பாரம்பரியமாகத் தர்மங்களை நடத்திவந்த விதரணையையும் விளக்குகின்றன.

இந்தப் பக்கங்களில் அவர்கள் ஆக்கிவைத்த சிற்பச் செல்வங்களில் குறிப்பிட்ட சில பிரசுரமாகியுள்ளன. ஒரு பெண் வெகு நாஸூக்காகக் கண்ணாடி பார்த்துத் திலகம் வைத்துக்கொள்கிறாள். வலதுபுறத்தில் இரு வரிசைகளில் வீரபத்திரனின் ஸஹபாடி, ஒரு மட மாது, ஒரு நாட்டியப் பெண், ஸ்ரீசக்கரத்தினாலான திருவாசியின் முன் அமர்ந்த அம்பிகை, வெற்றிலை மடித்துத் தரும் மங்கை, குடை பிடித்த கட்டழகி - ஆகியவர்களின் சிற்பங்கள் இருக்கின்றன. இவை அளவில் சிறியவை என்பதை நோக்கும்போது, இத்தனை நுட்ப வேலைகள் சாத்தியமானது எப்படி!? என்று மூக்கின்மேல் விரல் வைத்துத்தான் ஆக வேண்டும்!



சில்பி



ஸ்ரீவில்லிப்புத்தூர்...

மதுரையில் திருமலை நாயக்கன் ஆட்சி நடந்துவந்த காலத்தில், அதன் அருகிலுள்ள ஸ்ரீவில்லிப்புத்தூரிலும், அவனுடைய அதிகாரம் வியாபித்து இருந்ததற்கு அடையாளம் அங்குள்ள சிற்பங்களே போதுமானவை. பெரிய அளவிலும் உயர்ந்த முறையிலும் அங்குள்ள சிலாரூபங்கள், கலை செழிப்பாக இருந்ததற்குச் சாட்சி கூறுகின்றன. இங்கு காண்பித்து இருக்கும் சாதாரண ஒரு ஜன்னலில்கூடப் பல யானைகளையும் யாளிகளையும் சிங்கங்களையும் ஒன்றின்மேல் ஒன்று நிற்பதுபோல் பிணைத்துக்காட்டி இருக்கிறார்கள் சிற்பாசாரியர்கள் என்றால், பெரிய சிற்பங்களில் காணப்படும் அரிய வேலைப்பாடுகளைப் பற்றி அதிகம் கூறவேண்டியதில்லை.


இடதுபுறம் உள்ள சித்திரத்தில் பிரமாண்டமான இரு தூண்கள் காட்டப்பட்டு இருக்கின்றன. அவை அபாரமான சிற்ப ஜாலங்களைத் தாங்கி நிற்கின்றன. முன்னால் இருக்கும் தூணில் எதிர்நோக்கி இருக்கும் உருவம் சிவபெருமான் பிட்சாடன மூர்த்தியாக வீதிகள் தோறும் வந்து, தாருகவனத்து ரிஷிபத்தினிகளை மயக்கிய கோலம். பக்கத்தில் உள்ள பெரிய உருவம் திருமால் மோகினிப் பெண்ணாக வந்த காட்சி. கை வளைகள், தோள் அலங்காரங்கள், மார்பின் அணி-பணிகள், தலையில் அமர்க்களமான சிங்காரிப்புகள், கால்களில் காணப்படும் ஜோடனைகள் எல்லாம் பூர்ணமான அங்க லட்சணங்களுடன் சேரும்போது, திகைப்பையே உண்டாக்குகிறது. கீழே கர்வபங்கம் அடைந்த ரிஷிகளும், உள்ளத்தைப் பறிகொடுத்துக் கலை இழந்த ரிஷிபத்தினிகளும் இருக்கிறார்கள்.



அப்பால் உள்ள தூணில் ஒரு பெரிய யாளி. அதன் துதிக்கை ஒரு யானையின் துதிக்கையுடன் பிணைக்கப்பட்டு இருக்கிறது. யானை திணறுகிறது.

சிலாரூபங்களின் லட்சணங்கள், மதுரைச் சிற்பங்களுக்கு உரித்தான பல அம்சங்களுடன் இருக்கின்றன. தவிர, தூண்களுடன் அவசியமான அளவுக்குச் சிறிது பிடிப்பே கொண்டு, உருவங்கள் தனித்தனியாகப் பெரிய ஆக்ருதியுடன் தோன்றுகின்றன. மோகினியின் தொடையில் ஒரு கிளி அழகாக அமர்ந்திருப்பது முதல், காதணிகள், தலையில் சூரிய-சந்திரப் பிரபைகள் வரை நுணுக்கமான வேலைப்பாடுகள் நிறைந்திருக்கின்றன.

ஸ்ரீவில்லிப்புத்தூர் சிற்பங்கள் சிற்பக் கலைக்கு மதிப்பும் கலா ரசிகருக்கு மகிழ்ச்சியும் அளிக்கும் முறையில் இருக்கின்றன என்றால், அது முற்றிலும் உண்மையே!



நாச்சியார் சந்நிதியில்...

ஸ்ரீ வில்லிப்புத்தூர் சிற்பங்களிலே எடுத்த எடுப்பிலேயே தனி விசேஷமாக சொல்லிவிடக்கூடிய அம்சம், தலை அலங்காரங்களே. இவை தவிர, சிலைகளின் ஆக்ருதியும் அதிகமாக இருப்பதால், கலா ரசிகர்கள் பல கோணங்களில் நின்று பார்ப்பதும், பார்த்ததையே திரும்பத் திரும்பப் பார்த்துக்கொண்டிருப்பதும் இங்கே சகஜமாகக் காணலாம்.

இன்னும் ஒருபடி அதிகம் போய், ஒவ்வொரு முறை நோக்கும்போதும் ஒரு புதிய அழகையும் நூதன பாவத்தையும் இந்த அமர சிற்பங்கள் வெளியிடுவதாக நினைக்க நேர்ந்தால்கூட ஆச்சரியம் இல்லை.



இடது பக்கத்தின் மேலே இருப்பவன் ஒரு வாள் வீரன். அங்க லட்சணங்களில் இருந்து இவன் வீரபத்திரனின் ஸஹபாடி என்று கொள்ளலாம். கோரமாக விரிந்த கண்கள், கொடூரமாக வளைந்த மீசை, அதை முறுக்கும் வலிவுமிக்க கரம், அபரிமிதமான வேலைப்பாடுகள் மிகுந்த அகன்ற வாள், அதைப் பிடித்த முரட்டுக் கை, அனல் ததும்பும் முகபாவம் எல்லாம் பயங்கர ரஸத்துக்கு ஏற்ற உபகரணங்களாகின்றன. மேலும், காலில் கட்டியிருக்கும் சங்கிலி, சங்கிலியில் உள்ள மணி, கழுத்தில் தொங்கும் ஹாரத்தின் நகாசு வேலைகள் உள்பட எல்லாம், இவற்றை மிஞ்சி நுணுக்கமானதொரு வேலைப்பாடும் இருக்க முடியுமா என்று வியந்துகொள்ளச் செய்கின்றன.

சிலையின் வலதுபுறத்தில் நிற்கிறாள் ஒரு நாட்டிய மங்கை. விறுவிறுப்பாக அவள் ஆடி வரும்போது, கண்ணிமைக்கும் நேரத்தில் காணக்கூடிய ஒரு காட்சியை நிரந்தரமாக நம் முன் நிறுத்திவிட்டார் சிற்பி. ஆகவே, அவள் அடி எடுத்து வைத்து விடுபவள் போலவே காண்கிறாள். அலங்காரங்களுக்கும் முக வசீகரத்துக்கும் ஒரு குறையும் சொல்ல முடியாது.

இந்தப் பக்கத்தில் எதிர்நோக்கி வருபவள் ஓர் அரசி. வலது கரத்தில் ஒரு புஷ்பச் செண்டைப் பிடித்திருக்கிறாள்; இடது கரம் புஷ்பம்போல் மிருதுவாக அன்புடன் அணைத்துக்கொண்டிருக்கிறது ஓர் அரசிளங்குமரியை. இதர சிறப்புகளுடன் கூட அரசியின் வதனத்தில் தாய்மையும், மகளின் முகத்தில் யௌவனத்தின் வசீகரமும் அதியற்புதமாகப் பிரதிபலிக்கச் செய்துவிட்டார் சிற்பாசாரியர்.

இடதுபுறத்தின் கீழே நாம் காண்பது ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆலயமும், திருமலை நாயக்கன் அங்கே கட்டியுள்ள மகாலும்தான். இவ்விரு பக்கங்களிலும் உள்ள சிலாரூபங்கள் இங்கே ஸ்ரீ நாச்சியார் சந்நிதியில், துவஜஸ் தம்பத்துக்குத் தென்பாகத்தில் இடம் பெற்றுள்ளன.




ரதிதேவி...



தென்காசி, கிருஷ்ணாபுரம், சுசீந்திரம் முதலிய இடங்களில் ரதியின் சிலைகளைக் கண்டோம். ஸ்ரீவில்லிப் புத்தூரிலும் அன்னத்தின் மீது ஆரோஹணித்தவளாக ரதி சிற்பம் ஒன்று இருக்கிறது.


முன்பு கூறிய ஊர்களிலுள்ள லட்சணங்களில் பெரும்பாலானவற்றை ஒருங்கே சேர்த்து அமைக்கப்பட்டுள்ளது. இந்தச் சிற்பம் என்று பார்த்த உடனே கூறிவிடும்படி இருக்கிறது அமைப்பு. அதுவும் தவிர, ஸ்ரீவில்லிப்புத்தூர் சிற்பங்களுக்கே தனிச்சிறப்பாக அமைந்துள்ள தலை அலங்காரங்களையும் சேர்த்திருக்கிறார்கள். அன்னத்தில் உட்கார்ந்திருப்பவளின் கால்கள் தனித்தனியே ஜேணத்தின் மீது வைக்கப்பட்டுள்ளன. என்ன அனாயாஸமாக, ஒய்யாரமாக இருக்கிறாள் அவள்! தனது சௌந்தரியத்தின் சக்தியில்தான் எத்தனை நம்பிக்கை அவளுக்கு!



அன்னபட்சியின் மீதும் சிற்பியின் சிரத்தை அதிகம் விழுந்திருக்கிறது. அலங்காரங்கள், ஜோடனைகள் எல்லாம் வெகு தரம்! அன்னம் நிற்கும் கம்பீர நிலையைப் பார்க்கும்போது, தான் சுமந்திருப்பது புராணப் பிரசித்தி பெற்ற ஓர் அழகியை என்று அது தெரிந்து கொண்டிருப்பதாகவே நமக்கு எண்ணத் தோன்றுகிறது.

இதே மண்டபத்தில் இருக்கிறது இந்தப் பராசக்தியின் சிலை. தாமரை இதழ்களாலான அலங்காரங்கள் பல வரிசைகள் தலையைச் சுற்றி அலங்கரிக்க, முகத்திலே அசாதாரணமான ஓர் ஒளியைக் காண்கிறோம். கருணையைப் பொழியும் முகமண்டலம்; ஆனால், கோபம் வந்தால் மூன்றுலகங்களாலும் தாங்க இயலாது என்று காண்பிப்பது தான் சிற்பாசாரியரின் நோக்கமாக இருக்க வேண்டும். இடது கரம் திரிசூலம் தாங்கியிருக்கிறது. காதில் தாடங்கங்களும், கழுத்தில் ஹாரங்களும், இடையைச் சுற்றி வழக்கமாகச் சிற்பங்களிலுள்ள சகஜமான அணி-பணிகளும் உயர்ந்த முறையில் அமைந்து இருக்கின்றன. சூலம் பிடித்திருக்கும் கையை உற்று நோக்கினால், நரம்புகள் ஓடுவதுபோல் தத்ரூபமாகச் செய்து விட்டார் சிற்பி என்பதை அறிந்துகொள்ளலாம்.

வாணி சரஸ்வதி...




ஸ்ரீ வில்லிப்புத்தூரின் ஸ்தல மகாத்மியம் ஸ்ரீ ஆண்டாளின் அழகான கதையைச் சொல்கிறது. அந்தச் 'சூடிக்கொடுத்த நாச்சியார்' பகவானையே தனது மணாளனாக வரித்த ஆச்சரியமும் ஆவேசமும் கொண்ட வரலாறு, இந்த ஊரின் பிரபாவத்துக்கு நிரந்தரமான இலக்காக நின்று வருகிறது.

மதுரைக் கோயில்களைக் கட்டி ஜகப் பிரசித்தி பெற்ற திருமலைநாயக்கன் ஆட்சிக் காலத்திலே அவன் ஆதீனத்தில் வந்திருந்த இந்த ஸ்தலத்தின் சிற்பங்கள் ஒவ்வொன்றும் மதுரைச் சிற்பிகளின் கைத்திறனை விளம்பரப்படுத்துவனவாகவே அமைந்துள்ளன. கீழே காட்டப்பட்டிருப்பது ஆலயத்தின் தோற்றமும், ஊரின் காட்சியும்தான். வலது பக்கத்தில் ஒரு நல்ல சிற்பம் - கலா ரசிகரின் உள்ளக் கோயிலில் மறக்க முடியாத உருவமாக அமைந்துவிட்ட ஒரு சிற்பம் காட்டப்பட்டுள்ளது.

பார்த்த மாத்திரத்தில் அவள் 'கலைவாணி' என்று சொல்லிவிடலாம். கையிலே விளங்குகிறது வீணை. 'வீணா வேணு ம்ருதங்க வாத்திய ரசிகை'யான தேவியின் முகம், உயர் கானத்தில் லயித்து விகஸித்து மந்தஹாஸத்துடன் காண்கிறது. கலைவாணி என்பதால், அருங்கலையான சங்கீதம் அவளைப் பரவசமூட்டி இருப்பது பொருத்தம்தான்.

வெகு லளிதமான தேக அமைப்பு. ஸ்திரீ ரத்னங்களுக்கு உடன்பிறந்த அற்புத குண விசேஷமான நாணத்தின் பிரதிபலிப்பை உடலில் காட்டிவிட்டார் சிற்பாசாரியர்.





உயர்ந்த மார்பின் மீது ஏராளமான நகைகள். காரையும் காசுமாலையும் முத்துமாலையும் பதக்கமுமாக ஆபரணங்கள் நிறைந்திருக்கின்றன. தலை அலங்காரங்களும் காதணிகளும்கூட அமர்க்களம்தான்.

வீணையிலிருந்து கிளம்பும் ஸுநாதத்தில் மெய்ம்மறந்து போய் சரஸ்வதிதேவி, நர்த்தமிடக் காலைத் தூக்கி வைக்கும் பாவம் தெரிகிறது. இதற்கு அனுசரணையாகத் தலை ஒரு பக்கம் சாய்ந்திருப்பது, அம்பிகையின் மனோபாவத்தை மேலும் சிறப்பாக எடுத்துக்காட்டுகிறது.

பரதநாட்டியக் கலைக்கு உடலமைப்பு எப்படி இருந்தால் சிலாக்கியம் என்பதை வற்புறுத்திச் சொல்வதுபோல், இடை சிறுத்தும் உடல் முழுதும் எல்லாவித வளைவுகளுக்கும் ஏற்றதாகவும் அமைந்துவிட்டது. இந்த அமர சிற்பத்துக்கு அலங்காரங்கள் யதேஷ்டமாகச் செய்திருப்பது தெய்வ சாந்நித்யமும் கூடவே வந்திருப்பதற்கு ஏற்றதாகவே இருக்கிறது.

ஒரு முறை பார்த்தால் போதாது என்று நினைக்கும்படி நிற்கும் இந்த செளந்தரிய தேவதை, கலா ரசிகர்களுக்குப் பலவகைப்பட்ட தோற்றங்களை வெவ்வேறு மூலைகளில் நின்று பார்க்கும்போது அளிக்கிறாள். எப்படிப் பார்த்தாலும், சிற்பக்கலைக்கு மேன்மையான ஓர் அத்தாட்சியாகக் கலைவாணியின் உருவம் அமைந்து விட்டது என்பதே ஏகோபித்த அபிப்பிராயமாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

இந்தச் சிற்பம் ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆலயத்தில் துவஜஸ்தம்பத்தின் அருகாமையில் இருக்கிறது. கீழே சிறிய அளவில் தமுக்கு அடித்துக்கொண்டு ஓர் உருவம் இருக்கிறது. அளவில் சிற்பம் சின்னதுதான் என்றாலும், அந்த ஆள் தாளம் போடுவதையும் ரசித்துச் செய்கிறான் என்று முகக்குறி காட்டுகிறது. தமுக்குத் தட்டுவதனால் ஒருவித சந்தோஷ வெறி பிறந்திருப்பதும் அதில் தெரிகிறது. சாமான்யமான உடையும் அதற்குப் பொருத்தமான ஆபரணங்களும் மட்டுமே இச்சிற்பத்துக்குச் செய்திருப்பது சிற்பாசாரியர் பாத்திரங்களின் தாரதம்யம் தெரிந்தவர் என்பதையே வெளியிடுகிறது.

அமர சிற்பங்கள்...

ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆலயத்தில் தூண்களிலுள்ள அமர சிற்பங்களின் அளவை அறிந்துகொள்வதற்கு, எதிர்ப்பக்கத்திலுள்ள சித்திரம் ஓரளவு உதவி செய்யும்.


பெரிய சிற்பங்கள் அவை; உயர்ந்த மனோதர்மத்தைக் கொண்டு, நிகரற்ற திறமையுடன் சிருஷ்டி செய்யப்பட்டவை. முன்பு நாம் பார்த்த கலைவாணியின் சிற்பத்தை இங்கே வலது பக்கத் தூணில் வேறொரு கோணத்திலே காணலாம். தமுக்கடிப்பவன்கூட, சிறிய அளவில் பக்கவாட்டில் காட்டப்பட்டிருக்க, வேறொரு வைணிகளையும் தூணின் மற்றொரு மூலையில் பார்க்கிறோம்.


இந்த நிலையிலிருந்து பார்க்கும்போது, கலைவாணி புதியதோர் அழகுடனும் அங்க அமைப்புடனும் காணப்படுவது போன்ற பிரமையே உண்டாகிறது. தமுக்கடிப்பவன் ஆவேசத்துடன் நடை போட்டுக்கொண்டே இருக்கிறான் என்றும் நினைக்கத் தோன்றுகிறது.

இந்தச் சித்திரத்தின் இடது பக்கத்தில், முன்னணியில் தோற்றமளிக்கும் வீரபத்திரனின் சஹபாடி வெகு அட்டகாச புருஷனாகக் காண்கிறான். எஃகுச் சட்டங்கள்போல் பலம் மிகுந்து காணும் அவனின் அவயவங்களில் வீரியமும் சக்தியும் மிளிர்கின்றன. வலது காலை உயர்த்தி, இடது காலை ஊன்றி, நீண்ட சூர்க்கத்தியின் கைப்பிடியில் அலட்சிய பாவத்துடன் வலது கரத்தைப் பதித்து, "யாரடாவன் அங்கே!" என்று சவால் விட்டழைக்கும் தோரணையில் பார்வையிடுகிறான் இந்த வீரன். இவனுடைய நாசித்துவாரங்கள் விரிந்து காண்கின்றன. ருத்ர கோபத்துக்கு அனுகுணமான முரட்டு ஆபரணங்கள் அணிந்திருக்கிறான். மீசையின் வளைவும் அதனடியில் லேசாகக் காணப்படும் கோரைப் பற்களும் எதிரிகளைப் பயமுறுத்தி விரட்டப் போதுமானவை.

தூணின் கீழ்ப் பகுதிகளில் பெண்களின் உருவங்கள் சில, வெவ்வேறு விதத் தோற்றங்களாக, மாறுபட்ட உடல் அமைப்புகளுடன் செய்யப்பட்டுள்ளன.

இந்தப் பக்கத்தின் கீழேயுள்ள சிற்பம் லட்சுமண ஸ்வாமி, சூர்ப்பணகையை கர்வபங்கம் செய்விக்கும் காட்சியாகும். பெரிய வில்லுடனும் அம்புகளுடனும் ஆஜானுபாகுவாக நிற்கும் ராமானுஜன் உருவிலும் சூர்ப்பணகையின் உடலிலும் பல நுட்ப வேலைகளைக் காணலாம்.




சில்பி

தாராசுரம் சிற்பாலயம்..!



கும்பகோணத்தை அடுத்த தாராசுரத்து ஐராவதேஸ்வர ஸ்வாமி கோயில் சிற்பச் செல்வங்களுக்குப் பெயர் போனது. சுமார் 900 வருடங்களுக்கு முன் இந்தக் கோயிலைக் கட்டிய மன்னன் ராஜராஜன், 'சிவபாத சேகரன்' என்ற பட்டத்தையும் பெருமையுடன் சூட்டிக்கொண்டான்.


கோயிலில் எங்கே பார்த்தாலும், ஓர் இழை இடம்கூடக் காலியாக விட்டுவைக்காமல் உருவங்களாலும் நிரப்பிவிட்டு இருக்கிறார்கள். அம்மாதிரியான சிற்பம் ஒன்றுதான் அருகில் காட்டப் பெற்றிருக்கிறது. கீழே காண்பது ஆலயத்தின் தெற்குப் பிராகாரத் தோற்றம்.


எதிர்ப்பக்கத்தில் சரப மூர்த்தியின் பயங்கரமான சிற்பம். ஹிரண்யகசிபுவின் வதத்துக்காகப் பிரகலாதனின் முன் தூணிலிருந்து ஆவிர்ப்பவித்து துஷ்ட நிக்ரக சிஷ்ட பரிபாலனம் செய்த நரசிம்ம மூர்த்தியின் அவதார காரியம் முடிந்த பிறகு, சம்ஹார மூர்த்தியான பரமேஸ்வரன் சரப ஸ்வரூபத்தில் வந்து சக்தியை ஆகர்ஷித்துக்கொள்ளும் அவசரம்தான் அது.

'ஸிம்ஹக்ன மூர்த்தி' என்று அழைக்கப்படும் இந்த ருத்ர ரூபத்துக்கு எட்டுக் கால்கள், இரண்டு இறக்கைகள், மூன்று நயனங்கள் இருக்கின்றன. நரசிம்மத்தின் உதரத்தில் சரபத்தின் கூரிய கால் நகங்கள் பதிந்து இருப்பதையும், சங்கு - சக்கரங்கள் நழுவி இருப்பதையும் பார்க்கலாம். கீழே கைகூப்பியபடி நிற்கிறார் பிரகலாத ஸ்வாமி.


உயரே மேக மண்டலத்திலிருந்து சூரிய-சந்திரர்களும், தேவர்களும், முனிபுங்கவர்களும் கூட்டமாக நின்று தரிசிக்கிறார்கள்.

இந்தச் சிலை ஐராவதேஸ்வர ஸ்வாமி கோயில் பிராகாரத்தின் தெற்குப் பாகத்தில் இருக்கிறது.






ஆதிசேஷன்!



'ஆயிரம் நாவு படைத்த ஆதிசேஷனாலும் வர்ணிக்க இயலாது' என்று புகழுரைகளில் சர்வ சாதாரணமாக எடுத்துக் காட்டப்பட்டு வரும் சாக்ஷாத் ஆதிசேஷனின் சிற்பத்தையே இந்தப் பக்கத்தில் காண்கிறோம். பாற்கடலில் திருமாலின் படுக்கையாக அமைந்த பெரும் பேறு பெற்ற இந்த மூர்த்தி, ஆகமத்தில் வரும் எட்டு நாகராஜர்களில் முதன்மையானவர். இந்தச் சிற்பத்தில் அவர் ஸர்ப்ப உருவமும் மனித உருவமும் கலந்து காண்கின்றார்.

சிற்பத்தின் அவயவ அமைப்புகளை உற்று நோக்கினால் நாகத்தின் உடலில் காணும் நெளிவும் வழுவழுப்பும்கூடச் சிற்பத்தின் உருவில் பிரதிபலிக்கிறது என்பதைக் காணலாம். ஸ்ரீமன் நாராயணனுடைய உத்தரவுக்கு எப்போதும் காத்து நிற்பது போன்ற பாவம், நிற்கும் நிலையிலும் முகக் குறியிலும் தொனிக்கின்றன.

கீழே காட்டப்பட்டுள்ளது தாராசுரம் கோயிலின் தெற்குப் பிராகாரம். அதிலேயே அலங்கார மண்டபத்துக்கு போகும் படிக்கட்டுகளையும் காணலாம். இந்த ஆலயத்தில்தான் இவ்விரு பக்கங்களில் வெளியாகியுள்ள சிற்பச் செல்வங்கள் இருக்கின்றன.



இந்தப் பக்கத்தில் இருப்பது கஜயுத்த மூர்த்தி. பேரூர்ச் சிற்பத்துக்கும் இந்தச் சிற்பத்துக்கும் அமைப்பில் வித்தியாசங்கள் சில இருக்கத்தான் செய்கின்றன.

கரிய பெரிய சரீரத்தை உடைய 'கயாசுரன்' என்ற அரக்கன், யானை வடிவமாக அட்டகாசம் செய்து வந்தான். பக்க பலமாக, சதுர்முகனை நோக்கிக் கடுந்தவம் செய்து வரங்களையும் பெற்றுக்கொண்டான். ஹிம்ஸை தாங்காது தேவர்களும் மனிதர்களும் பரிதவிக்க, பஞ்சமுகனான சிவபெருமான் இந்த அசுரனை வதம் செய்து, இவன் தோலைக் கிழித்துப் போர்த்திக் கொள்கிறார். அந்தக் காட்சிதான் இது.

பேரூர்ச் சிற்பத்தில் வலது கால் தூக்கியபடி இருக்கிறது; இதிலோ இடது காலை வெகு அழகாக உயர்த்தி, இடுப்பை வளைத்து எட்டுக் கரங்களால் யானையின் தோலைக் கிழித்து விரித்திருக்கிறார். ருத்ரனின் கோபத்தைக் கண்ணுற்ற உமாதேவியே பதறிப்போயி இருக்கிறாள். குழந்தை பாலசுப்ரமணியன் இடையிலிருந்து நழுவியிருக்க, அவனை அரவணைத்துக் கொண்டிருப்பதுபோல் காண்பித்து இருக்கிறார் சிற்பாசாரியர். சிவன் முகத்திலும் அம்பிகையின் முகத்திலும் முறையே கோபமும் பயமும் அற்புதமாக வந்துவிட்டன. ஈஸ்வரனின் காலடியில் யானையின் தலையும், சிரஸுக்கு மேல் வாலும் இருக்கின்றன.

அளவில் சிறியதுதான் என்றாலும் பெரிய சிற்பங்களில் சாதாரணமாகக் காணப்படும் அலங்காரங்கள் எல்லாம் பொருந்தியிருப்பதைக் காணலாம்.

தலையில் ஜடாமகுடம்; அதனுள் கங்காதேவி; காதுகளில் பெரிய குண்டலங்கள்; நாக யக்ஞோபவீதம்; புஜங்களில் நாக ஆபரணங்கள்; கரங்கள் தோறும் ஆயுதங்கள். இடையிலே அலட்சியமாகக் கட்டப்பட்ட உத்தரீயம். அது கோப வேகத்துக்கு ஏற்ப பறந்துகொண்டு இருப்பதுபோல் செய்யப்பட்டிருக்கிறது.

சிவன் உருவில், சுமார் ஆறில் ஒரு பங்கே உமையவள் இருக்கிறாள். அதிலும்கூட அதே கவனம்; அதே நுட்பமான வேலைப்பாடுகள். முகபாவம் சந்தேகமற வெளியாகிறது.

உயர்ந்த சிற்பங்களின் ஜாபிதாவில் சேர்க்கப்பட வேண்டியது என்பதில் சந்தேகம் இல்லை.






மாதா புவனேஸ்வரி!

தாராசுரத்து அமர சிற்பங்களில், இங்குக் காணப்படும் சௌபாக்கிய புவனேஸ்வரியின் சிற்பமும் ஒன்றாகும். மந்தஹாஸம் தவழும் வதனம், கருணை பொழியும் நயனங்கள், கண்டத்தில் ரத்னமணி மாலைகள், வலதுக் கரத்தில் செந்தாமரை, இடதுக் கரத்தில் வேலைப் பாடுகள் நிறைந்த ஒரு கலசம். உடைச் சிறப்பும் அங்க லட்சணங்களின் உயர்வும் பெற்று மதிமயக்கும் சிலை இது என்பதில் சந்தேகம் இல்லை.

அலங்கார மண்டபத்தில் அமைந்துள்ள இந்த உருவம், முகவசீகரத்தினால் மட்டுமே மண்டபத்துக்குச் சிறப்புப் பெயர் அளிக்கவல்லது. அம்பிகையின் பாதங்களும், விரல் நகங்களும்கூட கவனமாக இயற்கைக்கு ஒட்டிச் செய்யப்பட்டுள்ளன. சிலை நிற்கும் இடத்திலேயே ஒரு தெய்விக அருள் சுழன்றுகொண்டிருப்பது போன்ற எண்ணத்தை உண்டாக்கும் மேன்மை கொண்டது இது.

எதிர்ப்பக்கத்தில் உயரே இருப்பது அர்த்தநாரீஸ்வரரின் திரு உருவம். ஈஸ்வரனும் உமையும் வலமும் இடமுமாகக் காட்சி அளிக்கும் தோற்றம்.

இந்தச் சிலாரூபத்தில் சிவனுக்கு மூன்று தலைகள் வெளியே தெரிகின்றன; கூடவே தலையைச் சுற்றியுள்ள ஒரு ஜோதியும் சிற்பத்திலேயே காட்டப்பட்டிருக்கிறது. மிகுதி இரு தலைகளும் பின்புறம் இருப்பதாகவே கொள்ள வேண்டியது. எட்டுக் கரங்கள் இருக்கின்றன. சிலையின்



வலதுபுறம் ஆண்மைக்கும் இடது புறம் பெண்மைக்கும் அறிகுறிகளாக அமைந்திருக்கின்றன. சிற்ப நுட்பங்களை ஆராய்பவர்கள் இம்மாதிரியானதொரு சிலாரூபம் அபூர்வமானதென்று அபிப்பிராயப்படுகிறார்கள்.

அலங்கார மண்டபத்து நந்திகேஸ்வரரின் சிலையையும் கீழே காணலாம். சிவனுடைய முதல் சின்னமான இந்த மூர்த்தி கம்பீரமாக அமர்ந்திருக்கிறார். பின்னால் தெரிகிறது பலிபீடம். முக்கியமாகக் குறிப்பிட வேண்டிய ஒரு விசேஷம், இந்த மண்டபத்தில் உள்ள தூண்களில் நான்கு புறங்களிலும் ஓர் இழைகூட இடம்விடாமல் சிற்ப வேலைப்பாடுகள் செய்திருக்கிறார்கள் என்பதே.



ஸ்ரீதட்சிணாமூர்த்தி!

தாராசுரத்துச் சிற்பங்களைப் பற்றி மனத்தில் எண்ணிய உடனேயே அங்கேயுள்ள மகத்தான செல்வமாகிய தட்சணாமூர்த்திப் பெருமானின் ரூபம் மனக் கண்ணின் முன் ஒரு சௌந்தரிய சித்திரமாக பவனிவரத் தவறாது என்று நிச்சயமாகச் சொல்லிவிட முடியும். அதன் அழகையும் அங்க லட்சணங்களையும் முகமண்டலத்தில் தாண்டவமாடும் தேஜோமயமானதொரு கருணைப் பிரவாகத்தையும் வர்ணிப்பது சாத்தியமில்லை என்றே தோன்றக்கூடும்.

சிவபெருமானின் இந்த கோலத்தில், ஜடாபாரம் சுருண்டு சுருண்டு அற்புதமாக இருபுறமும் தொங்க, கங்காதேவி லோக பிதாவின் சிரசில் வீற்றிருப்பது காண்பிக்கப் பட்டிருக்கிறது. தலைக்கு மேலே குருந்தை விருட்சத்தின் கிளைகள் குடைபோல் திகழ்கின்றன. நான்கு கரங்கள்; வலது முன்கரம் சின்முத்திரையில் இருக்கிறது. மார்பிலே மணிமாலைகளும் யக்ஞோபவீதமும் துலங்க, வயிறு அழகாய்க் குழைந்து வருகிறது. கால்மேல் கால் போட்ட கம்பீர ஆசனம்; ஒரு ஸர்ப்பம் வலது துடைமீதிருந்து பெருமையுடன் தலை தூக்கிப் பார்க்கிறது.

உபதேசம் பெறும் இரண்டு ரிஷிகள் பெரிய உருவத்தில், சிலையின் வலதுபுறத்தில் அமர்ந்திருக்கிறார்கள். நந்தியின் முகத்துக்கு அடியில் ரிஷி ஒருவர் பத்தினியுடன் வணங்குகிறார். சிங்கம், புலி முதலிய காட்டு மிருகங்கள் குகை வாசம் செய்வதுபோலும் சிற்பத்தின் கீழ்ப் பகுதியில் காணலாம்.

மேற்பகுதியில் இடதுபுறமாக இருப்பது அதிகார நந்தியின் உருவம். கூப்பியக் கரங்கள்; நீண்டதொரு கத்தியை அணிந்திருக்கிறார். சிவாம்சம் என்பதை நிரூபிக்க அங்குசமும் மானும் பின்னிரு கரங்கள் ஏந்தியுள்ளன. வலதுபுறமாக இருப்பது, ஒரு ராணி திண்டில் சாய்ந்து... சேடிகள் இருவர் சிஷ்ருஷை செய்ய தன்னை அலங்கரித்துக்கொள்ளும் காட்சி.

ஐராவதேஸ்வரரின் சந்நிதியில் உள்ள அலங்கார மண்டபத்தின் இரு பக்கங்களிலும் நிற்கும் இரு சேடிகளின் சிலைகளும் அற்புதமானவை. அவற்றில் ஒன்றைத்தான் கீழே காண்கிறோம். இடையில் கை வைத்து நிற்கும் தோரணை, பெரிய இடத்துப் பணிப்பெண் இவள் என்று எடுத்துக்காட்டுகிறது. இடது கரம் பிடித்திருக்கும் வெண்சாமரமும், அதன் கூந்தலும் இயற்கையாக இருக்கின்றன.





சில்பி

மன்மத ராஜன்...

பேச்சு வழக்கில் ஏதாவது ஒரு விஷயம் சாசுவதமானதில்லை என்று குறிப்பிட நேரும்போது, 'ஏன், கல்லால் கட்டி வைத்திருப்பதாக நினைவாக்கும்!' என்று கேட்பது சகஜம். இதன் பொருள், கல்லால் ஆன உருவங்கள் என்றால் கால வரம்பின்றி சீதோஷ்ண சக்திகளை லட்சியம் செய்யாது; நிரந்தரமாக நிற்கவல்லவை என்பதே.

பழங்காலத் தமிழ் மன்னர்கள் சிற்ப மன்னர்களைக் கொண்டு தேவாலயங்கள் தோறும் சிறப்பாக உருவாக்கி வைத்துள்ள சிற்பச் செல்வங்கள் எல்லாம், அந்நியப் படைகளின் ஆக்கிரமிப்பினால் ஓரளவு பாதிக்கப்பட்டிருந்தும்கூட, காலதேவனின் தாக்குதலைப் பொருட்படுத்தாது நின்று வந்திருக்கின்றன. அந்நிய ஆட்சியில் நம் நாட்டுக் கலைகள் மங்கி மறைந்து இருந்தபோது இந்தச் சிலாரூபங்களும் தங்கள் பெருமையை உள்ளடக்கி கவனிப்பாரற்று நிற்க வேண்டி வந்துவிட்டன.


இப்போது தாராசுரத்துச் சிற்பங்களைப் பொதுநோக்கில் பார்க்கும்போது, அவற்றில் பல மண்ணில் புதைந்தும் மழையினால் பாதகம் அடைந்தும் நிற்பதைக் கண்டு வருந்தாமல் இருக்க முடியாது. கல்லினால் ஆனாலும்கூடப் பாதுகாப்பின் அவசியத்தை உணர வேண்டி இருக்கிறது. இங்குள்ள சிற்பங்களின் மேன்மையும், மண்டபங்கள் தோறும் காணப்படும் அபார வேலைப்பாடுகளும் இனி எவராலும் செய்ய இயலாது என்று தெளிவாக்குகின்றன. தவிர, இவற்றை அழிய விட்டுவிட்டாலும் இவற்றுக்கு ஈடுகாட்டுபவை வேறு எந்த நாட்டிலும் இல்லையென்றும் சொல்லிவிடலாம். சுதந்திர நாட்டின் முதல் கடமை, பழம் பெருங்கலைகளைக் காப்பாற்றுவது என்பதையொட்டி, இதுகாறும் நடந்த



அசிரத்தையும் அஜாக்கிரதையும் இவற்றுக்கு இனியும் ஏற்படாதென்று நாம் நிச்சயமாக நம்பலாம்.

இடதுப் பக்கத்தில் நாம் காண்பது, நந்தி - பலிபீடம். முன் ஒரு காலத்தில், சோழ மன்னன் கீர்த்தி பெற்றுத் திகழ்ந்தபோது, ஐராவதேஸ்வரர் கோயில் பிரமாண்டமான அளவில் இருந்ததென்றும் சுற்றிலும் ஏழு பெரும் பிராகாரங்கள் இருந்தன என்றும் நம்பி வரப்படுகிறது. இன்று அவையெல்லாம் மறைந்து, ஒரே பிராகாரமும் அதில் கோபுரத்துக்கு முன்னால் இந்த நந்தியும் பலிபீடமும் மட்டுமே இருக்கின்றன. முதல் பெரும் சிவ சின்னமும், ஈசனின் அன்புக்கு இசைந்த பக்த சிகாமணியுமான நந்திகேஸ்வரரின் உடல் அமைப்பும், உட்கார்ந்திருக்கும் கம்பீரமும், கவனத்தைக் கவர்பவையாக இருக்கின்றன. நந்திக்குப் பின்புறம் பலிபீடமும் மண்டபமும். இந்த ஆலயத்திலுள்ள பலிபீடங்களுக்குள் அதிக சிற்ப வேலைகளும், நுட்பமான கொடி வேலைப்பாடுகளும் உள்ளன. மண்டபத்துக்கு போகும் படிகளும், அவற்றின் பக்கங்களில் அமைந்துள்ள சிறு சிறு சிலாரூபங்களும் எத்தனை சிரத்தையுடன் - திறமையுடன் - செய்திருக்கிறார்கள் என்பதை விளக்கும்.

இந்தப் பக்கத்தில், ரதியும்-மன்மதனும், வேறெங்கும் காணப்படாத வகையில் அந்யோன்ய தம்பதிகள் என நெருக்கமாக நிற்கிறார்கள். இந்த சிருங்கார தேவதைகள் புராண வாயிலாக மனிதரின் இதயங்களை ஆகர்ஷித்திருக்கும் அவ்வளவு சிலா ரூபத்திலும் கண்களைக் கவர்கிறார்கள். காதலனின் அன்பான அணைப்பில் ரதி மகிழ்ச்சியுடன்கூடச் சற்று நாணமும் தோன்றும் முகத்துடன் நிற்கிறாள். மன்மதன் கம்பீர நோக்குடைய யுவனாகக்



காண்கிறான். தனக்கு அழகிற்சிறந்த ரதி கிடைத்த பெருமையும் முகபாவத்தில் வந்துவிட்டது.


இருவருடைய இடையழகும், ஆபரணச் சிறப்பும் மேன்மையாக இருக்கின்றன. சிறிய உருவங்கள்தான் என்றாலும், சௌந்தரியம் ததும்புகின்றது. இவர்கள் ஆரோஹணித்திருக்கும் ரதத்திலும் அதன் சக்கரத்திலும் ஏராளமான நகாசு வேலைகள்; குதிரைக்கும் எவ்வித அலங்காரமும் குறைவில்லை.


ஐராவதேஸ்வரர் கோயில் வடக்குப் பிராகாரத்தில், அறுபத்து மூவர் சந்நிதிக்கு அருகில் இந்த உருவங்களைக் காணலாம்.


வெள்ளை யானை!

தாராசுரத்து ஐராவதேஸ்வரர் ஆலயம் நிர்மாணிக்கப் பட்டதற்குப் புராண வாயிலாக ஒரு கதை வழக்கில் இருந்து வருகிறது. முன்னொரு காலத்தில் இந்திரனுடைய வெள்ளை யானை (ஐராவதம்) தூர்வாச முனிவருடைய கோபத்துக்கு ஆளாகி, சாபம் பெற்று, தனது தூய்மையான வெண்ணிறத்தை இழக்கிறது. இந்த க்ஷேத்திரத்துக்கு வந்து வழிபட்டதன் காரணமாக, அது மீண்டும் தனது வெண்மையைப் பெறுகிறது. இந்த நிகழ்ச்சியின் ஞாபகார்த்தமாக, கோயிலின் உட்புறத்தில் இந்திரன் ஆரோஹணித்திருக்க, ஐராவதத்தின் சிலை ஒன்று இருந்து வருகிறது.

கீழே காண்பது மேற்படி கோயிலுக்குள் நுழைவதற்கான படிக்கட்டுகள். அடி பாகங்களில் வரிசை வரிசையாகச் சின்னச் சின்ன சிற்பங்களைக் கொண்டு நிறைத்திருப்பதைக் காணலாம்.




சில்பி



காணலாம். சிங்கத்தின் கண்களில் வெறியும் ஆத்திரமும்!

வாய்ப்பு உள்ள இடங்கள் ஒன்று விடாமல் சிலாருபங்களைக் கொண்டு நிரப்பியுள்ள சிற்பாசாரியர்களுக்கு, மிகுந்த சந்தர்ப்பங்கள் அளிப்பவை தூண்கள். தூணின் நான்கு பக்கங்களிலும் அப்பழுக்குச் சொல்ல முடியாத வகையிலும், ஒன்றைப்போல் மற்றொன்று இல்லாதபடியும் சிற்றுளிகளின் அபார வேலைகளைக் காட்டியிருக்கிறார்கள் சிற்பிகள். நாள் கணக்காக ரசிகர்கள் நின்று பார்க்கும் - வியக்கும் - சிறு சிறு உருவங்கள் ஏராளமாக மலிந்து கிடக்கின்றன.

முந்தையப் பக்கத்தின் இடது கோடியில் இருக்கும் தூண் நடராஜர் மண்டபத்தில் இருக்கிறது; மற்ற இரண்டும் அலங்கார மண்டபத்துக்கு அலங்காரமாக இருப்பவை. சின்னச் சின்ன விமானமும் நடுவில் ஒரு சிற்பமுமாகப் பூராவும் தயாராகியிருக்கிறது நடுத்தூண். மிகச்சிறய சிற்பங்களானாலும்கூட எந்த அம்சத்திலும் குறைபாடு இல்லை. உதாரணமாக, இரண்டே அங்குல உயரமுள்ள நர்த்தன கணபதிக்குத் தொந்தியும் துதிக்கையும் தந்தமும் இருப்பது மட்டுமல்ல - அந்தத் தந்தத்துக்குக் கூர்மைகூட வைத்துவிட்டார் சிற்பாசாரியர்! இதை எப்படிச் செய்தார் என்பது ஆச்சரியமே. பூக்கொடிகளிலும் புஷ்பங்களிலும்கூட ஒன்றுக்கொன்று காட்டப்பட்டுள்ள மாறுபாடுகளும் - அவை நூற்றுக்கணக்கில் இருப்பதும் - சிற்பத்திறனின் மேன்மைக்குப் போதுமான எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன.


இந்தப் பக்கத்தில் காட்டப்பெற்றுள்ள தனித் தூண் கோபுரத்தின் அடியிலும், எதிர்ப்பக்கத்தில் இருக்கும் யாளியுள்ள தூண் அலங்கார மண்டபத்திலும் உள்ளன. இந்த மண்டபத்தை மட்டும் ஒருவர் நிமிர்ந்து பார்த்து அவருக்குத் தலை சுற்றும் உணர்ச்சியும் ஏற்படாவிட்டால்

படிக்கட்டின் ஒருபுறத்தில் ஒரு யானையுடன் சிங்கம் நடத்தும் போர் சிற்பவாயிலாகக் காட்டப்பட்டு இருக்கிறது. சிங்கம் பின்புறமாகப் பாய்ந்து யானையின் மத்தகத்தைக் கூரிய தன் பற்களால் கடிக்க முயலுவதையும், வலி பொறுக்காத கஜமும் கால்களை மடித்து வாலைத் தூக்கி ஓட முயலுவதையும், அது ஓட வொட்டாமல் சிங்கம் தனது பின்னங்காலினால் அமுக்குவதையும்

அவருடைய தலையின் கெட்டியை நாம் வியந்துகொள்ளவே வேண்டும். அப்பப்பா... சிற்ப வேலைகள் அங்கே அப்படி அனந்தம்!

ஓர் இழைகூட இடம் விட்டுவைக்காமல், எந்தக் கரங்களைக் கொண்டு, எப்படிப்பட்ட சிற்றுளியைக் கொண்டு, எந்த நிலையில் நின்று, எவ்வளவு காலம் கற்பாறைகளைக் கடைந்தெடுத்து களிமண்ணிலும் செய்ய இயலாத விசித்திரங்களை இயற்றினார்களோ சிற்பாசாரியர்கள். கற்பனை செய்யவும் முடியாதது.

தென்னாட்டுக் கலைகளின் மேன்மையை விளக்க, இம்மண்டபத்தைக் காப்பாற்றிப் பாதுகாக்க வேண்டியதின் அவசியத்தைச் சொல்லவும் வேண்டியதில்லை!




சிற்பச் சாளரங்கள்!



அழகழகான சிற்பங்களை உள்ளடக்கி இருக்கும் தாராசுரத்து ஆலயத்தின் வெளிப்புறத் தோற்றமும் வெகு அழகாக அமைந்துள்ளது என்பதைக் கீழே காண்பித்துள்ள பிராகார அமைப்பைக் காண்பதில் இருந்தே ஒப்புக்கொண்டு விடலாம். முன்பு, யானையும் சிங்கமும் நிகழ்த்தும் போர் ஓர் உயர் சிற்பமாகக் காட்டப்பட்டு இருந்ததல்லவா? அதை இந்த மண்டபத்தில் வடமேற்கு பாகத்தில் சிறிய உருவில் காணலாம். இந்தச் சித்திரத்திலிருந்து முன் மண்டபத்துச் சுவரில் கற்களைக் குடைந்தே ஜன்னல்கள் செய்திருப்பதைக் காண்கிறோம். நெருங்கிப் பார்த்தால், ஜன்னலுக்கு ஜன்னல் வேலைப்பாடு வித்தியாசப்படுவதையும், வெகு சிரத்தையுடன் செய்து முடிக்கப்பட்டுள்ளது என்பதையும் அறிய முடியும்.

கோயிலின் வடக்குப் பிராகாரத்தில் இருக்கும் பைரவ மூர்த்தியின் சிலையை இந்தப் பக்கத்தில் உயரே வைக்கப்பட்டுள்ளது. ருத்ராம்சமான இந்த மூர்த்திக்கு நாய் வாகனம். இதர இடங்களிலுள்ள சிற்பங்களில் நான்கு கரங்கள்தான். இங்கே மாறுபட்டு, ஆறு கரங்கள் இருக்கின்றன. அரைஞாணாக ஒரு ஸர்ப்பத்தையே முடிந்து கொண்டிருக்கிறார். பெரிய ஜடாமுடி, நாக யக்ஞோபவீதம் ஒன்று இருப்பதுடன், நீண்டதொரு மாலையை அதே பாணியில் முழங்காலுக்குக் கீழ்



வரும்படி தரித்திருக்கிறார். கைகளில் ஏந்தியிருக்கும் ஆயுதங்கள் எல்லாம் சிவ சின்னங்கள். 'அந்தகன்' என்ற அசுரனை வதம் செய்யவே பைரவ சொரூபம் எடுக்கப்பட்டது என்று புராணம் கூறுகிறது.

இடது பக்கத்தில் நாம் காண்பது கங்காள மூர்த்தி. அதாவது, மண்டையோடுகளை ஆபரணமாகக் கொண்ட பெருமான். பிட்சாடன மூர்த்தியாகச் சிவபெருமான் அவதரித்தது போன்ற இன்னோர் அவதாரம்தான் இதுவும் என்று பார்த்த மாத்திரத்தில் சொல்லிவிடலாம். மெல்லிய ஆடையுடுத்தி, சதா அழகிய மாதர் சூழ நிற்பவர் என்று வர்ணிக்கப்படுகிறார். அதற்கொப்ப இங்கேயும் மூன்று சுந்தரிகள் மூன்று வகையான தோற்றங்களில் அருகில் நிற்கிறார்கள். அவர்களுடைய அங்க அமைப்புகளும் பார்வைகளும் வெகு அருமையாக வந்துவிட்டன.

பல அங்கங்களில் இருந்து ஆபரண ரூபமாக உள்ள ஸர்ப்பங்கள் தலைகளைக் கம்பீரமாக உயர்த்துகின்றன. இடது முன் கரம் உடுக்கை பிடித்திருக்க, வலது முன் கரம் அதைச் சிறு குச்சியினால் தட்டும் பாவனையில் இருக்கிறது. பின் கரங்களில் வலதுபுறமுள்ள மானின் வாயைத் தொடுவதுபோலும், இடது கரம் மயில் பீலிகளைச் சுமந்திருப்பதுபோலும் அமைந்துள்ளன. பாதங்களில் உயர்ந்த பாதரக்ஷைகளும், மார்பில் ஹாரங்களும், காதில் அகன்ற குண்டலமும் அணிந்திருக்கிறார்.

இந்தச் சிற்பத்தில் மூர்த்திக்கும் சரி, மற்ற உருவங்களுக்கும் சரி, முகத்தில் ஜீவ களை ததும்புகிறது. அதற்கும் மேலாக தெய்விக களையும் இருக்கிறதென்று ரசிகர்கள் கூறத்தொடங்கினாலும் ஆச்சரியமில்லை.





சிற்பக் கதைகள்...


தாராசுரத்துச் சிற்ப விசித்திரங்களில் பெரிய சிலைகள் போலவே சிறியவையும் துளிக்கூடக் குன்றாத வகையில் மேன்மை பொருந்தி இருக்கின்றன என்பதை, மண்டபத்தின் கீழ் வரிசைகளிலுள்ள உருவங்களிலிருந்து கண்டுகொள்ளலாம். இழை விடாது நிறைந்திருக்கும் செல்வங்கள் ஒவ்வொன்றும் ஒரு கதையையோ காட்சியையோ உணர்ச்சியுடன் திறம்பட ஞாபகமூட்டுகிறது.

உயரே இருப்பது காம தகனக் காட்சி. சிற்பத்தின் இடது மூலையிலே பார்வதி தபஸ் செய்துகொண்டிருக்கிறாள். வலது கோடியிலே பரமேஸ்வரன் நந்தியின் அருகே வீற்றிருந்து, நிஷ்டை கலைந்து நெற்றிக்கண் திறக்கிறான். புஷ்ப பாணம் மன்மதன் கையிலிருந்து புறப்பட்டு அதன் வேலையைச் செய்துவிட, அதன் பலனாக அவன் சாயும் காட்சியைக் காண்கிறோம். வானவீதியில் கூடிக் கைகூப்புகிறார்கள் தேவர்கள்.

அதன் பக்கத்தில் உள்ள சிற்பத்தில் ரௌத்ராகாரம் மறைந்த சம்புவுக்கு லோகமாதா மாலையிட வருகிறாள். சிற்பங்கள் இரண்டையும் மாற்றி மாற்றி நாம் பார்க்கும்போதே, என்ன மந்திரஜாலம் செய்து ஒன்றில் பயங்கரத்தையும், ஒன்றில் சாந்தத்தையும் சிற்பாசாரியர் கொண்டுவந்தார் என்று வியந்துபோகிறோம்.

எதிர்ப்பக்கத்தில் மேற்புறம் காண்பிக்கப்பட்டுள்ள சிற்ப வரிசையும் புராணக் கதைகள் இரண்டையே சித்திரிக்கின்றன. இடது வரிசையில் வாலி - சுக்ரீவ யுத்தம் ஆக்ரோஷமாக நடக்கிறது. ஸ்ரீராமன் அம்பு எய்கிறான்; பின்புறம் அனுஜன் கைகூப்பி நிற்கிறான். வானரத் தலைவர்கள் இருவரும் காலோடு கால் பின்னிக்கொண்டு எரித்துவிடுகிறாப்போல் வெறித்துப் பார்த்துக்கொண்டும் இயற்கையுடன் இருக்கிறார்கள்.

வலதுபுறத்து வரிசை புருஷா மிருகத்துக்கும் பீமனுக்கும் இடையே தருமர் நியாயம் சொல்லும் காட்சி. இவ்விரு சிற்பங்களுக்கு இடையிலும்






கோடியிலும் யானை, யாளி, சிங்கம் ஆகிய பல வகைப்பட்ட காட்டு மிருகங்களின் சிறு சிறு உருவங்கள் விதவிதமான கொடிகளின் இடையே காணப்படுகின்றன.

இரு பக்கங்களிலும் அடி வரிசைகளில் கழைக்கூத்தாடிகள் ஆடிக்காட்டும் பலவித வேலைகளைச் சிலாரூபங்களில் செய்திருக்கிறார்கள். அந்த வேலைகளின் தன்மையைக் கண்டு வியப்பதா, அவற்றைச் சித்திரிக்கும் சிலைகளின் உயர்வை மெச்சுவதா என்று திணறத்தான் வேண்டியிருக்கிறது.

இடது பக்கத்தின் கீழே உள்ள படத்தில், ஒருவன் மற்றவனை முறுக்கிப் பிழிந்து மடித்து வைக்க முயலுகிறான்; அருகே ஒரு மரத்தைத் தொட்ட வண்ணம் ஒரு மாது நிற்கிறாள். அடுத்த படத்தில் உடலைப் பல வகைகளில் நிறுத்திக்காட்டுகிறாள் ஒரு ஸ்திரீ; தலைகீழாக நின்று, கால்களைக் கூப்பியிருக்கிறாள். இரு மருங்கிலும் மேளம் தட்டிக்கொண்டு இருவர் அவளது காரியங்களுக்கு விளக்கம் கூறுகிறார்கள். இந்தப் பக்கத்து கீழ் வரிசையில் மயிர் சிலிர்க்க வைக்கும் கத்தி வேலைகள்; தொண்டைக்குள் கத்தி, தலைக்கு மேல் கத்தி, மூக்குக்கு மேல், நெற்றி மேல் - ஏன், கத்தி மேலேயே கத்தியை ஏற்றி அதன் மேலேயும் ஒரு குரங்கை ஏற்றித் திடுக்கிட வைக்கிறார்கள்! கம்பம் ஏறி வேலைகள் செய்ய ஒரு மீசைக்காரன் முண்டாசு கட்டிவிட்டான்; அடுத்தாப்போல் இருவர் போடும் குஸ்தியை வளைவாக விஸ்தரிக்கிறது ஒரு சிற்பம். மற்றும் காணப்படும் அநேக வகைச் செடி-கொடிகளும், பட்சி மிருக ஜாலங்களும் சிற்றுளித் திறமைக்குக் கட்டியம் கூறுகின்றன. 'காலணா செலவில்லாமல் எத்தனை ஆச்சரியக் காட்சிகளைக் கண்டு ஆனந்தம் அடைந்துவிட்டோம்' என்று எண்ணச் செய்கிறது.

கவனிக்க கவனிக்கத் தென்னாட்டுச் சிற்பக்கலை பற்றி வியப்பையும் மதிப்பையும் வளரவைக்கும் உன்னதமான பொக்கிஷங்கள் இவை என்ற உண்மையை உணர்கிறோம்.



பழையாறு கோயில்!

தாராசுரத்திலுள்ள சிற்பச் செல்வங்களைப் பார்த்து ஆச்சரியமும் ஆனந்தமும் அடைந்து கொண்டு செல்லும் ரசிகர்கள், மூன்று மைலுக்கு அப்பால் உள்ள பழையாறு ஆலயத்தைப் பார்த்தேயாக வேண்டும்.

எண்ணெய்க் காப்பிடப்பட்டதும் குளிர்ச்சி மிகுந்ததுமான சிலைகள், அன்றுதான் புத்தம் புதிதாகச் செய்யப்பட்டவைபோல் பூர்ண அங்க லட்சணங்களுடன் காட்சி அளிக்கின்றன!

இந்தப் பக்கத்தில் நாம் காண்பதுதான் பழையாறு கோயிலின் தோற்றம். தஞ்சையிலும் தாராசுரத்திலும் ஆலயங்களைக் கட்டுவித்த அதே சோழ பரம்பரை மன்னர்களேதான் இங்கேயும் தங்கள் மேலான தெய்வ கைங்கர்யத்தை நடத்தி இருக்கிறார்கள் என்று பார்த்த மாத்திரத்தில் ஊகித்துக்கொள்ளலாம்.


இந்தக் கோயிலின் ஸ்ரீதுர்காதேவி சிற்பத்தையே சித்திர உருவில் எதிர்ப் பக்கத்தில் காண்கிறோம்.



'ஜ்வாலாமுகி வைஷ்ணவி' என்று வர்ணிக்கப்படும் அம்பிகை, சங்கு சக்கரங்களுடன், ஆறு கரங்களுடன் நிற்கிறாள். பசி-தாகம் மறந்து இந்தத் தேவியின் முன் நிற்பதில் பக்தரும் ரசிகரும் போட்டி போடுவார்கள் என்பதில் சந்தேகமே இல்லை. அத்தனை ரூபவதியான ஒரு தேவியை, சாந்தி வீசும் அருள் நயனங்களுடனும் இளநகை அரும்பும் அதரங்களுடனும் பார்க்கிறோம்.

இந்தப் பரதேவதையின் அங்க லட்சணங்களை வர்ணிக்க எட்டாத வகையில் செய்து முடித்த சிற்பியே, சாந்தமும் கருணையும் ஒளியிடும் முகாரவிந்தத்தின் நிழலில் தம் வேலையை அடிக்கடி மறந்து போயிருக்க வேண்டும் என்று ஊகிக்கிறோம். கத்தி - கேடயங்களைப் பெண்மையின் நாஸூக்குடன் இருகரங்கள் ஏந்தியிருக்க, வலது முன் கரம் அபயம் அளிக்கிறது. பாதத்திலே மிதிபடும் மகிஷாசுரன் தலையில்தான் எத்தனை இயற்கையான செதுக்கல்கள்! கொம்புகள் நேரில் காணும் வழுவழுப்புடனும் வளைவுடனும் இருக்கின்றன. நுணுக்க வேலைப் பாடுகளுக்கு மார்பிலுள்ள முத்தாரங்கள், சங்கு சக்கரங்களிலுள்ள வளைவுகள், கிரீடத்திலுள்ள மணிகள், இடையில் உள்ள ஆபரணங்கள் ஆகியன சிறந்த உதாரணங்கள். ஏன், எங்குமே சிற்றுளி திறம்பட உழைத்திருக்கிறது; சலிக்காமல், சிறு பிழையும் செய்யாமல் ஓடியிருக்கிறது. அசாத்தியமான செயல்களைச் சாதித்திருக்கிறது.


இந்த உன்னத சிற்பத்தினால் அழகு பெறுவது, பழையாறு சோமநாத ஸ்வாமியின் கோயில்.





சிலைச் சிங்கம்!

பழையாறு சிற்பங்களில், பக்த பராதீனனான பரந்தாமன், பிரகலாத ஸ்வாமிக்கு அபயம் அளிக்கத் தூணிலிருந்து நரசிம்ம மூர்த்தியாக வெளிவந்த புண்ணியக் கதை பயங்கர ரஸம் குன்றாமலும், கலா மேன்மைகள் சிறப்பாக வெளியாகும் வகையிலும் உருவாக்கப்பட்டுள்ளன. நாராயணனின் பத்து அவதாரங்களில் பூர்ணமானவற்றில் ஒன்றான நரசிம்மரைப் பற்றிக் குறிப்பிடும்போது, அந்தப் பிரபு 'பக்தன் எப்போது கூப்பிடுவான்? எங்கிருந்து அழைக்கப்போகிறான்?' என்று முன்கூட்டியே காத்திருந்து, பல இடங்களிலிருந்து ஆவிர்ப்பலிக்கத் தயாராக இருந்தான் என்று புராணங்கள் கூறுகின்றன. மேலும், ஒரே சமயத்தில் ஹிரண்யனுடைய சைன்யங்களில் எவ்வளவு ஆட்கள் இருந்தார்களோ அவ்வளவு கரங்களுடன் வந்து




ஏக காலத்தில் அவ்வளவு பேரையும் சம்ஹாரம் செய்தார் என்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

பழையாறு ஆலயத்தில் முன் கோபுரத்தைத் தாண்டியதும் அம்மன் சந்நிதி இருக்கிறது. அம்பிகையின் நாமதேயம், 'சோமகலாம்பிகை' என்பது. போகும்போது படிக்கட்டுகளின் இருபுறங்களிலும் துவாரபாலகர்கள் சிலைகள் இருக்க, நடுவேதான் மேலே குறிப்பிட்ட சிற்பங்கள் இருக்கின்றன.

ஹிரண்ய கசிபு தனது மைந்தனை நோக்கி, "உன் மகாவிஷ்ணு இந்தத் தூணிலும் இருக்கிறானா?" என்று ஏளனமாகக் கேட்பதும், பிரகலாதன் "இருக்கிறான்!" என்று திடமாகப் பதில் சொல்வதுமாகிய கட்டம்; அதற்கடுத்த சிற்பத்தில் தூணைப் பிளந்துகொண்டு உக்ர ஸ்வரூபத்தில் பல கரங்களுடன் வெளிப்பட்டு ஹிரண்யனுடன் சண்டை போடுகிறார் பகவான். எதிரியின் காலைத் தம் காலுடன் பின்னிக் கொண்டு இருப்பதையும், ஒரு கரத்தினால் அவன் மகுடத்தைப் பற்றிப் பின்னுக்கு இழுப்பதையும் நேரில் காண்பதுபோலவே இங்கும்





காண்கிறோம். வலது பக்கத்து மேல் கரம் சத்ருவை ஒரே அறையாக அறைந்துவிடத் துடித்துக்கொண்டிருக்கிறது. இந்தச் சண்டையில் வெற்றி யாருக்கு என்பதைப் பார்த்த மாத்திரத்திலே சொல்லிவிடலாம்.

முந்தையப் பக்கத்திலே, யுத்த முடிவுக்குச் சிற்பம் செய்துவிட்டார்கள். மகா ரௌத்திரமாகக் காட்சியளிக்கும் மூர்த்தி. இரு கரங்களில் துஷ்டர்கள் இருவரை அமுக்கிக் கொண்டிருக்கிறார், அசையமாட்டாமல். ஒரு கரத்தினால் விசையுடன் வீசப்பட்ட ஒரு துஷ்டன், இடுப்பு ஒடிந்து தலைகீழாக மண்ணைக் கௌவ விரைந்து கொண்டிருக்கிறான். தன்னைப் பழித்தாலும் பொறுத்துக் கொண்டு, தன் பக்தனைக் கொடுமைப் படுத்தினால் பொறுக்காத பகவான், ஹிரண்யனை மடியின்மீது கிடத்திக் கொண்டு அவன் உதரத்தை ஆக்ரோஷத்துடன் கிழிக்கிறார். பிரகலாதனும் அவன் தாயும் ஒருபுறம் கைகூப்பி நின்று அவரை சாந்தம் செய்கிறார்கள். உத்வேகத்துக்கும் ஆச்சர்ய பயங்கரத்துக்கும் எடுத்துக் காட்டான ஒரு சந்தர்ப்பம் இது என்பதற்கு, மிகவும் பொருத்தமாகச் சங்கு சக்கரங்கள்கூட ஆடி அசைவது போன்ற பிரமை உண்டாக்கும் நிலையில் சிற்பம் உருவாகியுள்ளது.

அதேபோன்று முந்தைய இரு பக்கங்களிலும் மேற்புறத்தில் மனிதன் சிங்கத்தோடு சண்டை செய்வது சிலா ரூபமாகக் காட்டப்பட்டிருக்கிறது. இந்த மாதிரியான சிலைகள் பழையாறு கோயிலிலேயே இருபதுக்குமேல் காண முடியும். அநேகம் பின்னம் அடைந்து விட்டன. எனினும், பெரிய கோபுரத்தின் அடிவாரத்தில் உள்ள சிற்சில, நல்ல நிலையில் இருக்கின்றன.

மிருக ராஜனின் சிலை செய்யப் பட்டுள்ள வகையிலிருந்து, அது நெருப்பு மூச்சு விடுவதுபோலவும், நெருங்கினால் தனது பெரும் பாதத்தைக் கொண்டு ஓர் அறை கொடுத்துவிடும் என்றும் அஞ்சவே தோன்றுகிறது. உயிர் ஒன்றே பாக்கி என்று நினைக்க வேண்டிய முறையில் ஏறிட்டுப் பார்க்கிறது சிலைச் சிங்கம்! மேலே ஏறிவிட்ட ஆசாமியைக் கீழே தள்ளத் தன் வாலைக் கொண்டு ஒரு சுருட்டு சுருட்டி, இரு முன்னங்கால்களையும் உயரத் தூக்கி நிமிர்ந்தும் நிற்கிறது. கீழே நிற்கும் ஆள், எந்த சமயமும் தனக்கு அபாயம் நேரிடலாம் என்பதை உணர்ந்தவனாக ஓட்டம் பிடிக்கவும் தயாராகத்தான் இருக்கிறான்.

சிங்கத்தின் தலையில் செய்யப் பட்டுள்ள அலங்காரங்களும், பிடரியும், கால்களும், கூர்மை மங்காத கால் நகங்களும்கூட, அபாரமான வேலைத் திறனுக்கு அத்தாட்சி சொல்கின்றன. சிற்பக்கலையில் சிம்மம் போன்றவர்கள் ஈடுபட்டதனால் ஆனவை இவை என்பதில் சந்தேகம் உதிக்கத் தேவையே இல்லை.




தென்னாட்டுச் செல்வங்கள் / விகடன் பிரசுரம்

ஸ்ரீகற்பக விநாயகர் (பிள்ளையார்பட்டி)




தென்னாட்டுச் செல்வங்கள் / விகடன் பிரசுரம்

ஸ்ரீகமலாம்பிகை (திருவாரூர்)



தென்னாட்டுச் செல்வங்கள் / விகடன் பிரசுரம்

ஸ்ரீசந்திரமௌலீஸ்வரர் சந்நிதியில் பூஜை செய்யும் மகாபெரியவர்



பள்ளிகொண்ட பெருமான் (திருவரங்கம்)




ஸ்ரீதர்ம ஸம்வர்த்தினி – அறம் வளர்த்த நாயகி (திருவையாறு)




ஸ்ரீவேங்கட கிருஷ்ணன் (திருஅல்லிக்கேணி)

தென்னாட்டுச் செல்வங்கள் / விகடன் பிரசுரம்



தென்னாட்டுச் செல்வங்கள் / விகடன் பிரசுரம்

ஸ்ரீஅமிர்த பலவல்லி தாயார் (சோழிங்கபுரம்)



ஸ்ரீதணிகாசலக் கடவுள் (திருத்தணி)

கயிலை... ராவணன்!



பழையாறு ஆலயம் தற்போது இருந்து வரும் ஜீர்ணமான நிலையை, அடுத்த பக்கத்தில் காட்டப்பட்டிருக்கும் சித்திரம் ஓரளவு விளக்கக்கூடும். கோபுரங்கள் மீதும் தரையிலும் செடி - கொடிகள் மண்டியும், மதில் சுவர்கள் இடிந்தும் கவனிப்பாரற்ற நிலையிலே வெகுகாலமாக இருந்து வருவதை வெளிப்படுத்துகின்றன. கலா ரசிகர்கள் மனம் பூரித்துப்போய்க் காணாது கண்ட புளகத்துடன் ஆனந்தித்துக் கொண்டிருக்க வேண்டிய இவ்விடத்தில் ஆடுகள் நின்று புதர்களைச் சுவைத்து அசைபோடுகின்றன! வலது பக்கத்தில் மரக்கிளைகளுக்கு இடையே நாம் பார்ப்பது, இரண்டாவது கோபுரமும் அதன் முன்புள்ள மண்டபமும். இந்த மாதிரியானதொரு பாழடைந்த தோற்றத்துடன் ஆலயம் இருந்தும்கூட மண்டபத்தின் உள்ளே சென்று மொழு மொழுவென்று ஒரு பின்னமின்றி சம்பூர்ணமாக நிற்கும் கயிலாசநாதர் சிலையைப் பார்க்கும்போது ஆச்சரியமே அடைகிறோம்.

கயிலாசபதி வீற்றிருக்கும் மலையை நகர்த்தும் அடாத நோக்கத்துடன் லங்கேஸ்வரன் அந்த அசலத்தை முதுகில் ஏற்றிக்கொள்கிறான். பத்து மூளைகளும் இருபது புஜங்களும் இந்த வேலையில் உபயோகப்படுகின்றன. மலை கிடுகிடுவென்று ஆடுகிறது.

பார்வதி தேவி இந்த எதிர்பாராத சலனத்தினால் பயந்தவளாக எம்பெருமானைத் தழுவிக் கொள்ள விரைகிறாள். தமது இடது கையினால் கௌரியை அணைத்த சங்கரர், இந்தக் காரியத்துக்குக் காரணத்தை அறிந்து கால் கட்டை விரலினால் லேசாக அழுத்துகிறார்.

ராவணனுடைய விழிகள் பிதுங்கு வதைச் சிற்பம் காட்டுகிறது. அவன் திணறும்போது மார்பு விம்மி இருப்பதையும் பார்க்கிறோம். அவனுடைய ஏமாற்றம் பத்து முகங்களிலும் பிரதிபலிக்கிறது. உமாபதிதான் எவ்வளவு கம்பீரமாக உருவாகிவிட்டார்! நாக யக்ஞோபவீதமும், மார்பில் திகழும் ஆபரணங்களும், ஜடாமுடியும், ஜடாமுடியில் அமைந்த பிறையும் பாம்பும்கூட அமர்க்களமாக வந்து விட்டன. அலட்சியமாக ஆலாலத்தை உண்ட நீலகண்டனின் கண்களில் இப்போது பிரகாசிக்கும் ஒளி, ஹைமவதியின் மீது கொண்டுள்ள பரிவு ஒன்றையே விளக்குகின்றது.

'நூபுர ரத்ன கங்கணதரி'யாக இருக்கிறாள் அம்பிகை. அவள் நயனங்கள் பயத்தினால் விரிந்தும், முக மண்டலம் அதற்கேற்ற அதிதமானதொரு சோபையுடனும் உருப்பெற்றிருக்கின்றன.

சர்வலோக ரக்ஷகனின் வாசஸ்தலமான ஹிமாச்சலத்தில் புலியும் மானும் ஒரே துறையில் நீராடின என்பதற்கு அத்தாட்சி, ஈஸ்வரன் காலடியில் சிற்ப ரூபத்தில் விளங்குகிறது. ஈஸ்வரியின் வலதுபுறத்தில் ஸர்ப்பம் ஒன்று படத்தைத் தூக்குகிறது. பிரமாதமானதொரு சிற்பம் இது!




மண்டபமே ரதமாக...

இந்தப் பக்கத்தில் நாம் காண்பதும் பழையாறு ஆலயத்தின் சிற்பச் செல்வங்கள் நிரம்பிய ஒரு பகுதிதான். சோமநாத ஸ்வாமி சந்நிதிக்குச் செல்லும் போது, முன் மண்டபத்துக்கு ஏறும் வழியில், இந்த அற்புதமானதொரு காட்சி கலா ரசிகரின் கண்களுக்குப் புலனாகிறது. மண்டபமே ஒரு ரதமாகி, அதற்குப் பிரமாதமான வேலைப் பாடுகள் நிறைந்த சக்கரமும் அமைக்கப் பெற்று, உடலெல்லாம் அலங்கரிக்கப் பட்ட அஸ்வமும் கஜமும் அதைப் பலம்கொண்டு இழுப்பதுபோல் காணக் கிடக்கின்றன.

யானையின் வளைந்த முதுகை கவனித்ததும், அது சிரமப்பட்டு இழுக்கிறதென்று ஊகிக்கிறோம். அந்த சிரமத்தை அதற்கு வருவிப்பவர்கள் இருவர் முதுகின் மேல் அமர்ந்து விரட்டுவது வெகு பொருத்தமாக அமைந்துவிட்டது என்பதையும் உடனே அறிந்துகொள்கிறோம்.

சக்கரம்தான் என்ன! பூமியில் புதைந்து கிடந்தாலும், சிற்ப விசேஷங்களினால் கவர்ச்சி குன்றாமலே இருக்கிறது. பூமியில் சக்கரம் உருளும் இடங்களில்கூடச் சிற்பாசாரியர் தமது சிற்றுளிக்கு வேலை கொடுத்து ஏராளமான பூ வேலைகள்





செய்துவிட்டார். ஏன், பூமியின் அடியில் மறைவாக இருக்கும் இடங்களில்கூட அதே பூ வேலைகள் இருக்கும் என்றுகூட நம்மை நம்பவைக்கிறார்!


மண்டபத்தின் அடி வரிசை பூராவும் சிறு சிறு நடனப் பெண்களின் சிற்பங்களாக எண்ணற்றவைப் பார்க்கலாம். ஒன்றுபோல் ஒன்றில்லாமல், துளியும் பிசகாமல் உருவாகியுள்ள இந்த உருவங்கள், திறமையுடன் பொறுமையும் பெற்றவர்கள் தென்னாட்டுக் கலை மன்னர்கள் என்பதை சந்தேகமற விளக்குகிறது.

இந்தப் பக்கத்தின் மேலே இருப்பது அர்த்தநாரீஸ்வரர் சிலாரூபம். சிவாலயங்களில் இது சாதாரணமாகக் காணப்படுவதே எனினும், இந்த ஊர் ஆலயத்து கர்ப்பகிரகத்தின் பின்புறப் பிராகாரத்தில் மேற்கு நோக்கியிருப்பது ஒரு மாறுபாடு என்று கூறப்படுகிறது. இங்கே லிங்கோத்பவர் சிலைதான் இருப்பது வழக்கமாம்.

இந்த உருவத்தைப் பார்த்த மாத்திரத்தில் கவர்ச்சி அளிப்பது இடுப்பின் வளைவும் அதன் அழகும்தான். பின்னால் நந்திகேஸ்வரர் நிற்கிறார். மற்றப்படி உயர்ந்த அர்த்த நாரீஸ்வரர் சிலைகளுக்குள்ள அம்சங்கள் பெரும்பாலும் இதிலும் அமைந்திருக்கின்றன.

யாளிகள், யானைகள், சிங்கங்கள் முதலிய சிற்பங்கள் மலிந்து காணும் பழையாறு ஆலயத்தில் இங்கே காட்டப் பட்டுள்ள இரு பெரிய யாளிகளும் நம் விசேஷ கவனத்தைக் கவர்பவை. ஒரு காலத்தில் தட்சிணாமூர்த்தி ஸ்வாமியின் மண்டபத்தைத் தாங்கியதாகக் கூறப்படும் இவை, இன்று கீழே கிடக்கின்றன. வெகு காலம் தூக்கி வந்ததனால் ஏற்பட்ட தோள் வலியை ஆற்றிக்கொள்ளவே இம்மாதிரி சாய்ந்த வண்ணம் இருக்கின்றனவோ என்றுகூட ஒரு கணம் தோன்றுகிறது. கொழு கொழுவென்று வலுவுடன் வளர்ந்த தேகமும், கோபமும், பயங்கரமும் கலந்து ஜொலிக்கும் முகமும், இவை உயிர் பெற்றால், அருகில் வேறெதுவும் உயிர் வைத்திருக்க முடியாதென்று நிச்சயம் செய்யச் சொல்கின்றன.

பக்கத்தில் இருக்கும் ஸ்தம்பங்களில் எல்லாம் பூச்செடிகளும், தளிர்களும் புஷ்பங்களுமாகச் சிற்ப வேலைகள் மண்டிக்கிடக்கின்றன. பக்கத்தில் புதர்களில் இருந்து கிளம்பும் நிஜக் கொடிகளும் புஷ்பங்களும் இந்தத் தூண்களின் அருகே வளைந்து வரும்போது நாம் ஒப்பிட்டுப் பார்த்தால் சிற்பங்களின் இயற்கைத் தன்மையையும் உயர்வையும் சிற்பாசாரியரின் திறனையும் மேலும் மெச்சிக்கொள்ளவே தோன்றுகிறது.




பட்டீஸ்வரம்!


கும்பகோணத்துக்கு அருகில் இருக்கும் பட்டீஸ்வரமும், கலைச் செல்வங்களில் சிலவற்றுக்கு இருப்பிடமாக இருந்து வருவது பற்றி பெருமை கொள்ளலாம்.

பெரிய சிலைகள் இங்கே உள்ளன என்பதுடன்கூட, உயர்ந்த மனோ தர்மத்துடன் சிற்பாசிரியர்கள் கலைத் தொண்டு புரிந்திருக்கிறார்கள் என்பதற்கு வேண்டிய அத்தாட்சிகளையும் காண முடிகிறது.

எதிர்ப்பக்கத்தில் காட்டப்பட்டிருக்கும் விநாயகரின் சிலை, கோபுர வாசலில் இருக்கிறது. இந்த கணேசருடைய பெருமையை உயர்த்திக்காட்ட அவர் அமர்ந்திருக்கும் மாடத்தில் பிரமாதமான சிற்ப ஜாலங்களைக் காண்பித்துவிட்டார்கள் சிற்பிகள். இவ்வளவு அலங்காரமான மாடத்தைச் சாதாரணமாகக் காண்பது அரிது என்பதை, பார்த்த மாத்திரத்தில் யாரும் ஒப்புக்கொண்டே ஆகவேண்டும். சற்றுத் தொலைவில் நின்று பார்ப்பவர்களுக்குக் கவர்ச்சி காட்டும் இம்மாடம், நெருங்கி உன்னிப்பாகப் பார்த்தவுடன், மேன்மையானதொரு சிருஷ்டி இது என்பதையும், ஜீவ களை ததும்பும் பல பல உருவங்களைத் தாங்கியுள்ளது என்பதையும் காணலாம்.

உயரே வெகு அழகான விமானம்.





அதன் அடி வரிசை பூராவும் மனிதர்கள் தங்களுக்குள் அடித்துக்கொண்டு போர் செய்யும் காட்சி. கட்டிப் புரள்பவர்களும், கத்தியால் வெட்டிக்கொள்பவர்களும், முஷ்டியினால் தாக்கிக்கொள்பவர்களும் பலவிதங்களில் தோன்றுகிறார்கள்.

இருபுறங்களிலும் புரவிகள் பாய்கின்றன. அவற்றின் மீது வீரர்கள் ஆரோஹணித்து இருக்கிறார்கள். விக்னேஸ்வரரின் இரு பக்கங்களிலும் தூண்கள். அவற்றைத் தூண்கள் என்று சொல்ல முடியாதபடி சிலாரூபங்கள் மறைத்துக்கொண்டு இருக்கின்றன. யானையைத் தூக்கும் யாளி, யாளியின் முதுகில் சவாரி செய்யும் ஆள், குதிரையில் ஆரோஹணித்துப் புலியுடன் கடும் போர் புரியும் வீரன் - என்ற மாதிரி கல்லைக் குடைந்து, கற்பனைகளை உருவாக்கிக் காட்டிவிட்டார்கள்.

இடது பக்கத்தில் கீழே காண்பிக்கப் பட்டிருப்பது ஷண்முகனின் திருவுருவம். ஆஜானுபாகுவாக ஆறடி உயரத்தில் வள்ளி-தேவஸேனா சமேதராக நிற்கும் பிரபுவின் ஆறு திவ்ய வதனங்களிலும் அருள் ததும்புகிறது. 'விஷ்ணு சக்தி ஸ்வரூபன்' என்ற நாமதேயத்துக்கு இணங்க வலது கரம் ஒன்றில் சக்கரம் துலங்குகிறது. ஏராளமான ஆபரணங்கள், வேலைப்பாடுகள் நிறைந்த கிரீடங்கள், சர்வ அலங்கார பூஷிதைகளாக இரு புறமும் நிற்கும் இரு பத்தினிகள் - ஆக, இம்மாதிரியான கல்யாண கோலம், ரசிகர் உள்ளத்துக்குத் திருப்தி அளிப்பதுடன் எல்லோர் மனத்துக்கும் சாந்தி அளிக்கும் முறையில் உருவாகியிருக்கிறது.

சுப்ரமணியருக்குப் பின்னால் நிற்கும் மயூரம், சிறந்ததொரு சிற்பமாகும். அந்த மயிலைக் கல்லிலே கடைந்தெடுத்த சிற்பியின் பெருமையை அதன் ஒவ்வோர் அங்கமும் கூறுகிறது. மயிலின் உடலில் உள்ள செதுக்கல்கள், தோகையில் காணப்படும் மெல்லிய வரிகள், கழுத்தின் வளைவுகள் - அவ்வளவும் இயற்கைக்குத் துளிக்கூடப் புறம்பில்லாதபடி உருவாகியுள்ளன.

இந்தச் சிலாரூபம், தேனுபுரீஸ்வரர் கோயில் பிராகாரத்தில் பின்புறத்தில் இருக்கிறது. ஆதிகாலத்தில் இந்தச் சிலைகள் இங்கே இல்லையென்றும், பிற்காலத்திலேதான் சோழ மாளிகையில் இருந்து இங்கே கொண்டு வந்து பிரதிஷ்டை செய்யப்பட்டவை என்றும் ஒரு வரலாறு இருந்து வருகிறது. எப்படியிருப்பினும், நல்ல சிற்பங்களாகப் பார்த்துத் தயாரிக்கப்படும் ஜாபிதாவில், பட்டீஸ்வர ஆலயத்து ஷண்முகர் சிலையும் இடம் பெறும் என்பதில் சந்தேகம் இல்லை.

அந்தகாசுர வதம்!



சிவ லீலைகளில் ஒன்று, 'அந்தகன்' என்ற அசுரனை பைரவமூர்த்தியாகச் சிவபெருமான் வதம் செய்தது. ஒரு ரஸமான கதை அது. அந்த அசுரன் பஞ்சாக்னி மத்தியில் இருந்து கடுந்தவம் செய்து, சிவனையே கொண்டு பல வரங்களைப் பெற்று, பிரம்ம விஷ்ணு - இந்திரர்களாலும் தனக்குச் சாவு ஏற்படாதபடி பாதுகாப்புச் செய்துகொண்டு விட்டான். இவனுடைய அகந்தை அதிகமாகி, அமரர்களுக்கெல்லாம் அது கொடுமையாக மாறியது. தன் ஆற்றல் அகற்றவொண்ணாதது என்றும், தன்னை ஆவிசோர வைக்க எந்த தேவனாலும் இயலாது என்றும் மார்தட்டிக்கொண்டு அட்டகாசம் செய்து திரிந்தான்.

ஒரு சமயத்தில், இவன் இழைத்த இன்னல்கள் பொறுக்கமாட்டாமல் எல்லோரும் இவனையே அணுகிக் காலில் விழுந்து, இவன் சொன்னபடி செய்வதாகவும், துன்புறுத்தாமல் மட்டும் விட்டுவைத்தால் போதுமென்றும் வேண்டினார்கள். அதற்கும் அவன் செருக்குடன், "போர்ச் செயலில் ஆண் சிங்கத்தை யொத்தவன், நான் ஒருவனே! ஆதலால், நீங்கள் அனைவரும் கண்களில் மைதீட்டிச் சேடியர்போல் சேலை தரித்து மாதர்கட்குரிய அணிபணி அணிந்து வாழ்நாளைக் கழியுங்கள்!" என்று கட்டளை இட்டான்.

பெண் வேடம் புனைந்த மால் - மலரோன் - மகபதி யாவரும் வளைக்கரங்களுடன், பெண்மைக்குரிய கண்ணீர் மல்கும் நயனங்களுடன் மந்தாகிரி சென்று மகாதேவனைப் பணிந்து போற்றி மலர் கொண்டு சிவலிங்கங்களைச் செய்து துதித்தனர். சிவபெருமான், அவர்கள் மீது கருணைகொண்டு உமாதேவியின் தோழியர் போல் இருத்திக்கொண்டு சிவகணங்களுடன் வாழ்ந்திருக்கச் சொன்னார்.

அங்கும் அவர்களை அசுரனின் தொல்லை தொடர்ந்து வரவே, சிவன் ருத்திர மூர்த்தியானார். தம்முள் நின்ற பைரவரை ஏவி, அந்தகனுக்கு அந்திம காலத்தைக் கொடுக்கும் ரகசியத்தைச் சொல்லி அனுப்பினார். போர் நிகழ்கிறது. முத்தலைவேல் அந்தகனை ஒழித்து முடிக்கிறது. இதுவே புராண வாயிலாக வரும் கதை.

உயரே காண்பது பைரவமூர்த்தியின் சிலை; பட்டீஸ்வரத்தில் இருப்பது. பரமசிவனின் ஜடாமுடி அக்னிபோல் ஜ்வலித்துக்கொண்டு சுடர்விட்டு நிற்கும் கோபக் காட்சி. கண்களிலும் அனல் பறக்கிறது. முத்தலைவேலாயுதத்தை வலது முன் கரத்தில் காணலாம். இடுப்பைச் சுற்றியுள்ள ஸர்ப்பம் சீறுகிறது. பின்னால்

நிற்கும் நாயின் உடலை முழுமையும் சிறப்பாகச் செய்வித்து, அதன் வாலை வளைத்தும், நாக்கைத் தொங்கப் போட்டும், செவிகளை நிமிர்த்தியும் பற்களைக் காட்டியும் அதன் உக்ர சொரூபத்தை வெளிக்கொணர்கிறார். இந்தத் தோற்றத்தைப் பார்த்த மாத்திரத்திலேயே பெரிய துஷ்டன் ஒருவனது சம்ஹாரத்தை முன்னிட்டு எடுக்கப்பட்ட ஒரு கோலம் என்று சொல்லிவிடலாம். அணிபணிகள், அங்க லட்சணங்கள் ஆகியவை பரிபூர்ணமாக அமைந்துள்ள சிலை இது.



இங்கு நாம் காண்பது உமாதேவி, பரமசிவனை எண்ணித் தவம் செய்யும் காட்சி. அம்பிகை ஒற்றைக் காலால் நின்றுகொண்டிருக்கிறாள். இடது காலை வெகு அழகாய் மடித்து உள்ளங்கால் உயரே நோக்கும் வண்ணம் நிற்கிறாள் தேவி. கால்களின் லட்சணத்தையும் தன்மையையும் அணிந்துள்ள உடையையும் நோக்கும்போது, இந்தத் திரிபுரசுந்தரி ஒரு மகோன்னதமான நாட்டிய சுந்தரி என்றும் எண்ணத் தோன்றுகிறது. அத்தகைய மனமோகன சொரூபம். இடையழகு, கைகளை வைத்திருக்கும் நிலை, கண்களில் வெளியாகும் அருள் - நோக்கு எல்லாம் பார்வதிதேவியின் காவ்ய லட்சணங்களுக்கு மிகப்பொருத்தமாக உள்ளன. அதிகமான ஆபரணங்கள் இல்லாமலே, லகுவில் செய்ய முடியாததொரு கவர்ச்சியை உளியின் மந்திரச் சக்தி கொண்டு தருவித்திருக்கிறார் சிற்பாசாரியர்.

தேனுபுரீஸ்வர ஸ்வாமி சந்நிதியில் உள்ள இந்த அமர சிற்பத்தை நவக்கிரகங்களுக்கு எதிரே காணலாம். அம்பிகையின் கோரமான தபஸை முன்னிட்டு எதிரே ஒரு கிணறும் பலிபீடமும் அமைக்கப்பட்டிருப்பது இங்கே ஓர் ஐதீகம்.

முன் காலத்திலே திருஞானசம்பந்த மூர்த்தி சிவாலயங்கள் தோறும் தரிசித்து வரும்போது, சக்திவனேஸ்வரர் ஆலயத்திலிருந்து இங்கு வந்தார். தேனுபுரீஸ்வரர் ஆக்ஞைப்படி பூதகணங்கள் அவருக்குப் முத்துப்பந்தல் எடுத்துச் சென்று மரியாதைகள் செய்தனவாம். அப்படி சந்நிதியை அணுகும்போது, பந்தலுடனேயே வரும் வண்ணம் ஈஸ்வர ஆக்ஞையினால் நந்திகேஸ்வரர் விலகி நிற்கிறார். எல்லா நந்திகளும் விலகியிருப்பது குறிப்பிடத்தக்கது.

இங்குக் காட்டப்பட்டிருப்பது கோயிலிலிருந்து வெளியே செல்லும்போது கோபுர வாசலில் இருக்கும் நந்தி மண்டபம். சற்றுத் தொலைவில் நின்று பார்க்கும் போது கோபுரமும் மண்டபமும் சேர்ந்து கம்பீரமானதொரு தோற்றம் அளிக்கின்றன.





துர்க்காதேவி சரணம்!

காமதேனுவின் புதல்வியான பட்டியினால் பூஜை செய்யப்பட்டதன் நிமித்தமாகப் 'பட்டீஸ்வரம்' என்ற பெயரை இந்தச் க்ஷேத்திரம் அடைந்திருக்கிறது. சிற்பச் செல்வங்கள் பலவற்றுக்கு உண்மையிலேயே அடைக்கலமாக இருந்துவரும் இந்த ஊர் ஆலயத்திலேதான், கடைசி நாயக்க மன்னனுடைய மந்திரியாக இருந்த கோவிந்த தீக்ஷிதர் சிலையும் அவருடைய மனைவி ஞானாம்பாளின் சிலையும் இருந்து வருகின்றன. இந்த மந்திரியார்தான் இங்கே 'ஞானாம்பாள் சந்நிதி'யைக் கட்டியவர்.

இந்தப் பக்கத்தில் காட்டப்பட்டுள்ள சிலை அந்த அம்மையாருடையதுதான். பழங்காலத்தைக் குறிக்கும் நகைகளை அணிந்து கொண்டு, பக்தி சிரத்தையுடன் நிற்கும் உருவம். தலையிலே தலையலங்காரங்கள், காதுகளிலே கனத்த தங்க ஆபரணங்கள், கழுத்திலும் மார்பிலும் பலபல மணிமாலைகள், இடையிலே தழையத் தழைய ஒட்டியாணம், கரங்களில் அடுக்கடுக்காக வளையல்கள், விரல்களில் மோதிரங்கள் - தனவந்தரின் அன்புக்குக் கொடுத்துவைத்த பத்தினி இவர் என்பதைப் பரிபூர்ணமாக விளக்குகிறது சிற்பம். உழைப்பு அறியாத உடல் என்பதைப் பார்த்த மாத்திரத்தில் தெரிந்துகொள்ளலாம். கால் விரல்களில் மெட்டிகளைக்கூடச் சிற்பாசிரியர் மறக்கவில்லை என்பதையும் கவனிக்கலாம்.



சோழ மாளிகையிலிருந்து பாதுகாப்புக்காகக் கொண்டுவந்த சிலைகளில், இங்கு இருக்கும் துர்க்கையின் உருவமும் ஒன்றாகும். வடக்குக் கோபுர வாசலில் தனிக் கோயில் கொண்டு வடக்கு நோக்கி நிற்கிறாள் அம்பிகை. இங்கே சிறப்பாக வழிபாடு நடந்துவரும் இந்த தெய்வத்தை, சங்கு சக்கரங்கள் ஏந்தியிருப்பதைக் கொண்டு, 'விஷ்ணு துர்க்கை' என்று அழைக்கிறார்கள்.

கருணை ததும்பும் முக விலாசம் வெகு வசீகரமாக அமைந்துவிட்டது. சூல - தனு - குசாங்குச தரியாக எட்டுக் கரங்களுடன், நூபுர - ரத்ன - கங்கணங்களுக்குக் குறைவின்றி தேஜோமயமாக நிற்கிறாள் லோகமாதா. சிறுத்த இடையும், அகன்ற மார்பகமும், அவற்றை அலங்கரிக்கும் ஆபரணங்களும் இந்த அம்பிகையின் ஸ்வரூபத்துக்குள்ள உன்னதமானதொரு சோபையை மேலும் உயர்த்திக் காட்டுகின்றன.

சம்பிரதாயத்துக்கு வழுவாமல் சிம்ம வாகனம் பின்னே காண்கிறது. காலடியில் கிடக்கும் மகிஷத்தின் தலை, சிம்மத்தின் பயங்கரத்தைவிட ஒரு படி அதிகமாக அமைந்துவிட்டது. இயற்கையுடன் ஒட்டியிருப்பினும், மகிஷாசுரனின் பலத்துக்கு எடுத்துக் காட்டாகவும் துஷ்ட நிக்ரகத்தையே துர்க்கை தனது கைங்கர்யமாக ஏற்றிருப்பதற்குச் சாட்சியாகவும் விளங்குகிறது.


பக்தனும் ரசிகனும் சேர்ந்து வழிபடும் ஒரு மிக நல்ல சிற்பம் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை.


திருவலஞ்சுழி

திருவலஞ்சுழி க்ஷேத்திரம். கும்ப கோணத்துக்குச் சமீபத்தில் இருக்கிறது. புராணப் பிரசித்தியுடன் கூடிய சிற்பங்களினாலும் பெருமைகள் பல அடைந்துள்ள ஸ்தலம் இது.

அமிர்த மதன காலத்தில் முதன்முதலாகக் கடும் விஷம் தோன்றியபோது, தேவர்கள் அஞ்சிப் பரமசிவனை வேண்டினார்கள்; இந்தக் காரியத்தை விக்னேஸ்வர பூஜையின்றித் தொடங்கியதால் ஏற்பட்ட சங்கடம் இது என்று அவர் கூறவும், தேவர்கள் தக்ஷணமே கடல் நுரையினாலேயே ஒரு விநாயகரை உருவாக்கிப் பூஜை செய்து பலன் பெறுகிறார்கள். அந்த விநாயகர், தேவேந்திரனிடம் நித்யபூஜையில் இருந்து வருகிறது. அவன் தனது சாப விமோசனத்தையொட்டி க்ஷேத்ராடனம் செய்துவரும்போது, அவனுக்கு இந்த ஊரில் பூஜையை எடுக்க முடியாமல் போகிறது. தெய்வாக்ஞையால் விநாயக சதுர்த்தி தோறும் அவனே வந்து அங்கு பூஜை செய்யும்படி உத்தரவு பெற்று மேலே செல்கிறான். விநாயகர் வெள்ளை வெளேர் என்று இருப்பதனால் 'சுவேத விநாயகர்' என்ற நாமதேயம் பெற்றார்.

கோயில் முன் கோபுரத்தைத் தாண்டியவுடன் ஒரு நூதனமாகப் பஞ்ச மூர்த்திகளும் மேலே காண்பிக்கப்படுகிறார்கள்.





பக்கத்திலேயே பிள்ளையார் கோயில் வில்வ மரத்தடியில் இருக்கிறது. வாயில் வழியே நாம் காண்பது விசித்திர வேலைப்பாடுகள் அமைந்த பலகணி. இந்தப் பக்கத்தில் இந்தப் பலகணி விஸ்தாரமாகக் காட்டப்பட்டிருக்கிறது. சிற்பங்களிலே ஆவுடையார் கோயில் கொடுங்கை எவ்வளவு மகத்துவம் பெற்றதோ அதற்கு ஒப்பாகத் திருவலஞ்சுழிப் பலகணியும் சிற்ப சாஸ்திர விற்பன்னர்களால் பாராட்டப்பட்டு வருவதாகும்.

மிகக் கடினமான வேலை, வியக்கத்தக்க விதமாகச் செய்யப்பட்டிருக்கிறது என்பதை, பார்த்த மாத்திரத்தில் அறிந்து கொள்ளலாம்.

சிதைந்த சிற்பங்கள்!




திருவலஞ்சுழி ஆலயத்துக்குள் ஒரு சுற்றுச் சுற்றி வரும் கலா ரசிகரது உள்ளம், ஒரு கணம் பெரிதும் விம்மியும் மறுகணம் மிகச் சோர்ந்தும் போகுமானால் அதில் ஆச்சரியமில்லை. யாவரும் கண்டு வியக்கும்படியானதோர் அதிசய நுட்பங்களுடன் கலையைத் தமிழர்கள் பயின்றார்கள் என்பதற்கு அத்தாட்சியாக மகோன்னதமான சிலாரூபங்கள் நிறைந்துகிடப்பதைக் கண்டு பெருமைகொள்வார்; ஆனால் அந்த அமரப் பெருஞ் சேர்க்கையிலே ஒன்றாவது உருப்படியாக - ஒரு பின்னமாவது இல்லாமல் - கண்டுபிடிக்க முடியாத தவிப்பினால் மனம் வெதும்பிப் போவார். பாழடைந்த மண்டபமும் உருக்குலைந்த உருவங்களும் அவர் கண்ணீரையும் கோபத்தையும் ஒருசேரப் பொங்க வைக்கும்.

எதிர்ப்பக்கத்தில் அம்மாதிரி பின்னம் அடைந்த சிற்பங்களைக் காண்கிறோம். தட்சிணாமூர்த்தி, விநாயகர், உமா மகேஸ்வரர், அகஸ்தியர், துவாரபாலகர்கள் அர்த்தநாரீஸ்வரர், பைரவர் ஆகியவர்களின் உருவங்கள் அழகினிடையிலே கோரமும் கலந்து மண்டிக்கிடக்கின்றன.

படத்தின் வலதுபுறத்தில் முன்னணியில் காண்பிக்கப்பட்டுள்ள பைரவமூர்த்தி, பூர்ணமாக இருந்த சமயத்தில் வெகு உயர்ந்த மனோதர்மத்துக்கும் வேலைத்தரத்துக்கும் எடுத்துக்காட்டாக இருந்திருக்க வேண்டும். எட்டுக்கரங்களிலே பிரதானமான இரு முன்கரங்களை இப்போது காணோம்! யார் செய்த தவத்தாலோ பெரிய வில்லும், எடுப்பாக இடையைச் சுற்றி வளைந்து படமெடுக்கும் ஸர்ப்பமும் இன்னும் முழுதாக இருக்கின்றன. இரு துவாரபாலகர்கள் சிலைகளும் இங்கே வந்து இடம் பெற்றிருப்பதைப் பார்க்கும்போது, 'மற்ற தெய்வங்கள் கோயிலை விட்டு வெளிப்பட்ட பின், நமக்கு அங்கே காவல் காக்க என்ன இருக்கிறது' என்றுதான் கூடவே வந்துவிட்டார்களோ! - என்று நினைக்கத் தோன்றும்.

இந்தப் பக்கத்தின் உயரே இருக்கும் சிலை, ஓர் அப்ஸர ஸ்திரீயினுடையது. பூலோகத்துக்கு அத்தனை தெய்விக அழகு ஏற்காது என்றுதானோ என்னவோ, பெரிய பின்னங்கள் அவற்றில் ஏற்பட்டுவிட்டன! அவள் ஆடும் வேகச் சுழற்சியில் தலை அலங்காரங்களும் ஆடைகளும் பறக்க, தழையத் தழையத் தொங்கும் மணிகள் ஆட, விழிகள் மயக்கமூட்ட, ரொம்ப அற்புதமாகத்தான் இருந்திருக்கும். இவற்றைக் கண்டும் கற்பனை செய்தும் நிற்கும் கலா ரசிகரின் பெருமூச்சு நம் காதில் வந்து கேட்டு உள்ளம் வரை எட்டுகிறது!



சில்பி

வலஞ்சுழிந்த கதை!

திருவலஞ்சுழி க்ஷேத்திரத்துக்குப் பெயர் வந்த காரணம் புராண வாயிலாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. காவிரி நதி இந்தச் க்ஷேத்திரத்துக்கு அருகே வரும்போது, மூர்த்தி விசேஷத்தை உத்தேசித்து வலமாகப் பிரதட்சணம் செய்து வந்து பூமிக்குள் மறைந்து போயிற்று. சோழ மன்னன் முயற்சியினாலும், அருகே உள்ள கொட்டையூரில் தபஸ் செய்து கொண்டு இருந்த ஹேரண்ட முனிவர் தம்மையே தியாகம் செய்துகொண்ட பரிகாரத்தினாலும் காவிரி நதி மீண்டும் மேலெழுந்தது. ஊரை வலமாகச் சுற்றி வந்ததை முன்னிட்டுத் 'திருவலஞ்சுழி' என்ற பெயர் சித்தித்தது.

கீழே காண்பிக்கப்பட்டு இருப்பதுதான் கோயிலின் தோற்றம். தூரப் பார்வையிலேயே சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்திருப்பது வெளியாகிறது. இந்த ஆலயம் விஸ்வகர்மாவினால் நிர்மாணிக்கப்பட்டது என்பது ஐதிகம்; அமரக் கலையின் மேதாவிகளான சிற்ப மன்னர்கள் தான் இதைச் செய்து முடித்தார்கள் என்று லகுவாக ஊகிக்கலாம்.

இந்திரனின் தொடர்பு இந்தச் க்ஷேத்திரத்துக்கு உண்டு என்பதை ஸ்தாபிப்பதை போல் தேவ கன்னிகைகளின் சிற்பங்கள் சுற்றிலும் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு சிலையிலும் நாம் தவறாமல் காணும் நுட்பம், இவற்றைச் சிருஷ்டி செய்த புருஷர்கள் எவ்வளவு தூரம் கலை ஆர்வத்தில் ஒன்றிப்போனவர்கள் என்பதை நிரூபிக்கிறது.



இங்கு இருப்பது, திருவலஞ்சுழி ஆலய சிற்பம்தான். ஒய்யாரமாக நின்று மோகனப் புன்னகை செய்யும் இந்த நாரீமணி, ஓர் அப்ஸர கன்னிகை. தன்னைச் சுற்றிலும் அலங்கரிக்கும் பூங்கொடிக்கு நிகரான பெண்கொடிதான் என்பதை நிரூபிக்கிறாள். இரு விஷயங்களிலும் அபாரமான வேலைப்பாடுகளைப் பார்க்கும் போது, 'இவற்றுக்குள் நிலவும் ஒற்றுமையை எடுத்துக்காட்டவே இப்படிச் சிற்பாசிரியர் செய்து முடித்தாரோ?!' என்று எண்ணத் தோன்றுகிறது. கேசத்தை பிரமாண்டமான தொரு சொருக்காக முடிந்து போட்டுக் கொண்டிருக்கிறாள். அதில்தான் எத்தனை ஆபரணங்கள்!

சிறுத்த இடை; அணிந்திருக்கும் ஆடையைக் கருங்கல்லில்தான் செதுக்கிக் காட்டியிருக்கிறார்கள். என்றாலும், காற்றிலே அது சுருண்டு பறக்கிறது என்பதைக் காண்பித்து இருப்பதைப் பார்க்கும் போது, மிக மெல்லிய பட்டினால் ஆனது அது என்று நிச்சயமாக நம்பிவிடுகிறோம்.

ஏதோ பேசுவதற்குத் துடித்துக் கொண்டிருப்பவள்போல் இருக்கும் இந்த அழகி, தன் இடது கரத்தால் கொடியைத் தழுவுகிறாள். வலது கரம் என்ன பாவத்தில் அமைந்திருந்ததென்று நாம் ஊகிக்கவும் முடியாதபடி, பொறாமை கொண்ட கால தேவனோ அல்லது கலை அருமை தெரியாத கசடனோ அதை பின்னம் செய்து வைத்திருக்கிறான்!



திருப்பரங்குன்றம்

திருப்பரங்குன்றத்து ஆலயத்தில் இருக்கும் இரண்டு அருமையான சிற்பங்கள், ஈசனது திருவிளையாடல்களை அனவரதமும் அறிவித்துக்கொண்டு இருக்கின்றன. கோபுர வாயிலைத் தாண்டிய உடனே, திருவாச்சி மண்டபத்துக்கு ஏறும்போது சந்நிதியை நோக்கியவாறு இந்த இரு பக்கங்களிலும் உள்ள சிற்பங்கள் இருக்கின்றன. மதுரைப் புராணத்தில் விவரிக்கப்பட்டுள்ள இந்தத் திருவிளையாடல்களைப் பற்றிய சிலைகள் வேறெங்கும் இல்லை என்பதுடன்கூட, பாண்டிய நாட்டுச் சிற்பாசிரியரின் மேதைக்கும் மேன்மையான வேலைத்திறனுக்கும் நிரந்தரமான சாட்சிகளாக நிற்கின்றன.



இங்கு நாம் காண்பது, சிவபெருமான் பன்றிக் குட்டிகளுக்குப் பால் கொடுத்த கதை. கருணாமூர்த்தியான சடைமுடியான் பன்றி உருவைத் தரித்து வந்திருக்கிறான், தாய் இழந்த பன்றிக்குட்டிகளுக்குத் தாயாக.

புராண வரலாறு கூறுவது இதுதான்: வியாழ பகவான் தவத்தைக் கலைத்துக் கற்களை வீசியெறிந்த பன்னிரண்டு இளைஞர்களுக்கும் பன்றியின் வயிற்றில் பிறக்கும்படி சாபம் ஏற்படுகிறது. அந்தத் தாய்ப் பன்றியை, பாண்டிய மன்னன் வேட்டையாடும்போது கொன்றுவிடுகிறான். தாய் இழந்த குட்டிகள் எல்லாம் பரிதவிக்கின்றன. கயிலாசபதி வராகமாக வந்து, அவற்றுக்கு பாலூட்டுகிறார். பாலுடன் ஞானத்தையும் ஊட்டி ஆட்கொள்கிறார். குட்டிகள் இயற்கையான ஆர்வத்துடன் பால் உண்ணுவதும், கீழே மடியை நோக்கித் தாவுவதும் அபாரமான உணர்ச்சியுடன் உருவாகியுள்ளன. தாயின் ஆனந்தத்தையும் வராகத்தின் கண்களில் காணலாம். மூர்த்தியின் பின்னுள்ள கரங்கள் சிவ



சின்னங்களை ஏந்தியுள்ளன; ஜடா முடியும் மணிமாலைகளும் சன்னமான வேலைப் பாடுகளுக்குச் சாட்சி சொல்கின்றன.


தூணின் மறுபக்கத்தில், இந்தக் கதையின் இதர பகுதிகளைச் சிற்பங்கள் தெளிவாக்குகின்றன. தாய்ப் பன்றியை மன்னன் அம்பெய்திக் கொன்று தள்ளி இருக்கிறான். மேலே, கால்கள் உயர நோக்கக் கிடக்கிறது பன்றி. கீழ் வரிசையில், தாயாக வந்த சங்கரனிடம் பால் உண்டு ஞானம் பெற்ற பன்றிப் பிள்ளைகள் வரிசையாக நிற்பது காட்டப்படுகிறது. இவர்கள் பாண்டியனின் அரச சபையில் மந்திரிகளாக இருந்து, நெறி தவறாமைக்குப் பேர் பெற்றுப் பின் சாயுஜ்யம் பெற்றார்கள் என்பது கதை.

இங்கு காண்பிக்கப்பட்டு இருப்பதும் ஓர் அபூர்வமான சிற்பம்தான். இங்கும் தயா சமுத்திரமான சிவன்தான் ஆச்சரியமான அன்புப் பணியைச் செய்கிறார். சகல ஜீவராசிகளும் எம்பெருமான் முன் சமம் என்பதை நிரூபிப்பதுபோல், அவருடைய வலது கரத்தின் மீது படுத்திருக்கும் மான்குட்டி, இடது கரத்தின் அணைப்பில் இருக்கும் பொல்லாத சிம்மத்திடம் பால் அருந்துகிறது.

சிற்ப விசேஷத்தை ஒரே நொடியில் கண்டு மயங்கும்படி, சிற்பாசிரியர் இந்தச் சிங்கத்தையும் மானையும் கொண்டே காரிய ஸித்தி பெற்றுவிட்டார். மானின் மருண்ட கண்களும், பயத்தினால் ஒடுங்கிய உடலும் ஒருபுறம் சிற்றுளியில் தத்ரூபமாக வந்துவிட்டன! மற்றொரு புறத்திலே, தன் வழக்கத்துக்குப் புறம்பானதொரு காரியத்தைச் செய்கிறோம் என்ற ஆத்திரம் சிங்கத்தின் திறந்த வாயிலும் விரிந்த கண்களிலும் தெளிவாகப் புலனாகின்றன. பரம சாந்த ஸ்வரூபியாக சிவபெருமானின் முகத்தைக் காட்டியிருக்கிறார் சிற்பி. அவருக்கு ஏராளமான ஆபரணங்கள்; மணிமாலைகளும் தோள்வளைகளும், கிரீடத்தின் நுணுக்க வேலைகளும், காதணிகளும், இடையில் உள்ள உடையும் உடை அலங்காரங்களும் உயர்ந்த சிற்பங்கள் எதற்கும் இது பின்வாங்கிவிடாது என்பதை நிரூபிக்கின்றன.

தெய்வானை திருமணமாம்...

'சத்திய கிரி' என்று புராணப் பிரசித்தி பெற்ற திருப்பரங்குன்ற க்ஷேத்திரம். தேவேந்திரனின் செல்வக் குமாரியை முருகன் கற்பு மணம் செய்துகொண்டு கல்யாண கோலத்தில் திருவடி முதலாகத் திருமுடி வரையிலே அழகு பொங்க வீற்றிருப்பதாகும். சூரபத்மனைச் சம்ஹாரம் செய்து வெற்றி வீரனாக வந்த கந்தவேளுக்கு, புரந்தரன் தனது மகளைக் கன்னிகாதானம் செய்து தாரைவார்த்துக் கொடுப்பதும், இந்த விவாக மகோத்ஸவத்தை வேதங்களுக்கு முதல்வனான பிரம்மதேவன் ஹோமம் வளர்த்துச் செய்துவைப்பதும், தேவ தேவர்களெல்லாம் காண்பதற்கரிய கல்யாணமான காட்சியைக் கண்டு களித்துப் புஷ்பமாரி பெய்வதுமே உத்தமமான சிலைகளுக்கு ஆதாரமாகிறது. இவற்றை ஆக்கிவைத்த அமர சிற்பியின் பெயர் நமக்குத் தெரியாது; உருவம் நாம் அறியோம். நினைவு மட்டும் பாரம்பரியமாக இருந்துவரும் என்று நிச்சயமாகக் கூறி விடலாம்.





தேவகுஞ்சரியின் வலதுபுறம் தந்தை; இடதுபுறத்திலே மணாளன். எப்பேர்ப்பட்ட மணாளன் அவன்! பிரம்ம, விஷ்ணு, ருத்ரர்கள் கௌரவித்துப் பூஜித்துப் போற்றிய பார்வதி குமாரன். இந்தப் பெருமை தேவயானையின் நாணம் மிகுந்த வதனத்திலே தெரிகிறது; கடைக்கண் பார்வையாகப் பிரபுவின் முகாரவிந்தத்தை நோக்குகிறாள். உதடுகளில் வெளியாகிறது மகிழ்ச்சியின் அறிகுறியான புன்முறுவல்.

ஒரு முறை பார்த்தாலும் மனதை விட்டு அகலாத இந்தச் சிற்ப ஜாலம், திருப்பரங்குன்றம் ஆலயத்துக்குள் நுழையும்போது முன் மண்டபத்திலேயே இருக்கிறது.

திருச்செந்தூர்


திருச்செந்தூர் ஆலயத்தில் முருகன் சந்நிதியின் இருபுறங்களிலும் நவ வீரர்களில் இருவரான வீரபாகுவும் வீரமகேந்திரனும் கம்பீரமாக கதாயுதம் ஏந்தி துவாரபாலகர்களாக நிற்கிறார்கள். இந்த நவவீரர்களின் அவதாரக் கதை மிகவும் ரஸமானது.

பரமேஸ்வரன் ஆறு பொறிகளை வெளிவிட்ட காலத்தில் பக்கத்தில் அமர்ந்திருந்த பார்வதிதேவி பயந்து ஓடுகிறாள். அப்போது தேவியினுடைய காற்சிலம்புகளில் இருந்து ஒன்பது ரத்தினங்கள் சிதறி விழுகின்றன. அவற்றில் அம்பிகையின் பிம்பம் பிரதிபலிக்க, மாணிக்கவல்லி முதலான நவகன்னிகைகள் உற்பத்தியாகிறார்கள். அவர்கள் கயிலாசநாதனைக் காதல் நோக்குடன் பார்க்கவும், கர்ப்பம் தரித்து வீரபாகு, வீரகேசரி, வீரமகேந்திரன், வீரமகேஸ்வரன், வீரபுரந்தரன், வீரராக்ஷஸன், வீரமார்த்தாண்டன், வீராந்தகன், வீரதீரன் ஆகியவர்களை ஈன்றெடுக்கிறார்கள். இந்த வீரர்கள், பேருளாளன் ஆன ஆறுமுகனின் சேனாதிபதிகளாகிறார்கள். அவர்களில் பிரதானமானவன்தான் வீரபாகு; எதிர்ப்பக்கத்தில் கதையும் கையுமாகக் காவற்பணி புரியும் கோலத்தில் கம்பீரமாக நிற்கிறான்.



ராமாயணத்தில் லங்கேசனிடம் ஸ்ரீராமச் சந்திரனுக்குத் தூதுவனாகச் சென்று அசோகவனத்தை அழித்து ராட்சஸ குலத்தைக் கலக்கிவிட்டுத் திரும்பிய மாருதியைப்போல், முருகனுடைய தூதனாகச் சூரபத்மனிடம் சென்று, அவன் அனுப்பிய ஆயிரம் படைகளையும் துவம்சம் செய்துவிட்டு வெற்றி வீரனாக வந்தவர் வீரபாகு. திருச்செந்தூரில் இந்த வீரர் சக்தி மிகுந்தவர் என்றும், இவருடைய சந்நிதியில் ஆராதிப்பதினால் பலன் பெற்று வருகிறார்கள் என்றும் பிரசித்தம். இந்தச் சிலாரூபத்தின் முகத்திலே வீரமும் பயங்கரமும் பரிபூர்ணமாகக் காணலாம். கிரீடம் முதல் பீடம் வரையில் நுணுக்கமான வேலைப்பாடுகள் மண்டிக் கிடக்கின்றன. இடது கரத்தில் இயங்கும் கதாயுதத்தில் அலங்காரங்களுக்கு இடையே ஒரு நாகம் வளைந்துகொண்டு அழகாகப் படத்தைத் தூக்கிக் காட்டுகிறது.

இடதுப்பக்கத்தில் நாம் காண்பது, வீரமகேந்திரனுடைய சிலை. வீரபாகுவின் சிலையைப் போலவே அனைத்து லட்சணங்களும் அமைந்து இருக்கின்றன.




ஷண்முக விலாசம்!

திருச்செந்தூர் ஆலயத்தை மனதில் நினைத்துக்கொண்ட உடனேயே, ஆண்டவன் சந்நிதியை நோக்கியும் எல்லையற்ற கடற்பரப்புக்கு அருகிலும் அமைந்துள்ள 'ஷண்முக விலாசம்' கண் முன்னால் ஓடிவந்துதான் ஆகவேண்டும். நெஞ்சிலுள்ள விசாரங்களைக் கொள்ளைகொண்டு, விசாகன்பால் பக்தியை நிரப்பும் சக்தி ஒன்று, இங்கே அனவரதமும் இயங்குகிறதோ என்று எண்ணற்கரிய பக்தர்கள் ஆச்சர்யப்பட்டிருக்கிறார்கள். இந்த ஆனந்த ஸ்தலத்தில் பொழுது போவதுகூடத் தெரியாமல் மெய்ம்மறந்து போயிருந்தவர் எத்தனை எத்தனையோ!

இம்மாதிரியான பெருமைகளுக்கு இருப்பிடமான அந்த 'ஷண்முக விலாச'த்தின் தோற்றத்தைத்தான் கீழே காண்கிறோம். சர்க்கரையின் தித்திப்பை எழுத்திலே காண முடியாததுபோல், இந்தப் புண்ணிய பூமியின் பெருமையை அனுபவித்தே பார்க்க வேண்டும் என்பது அன்பர்களின் ஏகோபித்த கருத்து.

திருச்சீரலைவாய் என்றும், ஜயந்தி புரம் என்றும் சிறப்புப் பெயர்கள் பெற்ற திருச்செந்தூரிலே, ஸ்கந்த சுப்ரமணிய ஸ்வாமி தேவர்களுக்கு அபயம் அளித்து சூரபத்மன் முதலான அசுரர் சுற்றம் ஒழித்து வெற்றி வீரராக



வீற்றிருக்கும் ஆலயத்தைப் பாண்டிய மன்னன் விஸ்தாரமாகக் கட்டுவித்துத் திருப்பணிகள் செய்தான் என்று சொல்லப்படுகிறது. 'அழகான செம்பொன் மயில் மீதமர்ந்து' வெற்றி வீரனாகவும் வள்ளியின் இன்பக் காதலனாகவும் காட்சி தரும் 'அலைவாயு கந்த பெருமாளை' சேவிக்கத் திரளாக வந்து கூடும் பக்தகோடிகள், இந்தப் பக்கத்தில் காட்டப்பட்டிருக்கும் அமர சிற்பத்தைக் காணத் தவறியிருக்கமாட்டார்கள். பிராகாரத்தில் பார்வையான இடத்தில் இது இருக்கிறது. முருகப்பெருமான் சூரபத்மனை அனாயாசமாக வேல் கொண்டு வீழ்த்தி, துஷ்டநிக்ர காரியத்தைச் செய்து முடிக்கும் கோலம். உட்கார்ந்திருக்கும் தோரணையும், இடது காலைத் தொங்கவிட்டு வலது காலைச் சற்றே உதைத்துத் தமது வேலாயுதத்துக்கு வேகம் கொடுக்கிறார் பிரபு. ஒரு கரம் மயிலின் லகானைப் பற்றியிருக்கிறது. முகமண்டலத்தில் வீசும் ஒளி உள்ளத்தை நெக்குருகச் செய்கிறது. 'நான் பரம சாந்தன்தான்; என்றாலும்கூட இனி பொறுக்கமாட்டேன்' என்கிற விதமாகப் பார்க்கிறார் போல் - ஏன், பேசுகிறார் போலவே நமக்குத் தோன்றுகிறது.

கடும் வேகம் தோன்றும் உயிர்ச் சிற்பமாகச் சிருஷ்டித்துவிட்டார் இதை ஆக்கியவர். வேல் பாயும்போது சூரபத்மன் மட்டும் அல்ல, அவனையொத்த பதினாயிரம் பேர் வரிசையாக நின்றாலும் துளைத்துக்கொண்டு போகும் சக்தி, அதற்கு உண்டு என்று நம்மை நம்பச் செய்கிறது. முருகன் கதையில் ஈடுபட்டு பக்தியில் ஒன்றிப்போயிருந்த ஒருவரால்தான் இத்தகைய சிற்பத்தை மனதில் உருவாக்கிப் பாறையில் பிரதிபலிக்கச் செய்ய முடியும் என்று இதைப் பார்க்குந்தோறும் தோன்றுகிறது.

நான்கு கரங்களுடன், ஹாரங்கள் அணிந்த மார்பும் கிரீடம் தரித்த சிரசுமாக முருகனின் திருவுருவம் வெகு சுந்தரமாக விளங்குகிறது. நல்ல புஷ்டியுடன் காண்கிறது மயில் வாகனம். முருகன் ஆலயத்திலும் கண்டு ஆனந்தித்துவிட்டு, உள்ளக் கோயிலிலும் இருத்தி வைத்துக் கொள்ள வேண்டியதொரு சொரூபம்.



சுவாமிமலை


கு ம்பகோணத்தை அடுத்து நான்கு மைல் தூரத்தில் இருக்கும் சுவாமிமலை என்ற சுப்ரமணியரின் க்ஷேத்திரம். திருமுருகாற்றுப்படையில் முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் ஒன்றாகக் கூறப்பட்டிருப்பது.

திரு காவிரிக்கு வடபாரிசத்தில்

சமர் வேலெடுத்த பெருமாளே!

என்று சோழநாட்டில் காவிரி நதியின் கரையிலுள்ள இந்த ஊரையே 'திருவேரகம்' என்று அருணகிரியார் குறிப்பிட்டுப் பாடியிருக்கிறார்.

இந்தக் கோயிலின் பின் பிராகாரத்தில் உள்ள இரண்டு சிற்பங்கள்தான் இவ்விரு பக்கங்களையும் அலங்கரிக்கின்றன. இந்தப் பக்கத்தில் நாம் காண்பது கஜலட்சுமியின் சிலாரூபம். சிற்பத்தை ஆராய்ந்து பார்ப்பவர்கள் இது சமீப காலத்தில் செய்து முடிக்கப்பட்டதென்று எளிதில் ஊகித்துச் சொல்லிவிடுவார்கள். சிற்பாசாரியர் தமது சிருஷ்டியிலே பழங்காலத்துக்கு உரித்தான அங்க லட்சணங்களுடன்கூட ஆபரண அலங்காரங்களிலே தற்காலத்தின் சாயையும் காண்பித்திருக்கிறார்.





திருவாசியின் வேலைப்பாடுகளை விசேஷமாகக் குறிப்பிட முடியாவிட்டாலும், சுத்தமாக ஆகியிருப்பவை இவை. உருவ அமைப்பிலும்கூட சமீபகால சிற்பங்களை யொத்துக் காண்கிறது சிற்சில இடங்கள். நான்கு கரங்கள், பின் கரங்கள் இரண்டிலும் உள்ள கமலங்கள், விஸ்தாரமாக வேலைப்பாடு அமைந்த கிரீடமும் தாடங்கங்களும் - எல்லாம் இதன் சிருஷ்டிகர்த்தர் கலையில் தேர்ச்சி பெற்றவர் என்பதற்கு எடுத்துக் காட்டாக அமைந்துவிட்டன.

முகத்திலும் கவனம் செலுத்தி இருக்கிறார். ஜீவனுள்ள உருவமோ என்று சம்சயிக்கும்படி பிரமை ஏற்படுத்துகின்றன, நயனங்களும் உதடுகளில் சற்றே தோன்றும் புன்னகையும். நூற்றுக்கணக்கான அமர சிற்பங்களைப் பார்த்துப் பழகிய கண்களுக்கு, ஒரு கணம் இந்தச் சிற்பத்தில் வியக்கும்படியான அம்சங்கள் அதிகம் இல்லாததுபோல் தோன்றலாம்.

எப்படி இருப்பினும் நல்ல வேலைப்பாடுகள் மிகுந்த சிற்பம் என்பதில் சம்சயம் துளிக்கூடக் கிடையாது.

இந்தப் பக்கத்தில் இருப்பது கலைவாணியின் சிலை. தேவி உட்கார்ந்திருக்கும் பாணி சாதாரணமாகப் பழங்காலச் சிற்பங்களில் நாம் காண்பதுபோல் இல்லை. எனினும், குறைகூற முடியாதபடி லட்சணங்கள் பெற்ற உருவம்தான். வீணையை அணைத்திருக்கும் கரங்கள் வெகு இயற்கையாக அமைந்து இருக்கின்றன.

இருபுறமும் இரு அன்னங்கள் மிக நுட்ப அலங்காரங்களுடன் பெருமை தோன்ற நிற்கின்றன. கஜலட்சுமியின் சிலையைப் போலவே இந்த சரஸ்வதிதேவியின் சிலையிலும் கடைக்கண் நோக்கைப் பார்க்குந்தோறும் உயிர் பெற்று உட்கார்ந்திருக்கும் ஒரு வனிதைதானோ என்று பிரமிப்பு அடைகிறோம்.

திருவாசியும் பீடமும் கவனம் செலுத்திச் செய்யப்பட்ட வேலைப்பாடுகளுக்கு அறிகுறியாக திகழ்கின்றன. சிரத்தையுடன் செய்யப்பட்ட சிற்பம் என்பதை ஒப்புக்கொள்ள யாரும் தடை சொல்ல மாட்டார்கள்.

திருச்செங்கோடு



சேலம் ஜில்லாவில் திருச்செங்கோட்டு மலைக் கோயிலில் உள்ள சிற்பங்கள் சில, அமர வரிசையில் சேர்க்கப்பட வேண்டிய யோக்யதா அம்சங்களுடன் விளங்குகின்றன. பேரூரிலும் தாரமங்கலத்திலும் கற்களிலே காவியங்களையும் ஓவியங்களையும் சிலாரூபத்தில் செய்து காட்டிய சிற்ப மன்னர்களுடைய வேலைத் திறனையும் மனோதர்மத்தையும் இவை பிரதிபலிக்கின்றன.

ஸ்ரீசெங்கோட்டு வேலவர் சந்நிதிக்கு எதிரில், குமரேசர் சந்நிதியில் இந்தப் பக்கத்தில் சித்திரமாகக் காட்டப்பட்டிருக்கும் குறவன் சிற்பமும், எதிர்ப்பக்கத்தில் உள்ள குறத்தியின் சிற்பமும் அமைக்கப் பட்டிருக்கின்றன.

சிற்பத்தை ஒரு நிமிட நேரம் கூர்ந்து கவனித்துவிட்டால், சிந்தனைகள் பின்னோக்கி மிகப் பழங்காலத்துக்கு ஓடுகின்றன. கவிகள் வர்ணித்த கட்டுமஸ்தான குறவன், குருவிகளைப் பிடித்துக்கொண்டு 'காடை, கவுதாரி, மைனா' என்று பெயர் சொல்லி விலை கூறிக்கொண்டு செல்வதுபோலவே எண்ணுகிறோம். இடது கரம் அணைத்திருக்கும் வாய் சிறுத்த பின்னல் கூடையிலிருந்து பிடிபட்டதொரு பறவை எட்டிப் பார்க்கிறது; வலது கரத்தில் அனாயாசமாகத் தொங்குகிறது கயிற்றுச் சுறுக்கு - புள்ளினத்தின் எம - பாசம்! மார்பெங்கும் மணிமாலைகள். இடையிலும், கணுவுக்குக் கணுவும் அதே வகையில் அணிபணிகள். அவன் பிடித்த பட்சிகளின் இறகுகளே அவனுடைய தலையலங்காரம்! நெற்றியிலுள்ள திலகம், கிராதகன் ஆனாலும் அவன் ஆண்டவனை மறக்கவில்லை என்பதற்கு அறிகுறியாகத் திகழ்கிறது. சற்றே திறந்த வாய், ஓயாது தன் சரக்கை விளம்பரம் செய்கிறது போன்ற பிரமையூட்டுகிறது. நாட்டுக்குள் கிளம்பினால் இவனுடைய சத்ருக்களான தெரு நாய்களுக்கும் காட்டிலே செல்லும் போது துஷ்டப்பிராணிகளுக்கும் ஒரே

தடவையில் புத்தி சொல்லி அனுப்ப ஒரு குண்டாந்தடி வேறு கையுடன் காண்கிறது. இவனிடம் வாக்குவாதம் வைத்துக்கொள்பவர்களும், பேரம் பேசுபவர்களும் எச்சரிக்கையாகப் பட்சிபோல் பறந்துவிட வேண்டும் என்றும் இந்தத் தடியும், தடியான புஜங்களும் சொல்லாமல் சொல்கின்றன.

இந்தக் குறவனுக்கு ஏற்ற குறத்தியும் வாய்த்துவிட்டாள். சிற்பாசாரியரின் மனதில் மட்டும் அல்ல; நம் கண்ணிலும் நிரந்தரமாகப்படும் சிலாரூபமாகத்தான். இந்தச் சிற்பத்தை ஒரு விதமாகப் பார்த்தால் போதாதென்று இருபுறங்களிலிருந்து எழுதிக்காட்டியிருக்கிறார் சித்திரக்காரர். அந்த முண்டனுக்குப் பதில் சொல்லி ஆட்டிவைக்கும் திறமை இவளுக்கு உண்டு என்பதை ஒப்புக்கொள்கிறோம். தேக வலிவுடன் மனோ வலிமையையும் முகபாவத்திலே கொண்டுவந்துவிட்டார் சிருஷ்டிகர்த்தா. முதுகையும் இடையையும் சுற்றி வரும் துணியில் உறங்கும் சிறுபிள்ளையை வலது கரம் அணைத்துக் கொண்டிருக்கிறது. இடது கரத்தில் இடுக்கியுள்ள கூடையைக் கல்லிலே பின்னி,



ஒரு சுரைக்குடுக்கையையும் அதில் தொங்கவிட்டு இருக்கிறாரோ என்றுதான் வர்ணிக்கத் தோன்றுகிறது! ஏன், ஓலைப் பெட்டிகளில் இயற்கையாக விழும் பள்ளத்தைக்கூட விட்டுவிடவில்லை. கைகளை அலங்கரிக்கும் ஆபரணங்கள் பூர்ணமாக இருக்கின்றன. பக்கத்தில் நின்று, கை விரல்கள் பூராவும் வாய்க்குள் விட்டுச் சோறு சுவைக்கும் அவளுடைய சின்னப் பிள்ளையைக்கூட கவனமாகப் பூர்த்தி செய்திருக்கிறார். அந்தப் பிள்ளையின் முகத்தில் இளமையையும்



அறியாமையையும் எப்படித்தான் தோன்றும்படி செய்தாரோ என்று வியந்துபோகிறோம்.

அற்புதமான குறத்தியின் சிற்பத்திலேயும் ஒரு குறை ஏற்பட்டுவிட்டது. அதற்குச் சிற்பாசாரியர் ஜவாப்தாரியல்ல; அதைப் பார்க்க நேரிட்ட, ரசிகத் தன்மையற்ற யாரோ ஒரு பிரக்ருதி தான் அதில் ஒரு பின்னத்தை உண்டாக்கிவிட்டான்! குறத்தியின் நாசி உடைபட்டுக் காண்கிறது!

இந்தப் பக்கத்தில் இருப்பது 'பிரத்தியங்கரா' என்று அழைக்கப்படும் மகா காளியின் சொரூபம், ஈஸ்வரனுடன் ஆட வருவதுபோல் சாதாரணமாகக் காளியின் சிலைகள் இருக்கும். இதில் யுத்த சந்நத்தமாக, சிம்ம வாகனத்தில் நான்கு கரங்களும் கரங்களில் ஆயுதங்களுமாகக் காட்சி தருகிறாள் அம்பிகை. உருவிய கத்தியைப் பார்க்கும்போதே ருத்ராணியின் சக்தி புலனாகிவிடுகிறது. கோபம் ஜ்வலிக்கும் முகம்; அனல் கக்கும் விழித்த நயனங்கள்; தலை மயிர் குத்திட்டு நிற்கிறது.

சிம்ம வாகனமும் தனது எஜமானியின் அவதாரத்துக்கு ஏற்றவாறு அமைந்து காண்கிறது. வளைந்து உயர்ந்தவாறும், பிளந்து கூறிய பற்களுடன் தோன்றும் வாயும், 'உத்தரவு செய்ய வேண்டியதுதான்; ஹதம் செய்துவிடுகிறேன்' என்று கூறும் பாணியில் உள்ளன.

ஈஸ்வரனுடைய உக்கிர ஸ்வரூபமாக வீரபத்திரர் ஆவிர்ப்பவித்து சத்ரு நாசனம் செய்ததுபோல், பராசக்தியின் உக்கிர ரூபமாக அமைந்தவள் இந்தத் தேவி. பயங்கரமானதோர் எழிலுடன் கூடிய இச்சிற்பம் ஒரு முறை பார்த்தாலும் மறக்க முடியாதபடி மனதில் பதியவல்லது.

அழகோவியம்... ரதி!

திருச்செங்கோட்டுக் கோயில் வேலவர் சந்நிதியில், ஈஸ்வரனின் ருத்ர அம்சமான வீரபத்திரனின் சிலையைக் காணலாம். பேரூர்ச் சிற்பத்தைப் பார்த்த கண்களுக்கு இதில் சில பொதுவான அம்சங்கள் இருப்பது நிச்சயம் புலப்படும். பேரூர் அமர சிற்பங்களை ஆக்கிய அதே கரங்கள்தான் இதையும் ஆக்கியிருக்க வேண்டும் என்று அதே வேலைத் திறமையிலிருந்து ஊகிக்கவும் தோன்றுகிறது. முடி அலங்காரம், நாக - யக்ஞோபவீதம், காதருகில் காணப்படும் தேள் இவையே அந்த ஊகம் சரிதான் என்று ஊர்ஜிதமும் செய்கின்றன.

அக்னி வீரபத்திரரின் கரங்கள் ஒன்றில் இயங்கும் மணி, அவர் வரும் முன்னே எதிரிகளுடைய இதயங்களை பயத்தினால் அடித்துக்கொள்ளச் செய்திருக்கத்தான் வேண்டும். கண்களில் பிரதிபலிக்கும் அனல், சிற்பியின் சிற்றுளி வேலை செய்த காலத்தில் பறந்திருக்கும் தீப்பொறிகளை ஞாபகமூட்டுகின்றன. தன் எதிரியைக் கீழே தள்ளி மிதித்து நீண்ட வேலினால் துளைக்கும் காட்சி, வீரபத்திரர் சிலைகளுக்குப் பொதுவானதுதான். எனினும், இந்தச் சிலையில் வெகு அழுத்தமாக அது அமைந்திருக்கிறது. வஜ்ரதேகம் படைத்த வீரன் என்பதை உடலமைப்பு நன்கு காட்டுகிறது. எதேஷ்டமான அலங்காரங்கள் சிற்பத்துக்கு மேலும் அழகு செய்கின்றன.




சில்பி


அர்த்தநாரீஸ்வரரின் சந்நிதியில் இருக்கும் ரதியின் சிலையை இரு தோற்றங்களாக சித்திரக்காரர் எழுதியிருப்பதை இடது பக்கத்தில் காணலாம். இந்த ஆலயத்திலுள்ள சிலைகளுக்குள் மிக அழகு வாய்ந்தது இந்த அழகுத் தெய்வத்தின் உருவம்தான். இடதுபுறத்துச் சித்திரத்திலே ரதிதேவி ஒரு புஷ்பச் செண்டைக் குறிபார்த்து வீசும்போது உடலில் ஏற்படும் வளைவுகளை நன்கு காண முடிகிறது. வலது காலை ஊன்றி, இடுப்பைச் சற்று வளைத்து, மார்பை முன் தள்ளி, வலது கரத்தை உயர்த்துகிறாள். அப்போது அவளுடைய நீண்ட ஜடை அசைகிறது. இயற்கையில் எப்படி அசையுமோ அப்படியே அசைந்து நிற்பதுபோல் காண்கிறது சிற்பத்திலும்! ஜடையில்தான் என்ன நுட்பமான வேலைப்பாடுகள்! அதை அலங்கரிக்கும் மலர்களிலே மணமும் மென்மையும்தான் பாக்கி வைத்திருக்கிறார் சிற்பி.

அரையில் பட்டாடை; மார்பில் மணி மாலைகளுடன் வலது தோளையும் இடையையும் சுற்றியோடும் ஒரு புஷ்பஹாரம். புஷ்பவில்லின் மீது ஓர் அஞ்சுகம் தலையை நீட்டிக் கொத்தப் பார்க்கிறது. அந்தக் கிளியின் கண்ணில்கூட, பெண் கிளியின் கண்களின் மருட்சியைக் காணலாம். வழக்கமாக ரதியின் சிற்பங்களுடன் காணப்படும் அன்னப்பட்சியை இங்கே காணோம். அன்னத்தைப் பழிக்கும் நடைபோடும் பாவனையில் சிற்பம் தயாராகிவிட்ட காரணத்தினால் சிற்பாசாரியர் அதை விட்டுவிட்டாரோ, என்னவோ!

தலையலங்காரம் பிரமிக்கச் செய்கிறது. பாறாங்கல்லிலே பொன்னையும் நவரத்தினங்களையும் எப்படி இழைத்து விட்டார் என்று வியந்துபோகிறோம். காதின் மேற்புறத்திலிருந்து தொங்கும் கொப்பு முதல், வலது மூக்கிலே திகழும் மூக்குத்தி முத்து வரை பூர்ணமாக உருவாகி இருக்கிறதைக் கண்டு கலாரசிகர் திகைத்துத்தான் போக வேண்டும்!

நேர் பார்வையாகக் காட்டியுள்ள தோற்றம், சிற்பம் சர்வ அலங்கார பூஷிதையாக, நித்ய யௌவனமும் மங்காத மந்தஹாஸமுமாக நிற்பதாகும். இடது காலில் கொலுசும் வலது காலில் மணி, சலங்கை முதலியவையும் அணிந்திருக்கிறாள். இந்த மங்கை நாட்டியம் ஆடினால் கல்லினும் கெட்டிப்பட்ட மனம்கூடக் கூடவே ஆடும் என்று தோன்றுகிறது. விரல்களும், விரல் மடிப்புகளும்கூட வேலை செய்யப்பட்டுப் பெண்மையின் பூர்ணப் பொலிவுடன் உருவான சிற்பம். ஆகையால், நேரே பார்த்து ரசிப்பவர்கள் இரு பக்கங்களிலிருந்து பார்த்தும் திருப்தி அடையாமல் பல முறைகள் சுற்றிச் சுற்றி வந்துகொண்டு இருந்தாலும் ஆச்சரியப்பட வேண்டியதில்லை.

பீடத்தின் பக்கங்களில் செதுக்கப் பட்டுள்ள இரு கிளிகள் கொஞ்சும் பாவனையில் இருக்கின்றன.



தாரமங்கலம் கண்ட சிற்பக் கயிலை!


'பிடியுங்கள் தாம்பூலம், கொண்டு வாருங்கள் பூமிக்குக் கயிலாசத்தைக் கொட்டுமேளத்துடன், - அந்தக் கல்யாண மணிமண்டபங்களுடன்!' என்றார் பெரிய முதலியார்.

'அது அடியேனால் எப்படி முடியும்? கயிலாசம் தானாகவே இறங்கி வரவேண்டியதுதான், தங்கள் பக்திக்காகப் பரிவுகொண்டு!' என்றார் சிற்பிகளின் தலைவரான சிற்பாசாரியர்.

'ஏன் கயிலாசம் இரங்காது, இறங்காது, உங்கள் தொழில் - திறனுக்காக? எளியேனுடைய அடிமைத்திறம் என்ன செய்ய முடியும்?' என்றார் பெருஞ்செல்வரும், வணங்காமுடி மன்னர்கள் வணங்கினாலும் தாம் முடிவணங்காத முதலியார்.

சிவகாமசுந்தரியைச் சிவபெருமானுக்குத் திருநெடுமாலே தாரைவார்த்துக் கொடுத்த





தாரமங்கலத்தில் கயிலாசநாதர் கோயில் மூன்று தலைமுறைகளாய் நிர்மாணமாகி வந்தது. கடைசியாக, இந்தத் திருப்பணித் திறனைப் பார்த்துப் பரவசமானவர்கள், 'கயிலாசநாதர் தம் கயிலாசக் கூட்டுடன், அலங்காரக் கல்யாண மண்டபத்துடன் இறங்கி வந்துவிட்டாரோ?' என்றே பிரமித்துப் போயிருக்க வேண்டும்.

பிட்சாண்டவர், ஊர்த்வ தாண்டவர், விரபத்திரர் முதலான சிலைகளைக் கவனிக்கும்போதும், சந்நிதியின் துவாரபாலகர்கள் இருக்கும் இடத்துக்கு மேலும் சிவகாமசுந்தரி சந்நிதிக்கு மேலும் உள்ள அருமையான வேலைப்பாடுகளை உற்றுநோக்கும்போதும் இன்றைய மக்களும் பிரமித்துப்போகாமல் இருக்க முடியுமா?

துவஜஸ்தம்பம், பலிபீடம், நந்தி மண்டபம், அப்பால் யாளிகள் முதலியவற்றால் ஆன அலங்காரத் தூண்களோடுகூடிய மண்டபம் முதலியவற்றைத் தாண்டி உட்புறம் செல்கிறோம். இக்கோயிலின் விசேஷமான அம்சங்களில் ஒன்று யாளிகளின் வாயில் கல்லுருண்டை உருளுவது. வேறு கோயில்களிலும் இந்த அம்சத்தை அபூர்வமாய்க் காணலாம். கற்சங்கிலிகளையும் சிற்சில கோயில்களில் காணலாம். ஆனால் இந்தக் கோயிலில் உள்ள எந்தத் தூணைப் பார்த்தாலும் கற்சங்கிலி மயம்தான்; யாளி வாயில் உருளும் கல்லுருண்டைமயம்தான். இது இக்கோயிலின் ஒரு பெரும் சிறப்பியல்பு.

முந்தையப் பக்கத்தில் உள்ள படத்தில் மேற்பக்கத்து யாளி வாயில் - ஆம், ஒரே யாளியின் வாயில் - மூன்று கற்கள் உருளுவதைப் பார்த்துப் பிரமை அதிகரிக்கிறது. இது வேறெந்தக் கோயிலிலும் காணக்கிடையாத காட்சி. 'எப்படிக் கல்லை இப்படி உருளச் செய்தார்களோ?!' என்று அதிசயிக்கிறோம் அல்லவா? அதன் ஆரம்ப நிலையைக் கோயிலின் உட்பிராகாரத்துப் பின்புறத்துத் தூண் ஒன்று காட்டுகிறது.

துவாரபாலகர்கள் உள்ள இடத்துக்கு மேலும், தேவி சந்நிதியின் மேலும் உள்ள வேலைப்பாடுகளின் நடுவே மலர்ந்திருக்கும் தாமரைகளின் அடுக்கு வரிசைகளையும், அவற்றைக் கிளிகள் கொத்திக்கொண்டு இருப்பதையும்தான் பாருங்கள். தாமரைகளின் நடுவே ஒரு மொட்டு, - இதன் மீது ஒரு வளையம் உருளவும் காண்கிறீர்கள். சுற்றிலும் மற்ற வரிசைகளில் அஷ்டதிக்குப் பாலகர்கள் வாகனங்கள் மீது ஆரோஹணித்திருக்கின்றனர். ஏவின கூவின செய்யப் பணிப்பெண்களும் அருகே நிற்கின்றார். அவர்களை அப்படியே புராண உலகிலிருந்து வரவழைத்துவிட்டது போல் சிற்பி அமைத்திருக்கின்றார். நடுநடுவே கற்சங்கிலிகள் தொங்குகின்றன.

யாளிகளின் மேல் வரிசைகளில் சிறிய சிறிய குதிரைகளைப் பார்க்கிறோம், ஜம்மென்று சவாரி செய்யும் ஆசாமிகளுடன். ஏன், குதிரை கனைப்பதையும் கேட்கிறோமா? - அந்தக் கனைப்பும் அமைந்திருக்கிறது முகபாவத்திலே.

தாரமங்கலத்தில் கயிலாசநாதர் குடிபுகுந்த பின், பேரூர், பெரிய பாளையம், தாடிக்கொம்பு ஆகிய ஊர்களிலும் ஏறக்குறைய இம்மாதிரிச் சிற்பங்கள் தோன்றியபின், 'பிடியுங்கள் தாம்பூலம்' என்று சிற்பிகளைப் பார்த்துச் சொன்னால், 'இந்த நான்கு ஊர்த் திருப்பணிகள் நீங்கலாக மற்ற எந்தக் கற்பணிகளுக்கும் ஈடாகச் செய்வோம்' என்றுதான் உறுதி கூறத் தொடங்கினார்களாம்!

கல்லில்... காதல் நாடகம்!




பார்வதியும் பரமேஸ்வரனும் ரிஷப வாகனத்தில் சென்றபோது, ரிஷபம் தாகமாயிருப்பதைப் பார்வதி தெரிந்து கொண்டாள். அம்மையல்லவா? - அவ்வளவு ஜீவகாருண்யம். "நமது ரிஷபத்துக்கு தாகம் தணிக்க வேணும்" என்பதாக நாயகனை வேண்டிக்கொண்டாள். அதற்கு அவர், "அப்படியே செய்கிறேன் அம்மா. உனக்கு மட்டும் ரிஷபத்தின் மேலுள்ள கருணை, என்மேல் கோபமாக மாறிவிடாமல் இருக்க வேணுமே!" என்றார் ஏதோ புதிர் போடுவதுபோல.

'ஜீவகாருண்யத்துக்கும் சிவன் மேல் சீற்றத்துக்கும் என்ன தொடர்பு இருக்க முடியும்?' என்று கருதியவள்போல் அம்மை இசையவே, ஐயன் பளிச்சென்று தம் தலையிலுள்ள கங்கையைக் கையிலேந்திப் பிரவாகமாய் ஓடவிட்டார். ரிஷபத்தின் தாகம் தீர்ந்தது. அம்மைக்கும் பொறுமை தீர்ந்தது. ஏன் அப்படி? சிவபெருமான் எதிர்பார்த்தபடியே தேவி சீறுகிறாள். ஏனோ? - சற்று ஊகித்துப் பாருங்கள்.

'நமக்குத் தெரியாமலே ஒரு பெண்ணைத் தலைமேல் மறைத்து வைத்துக்கொண்டாரே!' என்றுதான். சீறியபின் முகத்தைத் திருப்பிக் கொள்கிறாள். இறைவனோ தம் முகத்தை அவள் பக்கம் திருப்பி ஊடல் தீர்க்க முயல்கின்றார். ரிஷபம் அவர் திருவடியின் கீழே படுத்திருக்கிறது.

புராணத்துடன் கற்பனையும், ஒரு காதல் நாடகமும் பக்குவமாய்க் கலந்து இப்படிக் கதை சொல்லும் கலைஞன் யார்? பெயர் தெரியாத, பெயர் விரும்பாத ஒரு சிற்பிதான் - ஒரு தாரமங்கலச் சிற்பம்தான்.

இச்சிற்பத்தை இன்னும் கொஞ்சம் உற்று நோக்குவோம். புராணத்துடனும் கற்பனையுடனும் நாடகத் திறனுடனும் 'இயற்கை



வருணனையும் இசைந்து கிடக்கிறது இந்தச் சிற்பக் கவிதையிலே. ஆற்று வெள்ளம் பெருகி வரும்போது மீன்கள் எதிர்நோக்கிப் போவதைப் பார்த்திருப்பீர்கள். தமக்கு ஆபத்து நேர்ந்துவிட்டது என்றுதான் அப்படி மீன்கள் தப்பிச் செல்ல முயல்கின்றன. இந்த இயற்கை - நிகழ்ச்சி சிற்பத்திலுள்ள கங்காப் பிரவாகத்திலும் பிரதிபலிக்கிறது.

இயற்கை மட்டுமா, பெண்ணியல்பும் பிரதிபலிக்கிறது. நாணத்தால் சற்றுக் கோணி நிற்கும் தேவியின் திருமேனியிலே.

ஒரு தூணில் வாலி - சுக்ரீவர் போராட்டமும். அருகே மற்றொன்றில் ராமன் வாலியைக் குறிவைத்து அம்பு எய்யும் காட்சியும் காணலாம். வாலி பக்கத்திலிருந்து பார்த்தால் ராமன் சிலை தெரியாது. ஆனால், ராமன் சிலைப் பக்கமிருந்து வாலி சிலை தெரியும். மறைந்து நின்று அம்பு போட்டு வாலியால் ஏசப்பட்ட அந்தக் கதைதான் இது.

மேலேயுள்ள படக்காட்சி, யாளி - குதிரை மயமான மண்டபம் தாண்டியதும் தோன்றும் தாரமங்கலம் கயிலாசநாதர் சந்நிதிதான்.

கல்லில் வடித்த அழகும் அறிவும்



அழகுக் கடவுள்

மன்மதன் மலரம்பு (புஷ்பபாணம்) தூவிக் காதல் விளைக்கிறான் என்பதை அறியாதார் இல்லை. இந்த அழகுமூர்த்தி கிளிமேல் அமர்ந்து மலரம்பு வீசும் பாவனையில் ஒரு சிற்பம், தாரமங்கலம் கோயில் கர்ப்பகிரகத்தின் வெளிப்பிராகாரத்தில் தெற்கு வாசல் அருகே காணப்படுகிறது.

மன்மதச் சிற்பங்கள் கிளி வாகனத்தில் ஆரோஹணித்திருப்பதுபோல் சாதாரணமாக அமைக்கப் பெறுவதில்லை. இங்கே கிளி வாயில் கடிவாளம் மாட்டிச் சேணம் அமைத்து அதில் அமர்ந்து கால்களையும் குதிரை மேல் இருப்பதுபோல் அங்கபடியில் மாட்டிக்கொண்டிருக்கிறான் மன்மதன்.

இச்சிலையில் வேலைப்பாடுகள் அதிகம் இல்லை. எனினும் 'கிளிக்குதிரை'யும் 'கிளிவாலும்' தத்ரூபம். ரொம்ப இயற்கை.

அறிவுக் கடவுள்

மன்மத ரூபம்போல் தட்சிணாமூர்த்தியின் ஞானசௌந்தரியமும் கல்லில் அவதரித்து இருக்கும் காட்சியை இவ்வூர் ஏழம்பேஸ்வரர் கோயிலில் காணலாம். ஜடை அலங்காரமும் பிரபை அலங்காரமுமாக வீற்றிருக்கும் இந்த ஞானமூர்த்திதான் இக்கோயிலில் அழகின் எல்லை. இந்த ஞான எல்லையில் பரம சாந்தத்தின் எல்லையைச் சிற்பி பிரதிபலிக்கச் செய்திருக்கும் அழகே ஓர் அலாதியழகு - ஓர் அதிசயக் கலைவளம். ரிஷபம், இம்மூர்த்தியின் காலை நக்குவதுபோல் அமைந்திருப்பது தட்சிணாமூர்த்தியை அருளின் எல்லையாகவும் சுட்டிக்காட்டுகிறது. இச்சிலை இருக்கும் கோயிலோ பாழின்


எல்லையை அடைந்திருக்கிறது. கவனிக்காமல் விட்டுவிட்டால் சிற்பச் செல்வம் உருத்தெரியாமல் ஒழிந்து போகக்கூடும்.




கோயிலின் தோற்றம்

கோபுர வாசலைத் தாண்டியதும் பார்க்கிறோமே இக்கோயிலின் உட்புறத் தோற்றத்தை. - துவஜஸ்தம்பம், பலிபீடம், நந்தி மண்டபம் முதலியவற்றையெல்லாம் இந்த ஒரே படத்தில் காணலாம்.

தனி மேடையில் ஒரு சிறு கோயில், ஒன்பது சிறிய பாறைக்கற்களால் உருப்பெற்று இருக்கிறது. மேடையின் சுற்றளவுக்குக் கோயில் கட்டுவதாகத்தான் திட்டம் போட்டிருந்தார்களாம். ஆனால், பிரதமச் சிற்பியிடம் மற்றச் சிற்பிகள், 'நாங்களும் சேர்ந்து உழைத்துத்தானே திருக்கோயில் நிகழப்போகிறது!' என்று அகம்பாவம் ததும்பச் சொன்னார்களாம். அது கேட்ட பரமபக்தரான தலைமைச் சிற்பி, ஆணவக்காரரின் உதவி அசுத்தமானதென்று வைராக்கியம் பூண்டு, தாம் ஒருவராகவே கட்டி முடித்தாராம் இந்த அதிசயத் திருக்கோயிலை. சிறு கோயில்தான். சிற்பியின் பணிவு பெரிது; பணியும் பெரிதுதானே?



கல்லிலே மூன்று கற்பனைகள்




பிட்சாண்டவருக்குப் பிட்சையிட வந்து ரிஷி பத்தினி படும் பாட்டைச் சிற்பி எப்படிக் கற்பனை செய்திருக்கிறார் பார்த்தீர்களா? இதுவும் தாரமங்கலத்து அற்புதம்தான்.

அகப்பை அன்னம் கையிலேந்திய ரிஷி பத்தினி, பிட்சாண்டவருக்கு உள்ளத்தைக் கப்பம் கட்டிவிட்டாள். இந்தப் பிரமையைத்தான் சிற்பி எப்படிக் காட்டியிருக்கிறார் தெரியுமா? கையிலுள்ள அன்னத்தைப் பறவை கொத்துவதையும் கவனியாதிருக்கிறாள்!

இவளுடைய கொண்டைச் சொருக்குத்தான் எவ்வளவு இயற்கையாக அமைந்திருக்கிறது! கைவளைகள் கங்கணங்கள், உடையின் வேலைப்பாடுகள் முதலியனவும் ரசிகர் கவனத்தை இழுக்கின்றன. காதின் மேற்புறம் அணிந்திருக்கும் கொப்பு, இது பழைய சிற்பம் என்பதை நினைப்பூட்டுகிறது.

அடுத்த பக்கத்தில் பிட்சாடனர் சிற்பத்தைப் பார்க்கிறீர்கள்...


சில்பி

தொங்கும் ஜடையில் கங்கையுடன். இந்தத் தாரமங்கலச் சிலையில். ரிஷி பத்தினிகளை மயக்கிய வசீகரம் பேரூர்ச் சிலையில் தோன்றுவதுபோல் பூர்ணமாக வெளிப்படவில்லை. அங்கேதான் சிற்பியின் அற்புதக் கைத்திறன் வெளிப்படுகிறது. ஆனால் இங்கே, பிட்சாண்டவர் சாய்ந்து நிற்கும் தோரணை அற்புதமாக அமைந்திருக்கிறது.

தாருக வனத்திலே...

இந்தச் சிலைக்குப் பக்கத்திலே திருமாலின் மோகினிக் கோலம், காலுக்கருகே இரண்டு முனிவர்களுடன். ஒரு முனிவர் ‘கையொன்று செய்யக் கருத்தொன்று நாட’ என்ற நிலையில், லிங்க பூஜை செய்கிறோம் என்பதையும் மறந்து நிலைகுலைந்து மோகினியின் மோகன சக்தியிலே உள்ளம் பறிகொடுத்திருக்கிறார்.

தாருக வனத்து முனிவர்களின் கர்வபங்கக் கதையில் முக்கிய கதாபாத்திரங்கள் மோகினியும் பிட்சாண்டவரும்.

மதுரைமா நகரிலே...

தாருக வனத்திலிருந்து பளிச்சென்று மதுரைக்கு வந்து விடுகிறோம். இடது பக்கத்தின் கீழே பாருங்கள், சித்தேஸ்வரர் யானைக்குக் கரும்பு கொடுப்பதை. கல் யானைக்குக் கரும்பு கொடுத்த அதே மதுரைத் திருவிளையாடல் புரிந்த அவரே இவர். இந்தக் கயிலாசநாதர் கோயிலுக்கும் எழுந்தருளி நவக்கிரகங்களுக்கு எதிரே காட்சி தருகிறார்.

காதலர் உலகிலே...

அதோ மன்மத பத்தினியான ரதிதேவி. மன்மதன் - சிலைக்கு அருகேதான் இருக்கிறாள், யார் மீதோ மலரம்பு எய்த வண்ணம். அவன் கிளி வாகனத்தில் வீற்றிருக்க, இவள் அன்ன வாகனத்தில் அமர்ந்திருக்கிறாள். வேறு ஸ்தலங்களில் கூந்தலைக் கொண்டையாக முடித்திருப்பவள் இங்கே ஜடை பின்னித் தொங்கவிட்டிருப்பதால், இந்த ரதி நவயௌவன சௌந்தரியமாக இருக்கிறாள் என்பது குறிப்பு. பின்னல்தான் எவ்வளவு இயற்கையாக அமைந்திருக்கிறது!


அன்ன வாகனத்தின் வேலைப்பாடு மற்ற ஊர்களில் இருப்பதுபோல் அமைந்திருக்கவில்லை. எனினும் ரதியின் சௌந்தரிய அமைப்பு வாகனத்தின் குறைபாடுகளை மறக்கச் செய்துவிடுகிறது.

காளிக்குத் தோல்வி, கலைக்கு வெற்றி!

யாரோ ஒரு செல்வன், தன் அழகான 'செல்வ நெடுமாடம்' என்று சொல்லத்தக்க மாளிகைக்கு உள்ளே செல்வங்களைக் கொட்டி வைத்திருப்பது போல் மாளிகைக்கு முன்பும் வாரி இறைத்திருக்கிறான் சில செல்வங்களை. எனினும் அவற்றைத் தீண்டுவாரில்லை! 'அப்படியும் இருக்க முடியுமா?' என்று கேட்கிறீர்களோ? தாரமங்கலத்தில் அப்படியே இருக்கிறது; அங்குள்ள கயிலாசநாதர் கோயிலில்தான்.

கவனிப்பார் இல்லாத கலைச் செல்வம்

ஆம்; சிற்பச் செல்வத்தைத்தான் குறிப்பிடுகிறேன். கயிலாசநாதர் கோயிலின் ராஜ கோபுரத்துக்கு முன்பு நுட்பமான வேலைப்பாடுகள் மலிந்துள்ள தூண்கள் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன. பயனில்லாமலும் பூமியில் புதைந்தும் கிடக்கின்றன. இவற்றைவிட வேலைப் பாடுகள் குறைந்துள்ள சிற்பச் செல்வங்கள் பொருட்காட்சி சாலையில் இடம் பெற்றிருக்க, இவற்றைத் தீண்டுவாரில்லை.



கோயிலை ஒரு பெரிய சிற்பப் பொக்கிஷமாக்க வேண்டுமென்று தயாரிக்கப்பெற்ற தூண்களில் உபயோகிக்கப் பெறாத மிச்சமா இவை? அல்லது ஏதோ ஒரு கல்யாண மண்டபம் ஒரு காலத்தில் நின்று நிலவி, பின்பு சிதைந்துபோன மிச்சம்தானா?

நடனப் போட்டி

இனி, உள்ளே திகழும் சிற்பச் செல்வங்களில் சித்தேஸ்வரர் சிலைக்குப் பக்கத்திலுள்ள ஊர்த்வ தாண்டவ மூர்த்தியின் சிலையை உற்றுநோக்குவோம். இந்தச் சிலைக்கு நேர் எதிரே உள்ள பிராகாரத்தில் அமைந்திருக்கும் காளி சிலையையும் கவனிப்போம். தாண்டவமூர்த்தியும் காளிதேவியும் நடத்திய நடனப் போட்டியைக் குறிக்கின்றன, வலது பக்கத்தில் உள்ள இரண்டு சிலைகளும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

நடனப் போட்டியின் முடிவைக் காட்டும்படியாகவே சிற்பி இந்தச் சிலைகளை அமைத்திருக்க வேண்டும். இதற்குக் காளி சிலையே சான்று. இந்த ஒரே சிலையில் இரண்டு சாட்சிகள். சிலையைப் பார்த்தவுடன், தானே இரண்டு சான்றுகளையும் எளிதாய்க் கண்டுகொள்ளலாம்.

முதலாவது சாட்சியைக் காளியின் கண்களிலேயே கண்டுகொள்ளலாம். கண்களில் காளிக்கு உரிய அஞ்சாத, நிமிர்ந்த, நேர்கொண்ட பார்வை இல்லை. காளித்தாயின் கண்கள் கீழ் நோக்குகின்றன.

அடுத்த சாட்சியையும் அதிவிரைவில் கண்டுகொள்ளலாம். காளியின் கைகள் சோர்ந்து தொங்குவதுபோலத் தோன்றுகின்றன. ஊன்றி நோக்கினால் 'தோல்வியுற்று கைகளைப் பிசைந்து கொண்டிருக்கிறாள்' என்றுதான் எண்ணத் தோன்றும்.

காளிதேவிக்கு இந்தத் தோல்வியை அருளிய ஊர்த்வ தாண்டவமூர்த்தியின் சிலை ஏறக்குறைய எல்லா





அம்சங்களிலும் பேரூர்ச் சிலைபோல் உருப்பெற்று இருக்கின்றது. கற்களைக் குடைந்து இயற்றிய சிற்சில வேலைப் பாடுகளைத்தான் இச்சிலையில் காண முடியாது.

இந்தச் சிலையை அமைத்துப் பழகிய கைத்திறன், இதன்பின்பே பேரூர் ஊர்த்வ தாண்டவரை உருவாக்கியுள்ளது என்று ஊகிக்கலாம்.

நாமக்கல் ஆஞ்சநேய தரிசனம்...

நாமக்கல் என்றதுமே நமது கலைச் செல்வத்தின் நினைவுகளுடன், சரித்திரப் பிரசித்தியும் ஸ்தல புராணப் பிரசித்தியும் பெற்ற க்ஷேத்திரத்தின் நினைவுகளும் வருகின்றன. நமது கலைகளிலே பிரசித்தமாக உலக ரசிகர்களெல்லாம் வியக்கும்படி இன்றும் நின்று நிலவுவன, நமது நாட்டுச் சிற்ப விசித்திரங்கள்தாம். இந்த விசித்திரச் செல்வங்களில் நாமக்கல் க்ஷேத்திரத்தில் எழுந்தருளி இருக்கும் ஆஞ்சநேயர்களுக்கும் ஒரு ஸ்தானம் உண்டு. ஆம்; இந்த இரண்டு பக்கங்களிலும் ஆஞ்சநேயர்கள் (அனுமார்) காட்சி தருகிறார்கள்.





பெரியவரும் சின்னவரும்

நாமக்கல்லில் சாளக்கிராம மலையும், கமலாலயக் குளமும் இருக்கின்றன. சாளக்கிராம மலையின் இடது பக்கத்தில் உள்ள இடத்துக்குக் 'கோட்டை' என்றும், வலது பக்கத்தில் உள்ள இடத்துக்குப் 'பேட்டை' என்றும் பெயர். கோட்டையின் எடுப்பு கம்பீரமாக இருக்கிறது. மலைமேல் இடிந்த அரண்மனைகளும் மருந்து கிடங்குகளும் காணப்படுகின்றன. இவற்றைக் குறிக்கும் சரித்திர வரலாற்றை நாம் தெரிந்துகொள்ள இருக்கிறோம். இக்கோட்டையில் ஓர் ஆஞ்சநேயர் இருக்கிறார். பெரிய ஆஞ்சநேயர், பதினேழு அடி உயரம்.

இவ்வூருக்கே ஜீவாதாரமானது கமலாலயக் குளம். இதைக் 'கமலாலய தீர்த்தம்' என்பர். உள்ளபடியே தீர்த்தம் விசேஷமானதுதான். கோட்டையில் உள்ளவர்கள் மலையின் கீழ்ப்பாகத்தைக் கடந்து கமலாலயத்தில் இருந்துதான் தண்ணீர் கொண்டுபோக வேண்டும். இக்கமலாலயத்தின் நடுவே நீராழி மண்டபம் இருக்கிறது. நீராழி மண்டபத்தின் பின்புறம் கமலாலயக் கரையிலுள்ள அரசமரத்தின் பக்கத்திலுள்ள மண்டபத்திலே ஓர் ஆஞ்சநேயரின் சிலை இருக்கிறது. இவர் ஐந்து அடி உயரம்தான்.



வேலைப்பாடுகளும் உருவ அமைப்பும்

கோட்டையிலுள்ள ஆஞ்சநேயரே மிகவும் பிரசித்தமானவர். 'நாமக்கல் அனுமார்' என்று பிரசித்தமாகச் சொல்வது, நாமக்கல் கோட்டை மேல்புறத்தில் எழுந்தருளியிருக்கும் பெரிய ஆஞ்சநேயரைத்தான். எனினும், ஐந்து அடி உயரமுள்ள சிறிய ஆஞ்சநேயர் நுட்பமான வேலைப்பாடுகளினாலும் பிரபை அலங்காரங்களினாலும் சிறந்து விளங்குகிறார்.

இச்சிலை 'திருவாசி'யோடு இருக்கிறது. இவ்வூரிலுள்ள மிகவும் நுணுக்கமான வேலைப்பாடுகளோடுகூடிய முக்கியமான சிலைகளில் இதுவும் ஒன்று.

'திருவாசி'யின் இருபுறத்திலும் உள்ள யாளிகள் மீது சங்கு-சக்கரங்கள் இருக்கின்றன. வால் பிரபையைச் சுற்றி வளைவாக வந்து நுனியில் மணியுடன் இருக்கிறது. இடையில் பிச்சுவா கத்தியும் சலங்கை மாலைகளும் காணப்படுகின்றன.

கோட்டையிலுள்ள பெரிய ஆஞ்சநேயருடன் சின்னவரை ஒப்பிட்டுப் பார்த்துப் பார்த்து ரசிக்க வேண்டும். அந்த உயரமான லட்சணங்களை ரசிப்பதுடன், இந்தக் 'கட்டை குட்டை'யான உருவ அமைப்பையும் இனிது ரசிக்க இயலும்.

உக்கிரமூர்த்தி

இனி, கோட்டையிலுள்ள பெரிய அனுமாரை உற்று நோக்குவோம். அபிஷேகம் செய்து வடை மாலை சாத்துவதென்றால் லேசான காரியமல்ல. செல்வர்களுக்குத்தான் இயலும். ஏழைகள் மானசிக அபிஷேகம் செய்து திருப்தி அடைய வேண்டியதுதான். இவ்வளவு பெரிய உருவத்துக்கு வெள்ளிக் கவசம் தயாரிக்கப் பெற்றிருக்கிறது.

இந்தப் பெரிய ஆஞ்சநேயர் இளித்த கோரப்பற்களும் 'முழித்த' கண்களுமாய் அரக்கரைப் பயமுறுத்திய ஆவேச நிலையில் காட்சி தருகிறார். தனியாக இந்தக் கோயிலுக்கு வந்து பார்த்துவிட்டால் நெஞ்சு 'திக் திக்' என்று திகிலடையக்கூடும். அத்தகைய பயபக்தி விளைக்கும் உக்கிரமூர்த்தியாகக் காட்சி தருகிறார்.

இந்த அனுமார் கோயிலில் தலைக்கு மேல் மண்டபம் இல்லை. ஒருவரும் இவர் தலைக்கு மேல்பாகத்தில் மண்டபம் கட்டத் துணியவில்லை. 'நான் எப்போதும் வெயிலில் காய்வேன், மழையில் நனைவேன்' என்று சொல்லிவிட்டதாம் இந்த உக்கிர சொரூபம். அப்படிச் சொல்வதுபோலத் தோன்றுகிறதாம் இன்றும், இன்றைய பக்தர்களுக்கு.

இந்த ஆஞ்சநேயருக்கும் தலைக்குமேல் வால் சுருண்டு இருக்கிறது; வால் நுனியில் மணி கட்டியிருக்கிறது. பிச்சுவா கத்தியும் குஞ்சலங்களும் இடையை அலங்கரிக்க - பிரம்மசாரி அல்லவா? - மார்பை அலங்கரிக்கிறது பூணூல்.

அனுமாருக்கு நேர் எதிரே நரசிம்ம ஸ்வாமி கோயில் இருக்கிறது. நரசிம்ம சொரூபம் மலையைக் குடைந்து நிர்மாணிக்கப் பெற்றிருக்கிறது.


நரசிம்ம ஸ்வாமி கோயிலிலிருந்து நோக்கினால், அந்த ஸ்வாமியின் திருவடிகளையே தரிசித்து அவர் திருநாமத்தையே மனனம் செய்து கொண்டிருக்கிறாராம் அனுமார்.

அழகுத் திருப்பணி

நாமக்கல் கோட்டையிலுள்ள கோயிலில் மிக நுட்பமான வேலைப்பாடு அமைந்த சிலை ஸ்ரீலட்சுமிநாராயண மூர்த்தி. ஆஜானுபாகுவான அழகுத் தோற்றம். லட்சுமியை மடிமேல் வைத்து அணைத்தவாறு அமைந்திருக்கும் சேர்த்தியழகு.

ஆபரணங்களுக்கும் ஆபரணம்

காதில் மகர குண்டலங்கள், '*மகரம் சேர்குழை இருபாடு இலங்கி ஆட*' என்ற ஆழ்வார் வாக்கை அருமையாக நினைப்பூட்டுகிறது. கழுத்திலே முத்தாரமும் சங்கிலி மாலையும், 'ஆபரணங்களுக்கும் ஆபரணம்' என்று வருணிக்கப் பெறும் அழகுத் தெய்வத்தின் அழகைத் தூக்கிக்காட்ட உதவுகிறது.



சங்கு சக்கரங்கள்

கையிலுள்ள சங்கு சக்கரங்களிலும் நுட்பமான வேலைப்பாடுகள். இவையும் சிலையின் அழகை அதிகரிக்க உதவுகின்றன. சங்கு சக்கரங்கள் துஷ்ட நிக்கிரக சந்தர்ப்பங்களிலேதான் வீர சின்னங்கள், ஆயுதங்கள். மற்றச் சமயங்களில் எல்லாம் அழகுச் சின்னங்கள், ஆபரணங்கள்! இது விஷ்ணு பக்தர்களின் கொள்கை. இந்தக் கொள்கையையும் இந்த லட்சுமிநாராயண மூர்த்தியின் சங்கு சக்கரங்களிலுள்ள அழகிய நுட்ப வேலைப்பாடுகள் நினைப்பூட்டுகின்றன.

செல்வியும் செல்வனும்

லட்சுமியின் பாதத்தைத் தாமரை மலர் தாங்கி இருப்பதுபோல் அமைந்திருக்கிறது. 'செந்தாமரைப் பொகுட்டில் செம்மாந்து வீற்றிருக்கும் நந்தா விளக்கு' அல்லவா லட்சுமிதேவி!



இந்தச் செந்தாமரைச் செல்வியை அணைத்துக்கொண்டு சாந்தம் ததும்ப அபயமளிக்கும் ஸத்வ குண பூஷணரின் அழகை என்னென்பது?

இந்த அழகு மூர்த்தி அமர்ந்திருக்கும் பீடங்களும் நல்ல வேலைப்பாடுகளுடன் அமைந்து, 'இதோ அழகுச்செல்வம்!' என்று தாம்பாளத்தில் ஏந்திக் காட்டுவது போலத் தோற்றம் அளிக்கின்றன.

லட்சுமியின் தபோவனம்

நரசிம்ம மூர்த்தி, ஹிரண்ய வதம் செய்தாரல்லவா? அந்தப் பயங்கர மூர்த்தியைப் பார்த்துக் கலங்கிப்போன தேவர்கள் ஸ்ரீ லட்சுமிதேவியைப் பார்த்து, "அன்னையே, நீதான் உன் குழந்தைகளாகிய எங்களுக்காகக் கருணை கூர்ந்து பகவானைச் சமாதானப் படுத்த வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார்களாம். லட்சுமி தேவியின் பிரீதிக்காகவும், நாமக்கல்லில் நரசிம்ம மூர்த்தியாகவும் ஸௌம்ய ரூபியாகவும் இருந்து வருகிறாராம்.

'கமலாலயம்' என்ற தடாகத்தின் கரையிலேதான் லட்சுமிதேவி ஸௌம்ய மூர்த்தியாகப் பகவானைத் தரிசிக்கத் தவம் கிடந்தாளாம். இந்தப் பிரதேசம் லட்சுமிதேவியின் தபோவனமாக இருந்ததென்று நாமக்கல் ஸ்தல புராணம் தெரிவிக்கிறது.

தலபுராணமும் ரங்கநாதரும்

அத்தியாய முகப்பில் இருப்பது, நீங்கள் முன்பு கண்ட மலைக்கோட்டையின் நேரான பின்புறத் தோற்றம். மலையின் இரு பாகங்களிலும் குடைந்து இயற்றிய குகைக் கோயில்கள் உண்டு. இடதுபுறம் துவஜஸ்தம்பம் தெரியும் இடம்தான் பேட்டையிலுள்ள ஸ்ரீரங்கநாதர் கோயில். வலதுபுறம் மலையோரமாய் அரசமரத்தின் இடையே காணும் கோபுரம் ஸ்ரீ நாமகிரி அம்மனுடைய கர்ப்பக்கிரகத்தின் விமானம்.

இந்த இரண்டு கோயில்களுக்கும் இடையே மலையைக் குடைந்து வழி செல்லுகிறதென்று மக்கள் கூறுகின்றனர். இவ்விரண்டு கோயில்களும் பல்லவர் காலத்துக் குகைக் கோயில்கள்.

மலைக்கோட்டையில் எதிரிகள் நுழைந்துவிட்டால் பின்புறமாய்த் தப்பிச் செல்லக் கள்ள வாசல் இருந்தது. அதை இப்போது மூடிவிட்டார்கள்.

மலைக்கோட்டையின் வடக்குப் பாகம்

இந்த ஸ்ரீரங்கநாத ஸ்வாமியைக் குறித்தும் ஸ்தல புராணம் பிரஸ்தானம் செய்கிறது. பகவான் தம் கருணைச் சிறப்பினால் தமது உயர்ந்த ஸ்ரீரங்கநாத சொரூபத்தை ஆஞ்சநேயருக்குக் காட்டி, 'நான் இங்கே லட்சுமிதேவியோடு வசிக்கப்போகிறேன்' என்றாராம்.

ஸ்ரீசைலம் என்கிற நாமக்கல் மலையில் நரசிம்ம மூர்த்தியை விஸ்வகர்மா என்ற தெய்வத் தச்சன் தரிசித்து அந்த மூர்த்திக்கும் ஸ்ரீநாமகிரி அம்மனுக்கும் ஸ்ரீரங்கநாதருக்கும் ஸ்ரீரங்கநாயகிக்கும் கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம் முதலான திருப்பணிகளைச் செய்து முடித்ததாகவும் ஸ்தலபுராணம் சொல்கிறது.

ஒரு காலத்தில் நமது தச்சர்கள், தங்கள் தொழில் திறமையால் தொழிலின் மேன்மையால் தெய்வத் தச்சர்களாய்த் திகழ்ந்தார்கள் என்பதற்கு, 'நாமக்கல்' என்ற ஸ்தலத்திலுள்ள வேலைப் பாடுகளும் நல்ல காட்சி தருகின்றன.

நாமக்கல்லில் ஸ்ரீவைகுண்டம்


'வராக ரூபியாகிப் பூமியையும் வேதங்களையும் தாங்கிக் காப்பாற்றிவிட்டோம். இனிமேல் கொடிய ஹிரண்யனை ஒரு கொடிய ரூபம் கொண்டு கொன்று உலகத்துக்குச் சாந்தியும் சமாதானமும் அளிக்க வேண்டும். கொடுமையைக் கொடுமையால் ஒழித்த பின்பும், அந்த மகாபலி வேறு இருக்கிறான்; நமது பூமியைத் தனது என்று அபிமானித்து வருகிறான். பரமசாந்தக் குள்ளனாகி, அந்த மகாபலத்தையும் சமாளிக்க வேண்டியிருக்கும்' என்று எண்ணமிடுகிறார் ஸ்ரீவைகுண்ட நாராயணர், ஆதிசேஷன் மேல் யோக நித்திரை கலைந்து எழுந்து உட்கார்ந்துகொண்டே.

சாந்தமூர்த்தியின் கோர ரூபம்

அந்தச் சேஷ சிம்மாசனத்துக்கு இருபுறங்களிலும் நின்றுகொண்டு இருக்கிறார்கள் பரமேஸ்வரனும் பிரம்மதேவனும். இங்கு சொன்னபடி 'பெருமாளுக்கு ஓர் எண்ணம் உதயமாக வேணுமே' என்ற எண்ணத்துடன், அது குறித்து விண்ணப்பம் செய்துகொள்ளப் போகிறவர்களைப் போல.

பலிச்சக்கரவர்த்தியைப் பற்றிய கவலைகூட இவர்களுக்கு இப்போது அவ்வளவாக இல்லை. ஹிரண்ய சக்கரவர்த்தியின் சர்வாதிகார ஹிம்ஸை பொறுக்காமல்தான் தேவர்களோடு ஈசனும் பிரம்மனும் வைகுண்ட லோகத்துக்கு வந்து சேர்ந்தார்கள்.

ஈசன் கொடுத்த வரபலம் கொண்டே ஹிரண்யன் ஆர்ப்பாட்டம் செய்துகொண்டு இருக்கிறான். அந்த வரங்களின்படி ஹிரண்யனை மனிதனும் கொல்ல முடியாது; மிருகமும் கொல்ல முடியாது. ஆகவேதான் அந்த வரபலத்துக்குப் பங்கம் வராமலே





வைகுண்டநாதர் மனித உடலும் சிங்கத் தலையும் தரித்து நரசிம்மமூர்த்தியாகத் தோன்றுகிறார். எங்கே? எந்த லோகத்திலோ? எந்த யுகத்திலோ? எந்த மனோபாவத்திலோ?

நாமக்கல்லின் சமதரிசனம்

இந்த கலியுகத்திலேதான், இந்த லோகத்திலேதான், நாமக்கல்லில்தான், இங்கேயுள்ள சிற்பத்தில்தான். மேல்புறம் சூரிய சந்திரர்கள்; கீழே பரமேஸ்வரனும் அவர் பாதத்தில் மார்க்கண்டேயனும். நடுவில் நாராயணமூர்த்தி, பாதத்தில் பூமிதேவியுடன். மறுபக்கம் பிரம்மாவும் நரசிம்மமூர்த்தியும்.

இந்தக் கோயிலை மும்மூர்த்தி ஸ்தலம் என்பர். மும்மூர்த்திகளும் ஏகபீடத்தில் சமமாயிருப்பதாக ஐதிகம்.

ஹிரண்ய கதைக் காட்சிகள்

நரசிம்மமூர்த்தி ஹிரண்யனுடன் யுத்தம் செய்வதும், ஹிரண்யனை மடியில் வைத்து வதம் செய்வதும் இங்கே சிலைகளில் நடைபெறுகின்றன.

இதற்கு நேரேயுள்ள சந்நிதியில் நரசிம்மமூர்த்தி ஹிரண்ய சம்ஹாரத்தை முடித்துக்கொண்டு ரத்தம் தோய்ந்த கைகளோடு சாந்தம் அடைவதாக ஐதிகம். இது மூலஸ்தானமாக இருக்கிறது.

இந்தக் குகைக்கோயிலின் மறுபக்கம், பலிச்சக்கரவர்த்தி கதை சித்திரிக்கப் பெற்றிருக்கிறது. வேறொரு பக்கம் பூமிதேவியை மடியில் தாங்கி முகத்தின் நுனியில் நான்கு வேதங்களையும் தாங்கி வருவதாக வராக மூர்த்தியைச் சித்திரித்திருக்கிறார்கள்.

நரசிம்ம ஸ்வாமி குகைக்கோயிலின் வடக்குப் புறத்தில் ஸ்ரீவைகுண்ட நாராயண மூர்த்தியின் சிற்பம் இருக்கிறது. இந்த மூர்த்தி ஆதிசேஷன்மேல் உட்கார்ந்த தோரணையில் இருக்கிறார்.

இச்சிற்பத்தில் அதிக நுட்ப வேலைகள் இல்லை. எனினும், வைகுண்டநாதர் சேஷ சயனத்தில் உட்கார்ந்திருக்கும் தோரணை அழகாயிருக்கிறது. நரசிம்ம அவதாரம் செய்ய வேண்டும் என்ற சங்கல்பத்துடன் யோக நித்திரை கலைந்து புறப்படுவதுபோல் பாவனை செய்துகொள்ளலாம்.

இந்த வைகுண்ட நாராயண மூர்த்தியின் இருபுறமும் படைப்புக் கடவுளான பிரம்மனும், அழித்தல் கடவுளான பரமேஸ்வரனும் நின்று இருப்பதும் அழகாய் அமைந்திருக்கிறது.

பல்லவச் சிற்பம்

ஹிரண்ய ஹிம்ஸை பொறுக்காமல் வைகுண்டலோகம் வந்து சேர்ந்திருக்கும் இந்தத் தேவப் பிரதிநிதிகளின் உள்ளத்தைத் தம் உள்ளத்தால் அறிந்து கொண்டு, சேஷ சயன மூர்த்தி உக்கிர நரசிம்மமூர்த்தியாவோம் என்ற எண்ணமிடும் தோரணையில் அமைந்திருக்கிறது இந்தப் பல்லவர் காலத்துச் சிற்பம்.

இப்பல்லவர் காலச் சிற்பங்களைப் பார்த்தவுடன் தெரிந்துகொள்ளுமாறு செய்வது யக்ஞோபவீதமாக உள்ள ஆபரணத்தின் அமைப்புமுறை. இம்மாதிரி ஆபரணம், 'மாமல்லபுரம்' என்கிற மகாபலிபுரத்திலுள்ள சிற்பங்களில் காணலாம். பல்லவ மகாராஜ்யத்தின் துறைமுகமும் கலை வளர்ப்புப் பண்ணையும் அல்லவா மாமல்லபுரம்?

அம்மன் கோயிலும் மலைக்கோட்டையும்

கோட்டையில் பெரிய அனுமார் கோயிலின் எதிர்ப்புறத்திலுள்ள நாமகிரி அம்மன் கோயிலின் வெளிப்புறத் தோற்றத்தையும் படத்தில் பார்க்கிறீர்கள். ராஜகோபுரம் இருக்க வேண்டிய இடத்தில் கோபுரம் இல்லாமல் வெளி வாசல் தெரிகிறது. இதன் முன், 'கம்பத்தடியான்' என்கிற க்ஷேத்திர பாலகனை அமைத்திருக்கிறார்கள்.


கீழே ஆஞ்சநேயரும், கோயிலை நோக்கியவாறு கருடனும் அமைந்து இருக்கிறார்கள். மற்ற இரு பக்கங்களில் சங்கு சக்கரங்கள். சிவன் கோயிலில் நந்தி இருக்கும் இடத்தில், விஷ்ணு கோயிலில் கருடன் இருக்கிறதல்லவா அப்படித்தான் இங்கும் அமைந்திருக்கிறது.

படத்தின் வலது பக்கத்தில் தேர் முட்டி. கோயிலுக்குள் நுழைந்ததும் நேர் எதிரே துவஜஸ்தம்பம். பிறகு நேராகச் சென்றால் நரசிம்ம ஸ்வாமியின் பாதம் தென்படுகிறது. இந்த நேரான சந்நிதிதான் நரசிம்ம ஸ்வாமியின் சந்நிதி.

நரசிம்ம ஸ்வாமியின் பாதம் உள்ள மண்டபத்தின் மேல் பக்கத்தில் நின்று கொண்டு கோயிலின் வெளிப்பாகத்தை நேராகப் பார்த்தால், பயபக்தியோடு கூப்பிய கரங்களுடன் இந்த நரசிம்ம பாதத்தைத் தரிசித்துக் கொண்டிருக்கும் ஆஞ்சநேயரை நாம் தரிசிக்கலாம்.

ஒன்றாகக் காண்பதே காட்சி!

'இந்து சமயம்' என்று காஷ்மீரம், நேபாளம் முதல் கன்னியாகுமரி வரை நாம் ஒன்றாகக் காண்கிறோமே ஒரு காட்சி, ஒரு தத்துவ - கலாசாரக் காட்சி - இது உண்மையில் ஒன்றல்ல, பலவுமல்ல! ஒருமையில் பன்மை, பன்மையில் ஒருமை. ஒருமை, இருமை, பன்மை, இன்மை எல்லாம்தான்! 'என்ன? ஒரே வேதாந்தமாக இருக்கிறதே' என்கிறீர்களா? தயவுசெய்து, அனுமார் சஞ்சீவி மலையை வைத்துவிட்டுப் பிறகு தூக்கிவந்த சாளக்கிராம மலையைப் போய்ப் பார்த்து வாருங்கள். அந்த மலையில் இந்த உண்மையைச் சிலையாக்கிக் கலையாக்கி வைத்து இருக்கிறார்கள். சேலம் ஜில்லா நாமக்கல்லில்தான் ஐயா!



அரியும் சிவனும் ஒன்று!

'மும்மூர்த்தி ஸ்தலம்' என்று சொல்லும்படி இங்கே மும்மூர்த்திகளும் ஏக பீடத்தில் சமமாக இருக்கிறார்கள் என்பதை ஏற்கெனவே குறிப்பிட்டோம். சமரசத்துக்கு இன்னும் ஒரு சாட்சி, பெரிய அளவில் மலையில் செதுக்கப் பெற்றிருக்கும் ஹரி-ஹர ரூபம். வைகுண்ட நாராயணன் இங்கே சங்கரநாராயணனாகக் காட்சி வழங்கி, நமது ஜீவாதார சமரச நன்னிலைக்குச் சாட்சியாகிறார்.

இவ்வூரிலே மலையில் செதுக்கப் பெற்றுள்ள சிற்பங்களில் இந்தச் சிலைதான் வேலைப்பாடுகள் உள்ளது. கிரீடமே தக்க சான்று. தொங்குகிற கை, பாம்பைப் பிடித்திருக்கிறது. அதற்குப் பதில் கையில் சங்கு இருப்பதாகப் பாவித்துக்கொண்டு, மறு கை இடையில் வைத்திருப்பதையும் பார்த்துவிட்டால் 'பாண்டுரங்கன்' ஞாபகம் வந்து, 'ஜே ஜே விட்டல்' போடத் தோன்றுகிறது.

எனினும் உற்று நோக்கினால் ஹரி-ஹர ரூபம்தான், சங்கரநாராயணன்தான், சைவ வைஷ்ணவ ஒருமைக் காட்சிதான்! 'அரியும் சிவனும் ஒண்ணு, அறியாதவன் வாயிலே மண்ணு!' என்று பாமரத் தமிழனும் சொல்கிறானே, அந்த 'ஒன்று'க்கு ஒரு கலைச் சாட்சி.

பல்லவர் சமரசக் கலை

வலது கைமேல் யக்ஞோபவீத ஆபரணம் செல்லுகிறதே அந்த அறிகுறி, இதையும் 'பல்லவச் சிற்பம்' என்று பிரகடனம் செய்கிறது.

பல்லவர் காலத்தில், சைவ-வைஷ்ணவ சமரசம் நன்கு உணரப்பெற்று இருந்தது. மகாபலிபுரம் என்கிற மாமல்லபுரத்தில் பகீரதன் சிவபெருமானின் அருளால் கங்கைகொணர்ந்த சிற்பத்துக்கு அருகே, கண்ணன் கோவர்த்தனகிரியைக் குடையாகப் பிடித்த லோக உபகாரத்தையும் சிற்பமாய்க் காட்டி இருக்கிறதல்லவா? அதே சமரச உணர்ச்சியை நாமக்கல் - சங்கரநாராயண உருவத்திலும் அதிசயமாய்க் காண்கிறோம்.

இந்த மூர்த்தியை வழிபடுவோர் இந்த ஒரே ரூபத்திலுள்ள ஈசனையும் மாயனையும் பார்த்து ஆச்சரியப் படுவதாகச் சிலையில் அமைத்து இருப்பதும் சிந்தனைக்கு உரியது.

ஸ்ரீரங்கநாதர் கோயில்

மேலே சொன்ன சங்கரநாராயண உருவம், ஸ்ரீரங்கநாதர் கோயில் இருக்கிறதே அதிலுள்ள சயன மூர்த்தியின் திருவடிப் பக்கமாய் வெளியே மலையில் இருக்கிறது. ஸ்ரீரங்கநாதர் கோயில் இருக்கும் இடம் பேட்டை.


படிக்கட்டுகளில் ஏறி நேராகச் சென்று சயனக்கோலத்தில் இருக்கும் ஸ்ரீரங்கநாதரைத் தரிசிக்கலாம்.

துவஜஸ்தம்பத்தின் இடது பக்கத்தில் உள்ள கோயில் அம்மன் கோயில் - அதாவது லட்சுமிதேவியின் கோயில். அதன் பக்கத்தில் மடைப்பள்ளி.

சாதாரணமாக ஸ்ரீரங்கநாத ஸ்வாமி சேஷசயன மூர்த்தி. இந்த ரங்கநாதரோ கார்க்கோடகன் மீது பள்ளிகொண்டிருக்கிறார்.

மடைப்பள்ளியின் பக்கத்திலிருந்து இடதுபுறம் முடிய ஒரு கோடு தெரிகிறது. இது, கார்க்கோடகன் கமலாலயத்தில் இருந்து தீர்த்தம் கொணர்ந்து திருவரங்கரைப் பூஜித்த வழி என்று பக்தர்கள் நம்புகிறார்கள்.

மலையில் இயற்கையாகக் கிடக்கும் கோடு கதைக்குப் பொருத்தமாக அமைந்துவிட்டது! அல்லது, அந்தக் கோடு கிழித்த போக்கிலே புராணம் போயிருக்கிறது.


சில்பி

கார்க்கோடகன் கதை

கார்க்கோடகன், ஸர்ப்பராஜா ஆதிசேஷன், வாசுகி முதலான மகா ஸர்ப்பங்களின் சகோதரன். 'கத்ரு' என்ற ஒரே தாய் வயிற்றுக் குழந்தைகளாம் இந்த மகா ஸர்ப்பங்களெல்லாம். 'கத்ரு' தாய்ப் பாம்பல்ல, ரிஷி பத்தினி. தந்தை காசியப மாமுனி.

கார்க்கோடகன் துஷ்ட புத்தியுடன் எல்லோருக்கும் ஹிம்சை செய்ததால் காசியப முனிவர் பிள்ளையென்று பாராமல் சாபம் கொடுத்தார். அந்தச் சாபம் நிவர்த்தியாக வேண்டுமென்று கார்க்கோடகன் பாற்கடல் நாதனைக் குறித்துத் தவம் செய்தான்.

கருணைக் கடலான பகவான் பிரசன்னமானதும், அகிம்சைப் பாம்பாகிவிட்ட கார்க்கோடகன், “நீர் இங்கு (நாமக்கல்லில்) அடியேன்மீது சயனித்துக்கொண்டு அடியேனையும் அடியார்களையும் ஒருங்கே அனுக்கிரகிக்க வேண்டும்” என்று பிரார்த்தித்தான்.

சேஷசாயி நாமக்கல்லில் கார்க்கோடக சாயியாகக் காட்சி வழங்குகிறார். சேஷனையும் கார்க்கோடகனையும் பக்த கோடிகளையும் பட்சபாதமில்லாமல் ஒன்றாகப் பார்த்துக் கருணை புரிகின்றார்.


காஞ்சியில் கலைச் செல்வங்கள்!


காஞ்சியிலுள்ள சிற்பச் செல்வங்களை, விஷ்ணு காஞ்சி, சிவ காஞ்சி, ஜைன காஞ்சி என்று மூவகையாகப் பிரித்துப் பேசலாம். காஞ்சியிலுள்ள விஷ்ணு கோயில்களில் இன்று செல்வாக்கிலே சிறந்தது, ஸ்ரீவரதராஜ ஸ்வாமி கோயில்.

இந்தக் கோயிலின் ராஜகோபுரத்தைத் தாண்டியதும் உயரமான தூண்களுடன் கூடிய நாலுகால் மண்டபங்களைக் காணலாம். இடது பக்கத்திலே, பிரசித்தி பெற்ற ரதி - மன்மதனோடு கூடிய நூற்றுக்கால் மண்டபத்தை முன் படிக்கட்டுகளுடன் காண்கிறோம்.

சுதர்சனம் என்ற சக்கரத்தாழ்வார்

இக்கோயிலின் அதிமுக்கியமான சிற்பம் சக்கரத்தாழ்வார் - அதாவது சுதர்சனம். இது இக்கோயிலின் தனிப்பெருஞ் சிற்பம் - மூலவர். சக்கரத்திலே ஓர் ஆள் நிற்பதுபோல் அவ்வளவு பெரிய ஆக்ருதியில் அமைந்து இருக்கிறது சிற்பம்.





வேலைப்பாடுகள் அருமையாகவும் நுட்பமாகவும் அமைந்திருக்கின்றன. பார்க்கப் பார்க்க, மகா சக்தி வாய்ந்த சுதர்சனத்துக்குப் பொருத்தமான சிலா ரூபம், சக்தியும் பக்தியும் ஒருங்கே உருவாக்கிய உயர்தரச் சிற்பம் இது என்று தெரியவரும்.

பதினாறு கைகள்; பதினாறு கைகளிலும் பதினாறு ஆயுதங்கள்; மூன்று கண்கள் துஷ்டநிக்ரக சக்தியின் அறிகுறிகளாய் அமைந்துள்ளன.


இன்னும் பாருங்கள். தலையைச் சுற்றி ஜ்வாலைகள். சக்கரத்தின் நாலு மூலைகளிலும் ஜ்வாலைகள் - தீமையைச் சுட்டெரிக்கும் சக்தியல்லவா?

கால்கள் அமைந்திருக்கும் தோரணையை பாருங்கள். நிலை நிற்கும் நிலை இல்லையே, நடைபோடும் பாவனையல்லவா? எல்லாம் ஒரே சக்தி மயம்.

யோக நரசிம்மர்

இவ்வளவு அருமை பெருமை வாய்ந்த வேலைப்பாடுகளைப் பார்த்து ஆச்சரியப்படும் நாம், இதே சிற்பத்தின் பின்பக்கத்திலுள்ள நரசிம்மரைப் பார்த்தவுடன் பிரமித்தே போகிறோம்.

இரு சிற்பங்களுக்கு இடையே ஷட்கோண (ஆறுகோண) சக்கரம் அழகாய் அமைந்திருக்கிறது.



இந்த இரு சிற்பங்களும் எவ்வளவு பொருத்தமாக அமைந்திருக்கின்றன! சக்கரத்தாழ்வாரின் இடையே வஸ்திரத்தை நுழைத்துப் பின்பக்கம் கட்டியதும், நரசிம்மர் சிலைக்கும் வஸ்திரம் கட்டியாகிவிடும் - அவ்வளவு பொருத்தமான இரட்டைச் சிற்பம்.

நரசிம்மமூர்த்திக்கு யோக பாவத்திலே இடையைச் சுற்றிக் கால்களின் மேலும் வஸ்திரம் அமைந்திருப்பதைக் காணலாம். இம்மூர்த்தியின் நான்கு கைகளில் உள்ள நான்கு சக்கரங்களும் இவரது துஷ்டநிக்ரக மகா சக்தியைக் காட்டுகின்றன.

இவரை ஆதிசேஷன் தாங்குகிறான். மார்பில் முக்கோண வடிவிலுள்ள ஸ்ரீவத்ஸமும் (லட்சுமியைக் குறிப்பது) சிலையிலுள்ளபடி படத்திலே காட்டப் பெற்றிருக்கிறது. கிரீடத்தின் வேலைப் பாடுகளும் பிரமிக்கச் செய்கின்றன.

இச்சிற்பத்தின் முன்பக்கத்தையும் பின் பக்கத்தையும் பார்க்கும்போது, 'சிற்ப உலகின் அதிசயம் ஒன்றையல்லவா காண்கிறோம்?' என்ற குதூகலம் ஏற்படாமல் இருக்க முடியாது.



அழகுக்கு நூறு கால்


வரதராஜப் பெருமாளின் கோயிலை அழகு செய்யும் நூற்றுங்கால் மண்டபத்திலே, ஒவ்வொரு தூணையும் அழகு செய்கின்றன சிறு சிறு சிற்பங்கள். கும்பகோணம் ஸ்ரீராமஸ்வாமி கோயிலைப் பார்த்திருப்பவர்களுக்கு அந்த நுட்பமான சிறு உருவங்களின் ஞாபகம் வரும்.

தூணெல்லாம் அழகுத் துணுக்குகள்

இங்கு தனித் தூணாகக் காட்டியிருப்பது, நூற்றுங்கால் மண்டபத்தின் முன் பக்கத்திலுள்ள மேலண்டைக் கடைசித் தூணின் பின்புறத் தோற்றம். நேரே பார்த்தால் இருபுறத்திலும் குதிரைகளும் நடுவில் யாளியுமாகத் தூணில் ஒரே கல்லில் செதுக்கப் பெற்றிருக்கும் அழகைக் கண்டுகளிக்கலாம்.

இந்தத் தூணை அழகுக் களஞ்சியமாகக் காட்டும் சிறு சிறு உருவங்களில், வேணு கோபாலனையும் நவநீத கோபாலனையும் (அதாவது, வெண்ணெய்க் கண்ணனையும்), ஆதிசேஷன் குடை பிடிக்கும் லட்சுமி நாராயண மூர்த்தியையும் விசேஷமாய்க் குறிப்பிடலாம்.

சில ஊர்களில், தூணின் முன் பக்கத்திலுள்ள சிற்பங்களையே சிறப்பாக அமைத்து, மற்றப் பக்கங்களில் உள்ளவற்றைச் சாதாரண வேலைப்பாடுடன் அமைத்திருக்கிறார்கள். இந்த மண்டபத்திலோ ஒவ்வொரு


சில்பி

தூணிலும் நான்கு பக்கங்களும் அருமையான வேலைப்பாடுகளுடன் காட்சியளிக்கின்றன.

மாளிகையின் முன்வாசலை மட்டும் அழகால் ஜொலிக்கச் செய்து, பின் வாசலையும் மற்றப் பக்கங்களையும் சாதாரண வேலைப்பாடுகளுடன் அமைக்கும் பிரபுத்வம் அன்று இது.

முன்வாசலையும் பின்வாசலையும் மாளிகையின் மற்றப் பக்கங்களையும் அழகு செய்து ரசிக்கும் பிரபுத்வம் புலனாகிறது, வரதராஜாவின் மண்டபத் தூண்களின் சிற்ப வேலைப் பாடுகளிலே.

ஒரே அழகுக்கொள்ளை

இந்த நூற்றுங்கால் மண்டபத் தூண்களில், மிகவும் அழகிய வேலைப் பாடுகள் நிரம்பியிருக்கும் யாளித் தூண் 'அனந்த ஸரஸ்' என்ற புஷ்கரிணியை நோக்கியவாறு இம்மண்டபத்தின் பின்பக்கத்தில் காணப்படுகிறது. முழுப் பக்கத்திலுள்ள படத்தில் நடுவே பாருங்கள்.

யாளியின் நுட்பக்கொடி வேலைகள் மற்றத் தூண்களைப்போல் இல்லாமல் தனிச்சிறப்புடன் திகழ்கின்றன.

மேலும், காளிங்கமர்த்தனம் முதலான கிருஷ்ண லீலைகளும், மகாவிஷ்ணு வீற்றிருந்த வண்ணம் அபயம் அருளும் கோலமும், துஷ்டநிக்கிரகம் செய்யக் கருடன் மேல் ஆரோஹணித்துச் செல்லும்போதே சிஷ்டர்களுக்கு அபயம் அளிக்கும் கோலமும், அழகுச் செல்வத்தை அதிகரித்துக் காட்டுகின்றன.

தூணின் மேல்புறமுள்ள உருவத்தின் பாவங்களும் அழகுக்கு அழகு செய்து தூணுக்குச் சோபை அளிக்கின்றன.

கதை சொல்லும் தூண்கள்

பக்கத்திலுள்ள மூலைத் தூணில் இரணிய வதம் நடக்கிறது. தூணிலிருந்து நரசிம்மம் புறப்படுகிறது. இரணியன் யுத்த கோஷம் செய்கிறான். கீழே யுத்தம் உக்கிரமாக நடைபெறுகிறது. இரணியனை மடியில் வைத்துக்கொண்டு குரூரமாக வதம் செய்கிறது நரசிங்கம் ஒரு பக்கத்திலே. பிறகு, சாந்தம் அடைந்து லட்சுமிநரசிம்ம மூர்த்தி காட்சி தருகிறார், மேலே நேராக. இப்படி ஒவ்வொரு தூணும் ஒவ்வொரு கதை சொல்கிறது அல்லது கதையின் ஒரு கட்டத்தைக் காட்டுகிறது. கொடுங்கையின் உட்புறத்திலும் நுட்பமான வேலைப்பாடுகள்!

ஒரு கலைத் தூண்டுகோல்

மன்மதன் கிளி மீதும், ரதிதேவி அன்னத்தின் மீதும் சவாரி செய்ய வேண்டுமென்று காதலர் உலகம் கற்பனை செய்தது; பழைய புராணக் காதலர் உலகம்தான். இந்தக் கற்பனையை மாற்றிக் காதல் தேவனும் காதல் தேவியும் தங்கள் வாகனங்களை மாற்றிக்கொண்டதாக ஒரு புதுமைக் கற்பனையைக் கல்லிலே செய்துள்ளனர், காஞ்சி மாநகரில் வரதராஜாவின் நூற்றுங்கால் மண்டபத்திலேதான்!

காதலும் கலையும்

ஏறியதும், இடதுபுறம் தெரியும் இம்மண்டபத் தோற்றம்தான் அடுத்த பக்கத்தில் சித்திரிக்கப் பெற்றிருக்கிறது. இந்த நிலையில் காமதேவன் அம்பு தூவியதும் காதலும் கலையும் ஒருங்கே தலையெடுக்கின்றன.


சிங்காரக் கலையும் நாட்டியக் கலையும்


ரதிதேவி அமர்ந்திருக்கும் தூணிலே, ஒரு பெண் அளகபாரத்தை முடித்துக் கொண்டு நெற்றியில் திலகம் இட்டுத் தன்னைச் சிங்காரித்துக் கொள்வதைக் காண்கிறோம்.

மன்மதனின் மலரம்புகளோ தம்பதிகளின் ஆனந்த நடனத்தையும் மலர்ச்சி பெறச் செய்கிறது, இயற்கையாக.

இயற்கையழகும் கலையழகும்

கிளிதான் எவ்வளவு இயற்கையாக, இறக்கையிலுள்ள கோடுகள் தெரிய எவ்வளவு அழகாய் அமைந்திருக்கிறது! தேவிதான் கிளிக் குதிரைமீது அமர்ந்து எவ்வளவு அழகாகக் கவர்ச்சியாக லகான் பிடித்திருக்கிறாள்! அன்னமும் இயற்கை லட்சணங்களுடன் அமைந்திருக்கிறது.




சில்பி

கிளியை யாளி தாங்குகிறது. இது நம் மனக் கிளியை இயற்கை உலகிலிருந்து கலை உலகிலே சிறகடிக்கவிடுகிறது.

பக்கத்தில் குதிரை, யாளியால் ஆன தூண்களைக் காண்கிறோம். முன்பு பார்த்த தனித்தூணின் முன்பக்கத்தைத் தான் இங்கே கடைசித் தூணாகக் காண்கிறீர்கள்.

கல்லுச் சங்கிலிகள்

கல்லுச் சங்கிலிகளையும் இந்த மண்டபத்தின் ஒரு சிறப்பியல்பாகக் குறிப்பிடலாம். மற்ற ஊர்களிலும் இத்தகைய சங்கிலிகளைக் கண்டு இருக்கிறோம். இங்கேதான் வளையங்கள் அதிகமாகவும், சங்கிலி வேலைப்பாடு முற்றுப் பெற்ற முழு நிலையிலும் அமைந்துள்ளன.

இந்தக் கல்லுச் சங்கிலிகள் மண்டப மூலைகளில் தொங்குவதுதான் எவ்வளவு அழகாயிருக்கும்! படத்தில் பார்த்து மகிழுங்கள்.

மண்டபத்தில்தான் இப்படிப் பார்க்க முடியாதே! ஏன் தெரியுமா? அங்கே சங்கிலிகளைத் தூக்கிக் கட்டியிருக் கிறார்கள். அது ஏன் தெரிய வேண்டாமா? ஊகித்துப் பாருங்கள். எல்லாம் சில கலா ரசிகர்களுக்காகத்தான்! அவர்கள் திருஷ்டிபட்டுவிடுமே என்றுதான் - புரிகிறதல்லவா?

ஓர் அழகுக் கலாசாலை

பொதுவாக நோக்கினால், இந்த நூற்றுங்கால் மண்டபத்தை ஓர் 'அழகுக் கலாசாலை' என்று குறிப்பிடலாம். காதல்-தெய்வ தம்பதிகளையே உற்று நோக்கியவண்ணம் பௌராணிக உலகிலும் சஞ்சரிக்கலாம்; கவிதா லோகத்திலும் உல்லாச யாத்திரைகள் செய்து பார்க்கலாம்.

மனுஷ்ய தம்பதிகளின் நடனக் காட்சியோ, நடனகலா ரசிகர்களுக்கு நல்விருந்து. சிங்காரித்துக்கொள்ளும் அழகி, பெண்மைக்கும் அழகுக் கலைக்கும் தொடர்பு இன்று நேற்று வந்ததல்ல என்பதற்கு ஒரு சான்றாகிறாள்.

கலையழகில் இயற்கையழகே அதி முக்கிய அம்சம் என்று கருதுவோர் உள்ளம், ரதிதேவியின் கிளியிலும் மன்மதனின் அன்னத்திலும், தூணில் உள்ள குதிரைகளிலும், கல்லுச் சங்கிலிகளிலும் ஈடுபடக்கூடும்.

சுருங்கச் சொன்னால், இந்த அழகுக் கலாசாலையில் பல்வேறு வகுப்பினரான ரசிகர்களுக்கும் இடம் உண்டு.

கோபுர தரிசனம்

இக்கோயிலின் ராஜகோபுரத் தோற்றத்தைப் படத்தில் காணலாம். சந்நிதித் தெருவில் மடங்கள் அதிகம். தெருவின் அமைப்பே அழகுதான். அங்கேயிருந்து கோபுர தரிசனம் செய்வதும், பிறகு வந்து மண்டப அழகுகளைத் தரிசிப்பதும் பாபவிமோசனமோ இல்லையோ, கவலைக்கு விமோசனம், கலைக் காதலுக்கு ஒரு தூண்டுகோல்.


கஞ்சி வரதப்பா

'கஞ்சி வரதப்பா என்றால், எங்கு வரதப்பா என்கிறாயே!' என்ற பழமொழியில் இருந்தே காஞ்சி வரதர் கோயில் தமிழ்நாடெங்கும் பிரசித்தம் என்பதை எளிதில் அறிந்துகொள்ளலாம். 'பெருமாள் கோயில்' என்றே காஞ்சிபுரத்தையும் வரதராஜப் பெருமாள் கோயிலையும் சிறப்பித்துப் பேசுவதுண்டு!

இந்தக் கோயிலின் அழகுக் களஞ்சியமான நூற்றுங்கால் மண்டபத்தைத் தான் பலப்புறம் தரிசிக்கிறீர்கள்!

புராண கதை

இந்தப் பெருமாளை, 'அத்திகிரி வரதன்' என்றும், 'அத்திகிரி அருளாளன்' என்றும் சொல்வதுண்டு. அத்திகிரி என்ற மலையைச் சமமாக்கி ஒரு யாகசாலை நிர்மாணம் செய்துகொண்டு பிரம்மா தமது மன நிம்மதிக்காக யாகம் செய்தாராம். அவருடைய தர்மபத்தினியான சரஸ்வதியே கோபம் கொண்டு, யாகத்தைக் கெடுக்க வேகவதி நதியாகப் பொங்கி வந்தாளாம். அந்த வேகத்தை மட்டுப்படுத்தி அவளைச்





சமாதானப்படுத்தி யாகத்தைப் பூர்த்தி செய்ததுடன், வரதராஜர் தோன்றி மனச் சுத்தமும் மனச் சமாதானமும் பிரம்மாவுக்கு ஏற்படும்படி அருள் புரிந்தாராம்.

இப்படி வரதராஜர் அவதரிப்பதற்கு முன்பே, 'அழகிய சிங்கன்' என்ற நரசிம்மர் பிரசித்தமாக இருந்தார் என்றும், அதற்கும் முன்பு வராகமூர்த்தி பிரசித்தமாக இருந்தார் என்றும் சொல்கிறார்கள்.

வராகப் பெருமாளின் சிற்பம்

காலத்தால் முற்பட்ட வராகப் பெருமாளின் கோலம் (சிற்ப அமைப்பும் அழகும்) நுணுகி நோக்கத்தக்கது. சுதர்சனமூர்த்தி என்ற சக்கரத்தாழ்வார் பெரிய சிற்பமாகத் தரிசனம் அளிக்கிறார்; வராகமூர்த்தியோ மிகச் சிறிய சிற்பமாகத் தரிசனம் தருகிறார்.

இந்தச் சிற்பம் முழுதும் முத்தாரங்கள் பதிக்கப் பெற்றதுபோல் விசேஷ வேலைப்பாடுகளுடன் அமைந்துள்ளது. திருவாசியிலும் முத்தார வேலைப் பாடுகள் மலிந்திருக்கின்றன. பூமிதேவியைக் கையில் பற்றி இடது தொடை மீது தாங்கியவண்ணம் வராகப் பெருமாள் காட்சி வழங்குகிறார்.

இந்த நிலையில், தூக்கியுள்ள இடது பாதத்தை ஆதிசேஷன் தாங்குகிறான். ஆதிசேஷனின் பத்தினி அருகேயிருந்து துதித்துக்கொண்டிருக்கிறாள்.

இந்தச் சிலை, 'அனந்த ஸரஸ்' என்ற புஷ்கரிணியின் மேலண்டைக் கோடியிலுள்ள தனிக்கோயிலில் இருக்கிறது. வரதராஜப் பெருமாள் கோயிலில் மிகச் சிறிய சிற்பமும் மிக நுட்பமான வேலைப்பாடுகள் உள்ள சிலையும் இதுதான்.

அனந்த ஸரஸ்

இக்குளம், நூற்றுங்கால் மண்டபத்தின் பின்பக்கத்தில் இருக்கிறது. இதன் நடுவே நீராழி மண்டபம் உண்டு. தண்ணீரில் மூழ்கிக் கிடக்கிறது வேறொரு மண்டபம்.


ஆதி அத்திகிரி மூலவரான வரதருக்குப் பின்னம் ஏற்பட்டதால், அவரை அனந்த ஸரஸில் மூழ்கியுள்ள மண்டபத்தில் வைத்திருக்கிறார்களாம்.

ஆகமொத்தத்தில் பிற்காலப் பெருமையும் தற்காலப் பெருமையும் இக்கோயிலுக்கு அதிகம் உண்டு!

கல்லிலே... கயிலாசம்!

'கயிலாசம் போகவேணும் இவ்வுலகத்திலிருந்து' என்பது பொதுவாக சிவ பக்தர்களின் ஆசை. ஆனால், 1250 ஆண்டுகளுக்கு முன் ஒரு பக்த - ராஜா இவ்வுலகத்துக்குக் கயிலாசத்தைக் கொண்டுவர ஆசைப் பட்டார். 'ராஜசிம்மன்' என்ற பல்லவ ராஜா, பக்தர்களிலும் ஒரு ராஜா.

காஞ்சியைத் தலைநகரமாகக்கொண்டு ஆட்சி செலுத்திய இந்த அரசரின் ஆசைதான் - சிவ பக்திதான் - காஞ்சிக் கயிலாசநாதர் கோயிலாகக் கருவுற்று உருவாயிற்று. கோயில் நகரமான காஞ்சியிலுள்ள கோயில்களில் எல்லாம் சிற்ப நுட்பங்களில் சிறந்து விளங்கும் கோயில் இது.



ஒரு பொதுநோக்கு

காஞ்சீபுரத்தின் எல்லையில் கழனிகளுக்கு இடையே இருக்கிறது கயிலாசநாதர் கோயில். இந்த இடம் பழைய காஞ்சி அல்லது கச்சிமாநகரின் இதயப் பிரதேசம் என்கிறார்கள்.

கோயிலுக்கு எதிர்ப்புறமாகச் சிறிது தூரத்தில் ஒரு பெரிய நந்திகல் அமைந்திருக்கிறது. நந்தி உள்ள மேடை மீது நான்கு சிங்கத் தூண்கள் மட்டும் நிற்கின்ற நிலையை நோக்கினால், நந்திக்கு மேல் ஒரு மண்டபம் இருந்திருக்க வேண்டும் என்று எளிதில் ஊகித்துக்கொள்ளலாம்.

நந்தியைத் தாண்டியதும் வெளியே சிறு சிறு மண்டபக் கோயில்கள், - நடுவே லிங்கம். சிறிய வெளி வாசலைத் தாண்டி உள்ளே சென்றால் எதிரே ஒரு மண்டபம், - அதற்குள்ளே சதுரக் கோயில், சுற்றிவரப் பிராகாரங்களுடன். பிராகாரத்தின் இருபுறச் சுவர்களிலும் சிற்பங்கள்.

கோயிலுக்கு மேலே அதிசய அழகு வாய்ந்த வேலைப்பாடுகளுடன்கூடிய கோபுரம்: தான் தெரியும் இடமெல்லாம் கண் குளிரத் தரிசனம் தந்து, 'வா, வா; வந்து பார் இந்த அற்புதச் சிற்பக் காவியத்தை!' என்று அழைக்கிறது.


வாசலுக்கு எதிரே சிறிய கற்கோயிலில் படிக்கட்டுகளுக்கு மேல் பெரிய லிங்கம். படுத்து உள்ளே நுழைந்து சுற்றி வரலாம், அந்த இரண்டே அடி உள்ள பிராகாரத்தில். எல்லாச் சுவர்களிலும் சிங்கத் தூண்கள்; சிங்கங்கள் மீது வீரர்கள். பல்லவச் சிற்பம் என்பதற்குச் சரியான சான்று.

சிவ நடனம்

இக்கோயிலுக்குள் கயிலாசநாதருக்கு இருபுறங்களிலும் உள்ள சிவ நடனச் சிற்பங்கள் விசேஷ கவனத்துக்கு உரியன. பழங்காலத்துச் சிற்பச் செல்வங்களில் அந்தப் பழமை என்ற செல்வச் சிறப்பு மறைந்துபோகாமல், இன்றும் அதிக பின்னம் அடையாமல் உள்ளவை இத்தாண்டவக் கோலங்கள்.

கயிலாசநாதரின் இடது பக்கத்தில் உள்ள சிற்பம் படமாய்க் காட்டப் படுகிறது. பாருங்கள், நடுவே பரமேஸ்வரன் தாண்டவ ரூபத்தில் காட்சியளிப்பதையும், இருபுறங்களிலும் இருந்து பிரம்மா, விஷ்ணு முதலானோர் தரிசித்து மகிழ்வதையும்.

பிரம்மா, விஷ்ணு இருவருக்குமேல் இருபுறங்களிலும் கந்தர்வர் பத்தினிகளுடன் தாண்டவம் கண்டு துதிக்கிறார்கள். ஈஸ்வரனின் காலின்



கிழ் மகிழ்ச்சி தூண்டக் கணங்கள் குதி போடுகிறார்கள்.

ஊர்த்வ தாண்டவத்தின் உட்பொருள்

இத்தகைய ஆனந்தக்கூத்து இங்கே ஊர்த்வ தாண்டவமாகக் காட்சி தருகிறது. இத்தாண்டவத்திலே ஒரு கால் பாதாளத்தையே ஊடுருவிச் செல்வதாகவும், ஒரு கால் (தூக்கிய திருவடி) வானத்தையும் ஊடுருவிச் செல்வதாகவும், ஆடும்போது ஒரு தோளே திக்குக்களைப் பேர்த்துவிடுவதுபோல் தோன்றுவதாகவும் சொல்வதுண்டு. எனினும், இந்தத் தாண்டவமும் ஆனந்தத் தாண்டவமாக அமையக்கூடும்.

ஆனந்தமாக அனுபவிக்கக்கூடிய ஊர்த்வ தாண்டவம்தான் இங்கே காட்டப் பெற்றிருக்கிறது. கடவுள் எங்குமாகி எல்லாமாகி எல்லாவற்றையும் கடந்து நிற்கும் மெய்ப்பொருளுமாக ஒளிர்கின்றார் என்ற தத்துவம், இந்த ஊர்த்வ தாண்டவத்தின் உட்பொருள் என்று கருதலாம்.

இவ்வுண்மையைக் கலா ரூபமாக உணர்ந்து அனுபவிப்பது எளிது. இந்த அனுபவத்திலே பெருகும் உவகையோ, யோக அனுபவங்களில் ஸித்திக்கும் உவகைபோல் பெரிது. இத்தகைய உவகையை - கலா யோகத்தின் ஆனந்தத்தை - அனுபவிக்கிறார்கள் விஷ்ணுவும் பிரம்மாவும் அந்தர சஞ்சாரிகளான கந்தர்வர்களும்.

மகுட மாட்சி

பல்லவர் காலத்துச் சிற்பங்களில் கொடி வேலைகளும் கிரீட அலங்காரங்களும் பிரசித்தமானவை. பிரம்மா, விஷ்ணு, ஈஸ்வரன் முதலியவர்களின் கிரீட அலங்காரங்களைக் கண்டு பிரமிக்காமல் இருக்க முடியாது.

அகில லோக ஆட்சிக்கு அறிகுறியான மகுடம் இறைவனுடைய திருமுடியில் துலங்குகின்றது. கலா ரசிகர்களுக்கு அமுதமாகிறது இந்த மகுட அமைப்பு.

'குடத்திலே கங்கை அடங்கும்' என்று ஒரு விகடப் புலவர் பாடியிருக்கிறார். அதாவது 'இறைவர் ஜடாம - குடத்திலே கங்கை அடங்கும்' என்றுதான். இந்த மகுடத்திலே கங்கையாறும் ஜடைக் காடும் அடங்கியிருப்பதாகக் கற்பனை.

பிரம்மாவின் மகுடம், அவர் சிருஷ்டி கர்த்தாவாக விளங்கும் மாட்சியையும், மகா விஷ்ணுவின் மகுடம் அவர் ரட்சக மூர்த்தியாகத் திகழும் மாட்சியையும் காட்டுகின்றன.

'சிறிதும் பெரிதுமான சிற்பக் கவிகளால் இயன்ற ஓர் அற்புதக் காவியம் இக்கோயில்' என்கிறார் ஒரு ரசிகர்!

இங்குள்ள சிற்பங்கள் உறுதியான கற்களில் உருவாக்கப் பெறவில்லை. மணற்கற்களைக் (sandstones) கொண்டு செய்திருப்பதால் இவை காலப்போக்கில் சிதைந்து வந்திருக்கின்றன. சுற்றிலும் உள்ள சிலா சாசனங்களோடுகூடிய கற்கள் மட்டும் அழுத்தமான கல்லாக இருப்பதால், அவை இன்று அமைத்தது போலச் சுத்தமாயிருக்கின்றன!

சக்தி சாகசம்

தேவி என்றால் இங்கே பார்வதி தேவியின் சாந்த சொரூபமல்ல; காளி - துர்க்கை என்ற பயங்கர சொரூபம். மான் அல்ல, சிங்கம். சக்தியின் மந்த மாருதம் அல்ல, சண்ட மாருதம். அறக்கருணையல்ல, மறக்கருணை.

எந்தப் பக்கம் நின்று பார்த்தாலும் கயிலாசநாதர் கோயில் ஒரு தனி அழகுதான், ஒரு தனிக் கலைச்சுவைதான், - கல்லிலே கயிலை காட்டும் கவிதை!


முன்பு படமாக நந்தியிலிருந்து நாம் கண்ட அதே கோயில்தான், இந்தப் படத்தில், நந்தியைத் தாண்டிச் சமீபம் சென்று பார்க்கக்கூடிய வெளி அமைப்பின் நுட்ப வேலைப்பாடுகளுடன் காண்கிறது.

வெளியில் உள்ள ஒவ்வொரு சிறு கோயிலிலும் உள்ள லிங்கத்தைத் தரிசனம் செய்த பிறகுதான் கோயிலுக்குள் உள்ள பிரமாண்டமான கயிலாசநாதரைத் தரிசிக்கிறோம்; தரிசனத்திலும் தனி அழகு. இனி, நாம் தரிசிக்கப்போகும் தேவியும் தனிச்சிறப்புடன் காட்சி தருவாள்.

துர்க்காதேவி தரிசனம்

கோயிலுக்குள் சென்றவுடன் வில்வ மரத் தடியின் பக்கத்திலே (பிராகாரத்திலுள்ள) சிறு மண்டபத்தில் சிங்கத்தின்மேல் காலைத் தூக்கி வைக்கும் நிலையில் இருக்கும் துர்க்கையைத் தரிசிக்கிறோம்.

அசுரனின் வரவு நோக்கிக் காத்திருக்கிறாள். விஷ்ணு துர்க்கை; நாராயணியாகிய பத்ரகாளி. அதாவது, விஷ்ணு - அம்சம் பெற்றிருக்கும் மாகாளி, பராசக்தி. அறிகுறியாக இருபுறமும் சங்கு சக்கரங்கள் தென்படுகின்றன.



கிரீட அலங்காரமும் இச்சிற்பத்தின் மேன்மைக்குச் சான்று. இது, காரை பூசப்படாமல் உண்மைச் சொரூபத்துடன் அழகாய்க் காட்சி அளிக்கிறது.

தூக்கி வைத்திருக்கும் காலின்மேல் வைத்திருக்கும் கையிலே அமர்ந்து இருக்கிறது ஒரு கிளி.

சண்ட மாருதமாக அழிக்கும் மகா சக்தியே மந்த மாருதமாக உயிர்க் கனலை ஊதி வளர்க்கின்றாள் என்பதற்கு இந்தக் கிளியும் தன் மழலைச் சொற்களால் சாட்சி சொல்வதாகத் தோன்றுகிறது.



பதினாறு கைகளுடன் பயங்கரம்

வேறொரு தேவி - சிற்பத்தையும் (வலது பக்கம்) பாருங்கள். வாகனத்தில் அமர்ந்தவாறு ஒரு கையில் வில்லும் மற்றக் கையில் அம்பும் வைத்துக் கொண்டு தயாராக இருக்கிறாள். ஒரு கை அம்பறாத் தூணியிலிருந்து ஓர் அம்பை அலட்சியமாக உருவுகிறது. சர்வ ஜாக்கிரதையாக இருக்கிறாள் எதிரியை எதிர்நோக்கி!

இந்தச் சிலைதான் இங்குள்ள சிற்பங்களில் மிகவும் பெரிய ஆக்ருதியில் இருப்பது. பெரிதாக இருக்கும் இந்தச் சிற்பத்தில் பயங்கரத்தையும் பெருக்கிக் காட்டத் தேவிக்குப் பதினாறு கைகள் அமைத்திருக்கிறார்கள்.

வில், அம்பு முதலியன பின்னமுற்று இருக்கின்றன. ஆகவே, சற்று தைரியமாக நெருங்கிச் சிற்பத்தை உற்று நோக்கலாம்.

கைகளில் அழகான வளைகள். இத்தனை கைகளிலும் உள்ள வளைகளைச் சிறிது தூரத்திலிருந்து நோக்கினால் பெண்மைக்கு உரிய அழகையும் அதிகமாகக் கண்டு- சக்தியோடு சக்தியாகக் கண்டு - ரசிக்க முடிகிறது.


வளையணிந்த கைகளில் கொலைக் கருவிகள்! பயங்கரத்துக்கு இடையே பெண்மையழகு.

கிரீடமும், கிரீடத்தைச் சுற்றி மாலைகளும், இரு குடைகளும், 'கொடுமைக்கும் கருணைக்கும் ஒருங்கே மகாராணி இவள்' என்று மௌனமாகக் கட்டியம் கூறுகின்றன.

இந்தத் தேவியும் விஷ்ணு - துர்க்கைதான். இங்கும் விஷ்ணுவின் அம்சங்களைக் காணலாம்.

இவளுடைய சிங்க வாகனமும் அசுரனை எதிர்நோக்கியவாறு தயாராகத்தான் இருக்கிறது; காலைத் தூக்கிக்கொண்டு இருக்கிறது. முன் காலினால் அசுரனைக் கிழிக்கத் தயாராக இருப்பதுபோல!

பல்லவர் காலத்துச் சிற்பங்களில் காளி, துர்க்கை முதலான பயங்கரதேவி -





சொரூபங்களுக்கும் முக்கிய ஸ்தானம் உண்டு. தமிழ்நாட்டிலும் தேவி வழிபாடு தழைத்திருந்த காலம் அது.

மாமல்லபுரத்தில் உள்ள 'மகிஷாசுர மர்த்தினியை அறியாத சிற்பக் கலைஞரும் சிற்ப ரசிகரும் உண்டா? பல்லவ மகாராஜ்யத்தின் துறைமுகம் அது.

பல்லவர் தலைநகரமாக இருந்த காஞ்சியிலும் அதிசயமான தேவி - சிற்பங்கள் இருப்பதில் அதிசயமில்லை.

விஷ்ணுவோ, சிவபெருமானோ துஷ்டநிக்கிரகம் செய்வதைக் காட்டிலும் அன்னையே அசுரவதம் செய்ய முயல்வது விசேஷமானது!

அசுரன் என்றால் கொடுமை. கொடுமைக்குக் கொடுமைதான் துர்க்கை. நன்மைக்கோ பெருநலம் அருளும் தாய். அசுரன் என்றால் இருள். இருட்டுக்கு இருட்டு இந்தக் காளி; அருளுக்கோ உயிரான அம்மை, இந்த உலக அன்னை.

சக்தியின் சாகசம் இது!





சில கயிலைக் காட்சிகள்

யானைச் சண்டை


மதம் பிடித்த அசுரன் அவன். சைவம், வைஷ்ணவம், இஸ்லாம் முதலியவற்றில் எந்த மதமும் பிடிக்கவில்லைதான்! சிவ மதம் - சிவ பக்தி - சிறிதும் பிடிக்கவில்லை. சிவபெருமானையே வந்து தாக்கிவிட்டான் மதயானை உருவில். ஆனால், அந்தத் தாக்குதலை நாம் பார்ப்பதற்குள்ளே மதயானையின் மத்தகத்தின் மேல் காலை வைத்துக்கொண்டு வெற்றி முழங்க வீரக்காட்சி அளிக்கிறார் கஜஹர மூர்த்தியாகக் கயிலாசநாதர்.

அசுரனைக் கண்டு அஞ்சாத பார்வதி தேவியும் இந்த வெற்றிக் கோலம் கண்டு பயந்ததுபோல், 'போதும், போதுமையா இந்தச் சொரூபம்; உம்முடைய அன்புச் சொரூபத்துக்கே வந்துவிடும்!' என்று பிரார்த்தித்தபடியே பக்கத்தில் இருக்கிறாள்.

தாண்டவக் காட்சி

இந்த யானைச் சண்டை கண்டு, கஜஹர ரூபியின் பயங்கர சொரூபத்தையும் பார்த்துவிட்டு, இதே மலைச்சாரலில் கீத வாத்திய வினோதங்களுக்கு இடையே தாண்டவமூர்த்தியின் அழகிய திருக்கோலத்தையும் தரிசிக்கப் பெறுகின்றோம்.

இப்பெருமான் காலடியில் மிதித்திருக்கும் ஆணவ சொரூபமான அசுரனின் தலையில் தேவி கையை வைத்து, வியந்து பார்த்துக்கொண்டு இருக்கிறாள். அங்கே பயந்த உணர்ச்சி; இங்கே வியந்த உணர்ச்சி. நமக்கோ பத்துக் கைகளுடன் இந்த அழகுக் கோலமும் ஒரு பயபக்திக் காட்சிதான்.



இதே கயிலையங்கிரிச் சாரலில் ரசிகர் வியக்கும் மற்றொரு பாவத்துடன் ஒரு தாண்டவக் காட்சியும் புலனாகிறது. இந்த ஆட்டத்திலேதான் கை-கால்கள் எப்படி மனம் சொன்னபடி செய்து ஒற்றுமை காட்டுகின்றன!

ஏற்கெனவே பார்த்த ஒரு காட்சியில் அசுரன் ஒருவன் தன் இறுதிக் காலத்தில் மெய்யறிவு பெற்றுவிட்டவன்போல், 'என்னைக் கொல்ல வேண்டாம்; இனி நான் கொலை வழியை, ஹிம்ஸை வழியை விட்டுவிடுகிறேன்' என்று முறையிட்டதையும் கேட்டோம், கண்டோம்.

கதை நடத்தும் சிற்பங்கள்

கண்டீரா? சிவ லீலைகளையா? கயிலையங்கிரியிலா? கனவு கண்டீரா? ஆம்; இல்லை - இரண்டும்தான்! காஞ்சிக் கயிலாசநாதர் கோயிலின் பிராகாரத்திலுள்ள சின்னஞ்சிறு மண்டபக் கோயில்களிலும் அவற்றிலுள்ள சில அழகிய சிற்பங்களிலும் கருத்தைப் பறிகொடுத்ததும், மேலே சொன்ன கயிலைக் காட்சிகள் தோன்றின. சிவ லீலைக் கதைகள் கண்ணெதிரே துரிதமாக நடந்தன.

இன்றும் கண் உள்ளவர்கள் இந்த அற்புதத்தைக் கண்டுகொள்ளலாம். கலைக்கண் வேண்டும்; பக்திக் கண்ணும் இருந்தால் பாதகம் இல்லை!

இந்த இரண்டு கண்களையும் திறந்து பார்க்கும் போது, நம் தென்னாட்டுத் திருக்கோயில்களில் சாதாரணமாக நாம் கண்டிராத ஒரு சிறப்பியல்பைக் கயிலாசநாதர் கோயில் - பிராகாரத்திலே கண்டுபிடிக்கிறோம்.

சிற்ப அழகு, சிற்பச் செல்வம் என்று சொல்வதெல்லாம் போதாது. சிவ கதைகளில் கட்டத்திற்கேற்ற பாவங்கள், செயலுக்கு ஏற்ற வேகம் காட்டும் சிற்ப மேதை இது.

இப்பேர்ப்பட்ட சிற்பங்களில் கூடியவரை வேலைப்பாடுகள் தெளிவாய்த் தெரியும் சிற்பங்கள் சில இங்கே படமாய்க் காட்டப் பெற்றுள்ளன.



கல்லும் எழுதுமோ கட்டுரை?

கி. பி. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து சுமார் 600 ஆண்டுகளாய்த் தமிழ்நாட்டை ஆண்டுவந்த ராஜ பரம்பரையிலே முதன்மை பெற்ற பல்லவர்களை இன்றும் நினைப்பூட்டுகின்றன, அம்மன்னர்கள் கட்டி நிறுத்திய கோயில்கள். தங்கள் தலைநகரமான காஞ்சியைப் பல கோயில்களால் அணி செய்து பக்திப்பெரு நகரமாக்கினார்கள். அவற்றுள் முதல் முதலாகக் கற்களால் கட்டப்பெற்றது, எட்டாம் நூற்றாண்டில் ராஜசிம்ம பல்லவன் கட்டிய கயிலாசநாதர் கோயில்.



போருக்குப் புறப்படுகிறார்களா?

இக்கோயிலுக்குள் வந்தவுடன் நேரே தெரியும் முன் மண்டபத்தைப் பாருங்கள். இருபுறமும் துவாரபாலகர்கள். மண்டபத்தின் ஒவ்வொரு வெளி முனையிலும் முன்கால்களைத் தூக்கியவாறு நின்றுகொண்டு இருக்கும் யாளிகளை உற்று நோக்குங்கள். இங்கே சிலாரூபமாக உள்ள யாளிகளும் சிங்கங்களும், 'நாங்கள் பல்லவச் சின்னங்கள்' என்று ஒரு மௌனக் கட்டுரை படிக்கின்றன.


ஈஸ்வரன் கோயில் என்பதற்கு அறிகுறியாகப் பிராகார மண்டபங்களின் மேல் பக்கங்களில் யானை, ரிஷபம் முதலான ரூபங்கள் காணப்படுகின்றன.

இதோ பிராகாரத்தில் தெரியும் சிறு சிறு கோயில்களில்தான் முன்பு நாம் பார்த்த சிற்பங்கள் இருக்கின்றன.

இனி, ஒரே யாளியால் ஆன இச்சிறு சிறு கோயில்களைச் சிறிது தூரத்திலிருந்து பார்த்து ரசிக்க வேண்டும். இப்படி ஒரு தூரப் பார்வையாகப் பார்க்கும்போது, 'யுத்த நிமித்தமாகத்தான் ரதங்கள் அணிவகுக்கப்பெற்று ஒரே நேராக நிற்கின்றனவோ?' என்று பிரமிக்கத் தோன்றும்.

லட்சியமும் எதார்த்தமும்

இனி, மண்டபத்தின் மேல்புறம். சிறு சிறு உருவங்கள் கொடுங்கை



தாங்கியவாறு காண்கின்றன. மேலே நுட்பக் கொடிவேலைகள்.

துவாரபாலகர்களின் நானா பக்கங்களிலும் உருவங்கள், கொடி வேலைகள்.

பிராகார மண்டபத்தின்மேல் யானைகள். நிஜ யானைகள் இயற்கையாகப் படுத்திருப்பதுபோல் அமைந்திருக்கும் தத்ரூபச் சிற்பங்கள். அந்நாளிலும் கலையில் லட்சியவாதத்துடன், எதார்த்தவாதமும் உண்டு. இக்காட்சியை, எதிர் மற்றும் அடுத்த பக்கங்களில் உள்ள இரு சிறு படங்களும் காட்டுகின்றன.

கல்வெட்டின் கட்டுரை

லட்சியமும் எதார்த்தமுமான சிலா ரூபங்களின் அழகு இருக்கட்டும். முன் மண்டபத்திலுள்ள தூண்களில் செதுக்கியுள்ள சிலா சாசனத்தைத்தான் பாருங்கள். மணி மணியான இந்த எழுத்துகளும் சேர்ந்து மண்டபத்தை அணி செய்கின்றன.

சிலாரூபங்கள் ராஜசிம்ம பல்லவனைப் பரம ரசிகன் என்றும், பண்பாளன் என்றும் காட்டுகின்றன அல்லவா? இந்தச் சாட்சியை உறுதிப் படுத்துகிறது சிலாசாசனம்.

ராஜசிம்மன் வீணை வாசிப்பதில் நாரதனுக்கு நிகரானவன் என்றும், சங்கீதத்திலும் நிபுணன் என்றும், கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. 'ஸ்ரீவீணாநாரதன்' என்பது இம்மன்னர் பிரானின் விருதுகளில் ஒன்று.

சங்கீதச் சிற்பங்கள்

சங்கீதக் கருவிகளுடன் தோன்றும் இக்கோயில் - சிற்பங்களைச் 'சில இசைச் சிற்பங்கள்' என்ற தலைப்பில் 'இசையும் கோயில் சிற்பங்களும்' என்ற பொருள் பொதிந்த ஒரு கட்டுரையினிடையே திரு.ஜே.எம்.சோமசுந்தரம் பிள்ளை குறிப்பிட்டுப் பேசுகிறார்.

கயிலாசநாதர் கோயிலில், இரண்டு சிற்பங்கள் சிவபெருமானை வீணையும் கையுமாக (வீணாதரனாக)க் காட்டுகின்றன என்பதையும், ஒரு சிற்பம் பார்வதிதேவியையும் கையில் வீணையுடன் காட்டுகிறது என்பதையும் திருவாளர் சோமசுந்தரம் சுட்டிக்காட்டுகிறார்.

இவ்விதமாக, ராஜசிம்ம பல்லவனின் ரசிகத் தன்மைக்கும் கலைச் செல்வத்துக்கும் தேவியும் தேவனும் இன்றளவும் சாட்சி சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள்!

ரசிகர் கண்ணீர்

இத்தனை வேலைப்பாடுகளையும் பார்த்துக்கொண்டே ரசிகர்கள் கண்ணீரும் கம்பலையுமாகிறார்கள். ரசிக பரவசமா? பக்த பரவசமா? இலவசமாய்க் கயிலாசம் கண்ட ஆனந்தக் கண்ணீரா?


'ஆனந்தக் கனவு பல காட்'டிய கோயில், கண்ணீர்க் காட்சிகளையும் வெளியிடுகிறது.

சிற்பங்கள் பல நூற்றாண்டுகளாய்ப் பழுதடைந்து வந்திருக்கின்றன. சிற்ப நுணுக்கம் காணாத திரிதராஷ்டிரர்கள், பழுது பார்த்திருக்கிறார்கள். சுண்ணாம்புப் பூச்சால் கவசமிட்டுப் பாதுகாக்க விரும்பி, 'மூக்கு இருக்க வேண்டிய இடத்தில் கண்!' என்பது போன்ற வினோத மாறுதல்களைச் செய்துவிட்டார்கள்!

இந்தத் துறையில் நல்ல வேலை தெரிந்தவர்களைக்கொண்டு இச்சிற்பச் செல்வத்தைப் பாதுகாத்திருந்தால், ரசிகர்கள் வாழ்த்தி இருப்பார்களே!

இப்போதுள்ள நிலையிலும் நல்ல வேளையாக நடுநடுவே சில உருவங்கள் தங்கள் உண்மை ரூபம் காட்டிக் கலா ரசிகர்களுக்கு உவகையும் மன நிம்மதியும் அளிக்கின்றன.

நமது ஜனநாயகம், இன்னும் சிதைந்து போகாதபடி 'கயிலாசநாதர் கோயில்' என்ற பொக்கிஷத்தைக் காப்பாற்றி வைக்க வேண்டும். கயிலாசநாதர் நல்ல புத்தி கொடுக்க வேணும்!



வேலூரில் அதிசயக் காவல்

அரசன் இல்லாத அரண்மனை. எனினும், வாயில் காப்போர் சர்வ ஜாக்கிரதையாகக் காவல் புரிகின்றார். என்றாலும், யாரும் தாராளமாக உள்ளே போகலாம்.

யார் வேணுமானாலும் பாதரட்சை கழற்றாமலே போகலாம்; எங்கும் - ஆம், உள்ளிடம் எங்கும் - சுற்றித்திரியலாம். வாயில் காப்பாரோ, காவலாளிகளுக்கெல்லாம் எச்சரிக்கை செய்பவர்போல் அவ்வளவு ஜாக்கிரதையுடன், அவ்வளவு விழிப்புடன் கடமையில் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்த அதிசயம் எங்கே?



அதிசயக் கோயில்


அரண்மனைதானா அது? கோயிலேதான். ராஜாதி ராஜாவான இறைவனுக்கு, ராஜா கட்டிய அரண்மனைதானே கோயில்? கோ + இல் = அரசன் வீடு; அரண்மனை.

இந்த ஆண்டவனின் அரண்மனையில் ஆண்டவன்தான் இல்லை! அதாவது, ஆண்டவனின் விக்கிரகம் இல்லை. மூலஸ்தானத்தில் மூர்த்தி இல்லை. தண்ணீர் இல்லாத ஆறுபோல், கண்ணீர் வராத பிரார்த்தனை போல், ஸ்வாமி இல்லாத கோயில்!

இந்தக் கோயிலில் யாருக்கும் கர்ப்பக்கிரகம் வரை - ஏன், அதற்கு உள்ளும் - பாதரட்சையுடன் போகும் சுதந்திரம் உண்டு. பாதரட்சையை வெளியே விட்டுவிட்டு உள்ளே போய் இறைவனுடைய பாதாரவிந்தத்தையும் முக மண்டலத்தையும் தரிசிக்க முயன்றும் நம்முடைய பாதரட்சையே தியானமாக இருக்க நேர்ந்துவிடுகிறதே சில தருணங்களில், அந்த விபரீத நிலைக்கு இங்கே இடம் கிடையாது. ஏன், ஸ்வாமி தரிசனத்துக்கே இடமில்லையே!

அதிசய துவாரபாலகர்

மூர்த்தி இல்லாத இந்தக் கோயிலில் காவலாளிகள் உண்டு - காவலன் (அரசன்) இல்லாத அரண்மனையில் காவலாளிகள்போல. அதிசயக் காவலாளிகள். கோபுரத்தின் முன் பக்கத்தில் தெற்கு நோக்கியவாறு



நிற்கும் துவாரபாலகர்களைத்தான் குறிப்பிடுகிறோம்.

8½ அடி உயரத்தில் சிலை பெரிய ஆக்ருதியில் இருக்கிறது. மாக்கல்லினால் இயன்றது. ஆகையால், இவ்வளவு நுட்பமான வேலைப்பாடுகள் செய்ய முடிந்தது. இந்தக் கோயிலில் உள்ள சிலைகளில் அதிகமாக பின்னம் அடையாத சிலைகள் இவைதான். மற்றச் சிறு சிலைகளில் எல்லாம் தலை முதலான உறுப்புகள் பின்னமுற்றுக் கலைக் குருடர்களின் களியாட்டத்துக்குச் சான்று தருகின்றன. இந்த இரண்டு துவாரபாலகர் - சிலைகளுங்கூடக் கலை விரோதிகளின் வெறிக்குச் சிறிது இலக்காகி, மூக்கில் பின்னமுற்று இருக்கின்றன.

அணிகளும் ஆயுதங்களும்

இச்சிலைகளில் சிகை அலங்காரம் நம்மைப் பிரமிக்க வைக்கிறது. கிரீடத்தின் வேலைப்பாடுகள் ஜடைகளால் ஆனது போல் மிகவும் இயற்கையாக அமைந்திருக்கின்றன. இந்த வேலைப்பாடுகள் தனியாகக் காட்டப் பெற்றுள்ளன.



தனியாகக் காட்டப் பெற்றுள்ள படத்திலே, துவாரபாலகரைப் பக்கவாட்டில் நின்று பார்த்தால் எப்படித் தெரிகிறார்களோ அப்படிக் காட்டியிருக்கிறது. சிகையைப் பின்னிப் பின்பக்கம் அழகாக முடிந்திருக்கிறது.

இரு கைகளில் திரிசூலமும் பாசமும் அணிந்திருக்கும் சிற்பத்தின் மற்றொரு பக்கத்திலிருந்து எழுதிய படம் இது. கதையை ஒரு கையில் தாங்கி, அதன்மேல் ஒரு காலைத் தூக்கி வைத்துக்கொண்டு, கோரப்பற்களுடன், பயங்கரக் காட்சியளித்து, 'ஜாக்கிரதை, ரொம்ப ஜாக்கிரதை, ரொம்ப ரொம்ப ஜாக்கிரதை!' என்று எச்சரிக்கை செய்கிறார்கள் துவாரபாலகர்கள்!

நுட்ப வேலைப்பாடுகள், இன்று செய்ததுபோல் தெளிவாய்த் தெரிகின்றன.

கல்யாண மண்டபம்

சிங்கத்துடன் யானை உக்கிரமாகப் போர் புரியுமா? அந்தச் சிங்கம், அந்த யானை மீது நேரில் பாயத் துணியவில்லை! ஏமாந்த சமயம், பின்புறமாகப் பாய்கிறது மத்தகத்தின் மீது, - அந்த ரத்தத்தை அப்படியே பருகவேண்டுமென்று.


சண்டை நடக்கிறது உக்கிரமாக


யானையோ அடுத்த கணமே தன்மேல் பாய்ந்திருக்கும் சத்ருவை வாயில் தன் தந்தத்தினால் குத்துகிறது. குத்தித் துதிக்கையாலும் கழுத்தைச் சுற்றிக்கொள்கிறது.

சிங்கத்தின் ஒரு காலின் நகங்கள் யானைமேல் பதிந்து அமுங்கியும் காண்கின்றன. வாலையும் உயரத் தூக்கிக்கொண்டு இருக்கிறது. கோபத்தினால் சண்டையின் முடிவு என்ன என்றுகூடச் சந்தேகிக்கிறோம்.

தன்னிச்சை கொண்டலையும் சிங்கம்
சத்தத்தினில் கலங்கும் யானை (அதன்

என்று பாரதியார், சிங்கத்தின்





சக்தியை உள்ளபடி பாடியிருக்கிறார் அல்லவா? அப்படியிருக்க, நாம் காணும் காட்சி நடக்கக்கூடியதா?

யானைமேல் சங்கிலிகளும் காண்கிறோம். நாட்டிலே பழக்கப்பட்ட போர் யானை என்று கருதலாம். ஆனால், எந்த நாட்டிலே சிங்கத்தையும் எதிர்த்துப் போராடுமாறு யானையைப் பழக்கிவிட முடியும்?

முள் எடுக்கிறான் ரஸமாக

ஏதோ கனவு காண்பதுபோல் இந்த வினோதப் போர்க் காட்சியைப் பார்த்துவிட்டு, அந்த மேட்டு நிலத்திலிருந்து கீழே இறங்குகிறோம். அதோ ஒரு வேடப் பெண்ணின் காலில் முள் தைத்திருக்கிறது. ஐயோ பாவம்! இப்படி இரக்கப்பட்டுத்தானா, அவன் முள் எடுக்கிறான்?

முள் தைத்த காலைத் தூக்கியவண்ணம் ஒரு கையால் வில்லை நிலத்தில் ஊன்றிக்கொண்டு, விழுந்துவிடாதபடி மேலும் தன் நிலையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக மற்றக் கையால் முள் எடுக்கும் ஆசாமியின் தலையைப் பிடித்துக்கொண்டிருக்கிறாள்.

காட்டு வழிகளில் முள் தைப்பதும் முள் எடுப்பதும் சாதாரணமான காரியம்தான். ஆனால், காரியம் இங்கே துரிதமாய் நடப்பதாகத் தோன்றவில்லை. வெயிலில் இந்த நிகழ்ச்சி நடைபெற்றால், நிலவெப்பம் தாங்காமல் வெகு விரைவில் நடந்து முடிய வேண்டும். ஆனால், மர நிழலில் நடக்கிறது. நிதானமாக நடக்க வசதி உண்டு. ஏன், ஒருவரோடு ஒருவர் உரையாடுவதற்கும் வசதி உண்டு.

கண்ணாலும் வாயாலும் உரையாடிக் கருத்துகளைப் பரிமாறிக்கொள்வதற்கே ஒரு சந்தர்ப்பமாகவும் இருக்கலாமோ?

அந்தப் பெண்ணைக் கவனித்துப் பார்ப்போம். சாதாரண வேடப் பெண் அல்ல. ஆடை - அலங்காரங்களில் இருந்தும், கிரீடம் போன்ற தலை அலங்காரத்தில் இருந்தும், இவள் ஒரு வேடத் தலைவனின் அருமைப் புதல்வி என்று ஊகம் செய்வது தவறாகாது.

தலைவி - தலைவன் கதையாகவே இருக்குமோ இந்த முள்ளுக் கதையும்? அவள், தானே லேசாக முள்ளை எடுத்துப் போட்டிருக்கலாம். ஆனால், சிறியதைப் பெரிதாக்கி அமர்க்களப்படுத்தி இருப்பாள். அவனோ, 'காலடியில் குற்றேவல் புரிய ஓர் அரிய சந்தர்ப்பம் வாய்த்ததே!' என்று துள்ளித் துடித்து வந்திருப்பான்.

வரும்போதுதான் விரைவெல்லாம். இப்போதுதான் எவ்வளவு நிதானம்! முள்ளுக்கும் வந்தனம் செலுத்த வேண்டிய காலம் இது..!


எல்லாம் ஊகம்தான். நாம் எப்படி நிச்சயம் செய்வது? அவர்கள் அல்லவா நிச்சயம் செய்து கொள்ளக் கூடியவர்கள்?

கல்யாண வேடிக்கைகளா?

இந்தக் காதல் கூத்தைத்தான் எந்தக் காட்டில் பார்த்தீரையா? அந்த யானை - சிங்கச் சண்டை கண்ட அதே காட்டில் என்றீரே? இதாவது உண்மைதானா?

காடும் காட்சியும் எல்லாம் வேலூர்க் கோட்டைக்குள்ளேதான்! அந்த ஜலகண்டேஸ்வரர் கோயிலில் மிகவும் முக்கியமான கல்யாண மண்டபத்திலேதான். இங்கே நாம் காண்பது கலை உண்மை.

இந்த மண்டபத்தின் உட்பாகம், அன்று ஸ்வாமி அம்மனுடன் அமர்ந்து கல்யாணம் செய்து கொண்ட மேடையுடன் படத்தில் காட்டப் படுகிறது. இன்றுதான் ஸ்வாமியும் அம்மனும் கல்யாணமும் எல்லாம் நமது கற்பனை மேடையில்தானே?



ஸ்வாமி அமரும் மேடையின் தெற்குப் புறத்திலிருந்து தெரியும் காட்சிதான் இந்த அத்தியாயத்தின் முகப்பில் உள்ள படத்தில் காட்டப்படுகிறது. அதன் நடுவில் தெரியும் தூணிலுள்ள இரு காட்சிகளே தனியாக இரு படங்களில் காட்டப்படுகின்றன. மேல்புறம் யானை - சிங்கப் போர். கீழே 'முள்ளு'க் காதல்.

வினோதப் போர்; வினோதக் காதல்; - சிற்பம் சொல்லும் வினோதக் கதைகள். ஈஸ்வரனின் கல்யாண வேடிக்கைகள்; நித்திய கல்யாணக் காட்சிகள்!

பக்த விருந்தினர்க்குக் கண்விருந்து

கல்யாண வைபவங்களில் வேடிக்கை காட்டுவதும் கதை சொல்லுவதும் ஒரு முக்கிய அம்சமாகும். பிரமிக்கத்தக்க வேடிக்கைகளாலும் ரஸமான கதைகளாலும் மணமக்களின் உள்ளங்களையும் விருந்தினர்களின் உள்ளங்களையும் பகட்டி வசீகரிப்பார்கள். இன்றும் இப்படியெல்லாம் நடைபெறுவது உண்டல்லவா?

அன்றும் - அதாவது ஈஸ்வரனுக்கும் ஈஸ்வரிக்கும் நடந்த கல்யாண மகோத்ஸவத்திலும் தமாஷான கதைகளும் வேடிக்கைகளும் நடைபெற்றன என்று கருதலாம். நம்முடைய அனுபவங்களையும் உணர்ச்சிகளையும் கொண்டுதானே தெய்வக் கதைகளையும் சாட்சிகளையும் ஜோடித்துப் பார்க்கிறோம்?

பார்வதி - பரமேஸ்வரர் கல்யாணம் இந்த வேலூர்க் கல்யாண மண்டபத்திலே நடைபெற்றபோது, பக்தர்கள் கண்டு களிக்குமாறு இம்மண்டபத்துச் சிற்பக் காட்சிகள் அமைக்கப் பெற்றுள்ளன என்று கருதலாம். இறைவனுடைய நித்ய கல்யாண விருந்தினர்கள் அல்லவா பக்தர்கள்?

இரண்டு சிற்பக் கதைகள்


இனி, இங்கே குறிப்பிட்டுள்ள இரண்டு சிற்பக் கதைகளையும் பக்த ரசிகர்கள் எப்படி ரசிக்கக்கூடும் என்று கொஞ்சம் பார்க்கலாம்.

பக்தி உலகம் ஓர் அற்புத நம்பிக்கை உலகம். இத்தகைய உலகில் இறைவன் நரியைப் பரியாக்குவான்! யானையையும் சிங்கத்துடன் அஞ்சாது போராடச் செய்வான்!

அந்த வினோதப் போர் இருக்கட்டும்; அந்த வினோதக் காதல்? பக்தர்களும் காதலர்களே. பக்தி அனுபவங்களுக்கும் காதல் - ரஸம் ஊட்டுவார்கள். பக்திக் கதைகளையும் காதல் - மணம் கமழச் செய்வார்கள். காதல் - கதைக்கும் தத்துவம் சொல்லிப் பக்தி வெறியை மூட்டிக்கொள்வார்கள். காட்டுப் பாதையில் நடைபெற்ற 'முள்ளுக் காதல்' பக்தர்களின் வாழ்க்கைப் பாதையிலும் நடைபெறக் கூடியதுதான். முள் எடுப்பதுபோல் இறைவன் துன்பம் களைந்து பக்திக் காதலை விளைவிக்கவும் கூடும். இதுவும் ஊகம்தான்.

ஒவ்வொரு சிற்பமும் தூணிலிருந்து குடைந்து தனியாகக் காண்பிக்கப் பெற்றிருக்கும் அழகே... இன்று நமக்கு அந்த யானை - வீரத்தைக் காட்டிலும் அதிசயமாயிருக்கிறது. அந்தக் காதலைக் காட்டிலும் ரஸமாக ரசிகரைப் பரவசப்படுத்துகிறது!

அழகுக் கோட்டை



அடுப்பு இருக்குது,
பானை இருக்குது;
அரிசி இல்லாத சங்கடம்!

- என்றாளாம் தன் வறுமைச் சங்கடத்துடன் 'ரேஷன்' சங்கடத்தையும் சேர்த்து அனுபவித்த ஓர் அம்மாள். அந்த மெட்டில் பாடத் தோன்றுகிறது வேலூரைப் போய்ப் பார்க்கும்போதும்:

கோட்டை இருக்குது;
மலை இருக்குது;
படைகள் இல்லாத
தடபுடல்!
கோயில் இருக்குது,
சிலை இருக்குது;
தேவனில்லாத
தெரிசனம்!
போலீஸ் படைகள்
தடபுடல் பழகுது;
அதிகாரமில்லாத
அதிசயம்!

கோட்டை, வாசல், அகழி

மலைமேலும் கோட்டை இருக்கிறது. நிலத்திலுள்ள கோட்டையின் தெற்குப்புறத் தோற்றம்தான் எதிரில் கீழே உள்ளப் படம். அதில் கள்ள வாசல் இருக்கிறது. இந்த வழியாக எந்த ராஜாதிராஜன் வந்தாலும், ஓர் இடத்தில் அந்த

வணங்காமுடியும் வணங்கிக் குனிந்துதான் வந்திருக்க வேண்டும்!

படையெடுப்புகளின் பயம் இப்போது இல்லாததால், அகழி இன்று அகழியாக இல்லை. சூழத் தண்ணீர் விடுவதற்குப்பதில், சில இடங்களில் வாழைத் தோட்டங்கள் போட்டிருக்கிறார்கள். இப்படி உணவைப் பெருக்க முயலுவதுடன், தாமரை முதலியவற்றால் அழகுபடுத்தவும் முயன்றிருக்கிறார்கள். அழகு இருக்குது, வாழை இருக்குது; அகழிதானா என்று ஐயம்! இந்த ஐயம் தெளிய, சில இடங்களில் தண்ணீரும் விட்டு வைத்திருக்கிறார்கள்!

பொதுவாகக் கோட்டை நன்கு பாதுகாக்கப் பெறுகின்றது. அழகாய் இப்போதும் பரிபாலிக்கப் பெறுகின்றது.



நுட்ப வேலைப்பாடுகள்

வேறு இரு படங்கள் கல்யாண மண்டபத் தூண்களில் அமைந்த சிற்பங்களே. வடக்குப் பாகத்தில் கடைசித் தூணிலுள்ள சிற்பம்தான், யாளிமேல் கொடியைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு, லாகவமாய் இடுப்பில் கை வைத்திருக்கும் அணங்கு.

வணங்கத்தக்க விக்னேஸ்வரர் பக்கத்திலே, தூணின் கீழ்ப்பாகத்தில் மூஷிக வாகனத்தில் கம்பீரமாக அமர்ந்திருக்கிறார். மிகவும் சிறிய உருவங்கள் அணங்கும்,



விநாயகரும். இந்தத் தூணின் பின்பக்கம் யாளிமேல் அமர்ந்திருக்கும் சிங்கத்தின் படமும் ஜாடையாகக் காண்கிறது. இந்தச் சிற்பங்களெல்லாம் நுட்ப வேலைப்பாடுகள் நிறைந்தவை.

அவசரமாய்ப் போகிறாள்!

மற்றப் படம், கல்யாண மண்டபத்தின் தெற்குக் கோடியிலுள்ள தூணிலிருக்கும் ரதிதேவி. இந்தச் சிற்பம் 1½ அடி உயரம்தான். என்றாலும் நிறைந்த அழகு. கிளிமேல் ஒய்யாரமாக அமர்ந்து இருக்கிறாள் ரதிதேவி. ஒரு கையில் கரும்பு - வில். மற்றக் கையில் பூச்செண்டும் ஏந்திப் போகிறாள்.

ஆம்; அவசரமாய்ப் போகிறாள்! இதைச் சிற்பி எப்படிக் காட்டுகிறான் தெரியுமா?

காற்றில் மேலாடை பறக்கிறது!

அழகிய கொண்டையில் கேச ஜாலங்களைத்தான் பாருங்கள். ஒவ்வொரு கேசமும் சிற்பத்தில் வரைந்துகாட்டப் பெற்றிருக்கிறது. பூர்ண அழகுடன் பொலியும் இந்தச் சிலையின் மறுபக்கத்திலே மன்மதச் சிற்பம் இருக்கிறது!

* * *

கல்யாண மண்டபத்தின் நித்திய கல்யாண சௌந்தரியங்களான சிற்பச் செல்வமே, உண்மையில் வேலூரில் உள்ள அதிசயங்களில் எல்லாம் அதிசயமானது.

300 வருட காலமாக இவ்வளவு பெரிய கோயிலில் ஸ்வாமி இல்லை என்பதுதான் ஒரு பெரிய அதிசயமாகுமா? விக்கிரகங்கள் நிறைந்திருக்கும் கோயில்களில் எல்லாம் தெய்வம் குடி கொண்டிருக்கிறதா, என்ன?

கோட்டையில் பட்டாளம் இல்லாதது தான் ஒரு பிரமாத அதிசயமா இந்தக் காலத்திலே? தற்கால யுத்த பயங்கரங்களில் எந்தக் கோட்டைதான் பாதுகாப்பாகும்?

ஆகவே, வேலூரில் சிற்ப அதிசயமே அதிசயம், சிற்ப அழகே அழகு!

இத்தகைய அழகுகளைப் பாது காக்கும் இந்தக் கோட்டை, ஓர் அழகுக் கோட்டைதான். அழகிய நகைக்கு ஓர் அழகான கூடுபோல், கோட்டையும் அழகாகத்தான் அமைந்திருக்கிறது.

சிற்பத்திலே தெய்வமும் அவதாரமும்!

அந்தப் பெரிய கோபுரத்துக்கும் சிறிய கோபுரத்துக்கும் நடுவில் இருப்பதுதான் நாம் ஏற்கெனவே பார்த்து அனுபவித்த பொக்கிஷசாலை. ஆம்; சிற்பப் பொக்கிஷங்கள் அடங்கிய கல்யாண மண்டபம்.

அழகும் அழிவும்


சிறிய அழகிய தூண்களில் உள்ள சிற்பங்களில் அழகு மலிந்து காண்பது போல், அழிவும் (பின்னங்களும்) மலிந்து காண்கிறதே என்பதுதான் ரசிகர்களின் மனக்குறை.


மண்டபத்தின் முன் இருபுறமும் உள்ள இரு கல்-தொட்டிகளுக்கும் நடுவில் பின்னமுற்று இருக்கும் நந்தியைத்தான் பாருங்கள். அழகைப் பின்னாளில் ஆக்கிரமித்துக்கொண்ட அழிவுச் சக்திக்கு மண்டபத்துச் சிற்பங்களைப் போல் இந்த நந்தியும் சான்றுதான்.

இவ்வளவு அழகான கல்யாண மண்டபமும் கோபுரமும் உள்ள கோயிலில் எத்தனையோ ஆண்டுகளாக 'ஸ்வாமி' இல்லாமல் செய்துவிட்ட நாசவேலைதான் எத்தகைய வெறியால் தூண்டப்பட்ட அழிவுச் சக்தியாக இருக்க வேண்டும்!

நாசத்திலும் ஒரு நன்மை!

நாச காரியங்களிலும் ஏதோ ஒரு நன்மை கிடைக்குமாறு செய்யும் திவ்ய சக்தி இயற்கைக்கும் ஈசனுக்கும் உண்டு என்பர். வெகுகாலமாகப் பூஜை இல்லாமல் இருந்துவிட்டதால்தானே தூண்களில் எல்லாம் சுண்ணாம்பு அடித்து நுட்ப வேலைப்பாடுகளை நாசமாக அடித்துவிடவில்லை!





போகட்டும். இந்தக் கோயிலில் 'ஸ்வாமி' இல்லையென்றுதான் எப்படிச் சொல்ல முடியும்? கோபுரங்களின் அழகிலும், கல்யாண மண்டபத்தின் அழகுகளிலும் குடி கொள்ளும் அழகுத் தெய்வம், கோயிலின் உள் அமைப்பிலும் துள்ளி விளையாடுவதுபோலக் காண்கிறது.

இப்போது கோயிலை ஜாக்கிரதையாகப் பாதுகாப்போர் அழகாகவும் பாதுகாத்து வருகிறார்கள் என்பதில் ஐயமில்லை. பாதைகளை

அழகாய் அமைத்து இருபுறமும் செடிகள் வைத்து அழகுத் தெய்வத்தின் ஆலயத்தைப் பரிபாலனம் செய்கிறார்கள். 'ஸ்வாமி' (விக்கிரகம்) இல்லையென்று சொல்லுகிறவர்களும் சோபைக்குக் குறைவில்லை என்று சொல்லக்கூடும்.

லட்சுமி நரசிம்மர் (உக்கிர அழகு)

இன்னும் 'ஸ்வாமி இல்லையே' என்று கவலைப்படுவோர், கல்யாண மண்டபத்தின் வடக்குக் கோடியிலுள்ள தூணில் இருக்கும் லட்சுமி நரசிம்மரைத் தரிசித்து, அந்த உக்கிர அழகையும் உற்று நோக்கலாம். ஏற்கெனவே மூஷிக வாகன மூர்த்தியான பிள்ளையாரைத் தரிசித்திருக்கிறோம்.

யாளிமேல் ஒய்யாரமாக இடுப்பிலே கை வைத்து நிற்கும் அணங்கு ஒரு பக்கமாக, தாம் ஒரு பக்கத்தில் இருக்கிறார் அல்லவா அந்தப் பிள்ளையார்? அந்தச் சிற்பங்களின் மேல் பக்கத்தில் அதே தூணில் உள்ளது நரசிம்மர் - சிலை.

சிறிய அளவில் பெரிய உக்கிரத்தை, மகத்தான ஒரு பயங்கர அழகைத் தேக்கி வைத்திருப்பதுபோலக் காண்கிறது.

இந்த உக்கிர சொரூபம் கண்டு தேவியே அஞ்சி ஓடினாள் என்று கதை. ஆனால், இங்கே வலது கரத்தால் நரசிம்மரை அணைத்தவண்ணம் அமர்ந்திருக்கிறாள். நரசிம்மரின் இடது கரம் தேவியை அணைத்திருக்கிறது.

அஞ்சி ஓடிய தேவி இப்படி இவ்வளவு நெஞ்சுத் துணிவுடன், இவ்வளவு பிரேமையுடன் திரும்பிவந்து இவர் மடியை அடைந்ததற்குக் காரணமும் காட்டுகிறது புராணம். பரமபக்த சிகாமணியான - பக்தர்களோடு சத்தியாக்கிரகிகளுக்கும் பரம லட்சியமான - பிரகலாதன் தோத்திரம் செய்த பின், உக்கிரம் உக்கிரமாயிருக்க முடியுமா? பிறகுதான் தேவியும் திரும்பியிருக்க வேண்டும். இந்த நிலையிலும் வேலூர் - நரசிம்மரின் முகத்தில் பயங்கரம் ஜொலிக்கவே செய்கிறது. ஆனால், இது சத்ருக்களோடு மித்திரரையும் ஒருங்கே பயமுறுத்திய அந்தப் பயங்கரம் அல்ல!

சிம்ம முகத்திலே நீண்ட உதடுகள் விரிந்து, கூரிய பற்களை வெளிப்படுத்துகின்றன. திறந்த உருண்டை கண்களும், கழுத்தைச் சுற்றிவரும் பிடரி ரோமமும், 'இன்னும் ரௌத்ராகாரமாகத்தான் விளங்குகிறார்' என்பதற்கே சான்று. ஆனால், தேவியையும் பயமுறுத்திய அந்த ரௌத்ராகாரம் அல்ல இது! தேவியின் சாந்த சொரூபமே சாட்சி.

'பயபக்தியுடன் நடந்துகொள்வோர் பயப்பட வேண்டியதில்லை!' என்று அபயம் அளிப்பதுபோல் நரசிம்மரின் வலது கரம் அபய முத்திரையுடன் திகழ்கின்றது.

தேவியின் உடல் அமைப்பையும், உட்கார்ந்திருக்கும் தோரணையையும் தான் பாருங்கள். 'இந்த நரசிம்மர் எப்போது எழுந்திருக்கப் போகிறாரோ! இவருக்கு ஒரு கணம் முந்தி நாம் எழுந்திருக்க வேணும்' என்று அமர்ந்திருப்பதுபோலக் காண்கிறாள்.

ஒரு காலை மடித்து ஒரு காலைத் தொங்கவிட்டு உட்கார்ந்திருக்கும் தோரணையைத்தான் பாருங்கள். 'என்ன, கூப்பிடுகிறீர்களா? இதோ இறங்கி வருகிறேன்!' என்று சொல்லாமல் சொல்லி அடியார்களுக்கு நம்பிக்கையூட்டுகிறார்.

தோன்றும்போதே பூர்ண வளர்ச்சியுடன் தோன்றியது நரசிம்ம அவதாரம். இந்தச் சிற்பத்திலும் பரிபூர்ண அவதாரம்தான்!

அமரச் சிற்பிகளும் அசுர வெறியர்களும்

இந்தியாவின் நெடுங்காலச் சிறப்பியல்பாகிய கலை உணர்ச்சிக்கும், சமரச உணர்ச்சிக்கும், பின்னால் வந்து மோதிய மதவெறிக்கும் ஒருங்கே சான்று தருவன வேலூர்ச் சிற்பங்கள்.

துர்க்கைச் சிற்பம்

கல்யாண மண்டபத்தினுள்ளே ஸ்வாமி அமர்ந்துகொள்ள அமைத்திருக்கும் மேடை அருகேயுள்ள துர்க்கைச் சிற்பமும் ஒரு சமரச அறிகுறி. லட்சுமி, சரஸ்வதி, பார்வதி ஆகிய மூன்று தேவியரின் ஓர் உருவமல்லவா?

சிங்கத்தின்மேல் ஒரு காலை ஊன்றி உட்கார்ந்திருக்கிறாள். மற்றக் கால், சிங்கத்தின் தூக்கிய காலில் அமர்ந்திருக்கிறது. தேவியின் போர்க் கோலத்துக்கு இணங்க, சிங்கமும் கோபத்தால் வாலை உயர்த்தியவாறு காண்கிறது.



தூணின் நடுப்பாகத்தில் மேற்கு நோக்கியவாறு அமைந்திருக்கும் இச்சிற்பம் மிகச் சிறியது. எனினும் சிங்கத்தின் உக்கிரப் பார்வையும், தேவியின் இடையழகும் கைகளின் அமைப்பும், 'இதுவும் ரசிக்கத்தக்க ஒரு நல்ல சிற்பம்தான்' என்று அறிவிக்கின்றன.


மகிஷாசுரமர்த்தினி

(மகா கோரமான காட்சி)

கல்யாண மண்டபத்தில் நுழைந்தவுடன் இருபுறமும் குதிரைத் தூண்களைப் பார்க்கிறோம். முதல் தூணின் நடுவே ஒரு கோர - பயங்கர - பரிதாபக் காட்சி.

கடைசியில் ஒன்றும் செய்ய முடியாமல் போகவே மகிஷம் மண்டி போட்டுக் கீழே சாய்ந்துவிடுகிறது. அதன்மேல் ஏறிக்கொண்டு ஒரு கையால் வாலைப் பிடித்து முறுக்கியவண்ணம், உருவிய கத்தியை அந்த உடம்பிலே செலுத்திவிடுகிறாள். மற்ற இரு கைகளில் ஏந்திய திரிசூலத்தையும் இரக்கமில்லாமல் செலுத்திவிடுகிறாள், தாயான தேவி! மகிஷத்தின் பின்புறம், சிங்கம் பாய்ந்து ரத்தத்தைக் குடித்துக் கொண்டிருக்கிறது.

திரிசூலம் பின்னமடைந்திருக்கிறது. பின்னப்படுத்தியது மகிஷாசுரனல்ல! மதவெறி என்ற அசுரனா? அல்லது ஒருவேளை பரிதாப - பயங்கரத்தைப் பார்க்கச் சகிக்காத யாரோ ஓர் ஆசாமிதான் தேவி கையில்


சில்பி

பிடித்துள்ள சூலத்தைப் பின்னப்படுத்தி இருப்பானா?

ராமாயண பாகவதச் சிற்பங்கள்

மகிஷாசுரமர்த்தினி சிற்பத்தின் மேல் பாகத்தில் ராம - லட்சுமணரையும் அனுமாரையும் காண்கிறோம். ராம பிரானின் திருவடிக்கு அருகே அனுமார் அமர்ந்திருக்கிறார். பக்கத்தில் லட்சுமணன் வணங்கியவாறு நிற்கிறான். இந்தத் தூணின் கீழ்ப்பாகத்தில், கண்ணனின் வெண்ணெய் திருடும் பால லீலையைப் பார்க்கிறோம்.

இரண்டு தோழர்களின் உதவியுடன் கண்ணன் ஒரு வீட்டிலே வெண்ணெய் திருட வந்திருக்கிறான். ஒரு பையனின் முதுகுமேல் ஏறி வெண்ணெய் இருக்கும் உறியை எட்டிவிடுகிறான். ஓர் உறிமேல் உள்ள கலயத்தைச் சாய்த்து வெண்ணெய் எடுக்கிறான். அதற்குள் அவசரம் கீழே இருப்பவர்களுக்கு, கைகளை நீட்டுகிறார்கள்!

முதல் உறியைப் பிடித்து வெண்ணெய் எடுக்கும்போது, அது சாய்ந்து மற்ற உறிகள் மீது இடித்துக் கொண்டிருப்பதுதான் எவ்வளவு இயற்கையாக இருக்கிறது! இதன் மேல் பாகத்தில் தயிர் மத்தும் காட்டியிருக்கிறார் சிற்பி.

எனினும் இத்தகைய பால லீலைக் காட்சியை நாம் பூர்ணமாக அனுபவிக்க முடியவில்லை. கண்ணனுடைய தலையும் கையும், பையனின் தூக்கிய கையும் பின்னமுற்று இருக்கின்றன!

இந்தக் காட்சித் தூணின் மறுபக்கத்தில் அனுமார் தமது இதயத்தில் கை வைத்த வண்ணம் ராமநாம ஸ்மரணை செய்து கொண்டிருக்கிறார்.

கலை அழகுக்கும் சமரச அழகுக்கும் ஒருங்கே சான்று இச்சிற்பங்களும். இத்தூணின் பக்கத்தை ஒரு பெரும் பூதம் தாங்கியவாறு காண்கிறது. இனி, இத்தூணின் பிரமிக்கத்தக்க காட்சி ஒன்றும் காண்போம்.

புலி வேட்டை (அபாய அழகு)

குதிரை மேலேறித் தலைவன் ஒருவன் படைகளுடன் புலி வேட்டை ஆடப் போய், குறிபார்த்துச் சூலத்தால் புலியைக் குத்துகிறான். புலியைப் பார்த்ததும் குதிரை கனைத்துக்கொண்டு காலைத் தூக்கியவாறு காணப்படுகிறது.

இதற்குள் வேறொருவன் தன் கத்தியால் புலியின் வாயில் குத்தி முனையை மறுபக்கம் வரச் செய்கிறான். இவன் தன் மற்றக் கையிலுள்ள ஈட்டியாலும் குத்துகிறான். புலி வேகமாய்ப் பாய்ந்து போராடியும் பயனில்லை.

மற்றத் தூணிலும் புலி வேட்டைக்குப் போகும் காட்சியைப் பார்க்கிறோம். குதிரையின் காலுக்குக் கீழ்ப்பாகத்தில் உள்ள சிறு சிற்பங்களில் குதிரைப் படைகளும் காலாட்படைகளும் காண்கிறோம்.

கொடுங்கை அழகும் இந்த மண்டபத்துக்கு ஏற்றவாறு இசைந்து விட்டது. இங்கும் மதவெறி. முதல் தூணின் மேல் பாகத்திலேயே கொடுங்கை பின்னமுற்று இருப்பதைக் காணலாம். நுட்ப வேலைப்பாடுகளைப் பார்த்து வியந்துகொண்டிருக்கும் நமக்கு, தூரத்திலே கோபுர வாசலையும் அந்தப் பெரிய கல்தொட்டியையும் பார்த்ததும் வியப்பு பிரமிப்பாகிறது.

அமரச் சிற்பிகளைப் புகழ்கிறோம். ஆனால், அந்த அசுர வெறியர்களையோ?

கலைப் பொக்கிஷத்தைக் காப்பாற்றுங்கள்



ஜடாமுடியில் இருக்கிறாள் கங்காதேவி. பார்வதிதேவிக்கோ தம்முடைய திருமேனியின் ஒரு பாதியையே அளித்துவிட்டார். இப்படி நினைக்கிறோம் நாம். கங்கையம்மாளும் இப்படியே நினைக்கக்கூடும். ஆனால், உமையம்மையால் இப்படி நினைக்க முடியவில்லையாம்.

ஒரு காதல் நாடகம்

'நமக்குத் தெரியாமல் வேறொரு பெண்ணைத் தலையில் தூக்கி வைத்துக்கொண்டு கூத்தாடுகிறாரே!' என்றுதான் உமாதேவி நினைக்கிறாள்; கோபிக்கிறாள்.

ஆனால் 'கூத்தாடி', இதற்கெல்லாம்

கவலைப்படுகிறாரா? 'இப்படிக் கண்டு பிடிக்கப்பட்டோமே!' என்றுதான் வெட்கப்படுகிறாரா? 'இப்படிக் கண்டுபிடிக்கப் பெற்றோமே!' என்று திருப்தி அடைந்ததுபோல் ஆறிய, குளிர்ந்த, காதல் - நோக்குடன் சிறிய தேவியாரை அருளிப் பார்த்துத் தம் பக்கம் திருப்பிச் சாந்தப்படுத்தவும் துணிகிறார்.

இந்தக் காதல் - நாடகம் எவ்வளவு இயற்கையாக நடைபெறுகிறது! இதற்குள், கங்காதேவி ஜடையிலிருந்து பிரவகிக்கும் கங்கையாறுதான் என்பதையும் கண்டுகொள்ள முடிகிறது.

புண்படுத்தும் பின்னம்

ஆனால், இந்தப் பிரவாகத்தை ஒரு கையால் தாங்கியவாறு விட்டுப் பூமியிலுள்ள நந்தியின் தாகம் தணியச் செய்வதை, நாம் இப்போது பார்க்கக் கொடுத்து வைக்கவில்லை. மனோதர்மத்தால் சிருஷ்டி செய்து கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. அந்தக் கைதான் பின்னமடைந்து இருக்கிறதே!

சிற்பத்தின் முன்பாகத்தைச் சிங்கம் தாங்கியவாறு ஒரே கல்லில் காட்டியுள்ளார் சிற்பி. தாரமங்கலத்தில் பெரிய உருவில் பார்க்கும் சிற்பம்தான் இங்கே சிறிய உருவில் 20 அங்குல உயரத்தில் காணப்படுகிறது. வேலூர்க் கல்யாண மண்டபத்தில், மேடையின் கிழேயுள்ள தூணில் வடக்கு நோக்கி அமைந்திருக்கிறது இச்சிற்பம்.

நுண்ணிய அழகுச் சின்னங்கள்

எதிர்ப்பக்கத்திலே, உருவங்கள் இல்லாத... இக்கோயிலிலேயே மிகவும் அழகான, தூணைப் பார்க்கிறோம். இந்த ஒரே கல்தூண், மற்ற மூன்று பக்கத்திலும் சிறிய தூண்களைத் தாங்கியவாறு காண்கிறது.

இம்மூன்று சிறிய தூண்களையும் நுட்ப வேலைப்பாடு அமைந்த மெல்லிய கொடிகளால் சேர்த்து ஒன்றுபடுத்தி இருக்கிறார்கள். சன்னக் கொடிகளைத் துளைத்துக் காட்டியிருக்கிறார்கள்.


இம்மாதிரியாக நுட்ப வேலைப் பாடுகள் பல, கல்யாண மண்டபத்தில் காணப்படுகின்றன. இங்கு காணும் ஒரு சிறிய தூண், மண்டப ஓரத்தில் காணப்படுகிறது.

நாம் முன்பு பார்த்த, 'யாளி-சிங்கச் சண்டை'யும். 'முள் எடுக்கும் விந்தை'யும் - அதே தூணின் பின்பக்கம்தான் இங்கே காண்பது. இச்சிறிய தூணின் பின்புறம் தெரியும் கோடியில் உட்கார்ந்து இம்மண்டபத்தை வடக்கு நோக்கியவாறு பார்த்தால், முன்பு நாம் கண்ட காட்சி தெரியும். இந்தப் பெரிய தூண்கள் இரண்டுக்கும் நடுவே உள்ள மேடைதான், கல்யாண வைபவங்களை ஒரு காலத்தில் கண்டு களிகூர்ந்தது!

காப்பாற்றும் கடமை


ஆனால் - பரிதாபம்! - இந்தப் பெரிய தூணின் நேர் வடக்கே உள்ள தூண் இயற்கைக் கோளாறு காரணமாக மிகவும் பின்னமடைந்து இருக்கிறது. இதில் காட்டிய மூன்று சிறிய தூண்களிலும் மேலிருந்து அடிவரையில் மண்டபத்தின் கனம் தாங்காமல் பிளவுகள் ஏற்பட்டிருக்கின்றன. இது ஈடுசெய்ய முடியாத நஷ்டம்.

இருப்பினும், இந்தத் தூணுக்கு மேலுள்ள கல் உத்தரத்தில் பின்னம் ஏற்பட்டதைத் தற்காலிகமாகக் காப்பாற்றியுள்ளனர். மற்றொரு தூண் சாய்ந்து மண்டபத்தின் ஒரு பாகமே விழுந்துவிடுமோ என்றிருந்த நிலையையும் திறமையுடன் சமாளித்து இருக்கிறார்கள். இதனால்தான் இப்போது நாம் இம்மண்டபத்தின் உள்ளே தைரியமாகச் சென்று பார்க்க முடிகிறது.



இப்படி உதவி இருப்பவர்கள் இன்னும் அதிகமான கடமை உணர்ச்சியுடன், வடக்குப் பக்கம் இருக்கும் தூணை மேலும் பின்னம் அடையாமல் வெகு சீக்கிரம் கவனித்துக் காப்பாற்றுவார்களானால், கலா ரசிகர்களின் நன்றிக்கும் 'கங்கை உத்பவ'ரின் கருணைக்கும் உரியவர் ஆவார்கள்.

நாட்டியக் கச்சேரி



கல்யாணத்தில் நடனக் கச்சேரியும் அவசியமான அம்சம் அல்லவா? கல்யாணம் பார்க்க வந்து, நடனம் பார்த்துக் கொண்டே நிற்கிறோம்.

கைகளில் பூச்செண்டு வைத்துக் கொண்டு ஒருவரை ஒருவர் அணைத்தபடி இரண்டு நாட்டிய நிபுணர்கள் - நடன தம்பதிகள் - ஆடுகிறார்கள்.

பெண்ணின் தலை அலங்காரம் தான் எவ்வளவு அழகாயிருக்கிறது! நடன கலா சௌந்தரியத்துக்கு இசைந்த அலங்காரங்களைத் தம்பதிகள் இருவரும் அணிந்து இருக்கின்றனர்.

உடம்பில்தான் எத்தனை நெளிவுகள்! எத்தனை பாவங்களை எவ்வளவு அனாயாசமாகக் காண்பிக்கிறார்கள். நடனப் பெருங்கலையில் உன்னத நிலை அடைந்தவர்கள் என்பதில் ஐயமும் உண்டோ?

கல்யாணம் பார்க்கத்தான் கொடுத்து வைக்கவில்லை. கால்-சலங்கைகள் 'கலீர் கலீர்' என்று சப்திக்க, இவர்கள் ஆடும் ஆட்டத்தை வைத்தக் கண் வாங்காமல் பார்த்துக்கொண்டே இருக்கிறோம்.

அந்தக் கால்-சலங்கைகளின் சத்த ஜாலங்கள் இன்னும் ஒலித்துக் கொண்டு இருப்பதாகவே படுகிறது ரசிகர்களுக்கு. என்ன கலை வசீகரம் - இதோ இந்த நடனச் சிற்பத்திலே. ஆம்; சிற்பத்திலே காணும் நடனம்தான் இது.

ஆனால், 'சிற்பத்திலே காணும் நடன தம்பதிகள்' என்றால் போதுமா? சிற்பத்திலும் நடனமாடிக் கொண்டு இருக்கிறார்கள் இந்த நடன தம்பதிகள்! அதாவது, சிற்பமே நகர்ந்துகொண்டு இருப்பது போலக் காண்கிறது. இதுவும் ஒரு கலை வசீகரம்.

எந்தத் திசையிலிருந்து பார்த்தாலும் இந்தச் சிற்பம் நகர்ந்து கொண்டு இருப்பதாகவே தோன்றுகிறது. உயிர்ச் சிற்பம் இது. இந்த வசீகர உயிர்ச் சிற்பமே படத்தில் இருவிதமாகக் காட்டப்பட்டுள்ளன.


ரிஷி குலப் பெண்

இதே தூணின் கீழ்ப் பக்கத்தில் பிட்சாண்டவருக்கு அன்னபிட்சை போட வந்திருக்கும் ரிஷி பத்தினியையும், தன் காலிலுள்ள முள்ளைத் தானே எடுக்கும் வேடப் பெண்ணையும் காண்கிறோம்.

முதலில் ரிஷி பத்தினியைப் பாருங்கள். ஒரு கையில் அகப்பை வைத்துக்கொண்டு, மற்றக் கையினால் நழுவும் ஆடையைச் சரிப்படுத்திக் கொண்டிருக்கிறாள். உடல் அமைப்பும் கொண்டை அலங்காரமும் எவ்வளவு அழகாக அமைந்திருக்கின்றன! நாணிக் கோணி நிற்கும் அமைப்பிலேதான் எவ்வளவு உணர்ச்சி ததும்புகிறது!

சிற்பியின் கைத்திறனும் கலையில் இவருக்குள்ள ஈடுபாடும் நன்றாய்ப் புலனாகின்றன இச்சிற்பத்திலே!

கதையில் ரிஷி பத்தினிக்குத் தோல்வி, இங்கே கலைக்கு வெற்றியாகிவிட்டது.



வேடர் குலப் பெண்

அந்த 'வேடர் குலப் பெண்'ணிலும் சிற்பத்திறன் பிரமாதமாகப் பிரகாசிக்கிறது.

வேட்டை நாய்கள் சகிதம் வேட்டைக்காகக் காட்டுக்கு வந்திருக்கிறாள். வரும் வழியில் காலில் முள் தைத்துவிடுகிறது. முன்வந்த சிற்பம் ஒன்றில், முள் எடுக்க ஆள் கிடைத்தது. இவளுக்கு அந்தச் சௌகரியம் இல்லாததால், பாவம், தானே முள் எடுத்துக்கொள்கிறாள்!

ஆனால் இவளுக்கும் இவள் நிலையைப் பார்த்துப் பரிதாபப்படத் தோழமையே இல்லையென்று சொல்ல முடியுமா? கவனித்துப் பாருங்கள்.

நாய்களில் ஒன்று, எஜமானிக்கு நேர்ந்துவிட்ட கஷ்டத்தை எவ்வளவு பரிதாபமாய்ப் பார்த்துக்கொண்டு இருக்கிறது! இவள் வந்த காரியத்தையும் மற்ற நாய் கவனிப்பதுபோலத் தோன்றுகிறது. அதாவது, தன் எஜமானிக்கு ஏதாவது வேட்டை கிடைக்குமா என்று சுற்று முற்றும் பார்க்கிறது.

சாதாரணமான பார்வையா அது? கவனித்துப் பாருங்கள். இந்த நாய் தன் காதை முன்பக்கம் திருப்பி, ஏதாவது அரவம் கேட்கிறதா என்று கவனித்துக் கொண்டு இருக்கிறதல்லவா?

இந்த வேடப் பெண்ணின் உடல் அமைப்பும் கலைக்கு வெற்றிதான். இறகுகளையே கிரீடமாகவும் ஆடையாகவும் அணிந்திருக்கிறாள். கூந்தல் அழகாய்த் தொங்குகிறது. வில்லை ஒரு கையில் தாங்கிக்கொண்டு அதே கையால் முள் தைத்த காலைப் பிடித்துக் கொள்கிறாள். அம்பறாத் தூணி தாங்கிய கை ஓர் அம்பினால் முள் எடுக்கிறது.

எவ்வளவு பொருத்தமாய் அமைந்து விட்டது சிற்பம்! இதற்கும் முக்கியமான பின்னம் ஏற்பட்டுவிட்டது. மூக்கு பின்னமாகிவிட்டது. மிகவும் சிறிய பின்னமானாலும் உருவத்துக்கு முக்கிய அம்சமாக இருப்பதால் படத்திலே சேர்த்துக் காட்டப்பட்டுள்ளது.

ரிஷி குல சுந்தரியின் 'தாழ்வை'யும் (அதாவது, வீழ்ச்சியையும்)' வேடர் குல சுந்தரியின் வாழ்வையும் சிற்பி சிறப்பித்திருக்கிறார்!

* * *

இந்தச் சிற்பத்துக்கு மேலே சிறிய உருவங்களில் பூதங்களும், அந்த உருவங்களுக்கு மேலே ராம - லட்சுமணர், அனுமார் முதலிய உருவங்களும் தோற்றம் அளிக்கின்றன.

இந்த இரு பக்கங்களிலும் கண்ட சிற்பங்கள் உள்ள தூண் (ஒரே தூண்), ஏற்கெனவே பார்த்தோம் இல்லையா- கிளியின் மீது ரதி அமர்ந்திருக்கும் சிற்பத் தூண் அதன் பக்கத்தில் இருக்கிறது.

சிந்திய செல்வம்

கிருஷ்ணா நதிக்கரையில் உள்ள பத்ராசலத்து ரெட்டியார், வேலூரில் கோட்டை கட்டினார்; கோட்டைக்குள் கோயில் கட்டினார். அந்த நாளிலே தமிழர்-தெலுங்கர் உறவு எப்படி? ஆந்திரர்கள், தமிழர் மீது ஆதிக்கம் செலுத்தினார்கள் என்று கருதுவது ஏமாற்றம்.

தமிழ் ஆதிக்கம்தானா?

கோயில் விஜயநகர பாணியில் அமைந்துள்ளது. 'அப்படியானால் விஜயநகர ஆதிக்கம்தானே? விஜயநகர ஆதிக்கம், ஆந்திர ஆதிக்கம்தானே?' என்று கேட்கலாம். விஜயநகர மகாராஜ்யத்திலே தமிழ்நாட்டுத் திருக் கோயில்களுக்கும் சமய ஆசாரியர்களுக்கும் விசேஷ ஆதிக்கம் உண்டு. விஜயநகர சக்கரவர்த்திகளின் குருமார் முக்கியமாகத் தமிழர்கள், அவர்களுடைய ஆக்ஞா சக்கரத்தின் அதிதேவதை தமிழ்த்தாய் என்றாலும் தவறாகாது.

பத்ராசலத்துக் கனவு பழுத்தது வேலூரிலே என்றால், தமிழகத்தின் பக்தி உணர்ச்சிதான் அப்படிப்போய் இப்படித் திரும்பிவந்து பலன் அளித்தது என்று சொல்லலாம். தமிழ் அன்னையின் தவ வலிமைதான் பத்ராசலத்துப் பொம்மி ரெட்டியைக் கருவியாகக் கொண்டு, வேலூர்க் கோட்டையாகவும் அதன் உள்ளிருக்கும் ஜலகண்டேஸ்வரர் - கோயிலாகவும் உருக்கொண்டது என்று கருதுவதுதான் சரியாகும்.

விஜயநகர ஆதிக்கம் என்ற வெளித் தோற்றத்துக்கு உள்ளுயிர், தமிழ் நாகரிகம். தமிழ்ப் பண்பாடு; தமிழர் பக்தி, தமிழர் சிற்பத்திறன். இந்த உண்மைக்குப் பல சாட்சிகள்



உண்டு. ஒரு சாட்சி வேலூர்க் கோயிலும் கோட்டையும்.

எனினும், வேலூர்க் கோயிலையும் கோட்டையையும் பார்த்ததும், ஆந்திர நினைவும் வருவதில்லை; தமிழ் நினைவும் வருவதில்லை. 'ஒரு ஹிந்துவின் கோட்டை' என்ற நினைவுதான் எழுகின்றது.

சிற்ப வினோதங்கள்

முன்பு குதிரைத் தூண்களையும் மற்றத் தூண்களையும் ஒரே வரிசையாகக் கண்டீர்கள். அந்த வரிசையிலே கடைசியில் தெரியும் மூன்று தூண்களின் முன் பக்கங்களையே எதிரில் பார்க்கிறீர்கள்.

அதோ தெரியும் மண்டபத்தில் கடைசியில் போய்ச் சிறுவர்கள் உட்கார்ந்துகொண்டு, ஒரே முகத்தோடுகூடிய யானையையும் ரிஷபத்தையும் காட்டி மகிழ்வார்கள். எப்படி தெரியுமா? யானையின் பக்கத்தை மறைத்துப் பார்த்தால் யானையின் தந்தம் ரிஷபத்தின் கொம்பாகவும் தனியாகத் தெரியும்.

முதல் தூணில் சிங்கத்தின் வாயிலிருந்து வரும் கொடியில் மூன்று பேர் காணப் படுகிறார்கள். சிங்கம், கொடி முதலியவற்றைத் தாங்கிக்கொண்டு கீழே யாளி காணப்படுகிறது. சிங்கத்தின் கால் நகங்கள் யாளியின் உடம்பில் பதிந்து காண்கின்றன.

அடுத்த தூணில் சிங்க முகமும், அதில் துதிக்கையும் காண்கிறோம். இந்த இரண்டு உருவங்களிலும் இருவர் லகானைப் பிடித்துக் கொண்டு இருக்கிறார்கள். ஒரு சிங்கத்தின் மேல் சிறிய உருவில் ஒரு மனிதன் காணப்படுகிறான். கொடிகளைக் கீழே ஒரு யாளி துதிக்கையால் பிடித்துக்கொண்டு இருக்கிறது.யாளித் தூணை இப்புறம் பார்த்தாலும் மறுபுறம் பார்த்தாலும், மனிதன் நம்மைப் பார்த்துக்கொண்டு ஒரு கையால் லகானைப் பிடித்து மறுகையால் ஓட்டுவதுபோலக் காணப்படுகிறது.

'இது, கல்யாண மண்டபம்' என்று எப்படியும் நிச்சயமாகச் சொல்லிவிடலாம். தூண்களின் கீழே உள்ள வரிசைகளில் எத்தனை தினுசாக நடன மாதர்கள் ஆடுகின்றார், கல்யாணத்தைச் சிறப்பிக்க!

மன்மதன், ரதி முதலிய சிற்பங்கள் சிறு உருவில் மலிந்து காணப்படுவதும் ஒரு சாட்சி.

எங்கே பார்த்தாலும் சிங்காரத் தெய்வங்களும் நாட்டியங்களுமாக இருப்பதுடன், மண்டபத்தின் உள்ளும் கல்யாணக் கோலங்கள்.

இங்கும் கொடுங்கையின் அமைப்பிலே கவர்ச்சியைக் காணலாம். எங்கே பார்த்தாலும் கொடி வேலைகள்.


கோயிலில் இத்தகைய கல்யாண மண்டபம் விஜயநகர காலத்துச் சிற்பங்களில் மிகவும் முக்கிய அம்சமாகும். இது, அச்சிற்பிகளின் அழகிய கற்பனைக் காட்சிகளை நிரந்தரமாய்க் கல்லில் சமைக்க உதவிய சாதனம்.

ஆனால், நிரந்தரமான அழகுகளுக்கு நிரந்தரமான குறைகளும் ஏற்பட்டிருக்கின்றன. காலக்கிரமத்தில் அல்ல, மனிதனுடைய அக்கிரமத்தினால்; மதவெறி கலைக்கு இழைத்த கொடுமையால்.


14-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றிய அழகுப் பொக்கிஷம், 17-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் முகம்மதியர் ஆதிக்கத்தில் வந்தது.

கல்யாணத்தில் சிந்திச் சிதறிக் கிடக்கும் செல்வங்களே இன்றைய வேலூர்ச் சிற்பக் காட்சிகள்!


ஜலகண்டேஸ்வரரின் ஜகன் மோகன மாயா சக்திகளை உள்ளபடி அறிவார் யாரோ?


சில்பி

விநாயக லீலை



குழந்தைகளின் விளையாட்டை, 'லீலைகள்' என்று போற்றுகிறோம்; பார்த்துப் பார்த்துப் பரவசமாகிறோம். 'ஸ்ரீ கிருஷ்ண லீலைகள்' என்று பிரசித்தமாக அறிஞர்களும் ரசிகர்களும் ஒருங்கே ஈடுபடுகிறார்களே, பக்தர்களும் ஞானிகளும் ஒருங்கே காதலிக்கிறார்களே,



அந்த லீலைகள் பெரும்பாலும் குழந்தைத் தெய்வமாகவே கிருஷ்ணனைச் சுட்டிக் காட்டுகின்றன. முருகனையும் குழந்தைத் தெய்வமாகப் போற்றுகிறோம். ஆனால், விநாயகரைக் குழந்தையாகக் கருதி இருக்கிறோமா?

விநாயகக் குழந்தை

விநாயகரும் குழந்தைப் பருவத்தில் தவழ்ந்து விளையாடித்தானே இருக்க வேண்டும்?

தும்பிக்கையில் கொழுக்கட்டை வைத்துக்கொண்டு தவழ்ந்து போகும் போது ஒரு சமயம் பின்னே சத்தம் கேட்டு திரும்பிப் பார்த்தாராம். "எனக்குக் கொடு" என்று மற்றக் குழந்தை கேட்டது. ஆனால் கொடுத்தாரா?

கொடுத்துவிட முடியுமா? கண்ணனும் வெண்ணெயும் போல் அல்லவா விநாயகரும் கொழுக்கட்டையும்!


தும்பிக்கையில் இருந்த மோதகத்தைக் கையில் எடுத்துக்கொண்டு கேலி செய்தார், 'கெக்கே' என்று. குழந்தைச் சேட்டைகள் விநாயகக் குழந்தையைத் தான் விட்டுவிட முடியுமா?

எங்கே கண்டீரையா இந்த விநாயக லீலையை? பார்த்ததுண்டா, கதை கேட்டதுண்டா? எந்தப் புராணத்திலே?

புராணக் காலத்தில் அல்ல; இந்தக் காலத்திலும் காண்கிறோம். வேலூர்க் கல்யாண மண்டபத்துக்கு எதிரேயுள்ள மண்டபத்தில் மேலே சொன்ன விநாயக லீலை - விநாயகக் குழந்தையின் சேட்டை - எவ்வளவு இயற்கையாய்க் காணப்படுகிறது!

சிற்பங்களில் விசேஷ வேலைப்பாடு இல்லைதான். ஆனால், சாதாரணமாய் விநாயகர் சம்பந்தமாகக் கண்டிராத சிற்ப அதிசயமல்லவா?

தொந்தியும் தொப்பையுமாகக் குழந்தை தவழ்வது கண்டதும், 'விளையும் பயிர் முளையிலே' என்ற பழமொழி நினைவுக்கு வருகிறது. 'பெரிய தொந்திக் கணபதியின் அப்பனா நீ பாப்பா?' என்று கொஞ்சத் தோன்றுகிறது.



வளர்ந்த விநாயகரின் லீலைகள்

தொந்திக் கணபதி சுறுசுறுப்புள்ள யுத்த வீரராகவும் வளர்ந்திருக்கிறார். முன்பு நாம் பார்த்த, சிங்கத்தின் மேல் அமர்ந்த துர்க்கைச் சிற்பம் உள்ள தூணின் கீழ் விநாயகரைப் போர்க் கோலத்தில் சந்திக்கிறோம்.

இந்த உருவத்தில் வளர்ந்த தொந்தி; வில்லும் அம்பும் இரு கைகளில்; மற்ற இரு கைகளில் பாசமும் அங்குசமும். பூதகணங்களுடன் காணப்படுகிறார்.



இந்த தூணின் மறுபக்கம் சக்தியை வைத்துக்கொண்டும் காட்சியளிக்கிறார்.

கடைசியாகத் தம்மால் ஓடியாட முடியாமற்போனதுபோல் ஒரு வாகனத்தைத் தேடிப்பிடித்துச் சவாரி செய்கிறார். அந்த மூஷிக வாகனம் எஜமானைத் தாங்க முடியாமல் முன் பாரம் அதிகரிக்கத் திணறுவதுபோல் காணப்படுகிறது பாருங்கள்!

சீறிய செல்வம்

'சாந்தகுண பூஷணம்' என்கிறோம். சாந்தத்தை, ஆபரணம் என்கிறோம்; செல்வம் என்கிறோம். சிற்றத்தை இப்படிப் பாராட்டுவதில்லை. ஆனால் கலைப் பொக்கிஷத்திலே ஆறிய செல்வமும் உண்டு; சீறிய செல்வமும் உண்டு.

நடராஜர், கண்ணன், ராமன் முதலான ரூப சௌந்தரியங்கள் ஆறிய செல்வம். நரசிங்கம், வீரபத்திரன் முதலான பயங்கர சௌந்தரியங்கள் சீறிய செல்வமாகக் கலைஞர்களால் போற்றப்படுகின்றன.

கல்யாணத்திலே கோரம்

சாக்ஷாத் பரமேஸ்வரனுடைய கல்யாண மண்டபத்திலே வருகிறவர், போகிறவர்கள் அதிகமாய்ப் பார்த்திருக்க முடியாதபடி பின்பக்கத்தில் வந்து சுவரை நோக்கியவாறு நிற்கிறார் வீரபத்திரக் கடவுள். 'கல்யாண மங்கல வைபவங்களில் நம்முடைய வீர முகம், கோர முகம் அதிகமாய்த் தெரிய வேண்டாம்' என்று கருதியவர்போல நிற்கிறார்.

கோபம் - அற்ப குணம். 'சொற்பப் பைத்தியம்' என்றுகூடக் கோபத்தைக் கீழ்ப்பாக்கத்திலே தள்ளிவிடவும் பார்க்கிறோம். ஆனால் அற்ப சொற்பமான கோபமா வீரபத்திர கோபம்? மகத்தான இந்தக் கோப ஆவேசமும் தர்ம ஆவேசம்தான்; சிஷ்ட பரிபாலன துஷ்ட நிக்கிரக வெறிதான். ஆனால் அந்த வெறி கல்யாண மண்டபத்திலே எதற்காக?

கல்யாண மேடையில் மேல் பக்கம் உள்ள தூணின் கீழ்ப்பாகத்தில் காண்கிறோம் இந்தச் சிற்ப அற்புதக் கோப ஆவேசத்தை. வேலூர்க் கல்யாண மண்டபத்திலேதான்.

வேலூரும் கிருஷ்ணாபுரமும்

இந்த வீரபத்திரக் கடவுள், வேறொரு வீரபத்திரக் கடவுளை நினைவூட்டுகிறார். வேலூர், கிருஷ்ணாபுரத்தை ஞாபகப் படுத்துகிறது. இங்கே நான்கு கைகளால் வெளிப்படும் உக்கிரத்தை, அங்கே இரண்டே கைகளால் காட்டியுள்ளனர்.

இங்கும், கேடயம் உள்ள கை மேலே தூக்கியிருக்கிறது; கத்தி கீழே ஊன்றி இருக்கிறது. மற்றக் கைகளில் வில்லும் அம்பும் காணப்படுகின்றன.

ஒரு கால் அழகாய்த் தூக்கியிருக்கிறது. கிருஷ்ணாபுரத்திலே, தூக்கியகால் ஒருவகைப் பிடிப்பும் இல்லாமல் தனித்துக் காண்கிறது. இங்கோ, அந்தக் கால் தட்சனை உதைத்தவாறு காண்கிறது.



தட்ச சம்ஹாரம்

கிரீடம் உதைபட்டுக் கீழே விழுந்து விடாதபடி சமாளித்துக்கொள்ளும் தட்சனைத்தான் பாருங்கள்!

தட்ச சம்ஹாரத்தைத் தூணின் மறு பக்கத்தில் காண்கிறோம். தட்சனுடைய சிகையை ஒரு கையால் பற்றியவண்ணம் மற்றக் கையிலுள்ள கத்தியால் சிரசை அறுக்கும் கோரமான சிற்பம் அது.

ஆனால் நாம் அந்தக் கோரத்தை இப்போது அங்கே பார்க்க முடியாத நிலையில்தான் இருக்கிறோம். கத்தி ஏந்திய கை பின்னமாகிவிட்டதுதான் காரணம். கோரத்தைப் பார்க்கச் சகிக்காமலா, தட்சன் மீது அனுதாபம் காட்டியா, வீரபத்திரரின் கத்தி ஏந்திய கையைப் பின்னமாக்கி இருக்கின்றார்? இல்லை; கலையைப் பார்க்கச் சகிக்காத கோரம்தான்!

உயர்ந்த வேலைப்பாடு

கிருஷ்ணாபுரத்து வீரபத்திரர் மனுஷ்ய ஆக்ருதியில் இருக்க, இங்கே காலால் உதைத்துக்கொண்டிருக்கும் சிற்பம் ஒரே அடி உயரத்தில் உயர்ந்த வேலைப்பாடுகளுடன் விளங்கும் அதிசயத்தைப் பார்க்கிறோம். உயரத்தில்தான் வித்தியாசம்; வேறு எந்த விதத்திலும் வேலைப்பாடுகளில் குறைவில்லை.

இந்தச் சிற்பத்தின் இடை, கால்கள், கைகள் எல்லாம் தூணிலிருந்து தனித்துக் குடைந்து காட்டப்பெற்றிருக்கின்றன.

நெற்றிக்கண், விபூதிப் பட்டை ஆகிய சிவ சின்னங்களுடன் தலையிலுள்ள ஆபரணத்தையும் பாருங்கள். லிங்கங்களால் அழகாய்த் தலையைச் சுற்றிக் கட்டியிருப்பதும், 'இதோ சிவனுடைய அம்சம் ரௌத்ரமாக உருவம் பெற்றிருக்கிறது' என்று தெரிவிக்கிறது.

இவ்வளவு அருமையான சிற்பம் தூணின் பின்பக்கம், மண்டபத்துக்குப் பின்னே, இருட்டில் ஒளிந்திருப்பதால் அதிகமான ரசிகர்களுக்கு வீரபத்திரக் கடவுள் தம்முடைய 'ரௌத்ர' சௌந்தரிய தரிசனம் அளிக்க முடியவில்லை!

எனினும், இத்தகைய வேலைப் பாடுகளையும் ஊன்றி நோக்கி ரசிக்கக் கற்றுக்கொள்ளும்போதுதான் நாம் நம்முடைய சிற்பச் செல்வத்தின் அருமை-பெருமைகளை உள்ளவாறு அறிந்துகொள்ள முடியும்.

கள்ளையும் தீயையும் சேர்த்து நல்ல
காற்றையும் வான வெளியையும் சேர்த்து,
தெள்ளு தமிழ்ப்புல வோர்கள் – பல
தீஞ்சுவைக் காவியம் செய்து கொடுத்தார்

என்கிறாரே பாரதியார், அத்தகைய காவியம் ஒன்றைக் கல்லிலே காண்கிறோம் வேலூர்க் கல்யாண மண்டபத்திலே.

உள்ளத்திலே நித்ய கல்யாணம்

'அழகே உண்மை; உண்மையே அழகு' என்று சொல்வதுண்டு. 'சோகமே உண்மை' என்றும் சொல்வதுண்டு. சோகத்திலும் கஷ்டங்களிலும்கூடக் கலைஞன் கலையழகு காண்கிறான்.

கலையிலே கஷ்டம்

வேலூர்க் கல்யாண மண்டபத்தின் முன் பக்கத்திலே, சிங்கத் தூண்களிலேயே மிகவும் அழகான வேலைப்பாடுகளுடன் கூடிய தூண் இருக்கிறது. அதை எதிர்ப்பக்கத்தில் பாருங்கள்.

இங்கே பார்க்கும்போது இந்தத் தூணில் மிகவும் கஷ்டப் படுகிறவர்களைப் பார்த்து விட்டுத்தான் மேலே பார்க்க வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

தூணின் அடிப்பாகத்தில் அசுரன் ஒருவன் ஒரு பெரிய



காரியத்தில் ஈடுபட்டிருக்கிறான். தாங்க முடியாத பாரத்தைத் தூக்குகிறான் என்பதை அவன் கண் விழி பிதுங்குவதிலிருந்தே ஊகித்துக்கொள்ளலாம்.

யானையின் இரு கால்களைத் தன் கைகளால் தாங்கியவாறு காணப்படுகிறான் என்றால், பாரம் பெரும் பாரம்தானே!

யானைமீது நிற்கிறது சிங்கம். துளிகூடக் கஷ்டம் தெரியாத சிங்கத்தின் கால் நகம் யானையின் தேகத்தில் பதிந்திருக்கிறது. ஆனால், யானை வீரிட்டு மேலே முகத்தைத் திருப்பிக் கோபத்துடன் துதிக்கையால் சிங்கத்தின் காலைப் பிடித்துத் தூக்கி எறிய முயல்வதைப் பார்க்கிறோம்.

கலையில் 'தீர்மானம்'

இருபுறமும் தூணில் யானை காணப்படுகிறது. நடுவே குதிரை முன்காலைத் தூக்கிக்கொண்டு. ஒரு சிப்பாய் இருப்பதையும் காண்கிறோம்.

சிப்பாய் குதிரையின் லகானைப் பிடித்துக்கொண்டு இருப்பதிலிருந்து, அவனிடம் அது 'சொன்னபடி கேட்கும் பிள்ளை'யாய் இருக்கிறதென்று தெரியவருகிறது.

சிங்கத்தின் வாயிலிருந்து கீழே தொங்கும் கொடி வேலைப்பாடும், தேகத்திலுள்ள வேலைப்பாடுகளும், கொடி வேலையில் சிற்பியின் 'தீர்மானமான கை'யை நினைப்பூட்டுகின்றன.

தூணின் மற்றப் பாகத்தில் கீழே கோதண்டராமன், மகா விஷ்ணு முதலானவர்களும், மேலே முனிவர்களும் காணப்படுகிறார்கள்.

அதோ கல்யாண மண்டபத்தை நோக்கியவாறு இருக்கும் நந்தி.

* * *

இங்குள்ள ஒவ்வோர் உயிர்ச் சிற்பமும் 'உங்களோடு வந்து விடுகிறோமே!' என்று கொஞ்சுவதுபோலத் தோன்றுகிறது. வந்து, நம் உள்ளத்திலேயே நிரந்தரமான இடம் தேடிக்கொள்ளப் பார்க்கிறது.

கல்யாண மண்டபத்தைக் கலா ரசிகர்கள் உள்ளபடியே அனுபவித்துவிட்டுத் தத்தம் ஊருக்குத் திரும்பிவந்த பின்பும், ஒரே நித்ய கல்யாண மகோத்ஸவம்தான் உள்ளுக்குள்ளே!

திருபுவன மலர் மோகினி!



பூச்சூட்டிக் கொள்வதில் பெண்களுக்குள்ள மோகம் பிரசித்தமானது. அதிலும், பூச்செடியில் இருந்து பூக்களைப் பறித்துச் சூட்டிக் கொள்வதில் சில பெண்களுக்கு அலாதி மோகம், அடுப்பிலிருந்து சுடச்சுடத் தோசை சாப்பிடுவதில் சிலருக்குள்ள ஆசைபோல. சூடு ஒரு ருசி; புதுமை ஒரு சுவை.

பூக் கொய்யும் அழகு

ஒரு மோகினிப் பெண் பூச்செடியின் கிளையை மெள்ள வளைத்து நுனியிலுள்ள பூக்களை லாகவமாய்க் கொய்துகொண்டு இருப்பதே ஒரு மோகனக் கோலம்தான்.

அதோ பாருங்கள், அந்தப் பெண் கொடி பூச்செடி மீது ஒய்யாரமாகச் சாய்ந்து, 'மலர்த் தோழி! தரமாட்டாயா எனக்கும்?' என்று கிளையை வளைத்து, மலர்களைத் தன் கை - மலர்களால் கொய்துகொண்டிருப்பதை.

கூந்தலழகு

இப்படிக் கொய்யும் பூக்களும் கூந்தலில் இடம் பெற்றுவிடும். அந்த முடிப்பில் ஏற்கெனவே சொருகியுள்ள பூக்களே சாட்சி. கூந்தலின் முடிப்பைத்தான் பாருங்கள். அவிழ்த்துவிட்டால் இடுப்பின் கீழே வந்து தொங்கும் - இல்லையா? நெற்றியிலுள்ள கேச ஜாலம் முன்பக்கமாய்ச் சுருண்டு காண்கிறது.



அழகு மாட்சி

அந்த அழகுப் பெருமிதம்தான் கொஞ்சமோ? ஒரு காலை ஒய்யாரமாகச் செடிமேல் வைத்துக்கொண்டு இருக்கும் காட்சியே, அந்த அழகு ராணிக்கு 'மாட்சி' தருவதுபோலவும், அந்த மாட்சிமையில் அவளுக்குப் பூர்ண நம்பிக்கை இருப்பது போலவும், நம்மையும் நம்பச் செய்துவிடுகிறது.

'ஒரு மோகனப் புன்னகை போதும், எந்த இதயத்தையும் வசமாக்க!' என்றும் நம்மை நம்பச் செய்கிறது.

தேகக் கட்டிலிருந்து யௌவன சௌந்தரியம் புலனாகிறது. யௌவனப் பெண்களுக்கு நகைகள் மீதுள்ள மோகம் அந்த அழகு - ராணிக்கும் பூர்ணமாக இருக்கிறதல்லவா?

இயற்கை – மோகினி

இடையிலிருந்து தொங்கும் 'கச்சை'தான் எவ்வளவு இயற்கையாகக் காற்றிலே பறந்துகொண்டு இருக்கக் காண்கிறோம். நகங்களின் இயற்கை - வளர்ச்சியைத்தான் பாருங்கள்!

இயற்கையோடு இயற்கையாக இசைந்திருக்கும் அந்த அப்ஸரஸ் ஓர் இயற்கை - மோகினியாகக் காட்சி அளிக்கிறாள் - நான்கடி உயரமுள்ள சிற்பத்திலே.

சிற்பமும் கோயிலும்

இரு படங்களும் ஒரே சிற்பத்தின் இரு தோற்றங்கள். திருபுவனம் கோயிலில் முக்கிய சந்நிதியான சரபர் சந்நிதியில் படிக்கட்டுகளின் மேலண்டையிலுள்ள சிலாரூபம் இது. இந்தக் கோயிலுக்கே ஒரு சிற்ப விசேஷம். சிலையிலே ஓர் இயற்கைக் கவிதை.

இந்தக் கோயிலில் பல சிற்பங்கள் பின்னம் அடைந்திருந்தும், இந்த

அருமையான கலைப் பொக்கிஷம் காப்பாற்றப்பட்டு வந்திருப்பதே நமக்கு ஒரு பாக்கியம்தான்.

கும்பகோணத்துக்குச் சமீபத்தில் உள்ளது திருபுவனம். பழைய பெயர் 'திருபுவன வீரபுரம்' - அந்த நீளம் குறுகித் 'திருபுவனம்' ஆகிவிட்டதென்று கோயில் கல்வெட்டிலிருந்து தெரிய வருகிறது.

ராஜராஜ சோழனின் வழிவந்த மூன்றாம் குலோத்துங்கன், கட்டிய கோயில். அமைப்பில் ராஜராஜன் கட்டிய பெரிய கோயிலை ஒத்திருக்கிறது. வடநாட்டில் வெற்றி காரணமாகத் திருபுவனம் முதலிய இடங்களில் பெரிய கோயில்களைக் கட்டினான் சோழ மன்னன்.

திருபுவனம் ஸ்வாமி கம்பஹரேஸ்வரர் - பயத்தைப் போக்கும் பரமேஸ்வரன். கோயில், தருமபுரம் ஆதின கர்த்தர்களின் மேற்பார்வையில் இருக்கிறது. கோயிலும் ஒரு வெற்றிச் சின்னம்; மலர் மோகினியும் கலையுலகில் ஒரு வெற்றிச் சின்னம்.

இயற்கையும் கலையும்

பொதுவாக நம் கலையில் இயற்கை உள்ளது உள்ளபடியே பிரதிபலிப்பது இல்லை என்று குறை கூறுவோர் உண்டு. அந்தக் குறையை நிறை செய்கிறாள் இந்த மலர் மோகினியாள்!

உண்மையில், இயற்கையைக் 'காப்பி' அடிப்பது கலையல்ல. அதுதான் 'கலை' என்றால், 'இயற்கையாகிய அசலே போதும்; கலை என்ற நகல் வேண்டாமே!' என்று வாதிக்கவும் கூடும். ஆனால், அந்த மலர் மோகினி இயற்கை மோகினியாக இருப்பதுடன் கலாமோகினியாகவும் காட்சி வழங்குகிறாள்.

ஏனென்றால், இந்த இயற்கை மோகினியைப் 'புகைப்பட' வர்க்கத்தில் சேர்க்க முடியாது. வாழ்க்கையின் புகைப்படமல்ல 'கலை' என்பது. வாழ்விலே பூத்தது கலை. பூக்களைத் தேர்ந்து, கொய்து, மலர்ச் செண்டோ மாலையோ கட்டுவதுபோல், வாழ்க்கைக் காட்சிகளையும் தேர்ந்தெடுத்து அழகு பெற ஒழுங்கு செய்துகொள்கிறான் கலைஞன். இத்தகைய இயற்கை - அழகுக் கலைதான் இந்தப் பூக்கொய்யும் சிற்பமும். இதனால்தான் இந்த மலர் மோகினி கலையுலகில் ஒரு வெற்றிச் சின்னமாகக் காண்கிறாள்!

'வாழ்க்கையை விட்டு விலகிப் போவதும் கலை இல்லை; வாழ்க்கையின் நகல் அல்லது புகைப்படமும் கலை இல்லை' என்ற இந்த உண்மையை நன்கு உணர்ந்துதான் இந்தச் சிற்பக் கலைஞர் இச்சிற்பத்தில் வெற்றி கண்டிருக்கிறார்.

* * *

எங்கே பார்த்தாலும் 'வன மகோத்ஸவம்' கொண்டாடும் இந்தக் காலத்திலே, 'இயற்கையோடு இசைந்த இன்ப வாழ்க்கை'யை நினைப்பூட்டும் இதுபோன்ற சிற்பங்களுக்கு விசேஷ மதிப்பு உண்டென்று கருதலாம்.

பலன் தரும் மரங்களோடு, வாழ்க்கையை அழகு செய்ய உதவும் பூச்செடி - கொடிகளுக்கும் வன மகோத்ஸவத்தில் இடமுண்டு என்பது திண்ணம். இந்த உண்மைக்கும் இந்தச் சிற்பத்தை ஒரு நினைவுச்சின்னமாகக் கருதலாம்.

நாணத்தில் அழகு

நாணிக் கோணி நிற்கும் பெண்மையின் அழகைக் குறித்துப் பழைய இலக்கியங்களில் படித்திருக்கிறோம். ஆனால், 'அந்த நிலை உண்மையில் அழகு வாய்ந்ததுதானா?' என்ற சந்தேகமும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடும் என்று தோன்றுகிறது.

நம் புதுமைப் புரட்சிக் கவி பாரதியாரின் 'புதுமைப் பெண்'ணுக்குத் தான், 'நாணிக் கோணி நிற்கும் நிலை' கொஞ்சமும் பிடிக்காதே! அப்படி நிற்கவே தெரியாதே!

நாணும் அச்சமும்

நாய்கட்கு வேண்டுமாம்!

என்றுதான் தீர்ப்புச் சொல்லி விட்டாளே!


எனினும், நாணமுள்ள நிலையில் அழகும் உண்டு என்பதை இலக்கிய வாயிலாக மட்டுமல்ல, சிற்ப வாயிலாகவும் தெரிந்துகொள்ளலாம். உதாரணமாக, திருபுவனம் ஸ்ரீசரப மூர்த்தியின் சந்நிதியில், படிக்கட்டின் கீழ் அண்டையில் உள்ள சிற்பத்தை நோக்குவோம்.

லாகவம், நெளிவு

என்ன? உற்று நோக்கவே, நாணம் அதிகரிப்பதுபோலத் தோன்றுகிறது அந்த நங்கைக்கு! அழகும் அதிகரிப்பது போலவே காண்கிறது!

இந்தச் சிற்பத்தின் தோற்றங்களைப் படத்தில் பார்க்கும்போதே, என்ன லாகவமாய் உடலும் இடையும் வளைந்து காண்கின்றன என்பதை அறிந்துகொள்ளலாம்.

வலது பக்கம் உள்ள சிற்பத்திலே, இரு கைகளிலும் அவள் வைத்துக் கொண்டு இருக்கும் தாமரை மொட்டுடன்கூடிய தண்டு, பூங்கொடி ஆகியவற்றில் நாம் எவ்வளவு நெளிவு காண்கிறோமோ, அவ்வளவு நெளிவும் அந்தப் பெண் கொடியின் உடல் அமைப்பிலும் காண்கிறோம்!



புன்னகையும் பேச்சும்

ஆம்; பூங்கொடி ஒன்று துவண்டு நிற்பதுபோல நிற்கின்றாள் பெண் கொடி. அவள் கையிலுள்ள தாமரை மலரவில்லை என்றாலும், அந்த மோகனப் புன்னகையின் மலர்ச்சியில் பூவும் மலர்ந்து நகைப்புரியும் என்று நம்பலாம்.

அவளுக்கு அழகிய தாமரைப் பூ ஒன்று கிடைத்துவிட்டதால், தண்டை மாத்திரம் கையில் பிடித்துக்கொண்டு பக்கத்தில் இருக்கும் சிலையைப் பார்த்து, 'உனக்குத்தான் பூவுக்கு வழியில்லாமல் வளைத்துப் பறிக்க வேண்டும். எனக்கோ அந்தச் சிரமம் இல்லை; என் கையிலே பூ இருக்கிறது' என்று சொல்கிறாளோ, என்னவோ? கற்பனை செய்து பார்த்துக்கொள்ள வேண்டியதுதான்.

பிரமிக்கச் செய்யும் வேலைப்பாடுகள்!

தலையில் கொண்டை அலங்காரம், அலங்காரப் பிரியர்களையும் கலா ரசிகர்களையும் பிரமிக்கச் செய்கிறது. தலை அலங்காரத்தின் மத்தியில் லட்சுமியின் சிறிய உருவம், இரு கைகளிலும் தாமரையை வைத்துக் கொண்டு உட்கார்ந்திருப்பதாக அமைந்திருக்கிறது.

மிகச் சிறியது என்றாலும், நுட்ப வேலைப்பாட்டில் ஒருவிதத்திலும் குறைந்ததாகத் தெரியவில்லை. 'எந்த நுட்பமான ஆயுதங்களை வைத்துக் கொண்டு எப்படிச் செய்தானோ சிற்பி!' என்று பிரமிக்க வேண்டியிருக்கிறது.


கலையில் 'இயற்கை'

இடையில் ஆபரணம் திகழ்வதும், கச்சை காற்றில் பறந்துகொண்டிருப்பதும் எவ்வளவு இயற்கையாக, தத்ரூபமாகத் தோன்றுகின்றன!

காதிலுள்ள ஓலையையும்கூடக் குடைந்து இந்தச் சிற்பத்தின் இயற்கைத் தன்மையை அதிகரித்துக் காட்டியிருக்கிறான் சிற்பி!

* * *

முன்பு நாம் பார்த்த சிற்பத்துக்கு இந்தச் சிலை எந்த அம்சத்திலும் குறைந்ததில்லை. சமம்தான் என்று சொல்லாமல் சொல்வதுபோல் இருபுறமும் சிலைகளைச் சமமாக வைத்திருக்கிறார்கள்.



சரபத்தின் வெற்றி

ஹிரண்யன் என்ற அசுரக் கொடுமையை அழிக்க, நரசிம்மம் புறப்பட்டது அல்லவா? அதர்மத்தை அழித்த பின்பும் ஆவேசம் அடங்கவில்லையாம். 'தருமத்தையும் அழித்துவிடுமோ இந்த நரசிங்கக் கொடுமை?' என்ற கவலையும் ஏற்பட்டதாம் தேவர்களுக்கு.



தேவதேவனான சிவபெருமான் பார்த்தார். பறந்து வந்தார், 'சரபம்' என்ற பறவையாக. கொடுமையை அழித்த கொடுமையாகிய, அந்த நரசிம்ம சக்தியை அப்படியே ஆகர்ஷித்துக் கொண்டார்.

ஏன், அழிக்கும் சக்தியே சிவ-சக்திதானே? சிவம் கொடுத்த சக்தியைச் சிவம் 'வாபஸ்' வாங்கிக்கொண்டது. இரவல் - சக்தியை இழந்த பின், உக்கிர நரசிம்மம் சாந்த நரசிம்மம் ஆகிவிட்டது. தாராசுரமும் திருபுவனமும் இந்தக் கதைக்கு இன்றும் சிற்பச் சாட்சிகள்.

வடநாட்டில் தான் பெற்ற வெற்றிக்குச் சின்னமாக மூன்றாம் குலோத்துங்கன், தாராசுரம், திருபுவனம் முதலிய இடங்களில் கோயில்கள் கட்டினான் என்று ஏற்கெனவே படித்தோம். அந்த வெற்றி வீரன் இந்த இரண்டு ஸ்தலங்களிலும், நரசிம்மத்தையும் வென்று வலியழித்த சரபமூர்த்தியை மனமுருகி வழிபட்டிருக்க வேண்டும்.

சிற்பத்திலும் வெற்றி

இந்தச் சிற்பங்களைக் கூர்ந்து கவனிக்கும்போது, இரண்டு ஸ்தலங்களிலும் உள்ள சரபமூர்த்தி, ஒரே சிற்பியால் உருவாகியிருக்க வேண்டும் என்று தீர்மானிக்கிறோம்.

எனினும், அங்குமிங்கும் சிற்பங்களில் சில மாறுதல்கள் இருக்கத்தான் செய்கின்றன. 'ஸிம்ஹக்நமூர்த்தி' என்று அழைக்கப்பெறும் ருத்திரமூர்த்திக்குத் தாராசுரத்தில் எட்டுக் கால்கள், மூன்று கண்கள், இரண்டு சிறகுகள்!

இங்கே திருபுவனத்திலே அத்தனை கால்கள், கண்கள், சிறகுகளுடன் நான்கு கைகளும் சிவ சின்னங்களோடு சேர்ந்து தென்படுகின்றன.

இப்போது சரபர் இருக்கும் இடத்தில், ஆதியில் நடராஜர் இருந்ததாகத் தெரிய வருகிறது. கோயிலின் அமைப்புக்கு இணங்க நடராஜர்தான் அங்கு இருக்க வேண்டும். கர்ண பரம்பரை வரலாறுகளில் இருந்தும் வேறு சில ஆதாரங்களில் இருந்தும், சரபரும் நடராஜரும் இடம் மாறியிருக்கிறார்கள் என்று தெரிய வருகிறது.


சரபச் சிற்பத்தின் பின்பாகம் லிங்க வடிவில் அமைந்திருக்கிறது. சரபர் சந்நிதி, தெற்கு நோக்கியவாறு அமைந்து இருக்கிறது. இந்தச் சந்நிதியிலுள்ள அழகிய சிற்பச் செல்வங்களே இதற்கு முன் வெளியிடப்பட்டன.

யானை - ரிஷபச் சிற்பம்

இந்த அதிசயச் சிற்பம் தெற்குப் பிராகாரத்திலே தட்சிணாமூர்த்தி - சிற்பத்தின் வலது பக்கத்தில் கீழே தென்படுகின்றது. ஒரே முகமுள்ள இரண்டு உருவங்கள் இவை.

யானையின் பாகத்தை மறைத்துக் கொண்டு பார்க்கும்போது, யானை - மத்தகம் ரிஷப வாயாகவும், யானைத் தந்தம் ரிஷபக் கொம்பாகவும் தோன்றுகின்றன. யானையின் துதிக்கை சுருண்டிருப்பது ரிஷபத்தின் திமிலாகக் காண்கிறது. ரிஷபம், யானை முதலியவற்றின் முன்னங்கால்களில் சிங்கமுகங்கள் கௌவிய மாதிரி வேலைப்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

யானையும் ரிஷபமும் ஒன்றோடு ஒன்று மோதிச் சண்டை பிடிக்கும்



காட்சியைத்தான் பாருங்கள். யானை தன் கால்களைத் தூக்குவதிலிருந்து, ரிஷபத்தை முன்னோக்கித் தள்ள முயல்வதைப் பார்க்கிறோம்.

வாலைத் தூக்குவதிலிருந்து யானையின் கோபத்தையும் ஒருவாறு தெரிந்துகொள்கிறோம். யானை தன் துதிக்கையால் ரிஷபத்தின் திமிலைப் பற்றி அமுக்குவதையும் காண்கிறோம்.

ரிஷபம்தான் சாமானிய ரிஷபமா? பின்னங்கால்களை நன்றாக உதைத்துக் கொண்டு முன்னோக்கித் தள்ளுவதைப் பார்த்தால், 'யானைக்கு நிகராகச் சண்டையிடுகிறதே' என்று ஆச்சரியப் படுகிறோம். இந்த அதிசயச் சிற்பம், சிற்பியின் உள்ளத்தில் ஒரு கற்பனைக் கவிதையாகக் கருக்கொண்டு கல்லிலே பிறந்திருக்கிறது.

ஓரடி உயரத்துக்குள்ளே ஒரு சிற்பக் கவிதை. இந்த மாதிரிச் சிற்பம் வேலூர், கிருஷ்ணாபுரம் முதலிய ஊர்களிலும் காணப்படுகிறது.

சிற்பமும் சிவபக்தியும்

தமிழ்நாட்டில் பொதுவாக, சிற்பம் பக்தியில் பூத்ததுதான். விஷ்ணு பக்தியைக் காட்டிலும் அதிக அளவில் சிவ பக்தி சிற்பத்திறனைத் தூண்டியிருக்கிறது என்றால், அது தவறாகாது.

தஞ்சைப் பெரிய கோயில், கங்கை கொண்ட சோழபுரத்துக் கோயில், மதுரை மீனாட்சி கோயில் முதலான சிவ ஆலயங்களை நமது சிற்பச் செல்வத்தின் பொக்கிஷங்களாய்க் கருதலாம்.

பல்லவர் காலத்துச் சிற்பங்கள் சைவ - வைஷ்ணவ சமரச உணர்ச்சியைப் பிரதிபலித்தபோதிலும், சோழ மன்னர்கள் காலத்துச் சிற்ப உலகம் பெரும்பாலும் சிவ பக்தி மயமாகவே இருந்ததென்று கருதலாம்.

சோழ மன்னர்கள், இந்துக்களுக்கே உரிய பரந்த மனப்பான்மையுடன் வைஷ்ணவத்தையும் ஆதரித்து வந்த போதிலும் அவர்கள் வீர சைவ உணர்ச்சி உள்ளவர்கள். அதனால்தான் அவர்களுடைய விசேஷ ஆதரவில் சிற்பச் செல்வங்களான சிவாலயங்கள் தோன்றலாயின.

இச்சிவாலயங்களில் விஷ்ணு கதைகளும் சிவ கதைகளைப்போல் சிற்பங்களிலே பொறிக்கப்பட்டுள்ளன என்பது உண்மைதான். இது, தமிழ் அரசர்களின் சமரச மனப்பான்மையைத் தான் பிரதிபலிக்கிறது என்பதில்லை. சிற்பிகளில் சிவபக்தர்களைப்போல் விஷ்ணு பக்தர்களும் இருந்தார்கள். அவரவர் ஆற்றலுக்கு ஏற்றபடி அழகிய சிற்பங்களை அமைக்கக்கூடிய கலைச் சுதந்திரம் சிற்பிகளுக்கு அளிக்கப் பெற்றிருந்தது.

எனினும், மன்னர்களின் அதிதீவிர பக்திக்கு ஏற்றபடியே சிற்பிகளும் சிற்பங்களை விசேஷமாக அமைத்திருக்க வேண்டும். குலோத்துங்கனைப் போன்ற மகா சிவ பக்த மன்னர்கள், சிவபெருமானே முழுமுதற் கடவுள் என்ற கொள்கை உடையவர்கள். இத்தகைய மன்னர்களின் ஆதிக்கத்திலே தோன்றிய சிவாலயங்களில் சிவபெருமானுடைய பரத்துவத்துக்கு அற்புதச் சான்றாகிய சரபம் போன்ற சிற்பங்களைச் சிற்பிகள் அமைத்திருப்பது இயல்புதான்.

இந்தச் சிவபக்த ராஜாக்கள் சிற்றரசர்களை வென்று அடக்கித் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டியதுபோல், சிவபெருமானுடைய ஆதிக்கத்தையும் வெற்றியையும் மக்களுக்கு நினைவூட்ட விரும்பினார்கள். இது சரபத்தின் வெற்றி.

அடி-முடி தெரியாத அதிசயம்

பிரம்மாவுக்கும் விஷ்ணுவுக்கும் திடீரென்று சண்டை வந்து விட்டதாம். யார் முதலில் சண்டை தொடங்கினார் என்பது இன்றளவும் சந்தேகம்தான். ஆனால், 'நான் பெரியவன், நான் பெரியவன், நான் நான்!' என்ற அகங்காரம்தான் சண்டைக்கு மூலக்காரணம் என்பது மட்டும் தங்களுக்கு நிச்சயமாகத் தெரியும் என்கிறார்கள் சிவபுராண சரித்திர ஆசிரியர்கள்.

'நமக்குள் வெற்றி பெறுவோனே பெரியவன்' என்று இருவரும் போராடி உலகமெல்லாம் ஒரு கலக்குக் கலக்கிக் கொண்டிருக்கும்போது, நாரதர் வந்து சமாதானம் செய்துவைக்க முயன்றார். சிவபெருமான் அனுப்பிவைத்த சமாதான தூதர் இவர்.

இந்தத் தூதர், "இருவரில் ஒருவரும் பெரியவர் இல்லை. சிவபெருமானே பெரியவர்" என்றார். ஆனால், நாரதரின் சமாதான வீணாகானம் மூழ்கிப் போய்விடுகிறது, கொலைக் கருவிகளின் ஜணஜண கோஷங்களிலே. 'இந்தச் சண்டையைத் தடுக்காவிட்டால் உலகத்துக்கே ஆபத்து' என்று தீர்மானிக்கிறார் சிவபெருமான். இருவரும் அஞ்சும்படி இடையே ஒரு ஜோதி தோன்றுகிறது.

'உங்கள் வல்லமையைச் சோதிக்கச் சிவபெருமானே ஜோதி வடிவமாக எழுந்தருளி இருக்கிறார். இதன் அடி-முடிகளைக் கண்டறியுங்கள்' என்கிறது ஓர் அசரீரி. உடனே பிரம்மா, அன்னப்பறவையாகப் பறந்து முடி காணப் போகிறார். விஷ்ணு, வராக வடிவம் கொண்டு பூமியைத் தோண்டி அடி தேடப் போகிறார்.

இந்த முயற்சிகளில் இருவருக்கும் தோல்விதான். கடைசியாக, இருவரும் முழுமுதற் கடவுளைத் தோத்திரம் செய்கிறார்கள். சிவபெருமான் இருவரது பகைமையையும் போக்கியபின், ஜோதி சுருங்கி மலை வடிவமாக இறுகிவிடுகிறது. இது முக்கியமாகத் திருவண்ணாமலையின் கதை, அங்கே சிவபெருமானை ஜோதியாக வழிபடுவது பிரசித்தம்.

கதை சொல்லும் சிற்பம்

இந்தக் கதையும் பிரசித்தமானதுதான். இதை நினைவூட்டுவதுதான் திருபுவனம் கோயிலில் உள்ள லிங்கோத்பவமூர்த்தி.

இம்மூர்த்தி சாதாரணமாகக் கர்ப்பக் கிரகத்தின் பின்புறத்திலே மேற்கு நோக்கியவாறு காணப்படுகிறது.

ஆறரை அடி உயரமுள்ள லிங்கவடிவில் லிங்கோத்பவர் காட்சியளிக்கிறார்.


சில்பி

சிற்பத்திலே பிரம்ம-விஷ்ணுக்கள் இருவருக்கும் அபயம் கொடுத்து அறியாமை போக்கும் தோரணையும் பாவமும் காணப்படுகின்றன.

லிங்கோத்பவர் லிங்கத்தின் மத்தியில் தோன்றிச் சுற்றிலும் அக்னி ஜொலிக்கக் காட்சி தருகின்றார்.

தலைப்பக்கமாக அன்னப்பட்சி வடிவத்திலே விண்ணை முட்டப் பறந்து பிரம்மா முடி தேடப் போவதைக் காண்கிறோம். கீழ்ப்பக்கம் திருமால் வராக வடிவில் மண்ணைத் தோண்டி அடிதேடப் போவதைப் பார்க்கிறோம். சிற்பத்திலே இக்காட்சி அருமையாக அமைந்திருக்கிறது.

கருங்கல் கோபுரம்

கோபுரத்தின் பின்தோற்றத்தைத் தனிப்படமாகக் காட்டியிருக்கிறது. கோபுரத்தின் கீழ்ப்பாகத்தில் சிறிய உருவில் காட்சி தருகிறார் லிங்கோத்பவர். கோபுரத்தைப் பல சிற்பச் செல்வங்கள் அழகு செய்கின்றன. கோபுரத்தின் அடி முதல் ஸ்தூபி வரை கருங்கல்லால் ஆனது.

ஒரு சரித்திரத் துணுக்கு

'திருபுவன வீரன்' என்ற விருதுப் பெயர் கொண்ட மூன்றாம் குலோத்துங்கன், வடநாட்டிலிருந்து ஞான குருக்களை அழைத்து வந்திருந்தான். அவர்களில் ஒருவர் ஸ்ரீ ஈஸ்வர சிவனார். ஸித்தாந்த ரத்னாகர ஆசிரியரான ஸ்ரீஸ்கந்த சம்பு சிவசாரியரின் புதல்வர் இவர்.

இவரைக் கொண்டு அரசன் கோயிலில் பிரதிஷ்டையும் கும்பாபிஷேகமும் நடத்தி வைத்தான் என்கிறது ஒரு கல்வெட்டு.

இந்த அரசன் காலம் கி.பி.1178 - 1218. இவனைக் கம்பரும் தமது ராமாயணத்துள் 'தியாக வினோதன்' என்ற விருதுப் பெயரால் சிறப்பித்திருக்கிறார்.



அறம் வளர்த்த அழகு

என்ன அழகு, என்ன குழைவு! மூச்சு விடும்போது, மெல்லிய இடையின் கிழ் வயிறு குழைந்து அமுங்கி விம்முகிறதே! - ஓ, சிற்பம்தானா?


இத்தகைய பிரமை உண்டாகுமாறு இந்த உயிர்ச்சிற்பத்தைப் படைத்திருக்கிறான் சிற்பி.

இந்தத் தேவியின் கிரீடத்தையும் அதிலுள்ள நுட்ப வேலைப்பாடுகளையும் பாருங்கள். அறம் வளர்த்த அகிலாண்டேஸ்வரி அகில லோக அருளாட்சி புரியும் மகாராணி அல்லவா?

மார்பிலுள்ள முத்தாரங்களின் அருமை - பெருமைகளைத்தான் லேசாக மதிப்பிட முடியுமா? இச்சிற்பத்தின் முத்தாரங்களும், கையின் மேல் பாகத்தை அணி செய்யும் செல்வச் சிங்காரங்களும், மேலே குறித்துள்ள கிரீட வேலைப்பாடுகளுடன், நம்மைப் பெரிதும் பிரமிக்கச் செய்து, இந்தச் சிற்பத்தையே பார்த்துக்கொண்டு இருக்கும்படி செய்துவிடுகின்றன.

எந்த அமரச் சிற்பியின் மேதையோ, பக்தியோ இப்படிப் பிரத்தியட்சமாக்கி இருக்கிறது, மூன்று திருக்கண்களுடன், தேவி தர்மசம்வர்த்தினியை - அறம் வளர்க்கும் அகிலலோக நாயகியை!




சில்பி

இந்தச் சிற்பம், வேலைப்பாடுகளில் பழையாற்றிலுள்ள மகிஷாசுர மர்த்தினியை நினைப்பூட்டுகிறது. இதைத் தனிப்படமாகப் பெரிய அளவில் இடைவரை காட்டியிருக்கிறது.

இந்த அபூர்வ அழகு வாய்ந்த சிற்பத்தில் அபய ஹஸ்தமும், பத்மம் உள்ள வலது பக்கத்துக் கையும் பின்னமடைந்து இருக்கின்றன.

இப்போது கோயிலில் அம்மன் சந்நிதியிலிருக்கும் தர்ம சம்வர்த்தினி மூன்றாவதாகத் தோன்றியவள் என்று தெரிய வருகிறது.

தர்ம சம்வர்த்தினி I, II

முதலாவது தர்ம சம்வர்த்தினியை, கோயிலின் தெற்குப் பிராகாரத்திலுள்ள மண்டபத்தின் கோடியில் பின்னம் அடைந்த வேறு சிற்பங்களுக்கு இடையே பார்க்கிறோம்.

இக்கோயிலில் உள்ள பழைய சிற்பங்களை ஒப்பிட்டுப் பார்த்தால், அதாவது லிங்கோத்பவர், வீரபத்திரன், மகிஷாசுரமர்த்தினி முதலிய சிற்பங்களையும் இந்தத் தர்ம சம்வர்த்தினியையும் சிற்ப சம்பந்தமாகப் பல அம்சங்களில் ஒப்பிட்டுப் பார்த்தால், ஆதியில் கோயில் கட்டப்பெற்றபோது இந்த அம்மனே மூலஸ்தான அம்மன் விக்கிரகமாய் இருந்திருக்க வேண்டும் என்று ஊகிக்கலாம்.

அபய ஹஸ்தம் பின்னப்படாமல் இருந்த அந்நாளிலே இந்த அம்மனின் அன்புக்கும் கடாட்சத்துக்கும் பாத்திரமானவர்கள் பாக்கியசாலிகள். உயரம் 6¾ அடி.

இந்தத் தர்ம சம்வர்த்தினிக்குப் பின்னங்கள் ஏற்பட்ட பிறகு, மற்றோர் உருவம் செய்விக்கப் பெற்று அதுவும் பின்னமுற்று இச்சிற்பத்தின் பக்கத்தில் இருக்கிறது.

இப்போது அம்மன் சந்நிதியில் உள்ள மூன்றாவது தர்ம சம்வர்த்தினியையாவது ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்வது நிர்வாகிகளின் கடமையாகும்.


சிற்ப நுணுக்கம்

தர்ம சம்வர்த்தினி வெளியிடும் சிற்ப நுணுக்கம் உண்மையில் பக்தியிலே விளைந்த மேதாவிலாசம். இத்தகைய சிலை, மந்திரத்தால் பிராணப் பிரதிஷ்டை பெற்றுவிடுகிறது. இதனால்தான், 'மூச்சு விடுகிறதோ? கீழ் வயிறு குழைந்து விம்முகிறதோ' என்றெல்லாம் சொல்லத் தோன்றுகிறது.

'கலா சிருஷ்டியா, இயற்கையின் சிருஷ்டிதானா?' என்ற மயக்கம், நம்மை ரசிகராக்கி நமது பண்பாட்டையும் உயர்த்துவதாகும்.

பிரம்ம சிருஷ்டிக்கு ஒரு புதிய அழகு - பிரம்ம சிருஷ்டியின் அனுபவத்திலே ஒரு புதிய சுவை - காட்டும் கலைத்திறன், சாமானியமா? இத்தகைய மகத்தான மேதாவிலாசத்தின் பழைய சின்னங்கள் சில, நம் தமிழகத்தில் இன்றளவும் காணப்படுவது நமது பாக்கியமே.

தர்ம சம்வர்த்தினி தர்மத்தை வளர்ப்பதுபோல், அழகையும் இன்றைய தமிழகத்திலும் வளர்த்தருள வேண்டும் என்பது, ரசிகர் பிரார்த்தனை.



கல்லில் முளைத்த பூங்கொடி!

லோக மாதாவாகிய தர்ம சம்வர்த்தினியின் தரிசனத்துக்கு வந்திருக்கிறாள் தன் சேடியுடன் - உள்ளத்தின் மென்மையையும் பொலிவையும் பிரதிபலிக்கும் ரூப லாவண்யத்துடன்.

சேடியும் தலைவியும்

சேடிக்கு எஜமானியிடம் உள்ள பக்திதான் கொஞ்சமா? தலைவி காலால் இட்டதைத் தலையால் செய்யவும் சித்தமாக இருப்பவள்போல் நின்று கொண்டிருக்கிறாளே!

இத்தகைய சேடியுடன் வந்து பூங்கொடிபோல் நிற்கும் இப்பெண்கொடி யாரோ?

முன்பு வந்த கன்னிகைகளோடு சேர்ந்தவள்தான் இத்தலைவியும். காலப்போக்கினால் அவர்களிடமிருந்து பிரிந்து தெற்குப் பிராகாரத்தில் இருக்கிறாள்.

திருபுவனம் கோயிலில் தர்ம சம்வர்த்தினிக்குப் பக்கத்தில் இருக்கும் மோகன சிற்பத்தைத்தான் குறிப்பிடுகிறோம்.

மோகினிச் சிற்பம்

இம்மோகன சிற்பம் மோகினிதான். உயரம் 4 அடிதான். சேடியைவிடத் தலைவி பெரியவள்; இத்தலைவியைவிட உலக அன்னை பன்மடங்கு பெரியவள் என்பதை, உருவங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போதே உணர்ந்துகொள்கிறோம்.


இச்சிற்பத்திலே பூங்கொடிபோல் அழகிய உடல் அமைப்பை இசைந்த வளைவுகளுடன் காட்டும் சிற்பி, கச்சையிலுள்ள தலைப்புகள் காற்றில் வளைந்து கொடுப்பதையும் இயற்கையாகக் காட்டியிருக்கிறார்.

கைகள், கால்கள், விரல்கள், வஸ்திரங்கள் முதலிய எல்லாம் தனித்தனியாகக் குடைந்து காட்டப் பெற்றிருப்பதைப் பார்க்கும்போது, ஒரு பாறைக் கல்லிலிருந்து அதில் இல்லாத உருவங்களைத் தத்ரூபமாகக் கண்ணெதிரே நிறுத்தி வைத்திருக்கும் சிற்பத் திறனை எவ்வளவு புகழ்ந்தாலும் போதாதென்றே தோன்றுகிறது.

கலைக் கொலை

இக்கோயிலில் எத்தனை சிற்பங்கள் பின்னமடைந்து இருக்கின்றன என்று பார்க்கவேண்டுமானால், தெற்குப் பிராகாரத்து மண்டபத்துக்குப் போனால் போதும்.

பின்னமடைந்த கைகள் சிற்பங்களில் பெரும்பாலும் வலது கைகளாகவே இருக்கின்றன. அதாவது, அபய ஹஸ்தம் பின்னமுற்று இருக்கிறது, அசுர ஹஸ்தத்தினால்!




யானைப் படைகளின் கோரச் செயல்கள்

வெற்றி கொண்ட படைகள் நகரத்துக்குள் புகுந்துவிட்டன. நகர மக்கள் நடுங்கிச் சிதறி ஓடுகிறார்கள்.

முடிவு தெரியாத பயங்கரம்

அதோ ஒரு தாய் எவ்வளவு அவசரமாய், அந்தத் தலைபோகிற அவசரத்திலும் மறந்துவிடாமல் தன் அருமைக் குழந்தையை எடுத்துக் கொண்டு, ஓடிப்போனாள்! வெற்றி முழக்கங்களுக்கு இடையே யானைப் படைகள் அவள் பின்னே வந்துகொண்டு இருந்தன.

வீரர்களின் வெறிபிடித்த ஜய கோஷங்களால் யானைக்கும் வெறி பிடித்துவிட்டதுபோலத் தோன்றுகிறது. அந்த யானை அந்த அபலைப் பெண்ணை நோக்கித் தும்பிக்கை நீட்டி இடையைச் சுற்றிப் பற்றிக்கொள்கிறது. என்ன பயங்கரமான பரிதாபக் காட்சி!



அம்மாளைக் கவனித்துப் பாருங்கள். தன் குழந்தைக்கு ஆபத்து நேர்ந்துவிடுமோ என்று ஒரு கையால் அக்குழந்தையின் தலையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருக்கிறாள். ஒரு கையை உயர்த்தித் தன் அபாய நிலைமையைத் தெரிவித்து அக்கம் பக்கத்தில் உள்ளவர்களைத் தன் உதவிக்குக் கூவி அழைக்கிறாள்.

கண்ணிலே பீதியின் எல்லைக் காட்டி வாய் திறந்திருப்பதில் இருந்தே, அவள் நடுங்கிக் கூக்குரல் இடுவதை எவ்வளவு தெளிவாய்ச் சிற்பி காட்டியிருக்கிறார்!

சரி, தெரிகிறதா இப்போது? நாம் போர்க்களத்தில் இல்லை; கோயிலுக்கு உள்ளேதான் போர்க்களம்! நிஜ உலகில் அல்ல, சிற்ப உலகில்தான்.

இந்தச் சண்டைச் சிற்பத்தை மேலும் உற்று நோக்குவோம். பீதியினால் யானைப்பாகனும் என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்துப் போகிறான். யானையின் பின்னே ஒருவன் அதை வெருட்டிக்கொண்டு வருவதையும் காண்கிறோம்.

இன்னும் நோக்குவோம். யானையின் மருண்ட பார்வையில் இருந்தும், வால் தூக்கி இருப்பதில் இருந்தும் வெறி முற்றிப்போய்விட்டது என்பதையும் காண்கிறோம். இவ்வளவு பயங்கர நிலையில், 'முடிவு என்ன ஆகுமோ?' என்று திணறுகிறோம்.

என்ன அமர்க்களம், பாருங்கள்!

நகரத்திலேயே யானையின் அட்டகாசம் இப்படியென்றால், ரணகளத்தில் எப்படித்தான் இருக்குமோ? அங்கும் போய் அந்த நிலைமையையும் கொஞ்சம் நோக்குவோம். இப்போது



நமக்குத்தான் 'அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமென்பதில்லையே' - சிற்பமென்று ஞாபகப்படுத்திக் கொண்டபின்!

அதோ ஒரு யானை எதிரி - வீரன் ஒருவனைத் தும்பிக்கையில் எவ்வளவு லகுவாய்த் தூக்கிக்கொண்டு ஓடுகிறது! அந்தச் சிற்ப வீரனுக்குக் கையொன்று பின்னமுற்று இருப்பதைப் பார்த்தால், 'இந்தச் சண்டையில்தான் அந்தக் கை போய்விட்டதோ?' என்றுகூடச் சொல்லத் தோன்றுகிறது. இதோ சிங்கத்தின் மேல் அமர்ந்து ஒருவன் வாள் ஏந்தி இந்த யானையை எதிர்க்கத் தயாராயிருக்கிறான். சிங்க பலத்துடன், பசித்த சிங்கத்தின் பயங்கர வெறியுடன், எதிரி சண்டை போடுவான் என்பதற்குத்தான் அறிகுறியோ, என்னவோ?

இது எப்படி இருந்தாலும் கொஞ்ச நேரத்தில் இரு படைகளும் மோதி நெருக்கிப் போரிடும் கோரத்தைப் பார்த்துவிடுகிறோம்.

யுத்ததேவியின் கோர தாண்டவம்

இதைவிடப் பார்க்கச் சகிக்காத பயங்கரத்தையும் கீழே இருக்கும் சிற்பம் காட்டிவிடுகிறது. கீழே விழுந்த ஒருவனை யானை தன் முன்னங் கால்களால் மிதித்துத் துதிக்கையால் சுருட்டிக்கொண்டு தந்தத்தை அவன் வயிற்றிலே பதியவைக்கும் கோரம் இது!

யானை மேல் இருப்பவன் தனக்கு ஏதாவது கேடு நேர்ந்துவிடுமோ என்று பயந்து, யானையின் இடையில் கட்டிய கயிற்றைப் பிடித்துக்கொண்டு, தான் கீழே விழாமல் இருக்க முயல்கிறான்.



எதிரி ஒருவன் பரிதாப - பயங்கர நிலையில் அகப்பட்டுக்கொண்டு இருக்கிறான் என்று தெரிந்தும் இரக்கம் பிறக்கவில்லை! குதித்துக் கும்மாளம் அடிக்கும் கோரத்தைத்தான் பாருங்கள்!

சண்டையில் சம்பந்தமில்லாத அந்த அபலைத் தாய்க்கும் குழந்தைக்கும் நேரப்போகும் கதியைத்தான் என்னென்பது!

கோயிலில் ஏன் இந்த அமர்க்களம்?

இந்த மாதிரிச் சண்டைச் சிற்பங்கள் இக்கோயிலில் மலிந்துகிடப்பதில் இருந்து, மூன்றாவது குலோத்துங்க சோழன் இந்தக் கோயிலை, தான் புரிந்த சண்டைகளுக்குப் பின் வெற்றிச் சின்னமாகக் கட்டியிருக்கிறான் என்பது உறுதிப்படுகிறது.

அந்தக் காலத்து 'டாங்கு'கள் யானைப் படைகளே! இதையும் நினைவில் வைத்துக்கொண்டு, மூலஸ்தான கோபுரத்தின் குறட்டில் 'யாளவரி'க்கு மேல் 'வேதியவரி' என்று சொல்லக்கூடிய இடங்களில் காணப்படும் இந்தச் சிற்ப ஜாலங்களை இவற்றின் கோர பயங்கரங்களுடன் அனுபவித்துப் பார்க்க வேண்டியதுதான்.

* * *

மூன்றாவது குலோத்துங்க சோழ சக்கரவர்த்திதான் கம்ப ராமாயணத்தில் வரும் தியாக மா வினோதன். இவனுக்குப் பின் சோழ சாம்ராஜ்யம் சிதைந்து போயிற்று.

கம்ப ராமாயணத்தில் வரும் சில யுத்த வர்ணனைகளைப் புரிந்துகொள்ளவும் இந்தச் சிற்பங்களைத் தெரிந்துகொள்வது அவசியமாகும்.

சுத்த அழகே சிவம்!



கோபுர தரிசனம்


'கோபுர தரிசனம் பாவவிமோசனம்' என்று சாதாரணமாகச் சொல்கிறார்கள் அல்லவா? ஸ்ரீகம்பஹரேஸ்வர ஸ்வாமி கோயிலின் வெளிக் கோபுரத்திலுள்ள சிற்பங்களைப் பார்த்தால், அது உண்மைதான் என்று உடனே சொல்லத் தோன்றும். (அடுத்த பக்கத்தில்) படத்தில் காட்டியுள்ளவற்றைப் பார்த்தாலும் 'எத்தகைய சிற்ப விசேஷங்கள்!' என்று அதிசயிக்கத் தோன்றும்.

'பார்த்தால் பசி போம்!' என்று வியக்கத் தோன்றுகிறது, ஒரு வகை அழகைப் பார்க்கும்போது. ஆனால், சிற்ப சாஸ்திர விற்பன்னர்கள் ஒருமுகமாய்ப் போற்றும் இந்தக் கோபுர விசேஷங்களைப் பார்க்கும்போது, 'பார்த்தால் பாவம் போம்: அழகுப் பசியோ அதிகரிக்கும்' என்று தாராளமாய் ஒப்புக்கொள்ளலாம்.

கோபுரத்துக்குக் கீழே பத்மம் முதலான நான்கு வரிகளையும் நான்கு வேதமாய்க் கருதி, மேலே மூலஸ்தான - வெளிக்கோபுரங்கள் கட்டுவது மரபு.

இந்தக் கோபுரத்து வேலைப்பாடுகளோ, சிற்ப சாஸ்திர ஆராய்ச்சியாளர்களும் பயபக்தியோடு தரிசித்துப் பரவசமாகும் தெய்விக சௌந்தரியத்துடன் அமைந்துள்ளன.

தனிப் படத்தில், நடுவிலும் பக்கத்துத் தூண்களிலும் உள்ள சிற்பச் செல்வத்திலே கலைத்திறன் முழுவதும் கொட்டிக்கிடப்பது போலக் காண்கிறது.


சில்பி

இருபுறமும் யாளி நிற்கும் கம்பீரியத்தைத்தான் பாருங்கள். கீழ் வரியில் யாளிகள் மூன்று கால்களில் நின்றுகொண்டு ஒரு காலை உயரத் தூக்கி நிற்கும் வரிசையில்தான் என்ன வனப்பு! நிகரற்ற கீதத்தைத் 'தேவகானம்' என்பதுபோல் இத்தகைய சிற்பங்களையும், 'தெய்வச் சிற்பம்' என்று கொண்டாடலாம்.

கீழே பட்டியல் என்ற வரியும், இதற்குக் கீழ் பத்மம், உப பீடம் முதலியவையும் இருக்கின்றன. தேவ கோஷ்டத்தில் (மாடத்தில்) முன்பு தேவர்கள் உள்ள சிலைகள் இருந்திருக்கின்றன.

இக்கோபுரத்தின் அடிப்பாகம் இரண்டடுக்கு வேலை. படத்தில் ஓரடுக்கு வேலைகளைப் பார்க்கலாம்.

'மன்னன்' சிலை

இச்சிலை கோபுரத்தின் தெற்குப் பாகத்தில் மேல் அடுக்கு வேலையில் நடுவே தேவ கோஷ்ட மாடத்தில் காணப்படுகிறது. இக்கோபுரத்திலுள்ள சிற்பங்களில் முதன்மையானது சிலையின் மேற்பாகத்தில் 'மன்னன்' என்று பொறிக்கப் பெற்றிருக்கிறது.

சாதாரண மன்னனா? சாதாரண மாட்சியா? வலது பாகத்தில் மார்பின் மீது ஸ்ரீவத்ஸம் (லட்சுமி இருக்குமிடம்) காணப்படுகிறது. நெற்றியில் ஸ்ரீசூர்ணம்,

திருவுடை மன்னரைக் காணில்
திருமாலைக் கண்டேனே என்னும்

என்ற ஆழ்வார் வாக்கை நினைவூட்டுகிறது. தெய்வச் சின்னங்கள் மட்டுமா? நிற்கும் நிலையும் கம்பீரத் தோற்றமும் போதுமே 'கலையழகு பரிபூர்ணமாகித் தெய்வ ஒளி வீசுகிறது' என்று தெரிந்துகொள்ள.

தலையிலுள்ள கிரீடம் ஜடாமுடியால் அலங்கரிக்கப் பெற்று எத்தகைய மாட்சிக்கு அறிகுறியாகக் காண்கிறது! ஆபரணங்களும், இடையிலுள்ள கச்சைகளும் மாட்சியை மேலும் எடுத்துக்காட்டுகின்றன.


இத்தகைய சிற்பங்களைத் தரிசிக்கவே, இவற்றின் இன்ப அழகிலேயே தேவ தரிசனம் செய்து பாவ விமோசனமும் செய்துகொள்ளலாம் என்று தோன்றுகிறது.

கோத கன்ற
தொழிலுடைத் தாகிக்
குலவு சித்திரம்
கோபுரம் கோயில்
ஈத னைத்தின்
எழிலிடை யுற்றாள்,
இன்ப மேவடி
வாகிடப் பெற்றாள்

என்ற பாரதி வாக்கு, உண்மைதானே?

'சுத்த அறிவே சிவம்' என்பர். 'சுத்த அழகே சிவம்' என்றாலும் சரிதான் என்பதற்கு இங்குள்ள தெய்விகச் சிற்பங்களும் ஒரு நல்ல சாட்சி!

அமைப்பும், சிற்ப நுட்பங்களும்



வலது பக்கப் படத்திலே, மூன்று கலசங்களோடு கூடிய விமானத்தையும், அதன்பின் மூலஸ்தான கோபுரத்தையும் பார்க்கிறீர்கள் அல்லவா?

அமைப்பு முறை

கோயில் - அமைப்பிலே, சோழ மன்னர்கள் வெளிக் கோபுரத்தைப்போல் மூலஸ்தான விமானத்தையும் கட்டுகிறார்கள். வேறு அரசர்கள் கட்டியுள்ள கோயில்களில் மூலஸ்தான விமானம் சிறிதாக இருப்பது கவனிக்கத்தக்கது.

இந்தக் கம்பஹரேஸ்வரர் கோயிலின் தோற்றத்தையும் தாராசுரத்து ஐராவதேஸ்வரர் கோயிலின் தோற்றத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால், இரண்டும் ஒரே அமைப்பில் உள்ளன என்பது இனிது புலனாகும். இரு கோயில்களையும் கட்டி நிறுத்தியவன் மூன்றாம் குலோத்துங்க சோழன்தானே.

தாராசுரம் கோயிலுக்குள் மூலஸ்தானம் போக வேண்டுமென்றால், நேர்வழி இல்லாமல் தெற்குப் பிராகாரத்திலுள்ள படிக்கட்டுகள் வழியாகத்தான் போக வேண்டும். திருபுவனத்திலோ சந்நிதிக்கு நேரான பாதை இருக்கிறது. ஆனால், இது பிற்காலத்தில் ஏற்பட்டதுதான் என்பதற்குச் சான்றுகள் உண்டு. உற்று நோக்குவோர் இன்றும் கண்டுகொள்ளலாம்.

'நாயர் மண்டபம்'

முக்கலச விமானத்தின் கீழ் சோமாஸ் கந்தர் வீற்றிருக்கிறார். இவர் வீற்றிருக்கும் இடத்தை 'நாயர் மண்டபம்' என்று சாதாரணமாகச் சொல்கிறார்கள்.

இம்மண்டபத்தின் கீழ்வரிசைகளில் மனுநீதிச் சோழனின் கதைச் சிற்பங்களும், ராமாயணச் சிற்பங்களும் வெகு நேர்த்தியாகக் காட்டப் பெற்றிருக்கின்றன.

மனுநீதிச் சோழன் கதையைப் பெரிய புராணம் அருமையாக வருணித்து இருக்கிறது. சோழர் குல முன்னோர்களில் ஒருவனாகக் கருதப்படுகிறான் அந்தச் சோழன். அப்படியே ராமாயண காவிய நாயகனும் சோழர் குல முதல்வன் என்பது, தங்கள் குலத்தையும் சூரிய குலமென்று கருதிய சோழ மன்னர்களின் எண்ணம்.


இந்த மண்டபம் ஒரு தேரைப்போல், அச்சுகளுடன், குதிரைகள் இழுத்துச் செல்வதுபோல் அமைந்திருக்கிறது. குதிரைகள், மண்டபத்தின் கீழ் அண்டை மூலையில் பின்னமுற்று இருக்கின்றன.

சேடியும் வெண் சாமரமும்

'நாயர் மண்டப'த்து மூலைத் தூணின் கீழ், பிரம்மாவுக்கு இடது பக்கத்தில், வெண் சாமரம் வைத்துக்கொண்டு சொகுசாக நிற்கும் சேடியின் சிற்பம் ஒன்று காணப்படுகிறது.

இது உருவில் சிறிதாக இருந்தாலும், நுட்ப வேலைப்பாடுகளிலும் ஜடை அழகிலும், வெண் சாமரத்தின் 'கூந்தல்' வேலைப்பாட்டிலும், ரசிகர் உள்ளத்தைப் பெரிதும் கவர்கின்றது.

மண்டபத்தின் கீழ்ப்பாகம் புதைந்து கிடக்கிறது, நம்மவர்களின் சிற்பக் கலைச்சுவை இப்போது எவ்வளவு தூரம் க்ஷீணித்துக் கீழ்ப்பட்டிருக்கிறது என்பதற்கு ஓர் அறிகுறிபோலே!



கஷ்ட காலத்தில் இஷ்ட மூர்த்திகள்

செல்லும் காலமெல்லாம் அதிகாரம் செலுத்திய தெய்வங்கள் அனைத்தும், 'இன்று கல்லானோம், செம்பானோம் காண்? எல்லாம் உங்கள் தயவினால்தான்! உங்கள் நாஸ்திகத்தால்; அதற்கும் மேலாக உங்கள் ஆஸ்திக ஆஷாட பூதித்தனத்தால், 'டம்பாச்சாரி விலாச'ங்களால்!' ' என்று சொல்லாமல் சொல்கின்றன.



இரண்டு மௌனச் சாட்சிகள்

இது மட்டுமா? 'தெய்வங்களாகிய எங்களுக்கும் கஷ்ட காலங்கள் உண்டு, உங்களைப்போல! ஏன், உங்கள் கஷ்ட காலம்தான் எங்களுக்கும் கஷ்ட காலம்!' என்றும் பிரசங்கம் செய்கின்றன திறவாத வாய் திறந்து.

இத்தகைய கஷ்ட காலத்துக்குத் திருபுவனம் கோயிலிலுள்ள விநாயகச் சிற்பமும் துர்க்கைச் சிற்பமும் சாட்சி சொல்கின்றன மௌனமாக!

விநாயகக் கடவுளின் கஷ்ட காலம்!

விநாயகச் சிற்பம், ஸ்ரீ தர்ம சம்வர்த்தனி தேவியின் பக்கத்தில் தெற்குப் பிராகாரத்தின் மண்டபத்திலே காணப்படுகிறது. ஒரு காலத்தில் பூஜைக்கு உபயோகமாக இருந்து பின்பு கை-கால்கள் பின்னமடைந்து, இப்போது இந்த மண்டபத்தில் இருக்கும் சிற்பக் காட்சிகளுக்கு இடையேதான் இந்தப் பிள்ளையாரும் காட்சி தருகிறார்.

கோயில் கட்டியபோது இந்தப் பிள்ளையார் அந்த மண்டபத்தின் தெற்குப் பக்கத்தில் வெளியே தேவ கோஷ்டத்து மாடத்தில் அமர்ந்து இருந்தார். முகம் பின்னமடைந்த காரணத்தால் ஒதுக்கப்பட்டுள்ளார்.

வேதவியாசர் மகாபாரதம் பாட, விநாயகர் மகா மேருவை ஏடாகக்கொண்டு எழுதத் தொடங்கினாரே, அப்போது எழுத்தாணி இல்லையே என்று

ஒரு கொம்பை முறித்துக்கொண்டு ஒற்றைக் கொம்பராக இருந்தார் அல்லவா? அந்த மிஞ்சிய தந்தத்தையும் உடைத்துவிட்டான் ஒரு புண்ணியாத்மா! அந்தப் பக்கம், கண் முதலியனவும் பின்னமடைய, இப்போது சிமிட்டிச் சுண்ணாம்பினால் சேர்த்திருக்கிறார்கள்.

விநாயகரும், விகட பக்தியும்

கட்டை குட்டையான சரீரத்திலே அந்தப் பெருத்த தொந்தியையும் பார்க்கும்போது, ‘சாமி! உம்மால் நகரக்கூட முடியாதோ?’ என்று கேட்கத் தோன்றுகிறது. இந்தப் பெருந்தொந்திக்கு இன்று ஒரு கொழுக்கட்டையும் கிடைப்பது இல்லை, - பின்னமடைந்து பூஜை இழந்த காரணத்தினால்.

‘இந்தக் கஷ்ட காலத்தை முன்கூட்டியே தெரிந்துகொண்டுதானோ கையில் கொழுக்கட்டையைச் சேமித்து வைத்துக் கொண்டிருக்கிறீர்?’ என்றும் கேட்கத் தோன்றுகிறது.


‘இப்போதுள்ள கொழுக்கட்டைப் பஞ்சத்திலும் தொந்திக்கு வாட்டம் இல்லையே சாமி!’ என்று மூக்கின்மேல் விரல் வைக்கிறோம்.

யானைமுகக் கடவுளோ, ‘கேளடா ஆசாமி! செல்லும் காலமெல்லாம் எத்தனையோ சதுர்த்திகளில் நாம் உள்ளே செலுத்திக்கொண்டிருந்த கொழுக்கட்டைகளினால் வளர்ந்த தொந்திதானப்பா இது!’ என்கிறார்.

‘சாமி! அந்தப் பழைய அனுபவங் களையும் கொழுக்கட்டைகளையும் ஞாபகப்படுத்திக்கொண்டு இப்போதும் ஜீர்ணம் செய்துகொண்டிருக்கிறீரோ!’ என்றெல்லாம் நிந்தாஸ்துதி செய்கிறோம்.

கலையழகின் எல்லை

அவரோ அருள் செய்கின்றார். கரணை கரணையான விரல்களும் நகங்களுமாய், பாச-அங்குசங்கள்



பற்றிய கைகளுமாய், மத்தகத்தைச் சுற்றி முத்துமாலைகள் இலங்க, அகில லோக ஆட்சிக்கு அறிகுறியான கிரீடத்தை உத்தமாங்கமாகிய தலையில் அணிந்துகொண்டவராய், அருள் புரிந்த வண்ணமாக இருக்கிறார்!

ஆம்; இது ஓர் உத்தமமான சிற்பம், - கலையழகின் எல்லை கண்ட சிற்பம்.

மகிஷாசுரமர்த்தினி

இந்த விநாயகர் முன்பு இருந்த இடத்துக்கு நேரே பின் பக்கம், வடக்குப் பிராகாரத்தில் மகிஷாசுரமர்த்தினி காட்சியளிக்கிறாள்.

நெருங்கித் தஞ்சமடைய முடியவில்லை. தர்ம சம்வர்த்தனி மாதிரி இவளுக்கும்தான் அபய ஹஸ்தம் இல்லையே!

ஆறு கைகளுடன்கூடிய இவளுக்கு அபய ஹஸ்தமும் சங்கு உள்ள கையும் இல்லை. சக்கரத்தைப் பார்த்ததும் ஏற்படுகிறது, சங்கு இல்லையே என்ற சங்கடம். ஆம்; விஷ்ணு அம்சம் உள்ள துர்க்கா தேவியல்லவா?

பின்னமடைந்த கைகளில் உள்ள துவாரத்தைப் பார்க்கும்போது, முன்பு பின்னமடைந்த கைகளை மறுபடியும் பொருத்திவைத்தார்கள் என்று தெரிகிறது. அதைக்கூட நாம் பார்க்கக் கொடுத்துவைக்கவில்லை. மூக்கும் பின்னமுற்று இருக்கிறது.

தேகத்தில் பூணூல்போலத் தெரிவது மேலாக்கு - ஸ்திரீகளுக்கு உள்ளதுபோல் இருப்பதுதான்.

வேலைப்பாடுகளின் மேதை

இவ்வளவு கஷ்ட காலத்திலும் என்ன திவ்ய அழகு! என்ன தெய்வ காம்பீர்யம்!

காதைச் சுற்றி இருபுறமும் ஜடை அழகைத்தான் பாருங்கள். ஆறடி உள்ள கம்பீரத் தோற்றத்தைத் தரிசியுங்கள்.

மகிஷத்தின் கொம்பிலே இயற்கை வரிகளைத்தான் பாருங்கள். இந்தச் சிற்பத்தின் நுட்ப வேலைப்பாடுகள் பலவும் விசேஷ மேதையை வெளியிடுகின்றன.

பக்தி மங்கிச் சிற்பக் கலைக்கு உரிய பக்திக் காதலும் குன்றிப் போயிருக்கும் இந்தக் கஷ்ட காலத்திலும், இஷ்ட மூர்த்திகளான விநாயகப் பெருமானும் மகிஷாசுரமர்த்தினியும் ஒருவாறு ஆறுதல் அளிப்பதுபோலத் தோன்றுகிறது.

ஆறடியில் சிவ கோபம்



அதோ பாருங்கள், யுத்த சந்நத்தராகி இருக்கும் அவரை. ஆம், அந்த உக்கிர மூர்த்தியைத்தான். உக்கிரத்தை அதிகப்படுத்துகிறது கோரப் பல்.

வீரபத்திரன்

அவர் பார்க்கும் அந்தப் பார்வையைத் தான் பாருங்கள். கோபம் ஜொலிக்கிறது கண்களிலே, - எரிமலையின் உச்சிக் குழியினுள்ளே கொதித்துக் குதிக்கும் அக்னிபோல.

ஆம்; கோபப் பிரளயம் இன்னும் உள்ளுக்குள்ளேதான்! பொங்கி வழிந்து புறப்பட்டுத் தன் சர்வநாச வேலையைத் தொடங்கிவிடவில்லை.

முக்கண் மூர்த்தியின் கோபம் அல்லவா? எவ்வளவு உக்கிரமாக இருந்தாலும், உள்ளுக்குள்ளே இருந்து ஒரு கட்டளையை எதிர்பார்ப்பதுபோலக் காண்கிறது!

சற்று தலை சாய்ந்து பார்க்கும் அந்தப் பார்வையை உற்று உற்றுப் பாருங்கள். அது ஒரு கேள்வி கேட்கும் பாவனையில் அமைந்திருக்கிறது - இல்லையா? 'தக்ஷ சம்ஹாரத்தைத் தொடங்கிவிடுவோமா?' என்று தன்னைத்தானே கேட்கும் பாவம்.



சாக்ஷாத் சிவ கோபம்தான் இந்த வீரபத்திரக் கடவுள். யாகசாலையில் புகுந்து, சின்னபின்னம் செய்வதற்குச் சித்தமாயிருக்கும் திருக்கோலம்.

இந்தச் சிற்பம், மகிஷாசுரமர்த்தினியின் பக்கத்தில் கிழக்கு நோக்கியவாறு ஒரு மாடத்தில் காணப்படுகிறது. இதையே முன் பக்கத்தில் மார்பு வரை தனியாகக் காட்டப் பெற்றிருக்கிறது.

கிரீடத்தின் வேலைப்பாடுகளும் ஜடை அலங்காரங்களும் எவ்வளவு அருமையாக அமைந்து, கோப ஆவேசத் திருக்கோலத்தை எடுத்துக் காட்டுகின்றன.

கழுத்தைச் சுற்றி அழகாக அமைந்திருக்கும் முத்தாரங்களைத்தான் பாருங்கள். கிரீடத்தில் பதித்திருக்கும் ஓர் ரத்தினமே விலை மதிக்க முடியாதது!

தொள்ளைக் காதும் பெரிய குண்டலங்களும், விதவிதமான மற்ற அணிகளும் அந்தக் காலத்து நாகரிக சின்னங்கள். எல்லாக் கோயில்களிலும் உள்ள சிற்பங்களிலும் விக்கிரகங்களிலும் இந்தத் தொள்ளைக் காதைப் பார்க்கலாமே!

சிற்பம் ஆறடி உயரம் உள்ளது. மூக்கும், கத்தி ஏந்திய கையின் சுண்டுவிரலும் பின்னமாகி இருக்கின்றன. கேடயமும் பின்னமுற்று இருக்கிறது.

இந்தச் சிற்பத்தையும், முன்பு கண்ட மகிஷாசுரமர்த்தினி சிற்பத்தையும் ஒரே சிற்பியின் கைத்திறனில் கண்டுகளிக்கிறோம்.

படியிலே கொட்டிய செல்வம்

'ஆனந்தத்துக்கு வழியும் ஆனந்தமாய் இருக்கிறது' என்கிறார், முக்திக்குப் பக்திவழி காட்டும் பெரியார். அழகுச் சிகரத்தைக் காட்டப்போகும் சிற்பி, அந்த அழகுக்கு வழியையும் அழகான படிக்கட்டுகளாய் அமைத்துக் காட்டுகிறார், திருபுவனத்திலே.


அழகுச் செல்வமான இந்தப் படிக்கட்டுகளை ஸ்ரீகம்பஹரேஸ்வரர் சந்நிதிக்கு ஏறும் வழியிலே தெற்குப் பிராகாரத்தில் பார்க்கிறீர்கள். இப்படி ஏறி உள்ளே சென்றால் நந்திக்கு முன் இருக்கும் அந்தராள மண்டபத்தை அடைகிறோம்.


யாளியைப் பார்

தும்பிக்கையுள்ள யாளியையும், அதன் மேலிருந்து போர் புரியும் வீரனையும் பாருங்கள்.

யாளியைக் கொஞ்சம் கூர்ந்து பாருங்கள். அந்தக் கோரப் பற்களையும் கூர்மையையும் பாருங்கள். அந்த வாயில் சிக்கிய எதிரிகளின் கதி என்னவாகும் என்று சிந்தித்துப் பாருங்கள்.

யாளியின் சிரம் வரை உள்ளதுதான் குறடு. குறட்டின் மேல் கோபுரம். குறட்டின் அடிப்பாகத்திலிருந்து முறையே மேலே உபபீடம், பத்மம், யாளவரி, வேதியவரி, பட்டியல் முதலியன அடங்கியிருக்கின்றன.




சிலி

நாம் முன்பு பார்த்த யானைச் சண்டைகளைக் குறட்டின் மத்தியிலுள்ள வேதியவரியில்தான் பார்த்தோம். இங்கும் இரண்டு இடங்களில் யானைகள் மனிதனை லாகவமாய்த் தூக்கிச் செல்லும் காட்சியைப் பார்க்கிறோம்.

யாளியும் போராட்டமும்

குறட்டின் மேலுள்ள யாளியைத் தனியாகக் காட்டியிருக்கிறது.

இந்த இடத்திலேதான் மேல்படிக்கட்டு வரிசைகளின் பக்கத்திலுள்ள சிற்ப விசித்திரங்களைக் காண்கிறோம். ஒரு யாளி, படிக்கட்டின் வளைவான குறட்டைத் தாங்கியவாறு காணப் படுகிறது. யாளியின் வாயிலே, சிங்கத்தின் மீது அமர்ந்தவண்ணம், ஒருவன் போர் புரிகின்றான். இவனுடன் போர் புரிகின்றான், யாளி மேலும் ஒருவன் நின்றுகொண்டு. யாளித் துதிக்கை சுருண்டு காண்கிறது.

பக்கத்தில் சிவகணங்கள் கும்மாளம் அடிப்பதைக் காண்கிறோம். கட்டை குட்டையான அந்தச் சரீர அழகையும், பருத்த தொந்தியையும், தலையில் ஜடை அலங்காரங்களையும், காதில் குண்டலங்களையும்தான் எவ்வளவு இயற்கையாகக் காட்டியிருக்கிறார் சிற்பி!

சிவகணம் ஒன்று, 'சங்குகொண்டே வெற்றி ஊதுவோமே!' என்று வெற்றிச் சங்கை எடுத்து ஊத, வேறொரு சிவகணம் மத்தளம் அடித்துக்கொண்டிருக்கிறது. முதல் உருவம்போல் இன்றி, இங்கே தலை அலங்காரத்தில் மாறுதல்களைக் காண்கிறோம்.

கொட்டிக்கிடக்கும் அழகு


யாளியின் கிழேயுள்ள பட்டியலில், கூட்டின் அழகைத்தான் பாருங்கள்.

யாளி வாயிலிருந்து மேலே, கொடிகளையும் ஒவ்வொரு கொடியின் சுருளிலும் ஒரு பூதகணம் உட்கார்ந்திருப்பதையும் பார்க்கிறீர்கள் அல்லவா?

இங்கேதான் இப்படியென்றால் படிக்கட்டுகளின் அபார வேலைத் திறனைத்தான் என்னென்பது? சிற்பிகளின் சித்திரக் கை, அழகைக் கொட்டிவைத்திருக்கிறது!

படிக்கட்டுகளிலேயே இப்படி அழகு கொட்டிக்கிடந்தால், உள்ளே எப்படித்தான் இருக்குமோ என்று நினைக்கிறீர்கள் அல்லவா?

சிற்பக் களஞ்சியத்தின் மகோன்னத சிகரம் ஒன்றை அடைவீர்கள்; அழகின் கௌரி - சங்கரம் (எவரெஸ்ட்) ஏறிப் பார்ப்பீர்கள்.



தெவிட்டாத அமுதச் செல்வம்

நாம் பார்த்துப் வியந்தோமே, அந்தப் படிக்கட்டுகளின் வழியாக ஏறிப் போய், அதோ படத்தில் காணும் இடது பக்கத்து வாசலின் வழியாக உள்ளே பிரவேசிப்போம்.

தலை சுற்றும் அழகு


முதலில் விநாயக தரிசனம் செய்துவிட்டு மண்டபத்தின் நடுவே வந்து ஸ்ரீகம்பஹரேஸ்வரரின் தரிசனம் செய்கிறோம். செய்து, உள்ளே உயரப் பாருங்கள், தலை சுற்றுகிறதா?

ஆம், தலை சுற்றும் நிலைமைக்கு அத்தனை நுட்ப வேலைப்பாடுகளுடன் சிற்பச் செல்வங்கள் பலவாய்க் கொட்டிக் கிடக்கின்றன. 'இந்தக் கோயிலில் இத்தனை விசேஷங்களா?!' என்று மற்றக் கோயில்கள் சற்றுப் பொறாமைப் படவேண்டியதுதான்!

அழகுத் தூண்கள்

இந்தக் கோயிலில் உள்ள தூண்களிலே பஞ்சரக் கால்களில் அதிவிசேஷமான இரு தூண்களை முக்கியமான இடத்தில் நந்திக்கு எதிரே அந்தராள மண்டபத்தில் நிறுத்தி இருக்கிறார்கள். இங்கேதான் எவ்வளவு நுட்பமான வேலைப்பாடுகள்! எத்தனை வரிவரியான அடுக்குகள்! தேவர்கள் அமரும் கோஷ்ட மாடங்கள் எத்தனை!

தூணின் மேலுள்ள 'போலிக் கட்டை'யில்தான் என்ன வேலைப் பாடு! நடுவே இரு தூண்களிலும்



கோஷ்டிகளுடன் நடனமாடும் தேவ கன்னியரைத்தான் பாருங்கள்.

எத்தனை கொடி-யாளிகள் நின்று தூணைத் தாங்கி நிற்கின்றன! தூணின் 'குடத்'தின் மேலுள்ள பலகைமேல் எத்தனை கொடி - யாளிகள் மண்டபத்தைத் தாங்கிக்கொண்டு இருக்கின்றன! மேலேயுள்ள சிற்பங்கள் தான் சாமானியமா?

இருட்டிலும் செல்வம்!

ஒருபுறம் கஜலட்சுமியும், எதிரே நடராஜரும், சுற்றிலும் பல சிற்பங்களும் காணப்படுகின்றன. ஒரே இருட்டாக இருந்தாலும் ஒவ்வோர் இடத்திலும் கூர்ந்து கவனிக்கும்போது அங்கும் சிற்ப விசேஷங்களைக் காணலாம்.

இருட்டில் யார் போய்ப் பார்க்கப் போகிறார் என்று சிற்பிகள் விட்டு வைத்தார்களா? கோயில் முழுவதும் ஒவ்வோர் இடத்திலும் தங்கள் முழுத் திறனையும் காட்டியிருக்கிறார்கள், கொட்டியிருக்கிறார்கள்!

பிரிய இயலாத பெருஞ்செல்வம்

மண்டபத்தின் மேலுள்ள பாவு கல்லிலும் எத்தனை சிற்ப ஜாலங்கள்! படத்தின் மத்தியில் கீழே திருமஞ்சன - புண்யாஹவாசனக் குறடு இருக்கிறது. அதன் மேலே பாவு கற்களில் உற்றுப் பார்த்தால், தாமரை மொட்டு ஒன்று நடுவே இருப்பதையும், அதைச் சுற்றி வட்ட வடிவில் பல விசித்திரங்கள் அமைந்திருப்பதையும் காண்பீர்கள். வட்டத்தின் இரு பக்கங்களிலும் பல கொடி வேலைகளையும் காணலாம்.

இத்தனை அழகுச் செல்வங்களுக்கு இடையே ஒரு ரசிகனின் நிலைதான் என்ன? இன்றைய சிற்பகலா ரசிகனின் நிலையைத்தான் குறிப்பிடுகிறோம்.

வறிஞன் ஒருவன் திடீரென்று ஏதோ மந்திரப்படிக்கட்டுகளின் வழியாக ஏறிப் பொன்னுலகம் போய் ரத்தினக் குவியல்களையும், நுண்ணிய வேலைப்பாடமைந்த நகைகளையும், வேறு செல்வங்களையும் ஒருங்கே கண்டு பிரமிப்பதாக எண்ணிப் பாருங்கள்.

அந்த ஏழை அங்கும் இங்கும் எங்கும் செல்வமயமாகக் கண்டு, 'மூர்ச்சை போட்டு விழுந்துவிடுவோமோ?' என்ற நிலையில் ஒருவாறு சமாளித்துக் கொள்வதாகக் கருதுவோம். பிறகு, அச்செல்வங்களையே பார்த்துக் கொண்டு இருக்க வேண்டுமென்ற 'பைத்திய'மும் அவனுக்கு ஏற்படுகிறது. வெளியேற மனம் வரவேயில்லை. வெளியே புறப்பட்டால் இதய நிம்மதி இல்லை. இதே நிலைமைதான் இன்றைய சிற்ப வறுமையில் மேலே சொன்ன அமுதச் சிற்பங்களைப் பார்த்துப் பார்த்து வியக்கும் ரசிகனின் நிலைமையும்.

இதற்கு முன்பு வந்த சிற்பச் செல்வங்களோடுகூடிய இக்கோயில் மண்டபத்தின் முன்புள்ள அந்தராள மண்டபம் இவ்வளவு விசேஷமாக இருக்கவே, ஒருவாறு அரை மனதுடன் கோயிலை விட்டுப் பிராகாரத்துக்கு வருகிறோம்.

எதிரே உள்ள (வாசற் பக்கம்) கோபுரத்தின் முன்பு ஸ்வாமியைப் பார்த்து நிற்கும் வெளி நந்தி மண்டபத்துக்கும் வந்துவிடுகிறோம்.

ஆனால் மறுமுறையும் தெற்குப் பிராகாரத்துக்குப் போய் ஸ்ரீதர்ம சம்வர்த்தனியைத் தரிசித்துவிட்டு வந்தால்தான் நிம்மதி பெறலாம் என்று தோன்றுகிறது.



பிரியாத பிரிவு

அறப்பெருஞ் செல்வியை, அருளின் தெய்வத்தை, தர்மசம்வர்த்தினி தேவியை இதோ மீண்டும் தரிசித்து விடுகிறோம். அபய ஹஸ்தம் காணப்படா விட்டால்தான் என்ன? மனம் இருந்தால் மார்க்கம் இல்லையா? அம்மை தன் நிறைந்த அருளை நமக்கு வழங்கிய வண்ணமாக இருக்கிறாள்.

அன்னையின் அணிமணிகள்

இந்த அருள் - அழகியைத் திவ்ய அலங்கார பூஷணங்களுடன் எத்தனை தடவை பார்த்தாலும் தெவிட்டிவிடப் போவதில்லை.

'அம்மா, உனக்கும் இவ்வளவு ஆபரண மோகமா?' என்று சொல்லத் தோன்றுகிறது. அப்படி இந்தச் சிற்பத்தில் மதிக்க முடியாத ஆபரணங்களை அமைத்துவிட்டார்கள். தலையிலுள்ள கிரீடத்தின் நடுவே பிரகாசிக்கும் ரத்தினம் ஒன்றுபோதுமே ரசிக மணிகளுக்கு, - விலையிலா முழுமணியென்று மதிப்பதற்கு, போற்றுவதற்கு!


ஆம், அன்னையை அணி செய்யும் அணிகளுக்கு விலை ஏது? இவள் வளர்க்கும் அறங்களெல்லாம், குணங்களெல்லாம் அணிகள் தான்; மணிகள்தான்!

இவள் அருள் பெற்ற அந்தச் சிற்பிகளுக்குத் தான் பொன் வேண்டுமா? ரத்தினங்களைத் தேர்ந்தெடுக்க வேண்டுமா?

மாயப்பொன் வேணுமோ
மதித்தெம்மைச் செய்வதற்கே?

என்று அந்த அணிகள் கொஞ்சுகின்றன!

'நகை செய்து நாகரிகம் செய்வார்' என்பர் நுணுக்கத் தொழிலாளரான



பொற்கொல்லர்களை. இந்த அருங்கலைச் சிற்பிகளோ அன்னையின் இந்த அணிகளைச் செய்து எத்தகைய பண்பாட்டை, தெய்வ நாட்டமுள்ள திவ்ய நாகரிகத்தை நாட்டிலே வளர்த்திருக்கிறார்கள்!

இந்த அரும்பெருங் கலைஞர்களின் நகைப் பைத்தியமும் பக்திப் பைத்தியமும்தான், அன்னையின் நகைப் பைத்தியமாக விளைந்து அன்பர்களுக் கெல்லாம், ரசிகர்களுக்கு எல்லாம் சௌந்தரியப் பசிக்குத் தெவிட்டாத அமுதமாயிருக்கிறது.

அணிகளுக்கும் அணி

அணிகளுக்கெல்லாம் அணியாகிய திருமுகத்தையும் நேர்முகமாய்ப் பார்த்துப் பரவசமாகிறோம். என்றாலும், திருப்தி ஏற்படுகிறதா? இன்னும் ஒரு தடவை பக்கவாட்டில் சென்று தரிசிக்க ஆசை உண்டாகிறது.

பார்த்துப் பார்த்துப் பரவசமாகும் கலா ரசிகர்கள், 'இந்த அழகுப் பசி, இந்த அருளின் தாகம் தவிர வேறு பசி, தாகங்களையும் மறந்துவிடக்கூடும்' என்பர்.

தர்மசம்வர்த்தினியின் பக்கத்திலுள்ள கொடியின்மேல் ஒய்யாரமாகச் சாய்ந்து கொண்டிருக்கும் கன்னிகையையும் மறுமுறை பார்க்கிறோம். வேலைப் பாடுகள் இங்கும் பிரமிக்க வைக்கின்றன.

எவ்வளவு இடங்களில் நின்று நின்று பார்த்தாலும், 'இந்த மோகினியை இன்னும் ஒரு தடவை பார்த்துப் போக வேணும்' என்றே தோன்றுகிறது.

பிரிய மனம் இல்லாமல்தான் விடை பெற்றுக்கொள்கிறோம். பிரதட்சிணமாக வரும்போது கோமுகியோடுகூடிய (அபிஷேக தீர்த்தம் விழுகிற) இடத்தில் உள்ள தேவ கோஷ்ட மாடத்தில் இருக்கும் பிரம்மாவையும் தரிசனம் செய்கிறோம். இதுவரை பார்த்துப் பிரமித்த சிற்ப ஜாலங்களைப் படைத்துவிட்ட சிற்பிகளைப் படைத்தவர் அல்லவா?

கோபுர வாசலை அடைகிறோம். அதே நந்தியைத் தாண்டிக் கோபுரத்தையும் தாண்டி வருகிறோம்.

பின்னே கோபுரம் சிறிது சிறிதாக மறைந்து கடைசியாக முழுதும் மறைந்து போகிறது. எனினும், மறைந்துவிட்டதா? - உண்மைதானா?

வெளிப் பார்வைக்குக் கோயில் தெரியவே இல்லைதான். ஆனால், கருத்திலும் கண்ணிலும் சிற்பச் செல்வங்கள் மறையாது திகழ்கின்றன.

தர்மசம்வர்த்தினியும் தரிசனம் அளித்தவண்ணமாக இருக்கிறாள். எவ்வளவு அழகுச் செல்வம், நமது இதய சம்பத்தாகிவிட்டது; ஆத்ம சம்பத்தாகிவிட்டது!

பின்னம் ஏற்பட்டதால்தானே அரும்பெருஞ் சிற்பச் செல்வங்கள் தெற்குப் பிராகார மண்டபத்துக்கு வந்து சேர்ந்திருக்கின்றன. இன்னும் அதிக பின்னம் அடையாமல் இப்பெருங்கலைப் பொக்கிஷத்தைப் பின் சந்ததியினருக்குக் காப்பாற்றிக் கொடுக்கவேண்டிய பெரும் பொறுப்பு இக்கோயில் நிர்வாகிகளுக்கு உரியது.

கங்கைகொண்ட சோழபுரம்



தென்னாட்டுச் செல்வம் மட்டுமன்று, கங்கைகொண்ட சோழபுரம்; இது பாரத பூமியின் கலைச் செல்வம் மட்டுமன்று; கலையுலகின் கலைப் பொக்கிஷங்களில் ஒன்று.

சர்வதேசக் கலையரங்கிலே, 'கங்கை கொண்ட சோழன்' என்ற தமிழரசன் தந்த கோயிலுக்கும், கலைப் பெருஞ் செல்வத்துக்கும் ஒரு முக்கிய ஸ்தானம் உண்டு.


கொள்ளிடத்தில் உள்ள 'லோயர் அணைக்கட்டு'க்கு ஐந்து மைல் தூரத்தில் இருக்கிறது, பழந்தமிழ் நாகரிகப் பெருமையும் கலை மாட்சியும் அகில உலகப் புகழும் வாய்ந்த இந்தக் கோயில். சிவன் கோயில்; ஆனால் சைவர் அல்லாதாரும் போற்றுதற்குரிய கலைப்பெருங்கோயில்.

இக்கோயிலில் உள்ள கலைமகளையும் கஜலட்சுமியையும்தான் இங்கே பார்க்கிறீர்கள்.

கோயில் மகா மண்டபத்தின் தெற்கு வாசற்படிக்கட்டில் இருக்கிறது லட்சுமி சிற்பம். இதற்கு நேர் வடக்கு வாசற்படிக்கட்டில் சண்டேஸ்வர அனுக்கிரக மூர்த்திக்கு எதிரே பார்க்கிறோம் சரஸ்வதி சிலையை.

இக்கோயிலின் அம்மன் சிற்பங்களில் மிகவும் அழகானது சரஸ்வதி. வேலைப் பாடுகளிலும் மிகவும் நுட்பமானது இது.

வலது முன் கை பின்னமுற்று இருக்கிறது; சின் முத்திரை தாங்கிய கை.



மற்றக் கைகளில் ஜபமாலையும் அமிர்த கலசமும் சுவடியும் இருக்கின்றன. இக்கலைமகள் பத்மபீடத்தில் அமர்ந்திருக்கிறாள்.

கிரீடத்திலுள்ள வேலைப்பாடும், பின்னே இருக்கும் பிரபையும் இச்சிற்பத்தின் வேலைப் பாடுகளுக்குச் சிகரம்.

கஜலட்சுமி

மகா மண்டபத்தின் தெற்கு வாசலில் கஜலட்சுமியின் சிற்பம் மேற்கு நோக்கிய வாறு காணப்படுகிறது.

சரஸ்வதிபோல் கஜலட்சுமியும் பத்ம பீடத்தில் அமர்ந்திருக்கிறாள். இரு கைகளிலும் கமலங்கள் தலையைச் சுற்றித் தாமரைப் பூமாலை, காதுகளின் இருபுறமும் அழகாய்ப் பரந்துள்ள ஜடை. மார்பின் மீதுள்ள மணிமாலைகளும் கிரீட வேலைப்பாடுகளும் விசேஷம் ஆனவை. லட்சுமியைச் சுற்றி மேகங்கள் அழகாய்க் காண்பிக்கப் பெற்றுள்ளன.

சிரசின் மீது இருபுறமும் கஜங்கள் குடங்களால் அபிஷேகம் செய்கின்றன. அதற்கு மேலே இருபுறமும் வெண் சாமரைகள். நடுவே குடை. கலை மகளுக்குக் குறையாத சிற்ப அழகுடன் விளங்குகின்றாள் கஜலட்சுமி.

* * *

வடநாட்டுக் கலைச் சம்பிரதாயங்களுக்கும், நமது கலை மரபுகளுக்கும் அடிப்படையில் கருத்தொருமை உண்டு; வெளிப்படை வேற்றுமைகளும் உண்டு. தென்னாட்டுக் கலைஞர்கள் தென்னாட்டுத் திருக்கோயில்களில் உள்ள சிற்பங்களைக் கற்றுத் தங்கள் புதிய சிருஷ்டிகளை உருவாக்குவது நலம்.

எனவே, கங்கைகொண்ட சோழ புரத்துக் கஜலட்சுமி, சரஸ்வதி போன்ற அருமையான சிற்பங்கள், நமது விசேஷ கவனத்துக்கு உரியன.


எத்தனை தமிழ்க்கவி உள்ளங்களில் ஊறி, எத்தனை தமிழ் அறிஞர்களின், கலைஞர்களின் கருத்திலும் கலையிலும் உருவாகிச் சிற்பத்திலே உதித்திருக்க வேண்டும், இந்தக் கலைமகளும் கஜலட்சுமியும்.



சமரசத்துக்கு இரண்டு சாட்சி

'அரியும் சிவனும் ஒண்ணு, அறியாதவன் வாயிலே மண்ணு' என்று மதாவேசத்தின் மீது எவ்வளவு கோபம் கொண்டு, சமரச உணர்ச்சியை வற்புறுத்தி வந்திருக்கிறார்கள் தமிழ்ப் பெருமக்கள் - ஆம், நம் தமிழ்ப் பெருமக்களாகிய பொதுமக்கள்!

மறந்தும் புறந்தொழாத வீர வைஷ்ணவமும் வீர சைவமும், பண்டித படாடோபமான வாய்ச்சண்டைகளே! பொதுமக்கள் தங்கள் நெஞ்சிலே குலதனமாய்க்கொண்டு போற்றியது சமரச சன்மார்க்க பொக்கிஷம்தான்.



சிவ விஷ்ணு ஒருமை

இதற்கு ஒரு பெரிய சாட்சி இருக்கிறது, கங்கைகொண்ட சோழபுரத்திலே. ஏழடி உயரச் சாட்சி. இந்தச் சாட்சி, அவரின் (சிற்பத்தின்) வலது பக்கத்திலே நின்று கேட்டால், சிவன் கட்சி பேசுகிறார்! இடது பக்கமோ விஷ்ணு கட்சி! என்ன அதிசயமான சாட்சி பாருங்கள்!

கங்கைகொண்ட சோழபுரத்துக் கோயிலிலுள்ள சங்கரநாராயணச் சிற்பம்தான் இது. கிரீடத்தில் இருந்து கால்வரை வித்தியாசங்களைக் காணலாம். எனினும் ஒரே ரூபம் - வேற்றுமையில் ஒற்றுமை.

சிவ சக்தி ஒருமை

'அரியும் சிவனும் ஒன்று' என்பது போல் 'சிவமும் சக்தியும் ஒன்று' என்ற உண்மையையும் நன்கு உணர்ந்துகொள்ள வேண்டும்.

உண்மையில், இந்த இரண்டு உண்மைகளும் ஒரே சக்தி வாய்ந்த உண்மையின் இரண்டு பக்கங்கள். ஏனென்றால் சக்தி, விஷ்ணு அம்சம் தானே? தேவியாகிய பார்வதி, நாராயணி தான், வைஷ்ணவிதான்!

அரியலால் தேவியில்லை

ஐயன் ஐ யாறனார்க்கே!

(ஐயாறனார் - திருவையாற்றில் கோயில் கொண்டிருப்பவர்; சிவபெருமான்)

என்பது அப்பர் தேவாரம்.

இத்தகைய சக்தியாகிய அர்த்த நாரீஸ்வரச் சிற்பமும் சங்கரநாராயணச் சிற்பமும், கோயிலின் தெற்குப் பிராகாரத்திலே மூலஸ்தானத்தின் வெளிப்பக்கத்தில் காணப்படுகின்றன.

உண்மையும் அழகும்

மகத்தான உண்மையை வெளியிடும் இந்தச் சிற்பங்கள் மகத்தான சிற்ப அழகுகளையும் வெளியிடுகின்றன.

இந்த அர்த்தநாரீஸ்வரச் சிற்பம், கும்பகோணத்து நாகேஸ்வர ஸ்வாமி மூலஸ்தானத்தின் பின்பக்கம் இருக்கும் சிற்பத்தை நினைப்பூட்டுகிறது. இரண்டு சிற்ப பாவங்களும் ஒன்றுதான்.

ஆனால் இங்கே சக்தியின் கை, தாமரைத் தண்டைத் தாங்குகிறது. அதைக் கிளி கொத்துகிறது. அங்கே அந்தக் கையில் கண்ணாடி; அதில் முகம் பார்ப்பதுபோல் அமைந்திருக்கிறது.

சிவ - பாகத்தில் அகன்ற தோள் - பகுதி, புஜபல பராக்கிரமத்தைக் காட்டுகிறது. சக்தி - பாகத்தில் பெண்களுக்கே உரிய மெல்லிய கை லாகவமாய்க் கிளியை ஏந்துகிறது. இடையிலும்தான் வித்தியாசம்! இடபாகம் நாணிக் கோணி வளைந்த நிலையில் உள்ளதை காண்கிறோம்.

ரிஷபத்தின் மீது ஒய்யாரமாகச் சாய்ந்திருக்கும் அந்த நிலையே சிற்பத்தின் அழகை எப்படி அதிகப்படுத்திக் காட்டுகிறது பாருங்கள்!

இடுப்பிலுள்ள மணிகளும், இடையில் தொங்கும் முத்துச்சரங்களும் கிரீடத்திலுள்ள வேலைப்பாடுகளும் இவ்வூர்ச் சிற்பத்துக்கு உள்ள சிறப்பியல்பு, தனிப்பெருமை. கிரீடத்தில் இருபுறத்திலும் வெண்சாமரை. மேலே பூச்சக்கரக் குடை. இச்சிற்பத்தின் உயரமும் ஏழடிக்கு மேல் இருக்கிறது.

எவ்வளவு உயர்ந்த உண்மையை, எவ்வளவு கம்பீரமாகவும் அழகாகவும் காட்டுகிறது இச்சிற்பம்!

'சக்தியும் சிவமும் ஒன்றே' என்ற இந்த உண்மையை ரிஷபமும் கம்பீரமாகக் கண்டு காட்டுவதுபோல் பக்கத்திலே அமைந்திருக்கிறது.

நிலத்திலிருந்து, உயரே உள்ள இந்தச் சிற்பத்தைப் பார்க்கும்போது, அழகும் பன்மடங்கு உயர்ந்து காண்கிறது.

கதையும் புதைபொருளும்

'**சி**வமும் சக்தியும் இரண்டல்ல, ஒன்றே' என்ற உண்மையை வற்புறுத்தும் புராணக் கதையும் ஒன்று உண்டு. பிருங்கி ரிஷியின் வீர சைவம், 'சிவன் வேறு, விஷ்ணு வேறு' என்ற கொள்கையுடன் நின்றுவிடாமல், 'சிவம் வேறு, சக்தி வேறு' என்பதாகப் பிரித்துப் பார்க்கும் மதாவேசமாகவும் இருந்ததாம்.

அம்முனிவருக்கு உண்மை உணர்த்த, சிவபெருமான் உமாதேவியுடன் ஏகாசனத்தில் நெருக்கமாக வீற்றிருந்தார். தம்மை மாத்திரம் தனியாக ஆராதித்து வந்த முனிவர், இப்போது எப்படிப் பிரதட்சிணம் செய்வார், பார்க்கலாம்! என்று எண்ணினார் பெருமான்.

இப்படியிருந்தும் மதாவேசம் உண்மையைக் கண்டுகொள்ளவில்லை. முனிவர் ஒரு வண்டு ரூபம் கொண்டு ஆசனத்தை இடையே துளைத்து வழக்கம்போல் சிவபெருமானை மாத்திரம் பிரதட்சிணம் செய்கிறார்! சக்தியின் கோபத்தால் முனிவர் தம் சக்தியை இழந்து தவித்து, கடைசியாக உண்மையை கண்டுகொள்கிறார். தேவி தவம் புரிந்து பெருமான் வடிவத்திலே ஒற்றுமைப்பட்டு நிற்கிறாள்.

திருச்செங்கோட்டில் மலைமேல் இந்தக் கதைக் காட்சியையும், இந்த அர்த்தநாரீஸ்வர வடிவத்துக்குத் தனிக் கோயிலையும் காணலாம்.

* * *

கோயிலின் இடிந்த கோபுரத்தின் கீழிருந்து தெரியும் தோற்றம்தான் அத்தியாய முகப்பில் உள்ள படத்தில் தெரிகிறது.


கோயிலின் முன்பு பிரமாண்டமான நந்தி அமைந்திருக்கிறது. இடிந்து பாழடைந்திருப்பது இந்தக் கோயிலின் பழைமைக்கு மட்டும் சான்றல்ல; அந்நியர்களின் மிலேச்சத்தனமான நாச கைங்கரியத்துக்கே விசேஷமான சான்று.



'அரனார் மகனார் ஆயினார்!'

இக்கோயிலில் உள்ள சிற்பங்களைப் பார்த்துவிட்டுத் திரும்பும்போதும், ரசிகர்களின் உள்ளத்திலே திரும்பித் திரும்பி வந்து, தன்னுடைய அழகை மறக்க முடியாமல் செய்துவிடும் சிற்பம் ஒன்று உண்டு.

நாம் இதுவரை கண்ட 'தென்னாட்டுச் செல்வங்க'ளில் உள்ள வேலைப் பாட்டைவிட இந்தச் சிற்பத்திலே பேரழகு காணலாம். ஏன், பரிபூர்ண அழகையே பார்க்கிறோம் என்று தோன்றுகிறது.



எவ்வளவு முறை சித்திரித்துப் பார்த்தாலும், மறுமுறை எழுதும்போது ஒரு தனியழகுடன் திகழ்கிறது. சிறந்த பாட்டு ஒன்றை நாம் எத்தனை தரம் பாடி அனுபவித்தாலும் மீண்டும் பாடும்போதும் ஒரு தனிச்சுவை, ஒரு புதுமைச் சுவை, தென்படுகிறதல்லவா? அத்தகைய சுவையுடன் 'கல்லிலே கொஞ்சும் கவிதை' இந்தச் சிற்பம்.


இச்சிற்பத்தைச் சுற்றிலும் உள்ள சிறு சிறு உருவங்கள் ஒரு கதை சொல்கின்றன. இங்கே கல் சொல்லும் இக்கதையைத்தான், சொல் சொல்கிறது, பெரிய புராணத்திலே 'சண்டேசுர நாயனார்' என்ற தலைப் பெயருடன்.

கதைச் சுருக்கம்

இந்த நாயனாரைச் 'சண்டேசர்' என்றும், 'சண்டீசர்' என்றும், 'சண்டேஸ்வரர்' என்றும் சொல்வதுண்டு. சிவநேசச் செல்வர்களான 63 நாயன்மார்களில் ஒருவர் இவர்.

சோழவள நாட்டிலே மண்ணியாற்றின் தென்கரையில் 'சேய்ஞலூர்' என்று ஒரு பழைய ஊர். அவ்வூரிலே விசாரசர்மர் என்ற ஒரு சிறுவன் இருந்தான். ஒரு நாள் மந்தையிலுள்ள ஒரு பசுவை அடித்துவிட்டான் மேய்ப்பவன்; அதைப் பார்த்துவிட்டான் விசாரசர்மர்.

'இனி நானே இந்தப் பசு மந்தையை மேய்ப்பேன்' என்று தீர்மானித்தான் சிறுவன். அப்படியே இவன் மேய்த்து வர, பசுக்களும் நிறையப் பால் கொடுத்தன.



விசாரசர்மர், மணலால் சிவலிங்கம் பிடித்துவைத்துப் பாலபிஷேகம் செய்து வந்தான்.

இவன் இப்படிச் செய்வதை ஒருவன் பார்த்துவிட்டான். அவன் மூலமாக இந்நிகழ்ச்சியை அறிந்துகொண்ட ஊரார், விசாரசர்மரின் தந்தைக்குத் தெரிவித்தார்கள்.

மகனார் செயலைத் தந்தை மறைந்திருந்து கவனித்தார். 'குடம் குடமாய்ப் பால் வீணாகிறதே!' என்று கோபித்து, விசாரசர்மரின் முதுகிலே கைத்தடியால் அடித்தார். விசார சர்மருக்கோ அது ஒன்றும் தெரியவே இல்லை; அப்படி ஈடுபட்டு இருந்தார் அந்தப் பாலபிஷேகத் திருப்பணியிலே!

தந்தைக்கோ கோபம் பொங்கிவிட்டது. திருமஞ்சனப் பால்குடத்தைக் காலால் இடறிச் சிந்தினார். அப்படிச் சிந்தும் போதுதான் அதைத் தெரிந்து கொண்டான் விசாரசர்மர். அப்படிச் சிந்தினவர் 'தந்தை' என்றும் தெரிந்து கொண்டான்.

குடத்தை இடறிய காலைத் தண்டிக்க வேண்டும் என்று, அருகே கிடந்த ஒரு கோலை எடுத்தான். அதுவே மழுவாயுதம் ஆகிவிட்டது. அந்த மழுவைச் சிறுவன் எறியவே, மண் மேல் விழுந்துவிட்டார் தந்தையார். சிவபெருமான் தேவியுடன் பிரத்தியட்சமாகிவிட்டார். "இனி உனக்கு நாம் தந்தை" என்றார் சிவபெருமான். "நமது தொண்டர்களுக்கு இனி நீயே அதிபன்; சண்டேசப் பதவி தந்தோம்" என்றார். தம் ஜடையிலிருந்து கொன்றை மாலையை எடுத்துச் சூட்டினார் பரமன்.

ஆக அந்தச் சிறுவன்,

அந்த உடம்பு தன்னுடனே
அரனார் மகனார் ஆயினார்!

சிற்பத்திலே கதை

இக்கதையின் முக்கியக் கட்டங்களைச் சிற்பத்தில் காணலாம்.

ஊரார் முறையிடுவதைப் படத்தின் வலது பக்கத்தில் மேலே பார்த்துக் கொள்ளுங்கள். கீழே தகப்பனார், மாடுகள் இருக்கும் பக்கம் விரைந்து வருவதைக் கண்டுக்கொள்ளலாம்.

இடது பக்கத்தில் தகப்பனார் மரத்தின் மேல் ஏறிக்கொண்டு, கீழே லிங்கத்துக்குப் பாலபிஷேகம் நடப்பதைக் கண்டு கோபமடைகிறார்.

இதன் கீழேயுள்ள சிற்பத்தில் தகப்பனாரின் காலை வெட்டுவதுபோலக் காட்டியிருக்கிறது.

தாம் அணிந்திருந்த கொன்றை மாலையை சிவபெருமான் சண்டேஸ்வரருக்குத் தலையில் சூட்டுகிறார். மேலே சூரிய - சந்திரர், தேவர்கள் முதலானோர் இக்காட்சியைக் காண்கிறார்கள். பக்கத்திலே உமையம்மை, தாயின் கனிவுள்ள பார்வையுடன் ஆசீர்வதிக்கிறாள்.

* * *

தனிப்படத்தில் சிவபெருமானையும் பார்வதிதேவியையும் பெரிய அளவில் காட்டியிருக்கிறது. வேலைப்பாடுகளின் பூர்ண அழகை இந்தப் படத்தில் பார்த்துக்கொள்ளலாம்.

எத்தனை தடவை பார்த்தாலும் சலிக்காத, தெவிட்டாத அமுதச் சிற்பம் இது!

சிற்ப மும்மணிகள்

இரண்டு புலவர்கள் சம்பாஷித்துக் கொண்டு இருந்தார்கள். ஒருவர் மற்றவரிடம் தாம் அனுபவித்துவந்த கஷ்டங்களையெல்லாம் அடுக்கு மொழிகளில் தொடுத்துக்காட்டி, 'இப்பேர்ப்பட்ட முள் மாலையை என் கழுத்திலே போட்டுவிட்டான்!' என்று அங்கலாய்த்துக்கொண்டார்.

'யார் ஸ்வாமி?' என்று கேட்டார் புலவர் II. அச்சமயம் 'சூரியன் பிள்ளை!' என்று யாரோ ஒருவன், வேறு யாரோ ஒருவனைக் கூப்பிட்டான்.

உடனே, தம்முடைய துயர மாலையைக் காட்டிக்கொண்டிருந்த புலவர், 'சூரியன் பிள்ளைதான் இதைப் போட்டவன்!' என்றார். அது கேட்ட புலவர் II, முதலில் திகைத்துப்போனார்; பிறகு சிரித்தார்.

நவக்கிரகம்

சூரியனுடைய பிள்ளை சனீஸ்வரன். 'சனி' என்ற கிரகம்தான் தம்முடைய கஷ்டங்களுக்கெல்லாம் காரணம் என்றார் புலவர்.





சனி முதலான நவக்கிரகங்களையும் நாம் பொறுப்பாக்கிவிடுகிறோம், நம்முடைய கஷ்ட-நஷ்டங்களுக்கெல்லாம்.

இந்த நவக்கிரகங்களைச் சிற்ப சிகரமாகப் பார்க்கலாம், கங்கைகொண்ட சோழபுரத்திலே.

இங்கே அருமையான வேலைப் பாடுகளுடன் 'ஒரு நூதன அமைப்பு முறை'யில் ஒரே கல்லில் அமைந்திருக்கிறது நவக்கிரகம். இங்குள்ள இந்த அமைப்பைப் போல் வேறு ஓர் இடத்திலும் காண முடியாது.

நான்கு அடி சதுரத்தில் அமைந்திருக்கிறது. சூரிய பீடத்தைச் சுற்றி அமைந்திருக்கின்றன மற்றக் கிரகங்கள். சூரியனுள்ள இடம், தாமரை இதழ்களோடுகூடிய அழகிய சக்கர வடிவில் அமைந்திருக்கிறது.

சனியின் தந்தையாகிய சூரியனுக்கு ஏழு குதிரைகள் பூட்டிய ரதம். ஏழு நிறங்கள் சூரிய ஒளியில் உண்டு என்று விஞ்ஞானம் தெரிவிக்கிறதல்லவா? அந்த ஏழு நிறங்களையும் புராணம் ஏழு



குதிரைகளாக்கிச் சூரிய ரதத்தில் பூட்டிவிட்டது என்று விவரிப்போரும் உண்டு.

இந்த ரதத்திலே அருணன் சாரத்தியம் செய்ய, மற்ற எட்டுக் கிரகங்களும் எட்டுத் திக்குகளை அலங்கரித்துக்கொண்டு இருக்கின்றன. ஆம்; அது அது இருக்க வேண்டிய இடத்தில் கிரகங்கள் அழகாய் அமர்ந்திருக்கின்றன.


சூரிய ரதத்துக்கு ஒற்றைச் சக்கரம்தான் உண்டு என்பர். இங்கே சூரிய ரதத்துக்கு இரட்டைச் சக்கரம் அளித்து உதவியிருக்கிறார் சிற்பி. மற்றச் சிறுபடத்தில், நவக்கிரகத்திலே சனீஸ்வரனையும், காலின் கீழ் அருணன் ஏழு குதிரைகளின் லகானை இரு கையில் பிடித்தவண்ணம் சாரத்தியம் செய்வதையும் காண்கிறோம்.

மகிஷாசுரமர்த்தினி

பக்கத்திலே மகிஷாசுரமர்த்தினி; சிறிய அழகிய உருவில் காலடியில் அசுரனை மிதித்தவாறு காண்கிறோம். தோல்வியுற்ற அசுரன், கடைசியாகத் தேவியின் பாதார விந்தங்களில் சரணடைந்துவிடுவதுபோலக் காண்கிறது.

மற்றப் படத்தில் இருபது கைகளோடு அதி உக்கிரமான கோலத்தில் மகிஷாசுரமர்த்தினியைக் காண்கிறோம். இந்த இருபது கைகளும் எவ்வளவு பயங்கரமான செயல் திறனுக்கு அறிகுறி!





மகிஷாசுரனுடைய மந்த புத்திக்கும் முரட்டுத்தனத்துக்கும் அறிகுறியான மாட்டுத்தலை விழுந்துவிடுகிறது. சொந்த அசுர சொரூபத்துடன் மறுபடியும் போர் செய்யும் நிலையில் அசுரனை இங்கே காண்கிறோம்.

இச்சிற்பத்திலே புலனாகும் அதி உக்கிரத்தை இன்னும் மகா உக்கிரமாய்க் காட்டுவதற்குச் சிற்பி ஓர் உபாயம் கையாண்டு இருக்கிறார். பயங்கரத்தை அதிபயங்கரமாக்கும் இந்த உபாயம் என்னவென்று ஊகிக்க முடியுமா? சற்றுச் சிந்தனைக்குச் சிரமம் கொடுத்துப் பாருங்கள்.

கீழே மாட்டின் உருவம் அசுர உருவத்தில் இருந்தும் உருவிப்போய்க் கிடக்கிறதல்லவா? அந்த மாட்டின் ரத்தத்தை உறிஞ்சுகிறது தேவியின் சிங்கம்!

அருள் வடிவம்போல் பயங்கர வடிவமும் உலக அன்னைக்கு உரியதுதானே? மந்த மாருதத்தால் ஆணை செலுத்துகின்றவள், சண்ட மாருதத்தாலும் சண்டப்பிரசண்ட மாருதங்களாலும் ஆணையிட்டு உலகைச் செம்மையாக்க முயலும் அன்னைதான்!

பிருகந்நாயகி

இனி, பயம் காட்டும் அன்னையிடம் விடைபெற்று, அபயம் அளிக்கும் அன்னையைத் தரிசிப்போம். பயங்கர சக்தியைக் காட்டிலும் அருளின் அமைதியான சக்தி, பெரிது; அற்புதமானது.

இத்தகைய பராசக்தியின் அழகை நாம் பிருகந்நாயகியின் சிற்பத்திலே கண்டு களிக்கிறோம்.

என்ன கம்பீர்யம்! சாந்தி பரிமளிக்கும் சௌந்தரியம்தான் எவ்வளவு வசிகரமாய் அமைந்திருக்கிறது!

எட்டு அடி உயரத்திலே தேவியின் எல்லையற்ற கம்பீர்யத்தையும் அழகையும் அருளையும் தரிசிக்கிறோம். இவ்வளவு பெரிய அழகிய இந்த உருவம், வேறு எங்கும் காண முடியாதபடி, ஸ்ரீபிரகதீஸ்வரர் உருவத்துக்குத் தகுந்தபடி அமைந்திருக்கிறது.

இரு கைகளிலும் பாசாங்குசங்கள் தரித்தவளாய், இரு கைகளால் அண்டினவர்களுக்கு அபயம் வழங்குகிறாள். இந்த அழகினை சர்வலோகப் பாதுகாப்புக்கு அறிகுறியான அந்தத் திருமுடியுடனும், திருமுகப் பொலிவுடனும் பார்த்துப் பார்த்துப் பரவசமாகிறோம்.

* * *

முந்தைய பக்கத்தில் உள்ள கோயிலின் தோற்றத்தைப் பாருங்கள். வலது பக்கத்தின் முன் தெரியும் சிறு கோயிலில்தான் இருபது கைகளோடு கூடிய மகிஷாசுர மர்த்தினியைப் பார்க்கிறோம்.

அதன்பின் தெரியும் கோயிலில், ஸ்ரீபிருகந்நாயகி தனக்குரிய அபூர்வ மங்கள அழகுடன் கம்பீரமாகக் காட்சியளிக்கிறாள்.

பக்கத்திலே பிராகாரத்தைச் சுற்றி மண்டபத்தின்மேல் மண்டபம் கட்டப் பெற்றிருந்தன. அதற்கு அறிகுறி, கோயிலின் வடக்கு வாசலில் காணப்படுகிறது.

ஈஸ்வரனுக்குத் தகுந்த ஆக்ருதியில் நந்தி அமைந்திருப்பதும், இந்தக் கோயிலுக்குப் பன்மடங்கு அழகை அளிக்கிறது.

காலக்கூத்தும் கடவுளின் கூத்தும்


இக்கோயிலில் எங்கே திரும்பினாலும் பாழடைந்த தோற்றம் காண்கிறோம். கோயிலின் தெற்குப் பக்கத்திலே பாழடைந்த 'தென் கயிலாசம்' என்ற கோயில்.

என்றாலும், நீறுபூத்த நெருப்பைப் போல், வெண்ணீறு பூசிய சிவபெருமானது செம்மேனிபோல், சுடர்கின்றது கலைப் பெருஞ்செல்வம்.

ஆனந்தக் கூத்து

'தென் கயிலாச'க் கோயிலுக்குப் பக்கத்திலே விக்னேஸ்வரர் கோயில். இங்கே முக்குறுணிப் பிள்ளையாரைத் தரிசனம் செய்துவிட்டு, தெற்குப் பிராகார கர்ப்பக்கிரக வெளியமைப்பின் கடைசியில் நடராஜரைத் தரிசிக்கிறோம்.

தரிசித்ததும் பரவசநிலைக்கு வந்து



விடுகிறோம். 'அழகையெல்லாம் ஒருங்கே பார்த்துவிட்டால், யாரால் தாங்க முடியும்?; பரவசமாகாமல் பத்திரமாய், ஜாக்கிரதையாய், நிதானம் தவறாது யாரால் நின்றுகொண்டிருக்க முடியும்?' என்று கவி கேட்கிறார்.

இத்தகைய நிலையை, ஓரளவு ரசிகத்தன்மை உடையவரும் இங்கே அடைந்துவிடுவர்.

விநாயகர், சுப்பிரமணியர் ஆகிய சிவ குமாரர் இருவரும் தத்தம் வாகனம் ஏறித் தாண்டவம் கண்டு, பரவசம் அடைந்தவண்ணமாக இருக்கிறார்கள்.

மற்றப் பக்கத்தில், பார்வதிதேவி ரிஷபத்தின் மேல் ஒரு கையை ஊன்றிக் கொண்டு இருக்கிறாள்.

ரிஷபமும் கம்பீரமாகத் தலைநிமிர்ந்து தாண்டவம் பார்த்துக்கொண்டிருக்கிறது. பரம ரசிக ஞானியாகிய நந்தியல்லவா?

காலடியில் முயலகன். ஆனந்தக் கூத்திலே மிதிபடுகிறது ஆணவம். திணறிப்போகிறது தெய்வ சக்திகளின் விரோதியான அசுர சக்தி.

கீழே, காரைக்கால் பேயார் என்ற அம்மையார் தாளம்போட, பூதகணங்கள் மிருதங்கம் அடித்துக்கொண்டு மெய்ம்மறந்து, கூட நடனம் ஆடுகின்றன.

பூண்ட பறைஅறையப்

பூதம் மருள

நீண்ட சடையான்

ஆடுமே!


என்ற கவி, நினைவுக்கு வருகிறது.

பூதங்கள் மருண்டு மெய்ம்மறந்து தாமும் நடனமாடும் கோலம், எவ்வளவு இயற்கையாக அமைந்திருக்கிறது! (கீழே யாளவரியில் யாளி மேல் வீரர்கள் அமர்ந்து போர் செய்கிறார்கள். மேலே சூரிய-சந்திரர்கள்)



நடராஜரின் ஜடை அலங்காரமும் கிரீடமும் எவ்வளவு அழகாயிருக்கின்றன! சிறு படத்தில், நடராஜரின் முகத்தைப் பக்கவாட்டிலே காட்டியிருக்கிறது. இங்கே பார்த்துக்கொள்ளுங்கள், ஜடை பின்னால் சாய்ந்தவாறு தலையில் அமைந்து முகத்துக்கு அழகு தருவதை.

இடது பக்கத்தில் ஜடையிலே கை கூப்பியவாறு காணப்படுகிறாள் கங்கை. ஜடையில், பிறைச் சந்திரனையும் காண்கிறோம்.



இந்தச் சிலையைப் பார்த்துக் கொண்டே இருந்தால், 'நம்முடன் பேசுகிறதோ? க்ஷேமம் விசாரிக்கிறதோ?' என்ற பிரமையும் ஏற்படுகிறது.

பாக்கியங்கள் எல்லாம்
பழுத்து மனம்பழுத்தோர்
நோக்கும் திருக்கூத்தை
நோக்கும்நாள் எந்நாளோ?

என்று தாயுமான ஸ்வாமிகள் பரவசமாகி இருக்கிறாரே, அப்படி மனம் பழுத்துப் பாக்கியவசமாகக் கடவுளின் கூத்தைக் கண்டுகொள்வதுபோலவும், ஆனந்தக்கூத்தர் அப்படியே அருள் செய்வதுபோலவும் ஓர் உணர்ச்சி ஏற்படுகிறது.


ஆனால், துரதிர்ஷ்டவசமாக நடராஜரின் தூக்கிய கால் பின்னம் அடைந்திருக்கிறது. இப்போது காரையினால் கட்டிவைத்து இருக்கிறார்கள். எனவே பக்தியோடு கூடிய மனோபாவத்தையும் உபயோகித்து,

தூக்கிய பாதம் கண்டோம்,
ஜோதி கண்டோம்!

என்று பரவசம் அடைகிறோம்.

கோபுரத்தின் அடிப்பாகம் இரண்டு அடுக்குகளை உடையது. இந்தப் பக்கத்தில்தான் கோபுரத்தின் மேலைக் கோடியின் அடியில் நடராஜ சிலை இருக்கிறது.

இங்கே சங்கரநாராயணன், அர்த்த நாரீஸ்வரர், கஜலட்சுமி, துவாரபாலகர் முதலான சிற்பங்களும் இருக்கின்றன.



பெருமையும் சிறுமையும்

கங்கைகொண்ட சோழபுரத்துத் தெய்விகச் சிற்பங்களைச் சிருஷ்டித்த சிற்பிகளைப் பாராட்டும்போது, அந்தச் சிற்பிகளையே படைத்துவிட்ட சிருஷ்டிகர்த்தாவான பிரம்ம தேவனையும் இச்சிற்பிகள் சிருஷ்டித்ததைப் பார்த்து ஆச்சரியப்படுகிறோம்.

ஸ்ரீபிரகதீஸ்வர ஸ்வாமியின் அபிஷேக தீர்த்தம் விழுகிற கோமுகியின் மேல் இரு பத்தினியருடன் பிரம்மதேவன் காட்சியளிக்கிறார்.


இங்குள்ள துவாரபாலகரில், மூலஸ்தானத்தின் தெற்குக் கோபுர வாசலிலுள்ள மேலண்டைச் சிற்பம்தான் கலா ரசிகர்களின் கவனத்தை அதிகமாய்க் கவர்கின்றது. ஜடாமுடியைச் சிங்கம் (யாளி) கவ்விய மாதிரி கிரீட வேலைப்பாடுகள் அமைந்திருக்கின்றன. பயங்கரத்திலும் ஒரு சிரிப்பைக் காட்டியிருக்கிறார் சிற்பி. ஆஜானுபாகுவான உருவம்.

இக்கோயிலில் உள்ள எல்லா சிற்பங்களும் மூலஸ்தானமாகிய ஸ்ரீபிரகதீஸ்வரருடைய உருவத்துக்கு ஏற்றவாறு பெரிய அளவில் அமைந்திருக்கின்றன.

பிரம்மாவின் பக்கத்தில் மேலே காம தகன மூர்த்தியைத் தரிசிக்கிறோம். ஈஸ்வரனின் அக்னி



ஜுவாலையைத் தாங்க முடியாமல் காமன் (மன்மதன்) பின்புறம் திரும்பிக்கொண்டு பயந்தவாறு காணப் படுகிறான்.



பக்கத்தில் ரதிதேவி தன்னுடைய கணவனுக்கு ஏற்பட்ட நாசத்தைத் தடுக்க, மன்மதனை அணைத்தவாறு முறையிடுவதையும் சிறிய சிற்பங்கள் வெகு அழகாய்க் காட்டுகின்றன.

அதன் கீழே கால சம்ஹார மூர்த்தியையும், எமன் தன்னுடைய சுய உணர்வு வந்தவனாய்க் காணப்படும் தன்மையையும் சிற்பம் காட்டுகிறது.

சம்ஹார தாண்டவக் கோலத்தைப் பார்த்துப் பூமியே கிடுகிடுத்தது என்பதற்கில்லை, - அப்படி இருக்கிறது ஈஸ்வரனின் கோலம்.

பிரம்மா, கால சம்ஹார மூர்த்தி, காம தகன மூர்த்தி ஆகிய இச்சிற்பங்களெல்லாம் மூலஸ்தானத்துக் கோபுரத்தின் வடக்குப் பாகத்தில் தேவ கோஷ்டங்களில் அமர்ந்திருக்கின்றன.

பிரம்மாவின் ஜடாமுடி அலங்காரங்களைச் சதா பார்த்துக்கொண்டே இருக்கலாம் என்று தோன்றுகிறது.

முந்தையப் பக்கத்தில் துவாரபாலகரின் உருவத்தை பக்கவாட்டில் படமாக காட்டப் பட்டுள்ளது, கோயிலுக்குள் செல்வோரை எச்சரிக்கை செய்வதாக!


அதன் கீழேயுள்ள படம், பெரிய நந்தியின் பக்கத்திலுள்ள சந்நிதிக்குச் செல்லும் வடக்கு வாசலைச் சித்திரிக்கிறது. நந்திக்குப் பின்னால் இடிந்த கோபுரத்தையும் காணலாம். கீழே ஆடு, மாடு மேய்வதை ஒப்பிட்டுப் பார்த்தால் நந்தி உருவத்தின் அளவு தெரிகிறது.


வெளியே ரஸ்தாவின் சமீபம் வந்து கோயிலைத் திரும்பிப் பார்க்கும் காட்சித்தான் இந்தப் பக்கத்தில் கீழே உள்ள படம். இங்கேயும் கோபுர வாசலின் உள்ளே நந்தி தெரிகிறது. பின்னால் மூலஸ்தான கோபுரம்.

படத்தின் வலது பக்கத்தில் இடிந்து கிடக்கும் கற்களுக்கு நடுவே பெரிய கல் ஒன்று தென்படுகிறதல்லவா? கோபுரம் சரிந்து விழும்போது துவாரபாலகர் கீழே விழுந்து கிடக்கும் காட்சிதான் அது.

இத்தகைய சிற்பப் பெருஞ் செல்வம் பாழடைந்திருப்பது, பிற்காலத்தில் இந்து தர்மம் சீர்குலைந்து சுதந்திர ஒளிஇழந்து போனதற்கு ஓர் அறிகுறிதான்.

இடிந்த கோபுரத்தின் கற்களையும் பிராகாரக் கற்களையும் கொண்டுதான் 'லோயர் அணைக்கட்டு' கட்டியிருக்கிறார்கள். 'பசுவைக் கொன்று செருப்புத் தானம்' செய்த இந்தக் கைங்கரியம் வெள்ளையர்களுக்கு உரியது, - காலத்தின் கூத்து!






தஞ்சை பெரிய கோயில்

இதுவரை நாம் பார்த்து வந்திருக்கும் கங்கைகொண்ட சோழபுரம், திருபுவனம், தாராசுரம் முதலிய கோயில்களுக்கே மூலக்காரணம் என்று சொல்லத்தக்க பெருமை வாய்ந்தது, தஞ்சைப் பெரிய கோயில். பக்தி உலகிலும் கலை உலகிலும் ஒருங்கே பெரும் புகழ் பெற்றிருப்பது.

ராஜராஜேஸ்வரம்

இதுவரை வந்த கோயில்களைக் காட்டிலும், அதிசயிக்கத்தக்க சிற்ப சாஸ்திர நுணுக்கங்களான வேலைப் பாடுகளை உடையது இக்கோயில்.

சிற்பச் செல்வங்கள் மட்டுமா?, சித்திர வண்ணப்படங்களுக்கும் பிரசித்தமானவை. பல அம்சங்களிலும்



அஜந்தா சித்திரங்களுக்கு நிகரான அபூர்வ சித்திரங்களை இங்கே காண்கிறோம்.



இந்தச் சித்திரங்களையும் அஜந்தா சித்திரங்களையும் பக்கத்திலே வைத்து ஊர்களின் பெயர்களைக் குறிப்பிடாமல் இருந்தால், விரைவில் வேறுபாடு காண முடியாது.

இப்பெரிய கோயிலுக்கு 'ராஜராஜேஸ்வரம்' என்ற ஒரு பெயரும் உண்டு. 'ராஜராஜ சோழன்' என்ற சோழச் சக்கரவர்த்தி கட்டியதால் இக்கோயிலுக்கு இப்பெயர்.

இக்கோயிலின் அழகையும் பெருமையையும் கண்டு மயங்காதவர் இல்லை. நம் தமிழக சரித்திரத்தின் ஒப்புயர்வற்ற காலத்திலே கட்டப் பெற்றது. தமிழரது கட்டடக்கலைக்கு ஓர் அதிசய எடுத்துக்காட்டு.

இது கட்டத் தொடங்கிய காலம் கி.பி.1003; வேலை முடிவு பெற்ற காலம் கி.பி.1009. ராஜராஜ சோழன் பட்டத்துக்கு வந்த 19-ம் ஆண்டில் தொடங்கி, 25-ம் ஆண்டில் கட்டி முடிந்தது.

இது 'பெரிய கற்றளி' என்றும் பெயர் பெற்று இருக்கிறது. 'கற்றளி' என்றால், கற்கோயில். பெரிய அளவுக்காக அழகைக் குலைக்காமல் ஸ்தூபி வரை கருங்கல்லினாலே கட்டப் பெற்றிருக்கிறது. ஒழுங்கான

அளவுகளையும் அமைப்பையும் வேலைப்பாடுகளையும் கொண்டது.

முதல் கோபுரம் 90 அடி உயரம் உள்ளது. சிற்ப வேலைகளால் அமைந்து அகன்று உயரம் இல்லாததுபோலக் காண்கிறது. இரண்டாம் கோபுரம் அழகில் சிறந்து அளவில் சற்றே சிறுத்து அழகான பதுமைகளால் அலங்கரிக்கப் பெற்றது.

கோயிலுக்குள்ளே நுழைந்ததும் இரண்டாவது கோபுரத்திலிருந்து தெரியும் தோற்றத்தைத்தான் படம் காட்டுகிறது.


நந்தி

பிரமாண்டமான நந்தி, ஒரே கல்லில் ஆச்சரியமாக அமைந்திருக்கிறது. உயரம் 12 அடிக்கு மேல், நீளம் 19½ அடி, அகலம் 8¼ அடி.

கங்கைகொண்ட சோழபுரத்தில் இருப்பது போல் நந்தி மண்டபம் இல்லாமல் இருந்து, பிற்காலத்து அரசர்களால் கட்டப் பெற்றிருக்கிறது.

முழுத்தோற்றம்

இந்த இரண்டு பக்கங்களில் கோயிலின் தெற்குப் பிராகாரத்தில் இருந்து கோயிலின் முழுத்தோற்றத்தை இரு படங்களிலும் காணலாம்.



தஞ்சைக் கோயிலின் மூலஸ்தான விமானம், சிற்ப சாஸ்திரப் பிரகாரம் 'சூளஹர்மியம்' என்று சொல்லப் படுகிறது. பதின்மூன்று தளங்களை உடையது. இந்த மாதிரி வேறெங்கும் காணக்கிடைப்பதில்லை.


இத்தகைய விமானத்தோடுகூடிய இக்கோயிலைத் தன்னுடைய வெற்றிப் பெருஞ்சின்னமாகக் கட்டி நிறுத்திய சோழச் சக்கரவர்த்தியின் உள்ளம் எவ்வளவு பெருமை வாய்ந்தது, எவ்வளவு சௌந்தரியம் வாய்ந்தது!

துவாரபாலகர்

கோயிலின் பின்னால் உள்ள முருகன் கோயிலில் காணப்படும் துவார பாலகர்கள் மனுஷ்ய ஆக்ருதியில் காணப்படுகின்றார். இவர்களுடைய உக்கிரமான தோற்றத்தை உற்று நோக்குங்கள்.

தூக்கிய காலைத் தாங்கும் சிங்கத்தின் முகத்தைத்தான் பாருங்கள். சிங்க





முகத்திலே ஜொலிக்கும் உக்கிரமும் இந்தத் துவாரபாலகர்களின் உக்கிரத் தோற்றத்தை எப்படி எடுத்துக்காட்டுகிறது பாருங்கள்!

தனிப் பக்கத்தில் பெரிதாக காட்டப் பட்டுள்ள படத்தில், துவாரபாலகரின் இடது முன் கை பின்னமுற்று இருக்கிறது. இது கேடயம் பிடித்துக்கொண்டிருந்த கை.

இரண்டு உருவங்களிலும் மூக்கு பின்னமுற்று, கோர சொரூபத்துக்கு இன்னும் அதிக கோரத்தை உண்டாக்கி விட்டது!

தூக்கிய காலின் மேல் தொங்குகிற வஸ்திரம், முந்தையப் பக்கத்திலுள்ள சிலையில் பின்னமாகியிருக்கிறது.

முகம்மதியர் அதிகாரம் செலுத்திய காலங்களில் இங்குள்ள உருவங்கள் பின்னப்பட்டிருக்கின்றன. இரண்டு உருவங்களிலும் ஜடா மகுடத்தை உற்று நோக்குங்கள். ஜடா மகுடத்தின்மேல் சிம்ம பத்திரம் காட்டியிருப்பதைப் பாருங்கள்.

இவர்கள் காவல் செய்யும் மூர்த்தியின் சின்னங்களையும் (வஜ்ரமும் சக்தியும்) காண்கிறோம். ஜடைகள் காதில் இரு புறங்களிலும் விரிந்து காண்கின்றன. காதுகளில் நாகம் சுருண்டுக் கிடக்கிறது.

துவாரபாலகர்கள் பின்னமுற்று இருப்பது பின்னாளில் நம்மவர்களின் பக்தி எவ்வாறு சக்தி குன்றிப் போயிற்று என்பதற்கு ஒரு சான்று. ஆனால், எத்தகைய சக்திமயமான சிவபக்தி இப்பெருங்கோயிலைக் கட்டி நிறுத்தியிருக்க வேண்டும்!

இப்பெரிய கோயிலை உருவாக்கிய பக்தி, 'ராஜராஜ சோழன்' என்ற வீர சக்கரவர்த்தியின் இதய பக்தியல்லவா? மகத்தான அந்த வீரத்துக்கும் உள்ளுறை உயிராக ஒளிர்ந்தது இந்த மகத்தான பக்தி.

ராஜராஜ சோழன், எத்தனையோ வெற்றிகளை அடைந்தான்; உள்ளம் திருப்தி அடையவில்லை. எவ்வளவு அனுபவித்தாலும் திருப்தி அடைய முடியாத ஆரா அமுதமாகிய தன் சிவபக்திக்கு அறிகுறியாக இக்கோயிலைக் கட்டினான்.

இதிலும்கூட உள்ளம் திருப்தி அடைய வில்லையாம். தேவாரப் பாடல்களைக் கண்டுபிடித்துத் தமிழர்களுக்கு 'இதோ உங்கள் ஞானப் பூங்கோயில்!' என்றும் காட்டியுள்ளான்.


என்ன அருமையான பக்திப் பெருங்கோயில், இந்தப் பேரரசனின் அதிசய உள்ளம்! அந்தப் பெருங் கோயிலுக்கு இந்தப் பெரிய கோயில் ஓர் அருமையான அறிகுறி.

அக்காலத் தமிழ்நாட்டை மகோன்னத நிலைக்கு கொணர்ந்த கோயில்-நாகரிகத்தின் அரும்பெரும் சிறப்புக்கு, கம்பீரமாகத் தலை நிமிர்ந்து நின்று சாட்சி சொல்கிறது இக்கோயில்.




தென்னாட்டுச் செல்வங்கள் / விகடன் பிரசுரம்

ஸ்ரீதண்டாயுதபாணி சுவாமி (பழநி)




தென்னாட்டுச் செல்வங்கள் / விகடன் பிரசுரம்

ஸ்ரீபிரும்ம வித்யாம்பிகை - பெரிய நாயகி (திருவெண்காடு)



ஸ்ரீவல்லப கணபதி (திருவானைக்காவல்)




தென்னாட்டுச் செல்வங்கள் / விகடன் பிரசுரம்

ஸ்ரீசெந்தில் ஆண்டவர் (திருச்செந்தூர்)



தென்னாட்டுச் செல்வங்கள் / விகடன் பிரசுரம்

ஸ்ரீசோமசுந்தரேசர் (மதுரை - மீனாட்சியம்மன் கோயில்)



தென்னாட்டுச் செல்வங்கள் / விகடன் பிரசுரம்

ஸ்ரீசிவ சூரிய நாராயணமூர்த்தி (சூரியனார் கோயில்)




தென்னாட்டுச் செல்வங்கள் / விகடன் பிரசுரம்

ஸ்ரீதேவி பகவதி அம்மன் (கன்னியாகுமரி)




தென்னாட்டுச் செல்வங்கள் / விகடன் பிரசுரம்

ஸ்ரீமகா சரஸ்வதி அம்மன் (கூத்தனூர்)




வர்ணனை கடந்த வனப்பு!



'தஞ்சைப் பெருவுடையார் கோயில்' என்ற தஞ்சைப் பெரிய கோயில், சுமார் ஆயிரம் ஆண்டுகளாகத் தமிழரின் சிற்பத்திறனை வெளியிடும் ஒரு கலைப் பெரும் பொக்கிஷமாகக் காட்சியளித்து வருகிறது என்பதைக் கண்டோம்.

முருகன் கோயில்

இக்கோயிலின் வடமேற்குப் பிராகாரத்திலுள்ள முருகன் கோயிலும் ஒப்புயர்வற்ற கலைச்செல்வம். இது பிற்காலத்திலே கட்டப்பெற்றது. சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்பு சிற்ப நுட்பங்களுடன் சிறப்பாக அமைக்கப் பெற்றது.



தூண்களின் அழகு

தூண்களைப் பாருங்கள். மூலஸ்தானத்தின் வெளியிலுள்ள 'துண்டு பத்திர' வேலைகளைப் பாருங்கள். இந்தக் கோயிலின் அழகு, வர்ணனை கடந்தது என்றே தோன்றுகிறது. அதாவது, 'இதைவிட விசேஷமாகச் செய்வதற்கு வேறு என்னதான் இருக்கிறது?' என்று சொல்லத் தோன்றுகிறது.

மரத்திலே கடைந்தெடுத்ததுபோல் இருக்கிறது, கல்லிலே சிற்றுளி காட்டியுள்ள இந்த அழகுக் காட்சி.

கோயிலின் தெற்கு வாசற்படி ஏறியதும் துவாரபாலகருக்கு எதிரே உள்ள தூணைத்தான் அடுத்த படத்தில் பார்க்கிறோம். சிற்பத்தில் மட்டுமா சிறப்பு? கொடி வேலைகளிலும்

சிற்பிகளின் மனோபாவம் எப்படி எல்லாம் சஞ்சரிக்கிறது பாருங்கள்!

உதாரணமாக, இத்தூணிலுள்ள குதிரையோடுகூடிய கொடி வேலைகளே சிற்பியின் திறனைச் சிறப்பாக எடுத்துக் காட்ட வல்லன. ஓர் அடி சதுரத்தில் இந்த வேலைப்பாடுகள் தூணின் மத்தியில் அமைந்திருக்கின்றன.

இக்கோயிலின் எதிரே தஞ்சை மன்னர் சரபோஜி கட்டியுள்ள 'ராஜா' மண்டபத்தில்தான் இந்தச் (படத்திலே தூணின் பக்கத்திலுள்ள) சிற்பங்கள் இருக்கின்றன.

ஐயோ, முனிவரே!

இரண்டு அடி உயரத்திலே இருக்கின்றன ரிஷி சிற்பமும் நடனப் பெண்ணின் சிற்பமும். முதலில் ரிஷியை உற்று நோக்குங்கள்.

யோகாசனத்தில் அமர்ந்து நிஷ்டையில் இருக்கிறார். ஒரு கையில் ஜபமாலை; மறு கையில் கமண்டலம். ஜபம் செய்தவண்ணம் தியானத்திலே அமிழ்ந்துவிட்டார்.

தவக்கோலத்தின் பக்கத்திலே அது என்ன கோலம்? நாணிக் கோணி நிற்கிறாளே! ஒய்யாரமாக இடுப்பிலே குடம் இருக்க, மறு கை ஜாடை காட்டும் பாவனையிலிருந்து பின்னமுற்று இருக்கிறது. உடம்பில்தான் தலை முதல் கால் வரை எத்தனை கோணல்கள்! ஐயோ, முனிவரே!

ஐயோ, சாகசமே!

ஆனால் தவசியின் தவ நிலையை மீண்டும் உற்று நோக்குங்கள். இந்த முனிவர் அந்த 'ஆட்டம் பாட்டங்'களுக்கெல்லாம் மசியமாட்டார்போலிருக்கிறதே! சிறிதும் கலங்காத நெஞ்சுடன் அல்லவா இருக்கிறார்? ஐயோ, சாகசக்காரியே!

மற்ற இரு படங்களும் அந்தச் சாகசக்காரியின் மற்ற இரு தோற்றங்களையும் - அதாவது ஒரே சிற்பத்தின் இரு தோற்றங்களை - நமக்குக் காட்டுகின்றன.

முந்தையப் பக்கத்தில் உள்ள படம்தான், அந்தச் சிற்பத்தின் அழகையும், நிற்கும் தோரணையையும் பரிபூர்ணமாக எடுத்துக்காட்டுகிறது. இதிலே, அந்தக் குடத்தில் சுருக்கிட்டுத் தொங்கும் குஞ்சலத்தையும் காணலாம்.

ஐயோ, வெறியாட்டமே!


இச்சிற்பத்தில் மூக்கு பின்னமுற்று இருக்கிறது. இதைப் படத்தில் சேர்த்துக் காட்டியிருக்கிறது. கால்களும் தலைக் கொண்டையும் வலது கையும் பின்னமுற்று இருக்கின்றன.

ராட்சஸ வெறியர்களின் கேலிச் செயல்களுக்கு இடையே பின்னமுற்று இருக்கும் சிற்பமே இவ்வளவு அழகைக் காட்டுகிறது. உண்மையாகவே பின்னமடையாத சிற்பச் செல்வம் கிடைத்திருந்தால், அது இப்போது இந்த மண்டபத்தின் மூலையில் இடம் பெற்றிராது என்று நிச்சயமாகச் சொல்லலாம்.


* * *

முருகன் கோயிலாகிய இச்சுற்றுக் கோயில், 17-ம் நூற்றாண்டில் தஞ்சையில் ஆட்சி புரிந்த நாயக்க அரசனின் சிற்பி ஒருவனால் தன் திறமையெல்லாம் விளங்க நிர்மாணம் செய்யப் பெற்றது என்பர்.

இக்கோயிலானது 45 அடி சதுரமுள்ள அடித்தளமும் 55 அடி உயரமுள்ள கோபுரமும் உள்ளது. பெரிய கோயிலில், இது செல்வத்துள் செல்வம்.



கோபுரமும் பைரவரும்



இக்கோயிலின் காட்சியை, அம்மன் சந்நிதிக்கு எதிரே கண்டு அனுபவிக்க விரும்புகிறீர்களா? சரி, அந்தக் காட்சியை இதோ எதிரில் உள்ள படத்தில் பார்த்துக்கொள்ளுங்கள்.


சோழர் காலத்துக் கோயில் சிற்ப அமைப்புகளிலேயே கோயிலுக்கு நேர் வழி கிடையாது. தாராசுரம், திருபுவனம் முதலான கோயில்களில் தெற்குப் பக்கத்தில்தான் வழி. இப்போது திருபுவனத்தில் காணப்படும் நேர்பாதை பிற்காலத்தில் ஏற்பட்டதுதான். ராஜராஜ சோழனின் மகன் கட்டிய கங்கை கொண்ட சோழபுரத்துக் கோயிலில், தெற்கு - வடக்கு என்ற இருபுறமும் வழிகள் இருக்கின்றன. இங்கும் நேர்வழியைப் பிற்காலத்திலேதான் ஏற்படுத்தி இருக்கிறார்கள்.

சந்நிதியை நேர்வழியாகச் சென்று பார்க்கக்கூடாது என்று அக்காலத்தில் எண்ணி இருந்ததாக ஊகித்துக் கொள்ளலாம்.

கோபுரம்

இப்பெரிய கோயிலின் பெரிய கோபுரத்தைத் 'தக்ஷிண மேரு' என்றும், 'உத்தம விமானம்' என்றும் குறிப்பிடுவது உண்டு. இந்தக் கோபுரம் 216 அடி உயரம் உள்ளது. சதுர அமைப்பில், அதாவது நாற்கோண வடிவில், 14 அடுக்குகளாகிய கோபுர மாடிகளுடன் நான்கு புறமும் காட்சி அளிக்கிறது.

கோபுரச் சுவரில் அமைந்திருக்கும் தூண்களும், வண்ணமாடங்களும்,



தெய்வச்சிலைகளும் செதுக்கப் பெற்றிருக்கும் அழகு இருக்கிறதே, அதைக் கண்ணைப் பறிக்கும் கம்பீர அழகு! என்றே சொல்ல வேண்டும்.

கோபுரத்தின் அடித்தளம் 96 அடி சதுரம். கோபுர உச்சித் தளமாக ஏற்றி வைத்திருக்கும் கல், ஒரே கருங்கல். அது 25½ அடி சதுரம். அதன் நிறை 80 டன். அந்தக் கல் அமைந்திருக்கும் தளத்தைப் 'பிரமரந்திரத் தளம்' என்பர்.

சாரம் கட்டித்தான் அந்தக் காலத்தில் அந்தக் கல்லை ஏற்றிவிட்டார்கள். தஞ்சைக்கு வடக்கே நான்கு மைலுக்கு அப்பால் 'சாரப்பள்ளம்' என்று ஒரு கிராமம் இருக்கிறது. அங்கே இருந்து சாரம் போட்டு அந்தப் பெரிய கருங்கல்லை அந்தச் சிகரத்தில் ஏற்றி வைத்தார்களாம். அதனால்தான் அந்த ஊருக்குச் 'சாரப்பள்ளம்' என்று பெயர்.

அந்தக் கருங்கல்லின் மையத்தில் எண்கோண வடிவாய் அழகான சிகரம் இருக்கிறது. 12½ அடி உயரமுள்ளது ஸ்தூபிக்குடம்.

பிரமரந்திரக் கல்லின் நான்கு மூலைகளிலும் ஜோடி ஜோடியாக நந்திகள் வைக்கப்பெற்றிருக்கின்றன. அந்த நந்திகள் 6½ அடி நீளமும், 5½ அடி அகலமும் கொண்டவை. இந்த மாதிரி நந்தியொன்று அம்மன் சந்நிதிக்கு எதிரில் உள்ளது.

கிழவி அளித்த நிழலில்

பிரமரந்திரக் கல்லைப் பற்றி பிரசித்தமான ஒரு கதை:

விமான வேலை நடைபெறும்போது, ஒரு கிழவி சிற்பிகளுக்கு உணவு, நீர் முதலியன கொடுத்து உதவி வந்தாள். அவளிடம் சிற்பிகள் தங்கள் நன்றியைத் தெரிவிக்க விரும்பினார்கள். அதற்காக அவள் விரும்பியபடி அவர்கள் அவள் வீட்டிலே கிடந்த கல் ஒன்றை விமான சிகரத்தின் நடுவில் அமைத்துக் கோயிலைக் கட்டி முடித்தார்களாம்.

அப்பால் ஓர் இரவில் சோழ மன்னனது கனவில், இக்கோயிலில் குடிகொண்டிருக்கும் 'பெருவுடையார்' என்ற பிரகதீஸ்வர ஸ்வாமி தோன்றி, 'நாம் கிழவி அளித்த நிழலில் உவந்திருக்கிறோம்' என்று அருளிச் செய்தாராம். சோழ மன்னன், முதலில் உண்மை அறியாது மயங்கினான்; பின்பு தெரிந்துகொண்டான் என்பது அழகான கதை.

இந்தக் கதையில் வரும் கிழவியின் பெயரும் 'அழகி'தான். இவளுக்குச் சோழ மன்னன், குளம், தோட்டம் முதலியவை சம்மானமாகக் கொடுத்தானாம். அவை 'அழகி குளம் - தோட்டம்' என்று பெயர் பெற்றன. சமீபகாலத்து முதல் பைமாஷ் கணக்குகளிலும் இப்பெயர்களாலேயே வழங்கி வந்தன. இப்போதுள்ள பனகல் கட்டடத்துக்கு அருகே உள்ளன அழகி குளமும் அழகி தோட்டமும்.

இக்கதை 'தஞ்சைப் பெருவுடையார் உலா' என்ற பிரபந்தத்திலும் வழங்கப் படுகிறது. டாக்டர் உ.வே.சாமிநாத ஐயரின் தமிழ் ஆசிரியரான மகா வித்வான மீனாட்சிசுந்தரம் பிள்ளையும் தாம் இயற்றிய மாயூரப் புராணத்திலே,

'அம்மையார் நிழலில்யாம்
அமர்வோம் என்று, அருள் செய்த
செம்மையார் வீற்றிருக்கும்
திருத் தஞ்சை

என்று எழுதியுள்ளார்.

உள்ளத்தின் அறிகுறி

இக்கோயில் விமானங்களிலும் மற்றப் பாகங்களிலும் சைவ - வைஷ்ணவ சிலைகளும் சிற்பங்களும் மலிந்து காணப் படுகின்றன. பௌத்த சிலைகளும் காணப்படுகின்றன என்றால், ராஜராஜ

சோழச் சக்கரவர்த்தியின் இதய விசாலத்தையும் சமரச நோக்கையும் என்னென்பது?

இந்தச் சமரச விசாலத்தை மேலும் அதிசயப்படுத்திக் காட்டுவதுபோல், வடகோபுரத்தின் கீழ்ப்பாகத்தில் தொப்பி அணிந்த ஓர் ஐரோப்பியத் தலையும் காணப்படுகிறது.

விமானத்தை நிர்மாணம் செய்த சிற்பி, பக்திமானாகவும் தீர்க்கதரிசியாகவும் விளங்கினானாம். அதனால் சோழ ராஜ்யத்திலே சோழர்களும், நாயக்க மன்னர்களும், மகாராஷ்டிர மன்னர்களும் தொப்பிக்காரரான ஆங்கிலேயரும் முறையே அரசு புரிவர் என்பதைக் கண்டு குறிப்பிட்டு இருக்கிறானாம். பக்தி விசுவாசம், நம்பிப் பரவசமாகக்கூடிய கதைதான்!

ஆனால் பகுத்தறிவு, தொப்பிக்காரச் சிற்பத்தை அந்தத் தொன்மையில் இருந்து கீழே இழுத்துத் தள்ளப் பார்க்கிறது. 'மார்க்கோபோலோ' என்ற பிரபல ஐரோப்பியப் பிரயாணியின் உருவம் என்பர் சிலர். வேறு சிலர், 17-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஆண்ட நாயக்க மன்னனின் ஓர் ஐரோப்பியத் தோழனின் உருவம் என்பர்.

சோழர் காலத்திலும் வெளிநாட்டு வாணிபத் தொடர்பு இருந்ததால் அக்காலத்து ஐரோப்பிய உருவமே செதுக்கப் பெற்றிருக்கலாம் என்று துணிந்து கூறுவோரும் உண்டு.

மகாலிங்கம்

மூலஸ்தானத்தில் மகாலிங்கம் பருத்துத் திரண்டு நிறைந்த மலைபோல் அதிசயமாகக் காட்சியளிக்கிறது. சிவலிங்கங்களில் எல்லாம் இதுவே மிகப் பெரிய லிங்கமாகும் என்பது திண்ணம். உயரத்தில் இதற்கு அடுத்ததுதான் கங்கைகொண்ட சோழபுரத்து மூலஸ்தான மகாலிங்கமும்.

நர்மதை நதி தீரத்தில் இருந்து ராஜராஜ சோழனால் இங்கே கொணரப் பெற்றது என்கிறார்கள். ஆவுடையாரின் சுற்றளவு 54 அடி; உயரம் 6 அடி.

பைரவர்

முன் மண்டபத்தில் வலது பக்கத்தில் சந்நிதியை நோக்கியவாறு பைரவர் இருக்கிறார். கையில் வில்லைத் தனியாகக் கொடுத்திருப்பதுபோல் அவ்வளவு இயற்கையாகக் கல்லிலே குடைந்து காட்டியிருக்கிறார் சிற்பி.

திருவலஞ்சுழிக் கோயில் உள்ள பைரவச் சிற்பம் வெளியே பாழடைந்திருக்கும் கோயிலில் இருக்கிறதே, அதை இந்தச் சிற்பம் ஞாபகப்படுத்துகிறது. சிற்ப அமைப்பிலும் ஒரே மாதிரி; பின்னமுற்று இருப்பதிலும் ஒரே மாதிரி. ஆம்; இங்கும் முன் இடது கை பின்னமுற்று இருக்கிறது.

உயரம், உருவத்துக்குத் தகுந்தபடி இல்லாமல் கொஞ்சம் குட்டையாக இருக்கிறது. மணிமாலைகள் எவ்வளவு அழகாய் இடது தோளில் இருந்து தொங்கி வலது பாதம் வழியாகச் சுற்றி அமைந்திருக்கின்றன! மண்டை ஓடுகளாலான மாலைதான் இங்கே யக்ஞோபவீதம்.

ஜடாமுடியின் வலது பக்கத்தில் பிறைச்சந்திரன் எவ்வளவு அழகா இருக்கிறது! எங்கே பார்த்தாலும் பாம்பு சுற்றிக்கொண்டு பக்கத்திலே நெருங்க முடியாதபடி பயமுறுத்திக் கொண்டிருக்கிறது. பயங்கர அழகு இந்தப் பைரவ மூர்த்தி.

தேவியும் பிள்ளையாரும்

சுற்றுக் கோயில்களில் ஒன்றாகிய ஸ்ரீசுப்பிரமணிய ஸ்வாமி கோயில் பிற்காலத்திலே கட்டப்பெற்றது என்றும், இச்சுற்றுக் கோயிலைக் குறித்த பிரஸ்தாபம் ஒன்றும் பெரிய கோயில் கல்வெட்டுகளில் காணப்படவில்லை என்றும் தெரிந்துகொண்டோம்.

எனினும் இக்கோயிலின் சிற்ப நுட்பங்களை நுணுக்கமாய்க் கண்டுணர்ந்து களிக்க வேண்டியது அவசியமாகும்.


மகிஷாசுரமர்த்தினி

மூலமூர்த்தியாகிய முருகப் பெருமானின் திவ்ய சொரூபம் இருக்கட்டும். இக்கோயிலின் வடக்குப் பாகத்தில் வெளியே 1½ அடி அளவில் ஜன்னலின் கீழுள்ள மகிஷாசுர மர்த்தினியைத்தான் பாருங்கள்.

பாய்ந்து நிற்கும் ஆவேசத்துக்கு ஓர் உருவம், ஒரு திருக்கோலம் கற்பிக்க முடியும் என்றால், 'அதுதான் இது!' என்றே சொல்லத் தோன்றுகிறது.

ஒரு காலால் உதைத்து அசுரனைத் தோளில் மிதித்துக்கொண்டும், மறு காலால் அவன் காலை மிதித்துக் கொண்டும் தோன்றுகிற ஆவேச ஈஸ்வரியைப் பாருங்கள்.

இந்த ஆவேச கோலத்தில் இடையில் உள்ள தொங்கு வஸ்திரம் காற்றில் பறந்துகொண்டு இருக்கிறதல்லவா!



கூர்ந்து பாருங்கள் அபய வரத முத்திரைகளையும். இம்முத்திரைகளை உள்ள கைகளை நோக்க, ஈஸ்வரி சாந்தம் அடைந்திருக்கிறாள் என்றும் ஊகிக்கலாம்.

துஷ்ட நிக்கிரகத்திலே பயங்கரியாக விளங்கும் அன்னை, சிஷ்ட பரிபாலனத்திலே சாந்த மூர்த்திதானே? தென்றல்போல் கருணை வீச, சண்ட மாருதமாய்ச் சுழித்தடிக்கிறது தர்மாவேசம் என்ற தேவி கோபம்!

எஜமானிக்கு இசைந்த சிங்க வாகனம். தன் முன் காலை அசுரன் மேல் வைத்துக்கொண்டு, மற்றக் கால்களால் அவன் காலை மிதித்துக் கொண்டும் இருக்கிறது.

இச்சிங்கத்தின் உருவம்தான் எவ்வளவு வலிமை காட்டுகிறது! 'எல்லாம் சக்தி மயம்' என்பதற்குச் சிங்கமும் சாட்சி.


இப்படி ரௌத்திராகாரமாக இருக்கும் இம்மகாசக்தி, மகா விஷ்ணுவின் அம்சமும் கொண்டவள். இதற்கு இரு கைகளிலும் உள்ள சங்கு - சக்கரங்கள் சாட்சி.

மகிஷாசுரனின் முகம் பின்னமுற்று இருக்கிறது. ஆனால் இதற்குக் காரணம் தேவி கோபமல்ல; கலை விரோதிகளின் கோபாவேசம்தான்!

விநாயகப் பெருமான்

சண்முகரின் வலது பக்கத்தில் வெளியே கோயிலின் தேவ கோஷ்டத்தில் காணப்படுகிறார் இந்த விநாயகர். உயரம் நான்கு அடிதான். கட்டை குட்டையாகவும் கரணை கரணையாகவும் கை-கால்கள். நாக யக்ஞோபவீதம். மூஷிக வாகனம்.

தேவ கோஷ்டத்தின் பூர்ண உருவத்தை அடி முதல் கலசம் வரை



இங்கே காணலாம். கொடுங்கையின் உட்பாகத்தில்தான் எத்தனை வேலைப் பாடுகள்! அதன் கீழே தாமரை இதழ்கள் மலர்ந்து காண்கின்றன!

விநாயகரின் கீழே கஜலட்சுமி சிற்பம். இருபுறமும் கஜங்கள் கலசம் தாங்கி அபிஷேகம் செய்யும் பாவனையில் அமைந்திருக்கின்றன. மிகச் சிறிய உருவம் என்றாலும் அநேக வேலைப்பாடுகள் காணப்படுகின்றன கஜலட்சுமி சிற்பத்திலே.

இங்கு மேலே 'கபோத'த்திலுள்ள கூட்டில்தான் சிறு சிறு உருவங்களை எப்படிக் காட்டியிருக்கிறார்கள் சிற்பிகள்! மூன்று அங்குல உயரத்தில் நடராஜர்; இதில்தான் எவ்வளவு பூர்த்தியான வேலை!

விநாயகரின் வலது பக்கத்தில் ஜன்னலின் கீழே தேவி. இவளும் அசுரனைக் கீழே தள்ளிச் சூலத்தால் குத்தும் பாவனையில் இருக்கிறாள்.

இந்த ஆவேசத் திருக்கோலத்தை அணி செய்கின்றன - அதாவது மேலும் பயங்கர அழகு தருகின்றன - தலையைச் சுற்றிலும் உள்ள அக்னி ஜுவாலையும், கழுத்திலிருந்து தொங்கும் மண்டையோடுகளின் மாலையும்.

இந்தப் பயங்கர அழகின் உயரம் ஒரே அடிதான். எட்டு அடி உயரச் சிற்பத்தின் அமைப்பையும் கம்பீரத்தையும் ஒரே அடியில் காட்டிவிடுகிறார் சிற்பி ஆச்சரியமாக!

* * *

இந்த மாதிரியெல்லாம் சிறு சிறு சிற்பங்கள் சண்முகர் கோயிலில் மலிந்து கிடக்கின்றன. இக்கோயிலை எவ்வாறு புகழ்வது?



எங்கும் பெருமை, எங்கும் சௌந்தரியம்!

'கோபுர தரிசனம் பாவ விமோசனம்' என்பர். பெரிய கோயிலின் கோபுரம் என்ற சௌந்தரியத்தை வசதியானப் பல இடங்களில் நின்று நின்று பார்த்துப் பார்த்து அனுபவிக்க வேண்டும். உள்ளபடியே உள்ளம் கள்ளமற்று, தூய்மை பெறும்.

கோபுரச் செல்வம்

பெரிய நந்தியின் பக்கம் நின்றுகொண்டு கோயிலின் வெளியே பார்த்தால் கோபுரத் தோற்றம் (அடுத்த பக்கத்தில் உள்ளபடி) இப்படி. இந்தக் கோபுரத்தின் அடிவரிசைகளிலும் அழகுச் செல்வமான சிற்பங்கள் பல காணப் படுகின்றன. படத்தின் இடது பக்கத்திலே (கோபுரத்தின் அடியில்) பிட்சாடனர், கஜ சம்ஹார மூர்த்தி, அர்த்தநாரீஸ்வரர் முதலிய சிற்பங்களைப் பார்க்கலாம்.

மதில்சுவரின் மேலுள்ள நந்தி - சிற்பங்கள்தான் எவ்வளவு அழகாயிருக்கின்றன! மதில், நந்தி இவையெல்லாம் கற்களினால் ஆனவை.

சோழர் காலத்துப் பணிகள் கற்களினால்தான் அதிக அளவில் ஆக்கப் பெற்றிருக்கின்றன. பிற்காலத்திலும் நிரந்தரமாக இருக்க வேண்டும் என்றுதான் கற்கள் கிடைக்காத இடத்திலும் கற்களினால் கோயில்களைக் கட்டி வைத்திருக்கிறார்கள்.

இக்கோபுரத்தின் அமைப்பை உற்றுப் பாருங்கள். ஆரம்பமாகிய அடிப்பாகத்துக்குக் கோபுரம் திடீரென்று குறுகிப்போனதுபோலக் காண்கிறதல்லவா?

கோபுர ஆரம்பத்துக்கு மாறாக, ஏதோ வசதிக் குறைவினால் மேலே சிறிதாகச் செய்துவிட்டார்களோ! என்று எண்ணவும் தோன்றும். ஆனால், உண்மை அது அன்று.




ராஜராஜ சோழன் கி.பி. 985 முதல் 1014 வரை ஆண்டவன். தனது ஆட்சியின் 19-வது ஆண்டாகிய கி.பி.1003-ல் கோயில் கட்ட ஆரம்பித்து, 23-வது ஆண்டிலேயே பெரும்பான்மையும் பூர்த்தி செய்து விட்டான். தன் ஆட்சியின் 25-வது ஆண்டில், அதாவது கி.பி.1009-ல் திருப்பணி முழுதும் பூர்த்திசெய்து கும்பாபிஷேகமும் நடத்திவிட்டான். அப்பால் சுமார் ஆறு ஆண்டுகள் இடையூறு இல்லாமலே - யாதொரு வசதிக் குறைவும் இல்லாமல் - ஆட்சி புரிந்திருக்கிறான். ஆகவே, வசதிக் குறைவால் கோபுரத்தை மேலே சிறிதாகச் செய்து குறுக்கிவிட்டான் என்று கருதுவது சரியன்று.

இத்தகைய கோபுர அமைப்பே ஒரு தனியழகு. இம்மாதிரி கோபுர லட்சணங்களுக்கும் சிற்ப சாஸ்திரத்தில் இடமிருக்கிறது.

ராஜராஜனும், அவன் மகன் ராஜேந்திரனும் வலிமைமிக்க பேரரசர்கள்; பெருமைமிக்க வல்லரசு புரிந்தவர்கள். தமிழர் ஆற்றலைக் குன்றின் மேலிட்ட விளக்கென விளங்கச் செய்தவர்கள். இப்பேரரசர்களின் பெரும் புகழைப் பெரிய கோயிலும் கோபுரமும் இன்றும் மலைமேல் பெருந்தீபமாக ஒளிரச் செய்து காட்டுகின்றன.

துவாரபாலகர்

தாராசுரத்திலுள்ள ஒரு கல்வெட்டிலே, 'கோசல நாட்டில் கண்ட வெற்றி காரணமாகத் துவாரபாலகர் சிலையைக் கொண்டுவந்தான்' என்று கண்டிருக்கிறது. அந்தச் சிலையை, இப்போது சண்முகர் கோயிலின் முன்னுள்ள ராஜா மண்டபத்தில் வைத்திருக்கிறார்கள். உயரம் 5 அடி. ஒரு வகைப் பச்சைக் கல்லினால் ஆனது.



இந்தச் சிற்பத்தை வைத்துக்கொண்டு, அக்காலத்துக் கோசல நாட்டின் அணி-பணிகளுக்கும், இங்குள்ள வேலைப் பாடுகளுக்கும் வேற்றுமைகளைக் கண்டு கொள்ளலாம்.

உக்கிரத்தின் இடையே முகத்தில் புன்சிரிப்பும் காணப்படுகிறது. இதிலுள்ள முத்தாரங்களையும், கிரீடத்திலுள்ள வேலைப்பாடுகளையும், கழுத்தைச் சுற்றியுள்ள வேலைப்பாடுகளையும் நோக்கினால், சிற்பியின் கைத்திறன் ஒருவாறு புலனாகிறது.

தூக்கி மிதித்திருக்கும் காலின் கீழே எலியைக் கவ்வியவாறு பாம்பு காணப்படுகிறது. பயந்துபோன மற்றொரு எலி மேலே ஏற முயல்கிறது. உடும்பு ஒன்றும் காலின் மேல்பக்கம் ஏறுகிறது. ஊன்றிய காலின் பக்கம் பூனையொன்று எலி பிடிப்பதுபோலக் காண்கிறது.

நாம் முன்பு பார்த்த கங்கை கொண்ட சோழபுரத்துப் படத்தில், துவாரபாலகர் உள்ள சிற்பத்தின் காலருகே யானையைக் கவ்வியவாறு பாம்பு காணப்படுகிறது. இங்கும் கோபுரங்களின் கீழும் கோயிலிலும் உள்ள துவாரபாலகர் சிற்பத்திலும், அது மாதிரியே யானையைக் கவ்வியவாறு காண்கிறது.

துவாரபாலகரைச் சுற்றியே ஆபத்துகள் இப்படி நிறைந்துள்ளன என்றால், அவரிடம் நெருங்குவது மிகவும் ஆபத்தானது என்று சொல்லாமல் சொல்கின்றன மற்ற வேலைப்பாடுகள்.

சண்டேஸ்வரர்

அடுத்தபடியாகத் தரிசிக்கிறோம் ராஜா மண்டபத்திலே மூன்று அடி உயரமுள்ள சண்டேஸ்வரரை, நிற்கும் கோலத்திலே. இதே மாதிரி உருவம் இக்கோயிலுக்குள்ளே சண்டேஸ்வரர்



கோயில் இருக்கிறதே, அதன் வெளியிலும் காண்கிறோம்.

எனினும் இதில்தான் வேலைப்பாடுகள் நிறைந்து காண்கின்றன. ஜடாமுடி ஒன்றே போதும் இச்சிற்பத்தின் மேன்மையை எடுத்துக்காட்டுவதற்கு; எப்படிச் சுருண்டுக் காணப்படுகிறது!

கையிலே கோடாலி வைத்துக்கொண்டு இருக்கிறார். கடமையில் மிகவும் கண்டிப்பானவர். 'தந்தை என்றும் பாராமல் காலை வெட்டியவர்!'

என்றல்லவா பெரிய புராணம் இவரின் பெருமையைப் பாடுகிறது!

பஞ்ச மூர்த்திகளில் ஒருவராக அந்த உன்னதப் பதவி வகிக்கிறார், தம் தவ வலிமையினால். இத்தகைய சண்டேஸ்வர சௌந்தரியத்தையும் சிற்பத்திலே தரிசிக்கிறோம்.

பெரிய கோயிலுக்குள் அதிசயமான சிவதரிசனம்போல், பெரிய கோயில் எங்கும் சௌந்தரிய தரிசனமும் கிடைக்கிறது.

***


பக்தி விளைத்த தெய்வ சௌந்தரியம் அல்லவா? ராஜராஜனது பக்தி நிறைந்த உள்ளத்தின் சௌந்தரியத்துக்கு ஒரு பெருஞ் சான்றுதானே தஞ்சைப் பெரிய கோயில்?

தான் செய்த போர்களில் வென்று கொணர்ந்த பொருட்கள் அனைத்தையும் கொண்டு இக்கோயிலை அழகு செய்திருக்கிறான். எத்தனை பொன் நகைகள், பூஜா பாத்திரங்கள்! எத்தகைய ஓவியங்களால் இக்கோயிலை ஒரு காவியம் ஆக்கியுள்ளான்! எத்தனை விளக்குகளால் ஒளி செய்தான்!

எத்தனை கீத வாத்திய வினோதங்களால் இறைவனை இன்னிசைக் கடலில் மூழ்குவித்தான்! தானும் சிவானந்தக் கடலிலே மூழ்கினான் 'சிவபாதசேகரன்' என்ற இந்த ராஜராஜன்.

சேர்த்தி அழகு

கும்பத்தின் மேல் மாவிலை, தர்ப்பை முதலியன இருக்க, அதனிடையே ஆடை சுற்றிக் கட்டியிருப்பதைப் பார்த்திருக்கிறீர்களா? இதோ இந்தப் படத்தின் கீழே காணப்படுகிறதே, கும்பம் அல்லது கடம் வைத்த மாதிரி - அதற்குக் 'கும்ப பஞ்சரம்' என்று பெயர். இந்தப் படத்திலே காண்பது பஞ்சரக்கால்.



பஞ்சரக்கால்

இது கோபுரங்களின் அடிப்பாகங்களில், கோஷ்டம், தேவ கோஷ்டம் இவற்றுக்கு நடுவே உள்ளடங்கி இருக்கும். இந்தப் பஞ்சரக்கால்களில் பலவகை - முத்துப் பஞ்சரக்கால், சரப் பஞ்சரக்கால், வைரப் பஞ்சரக்கால் என்றெல்லாம் உண்டு.


இங்கே காணும் இந்தப் பஞ்சரக்கால், பெரிய கோயிலைச் சேர்ந்த சண்டேஸ்வரர் கோயிலின் நேர்எதிரே இருக்கிறது. பத்து அடி உயரத்தில் பல துண்டுக் கற்களின் சேர்த்தி அழகுடன் காணப்படுகிறது.

சூரிய-சந்திரர்களும் தேவர்களும் இருபுறமும் காணப்படுகிறார்கள். மேலே திறந்த யாளியின் வாயைப் பாருங்கள். அதில் இருபுறமும் படை வீரர் இருவர் கத்திச்சண்டை செய்யும் தோரணையில் இருக்கிறார்கள் அல்லவா?

இவற்றின் கீழே இருபுறமும் யாளி மேல் இரு வீரர் அமர்ந்து, போருக்கு ஆயத்தமாக இருக்கிறார்கள் அல்லவா?

இனி, கும்பத்தை உற்று நோக்க, அதன் மேலே தாமரை மலர்ந்திருக்கக் காண்கிறோம். அதன்மேல் ஒரு கொடியில் அன்னம் ஒன்று காண்கிறோம்.

மேலே போரின் அறிகுறி; கீழே நிலைத்த சமாதானத்தின் நினைவுக் குறி. இடையே தோன்றியும் தோன்றாமலும் துணை புரியும் தெய்வ சக்திகள்.



மூலஸ்தான கோபுரத்தின் கீழ்ப் பாகங்களில் அநேக வேலைப் பாடுகளோடுகூடிய பஞ்சரக் கால்கள் காணப்படுகின்றன.

ஆலிங்கன மூர்த்தி

சண்டேஸ்வரர் கோயிலின் நேர்எதிரே அழகாய் அமைந்து இருக்கும் பஞ்சரக்காலின் பக்கத்திலே, சண்டேஸ்வரரின் கோயிலை நோக்கியவாறு தேவியை ஒரு கையால் அணைத்துக்கொண்டு இருக்கும் ஆலிங்கன மூர்த்தியின் சேர்த்தி அழகைக் காண்கிறோம்.

தேவி பயபக்தியோடு பக்கத்தில் நிற்பதைத்தான் சிற்பி எவ்வளவு அதிசயமாய்க் காட்டியிருக்கிறார்! தேவியின் வலது கையைப் பாருங்கள். அதை வாய்க்குச் சமீபம் கொண்டுபோகும் நிலையில், பய-பக்தி உணர்ச்சி கல்லிலே கனிந்துவிடுகிறது!

சிற்பத்தின் உயரம் ஆறு அடி. இப்படிச் சிற்பங்களை நல்ல உயரத்தில் வைத்திருப்பதால், கீழே தூரத்தில் நின்று மூலஸ்தான கோபுரத்தை நோக்கும்போது, இச்சிற்பங்களின் மூலமாக இந்தக் கோபுரத்துக்கும் அழகு பன்மடங்கு அதிகரிக்கக் காண்கிறோம்.

வைணவத்தைக் காட்டிலும் சைவத்தில் வைராக்கியமும் பயபக்தியும் அதிகம். தத்துவப் புதையலும் விசேஷமாக இருக்கும். வைணவத்திலோ பிரேம பக்தியும் மானுடப் பண்பும் விசேஷமானவை. இந்த அடிப்படை வேறுபாடுகளைச் சிற்பத்திலும் காணலாம்.

பரமேஸ்வரனுடைய தெய்வீக சௌந்தரியத்தைப் பார்வதியும் மருண்டு நோக்குவதாகச் சிவநேசச்

கவிகளும் கலைஞர்களும் வர்ணித்து இருக்கிறார்கள். ஆலிங்கன மூர்த்தியின் சேர்த்தி அழகு, அதே பயபக்திக் கருத்தை, அதே தத்துவப் புதையலைக் கல்லிலே வெளியிடும் கவிதை!

'சேர்த்தி அழகு' என்றால், சேர்ந்து காணும் அழகு. இதனால் அழகு பெருகிக் காண்கிறது.


உதாரணமாக, பஞ்சரக்காலைப் பாருங்கள் - பல துண்டுக் கற்கள் சேர்ந்து அழகாய்க் காணும் பஞ்சரக் காலைத்தான். ஒரே கல்லில் இயன்ற அழகு ஒரு விதம்; கற்களின் சேர்த்தி அழகு வேறொரு விதம்.

விசேஷமாக, பார்வதி-பரமேஸ்வரரின் சேர்த்தி அழகு போன்ற சேர்த்தி அழகுகளிலே அழகு பெருகிக் காண்பதை நாம் கண்டு களிக்கிறோம்; சிலைகளிலும்தான்; கவிதை போன்ற கலைகளிலும்தான்.

சீதா - ராமரின் சேர்த்தி அழகை ராமாயண மகா கவிகள் வர்ணித்து மகிழ்வதுண்டு. அச்சேர்த்தியைப் 'பெருகிய செவ்வி' என்கிறான் கவிஞன். அதே 'பெருகிய செவ்வி'யை இந்த ஆலிங்கன மூர்த்தி சிற்பத்திலும் பார்த்துப் பரவசமாகிறோம்.

இங்கே தேவியின் பயபக்தி, இச்சேர்த்தி அழகினுக்கு ஒரு தனிச் சோபை தந்திருக்கிறது. சைவ சமயத்தின் சிறப்பியல்பை இது பிரதிபலிக்கிறது என்று கருதலாம்.

முழு அழகு!



தென்னாட்டுத் திருக்கோயில்கள், நம் முன்னோரின் அபார சௌந்தரிய உணர்ச்சியையும் ரசிகத்தன்மையையும் வெளியிடுவதுபோல், பிற்கால வீழ்ச்சி நிலையையும் வெளியிடுகின்றன.


அற்புதச் சிற்பத்திறனை மேன்மேலும் வளர்த்து வராத அசிரத்தைக்கு மட்டுமா சான்று தருகின்றன கோயில்கள்? சிற்பச் செல்வங்களை அப்படியே பாதுகாக்கத் தவறிய பலவீனத்துக்கு மட்டுமா சாட்சி சொல்கின்றன சிற்பங்கள், பேசாத மோனவாய் திறந்து?

அழகுப் பஞ்சம்

கோயில்களிலே சில இடங்களில் கொட்டகை போட்டிருக்கும் அழகைப் பார்த்து இருக்கிறீர்கள் அல்லவா? கீற்றுக் கொட்டகையோ, தகரக் கொட்டகையோதான். ஆனால், ரசிகர்களின் ஆனந்தத்தை இக்கொட்டகைகள் எப்படிக் கெடுத்து, ஆத்திரத்தை எப்படித் தூண்டிவிடுகின்றன!

'கோயிலின் முழு அழகையும் பார்த்து அனுபவிக்க முடியாதபடி இப்படிக் கெடுத்து இருக்கிறார்களே!' என்ற ஆத்திரம், மற்றப்படி நெஞ்சு நிறைந்து பொங்கும் ஆனந்தத்தையும் ஒருவாறு கெடுக்கத்தான் செய்கிறது. இத்தகைய உணர்ச்சி, தஞ்சைப் பெரிய கோயிலிலும் ஏற்படத்தான் செய்கிறது.

இப்போது எதிரில் உள்ள படத்தைப் பாருங்கள். சாதாரணமாகப் பெரிய கோயிலின் படங்களிலே இத்தகைய காட்சி காண்பது அரிது. அருமையிலும் அருமை என்றே சொல்லலாம். இக்கோயிலை, நாம் முன்பு



பார்த்த மாதிரியே பலரும் படம் பிடித்திருப்பார்கள்.

முழுத் தோற்றம்

ஸ்வாமி, அம்மன் கோயில்களின் தோற்றமும், நந்தி மண்டபமும் இப்படத்திலே, அம்மன் சந்நிதிக்கு முன்பு காணப்படும் கிற்றுக் கொட்டகை இல்லாமல், காட்டப்பெற்று இருக்கின்றன. இப்படத்தில் கண்டு ரசிக்கும் காட்சியை நாம் கோயிலிலும் காண முடியாது!

இந்தப் படத்தில், பிரகதீஸ்வரரின் மூலஸ்தானத்துக்குச் செல்லும் படிகளையும், முன் மண்டபத்தையும் காண்கிறோம். இப்படம் எழுதிய இடத்திலிருந்து கோயிலைப் பார்த்தால், அம்மன் கோயிலின் முன்பு இருக்கும் கொட்டகை மறைத்துவிடும்.

கொட்டகை போடுவது போன்ற இன்றியமையாத தேவைகளைக் கவனிக்கும்போது, இயன்றவரை கோயிலின் அழகு குன்றிப்போகாதபடி கவனித்துக்கொள்ள வேண்டும். அம்மன் சந்நிதிக்கு முன்புள்ள கீற்றுக் கொட்டகையை எடுத்துவிட்டால், படத்தில் நாம் பார்த்து ரசிப்பதுபோல் உடனடியாகக் கோயிலின் பூர்ண அழகையும் நன்றாகக் கண்டுகளிக்க இயலும் அல்லவா?

படத்தின் வலது பக்கத்திலே அம்மன் கோயிலின் விமானத்தையும் தரிசிக்கலாம். இடது பக்கத்திலுள்ள நந்தி மண்டபத்தை எந்தத் திசையில் இருந்தும் எந்தக் கோணத்தில் இருந்து பார்த்தாலும் அது ஒரு தனிச் சோபையுடன் பிரகாசிக்கிறது; ஒவ்வொரு பகுதியும் அப்படிப் பிரகாசிக்கிறது.

ஈஸ்வரன் போர்க் கோலம்

பஞ்சரக்காலின் பக்கத்தில், கத்தி-கேடயத்துடன் இந்தச் சிற்பம் காணப் படுகிறது. இங்கே இதன் மேலுள்ள வரிசைகளில் வில்-அம்பு தாங்கி யுத்த சன்னத்தராகி இருக்கும் ஈஸ்வரனின் தோற்றங்களைப் பல விதங்களில் பார்க்கலாம்.

எழுதுவதற்கு ஏற்றத் தோற்றங்கள் இருந்தாலும், எழுத வசதி இல்லாதபடி அவ்வளவு உயரத்தில் இருப்பதால், இத்தோற்றங்களை நேரில் பார்த்து ஆனந்திப்பதைத் தவிர வேறு வழியில்லை.

உயரம் ஆறு அடி உள்ள இந்த ஈஸ்வரப் போர்க்கோலம், கிரீட அமைப்புடன் அழகாய் அமைந்திருக்கிறது. இதிலுள்ள எல்லாச் சிற்பங்களின் கிரீட அமைப்பும் அழகாகவே இருக்கிறது.

'ஈஸ்வரன், சமாதான மூர்த்தி மட்டுமல்ல; அருளாட்டமாகிய சீராட்டத்துடன் போராட்டத்திலும் வல்லவர், சண்டைக்காரரும்கூட!' என்று எவ்வளவு துணிவுடன் கருதியுள்ளது நம்மவர் உள்ளம்.


'வாழ்க்கையே போராட்டம்' என்று கூறுவதுபோல், ஆக்கி-அளித்து-அழித்து விடுதலை அருளும் இறைவன் - தொழிலையும் ஒரு தெய்விகப் போராட்டமாய்க் கருதினார்கள்.

அதர்ம சக்திகளான அசுர சக்திகளோடு தெய்வ சக்திகள் போராடுவது இறைவனது போர்க் கோலத்தின் உட்பொருள். சீரான அருட்கோலத்துடன் பேர் பெற்ற போர்க் கோலத்தையும் அறிந்துகொள்வது, ஈஸ்வர தத்துவத்தின் முழு அழகையும் காண முயலும் முயற்சிதான்.

ஈசனும் மகிஷாசுரமர்த்தினியும்!

கோயிலின் பின் பக்கத்தில் உள்ள வடக்குப் படிக்கட்டின் மேல் ஏறி, சரஸ்வதிக்கு எதிரே பாருங்கள் ஈசனின் தோற்றத்தை.

இரண்டு கைகள்தான். என்றாலும் சக்திமயமாக அழகு ஜொலிக்கிறது. ஒரு கையிலே திரிசூலம். தெய்வ அழகின் திவ்ய சக்திக்கு அறிகுறி.



கங்கை அடங்கிய குடம்!

ராஜாதிராஜன், தேவாதிதேவன், மூவர்க்கும் முதல்வன் என்று முடிசூட்டி வைத்திருப்பதுபோலக் காட்டும் ஜடாமுடியைப் பாருங்கள்.

இம்முடியிலேதான் என்ன அலங்காரம்! இங்கே அலங்காரம் பரிபூர்ணமாகவும் நன்றாகவும் சோபிக்கிறது. அருளாட்சியின் அழகு - மாட்சிக்கு இசைந்த ஜடாமகுடம்.

'*குடத்திலே கங்கை யடங்கும்!*' என்று ஒரு விகட கவிராயரைப் பாடச்சொல்ல, அந்தச் சோனா மாரிப் புலவர், '*இறைவன் ஜடாமகுடத்திலே கங்கை யடங்கும்*' என்று பாடிவிட்டாராம். அந்த கங்கை அடங்கிய குடம்தான், இதோ இந்தத் திருமுக மண்டலத்துக்குத் தெய்வீக அழகும் மாட்சியும் தருகிறது.

சிற்பமும் சித்திர வர்ணமும்

அக்காலத்திலேயே சிற்பங்களின் மேல் வர்ணத்திலே எழுதிச் சித்திரக்காரர்கள் தங்கள் இஷ்டம்போல் நகைகளைச் சித்திரித்திருக்கிறார்கள்.

ஆனால், மேலே எழுதியிருக்கும் வர்ண சித்திரங்களுக்கும், சிற்பங்களுக்கும் பல வேறுபாடுகள் காணப்படுகின்றன.

இயன்றவரை இங்குள்ள சிற்பங்கள், இவற்றிலுள்ள வேலைப்பாடுகளுடன் உண்மைக்குப் புறம்பாகாமல், தொடர்ந்து வரும் படங்களில் காட்டப் படுகின்றன.

வர்ணத்தில் எழுத வேண்டுமென்றால் இனிமேலாவது தனியாகவே எழுத வேண்டும்; சிற்பங்களின்மேல் எழுதி அவற்றின் அழகைக் கெடுத்துவிடக் கூடாது. இதைக் கோயில் அதிகாரிகள் விசேஷமாய்க் கவனிக்க வேண்டும்.

தவிர, தூண்களில் காவி, சுண்ணாம்பு முதலியவற்றை அடித்துச் சிற்பத்தின் உண்மைத் தோற்றத்தை ரசிகர்கள் ரசிக்க முடியாதபடி செய்வது, பிசகு என்பதையும் கோயில் அதிகாரிகள் நன்கு உணர வேண்டும்.

மகிஷாசுரமர்த்தினியின் விசேஷமான கோலம்

சரஸ்வதியின் பக்கத்தில், வடக்குப் பிராகாரத்தை நோக்கியவாறு மகிஷாசுர மர்த்தினி சிற்பம் இருக்கிறது. இதுவரை வந்த சிற்பங்களுக்கும் இதற்கும், மாறுதல் பலவிதங்களில் காணப்படுகிறது.

இந்தப் படத்தை அந்தப் படங்களுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். இப்படத்திலே இருபுறமும் சேடிகள் கையில் வெண்சாமரம் ஏந்தியவாறு காணப்படுகிறார்கள் அல்லவா? எனவே, போராட்டம் முடிந்து, பயங்கரி சமாதான தேவியாகி வருகிறாள் என்பது தெளிவு.

இயற்கையும் மனோபாவமும்

அடுத்தபடியாக மகிஷத்தின் தலையை நோக்குங்கள். எவ்வளவு இயற்கையாக, தத்ரூபமாக இருக்கிறது!

இன்னும் நன்றாக நோக்குங்கள் இந்த மகிஷத் தலையை. வாய் திறந்து கண்கள் பிதுங்கி இருப்பதிலிருந்தே, தேவியின் திருவடிகளின் கீழே மகிஷம் உயிரற்றுக் கிடக்கிறது என்று உடனே சொல்லிவிடலாம் அல்லவா?

மறக்கருணையால் மகிஷாசுரனுக்கு அருளிய தேவியின் நிலையைத்தான் பாருங்கள். அபய ஹஸ்தமும் சாந்தமான திருமுகமுமாய்க் காட்சியளிக்கிறாள்.

இதில் பக்த-சிற்பியின் மனோபாவம் எவ்வளவு அற்புதமாய் ஈடுபட்டு இயற்கையோடு இசைந்தும், மனோபாவத்தோடு பறந்தும் ஒருங்கே பணிபுரிந்து இருக்கிறது!

சக்தி தத்துவம்

'இந்தத் துஷ்டனுக்கும் அருள் செய்தேன், என் மறக்கருணையால். இஷ்டர்களே, இனியவர்களே! அன்பர்களே, அடியவர்களே! வாருங்கள், என் அறக்கருணைக்கு இலக்காக!' என்று அபயமளிக்கும் அருமைத் திருக்கோலம் இது. மகிஷாசுர சம்ஹாரமானதும் சாந்தி மூன்று லோகத்திலும் பரிமளித்ததாம். அது தேவி முகத்தில் பிரதிபலிக்கிறது பாருங்கள்!

சங்கு-சக்கரங்கள், ரௌத்ராகாரம் கொண்ட தேவியின் விஷ்ணு அம்சத்தையும் வெளியிடுகின்றன.

இந்த வெற்றிக் காட்சியை மேலே இருபுறமும் தேவர்கள் கண்டு ஆனந்திக்கிறார்கள். 'மகிஷாசுர மர்த்தனம்' என்ற பிரபஞ்ச நாடகத்தின் இறுதிக் காட்சியல்லவா?

மகிஷத்தின் கீழே யாளத்தின் மேல் வீரர்கள் போரிடும் காட்சியைப் பார்க்கிறோம். வாழ்க்கைப் போராட்டத்திலே பலனைக் கருதாமல் ஈடுபடுவது நமது கடமை. வெற்றி அருள்வது வீரமா சக்தியான மகிஷாசுர மர்த்தினியின் பொறுப்பு.


தேவர்களும் திவ்ய ஞானிகளும் கண்டு களிக்கிறார்கள், என்றும் புதுமையாக இந்த மகா நாடகத்தை!

* * *

நம்முடைய சிற்பங்களில் - ஏன், பொதுவாக நம் கலைகளில் எல்லாம் - இயற்கை அம்சம் மிகவும் குறைந்து உயர்வு நவிற்சி (அதாவது மிகைப்படுத்திக் காட்டுதல், மிகவும் உயர்ந்து போகிறதென்று குறை) கூறுவோர் உண்டு. இவர்கள் தங்கள் மனக்குறைகளை மேலே காணும் ஈசனிடமும் மகிஷாசுரமர்த்தினியிடமும் முறையிட்டுக் கொண்டாலே போதும்!

பல கைகளுடனும் பல முகங்களுடனா இங்கே பரமேஸ்வரன் சக்திமயமாகவும் அழகுமயமாகவும் ஜொலிக்கிறார்? இரு கையும் இரு முகமுமாய்த் தம் திவ்ய தேஜஸை, திவ்ய சக்தியை வெளியிடவில்லையா? தமக்கென ஒன்றுமே வேண்டாது உலகங்களை ஆளும் தியாக அருளாட்சியை ஜடாமகுடத்தின் பரிபூர்ணச் சிற்ப அலங்காரம் தூக்கிக் காட்டவில்லையா?

மகிஷாசுரமர்த்தினியிலும், மனோ பாவத்துடன் இயற்கையும் இசைந்தே இனிமை தருகிறது. இயற்கையை மனோபாவத்துடன் தெய்வீகமாய்க் காட்டுகிறது நமது கலை.



மகத்தான உண்மையும் அழகும்

நம்மையெல்லாம் ஆட்டிவைக்கும் தெய்வ சக்தி, தானும் ஆடிக்கொண்டிருக்கிறது என்பது ஒரு மகத்தான உண்மை.

அண்டபகி ரண்டமெல்லாம்
வெண்ணிலாவே! - ஐயர்
ஆட்டமென்று சொல்வதென்ன
வெண்ணிலாவே?

என்ற அந்தப் பிரச்னைதான் எத்தனை கவிதையில், தத்துவக் கனவுகளில் கருவாகி, எத்தனை கல்லிலும் செம்பிலும் உருவாகி வந்து நமக்குக் கேள்வி கேட்கிறது! இந்தப் பிரச்னையை இப்போது பெரிய கோயில் சிற்பமொன்றில் காண்போம்.




தஞ்சைப் பெரிய கோயிலில் மூலஸ்தான விமானத்தின் வெளிப்பாகங்களில் பல தேவ கோஷ்டங்கள் இருக்கின்றன. இவற்றில் தெற்குப் பிராகாரத்தின் மேலண்டைக் கடைசியிலுள்ள தேவ கோஷ்ட வேலைப்பாடுகள் அபாரமாக ரசிகர்களைப் பரவசப்படுத்துகின்றன, பிரமிக்க வைக்கின்றன.

நடராஜ தத்துவம் எப்படிப் பிரமிக்க வைக்கிறதோ, எப்படிப் பரவசமாக்குகிறதோ, அப்படிச் செய்கின்றன நடராஜர் இருக்கும் இத்தேவ கோஷ்ட வேலைப்பாடுகளும்.

முழுப் படத்திலே

எதிர் பக்கத்தில் கொடி வேலைகளுக்கு நடுவே நின்றுகொண்டிருக்கும் விக்னேஸ்வரரைத் தரிசனம் செய்து கொண்டு, மறுபடியும் நடராஜ தரிசனம் செய்து, அந்தப் பிரச்னையை இந்தச் சிற்பி எப்படிக் காட்டியுள்ளார் என்று பார்க்கலாம்.

கொடி வேலைகளோடுகூடிய விநாயகப் பெருமானுக்கு இருபுறமும் யாளிகள் வாயைத் திறந்துகொண்டு இருக்கின்றன.


கோபி

வாயின் நடுவே சிங்கங்கள் நின்று கொண்டு, முன் காலைத் தூக்கியவாறு காண்கின்றன.

வாயைத் திறந்துகொண்டு இருக்கும் யாளியின்மேல் முதுகுப்பக்கம் இரு வீரர்கள் உட்கார்ந்துகொண்டு இருக்கிறார்கள்.

இக்காட்சிகளைத்தான் முழுப்படம் காட்டுகிறது. இந்த வேலைப்பாடுகளின் கீழேதான் நடனத் திருக்கோலத்தில் ஈஸ்வரனைத் தரிசிக்கிறோம்.

தாண்டவச் சிற்பத்தின் சிறப்பு

மேலே வர்ணத்தில் எழுதிச் சிற்பத்தைக் கோரப்படுத்தி இருக்கிறார்கள். கோரத்தை விட்டு நாம் சாரத்தை - கலைச் சுவையை - அனுபவிக்க வேண்டும்.

தேவ கோஷ்டம் அகலம் சிறுத்து இருப்பதால், உடுக்கை ஏந்திய கையும் அக்னி ஏந்திய கையும் உள்ளே குடைந்து காட்டப்பட்டுள்ளன. கீழே நின்று பார்த்தால் முன் இரு கைகளும்தான் தெரியும். தாண்டவ மூர்த்தியின் காலில் மிதிபடும் முயலகனின் உருவம் சரியாகத் தெரிந்துகொள்ள முடியாதபடி காரை பூசியிருக்கிறது. தாண்டவத் திருக்கோலத்தின் கீழே பூதகணங்கள், வாத்திய கோஷ்டியாகக் காண்கின்றன.

மற்ற இரு பக்கமும் பாருங்கள். இடது பக்கம் பஞ்சமுக வாத்தியத்தை வாசித்துக்கொண்டு இருக்கும் காட்சி. வலது பக்கம் காரைக்கால் அம்மையார் தாளம் போடுவதுபோல் இருக்கும் சிற்பம். இந்த இரண்டு சிற்பங்களும் நடராஜ சிற்பத்துடன் காட்டப் பெற்றிருக்கின்றன.

அம்மையார் காணும் நடனம்

‘உன் பூதகணங்களுடன் நானும் பேயோடு பேயாய் இடம்பெற வேண்டும். நீ ஆட, நான் தாளம் போட்டுப் பாடவும் ஆசைப்படுகிறேன்!’ என்று பேராசையுடன் பிரார்த்தனை செய்து கொண்டாராம் காரைக்கால் அம்மையார்.

அந்தப் பிரார்த்தனைக்கு இணங்க, காரைக்கால் அம்மையார் காரைக்கால் பேயாகிவிட்டார்! அந்தப் பேயார் கண்ட அற்புதத் திருநடனம் இது. அவருடைய அகக் காட்சிக்கு இது சிற்பக் காட்சி.

அணுவில் அணுவாகி ஆடும் பெருமான், திக்கொடு திக்-அந்தங்களிலும் எட்டக் கை வீசி விண் முட்ட முடி தூக்கி, மண்ணிலும் கால் தோயாது ஆணவத்தை மிதித்து ஆடுகிறாராம். இது, காரைக்கால், பேயார் போன்ற பக்த மணிகள் பரவசமாகிக் கண்ட நடராஜ தத்துவம்.

சொல்லால் சொல்ல முடியாது வாசாலகரையும் திகைக்க வைக்கும், திணற வைக்கும், இந்தத் தத்துவத்தைக் கல்லால் சொல்லிக் காட்டுகிறது சிற்பம்.

கீழே யாளவரிகளில் வீரர்கள் அமர்ந்திருக்கும் சிற்பங்கள். யாளி - உயரம் இரண்டு அடி. இருபுறமும் கடைசி யாளி வாயில் மண்டி போட்டு இரு வீரர் சண்டை போடுகிறார்கள். தத்ரூபமான யாளி.

அழகிய சிற்பங்கள் எடுத்துக் காட்டுகின்றன ‘நடராஜா’ என்ற மகத்தான உண்மையை.

சிலையாக்கும் சிலை



ஒரு கவி, ஒரு பாட்டுப் பாடினான், ராதா கிருஷ்ணனுடைய காதலைக் குறித்து. சொல் - அலங்காரங்கள் இல்லாமல் அந்தக் காதல் காட்சியை இயற்கையாகக் காட்டினான். கேட்டவர்கள் மெய்ம்மறந்து நின்றுவிட்டார்கள். கைதட்டவும் மறந்தார்கள். 'ஆஹா, ஓஹோ!' என்று மகிழ்ச்சி ஆரவாரங்கள் செய்யவேயில்லை. இது, கவி ரவீந்திரர் சொல்லும் ஒரு கதைப் பகுதி.

இந்த விதமாக, படாடோபம் இல்லாமல், அதிக அலங்காரங்கள் இல்லாமல், இதயத்தை வசீகரித்துவிடும் கலைத்திறனும் உண்டு. இவ்வகைத் திறனை தஞ்சைப் பெரிய கோயிலில் பார்க்கிறோம்.

பிட்சாடன மூர்த்தி

தெற்குப் பிராகாரத்தின் கடைசியில், மூலஸ்தான தரிசனம் செய்ய ஏறும் படிகளின் இடது பக்கம், தெற்கு நோக்கியவாறு ஒய்யாரமாக நிற்கிறாரே பிட்சாடன மூர்த்தி, இவர் ஒரு சாட்சி, மேலே சொன்ன கலைத்திறனுக்கு.

உற்று நோக்குங்கள் படத்தை. அதிக வேலைப்பாடுகள் தென்படுகின்றனவா? எனினும் கலா ரசிகனைச் சிலைபோல நிறுத்தி வைத்து, 'நம்மைப் பார்த்துக் கொண்டேயிரும் பிள்ளாய்!' என்று சொல்லாமல் சொல்லிவிடுகிறார் பிட்சாடனர். என்ன சிற்பத் திறன், பார்த்தீர்களா?

ஆண்டியான ஆண்டவன்

சாய்ந்து நின்றுகொண்டு கீழே மானுக்கு ஆகாரம் கொடுக்கும்

கைதான் எப்படி ஒய்யாரமாக அமைந்திருக்கிறது! இது இந்தச் சிற்பத்திலே அழகுக்கு அழகு செய்கிறது.

காலின் கீழே பூதம் அன்ன பாத்திரத்தைத் தலையில் சுமந்து கொண்டிருக்கிறது. தாருகவனத்து ரிஷிபத்தினி ஒருத்தி - அகப்பையில் அன்னம் ஏந்தியவாறு பிச்சையிட வந்தவள் - பிட்சாடனரின் உருவிலே மயங்கி, 'அன்னம் போட அல்லவா வந்திருக்கிறோம்?' என்பதையும் மறந்து நிற்கிறாள். மற்றப் பக்கத்தில் பூதகணங்கள் கும்மாளம் அடித்துக்கொண்டு இருப்பதைப் பாருங்கள். பிட்சாடனரின் வெற்றிக்குச் சாட்சிகள்.

கோயிலின் தோற்றம்

இந்தத் தெற்குப் பிராகாரத்திலே பாதி தூரம் போனபிறகு நந்தி மண்டபத்தைத் திரும்பிப் பார்த்து அனுபவிக்கும் அந்த அழகுத் தோற்றத்தை, இதோ கீழே உள்ள படத்தில் காட்டப்பட்டுள்ளது.

படத்தின் இடது பக்கத்தில், மணி இருக்கும் மண்டபம். அதற்குத் தெற்குப் பக்கமாக ஏறும் படிக்கட்டுகள்.

இந்தத் திக்கிலிருந்து பார்த்தாலும் நந்தி மண்டபம் மிகவும் அழகாய்க் காட்சியளிக்கிறது. அதன் பின்னே தெரியும் கோபுரம்தான் முன்பு நம்மைப் பிரமிக்கவைத்த அழகிய கோபுரம். அதன் பின்பு இருப்பது வெளிக்கோபுரம்.


* * *

பிட்சாடன மூர்த்தியின் கம்பீர்யத்தைத்தான் பார்த்தீர்களே, - ஆறடி உயரச் சிலை அது. அதன் பக்கத்திலுள்ள தேவ கோஷ்டத்தில் இருக்கும் சிற்பங்கள் எல்லாம் பெரும்பாலும் ஆறடி உயரம்.

அவ்வளவு பெரிய ஆக்ருதியில் இருப்பதால்தான், கீழே இருந்து பார்க்கும்போது கம்பீர்ய உணர்ச்சி அதிகரிக்கிறது.

இவ்வுணர்ச்சியுடன், மூலஸ்தான விமானத்துக்கு மேலுள்ள ஒரே கல்லை இயந்திர வசதிகள் இல்லாத அந்தக் காலத்தில் எப்படித்தான் ஏற்றி வைத்தார்களோ என்பதையும் எண்ணிப் பாருங்கள். நிமிர்ந்து பார்ப்பதற்கே கிறு கிறுத்துப் போகிறது.

இவ்வளவு மகத்தான காரியத்தைச் சாதித்த அந்த ராஜராஜ சோழனின் உயர்ந்த சிறந்த பரந்த பக்தி உள்ளத்தைப் புகழ்ந்தவண்ணமாக இருக்கிறார்கள் கலாரசிகர்கள்.



கல் நடத்தும் காலட்சேபம்

இக்கோயிலில் எப்போதும் கதா காலட்சேபங்கள் நடந்தவண்ணமா இருக்கின்றன. 'அல்லும் பகலும் அனவரதமும்' என்று சொன்னால் பொய்யில்லை.

ஒவ்வொரு தேவ கோஷ்டத்திலும் சிற்பங்கள் ஏதாவது கதைகளைச் சொல்லிக் கொண்டுதானே இருக்கின்றன? ஆம், இந்தக் கலைச் சிற்பங்கள் கதைச் சிற்பங்களுங்கூட.

அடுத்த பக்கத்தில் உள்ள படத்தையும், முன்பு நாம் பார்த்த இதேபோன்ற படத்தையும் கூர்ந்து நோக்குங்கள்.



ஒரு சிரஞ்சீவிக் கதை


ஒன்று சொல்லுகிறது எமனுக்கும் எமனானவர் கதையை - காலத்துக்கும் ஒரு காலன் தோன்றிய வைபவத்தை.

இந்தச் சிற்பம், முன்பு வந்த நடராஜர் சிலைக்கும், தெற்குப் பிராகாரத்திலுள்ள ஸ்ரீதட்சிணாமூர்த்தி கோயிலுக்கும் இடையே இருக்கிறது. இச்சிற்பத்தின் இடது பக்கத்தில் கீழே பாருங்கள். சிவலிங்கத்தைக் கட்டிக்கொண்டு இருக்கிற பையன் யார், தெரியவில்லையா?

பயந்தவாறு எங்கேயோ பார்த்துக்கொண்டு இருக்கிறானே, அந்தத் திசையிலும் (சிற்பத்தின் வலது பக்கத்தில் கீழே) பாருங்கள்.

பையனை இப்படிப் பயமுறுத்தும் அந்த ஆசாமி பாசக்கயிறும் கையுமாக... வேறு யாருமில்லை, சாக்ஷாத் எமதர்ம ராஜாவேதான்! இனி, இந்தப் பையன் மார்க்கண்டேயன்தான் என்று சொல்லவும் வேண்டுமா?

கொஞ்சமாவது அவப்பொழுதும் தவப் பொழுதாகுமாறு சிவ கதைகள் கேட்டிருந்தால், சிவலிங்கத்தைக் கட்டி அணைத்துக்கொண்டு இருக்கும் பையன் படத்தைப் பார்த்ததும், கதை இனிது புலனாகியிருக்கும்.



சிற்பத்தில் வேகம்

எம தூதர்களால் மார்க்கண்டேயனுடைய உயிரைக் கொண்டுவர முடியவில்லை என்று தெரிந்ததும் கொடிய கோபம் கொண்ட எமன், தானே பாசக்கயிற்றை வீசிப் பிடித்துக்கொள்ள வேண்டுமென்று ஓடி வருகிறானே! அந்த ஆத்திரக் காட்சிதான் எவ்வளவு தத்ரூபமாய்ச் சித்திரிக்கப் பெறுகின்றது!

எமன் வருகின்ற வேகத்தை அந்தத் தூக்கியக் கால் எவ்வளவு தெளிவாய்க் காட்டுகிறது! சிற்பத்திலே வேகம் காட்டும் சிறப்பு ஊன்றி நோக்கி உணரத்தக்கது.

வயதில் சிறியவன், பதினாறு வயதுப் பையன் என்பதையும் சிற்பம் காட்டுகிறது. பதினாறு வயது-என்றென்றும் பதினாறு வயது என்பது... மரணத்தை வெல்வதும் காலத்தைக் கொல்வதும்தானே?!

கால சம்ஹாரக் கடவுள்

'**கா**லா! உன்னைக் காலால் மிதிக்கிறேன்' என்றாராம் பாலனுக்காக, லிங்கத்தில் இருந்து தோன்றிய காலகாலர். இவரின் திருவுருவத்தைப் பாருங்கள்.

கங்கைகொண்ட சோழபுரத்துச் சிற்பங்களில் கடைசியாக வந்த கால சம்ஹார மூர்த்தியைப்போல் இருக்கிறது இச்சிற்பமும், நிற்கும் தோரணை முதலான அம்சங்களில் எல்லாம். கைகளில் உள்ள ஆயுதங்களில்தான் மாறுபாடுகள்.

இந்தக் கால சம்ஹார மூர்த்திக்குப் பின்காலத்திலே தோன்றியவர்தான் கங்கைகொண்ட சோழபுரத்துக் கால சம்ஹார மூர்த்தி.

கங்கைகொண்ட சோழபுரத்தில் கட்டிய சிவன் கோயிலின் அமைப்பு, முற்றிலும் 'ராஜராஜேஸ்வரம்' என்ற தஞ்சைப் பெரிய கோயிலின் வடிவம் போலவே இருக்கிறது. உருவத்தில் சற்றுச் சிறிது; சிற்ப வேலையில் பெரிய கோயிலைவிடச் சிறந்தது.

வீரபத்திரக் கடவுள்

கால சம்ஹார மூர்த்தி 'பக்தர்களுக்கு மரண பயம் இல்லை; காலத்தின் ஆதிக்கத்துக்கும் பக்தி தலை வணங்குவதில்லை' என்ற சிரஞ்சீவிக் கதையை வெளியிடுகிறார் என்றால், வீரபத்திரக் கடவுள் இறைவனுடைய தர்மாவேசத்தின் வேறொரு புரட்சிகரமான அம்சத்தை வெளியிடும் கதையைச் சொல்கிறார்.

கர்வம் பிடித்துச் சிவநிந்தை செய்த தட்சனின் வேள்வியைச் சிதைத்து, 'காலகாலனின் சக்தி ஒன்றே பெரிது' என்பதைச் சித்தாந்தம் செய்து அருளியவர் 'வீரபத்திரர்' என்பர்.

முன்பு நாம் பார்த்த பிட்சாடன மூர்த்தியின் பக்கத்தில் வீரபத்திரரின் வீரத் திருவுருவம் ஆறடி உயரத்தில் மிகவும் உக்கிரமாய்க் காண்கிறது. பாம்புகள் பின்னிக்கொண்டு இருக்கின்றன, நெருங்க முடியாதபடி.

முன் இரு கைகளே நமக்குத் தெரிகின்றன. மற்றக் கைகள் எல்லாம் தேவ கோஷ்டத்தில் இருபுறமும் குடைந்து காட்டியிருக்கின்றன.

சிலையின் சமீபம் ஏறிப் பார்த்தால் தான் கையில் என்ன ஆயுதங்கள் இருக்கின்றன என்பது தெரியவரும்.

* * *

'**க**ல்லும் சொல்லாதோ கவி?' என்றார் ஒரு புலவர். கலைமகளின் அருளைப் பெற்றுவிட்டால் யாரும் கவி பாடிவிடலாம் என்பதுதான் அவர் கருத்து. சிற்பிகளோ உள்ளபடியே கல்லையும் கவிபாடச் செய்தார்கள்; கதை சொல்லவும் வைத்துவிட்டுப் போயிருக்கிறார்கள்.

காது உள்ளவர் கேட்கிறார்கள். பக்தி உள்ளவர் சிரத்தையுடன் சிந்திக்கிறார்கள். பசித்தவர்கள், ரசித்தவர்கள், ருசிக்கிறார்கள்.

இரு பொருளும் காணாத ஒரு பொருள்!



திருமாலும் பிரம்மதேவனும் அடிமுடி தேடிக் காணப் பெறாத சிவஜோதியின் கதை பிரசித்தமானது.

லட்சுமியோடுகூடிய விஷ்ணு அடியைத் தேடிக் காணவில்லை என்பதற்கு, உட்பொருள் எப்படி இருக்கலாம்? சற்று ஆலோசித்துப் பாருங்கள், மத அபிமான துரபிமானங்களை மறந்துவிட்டு.

சாதாரண அறிவைக்கொண்டு சிந்தித்துப் பார்த்தால், பொருளால் பரம்பொருளைக் கண்டு கொள்ள முடியாது என்ற பாடம் படித்துக் கொள்ளலாம்.


இனி, கலைமகளோடுகூடிய பிரம்மதேவன் உயர உயரப் பறந்தும் முடி காணவில்லை என்றால், உட்பொருள் எது என்றும் ஊகித்துக் கொள்ளலாம். பொருட்செல்வம் காண முடியாத பரம்பொருளைக் கல்விப் பொருளாலும் கண்டு கொள்ள இயலாது - உண்மைதானே?

லிங்கோத்பவர்

இதுபோன்ற உண்மைகளை உட்பொருளாக உணர்த்தும் மூர்த்தி, 'லிங்கோத்பவர்.' பிரம்மனும் பெருமாளும் 'நான் பெரியவன், நான்தான் பெரியவன்' என்று வாதாடிப் போராடும் தருணத்தில், லிங்கம் வெடிக்கிறது; ஜுவாலை அடிமுடி இல்லாது ஜொலிக்கிறது.

இருவரும் அடிமுடி தேடிக் காணாத நிலையில் ஜோதி சுற்றியிருக்க, நடுவில் அபய ஹஸ்தத்துடன் சிவபெருமான் தோன்றி இவர்களின் மனப்போக்கை மாற்றிவிடுகிறார்.

இந்த லிங்கோத்பவர் மூலஸ்தான கோபுரத்தின் நேர் பின்னால் மேற்கு நோக்கியவாறு காணப்படுவது வழக்கம். ஆனால் இங்கே, பெரிய கோயிலின் பின்னால் தெற்குப் பக்கத்தில் ஒதுங்கி இருக்கிறார்.



உருவ அழகு (அங்கும் இங்கும்)

திருபுவனத்தின் சிற்பத்தைப் பல அம்சங்களில் ஒத்திருக்கிறது இந்தப் பெரிய கோயில் சிற்பமும். என்றாலும், அதேபோல் அழகிய இந்தத் திருவுருவத்தில் சில வேறுபாடுகளும் காணப்படுகின்றன.

திருபுவனத்தில் சிரசைச் சுற்றி அலங்காரமாக ஜடை அமைந்திருக்கிறது. இங்கே அப்படியில்லை. இங்கே பிரம்மா இடது பக்கத்திலும், விஷ்ணு வலது பக்கத்திலும் காணப்படுகிறார்கள். அங்கே மாறியிருக்கிறது.

பிரம்மா சுய உருவில் இருந்துகொண்டு அன்னத்தின் சிறகை மாத்திரம் மேலே பறப்பதற்கு உபயோகித்துக்கொண்டு இருக்கிறார்.

மற்றச் சிற்பம்

இதே நிலையைத்தான் இந்தச் சிற்பமும் காண்பிக்கிறது. இதே நிற்கும் கோலம். ஜுவாலைகளோடு கூடிய திருவாசியுடன் காட்சி இங்கே. சிகையில் பிறைச்சந்திரன்.

ஒவ்வொரு சிற்பமும் இதில் காண்பிக்கப் பெற்றுள்ள தேவ கோஷ்டங்களில்தான் விதவிதமான அலங்காரங்களுடன் காட்சி அளிக்கிறது.

மேலே ஈஸ்வரன் ரிஷபத்தின் மேல் சாய்ந்தவாறு தரிசனம் தருகிறார். எப்படி ஒய்யாரமாக உட்கார்ந்திருக்கிறார், பாருங்கள்!

சுற்றியுள்ள கொடி வேலைகள் மிகவும் பிரமிக்க வைக்கின்றன. பத்ம பீடத்தில் நின்றுகொண்டிருக்கிறார். அதன் கீழே யாளவரிகள்.

இதுவரை பார்த்ததுபோல் இல்லாமல் இங்கு நடுவிலுள்ள யாளி, துதிக்கையுடன் காணப்படுகிறது. துதிக்கை, தந்தம் முதலியவற்றுடன், காது மாத்திரம் யானைக் காது மாதிரி இல்லாமல் இருக்கிறது. இந்த அதிசய உருவங்களை நாம் இக்காலத்தில் கோயில்களில்தான் பார்க்க முடியும் என்று சொல்ல வேண்டியதில்லை.

இந்தத் தேவ கோஷ்டத்தின் அழகு, யாளவரி கீழே இருப்பதன்மூலம் பன்மடங்கு அதிகரித்துக் காண்கிறது.

இத்தகைய அழகுச் செல்வத்தைத்தான் இந்நாளில் நமது கல்வியும் செல்வமும் செய்துகாட்ட முடியுமா?


* * *

படைப்புக் கடவுளான பிரம்ம தேவனும் காத்தற்கடவுளான திருமாலும் ஆதியும் அந்தமும் இல்லாத அருட்பெருஞ் ஜோதியாக நின்ற சிவபெருமானின் அடிமுடி தேடினார்கள் என்ற கதை புராணப் பிரசித்தமாக இருப்பதுபோல், சிற்பக் கலையுலகிலும் பிரசித்தமானது என்பதற்குத் தஞ்சைப் பெரிய கோயில், திருபுவனம் முதலான கோயில்களில் சான்று காண்கிறோம்.

சிற்பக்கலையில் மட்டுமா? கவிதை உலகிலும் சான்று உண்டு. மணிவாசகப் பெருமான் முதலான சிவநேசச் செல்வர்கள் இக்கதையை அமைத்து அருமையான பாடல்கள் பாடியிருக்கிறார்கள்.

கவிச் சித்திரங்களில் மட்டுமா எழுதிப் பார்த்தார்கள்? வண்ணம் தீட்டிச் சித்திரங்களிலும் வரைந்து பார்த்திருக்கிறார்கள்.

இவ்வளவு தூரம் கலை உலகப் பிரசித்தி பெற்றுவிட்ட இக்கதையின் உட்பொருளை மேலே சொன்னபடி உய்த்துணர்ந்துகொண்டால், பொதுவாகக் கலைஞர்கள் எல்லாம் கதையையும் அனுபவிக்கலாம்; இது குறித்த சிற்பம், சித்திரம், பாட்டு முதலியவற்றையும் அனுபவிக்கலாம்.




சாகசமும் சமரசமும்

பகீரதப் பெருமுயற்சி என்ற சாகசச் செயல், செயற்கருஞ் செயல்களின் வரம்பாய்க் கருதப்படுகிறது. அதோ (அடுத்த பக்கத்தில்) தேவ கோஷ்டத்தில் நடுவில் இருக்கும் பகீரதன், பூலோகத்துக்குக் கங்கையைக் கொண்டுவந்த காட்சியைப் பாருங்கள்.

கங்காதர மூர்த்தி

இதுவரை வந்த மூர்த்திகளைத் தனித்தனியாகவும், தேவ கோஷ்டம் முழுவதும் பார்த்தீர்கள். இப்போது தேவ கோஷ்டங்களைச் சுற்றி இரு பக்கங்களிலும் எந்த நிலையில் சிற்ப வேலைப்பாடுகள் இருக்கின்றன என்பதைப் பார்த்துக்கொள்ளுங்கள்.

பொது நோக்காகப் பார்க்கும்போது, தேவ கோஷ்டத்தில் உள்ள சிற்பம் மிகவும் சிறியதாகத்தான் இருக்கிறது. நடுவில் இருக்கும்



கங்கை கொணர்ந்த சிற்பத்தின் இடது பக்கத்திலே ஒற்றைக்காலில் நின்று தவம் புரியும் பகீரதனைப் பாருங்கள். இத்தவக் கோலத்தில் ஒரு கால் தூக்கியவாறு, ஒரு கையும் உயரத் தூக்கியவாறு காணப்படுகின்றன.

வெகு வேகமாய்ப் பூலோகத்துக்குப் பாயும் கங்கையைத் தன்னுடைய வலது கையால் தாங்கியவாறு ஜடாமகுடத்தில் அடக்கிக்கொள்ளும் கங்காதர மூர்த்தியைப் பார்க்கிறோம். மேலே பிட்சாடனரின் சிற்பம் மிகச்சிறிய உருவில் காட்சி அளிக்கிறது.

தேவ கோஷ்டத்தின் இருபுறமும் உள்ளடக்கியவாறு பஞ்சரக்கால்கள் இருக்கின்றன. இம்மாதிரி அநேக வேலைப்பாடுகளுடன் ஒன்றுக்கொன்று மாறுபட்டுக் கோபுரத்தைச் சுற்றிக் காண்கின்றன.

இங்கே யாளவரிகள் எவ்வளவு அழகாய் இருக்கின்றன! இதுபோல் கோபுரத்தைச் சுற்றி வெளி வாசற்படி வரை காணப்படுகின்றன.

சங்கர நாராயண மூர்த்தி

இடதுபுறம் விஷ்ணுவும், வலதுபுறம் ஈஸ்வரனுமாகக் காணும் இந்த ஹரிஹர ரூபத்தைச் சாதாரணமாகச் சிவாலயங்களில் காணலாம். கிரீடத்திலிருந்து இடையிலுள்ள வஸ்திரம் வரை எல்லாவற்றிலும் மாறுதல்கள். இங்கும் யாளவரிகளுடன் சிற்பத்தைக் காட்டியிருப்பது அழகை எடுத்துக்காட்டுகிறது.

ஆறடி உயரம். முத்தாரங்களும் கிரீட வேலைப்பாடுகளும் அழகாக இருக்கின்றன. சக்கரம், பிரயோகம் செய்யும் பாவனையில் இருக்கிறது.

இந்தச் சங்கர நாராயண ரூபம், பழைய சைவத்தின் சமரசப் போக்கை மட்டும் சுட்டிக்காட்டவில்லை. ஆதி வைஷ்ணவத்திலும் கடவுளின் ஹரிஹர ரூபத்துக்கு இடம் உண்டு.

'ஹரியும் சிவனும் ஒன்று' எனச் சாதாரணமாகத் தமிழ் மக்கள் இன்றும் சொல்வதுண்டு; நம்புவதுண்டு. பண்டிதர்களின் செல்லச் சண்டை சமயச் சண்டை. பொதுமக்களின் இதயத்தில் கோயில் கொண்டிருக்கும் சைவ-வைஷ்ணவ சமரச உணர்ச்சிக்கு ஒரு கலைக்குறி சங்கரநாராயணர்.

இன்னும் ஒரு விஷயம். இடதுபுறம் விஷ்ணு காணப்படுகிறார் அல்லவா சங்கரநாராயண ரூபத்திலே?


அரியலால் தேவி இல்லை
ஐயன்ஐ யாறனார்க்கே

(ஐயாறனார் - திருவையாற்றில் கோயில் கொண்டிருக்கும் சிவபெருமான்.)

என்ற தேவாரம், கவனிக்கத்தக்கது.

சந்திரசேகரரும் அர்த்தநாரீஸ்வரரும்

'நிலவுலாவிய நீர்மலி வேணியன்' என்று பெரிய புராணக் காப்புச் செய்யுளில் சேக்கிழார் ஸ்வாமி பாடியிருப்பது, சைவப் பெருமக்கள் நன்கு அறிந்ததே. பிறைச்சந்திரனைச் சிவபெருமான் சூடிச் சந்திரசேகர மூர்த்தியாக அருள் புரிகின்றார் என்பதுதான், மேலே கூறிய செய்யுள் அடியின் கருத்து.



சிவபெருமான், சந்திரசேகரராக விளங்குவதற்கு ஒரு புராணக் கதை உண்டு. சந்திரனுக்கு வளர்பிறையும் தேய்பிறையும் உண்டல்லவா? தேய்பிறையில் நாளுக்கு ஒரு கலையாகத் தேய்ந்து வருவதற்கும், பிறகு வளர்பிறையாக வளர்ந்து வருவதற்கும் நம் முன்னோர் ஒரு கற்பனை செய்திருக்கிறார்கள். அதுதான் சந்திரசேகரர் கதை.


27 நட்சத்திரங்களும் சந்திரனுடைய மனைவியராம். தட்சன், அந்த நட்சத்திரங்களின் தந்தையாம். அதாவது, சந்திரனுடைய மாமனார்.

மனைவிமாரை எல்லாம் பட்சபாதம் இல்லாமல் அன்புடன் நன்றாய் மாப்பிள்ளை நடத்தவில்லையென்று மாமனார் கோபங்கொண்டார். 'நாளுக்கு ஒரு கலையாய்த் தேய்ந்து மாய்ந்துபோகக் கடவன்' என்று சபித்து விட்டாராம் மாப்பிள்ளையை.

பதினைந்து தினங்களில் நாளுக்கு ஒரு கலையாகத் தேய்ந்துபோன சந்திரன், நடுங்கிப்போய்க் கயிலையை அடைந்து சிவ சந்நிதயில் அந்த க்ஷயரோகம் போகவேணுமென்று பிரார்த்தனை செய்துகொண்டானாம், எஞ்சியுள்ள

ஒரே கலையுடன். சிவபெருமான் அந்த ஒரு கலையைத் தமது ஜடையில் தரித்துக் கொண்டு சந்திரசேகரராகி விட்டார்.

திருமுடிக்கு அணிதான்; திருவுள்ளம் அவ்வளவுதானா? அந்த ஒரு கலை அவர் முடி மீது இருப்பதால், சந்திரன் நாளுக்கு ஒரு கலையாக வளர ஆரம்பித்துவிட்டான். பூர்ண சந்திரனாகப் பூரித்துப்போகிறான் என்றாலும், தட்ச சாபத்தால் நாளுக்கு ஒரு கலையாகத் தேய்ந்தும் போகிறான். ஆனால், மாய்ந்துபோகவில்லை. அதாவது, எப்போதும் ஒரு கலை சந்திரனை விட்டு நீங்குவதில்லை!



அர்த்தநாரீஸ்வரர்


ஹரிஹர ரூபத்தில் ஹரியும் சிவனும் ஒன்று என்ற உண்மை கண்டோம். இப்போது அர்த்தநாரீஸ்வர வடிவத்திலே சக்தியையும் சிவனையும் அபேதமாய் ஓர் உருவிலே காண்கிறோம்.

இச்சிற்பம் வேலைப்பாடுகளில் கங்கைகொண்ட சோழபுரத்துச் சிற்பத்தை நினைப்பூட்டுகிறது.

ஒரு வித்தியாசம்; இங்கே ஈஸ்வரி பாகத்தில் கையிலே தேவலோகத்து நீலோற்பல மலர் இருக்கிறதல்லவா? அதைக் கிளி கொத்தியவாறு காண்கிறது கங்கைகொண்ட சோழபுரத்திலே.

இங்கே சூலம் ஏந்திய கை அங்கே மழு ஏந்துகிறது. இதுவும் ஒரு வித்தியாசம். பெண்ணுக்கு உகந்த இடையழகும் மென்மையான கையும் ஒருபுறம் காண்கிறோம். ஈஸ்வரனுக்கு உரிய பாகத்தில் அகன்ற மார்பும் தோளும் காணப்படுகின்றன.

மறைந்து நிற்கும் அழகு



பிட்சாடனருடன் கோயிலின் தோற்றத்தையும் நாம் ஏற்கெனவே பார்த்தோம். அந்தப் படத்திலே, இடது பக்கத்தில் படிக்கட்டுகளுடன் மண்டபத்தின் ஆரம்பமும் காட்டி இருக்கிறது.

அதே மண்டபத்தைத் தொடர்ந்து மேற்கு நோக்கிக் கொஞ்ச தூரம் போய்ப் பாருங்கள். உயரே (எதிர்ப்பக்கத்தில்) உள்ள ஜன்னலைப் பாருங்கள்.


பலகணியில் அழகு

அந்த ஜன்னல் ஒன்றில் பூங்கொடி களுடன்கூடிய வேலைப்பாடுகளைப் பார்க்கிறீர்கள். உள்ளே, கொடிகளின் மத்தியில் இருக்கும் காட்சிகளையும் பாருங்கள். காதற்கடவுளான மன்மதனும் ரதிதேவியும் சிருங்காரக் காட்சிகளுடன் இருப்பது தெரியவரும்.

இருபுறமும் ஆசார வாசலில் மண்டியிட்ட யானை மேல் வீரர்கள் உட்கார்ந்துகொண்டு காவல் செய்கிறார்கள்.

இந்த ஜன்னல் - உருவத்தின் அழகை ஊன்றி நோக்குங்கள். இளங்காதலர்கள் என்ற உண்மைக்கேற்ற உருவ அழகையும் ஊன்றி நோக்குங்கள்.

செடியின் கீழ்ப்பாகம் வெகு நேர்த்தியாக இருக்கிறதல்லவா?



சிவாலயத்தில் ஸ்ரீநிவாஸன்

இருபுறமும் சேடிகள் வெண்சாமரம் வீச, அபயவரத ஹஸ்தத்துடன் பத்ம பீடத்தில் நின்று காட்சியளிக்கிறார் ஸ்ரீநிவாஸப் பெருமாள். ஸ்ரீ அல்லது லட்சுமியை எப்போதும் இதயகமலத்தில் வைத்துக்கொண்டு இருப்பதால் 'ஸ்ரீநிவாஸன்' என்று பெயர். வலது பக்கத்தில் ஸ்ரீவத்ஸம் உள்ள இடம் சிற்பத்தில் காண்பிக்கப்பட்டிருக்கிறது.

இச்சிற்பத்திலுள்ள சூழ்நிலையைப் பார்த்தவுடன், நாம் ஏற்கெனவே பார்த்த மகிஷாசுரமர்த்தினியின் ஞாபகம் வருகிறது. முந்தையப் பக்கத்துக்கு அடுத்த பக்கத்தின் படத்தில் தெரியும் அவ்வளவு வேலைப்பாடுகள் தெரியாமல் கல்லினால் மூடியிருக்கிறார்கள். வெகு சிரமப்பட்டுக் கவனித்ததால்தான் இவ்வுருவங்கள் இவ்வளவு தெளிவாகப் படத்தில் காண்கின்றன.

அழகுக்குப் பேர்போனது தஞ்சைப் பெரிய கோயில். இது ஓர் அழகுக் களஞ்சியம்; அழகுச் சுரங்கம் என்றாலும் தகும். இந்த நிறைந்த அழகில், மறைந்து நிற்கும் அழகை - அதாவது, எத்தனையோ தடவை பெரிய கோயிலைப் பார்த்துக் கலை அழகுகளை அனுபவித்தவர்களும்கூடத் தெளிவாக அறிந்து கொண்டிராத அழகுகளை இந்த அத்தியாயம் சுட்டிக்காட்டுகிறது.

இந்தக் கலை அழகுகள் எல்லாம் இந்திய அன்னையின் அழகுகளே! இந்தச் சுதந்திர யுகத்திலே நமது கலையுலகின் மறுமலர்ச்சியை வளம் பெறவும் மணம் பெறவும் செய்வதற்கு இவற்றையெல்லாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

அற்புதக் கூத்து

ஆடுகிறான் சுத்த வெளியிலே; ஆட்டி வைக்கிறான் உலகங்களை, உயிர்களை எல்லாம் தன் அருள் வெளியிலே; அருள் வழியிலே. ஆனால் அருளும் இல்லை, ஆட்டமுமில்லை என்று கூறுவோரும் உண்டு.

ஆடவல்லான்

அந்தரத்தில் ஆடுகிறானா? - பேஷ்! அது எப்படியோ? நமக்காகவா, நம்மைப் பார்த்தா ஆடுகிறான்? நாம்தான் அவனைப் பார்க்கிறோமா? இப்படியெல்லாம் வாதாடுவோர் உண்டு.

இவர்கள் உணவுச் சுவைபோல் நம் கலைச் சுவையும் உணர்ந்து அனுபவிப்பவராயின், தஞ்சைப் பெரிய கோயிலில் ஈசானியத் திக்கில் உள்ள நடராஜப் பெருமானைத் தரிசிக்க வேண்டும்.

'நாங்கள் தரிசிப்போமா? நடராஜ தரிசனத்தில் நம்பிக்கை இல்லாதவர்கள் அல்லவா!' என்கிறார்களா? போய்ப் பாருங்களையா, - தத்துவத்தை அல்ல, கலையைத்தான் பார்த்து வரலாமே.


உயரம் 4 அடி, உத்ஸவ விக்கிரகம் நடராஜாவின் உண்மைத் தோற்றம் உற்றுப் பாருங்கள் - உங்களைப் பார்த்து ஆடுகிறாரா என்ன? உங்களை லட்சியம் செய்யவேயில்லையே!

நடனத்தில் அல்லவா ஈடுபட்டு இருக்கிறார்? அப்படி ஈடுபட்டு இருக்கும்போது மிகவும் சிரமப்பட்டு உங்களை நேராகப் பார்த்துக்கொண்டு இருக்கவில்லை இந்த நடராஜ மூர்த்தி.

இதுதான் சரி, நடனமாடும்போது நேரான பார்வை இல்லாமல் இருப்பது.

நடன பாவத்தில் அலட்சியமாகப் பக்கவாட்டில் பார்த்துக்கொண்டு இருக்கும் அழகை இங்கே காண்கிறோம். ஆடவல்லார் இவரே.

இப்படி நடனமாடும்போது கையில் இருக்கும் அக்னிதான் நேராக எரிந்து கொண்டிருக்க முடியுமா? சரியாக நாட்டியம் ஆடும்போது



ஏற்படும் காற்றின் அசைவுக்கு இசைவாக அல்லவா எரிகிறது! காற்றில் பறக்கும் ஜடை அலங்காரத்தைப் பாருங்கள். இத்தகைய ஆட்டத்துக்குப் பொருத்தமாகக் கையிலுள்ள நெருப்பும் ஆட வேண்டாமா?

ஆதி பரனாட
அங்கைக் கனலாட
ஓதும் சடையாட
உன்மத்தம் உற்றாட....

என்றெல்லாம் பரமஞானிகள் கண்டு காட்டும் திருக்கூத்து அல்லவா?

முகபாவம் பாருங்கள். எத்தகைய நுட்ப வேலைப்பாடுகள்!



தனைஒன்றும் உணர்ந்திலாதான்!

என்ற நிலையில் உலகம் உய்ய ஆடும் 'உன்மத்த' நடனத்துக்கு இசைவான, இயற்கையான, திருமுகம் அல்லவா?

பின் அலங்காரமும் அழகாய் இருக்கிறது. இந்த அமைப்பை மற்றப் படத்தில் காணலாம்.

இந்தச் சிற்பம் இன்றைக்கு பல ஆண்டுகளுக்கு முன் பின்னமுற்றுப் பிறகு சேர்க்கப்பட்டு இருக்கிறது. கீழே மிதித்திருக்கும் காலில் பாம்பு சுற்றியுள்ள இடத்தில் பின்னமுற்று, அதற்கு நேராகத் 'திருவாசி'களிலும் பின்னமடைந்து சரி செய்யப்பட்டிருக்கிறது.

பெரிய கோயிலைக் கட்டி நிறுத்திய ராஜராஜ சோழனுக்கு, இந்த ஆடவல்லானிடம் அபார பக்தி. இந்த நடராஜப் பெருமானின் சிறப்புப் பெயரை ராஜராஜன் தன் காலத்திலே மரக்கால் நிறைகல் துலாக்கோல்களுக்கும் வழங்கி வந்தான்.

அக்காலம் தொட்டு 'ஆடவல்லான்' உலகங்களுக்கெல்லாம், உயிர்களுக்கு எல்லாம் அளந்து படிபோடும், நீதியையும் கர்ம பலன்களையும் அளந்து வழங்கும் எம்பெருமானின் திருப்பெயர் - அளக்கும் மரக்கால் முதலிய கருவிகளுக்கும் வழங்கி வந்த பழைய பெயராயிற்று.

விதியின் விளைவுகளை அளந்து வழங்கும் ஆடவல்லான் அருளை, அள்ளி வழங்கும் அதிசயம்தான் என்னென்பது? இதையும் கலை குறிப்பிடுகிறது.

சிவகாமி

இப்படியெல்லாம் நடராஜரைப் பார்ப்பதும் நடராஜ தரிசனம்தான். இந்த ஆடவல்லானைச் சிவகாமி அம்மன் முன்பு நேராக நின்றுகொண்டும் தரிசிக்கலாம்.





அம்மனையும் நடராஜரின் நேர்முகத்தையும் ஒரே இடத்தில் இருந்தே தரிசிக்கலாம். "என்றும் புது விருந்தாக இருக்கிறது, அம்மைக்குக்கூட அண்ணலின் நடனம்" என்கிறார் குமரகுருபர ஸ்வாமிகள். இப்படியெல்லாம் *'அதிசயம் விளைக்கும் நின் அற்புதக் கூத்தே!'* என்று பரவசமாகிறார் குமரகுருபரர்.

இந்த விக்கிரகங்களில் விரல்களின் நெளிவு முதலியன எவ்வளவு இயற்கையாக இருக்கின்றன! அற்புதக் கூத்தனும் அம்மையும் சிற்ப உலகில் இயற்கை அதிசயமாகவும் தெய்வீக அதிசயமாகவும் ஒருங்கே காட்சி அளிக்கின்றனர்.

செல்வத்துள் செல்வம்

'செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம்' என்றார் திருவள்ளுவர். கண்கவர் கலையும், கவி, இசை முதலான செவிச்செல்வங்கள் போல் சிறந்த செல்வம்தான். இக்கலைச் சிறப்பிலே தஞ்சைப் பெரிய கோயிலைச் சேர்ந்த சண்முகர் கோயில், செல்வத்துள் செல்வமாய்ப் போற்றத்தக்கது.

சிற்ப வளர்ச்சி


இக்கோயிலின் நுட்ப வேலைப்பாடுகள் உள்ள தோற்றத்தை எதிரே பாருங்கள். இக்கோயிலையும் ஸ்ரீ பிரகதீஸ்வரரின் மூலஸ்தான கோபுரத்தையும் உற்றுக் கவனித்தால், ஒவ்வோர் அம்சத்திலும் இக்கோயிலின் சிற்ப வேலைகள் அபிவிருத்தி அடைந்திருப்பதாகத் தெரிந்துகொள்ளலாம்.


பெரிய கோயிலிலேயே மிகவும் நுட்பமான சிற்ப வேலைகளுக்கும், சிற்பங்களிலுள்ள பிற்கால அபிவிருத்திகளுக்கும் பேர்போனது இச்சுற்றுக் கோயில். ஆம், இந்தச் சண்முகர் கோயில், பிற்காலத்துச் சிற்பத்திறனும் பக்தித்திறனும்தான்.

11–17ம் நூற்றாண்டுகள் (வளர்ச்சி)

பெரிய கோயில் - சாசனங்களில் சண்முகர் கோயிலைப் பற்றிய பிரஸ்தாபமே கிடையாது. பெரிய கோயில் கட்டப்பெற்றது, கி.பி.11-ம் நூற்றாண்டின் தொடக்கத்திலே. அதற்கு 600 ஆண்டுகளுக்குப் பின் தோன்றியதுதான் சண்முகர் கோயில்.

இக்கோயிலின் சிற்ப நுணுக்கங்களை நுட்பமாய்க் கண்டுகொள்ள வேண்டியது அவசியமாகும். கண்டுகொண்டால், ராஜராஜ சோழன் காலத்துக்குப் பின்பும், அடுத்த நூற்றாண்டில் சோழ மகாராஜ்யம் மகோன்னத நிலைபெற்றுப் பின்பு வீழ்ச்சியுற்று மாய்ந்த பின்பும், தமிழர் சிற்பக் கலைத்திறன் பல நூற்றாண்டுகளாக அபிவிருத்தி அடைந்திருக்கிறது என்ற சரித்திர உண்மையையும் கண்டுகொள்ளலாம்.





17-வது நூற்றாண்டில் - அதாவது கும்பினியார் சென்னையில் அடி வைத்த அந்தக் காலத்தையொட்டி ஏற்பட்டது பெரிய கோயிலுக்குள் இச்சிறிய கோயில். வியாபார ஆட்சியும் நாகரிகமும் வேரூன்றும் வரை நமது கலைகள், தாம்போன போக்கிலே அபிவிருத்தி அடைந்து வந்தன என்பதில் ஐயமில்லை.

பிற்கால இருள்

மேல் நாகரிகம் மேலான நாகரிகம் என்று சலாமிடப் பெற்று மேலோங்கிய காலத்திலே நாம் நம் பண்டைக் கலை அழகையும் பிறர் கண்டு ரசிக்க முடியாதபடி பாழடைய, இருளடைய மூடி முடங்கவைத்துவிட்டோம்.

ஒரு சான்று, குதிரைச் சிற்பத்துக்கு மேல் இருபுறமும் மண்டபத்தைத் தாங்கியவாறு இரு தூண்கள் இருக்கின்றனவே, இவற்றின் நடுவே தெரியும் தோற்றத்தைப் பாருங்கள். இதைப் படத்தில்தான் பார்த்து ரசிக்க முடியும். அங்கு ஒரு சுவர் எடுத்து, இந்த அழகைப் பிறர் கண்ணுற்று ரசிக்க முடியாதபடி செய்திருக்கிறார்கள், (இம்மாதிரி ஆலயச் சிற்பங்களையும் மண்டப அழகையும் அனுபவிக்க முடியாதபடி வேறு ஊர்களிலும் செய்திருக்கிறார்கள்.)

படத்தில்தான் எழுதிப் பார்க்க முடியுமே தவிர, எந்தக் 'கேமிரா'வின் எல்லைக்கும் இந்த அமைப்பு எடுபடாதபடி இருக்கிறது. முன்பு நாம் பார்த்த துவாரபாலகர்கள் (தஞ்சைப் படங்கள்) இம்மண்டபத்தில்தான் காணப்படுகிறார்கள்.

யானை ஒரு மனிதனைத் துதிக்கையால் அலட்சியமாகத் தூக்கிக்கொண்டு ஓடும் காட்சியையும் இங்கே படத்தில் காணலாம். அவனுடைய ஒரு கை தொங்குவதையும், நிலத்தில் கால்கள் உராய்ந்துபோகும் விதத்தையும் பார்த்தால், 'அது உயிரற்ற உடல்' எனத் தெரிந்துவிடுகிறது.

இனி வரும் அத்தியாயத்தில், இக்கோயிலில் குடிகொண்டிருக்கும் சண்முகப் பெருமானின் திவ்ய சொரூபத்தைத் தரிசிப்போம். இப்போது, *'அப்பன் இரந்துண்ணி'* என்றாரே புலவர், அந்த அப்பனைத் தரிசித்துக் கொஞ்சம் அழகுப் பிச்சையும் கலைப் பிச்சையும் பெறுவோம்.

பிட்சாடன மூர்த்தி

பிட்சாடன மூர்த்தி சிற்பம், இங்குள்ள 'நிர்மால்ய அறை' என்று ஒரு காலத்தில் சொல்லப்பட்ட அறையில் பூட்டி வைக்கப்பட்டிருக்கிறது. எனவே, கோயிலைப் பார்க்க வரும் எவரும், இச்சிற்பத்தைப் பார்த்திருக்க முடியாது.

பிரம்ம கபாலம் ஏந்திய கையில் வளைந்து தொங்குகிறது ஒரு பாம்பு. துளிகூடப் பின்னமாகாத சிற்பம் இது. ஜடை அலங்காரத்தையும் பிட்சாடனரின் அந்த மோகனப் புன்னகையையும் இச்சிற்பத்தில்தான் பரிபூர்ணமாய்ப் பார்க்கலாம்.

'பிச்சையெடுத் துண்ணப் புறப்பட்டும்... ராஜாங்கம் ஏன்?' என்று பாடினார் பிட்சாடன மூர்த்தியின் உத்ஸவம் கண்ட புலவர். இங்கே சிற்பத்திலே ராஜாங்க அழகு பிட்சாடனருக்கு!

சிற்றுளி தந்த தெய்வ அழகு!

கோயிலுக்குள் நுழைந்து உள்ளே செல்லும் இரண்டாவது கோபுரத்திலே வெளிப் பாகத்தில் 1½ அடி உயரத்தில் எத்தகைய அழகுப் பெருஞ்செல்வம்!

அம்மையப்பன் என்ற அருட்செல்வம்

'மூர்த்தி சிறிது, கீர்த்தி பெரிது' என்பதுபோல், இச்சிறிய சிற்பத்திலே 4 அடி உயரத்தில் செய்துகாட்டப் பெறும் சிற்பங்களின் வேலைப்பாடுகளைச் செய்துகாட்டி இருக்கிறது.

பார்வதி சமேதராய்க் காட்சியளிக்கும் பரமேஸ்வரன்தான். என்ன ஒய்யாரமான காட்சி!

பெண்பால் உகந்தான்
பெரும்பித்தன் காணேடி!

என்று பக்திப் பெரும் பித்தர்கள் போற்றும் பெருமான் அல்லவா?

ஜடை அலங்காரம்தான் எவ்வளவு அழகாக இருக்கிறது! சர்வலோக அன்பாட்சிக்கும், எல்லாவற்றையும் துறந்து நிற்கும் தியாக சௌந்தரியத்துக்கும் ஒருங்கே அறிகுறியாக உள்ள ஜடா மகுடத்தின் அழகல்லவா?

ஒரு காலை மடித்து உயரத் தூக்கி வைத்துக்கொண்டு அதன்மேல் ஒரு கையை வைத்திருப்பதும், ஒரு கால் கீழே சாய்ந்தவாறு இருப்பதும், இச்சிற்பத்தின் அழகை அதிகப்படுத்துகின்றன.

பக்கத்திலே பூதகணமும் தேவனும் காட்டியிருப்பது, தேவதேவன் தேவியோடு வீற்றிருக்கும் சிறப்பை அதிகரிக்கச் செய்கிறது.

அம்மையப்பனின் அருட் பெருங்கோலம், நுட்பமான சிற்பத்தில் சிற்ப நுட்பங்களுடன் அருமையாக அமைந்துவிட்டது.



முன்பு நாம் பார்த்த ஸ்ரீ சண்முகர் கோயிலின் மூலஸ்தானத்தைத்தான் இங்கே காண்கிறோம். மூல மூர்த்தியாகிய ஆறுமுகப் பெருமானின் திவ்ய சொரூபம் மிகவும் அருமையாக அமைந்திருக்கிறது.

ஆறுமுக உருவம், மயில், திருவாச்சி ஆகியவை ஒரே சிலையில் அமைய பெற்றுள்ளன.

தனக்கு உவமை இல்லாத தெய்வத்தை இக்கோயிலில் 'தனக்கு உவமை' தானே என்று சொல்லும்படி சிற்றுளி கொண்டு சிருஷ்டித்துக்காட்டிய சிற்பியின் கைத்திறனை என்னென்பது?


'சித்ரமயில் வாகனம்' என்கிறார்களே அடியார்கள், அந்த வாகனத்திலே அமர்ந்து அருள் சுரக்கும் ஆறுமுகத் திருக்கோலத்தை, (மூன்று முகம் பின்னே) பன்னிருகைப் பெருமாளை அருகேயுள்ள அம்மையர் இருவருடன் தரிசித்துப் பரவசமாகிறோம், வள்ளியம்மை-தெய்வானை என்ற தேவியருடன்தான்.

'இன்றைய சட்டத்துக்கு இசையாத திருமணமோ?' என்று வசைபொழிவது எளிது. இச்சா சக்தியும் கிரியா சக்தியும் அல்லவா 'ஞானபண்டித சாமி'யான திருமுருகனின் இரு மனைவியர்?

ஏழடி உயரத்திலே மண்ணும் விண்ணும் கடந்த தெய்வ சக்தி குறுகி நின்று, குறுநகை குலவும் திருமுகங்களுடனும் கருணை பொழியும் கண் மலர்களுடனும் தன்னை வெளியிட்டுக்கொள்கிறது!

ஸ்ரீ வள்ளி-தெய்வானை என்ற தேவிமார்களின் முக விலாசமும் அங்க லட்சணங்களும்தான் எவ்வளவு வசீகரமாய்த் தாயன்பு பரிமளிக்குமாறு தோற்றமளிக்கின்றன!

இப்பெருமானுக்கு அர்ப்பணமாக அருணகிரிநாதர் திருப்புகழில் பக்தி பரிமளிக்கும் வாடாத மூன்று கவி மலர்கள். இவற்றில் *'பதிக்கு உயர்ந்த தஞ்சைமா நகர் ராஜகோபுரத்தமர்ந்தவன்'* என்கிறார்; *'அடியவர் வாழத் தஞ்சையில் மேவிய பெருமாளே'* என்றும் போற்றுகிறார்.




காலத்தை வென்ற கலை

ஆறுமுகக் கடவுளின் சந்நிதிக்கு நேராக உள்ள ராஜா மண்டபத்தில் இருக்கிறது இந்தக் கால சம்ஹார மூர்த்தியின் விக்கிரகம்.

கலையிலே காலகாலன்

வெகுகாலமாகத் தொடர்ந்து பூஜிக்கப்பட்டு வந்திருக்க வேண்டும். பின்னம் அடைந்ததால் இப்போது ராஜா மண்டபத்தில் குடி புகுந்திருக்கிறார் காலனை வென்ற கடவுள்.



நல்ல கம்பீரமான விக்கிரகம், இடது காலின் அடியில் காலனை அமுக்கியவாறு காண்கிறது. முன் இரு கைகளை பாருங்கள். பாவத்திலிருந்து, வில், அம்பு முதலியன இருந்திருக்க வேண்டும் எனத் தெரிய வருகிறது.

மற்ற இரு கைகளையும் உற்று நோக்குங்கள். ஒரு கையில் மழு; மற்றக்கையில் மான் இருந்து பின்னமுற்று இருக்க வேண்டும்.

ஜடை அலங்காரத்தைச் சிற்பத்திலேதான் அழகாய்ப் பார்த்திருக்கிறோம் முன்பு. இங்கே விக்கிரகத்திலும் (வார்ப்பு வேலைகளிலும்) ஜடை அலங்காரச் சிறப்பைக் கண்டு பிரமிப்பு அடைகிறோம்.

விக்கிரகத்தின் மூன்று தோற்றங்களையும் பாருங்கள். ஒவ்வொன்றிலும் ஒரு தனி அழகு, ஒரு தனிக் கலைச்சுவை தென்படுகிறது அல்லவா?

கதையும் கலையும்


மெய்யன்பனாகிய சிறுவனுக்காகக் காலனையும் காலால் மிதித்து, காலத்தை வென்று, இளமையை அந்தச் சிறுவனுக்கு அளித்த புராண கதை இவ்வுலகின் நித்திய யௌவன சௌந்தரிய கதைகளில் ஒன்று. இக்கதையை வெளியிடும் சிற்பத்திலும் விக்கிரகத்திலும், நித்திய யௌவன சௌந்தரிய கலைச்சுவை சொட்டக் காண்கிறோம்.

கதை கலையாவதும், கலை கதையாவதும் பொருத்தமானதே. ஏன், கதையும் கலையின் ஒரு கிளைதானே?

அவயவ அழகும் சமுதாய அழகும்!

கோயிலின் உறுப்புகளான சிற்ப அழகுகளையும் விக்கிரக அழகுகளையும் பார்த்துப் பார்த்து ரசிப்பதுபோல், கோயிலின் மொத்த அழகையும் அனுபவிக்க வேண்டியது அவசியமாகும்.

கோயிலுக்குள் புகவிடும் முதலாவது கோபுரத்தையும் அதற்கு அடுத்த கோபுரத்தையும் மூலஸ்தான கோபுரத்தையும் இந்த ஒரே படம் காண்பித்துவிடுகிறது.



நாட்டிலே கோட்டைகள் கட்டிப் பாதுகாத்ததுபோல், கோயிலைச் சுற்றியும் கோட்டையும் அகழியும் அமைத்திருக்கிறார்கள். இப்போது அகழியில் தண்ணீர் இல்லை.

இதுவரை நாம் கோயிலைத் தனித் தனியாக பார்த்து அனுபவித்ததுபோல் கோட்டை நடுவே காட்சியளிக்கும் கோயிலைப் பார்க்கும்போதும் ஒரு தனியழகு; ஒரு தனிச் சோபை புலனாகத்தான் செய்கிறது.

'தஞ்சைப் பெரிய கோயில், இந்திய தேசத்திலேயே மகோன்னதமான கோயில்' என்று பல்வேறு ஆராய்ச்சி நூல்கள் கூறுகிறதல்லவா? இது உண்மை தான் என்று மௌனப் பிரசங்கம் செய்வதுபோலத் தோன்றுகிறது கோட்டைக்கு நடுவே இருக்கும் கோயில்.

'ஆம்! காலத்தை வென்ற ஒப்பற்ற கலைத்திறனுக்கு நானே சாட்சி சொல்கிறேன்!' என்பதுபோல் நிமிர்ந்து விண்ணளாவி நிற்கிறது தஞ்சைக் கோயிலின் மகோன்னத கோபுரம்.

தென்னிந்தியாவின் தோட்டமென்று போற்றப்படுவது வளமார்ந்த தஞ்சை ஜில்லா. வளம் நிறைந்த தஞ்சை நகரில் கலை வளம் நிரம்பியது தஞ்சைக் கோயில்.

சிவன் கோயில் மட்டுமா? கலையின் பெரிய கோயிலும் இது.

கி.பி.1009 முதல் இன்று வரை 'காலத்தை வென்ற கலை'க்குச் சான்றாக நிற்கும் இந்த உலக அதிசயம் இப்படியே எதிர்காலத்திலும் நீள நின்று பல்வேறு புதுமைப் பெருங்கலைகளையும் கண்டு களிக்கும் எனக் கருதலாம்.

திராவிட சம்பத்து

மந்த புத்தியின் மகத்தான சொரூபம் 'மகிஷாசுரன்' என்கிறது புராணம். தஞ்சை ஆறுமுகப் பெருமான் கோயிலின் வடக்குப் பிராகாரத்தில் வடக்கு நோக்கியவாறு அறியாமையை மிதிப்பதற்கு அறிகுறியாக மகிஷத்தின் தலைமேல் நின்றுகொண்டு (எதிர்ப் பக்கத்தில்) காட்சி தருகிறாள் அல்லவா மகிஷாசுரமர்த்தினி?

அறியாமையின் இத்தகைய வீழ்ச்சி நிலையில் ஞான சொரூபமாகவும் அருள் உருவாகவும் உள்ள அன்னை பராசக்தி, தன்னை அடைந்த பக்தர்களுக்கு அபயம் வழங்குகிறாள்.

தூணின் கீழே மகிஷாசுரனுடன் சண்டை போடும் காட்சியும் காணப் படுகிறது. இங்கே அசுரன் மனித வடிவில் இருக்கிறான்.


சைவ–வைஷ்ணவ சமரச தேவி

மேலே தேவியின் வலது பக்கத்தில் சிறிய உருவில் கால சம்ஹாரம் நடக்கிறது. இடது பக்கத்தில் ஈஸ்வரன் அபய ஹஸ்தத்துடன் திகழ்கிறார்.

சக்தியையும் சிவனையும் தனித் தனியாகப் பார்க்கக்கூடாது என்ற உண்மையை விளக்கும் சிற்பங்களைக் கூர்ந்து நோக்குங்கள்.

சக்திக்கு விஷ்ணு அம்சமும் உண்டு என்பதற்குச் சங்கு-சக்கரங்கள் சாட்சி.

மகிஷாசுரமர்த்தினியின் கதை ஒரு பழைய திராவிடக் கதையாக இருந்து புராணம் புகுந்திருக்கும் என ஊகிப்பது தவறாகாது.



மீண்டும் கோபுர தரிசனம்

ஒரு நூலுக்கு முன்னுரை அல்லது பாயிரம்போல், ஒரு மாளிகைக்குச் சித்திரம்போல், மாநகர்க்குக் கோபுரம் என்கிறார்கள் அல்லவா? ஆம், ஒரு நகரக் கோயிலின் கோபுரத்தைத்தான் அப்படிச் சொல்கிறார்கள். தஞ்சை பெரிய கோயிலின் கோபுரம், தஞ்சை மாநகரை அணி செய்யும் ஒரு கலைப் பெருஞ்சித்திரம்; தஞ்சைப் பெருங் கதைக்கும் ஒரு பெரிய முன்னுரை.


முதல் வெளிக்கோபுரத்தில் இருந்து மூலஸ்தான கோபுரத்தைப் பார்த்தோம். இப்போது மூலஸ்தான கோபுரத்தில் இருந்து இரு வெளிக் கோபுரங்களையும் பார்ப்போம்.

கோயில் மதில் சுவரின் பின்னே இருந்து பார்க்கும்போது, இந்த மாதிரி நமக்குக் காட்சி கிடைக்கிறது. ஒரு மேட்டிலிருந்து இக்கோயிலின் உள்தோற்றம் தெரிகிறது.

எப்பேர்ப்பட்ட கல் நெஞ்சுகளையும் இந்தக் கோபுரம் ஆகர்ஷித்து ஆட்கொள்ளவல்லது. அவ்வளவு கம்பீரமான தோற்றம் ஒரு மகாவீர புருஷனின் கம்பீர்யம் ததும்பும் ரூப சம்பத்தைப்போல் இருக்கிறது. பாருங்கள், பார்த்துப் பார்த்துப் பரவசமாகுங்கள்.

படத்திலேயே இந்த ஆகர்ஷண சக்தி. நேரில் கண்டிருப்பவர்கள் மீண்டும் படத்தின் மூலமாகக் கோபுர தரிசனம் செய்து கொள்ளலாம்.

இதில் மூடநம்பிக்கை இல்லை: கோபுர தரிசனம் செய்துகொண்டு பாவ விமோசனமும் பெறலாம். அத்தகைய, கலி தீர்க்கும் தெய்வ கம்பீர்ய செளந்தரியம் குதிகொண்டு உங்களை எதிர்நோக்குகிறது, இக்கோபுரங்களில் இருந்து. அதுவும் நோக்குகிறது, நீயும் நோக்குகிறாய்!



- 'அண்ணலும் நோக்கினான், அவளும் நோக்கினாள்' என்ற இதிகாசம்தான்.

எத்தனையோ கோபுரங்கள் மிடுக்காய், அடுக்காய், நிமிர்ந்து இறுமாந்து நிற்கத்தான் செய்கின்றன, தமிழகமெங்கும் பிரமாண்டமாய்க் கொலுவைத்த மாதிரி. ஆனால், தஞ்சைக் கோபுரம்போல் 'காதலித்த உருவாகி'க் கொஞ்சுகிற அழகு அபூர்வம்தான்.

'பார்த்தால் பசி போகும், கண்டால் கலி தீரும்' என்று காதலிக்கக்கூடிய அழகு - ரகத்தில் சேர்ந்திருப்பது தஞ்சைக் கோபுரம். கம்பன் கவிதை போன்ற திராவிட சம்பத்து.

படத்தின் இடது பக்கத்தில் மரங்களுக்கு மேலே சிறிதாய்த் தெரிகிற கோபுரம் அரண்மனைக் கோபுரம். அரண்மனையில் உள்ள மாடமாளிகை, கூடகோபுரம் என்கிறார்களே அந்தக் கோபுரம்.

தஞ்சை நாயக்க மன்னர்களும் மகாராஷ்டிர மன்னர்களும் வாழ்ந்த அரண்மனைதான். பெரிய கோயிலைக் கட்டி நிறுத்திய சோழ சக்கரவர்த்தியின் அரண்மனையோ, அந்தப் பரம்பரையினரின் அரண்மனையோ அல்ல.

அதிகார ஆடம்பர வைபவங்களுக்கும் சுகபோக ராஜ வாழ்க்கைக்கும் உரிய சின்னங்கள் எல்லாம் மறைந்தும், மறையாத ராஜராஜ சோழனின் தெய்விக சௌந்தரிய பக்தி உள்ளம் அப்படியே கோயிலாகவும் கோபுரமாகவும் நிமிர்ந்து நிலைபெற்றுக் குலாவுகிறது அல்லவா?

இந்த நிலையாத உலகத்திலே 'நிலையாமை' ஒன்றே நிலைபெற்று இருக்கிறது என்பர்.

நிலையாமை சால
நிலைபெற்ற தன்றே!

இக்கோயிலும் கோபுரமும், இன்னும் எத்தனையோ நூற்றாண்டுகள் சுதந்திர இந்தியாவின் சௌந்தரிய சிகரங்களில் ஒன்றாகவும், பக்திப் பெருங்குறிகளில் ஒன்றாகவும் நீடித்து நிற்கும் என்று நம்பலாம்.

* * *

'**தி**ராவிட சம்பத்து' என்றால், அப்படி ஓர் இனம் இருந்ததாகவோ, இருக்கிறதாகவோ, நாம் ஒப்புக்கொள்ளவில்லை. இனவெறிக் கொள்கை, ஒரு 'மித்' (Myth), அதாவது புராணக் கற்பனை என்கிறார்கள். இன்றைய விஞ்ஞான அறிஞர்களும் ஆராய்ச்சியாளர்களும் பொருள் பொதிந்த புராணமோ, ரஸமான கற்பனையோ அல்ல. பூசல், போராட்டங்களுக்கு வித்தான ஒரு புதுமைப் புராணம்!

உண்மையில், 'திராவிட சம்பத்து' என்றால், திராவிட மொழி வழங்கும் பிரதேசத்திலே போற்றிப் பாதுகாக்கத் தக்க பெருஞ்செல்வம் என்றுதான் பொருள்.

காதலும் பக்திக் காதலும்

'கற்பகத்தின் பூங்கொம்போ? காமன் தன் பெருவாழ்வோ..? அற்புதமோ? சிவனருளோ?' என்றெல்லாம் அதிசயித்ததாம் அந்த விக்கிரகம். அந்த அற்புமோ, 'முருகனோ? மன்மதனோ?' என்றெல்லாம் அதிசயித்ததாம்.

'என்ன, ஏதோ காதல் கதையா? விக்கிரகக் காதலா? எங்கே நடந்தது? எப்போது?' என்றெல்லாம் கேட்கிறீர்களா?

பெரிய புராணம் வருணிக்கும் சுந்தரமூர்த்தி நாயனாரின் தூய காதல் கதைதான். காதலி, பிரசித்தி பெற்ற பரவை நாச்சியார். தஞ்சைப் பெரிய கோயிலில் இரண்டு விக்கிரகங்கள் இன்றும் இக்கதையைச் சொல்கின்றன.



சுந்தர தம்பதிகள்

பெரிய புராணத்தின் முகப்பிலே இந்தச் சுந்தரர் - பரவையார் காதலைக் கவிதையில் காண்கிறோம். தஞ்சைப் பெரிய கோயிலில் விக்கிரகங்களிலும் இதே காதலரைத் தரிசிக்கிறோம்.

பெரிய கோயிலிலுள்ள கவர்ச்சிமிக்க விக்கிரகங்களில் சுந்தரர் - பரவையார் உருவங்கள் முக்கியமானவை.

'கற்பகத்தின் பூங்கொம்போ?'

என்று புகழ்ந்து,

'காமன் தன் பெருவாழ்வோ?'

என்று மயங்கி,

'புண்ணியத்தின் புண்ணியமோ?'

என்று பரவசமாகி,

'அற்புதமோ? சிவனருளோ? அறியேன்'

என்று அதிசயக் கடலாடி நின்ற பெரிய புராணச் சுந்தரரையும் அந்தச் சுந்தரியையும், பெரிய கோயில் - விக்கிரகங்களிலும் தரிசிப்பது அவசியமாகும். பக்திக் காதலோடு மட்டுமல்ல; கலைக் காதலோடும்தான்.


மற்றக் கோயில்களிலுள்ள சுந்தர மூர்த்திபோல் கிரீடம் இல்லை இங்கே. ஆனால், கொண்டை அதிசய அழகு வாய்ந்ததாய்க் காண்கிறது.



சுந்தரரின் நிலை எப்படி இருக்கிறது பாருங்கள். இடது கையில் சாட்டையும் வலது கையில் தண்டமும் தாங்கிய பாவம். பக்தி பரவசத்திலே பாடி மெய்ம்மறந்து ஆடப்போவது போன்ற நிலை. பழைய விக்கிரகம் என்று பார்த்தவுடன் தெரிகிறது. பரவையாருக்குக் கொண்டை அழகுடன் பெண்கள் இயல்பாக நிற்கும் தோரணையும் நன்றாய்க் காண்பிக்கப்பட்டு இருக்கிறது. கீழே ஐந்து படங்களில் பெண்மை பூர்ணமாகத் தோற்றம் அளிக்கிறது.

இந்த விக்கிரகங்கள், கோயிலில் உத்ஸவ விக்கிரகங்கள் வைத்திருக்கும் இடத்தில் இருக்கின்றன. 'சுந்தர'ரின் உயரம் 2½ அடி. 'பரவை நாச்சியார்' உயரம் 2¼ அடி.

இந்த விக்கிரகங்களை எந்த எந்தத் திக்கில் இருந்து பார்த்தாலும் புதிய புதிய அழகுகள் திகழ்கின்றன. பலவிதமான தோற்றங்களில் வரைந்து காட்டியிருக்கிறது.



நாலு கலைச் செல்வம்

ஜ்வரமா? அம்மை போன்ற வெப்பு நோயா? அப்படியானால், போங்கள், தஞ்சைப் பெரிய கோயிலில் ஸ்ரீ பிரகதீஸ்வரரைச் சுற்றியுள்ள உட் பிராகாரத்திலே வண்ணப்படங்கள் இருக்கும் இடத்துக்கு. 'என்ன! ஒரு பெரிய மருத்துவமனைக்குப் போகச் சொல்லாமல், கோயில் பிராகாரத்துக்கா போக வேணும்?' என்று கேட்கிறீர்களா?

நம்பினால் நலம் பெறலாம்!

போங்கள் போங்கள், அந்த வண்ணப் படங்கள் இருக்கும் இடத்திலே தெற்குப் பக்கமாக. 'அந்தப் பக்கத்திலே ஜ்வர வைத்தியர் இருக்கிறாரா, என்ன?' என்று கேட்கிறீர்களோ?

ஆம், இருக்கிறார்; டாக்டர் ஜ்வர ஹரேஸ்வரர்! அந்தத் தெற்குப் பக்கத்தில் தெற்கு நோக்கியவாறு இருக்கிறார், ஒன்பது அடி உயரத்திலே!

ஆம், ஆம்; ஜடாமுடி முதல் பாதம் வரை ஒன்பது அடி. பிரமாண்டமான ஆக்ருதி - ஒரே கல்லில். காதணிகள் இரு ஸர்ப்பங்கள். வைத்தியநாதரான சிவபெருமான்தான் இப்படி ஜ்வரஹரேஸ்வரராய்க் காட்சி வழங்குகிறார். தங்களின் வெப்பு நோய்கள் தீர, இவருக்குச் சந்தனக் குழம்பு சாத்தி வழிபடுகிறார்கள் சிவபக்தர்கள்.

'சரி, வெப்பு நோய்களை உள்ளபடியே குணப்படுத்துகிறாரா ஜ்வரஹரேஸ்வரர்?' சரியான கேள்விதான். விடையும் சரியாகக் கொடுத்துவிடலாம் - எல்லாம் உம்முடைய நம்பிக்கையைப் பொறுத்திருக்கிறது என்பதாக. 'நம்பினார் கெடுவதில்லை, நான்கு மறைத் தீர்ப்பு' என்கிறாரே பாரதியார்.

கோயிலைப் பார்க்க வருவோரும், தினமும் தரிசனத்துக்கு வருவோர்கூட, ஜ்வரஹரேஸ் வரரைப் பார்த்திருக்க முடியாது. அவ்வளவு பந்தோபஸ்தான இடத்தில் இருக்கிறார். இருந்தும் மூக்கு பின்னமுற்று இருக்கிறது.




அருள்புரிவாள் சிவசக்தி

அம்மன் கோயிலுக்கு நேர் எதிரே, பிராகாரத்திலுள்ள நந்தியின் முன்பக்கம் கிழ்த்திசை நோக்கியவாறு இருக்கும் 2¾ அடி உயரமுள்ள சிற்பத்தை நோக்குங்கள். இடைவரையில்தான் தெரிகிறது.

வராக முகம் உள்ள தேவி. 'வாராகி' என்று பெயர். கோரப்பற்கள் இருபுறமும் இயற்கையாக அமைந்திருக்கின்றன. கழுத்தில் மணிமாலை.

அபயவரத ஹஸ்தங்களுடன் அருள் புரிவதாக அருள் தோற்றம் அளிக்கிறாள்.





இவ்வளவு பெரிய உருவில் இதுவரை வராக தேவியைப் பார்த்ததில்லை. நினைத்த காரியம் ஸித்திக்குமாம். பக்தியின் நம்பிக்கை இது.

சிற்ப பக்தர்களுக்கும் இத்தோற்றத்திலே சக்தி புலனாகும். சிவசக்தியின் பேதங்களில் ஒன்றாகிய வாராகி, மகாவிஷ்ணுவின் வராக அவதாரத்திலே தொழிலாற்றிய மகாசக்தி - சிற்பத்தில் எப்படி அமைந்திருக்கிறது, பாருங்கள்!

சிவசக்தியின் மூர்த்த பேதங்களை ஏழு மாதர்களாய்ப் புராணம் புனைந்து காட்டுகிறது. வாராகி, பிராம்மி, நாராயணி அல்லது வைஷ்ணவி, மகேஸ்வரி, கௌமாரி, ருத்ராணி, இந்திராணி என்று சப்த மாதர்கள்.

அதிசய விநாயகர்

பிரகதீஸ்வரரின் வலது பக்கத்திலே மகாமண்டபத்தில் காணப்படுகிறார் இந்த அதிசய விநாயகர். இங்கே இரண்டு பிள்ளையார்கள் உண்டு.

தூக்கிய கால், மூஷிக வாகனத்தின் மேல் வைத்திருக்கிறார். உயரம் 2 அடி.

சரி, கீழே காண்பிக்கும் அந்தக் கையின் செய்தி என்ன? 'கீழே புதையல் இருக்கிறது' என்று காட்டுவதாக ஒரு வகை நம்பிக்கை. 'கோயிலுக்கே மிகவும் முக்கியமான சக்திகள் இங்கேதான் இருக்கின்றன' என்று காட்டுவதாக வேறொரு வகை நம்பிக்கை.

அரசர் யார்?

தியாகராஜருக்கு எதிரே கை கூப்பி நிற்கும் விக்கிரகத்தைப் பாருங்கள். பீடத்தின் கீழே 'பெரிய கோயில் ராஜராஜேந்திர சோழ ராஜா' என்று பொறிக்கப்பட்டுள்ளது.

சரபோஜி ராஜா காலத்தில் செய்த விக்கிரகம் என்று சொல்வதுண்டு. விக்கிரகங்களை ஒப்பிட்டுப் பார்த்தால், பழைய விக்கிரகங்கள் இவை என்றும், சமீபகால விக்கிரகங்கள் இவை என்றும் கண்டுகொள்ள முடியும்.

சிவ அம்சமாகிய ஜ்வரஹரேஸ்வரர், சிவசக்தியின் அம்சமான வாராகி, சிவ குமாரராகிய அதிசய விநாயகர் ஆகிய மூன்று தெய்வத் திருக்கோலங்களுடன், பக்த அரசரின் விக்கிரகத்தையும் பார்ப்பதே ஒரு நல்ல கலை அனுபவம். பக்தர்களுக்கு நல்ல பக்தி அனுபவமும் தான்.

பக்தி என்றால், முக்தி மார்க்கம்தானே, விண்ணைப் பார்த்துக்கொண்டே மண்ணில் நடந்து இடர்ப்படுவதுதானே என்றெல்லாம் பழிப்பது பேதைமை என்பதற்கு, ஜ்வரஹரேஸ்வரரும் வராக தேவியும் சாட்சிகள்.

ஜ்வரஹரேஸ்வரர் ஜ்வரம் முதலான வெப்பு நோய்களைப் போக்குகிறாராம். வாராகியோ, நினைத்த காரியத்தை ஸித்தி பெறச் செய்கிறாளாம். இதனால் பக்தி, வாழ்க்கைக்கும் பெருந்துணை என்று புலனாகிறது அல்லவா?



இரண்டடியில் என்ன உயரம்!

எத்தனை தரம் பாடியோ, படிக்க வேண்டிய ரீதியில் படித்தோ பார்த்தாலும், உத்தம கவிதையை மறு தடவை நோக்கும்போது ஒரு தனியழகு, ஒரு தனிச் சுவை தென்படுகிறது என்பர் ரசிக விமர்சகர்கள்.

விக்கிரகச் சிலை

உத்தம இசையும் இப்படித்தான். உத்தம நாட்டியமும் இப்படியே. உத்தம சித்திரமும் இப்படி. சிருஷ்டி சக்தியை உள்ளவாறு பிரதிபலிக்கும் சிற்பத்தின் நிலையும் இது.

உத்தம விக்கிரகமும் எத்தனை தரம் பார்த்தாலும் மறுதடவை பார்க்கும் போது ஒரு தனி அழகுடன் விளங்குகிறது. சிற்பக் கலைபோல் விக்கிரகக் கலையும் ரசிக்கத்தக்கது.


போக சக்தி அம்மன்

இத்தகைய விக்கிரகங்களில் ஒன்று தஞ்சைப் பெரிய கோயிலில் தரிசனம் அளிக்கும் போக சக்தி அம்மன். எத்தனை தரம் ஓவியமாக எழுதிப் பார்த்தாலும் மறுதடவை எழுதும்போது ஒரு தனியழகு இருக்கத்தான் செய்கிறது, இந்த போக சக்தி அம்மன் விக்கிரகத்திலே.

சாதாரணமாகச் சிவன் கோயில்களிலே அர்த்தமண்டபத்தில் இந்த அம்மன் இருப்பது வழக்கம். நின்றுகொண்டும் காட்சி வழங்குகிறாள். சில இடங்களில் வீற்றிருந்த கோலத்தில் காட்சி







தருகிறாள். இங்கே ஒரு கையைக் கீழே ஊன்றிக்கொண்டு ஒரு காலைத் தொங்க விட்டவண்ணம் தரிசனம் தருகிறாள்.

பெருமையும் நுணுக்கமும்

இப்படி, எவ்வளவு ஒய்யாரமாகவும், இயற்கையாகவும் காட்சி அளிக்கிறாள்! கலையில் இயற்கை அம்சம் எப்படி அமைந்திருக்க வேண்டும் என்பதற்கு, இந்த அம்மனும் ஒரு வழிகாட்டுவது போலத் தோன்றுகிறது. கலையில் ஒரு பெருவழியும்கூட.

மகர குண்டலங்கள், ஜடா மகுடத்தின் அழகுடன், இடையில் உள்ள வஸ்திரத்தின் நுட்ப வேலைப்பாடுகளும் இந்த விக்கிரகத்துக்குப் பன்மடங்கு சோபை தருகின்றன. எங்கே இருந்து பார்த்தால் மிகவும் நன்றாக இருக்கிறது என்று சொல்ல முடியாதபடி, அவ்வளவு அழகுடன் விளங்குகிறது எவ்விடத்தில் இருந்து பார்த்தாலும்.

உயரமும் உயர்வும்

பத்மபீடத்தில் அமர்ந்திருக்கிறாள் அம்மன். பீடம் உள்பட இரண்டு அடி உயரம். இதற்குள் எத்தனை நுட்ப வேலைப்பாடுகள்!

எழுத எழுதப் புதுப்புது அழகுகளை ஓவியன் காண்பதுபோல், வர்ணிக்க வர்ணிக்கக் கவிஞனும் புதுப்புது அழகுகளைக் காண்பான்.

பக்த ரசிகனையோ, ‘எப்படி வர்ணிப்பது?’ என்றே தெரியாத நிலையில் பிரமித்துப் பரவசமூட்டி மெய்ம்மறந்து நிற்கும்படி செய்து விடுகிறது இந்த அம்மனின் தரிசனம்.

சாதாரணமாக இந்த விக்கிரகத்தை வெளியில் எடுப்பதில்லை. இருந்த இடத்தில் இருந்தே சக்திமயமான அழகையும், பக்திமயமான சக்தியையும் வெளியிடுகின்றாள் போக சக்தி அம்மன்.

உயரம் இரண்டே அடி; உயர்வோ? - கலையின் உயரமோ?



பெருமானின் பேரழகு!

கலை உலகிலும் கற்பனை உலகிலும் கூடப் பிசகான கற்பனைகளை, உண்மைக்குப் புறம்பான கற்பனைகளை ஒதுக்கிவிட வேண்டும் என்ற உண்மையை, இங்கு சொல்லியே ஆகவேண்டும்.

நிழல் விழாதாம்

உதாரணமாக, தஞ்சைக் கோபுர நிழல் விழாது என்று ஒரு கற்பனை செய்து, 'அது எப்படி?' என்று ஆராய்ச்சி நடத்துவோரும் இருக்கிறார்கள். உண்மையில், நிழல் விழத்தான் செய்கிறது; நன்றாக விழுகிறது. காலையும் மாலையும் விழுகிறது. எந்த நாளிலும் விழுகிறது. கலசத்தின் நிழல் கீழே தெரிகிறது. நேரில் பார்த்துக் கொள்ளலாம்.

'ராஜராஜேந்திர சோழ ராஜா' என்று விக்கிரகத்தில் பொறித்திருக்க, ராஜராஜ சோழ ராஜா என்று நீண்ட காலமாகச் சொல்லி வருவதுபோலத்தான் இந்தக் கோபுர நிழலின் கதையும்!



இத்தகைய பொய்க் கற்பனைகளை விட்டுப் பெரிய கோயிலின் பெருங்கலைச் செல்வங்களை அனுபவிப்பதே நலம்.

பாலசுப்பிரமணியர்


இனி நாம் பாலசுப்பிரமணியரையும் ஆஞ்நேயரையும் தரிசித்துவிட்டு, கோபுர தரிசனமும் செய்வோம்.

விக்கிரகங்கள் வைக்கப்பட்டிருக்கும் இடத்திலே மேலண்டைக் கோடியில் தரிசிக்கிறோம் பாலசுப்பிரமணியரை. வஜ்ரமும் திரிசூலமும் முன் இரு கைகளில். ஒரு கையிலே வில் ஏந்தி இருக்கும் பாவனை. மற்றதில் அம்பு வைத்திருக்கும் பாவனை. கவனித்துப் பாருங்கள்.

இந்த விக்கிரகத்தை எந்தத் திக்கில் இருந்து பார்த்தாலும் அழகு அழகுதான். 'பன்மடங்கு அழகா இருக்கிறது' என்றே சொல்ல வேண்டும். ஐந்து விதங்களில் எழுதிக் காண்பித்து இருக்கிறது. பார்த்துப் பார்த்து அனுபவிக்க வேண்டிய தெய்வீக அழகு.

பாலசுப்பிரமணியரின் தமிழ்ப் பெயரான 'முருகன்' என்ற சொல்லுக்கே 'அழகன்' என்றும், 'இளைஞன்' என்றும் பொருள் உண்டு. அழகு சொட்டும் இளமை, இளமை பொங்கும் அழகு - இந்த முருகு, முருகன், பாலசுப்பிரமணியன்.

இந்த அழகு, விக்கிரகத்தில் எப்படி அமைந்திருக்கிறது என்பது பன்மடங்கு தரிசித்து உய்த்துணர வேண்டிய உண்மை. நிஜமான முருகன் கற்பனையை இங்கே காண்கிறோம்.



சூர சம்ஹார காலத்திலே, சூர சம்ஹாரம் செய்யத்தான் வெளிக் கிளம்புகிறார் இந்த பாலசுப்பிரமணிய மூர்த்தி.

ஆஞ்சநேயரின் அழகு

முருகன் என்ற இள அழகைத் தரிசித்த பின், நந்தவனத்திலே வன்னி விருட்சத்தின் அடியில் ஆஞ்சநேயரின் வீர சௌந்தரியத்தையும் கண்டு களிப்போம். மிகவும் அழகாய் வால் சுருண்டு தலைக்கு மேலே வந்திருக்கிறது. 'வால் அழகர்' அல்லவா இந்த வீர அழகர்?

ஒரு கையிலே தாமரைப் பூ. ஒரு கை உயரத் தூக்கிய நிலையில் பாயும் கோலம். ராமாயண சுந்தர காண்டத்தின் சுந்தர கதாநாயகர் அல்லவா? அந்த ராமாயண அனுமவீர சௌந்தரியம் இங்கே வன்னி மரத்தின் அடியில் ஒன்றரை அடி உயரத்தில் எப்படிக் காட்சி அளிக்கிறது, பாருங்கள்!

நந்தி விக்கிரகம்

வார்ப்பு விக்கிரகமான நந்தி, தஞ்சை மகாராஷ்டிர மன்னரான சரபோஜி தாயாரின் பக்தியின் சாதனை. இந்தச் செய்தி, இந்தச் சிலையின் கீழே பொறிக்கப்பட்டுள்ளது.

கோபுர தரிசனம்

ஆஞ்சநேயரை நந்தவனத்தில் தரிசித்தோம் அல்லவா? அந்த மரங்களின் இடையே பெரிய கோபுரம் தெரிகிறது. எங்கிருந்து பார்த்தாலும் மூலஸ்தான கோபுரம் நம்மைக் காந்தம்போல் இழுக்கிறது. மற்றக் கோயில்களில் காணாத ஒரு தனிச் சக்தி இங்கே மூலஸ்தான கோபுரத்துக்கு அமைந்திருப்பதுபோல் காண்கிறது.

நமக்குக் கலையின்பம் ஊட்டி வருகின்ற பெரிய கோயிலின் சிறப்பை சொல்லிக்கொண்டே இருக்கலாம்.

'பிரகதீஸ்வரர்' என்றும், 'தஞ்சைப் பெருவுடையார்' என்றும் இங்கே கோயில் கொண்டிருக்கும் எம்பெருமானைப் போற்றுகிறார்கள். இப்பெருமானது பேரழகின் துணுக்குகளே உலகிலுள்ள அழகுகள் எல்லாம். அந்தத் தெய்விக அழகைச் சிறப்பக் கலையிலே எப்படிக் கண்டு காட்டுகிறது இந்தப் பெரிய கோயில்!



கரந்தை – சிருஷ்டி கர்த்தாவும் சிருஷ்டி கர்த்தர்களும்

படைத்தல், காத்தல், அழித்தல் அல்லது விடுவித்தல் என்ற முத்தொழிலாய்ப் பேசுகிறோம் கடவுளின் தொழிலை. படைப்புத் தொழிலைத் தனியாக்கி, படைப்புக் கடவுள் பிரம்மா என்றும் பேசுகிறது புராணம்.

சிருஷ்டி கர்த்தா சிருஷ்டியானார்!


பிரம்மாவை வர்ணித்துக் காட்டுகிறது புராணம் என்றால், அந்த வர்ணனைகளின் சாரத்துக்கு வர்ணம் தீட்டுகிறது சித்திரக் கலை. சிற்பக் கலையும் புராணத்தின் புதை பொருளைச் சித்திரித்துக் காட்டுகிறது.


புராணத்தின் சொற்சித்திரம், கவிதையில் சப்த சித்திரமாக, இசைச் சித்திரமாக இயங்கி, சித்திரக் கலையிலும் உருவெடுக்கிறது; சிற்பக் கலையிலும் அவதரிக்கிறது.

படைப்புக் கடவுளை, பெரிய உருவில் நுட்ப அழகுகளுடன் தரிசிக்க விரும்புகிறீர்களா? அப்படியானால், தஞ்சைப் பெரிய கோயிலை மனதார தரிசித்த நீங்கள், தஞ்சையில் இருந்து திருவையாறு செல்லும் வழியாகச் செல்லுங்கள்.

இந்த வழியிலே 'கருந்தட்டான்குடி' என்று சாதாரண மக்கள் குறிப்பிடும் 'கரந்தை' என்ற ஊரை அடைவீர்கள். அங்கே சிருஷ்டி கர்த்தாவைக் காண்பீர்கள்!

இந்நாளில் 'கரந்தை' என்றதும் 'கரந்தைத் தமிழ்ச் சங்கம்' நினைவு வரும், தமிழ் அன்பர்கள் அனைவருக்கும். சிற்ப ரசிகர்களோ மணிமுத்தா நதி என்ற வடவாற்றங்கரைக்குப் போவார்கள் - பிரம்மாவைத் தரிசிக்கத்தான்!





பிரகதீஸ்வரருக்குச் சுமார் ஒரு மைல் தூரத்தில் இருக்கிறார் படைப்புக் கடவுள். ஆம், தஞ்சையிலிருந்து கரந்தைக்கு சுமார் ஒரு மைல். இங்கே வடவாறு உத்தரவாகினியாக (தெற்கு வடக்காய்) ஓடுகிறது. தென்கரையில் உள்ள சேர்வைக்காரன் படித்துறையில், வட விருட்சம் அல்லது ஆல விருட்சத்துக்கு அருகே இருக்கிறது பிரம்மா - சிலை.

உட்கார்ந்திருக்கும் பிரம்மாவின் உயரம் 4¾ அடி. இதுவரை பிரம்மாவை, 'தென்னாட்டுச் செல்வங்க'ளில் இவ்வளவு பெரிதாகவும் நுட்ப வேலைப்பாடுகளுடனும் நாம் தரிசித்தது இல்லை. இந்தச் சிற்பச் சிறப்பைத்தான் படம் பல விதங்களில் காட்டுகிறது.

தவம் செய்துகொண்டும், அதோடு 'நம் காரியம் ஜயம்' என்று தம் காரியத்தைப் பார்த்துக்கொண்டும் இருக்கிறார். இந்த ஆற்றங்கரையில் இந்தப் பிரம்மா இப்படித் தனித்து உட்கார்ந்து, எத்தனை தலைமுறைகளாகச் சிருஷ்டி வினோதங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்!

'ஓஹோ, இங்கே சிருஷ்டி கர்த்தா சிருஷ்டியானார்!' என்ற பிரமிப்பும் ஏற்படக் கூடும் பரம ரசிகர்களுக்கு.

ஆனால், இந்தச் சிருஷ்டி கர்த்தாவின் சிருஷ்டி கர்த்தா யார்? அந்தத் தெய்விக சிற்பியின் சிருஷ்டி சக்தியை எப்படி வர்ணிப்பது?

ஜடை அலங்காரத்தையும் மார்பின் மீதுள்ள முத்தாரங்களின் தனிச் சிறப்புகளையும் பார்க்கும்போது, ராஜராஜ சோழன் காலத்துச் சிற்பிகளோ, அந்தப் பரம்பரையினரோ, இந்தச் சிருஷ்டி கர்த்தாவின் சிருஷ்டி கர்த்தர்கள் என்று ஊகிக்கத் தோன்றுகிறது.

மற்றப் படம், வடவாற்றின் இக்கரையில் இருந்து எதிர்க்கரையிலுள்ள பிரம்மா - சிற்பத்தைக் காட்டுகிறது. படத்தின் நடுவில், கீற்றுக் கொட்டகையின் முன்பக்கம் பிரம்மா உட்கார்ந்திருப்பதைக் காணலாம்.

சுற்றுப்புறம் மரம், செடி உள்ள இடம். கீற்றுக் கொட்டகையின் நடுவே இரட்டைப் பிள்ளையார்களின் இருப்பிடம். பொதுவாக, ஒரு குளக்கரையிலோ, ஆற்றங்கரைப் படித்துறையின் சமீபத்திலோ பிள்ளையார் கோயில் இருக்கும் என்பது இங்கும் உறுதிப்படுகிறது.

கலைக்குப் பாதுகாப்பு

மூக்கு பின்னமுற்று இருக்கிறது. முகத்தை அவமானப்படுத்த வேண்டுமென்று யாரோ ஒரு பிரகஸ்பதி தன் மூக்கை அறுத்துக்கொண்டானாம். அந்த ரீதியில் நமது கலைச்செல்வத்தின் மேலுள்ள துவேஷத்தால் யாரோ அங்கபங்கம் செய்திருக்கக்கூடும் என்று கருத வேண்டிய அவசியம் இல்லை.

இந்தத் தனிமையான, பாதுகாப்பு இல்லாத இடத்தில் இருக்கும் சிற்பச் செல்வத்துக்கு, இந்த மூக்குச் சிதைவு ஏற்பட்டு இருப்பதிலும் அதிசயமில்லை.

பழைய கலைச் சின்னங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் அரசாங்க இலாகா, இனிமேலாவது இந்தச் சிற்பச் செல்வத்துக்கும் எப்படியாவது பாதுகாப்பு அளிக்கும் என்று நம்புகிறோம்.

உலக அன்னையின் உக்கிர சொரூபம்

மந்த மாருதத்திலே உலக அன்னையின் அருள் (அறக் கருணை) வீசுகிறது. சண்ட மாருதத்திலே, அந்தப் பிரசண்ட வேகத்திலே வீசுகிறது அன்னையின் மறக் கருணை. இந்த அன்னைதான் காளி.

காளி என்ற காவல்

உமையம்மை, கலையம்மையான சரஸ்வதி, அழகம்மையான லட்சுமி எல்லாம் ஆறிய அன்னைமார். பராசக்தியான உக்கிர காளி சீறிய அன்னை!



அவர்கள் சுந்தரிகளான அன்னைமார். இவள் பயங்கரியான மகா காளி.

துஷ்ட நிக்கிரக தெய்வமாகிய பயங்கரி, இஷ்டப்பட்டுக் காப்புத் தெய்வமாகவும் இசைந்து காவல் செய்கிறாள்.

பெரிய கோயிலின் எல்லைக் காவல்

தஞ்சை ஸ்ரீபிரகதீஸ்வர ஸ்வாமிக்குக் காவல் தெய்வமாக உக்கிர காளியம்மன் கோயில் கொண்டிருக்கிறாள். ஓர் அரசனுக்குக் காவலாளி இருப்பதுபோல் ராஜாதிராஜனாகிய பரமேஸ்வரனுக்கும் ஒரு காவலாளியாம்; அவள் காளியம்மனாம்.

ஸ்ரீபிரகதீஸ்வரருக்குக் கிழக்கே, வெள்ளைப் பிள்ளையார் கோயிலுக்கு நேர் எதிரே ஒரு மைல் தூரத்திலுள்ள குலாலர் (குயவர்) தெருவில் இருக்கிறது உக்கிர காளியம்மன் கோயில்.

பின்னமுற்றும் பயங்கரம்

ஆதியில் மூலஸ்தானமாக இருந்து, பின்னமானதும் வெளியே வைக்கப்பட்டு



இருக்கிறாள் அம்மன். இடையில் சிற்பம் துண்டாக, இரு பக்கங்களிலும் கைகள் உள்பட பின்னமுற்று இருக்கிறது.

பெயருக்குத் தகுந்தபடியே மிகவும் உக்கிரமான காட்சி. பயங்கரமான பார்வை. உயரம் ஐந்து அடி. மண்டையோடுகளாலான மாலைகள், பூணூல் போட்டிருப்பதுபோல் இடது தோளிலிருந்து வலது பக்கம் தொங்குகின்றன. மார்பின் மேல் பாம்பு கட்டியிருக்கிறது.

ஜய கோஷம்

கால்களின் கிழே சண்டன், முண்டன் என்ற இரண்டு அசுரர்களை வதம் செய்யும் கோலம். உக்கிரத்தின் காரணம் தெரிந்து விடுகிறது அல்லவா? தர்ம ஆவேசம்தானே இந்த உக்கிரமெல்லாம்?

யுத்தத்தில் வெற்றி அடைந்துவிட்டாள். அந்த ஜய பயங்கர கோஷமும் நம் காதில் விழுகிறதா, என்ன?

இப்படி ஒரு பிரமையைக்கூட எவ்வளவு இயற்கையாகச் சிற்பி நமக்கு உண்டாக்கி விடுகிறார் பாருங்கள்!

அந்தத் திறந்த வாயைப் பார்த்தாலே தெரியவில்லையா? வாயா திறந்திருக்கிறது? கோரப்பற்களை அல்லவா திறந்து காட்டுகிறாள்!

ஆஹா! இந்த வாயிலிருந்து அல்லவா அந்தப் பிரமை - இல்லை, கோஷம் வந்திருக்க வேண்டும்!

உக்கிரத்தின் உச்சம்

இம்மாதிரி உருவங்கள் தஞ்சையில் சில இடங்களில் பார்க்கலாம். இதுவரை வந்த ஈஸ்வரியின் உக்கிர கோலம் இந்தச் சிற்பத்தில்தான் பூர்ணமாய்க் காண்கிறது.

மிகவும் சிறிய கோயில் இது. எனினும் பல சிற்பச் செல்வங்கள் காணப்படுகின்றன, - ஒரு சிற்றறையில் பல பெருஞ்செல்வங்கள் போலே. இங்குள்ள சிற்பங்கள் பெரிய கோயில் - சிற்பங்களுக்கு ஒருவகையிலும் குறைந்தன அல்ல என்று, பார்த்தவுடன் முடிவு கட்டி விடலாம்.

இங்குள்ள உக்கிர காளியோ உக்கிரத்தின் உச்சநிலை. ஐந்தடி உயரத்தில் எல்லையற்ற கோபாவேசம்.

தர்மமே ஜயம் - 'அறம் வெல்லும், பாவம் தோற்கும்' - என்பது வேத கோஷம். உலக அன்னையாகிய உக்கிர மாகாளியோ தர்ம ஆவேசத்துடன் தீவிரமாய்ப் புரட்சிகரமாய்த் தீமைக்கு எதிராக யுத்த கோஷம் செய்து ஜய கோஷமும் செய்கிறாள்.

* * *

தர்மத்தின் காவல் தெய்வம், புரட்சிக்கும் அதிதேவதைதான்.

மாகாளி பராசக்தி
உருசிய நாட் டில்கடைக்கண்
வைத்தாள் அங்கே
ஆஹாஎன் றெழுந்ததுபார்
யுகப்புரட்சி!

என்று பாரதியார் பாடியிருப்பது உக்கிர காளியின் சொரூபத்துக்குப் பொருத்தமான கொள்கைதான்.

ஆனால், புரட்சியின் விளைவு தர்மமாக இருக்க வேண்டும் என்பது காளியின் திருவுள்ளம். இல்லாவிட்டால், புரட்சி புரட்டாகப் போய்விட்டால், புரட்சிக்கும் புரட்சி விளைந்துவிடும். இதுவும் மாகாளி பராசக்தியின் கடைக்கண் பார்வைதான்.

தர்மத்தின் காவலாளியான உலக அன்னை, எப்படியும் வெற்றி காண்பாள் என்பது திண்ணம். தர்மத்துக்கு இவள் கவசம்; தர்மமும் இவளுக்குக் கவசம். இவளது யுத்த களம் தர்மக்ஷேத்திரம்; யுத்த கோஷம் தர்மத்தின் வெற்றி.

துஷ்டர்களுக்குக் காட்டும் உக்கிர சொரூபத்திலேயே உலக அன்னையை அன்பர்கள் வழிபடுவது காளி வழிபாட்டின் சிறப்பியல்பு.

மரத்தடியிலே மகத்தான செல்வம்



சண்ட மாருதத்துக்கு முன் இயற்கை எவ்வளவு சாந்தமாக இருக்கிறது! படுவேகமாய் வரும் ஒரு மலையருவியின் வீழ்ச்சிக்கு மேலே அந்த உச்சிப் பக்கமாக ஓடிவரும் நீர், எவ்வளவு அமைதியாகக் காண்கிறது! சில சந்தர்ப்பங்களில் நெருங்கிய நட்பு எவ்வளவு கடும் பகையாக மாறிவிடுகிறது!

இன்றைய சூழ்நிலை

தஞ்சை ஸ்ரீபிரகதீஸ்வர ஸ்வாமியின் காவல் - தெய்வமாகிய உக்கிர மாகாளியின் சூழ்நிலையும் உக்கிரத்துக்கு நேர் எதிரான நிலையில், உள்ளத்துக்கு நிம்மதி கொடுக்கும் ரீதியில் அமைந்திருக்கிறது. கோயிலின் சூழ்நிலையைத்தான் குறிப்பிடுகிறோம்.

கவலையே இல்லாமல், உலக சிந்தனைகள் ஓய்ந்துகிடக்க, இயற்கைக் காட்சியைப் பார்த்துக்கொண்டே உள்ளத்தைத் தெய்வ நினைவிலே ஈடுபடச் செய்யலாம்.

வயல்கள் நிறைந்த சுற்றுப்புறங்களுடன், ஆலமரத்தின் அடியில் எவ்வளவு இயற்கையாகக் காட்சி அளிக்கிறது கோயில்!

உக்கிர காளி (அன்றும் பின்பும்)

முன்பு நீங்கள் தரிசித்த உக்கிர மாகாளி, நேர் எதிரே கோயில் வாசலின் வலது புறத்தில் காட்சியளிக்கிறாள்.

இப்போது இருக்கும் மூலஸ்தானத்தைத் தான் இங்கே சிறிய தனி இடத்தில்


சில்பி

காண்கிறோம். உருவம் அவ்வளவாகத் திருப்திகரமாக இல்லை.

இரண்டும் (இதுவும் பழைய சிற்பமும்), அமைப்பிலும் பாவத்திலும் ஒத்திருந்தாலும் வேலைப்பாடுகளில் வேறுபாடுகள் பல தென்படுகின்றன. தேகத்துக்குத் தலை மிகவும் பெரிது. ஜடை அலங்காரத்திலும் மாறுதல். உயரம் 5½ அடி.



அந்தப் பழைய சூழ்நிலை
(பக்தியும் கலையும்)

அர்த்தநாரீஸ்வர சிற்பம் ஒன்று வெளியே இருக்கிறது. இது, இக்கோயிலைச் சேர்ந்த சிற்பம் அல்ல. இப்போது வாழைத் தோட்டமாக உள்ள இடத்தில் வெட்டிப் பார்க்கும்போது கண்டெடுக்கப்பட்டது.

இங்கே சிவன் கோயிலுக்கு வேண்டிய சிற்பங்கள் இருப்பதால், சிவன் கோயில் இருந்திருக்க வேண்டுமென்று ஊகிக்க வேண்டியிருக்கிறது.

இந்த அர்த்தநாரீஸ்வரர் - சிற்பம் பல இடங்களில் பின்னமுற்று, சிமென்டினால் சேர்க்கப் பெற்று இருக்கிறது. உயரம் 4 அடி.

பக்கத்திலும் பல சிற்பங்கள் இருக்கின்றன. ‘ஆலமரத்தடியில் இருக்கும் இந்த மிகச் சிறிய கோயிலிலா இவ்வளவு அருமையான சிற்பச் செல்வங்கள்!’ என்று ஆச்சரியப்படப் போகிறீர்கள்.

சுவர் ஓரத்தில் செல்வங்கள்!

சுமார் 100 ஆண்டுகளுக்கு முன் தோண்டி எடுக்கப்பெற்றுக் காளியம்மன் கோயிலில் அடைக்கலம் புகுந்திருக்கும் சிற்பச் செல்வங்களில் மிகவும் முக்கிய ஸ்தானம் ஸ்ரீகங்காதர மூர்த்திக்கு உரியது.

ஸ்ரீகங்காதர மூர்த்தி

கங்காதர மூர்த்தி என்றால், பக்தர்கள், ஞானிகள், பாமரர்கள்... என அனைவருக்கும் கொண்டாட்டம்தான். பண்டிதர்களுக்கும் கவிகளுக்கும்தான் குதூகலத்தில் குறை உண்டா?



பௌராணிகர்களுக்குக் கதை சொல்லும்போதே, வறண்டுபோகும் மனோபாவம் வளம் பெறுகின்றது கங்காதர மூர்த்தி போன்ற மூர்த்திகளால்; எவ்வளவோ நில-புலங்கள் கங்கையால் வளம் பெற்றிருப்பது போலே!

கங்காதர மூர்த்தியிடம் கங்கை இருப்பதுகூடத் தெரியாதபடி மறைத்து இருக்கிறதாம் சடைக்காடு. ஜடையை மகுடமாய்த் தோன்றுமாறு கட்டி வைத்தாலும் அந்த மகுடத்துக்குள்ளே கங்கை அடங்கிப் போகுமாம், குடத்திலே குடிதண்ணீர் அடங்கியிருப்பதுபோலே.

காளமேகக் கவிராயரும், 'குடத்திலே கங்கை அடங்கும்' என்று பாடி வைத்தார் அல்லவா? எந்தக் குடத்தில் ஐயா? 'மகுடத்திலே' என்றார்.

எந்த ராஜாவின் மகுடத்திலே கங்கை அடங்கும் ஐயா? 'இறைவர் சடாம - குடத்திலே கங்கை அடங்கும்' என்றார் புலவரையா. இந்த 'இறைவர்'தான் 'சடாமகுட'த்துடன் இதோ படத்திலும் தோன்றுகிறார்.

'ராஜாதிராஜாவாகிய சிவ பெருமானின் ஜடா மகுடம்தான் கங்கை வைத்த குடம்' என்கிறார் பௌராணிகர். புராணக்காரர் மனோபாவம், புலவர் மனோபாவத்துக்கும் சிற்பியின் மனோபாவத்துக்கும் ஆதாரமாக இருக்கிறது.

ஒரு காதல் கதையும்கூட

கங்கை தலையில் இருப்பது, இறைவன் திருமேனியில் பாதியாக இருக்கும் உமாதேவிக்குக்கூடத் தெரியாதாம்.

வாகனமாகிய ரிஷபத்துக்குத் தாகமாக இருந்ததாம் ஒரு சமயம். 'தாகம் தீர்க்க வேணும்' என்று பார்வதிதேவி சிபாரிசு செய்ய, பரமேஸ்வரன் ஜடா மகுடத்தில் இருந்து கங்கையைக் கொஞ்சம் கீழே விழச் செய்தார். ரிஷபத்துக்குத் தாகம் தீர்ந்தது. ஆனால், பார்வதிதேவிக்கோ கோபம் உச்ச நிலைக்கே வந்துவிட்டதாம்.

ஏன்? எப்படி? கங்கையைக் கங்கா தேவியாகவே கண்டுகொண்டாள் உமாதேவி. 'நமக்குத் தெரியாமல் ஒரு பெண்ணை மறைத்து வைத்திருக்கிறாரே!' என்றுதான் கோபம்.

பார்வதிதேவியின் கோபத்தைத் தணிக்கும் கட்டம்தான் எவ்வளவு அழகாய், எவ்வளவு வசீகரமாய்ச் சிற்பியால் காட்டப் பெற்றிருக்கிறது!

ஈஸ்வரனின் உயரம் நான்கு அடி. ஆனால், சிற்பச் செல்வத்தின் உயர்வை என்னென்பது?

வேறு செல்வங்கள்

கொடுங்கையிலுள்ள கூட்டில் ஈஸ்வரன் சிறு உருவில் அமர்ந்திருப்பது, ஒரு பக்கத்தில் உள்ள சிற்பம்.


ஒரு பக்கத்தில் துவாரபாலகரின் பயங்கர சொரூபம்.

தனியாகக் காண்பித்திருக்கும் கோயிலின் படத்தைப் பாருங்கள். நடுவே சுவர் ஓரத்தில் வைக்கப் பெற்றிருக்கின்றன மேலே காட்டிய செல்வங்கள்.

இடது பக்கத்தில் கோயிலுக்குச் செல்லும் வழியைக் காண்கிறோம். அதன் பக்கத்தில் பின்னமுற்ற காளியை வெளியே வைத்திருக்கிறார்கள்.

முன்பு மண்டபம் இருந்து, இரண்டு ஆண்டுகளுக்கு முன் இடிந்துபோய் இப்போது ஒரு தூண் மட்டும் எஞ்சி இருக்கிறது.

தஞ்சைப் பெரிய கோயிலின் எல்லைக் காவலான உக்கிர மாகாளி, தன் கோயில் சுவர் ஓரமாய் அரிய பெரிய கலைச் செல்வங்களையும் வைத்துக்கொண்டு காவல் புரிந்து வருகிறாள்!



கண்டியூர் கண்டீர்களா?

சிவபிரானுக்கு ஐந்து முகம் என்றும், பிரம்மதேவனுக்கு நான்கு முகம் என்றும் புராணம் சொல்கிறது அல்லவா? ஒரு காலத்திலே பிரம்மனுக்கும் சிவபிரானைப் போல் ஐந்து முகங்கள் இருந்தனவாம்.

கண்டியூர்க் கதை

இருவரும் ஐம்முகக் கடவுளராய்க் காட்சி தந்தனர் என்றால், சிவ பக்தர்களுக்குச் சந்தேகம் ஏற்படக்கூடும் அல்லவா? பிரம்மாவுக்குத்தான் சிவ பக்தர்போல், விஷ்ணு பக்தர்போல், பக்தர்கள் இல்லையே!

பிரம்மன் அன்னப்பறவை மீது கலைமகளுடன் செல்வது தெரிந்து, சிவபக்தர்களின் சந்தேகம் நீங்கக்கூடியதுதான். இது பக்திக் காதல். ஆனால் காதலின் செய்தியோ?

பார்வதிதேவிக்கு, தனது நாயகனைப்போல் படைப்புக் கடவுளும் ஐம்முகக் கடவுளாக இருப்பதைச் சகிக்கவே முடியவில்லையாம். தன்னுடைய ஐயனே தன்னை ஏமாற்றி வேறொரு பெண்மணியுடன் ஒரு பறவை மீது பறக்கிறானோ? என்ற ஐயங்கூட அம்மைக்கு ஏற்பட்டதாம்.

உடனே சிவபெருமான், தேவியின் ஊடல் தீர்க்கப் பிரம்மனது ஐந்தாவது முகத்தைக் கண்டித்துவிட்டாராம் கண்டியூரிலே.


தஞ்சையிலிருந்து திருவையாற்றுக்குப் போகும் வழியில் உள்ளது இத்தலம். தஞ்சைக்கு வடக்கே ஆறு மைலில், திருவையாற்றுக்குத் தெற்கே ஒரு மைலில் 'குடமுருட்டி' என வழங்கும் காவேரியின் தென்கரையில் உள்ளது.

கோயிலின் வடக்குப் பிராகாரத் தோற்றத்தை இங்கே காண்கிறோம். மூலஸ்தானத்தின் விமானத் தோற்றத்தையும் வெளிக்கோபுரத்தையும் பார்க்கிறோம்.

பிராகாரத்தின் நடுவே உள்ள இடத்தில் தான் கிழக்கு நோக்கியவாறு 'பிரம்மா' சிற்பங்கள் இருக்கின்றன. இந்தப் 'பிரம்மா' சிற்பம் கரந்தைச் சிற்பத்தை நினைப்பூட்டுகிறது.

பிரம்மாவின் இரு தோற்றத்தைத் தனிப்படம் காட்டுகிறது. நடுவே ஜடையுடன் மற்றச் சிற்பமும் தெரிகிறது. ஜடை அலங்கார அழகையும் மார்பின்மேல் ஆரங்களின் தோற்றத்தையும் பெரிய அளவில் காட்டியிருக்கிறது. அழகை என்னென்பது?





தல விசேஷமும் கலை விசேஷமும்

ஸ்ரீ மங்களநாயகி சமேதராகிய 'ஸ்ரீபிரம்ம சிரகண்டீஸ்வரர்' என்பது, கண்டியூரில் திருக்கோயில் கொண்டிருக்கும் சிவபெருமானின் முழுப்பெயர். இந்தப் பெயரே சாட்சி, சிவபெருமான், பிரம்மதேவனின் சிரங்களில் ஒன்றைக் கண்டித்தார் என்ற புராணக் கதைக்கு.

கண்டியூர் என்ற ஊர்ப் பெயரும் சாட்சிதானே கதைக்கு? கதையோ சாட்சி பெயர்களுக்கு.

தேவாரமும் சாட்சி

இத்தலத்தைப் பாடியுள்ள திருஞானசம்பந்தரின் தேவாரப் பதிகத்திலும் பிரம்மதேவனின் சிரம் அரிந்த கதை பிரஸ்தாபிக்கப்படுகிறது.



இதே தலத்தைப் பாடும் அப்பர் பதிகமும், பிரம்மன் சிரத்தைக் கண்டியூர்ப் பெருமான் கண்டித்துவிட்டார் என்றும், இந்தக் கதையை ஊரும் நாடும் அறியும் என்றும் தெரிவிக்கிறது.

திருப்புகழும் சாட்சி

இத்தலத்தைப் பாடியிருக்கும் திருப்புகழ்ப் பாட்டிலும், பிரம்மனின் தலை அரிந்த கதை பிரஸ்தாபிக்கப் படுகிறது.

வீரமும் பரத்வமும்

இது, சிவபெருமானது பரத்வத்தை நிச்சயிக்கும் வீரச்செயல்களில் ஒன்று என்பர். திரிபுர தகனம், காம தகனம், காலனைக் காலால் உதைத்த வைபவம் முதலான வீரச்செயல்களில் பிரம்மன் தலை அரிந்தது முதன்மையாகக் கருதப்படுகிறது.

சிவபெருமானுடைய எட்டு வீர நிகழ்ச்சிகள் நிகழ்ந்த தலங்களை, 'அஷ்ட வீரத்தலங்கள்' என்பர். இத்தலங்களில் முதன்மையானது கண்டியூர்.

தண்டனையின் உட்பொருள்

இவ்வூர்த் தலபுராணம் வடமொழியில் இருப்பதைத் தமிழ் படுத்தி வெளியிட்டு இருக்கிறார்கள். தமிழ்ச் செய்யுளிலும் இத்தலத்துக்கு ஒரு புராணம் இருந்திருக்கலாம். பதினோரு பாடல்கள் மட்டும் கிடைத்திருக்கின்றன.

இப்பாடல்களில் ஒன்றிலே, பிரம்ம தேவன் பிழை செய்து தன் சிரம்

கண்டிக்கப் பெற்றுப் பிறகு மேல்நிலை அடைந்ததாகச் சொல்லியிருக்கிறது.

வேறொரு பாட்டிலே, பிரம்மா தன் பத்தினியோடும் வழிபாடு செய்து சிவபெருமானை மகிழ்வித்தான் என்று கண்டிருக்கிறது.

சிற்ப விசேஷம்

இக்கதையை இவ்வளவு தூரம் இந்த ஸ்தல விசேஷமாகக் குறித்திருப்பதால் பிரம்மாவின் சிற்பம் இங்கு இரண்டு பெரிய அளவில் இருக்கிறது.

இங்கு உள்ளதும் கரந்தையில் உள்ளதும் பல அம்சங்களில் ஒத்திருப்பதால், ஒரே சிற்பி செய்து ஒன்றைக் கரந்தையில் வைத்திருப்பதாக ஊகிக்கலாம்.

பிரம்மாவின் முழுத் தோற்றத்தைத்தான் இங்கே காண்கிறீர்கள். உயரம் ஐந்து அடி. கரந்தையில் கண்ட அதே அமைப்பு; ஆனால், மற்ற இரு கைகள் இங்குள்ள சிற்பத்தில் பின்னமுற்று இருக்கின்றன.

கீழே ஊன்றியிருக்கும் முழங்காலும் பின்னமுற்று இருக்கிறது. எனினும், படத்தில் அதைச் சேர்த்துக் காட்டி யிருக்கிறது.

ஜடாமுடியின் விசேஷத்தை இங்கே அதிமுக்கியமாய்க் குறிப்பிட வேண்டும். இதுவரை வந்த சிற்பங்களில் இவ்வளவு நேர்த்தியாகப் பார்க்கவில்லை.

தவக்கோலத்தில் இங்கு இருக்கிறான் பிரம்மதேவன். இக்கோலத்தில் இருந்து பிரம்மதேவன், 'என் மனைவி கலை மகளின் நூல் விளங்கக் கருணை புரிக. என் படைப்புத் தொழிலும் சரியாக நடைபெற வேண்டும்' என்று பிரார்த்தித் தான். பிரார்த்திக்கவே, அனுக்கிரகம் செய்தாராம் சிவபெருமான்.


ஸ்ரீ பிரம்மசிரகண்டீஸ்வரர் சந்நிதியின் வெளியே இருபுறமும் 'துவாரபாலகர்' சிற்பங்கள் இருக்கின்றன. ஆனால், காவல் காப்பவர்களாகவும் தெரியவில்லை.

இடதுபுறம் உள்ள சிற்பத்தில் தவக்கோலம் காணப்படுகிறது. மற்றதில் கையிலே ஆயுதம் இருக்கிறது. உயரம் 4½ அடி. நல்ல அழகிய சிற்பங்கள்.

சிவ சந்நிதி மேற்கே பார்க்கிறது. தேவி மங்களநாயகியின் சந்நிதி தெற்கே பார்க்கிறது. பிரம்மதேவன்-கலைமகள் ஆகியோரின் உருவங்களும் கோயிலினுள் இருக்கின்றன.



கண்டியூரும் சமரசமும்



கண்டியூரில், மும்மூர்த்திகளைத் தரிசிக்கலாம். ஆகவே, இதைத் 'திரிமூர்த்தி ஸ்தலம்' என்பர். இங்கே விஷ்ணு துர்க்கையும் கம்பீரமாகக் காட்சியளிக்கிறாள்.

தண்டாயுதபாணி மண்டபமும் கோயிலும்

கோபுர வாசலில் நுழைந்தவுடன் முதலில் தண்டாயுதபாணி மண்டபத்தைக் காண்கிறோம். மண்டபத்தினுள்ளே தண்டாயுதபாணியைத் தரிசிக்கிறோம். பிறகுதான் கோயிலுக்குள் போகிறோம்.


மண்டபத்தின் பக்கத்தில் ஸ்ரீ மங்களாம்பிகையின் சந்நிதி. அதன் எதிரில் துவஜஸ்தம்பம், பலிபீடம். அவற்றின் முன்பு நந்தி மண்டபம் முதலியன. இவை எல்லாவற்றையும் தாண்டிய பிறகுதான், படத்தின் வலது பக்கத்தில் உள்ள வாசலின் வழியாகக் கோயிலின் உட்சந்நிதியை அடைகிறோம்.


துர்க்கை

வடக்குப் பிராகாரத்தின் நடுவே வடக்கு நோக்கியவாறு துர்க்கையின் சிற்பம் இருக்கிறது. அழகிய சிற்பம். முன்பு வந்த பிரம்மா - சிற்பங்களின் சமீபம்தான் இருக்கிறது.

எந்தவிதத்திலும் வேலைப்பாடுகளில் மற்றச் சிற்பங்களுக்குக் குறைந்ததில்லை. விஷ்ணுதுர்க்கை என்பதும் சிற்பத்தைப் பார்த்தவுடனேயே தெரிந்துவிடுகிறது.

நல்ல ஐந்தடி உயரத்தில் கம்பீர சௌந்தரிய தரிசனம்.





ஜய மங்கள சௌந்தரியம்

கோபுர தரிசனம் செய்துகொண்டு இக்கோயிலுக்குள் பிரவேசிக்கும் போது, 'இத்தலத்திலே பிரமாதமாக ஓர் ஆனந்தத்தையும் இதய சாந்தியையும் அளிக்கக்கூடியதொரு 'ஸாந்நித்யம்' காணப் போகிறோம்' என்பது போன்ற உணர்ச்சி ஒன்றும் நமக்கு ஏற்படுவதில்லை.

தல மான்மியம்

மற்றக் கோயில்களைப் போலவேதான் இங்கேயும் புல் முளைத்த பிராகாரங்கள், மண்டபங்கள், விமானங்கள் காணப் படுகின்றன.

ஒரு விசேஷம்; சிவபெருமானுக்கு விசேஷ மான வில்வ விருட்சமேதான் இங்கே ஸ்தல விருட்சம். இது தெரிந்ததும் பக்தி உள்ளம் குதூகலமாய்த் தரிசிக்கிறது இந்த விருட்சத்தை.

'சதாதபர்' என்ற முனிவர் இங்கேதான் அமர்ந்து மூவருக்கும் முதல்வனை, முக்கண்ணனைத் தம் உள்ளத்தில் இருத்தி அருந்தவம் கிடந்தார் என்கிறது ஸ்தல புராணம். இந்தப் புராண மரியாதையும் தெரிந்து பக்தி உள்ளம் பூரிக்கப் பிரதட்சிணம் வருகிறோம்.

அழியா அழகு


இன்னும்கூட நம்மால் ஊகம் செய்ய இயலவில்லை, பின்னே தெரியும் விமானத்தின் கீழே காட்சி அளிக்கப்போகும் தெய்வ சௌந்தரியம் குறித்து. அந்தச் சந்நிதியை அடைந்ததும் - அடைந்தவுடனே - மகத்தான ஒரு சக்தியின் வசமாகிறோம்.

ஆம், கண்ணெதிரே காணும் பரதேவதையின் திவ்ய சௌந்தரிய சக்தியைக் கண்டு பிரமித்துப் போகிறோம். எப்படி வர்ணிப்பது என்று திணறிப் போகிறோம். இதுவரை இம்மாதிரி ஒரு கலைச்செல்வத்தை, அமர சிற்பத்தைக் கண்டதில்லை என்ற உணர்வும் ஏற்படுகிறது.

இந்த அழியா அழகைச் சிலாரூபத்தில் உருவாக்கிய சிற்பியின் கைத்திறன், உள்ளத்திலே ஊறிய பக்தியின் எடுத்துக் காட்டன்றி வேறல்ல என்ற உண்மையை முழு மனத்துடன் ஒப்புக் கொள்கிறோம்.

வதனமும் இளநகையும்

இந்த வதனத்திலே காணும் குறிப்பினை, பாவனா சக்தியை, என்னென்று சொல்வது என்று, சொல்லமாட்டாமல் மயங்குகிறோம். அருளின் எல்லையா அது? உண்மையின் சிகரமா அது? தெய்வகம்பீர்யத்தின் பிரதிபலிப்பேதானா? உலக அன்னை என்கின்ற அந்தத் தாய், அன்பின் மகத்தான அழகுதானா? ஸதிதேவியின் தேஜஸா அது? வீரியமும் வண்மையும் கலந்து பொங்கும் ஸாகர விசேஷமா?



செல்வங்களின் நிறைவும், வித்தையின் விளக்கமும், சாந்தியின் பூர்த்தியும் இங்கே காணப்படவில்லை என்றால்வேறு எங்கே இருக்க முடியும் - என்று எண்ணமிடு கிறோம்.

அம்பிகையின் மங்களமான புன்முறுவல், 'நித்ய மங்களமான உண்மை இது' என்று சொல்லாமல் சொல்கிறது. பார்க்கப் பார்க்கப் பார்த்துக்கொண்டே இருக்கத் தோன்றுகிறது. 'சிற்பி என்ன மந்திரம் போட்டுவிட்டார்! கல் மனத்தையும் கரைத்துக் கால்களை இப்படி வேரூன்றச் செய்துவிட்டதே!' என்று ஆச்சரியப்படுகிறோம்.

முகமண்டலத்தில் இருந்து திருமேனி முழுதும் தரிசிக்கிறோம். 'சிற்பங்களின் பரிபூர்ணம் என்பது இதுதானோ!' என்று இதயம் பிரமிக்கிறது.

'பறந்துவிடுவாளோ தன் சிவலோக வீட்டுக்கு? இல்லை, அதற்குப் பதில் தன்னை நாடி வந்தவர்களுக்கும் உயர உயரப் பறப்பது போன்ற ஓர் உணர்ச்சியைத் தருகின்றாள்!' என்று ஒரு கணம் எண்ணுகிறோம்.

இந்தச் சந்நிதியில் இருந்து திரும்பும்போது, 'மறுபடியும் உன் தரிசனத்துக்கு வருகிறேன் தாயே!' என்று மானசிக உத்தரவு பெற்று வருகிறோம். ஆம், தேவியை ஒருமுறை பார்த்தவர்களுக்கு மறுமுறையும் வந்து பாராமல் இருக்க முடியாதே.

சந்நிதியிலிருந்து நாம் வருகிறோமே தவிர, நம் உள்ளம் விடைகொண்டு வரவில்லை. அந்தக் கொடியிடை, ஆபரணங்கள், லட்சுமிகரமான தோற்றம், நித்திய மங்களமான முகமண்டலம், ஜய மங்களமான இளநகை... கண்ணெதிரே தத்ரூபமாய் நிற்கிறாள் அம்பிகை.

அன்னையே தொடர்ந்து வருகின்றாளா? எங்கே திரும்பினாலும் அந்த மாதாவின் உருவம்தானே!

நாட்டம் எல்லாம் – அந்தத்
தாய்மேலே; – அவள்
தேட்டம் எல்லாம் – இந்தச்
சேய்மேலே!

இதுதான் கண்டியூர் மங்களாம்பிகை என்ற மங்களமான சிற்பச் செல்வம். நம் சிந்தனைச் செல்வமாகி நிலையாகக் கோயில் கொண்டுவிடுகிறது, ஒருமுறை தரிசித்ததும்.

வீற்றிருக்கும் அர்த்தநாரீஸ்வரர்!

சிவசக்தியைப் பிரித்து வழிபடுவது இயலாத காரியம் என்பதை வற்புறுத்துகிறது, அர்த்தநாரீஸ்வர சொரூபம்.

சிவம் வேறு, சக்தி வேறு என்ற தவறான உணர்ச்சியுடன் சிவத்தை மட்டும் பிரித்துப் பிரதட்சிணம் செய்ய விரும்பினாராம் அதிவீர சைவர் ஒருவர். அவருக்குச் சிவசக்தியின் ஒற்றுமையோடு ஒருமையையும் உணர்த்தவே, அர்த்தநாரீஸ்வர சொரூபம் தோன்றியது என்பர்.

சாதாரணமாக அர்த்தநாரீஸ்வரரை நின்று கொண்டு இருக்கும் பாவனையில் தான் சிற்பங்களில் பார்த்திருக்கிறோம்; தனியாகவும் பார்த்துள்ளோம். ரிஷப வாகனத்தின் மேல் கையை வைத்துக்கொண்டு நிற்கும் நிலையிலும் கண்டிருக்கிறோம். ஆனால், இங்கே கண்டியூரில் காணும் சிற்பம், உட்கார்ந்து ரிஷபத்தின்மேல் கையை ஊன்றியவாறு உள்ள அர்த்தநாரீஸ்வரர்.

மூன்று அடி உயரம்தான். என்றாலும் பெரிய உருவில் உள்ள சிற்பம்போல் அவ்வளவு அழகாக வேலைப்பாடுகளுடன் அமைந்திருக்கிறது.

வலது பக்கம் ஈஸ்வரன் உள்ள பாகம் என்பதை, அகன்ற மார்பும் திரண்ட தோள் வலிமையும், பார்த்தவுடனே தெரிவித்து விடுகின்றன.

ஒரு கை ரிஷபத்தின் மீது ஊன்றியும், மறு கை மழுவை ஏந்தியும் காணப்படுகின்றன. இடது பாகத்திலுள்ள மென்மை வாய்ந்த கையையும் பாருங்கள். அதில் தேவலோகத்து நீலோற்பல மலரையும் பாருங்கள். தூக்கி வைத்த காலின் மேல் முழங்கையை ஊன்றிக் கொண்டு தெய்வமலர் ஏந்தியவாறு தேவி காணப்படுகிறாள்.


ஜடை முதல் பாதம் வரை மாறுதல்கள் தென்படுகின்றன. இப்படிச் சிற்பம் அமைப்பதே ஒரு விசேஷம். கண்டியூர்க் கோயிலிலோ இந்த அர்த்தநாரீஸ்வரர் அதி விசேஷமானவர் என்று கருதலாம்.

ஸ்ரீபிரம்ம சிரகண்டீஸ்வரருக்கு நேரே பின்பாகத்தில் பிராகாரத்தில் உள்ள மண்டபத்தில் மேற்கு நோக்கியவாறு வீற்றிருக்கிறது அர்த்தநாரீஸ்வர சொரூபம்.

தம்மைப்போல் ஐம்முகனாக இருந்த பிரம்மனைச் செருக்கழித்து நான்முகனாக்கிய திருவிளையாடல் தேவிக்காகவே இத்தலத்தில் நடைபெற்றதாம். இதே ஸ்தலத்தில் அர்த்த நாரீஸ்வர சொரூபமும் விசேஷமாய் அமைந்திருப்பது பொருத்தம்தானே?

கோயில்களில் வழக்கமாய்க் காண்பது போல் சிலையில் மெழுகடைந்து நுட்ப வேலைப்பாடுகள் தெரியாவண்ணம் இங்கும் பாதுகாக்கப்படுகின்றது!

காலப்போக்கிலே நமது கலைகளும் சமய தத்துவங்களும் அழுக்கு அடைந்திருப்பதற்கு ஓர் அறிகுறிதான் கோயில் சிற்பங்களின் நிலையும்.



துர்க்கையும் விநாயகரும்

துர்க்கையையும் ஸ்ரீமங்களாம்பிகையையும் எத்தனை தடவை எழுதிப் பார்த்தாலும், நேரில் தரிசித்தாலும், உள்ளம் திருப்தி அடைவதில்லை. அங்கேயே நம்மைத் திரும்பத் திரும்ப இழுத்துச் செல்கிறது.


அழகு விழா


ஸ்ரீமங்களாம்பிகைக்கு பல வருட காலமாக லட்சார்ச்சனை நடைபெறாமல் இருந்ததாம். பிறகு 1951-ம் ஆண்டு ஆடி மாதம், முதல் வெள்ளிக் கிழமையில் அர்ச்சனை ஆரம்பித்துக் கடைசி வெள்ளிக் கிழமை (10.8.51-ல்) பூர்த்தி ஆயிற்றாம்.

வெகு சிறப்பாக மூலஸ்தானத்தில் சந்தனக் காப்பு அலங்காரம் செய்யப் பெற்றிருந்தது. அம்மன் ஊர்வலம் வந்த காட்சியோ கண் கொள்ளாக் காட்சி.

பக்தர்களின் உள்ளங்களில் என்றும் மறைந்து போகாத, மறக்க முடியாத, காட்சியாக நிலை பெற்றுவிட்டது விழா.

இதில் என்ன ஆச்சரியம்? கண்டியூரின் சிறப்பியல்பே ஸ்ரீமங்களாம்பிகையும், துர்க்கையும், பிரம்மனும்தானே?





அழகை அழகு செய்து பார்ப்பதில் எல்லோருக்கும் ஆசைதானே? பக்த ரசிகர்கள் தெய்விக அழகு கண்டு அர்ச்சனை அலங்காரங்கள் செய்து ஊர்வலம் செய்வித்துப் பரவசமாவது பொருத்தம்தானே?

விநாயகர்

இனி வேறொரு கலைச்செல்வத்தையும் நோக்குவோம்.

மங்களாம்பிகை கோயிலில் மேற்குப் பக்கத்தில் காட்சி அளிக்கிறார் இந்த விநாயகர். இரண்டடி உயரத்தில் ஓர் அழகுப் பெருஞ்செல்வம்.

தந்தத்தை ஏந்தி இருக்கும் கை பின்னமுற்று இருக்கிறது. அழகுச் செல்வத்தைப் பேணுவதில் நம்மவர் காட்டிவரும் அஜாக்கிரதைக்கு இதுவும் ஒரு சாட்சி.

இரு பக்கத்திலும் உள்ள பூதகணங்களைப் பாருங்கள். ஒரு பூதம் பலாப்பழத்தை வைத்துக் கொண்டு இருக்கிறது. மற்றது தலையில் அன்னத்தை ஏந்திக்கொண்டு இருக்கிறது. இவை இரண்டும் தயாராகக் காத்துக்கொண்டு இருக்கின்றன, பிள்ளையாரின் திருவுள்ளத்தை எதிர்நோக்கி.

'கண்டியூர் கூப்புக என் கை' என்றார் ஒரு பக்தர். எங்கே தூய அழகு காணப்படுகிறதோ, அங்கே பக்தி ஏற்படுவதும் இயல்பே!

காளியும் பைரவரும்

காளி

ஸ்ரீ பிரம்மசிரகண்டீஸ்வரர் திருக்கோயிலில், விசேஷ வேலைப்பாடுகள் இல்லாத ஒரு காளி சொரூபத்தையும் தரிசிக்கிறோம்.

ஆலயத்தின் வெளிப் பிராகாரத்தின் தெற்குப் பக்கத்தில் வடக்கு நோக்கியவாறு காட்சியளிக்கிறாள் பொற்காளியம்மை.

பார்த்ததும், தஞ்சை உக்கிரகாளி அம்மையின் நினைவு வருகிறது. உயரம் மூன்று அடி. வேலைப்பாடுகளில் விசேஷ அம்சங்கள் அதிகம் இல்லை. எனினும், தரிசிக்க வேண்டிய சிற்ப சொரூபம்தான்.

படத்தின் நடுவே தென்படும் கோயிலில்தான் இந்தக் காளி தரிசனம் அளிக்கிறாள்.

பைரவர்

பக்கத்தில் பைரவச் சிற்பம் பின்னமடைந்து இருக்கிறது. முன்னிரு கைகளிலும் பின்னம் இருக்கிறது.

வெளியில் வைத்திருப்பதால், இயற்கையின் சோதனைகளுக்கு உட்பட்டு உருத்தெரியாமல் இருக்கிறார் பைரவர்.

'திருவாசி'யுடனும் தம் வாகனத்துடனும் காட்சி அளிப்பதே ஒரு விசேஷம்தான். புல்-பூண்டுகள் முளைத்த பிராகாரமுடைய கோயில்தான் என்பதை, படம் ஞாபகமூட்டுகிறது.

***

ஒரு காலத்தில் நம் தமிழ் நாட்டிலும் காளி வழிபாடும் பைரவ மதமும் பரவி இருந்தன என்று ஊகம் செய்யலாம். பல்வேறு




பண்டைப் பழஞ்சமயங்கள், 'சிவ குடும்பத்தில் - அதாவது சைவ சமயத்திலே - அடைக்கலம் புகுந்து ஐக்கியமாகிவிட்டன என்று ஆராய்ச்சியாளர் ஊகிக்கின்றார்.

கண்டியூர்க் கோயில் போன்ற கோயில்கள், மேலே சொன்ன ஊகத்தை அரண் செய்கின்றன.

காளிதேவியைக் குறிக்கும் பாடல்கள் தமிழிலும் உண்டு. காளியின் உக்கிர அம்சங்களையும் பரத்வ நிலையையும் வெளியிடுகிற பாடல்களும் உண்டு. அந்தப் பழைய இலக்கியத் துணுக்குகளின் பரம்பரை முன்னும் இல்லை, பின்னும் இல்லை. பாரதியார்தான் 'சக்திப் பாடல்கள்' பாடித் தேசமாதாவின் வழிபாட்டுடன் ஆதி பராசக்தியான மாகாளி வழிபாட்டையும் சேர்த்துப் பாடியுள்ளார்.

பைரவர் வழிபாடோ, தனிவழிபாடாக இருந்த நிலை மாறி, நீண்டகாலம் ஆகியிருக்க வேண்டும்.



ராஜ கணபதி

எதிரில் வீற்றிருக்கிறாரே பிள்ளையார், கம்பீரமாய் - 'நாமுண்டு, நம் தொந்தி உண்டு' எனக் கொலு வீற்றிருப்பது போல், அவர் ராஜ கணபதி.

ராஜ கம்பீர்யம், தெய்வ கம்பீர்யம் என்றாலும் தகும் அந்தத் தோற்றத்தை. தொந்தி அழகும் மாட்சியும் பூர்ணமாக அமைந்துள்ளன அந்த விநாயகப் பெருமானுக்கு.

தொந்திக்குள்... தானே பெட்டிக்குள் வாங்கி வைத்துக்கொள்வதுபோல், அன்பர்கள் அன்புகூர்ந்து அளிக்கும் கொழுக்கட்டை முதலான பலகார வகைகளை வாங்கி வாங்கி வைத்துக்கொள்கிறார், பரம திருப்தியுடன்!

பக்தர்களும்,

நீயே சரணம்

நினதருளே சரணம் சரணம்!

என்று பணிந்து திருப்தி அடைகிறார்கள்.


திருக்கண்டியூர்ச் சிவாலயத்தில் ஸ்தல விருட்சத்தின் கீழே, சதாதப ரிஷி தவம் புரிந்துகொண்டிருக்கும் இடத்தில் வீற்றிருக்கின்றார் அந்த ராஜ கணபதி, கம்பீரமாக மேற்கு நோக்கிய வண்ணம்.

2½ அடி உயரம்தான். வேலைப்பாடுகளில் திருபுவனத்து விநாயகரை நினைப்பு ஊட்டுகிறார் அந்த ராஜ கணபதி. அவரைத் தரிசனம் செய்துகொண்டு, ஸ்தல விருட்சமாகிய வில்வ மரத்தையும் தரிசனம் செய்துகொண்டுதான், பிரம்ம சிரகண்டீஸ்வரர் கோயிலுக்குள் செல்கிறோம்.


கீழேயுள்ள படத்தின் வலது பக்கத்தில், வில்வ மரத்தின் கீழேயுள்ள சிறு கோயிலில் தான் ராஜ கணபதி வீற்றிருக்கிறார். அம்மன் கோயில், ஸ்வாமி கோயில் இவற்றின் வாசலையும் இப்படத்தில் காண்கிறோம்.

* * *

விக்னேஸ்வரராகிய கணபதியைத் தொழவே, சகல விக்கினங்களும் விலகிப்



போகும் என்றுதான், இவர் வழிபாட்டை முதலில் செய்துகொள்கிறார்கள். பிரம்மசிர கண்டீஸ்வரரையும், மங்களாம்பிகையையும் தரிசித்துப் பேறு பெறுவதற்கும், சிற்ப சௌந்தரியங்களை அனுபவிக்கவும்கூட, ராஜ கணபதியின் தயவு வேண்டியதுதானே?



சிதைந்த செல்வம்



ஸ்ரீ மங்களாம்பிகை கோயிலின் கிழக்குப் பாகத்தில் மகிஷாசுர மர்த்தினியின் சிற்பம் ஒன்று இருக்கிறது. சிரம் இல்லாத மகிஷாசுரமர்த்தினி!

இங்கே பிரம்மாவுக்குத்தான் சிரச் சேதம் ஏற்பட்டதாகப் புராணம் தெரிவிக்கிறது. பழைய ஐந்து முகங்களில் ஒன்றைத்தான் இழந்தான் பிரம்மன்; இழந்து நான்முகக் கடவுளானான். ஆனால், இந்த மகிஷாசுர மர்த்தினிக்கும் ஏன் இந்தச் சிரச்சேதம்?

அந்தப் பழைய எருமை அசுரனின் பரம்பரையினரில் யாரோ ஒருவனின் கைத்திறனோ, பழித்திறனோ?

இங்கே சித்திரத்தில்தான் சிரம் சேர்த்துக் காண்பித்து இருக்கிறது. அதாவது, கிரீடத்தில் இருந்து கழுத்து வரையில் பின்னமுற்று இருப்பதைப் படத்திலே பூர்த்தி செய்திருக்கிறது.

சக்கரமும், சிங்கத்தின் மேல் வைத்திருந்த கையும், சிங்க முகமும் பின்னமுற்று இருக்கின்றன. இந்த நிலையிலும், 'எவ்வளவு அருமையான சிற்பச் செல்வம்! எத்தகைய அழகு வாய்ந்த நுட்ப வேலைப்பாடுகள்!' என்று கலா ரசிகர்கள் வியந்து, 'அந்தோ, தலை இல்லையே!' என்று கலங்கிப் போகின்றனர்.

கிழக்கு நோக்கி இருக்கும் இச்சிற்பத்தின் உயரம் 4 அடி.

சிம்மத் தூண்கள்!

'எதார்த்த' கலைத்திறன்

சுருண்டு சுருண்டு காணும் பிடரி மயிரைப் (அடுத்த பக்கத்தில்) பாருங்கள். பயங்கரமான பார்வையைத்தான் பாருங்கள். திறந்த வாயில் உள்ள கோரப் பற்களின் கூர்மையைக் கண்டு, பயப்பட வேண்டாம் ஐயா! சிங்கம்தான் அப்படி அமர்ந்திருக்கிறது - அவ்வளவு எதார்த்தமாய்!

உயரம் மாத்திரம் மூன்று அடி, அவ்வளவு பெரிய சிற்பம். சிற்பியின் கைத்திறனும் கலைத்திறனும் எவ்வளவு எதார்த்தமாகப் புலப்படுகின்றன!


நடராஜ சந்நிதிக்கு எதிர் மண்டபத்தில் உள்ளது அந்த யாளித்தூண். பல்லவர் காலத் தூண்களை ஞாபகப்படுத்துகிறது. இத்தூணுக்கும் அம்மண்டபத் தூண்களுக்கும் பொருத்தம் இல்லை.

சில கோயில்களில் செய்திருப்பதுபோல் உபயோகம் இல்லாத சிற்பங்களை ஒரு மூலையில் போட்டுப் பின்னமாக்காமல், இங்கு இச்சிற்பத்தை உபயோகப்படுத்தி இருப்பது பாராட்டத்தக்கதே. ஒரே தூணின் இரு தோற்றங்களைத்தான் படத்தில் காட்டி இருக்கிறது.

நந்தியின் பார்வை

படத்தின் நடுவே உள்ள சிறு தூணும், அதன்பின் இருக்கும் நந்தியும், மங்களாம்பிகை அம்மன் சந்நிதிக்கு எதிரே துவஜஸ்தம்பத்துக்கு முன்புள்ள நந்தி மண்டபத்தில் உள்ள நந்தியும், பக்கத்தில் உள்ள தனித் தூணும்தான். இவற்றை ஒரே படத்தில் சேர்த்துக் காட்டியிருக்கிறது.


தூணின் பூர்த்தி அழகை அந்தச் சிறிய சிங்கத் தூணில்தான் காண முடிகிறது.



நந்தியின் இந்தக் கம்பீரமான சாய்வுப் பார்வையும் அழகாயிருக்கிறது.

இந்தக் காட்சியைக் கோயிலின் படத்திலே பார்க்கிறோம். பிரம்மசிரகண்டீஸ்வரர் கோயிலில் இருந்து வெளியே வரும்போது, நந்தியையும் அதன் பக்கத்திலுள்ள சிங்கத் தூணையும் பார்க்கிறோம்.

முந்தைய பக்கத்தில் உள்ள படத்தின் வலது பக்கத்தில் மங்களாம்பிகை கோயிலின் வாசல் தெரிகிறது.




ஈசன் தவம்

பிரம்மாவின் சிரம் கிள்ளிய பாவம் போவதற்காக, ஈஸ்வரன் தவக்கோலத்தில் எழுந்தருளி இருக்கிறார். இந்த ஒரே உருவத்தின் பல தோற்றங்களைத்தான் அடுத்த பக்கத்தில் பார்க்கிறீர்கள்.

ஈசனின் ஜடை அலங்காரத்தைப் பாருங்கள். உட்கார்ந்திருக்கும் தோரணையையும் பாருங்கள். தட்சிணாமூர்த்தியின் ஞாபகம் வந்துவிடுகிறது. முத்துச்சரங்களினால் ஆன யக்ஞோபவீதம். வலது பின் கை பின்னமுற்று இருக்கிறது.

சிரசைத் தவிர மற்ற அம்சங்களைப் பார்த்தால், முதலில் வந்த பிரம்மாவின் சிற்பம் ஞாபகத்துக்கு வருகிறது. ஆனால், இங்கே பத்மபீடத்தில் அமர்ந்திருக்கிறார்.

இந்தக் கோயிலில் உள்ள அழகிய சிற்பங்களில் முக்கியமானவை வடக்குப் பிராகாரத்தில்தான் இருக்கின்றன. இந்தச் சிற்பமும், வேலைப்பாடுகளினால் மிகவும் பிரபலமாக உள்ள அந்தப் 'பிரம்மா' சிற்பத்தின் பக்கத்திலேயே துர்க்கையை நோக்கியவாறு இருக்கிறது.



கோயில், மேற்கே பார்த்திருக்கிறது. மூலஸ்தானக் கோயிலின் பின்புறத் தோற்றத்தையும், சண்டேசுரர் கோயிலையும் முந்தைய பக்கத்தில் உள்ள படத்தில் பார்க்கிறீர்கள். ஈஸ்வரனின் தவக்கோலம், மூலஸ்தான கோபுரத்துக்கும் சண்டேசுரர் கோயிலுக்கும் நடுவே காட்சி அளிக்கிறது.


தெற்குப் பிராகாரமும் தெரிகிறது. லிங்கோத்பவர் - சிற்பம், விமானத்தின் கீழே தென்படுகிறது.

ஒரு குறிப்பு

கோயில் - கட்டடக் கலையில் அதிமுக்கியமான பகுதி, சிற்பம். இந்த அழகிய சிற்பங்களும், விசேஷமாக அந்தப் 'பிரம்மா' சிற்பமும், நீண்ட சரித்திர பரம்பரையிலே உழைத்து உழைத்துப் பெற்ற பிரமாத அனுபவத்திலே தோன்றியவை.

சைவ சமயத்தில், வைராக்கியமும் துறவு - மனப்பான்மையும் விசேஷமானவை. 'சுத்த அறிவே சிவம்' என்ற கொள்கையும் வற்புறுத்தப்படுகிறது. சுத்த அறிவின் கற்பனையழகு, தட்சிணாமூர்த்தி; வைராக்கியம், ஜடை அலங்காரத்துடன்கூடிய இந்தத் தவக்கோலத்தில் இனிது புலனாகும்.

சிற்பியின் பக்தி வைராக்கியம் நிறைந்த தவத்தொண்டே, இந்த 'இறைவன் தவம்' போன்ற சிற்பங்கள்.




பூஜிக்கும் பிரம்மன்!

கண்டியூரின் ஸ்தல விசேஷத்திலே பிரம்மாவுக்கு விசேஷ ஸ்தானம் இருக்கிறது. இதுவரை வந்திருக்கும் தென்னாட்டுச் செல்வங்களிலும், இந்த பிரம்மாவின் சிற்பச் சிறப்பு மிக விசேஷமாக அமைந்துவிட்டது.

இப்போது பூஜையில் இருக்கும் பிரம்மா - சரஸ்வதி சிற்பம், பின் காலத்திலே இங்குள்ள பழைய சிற்பத்தைப் பார்த்துச் செதுக்கியவைதான். சில மாறுதல்கள் இருந்தாலும், பல அம்சங்களிலும் பழைய சிற்பமும் இப்பிற்காலச் சிற்பமும் ஒரே மாதிரி அமைந்திருக்கின்றன.

இந்தச் சிற்ப விசேஷங்களைப் பார்க்கும் போது மெய் சிலிர்ப்பதை நீங்களும் உணர்வீர்கள். சப்த ஸ்தலங்களில் மற்றொரு ஸ்தலமாகிய திருப்பூந்துருத்தி போகும் மார்க்கத்தில் மறுபடியும் கோயிலின் தூரத் தோற்றத்தைப் நம்மால் காண முடிகிறது. அந்தக் காட்சியைத்தான் கிழே உள்ள படம் காண்பிக்கிறது.




தெய்வ அழகைச் சிற்றுளி முனையிலே படைத்துக்காட்டும் இந்தியாவின் சிற்பத்திறன், இப்போது மேல்நாட்டுக் கலைஞர்களாலும் ரசிகர்களாலும் பாராட்டப் பெற்று வருகிறது.

லண்டன் மாநகரில் 'ராயல் அகாடமி' என்ற கலைக்கழகத்தின் சார்பிலே நடைபெற்ற கலைக்காட்சி விழாவிலே லண்டன் மாநகரத்துப் பேர் பெற்ற கலா ரசிகர்கள் நமது சிற்பம், சித்திரம், உலோக வேலைப்பாடு முதலியவற்றைப் பரிசீலனை செய்து, நடுநிலையில் விளக்கமும் விமர்சனமும் செய்திருக்கிறார்கள். ஆனால், தமிழகத்துச் சிற்பங்கள் சித்திரங்களிலே நடராஜர் முதலான சிற்சில உருவங்கள் தவிர, மற்றவை இன்னும் உலகப் பிரசித்தி பெறவில்லை.

எனினும், கண்டியூர் க்ஷேத்திரத்தில் உள்ள பிரம்மாவைப் போன்ற சிற்பங்கள் பல உலகக் கலா ரசிகர்களின் கவனத்துக்கு உரியன என்றே தோன்றுகிறது.

இவற்றைத் தக்கமுறையில் விளக்க விமர்சனங்கள் செய்து, கலை உலகத்தின் கவனத்துக்குக் கொண்டுவருவது தமிழ் அறிஞர்களின் கடமையாகும்.



திருப்பூந்துருத்தி அற்புதங்கள்!

தஞ்சையில் இருந்து திருவையாற்றுக்குச் செல்லும் வழியிலே திருக்கண்டியூரில் சிற்பச் செல்வம் கண்டோம். பிறகு, அவ்வூரிலிருந்து மேற்கே உள்ள திருபூந்துருத்திக்கு வந்து சேருகிறோம். இங்குள்ள சிற்பங்களின் சிறப்பையும் கண்டுகளிக்க வேண்டும் என்றுதான்.

ஐயோ, ராவணன்!

கயிலயங்கிரியையும் துணிந்து தூக்குகிறான். தூக்கி எறிந்து, ஜய கோஷம் செய்துகொண்டு அப்பால் போகவேண்டும் என்பது எண்ணம். 'வடக்கே பரமேஸ்வரன், தெற்கே ராவணேஸ்வரன்' என்று அவ்வளவு பிரசித்தமாக வாழ்ந்தவன் அல்லவா?



'இனி, இரண்டு ஈஸ்வரர்களுக்கு இவ்வுலகில் இடமில்லை!' என்று கருதியவன் போல், ஒரே ராவணேஸ்வர ஆதிக்கத்தின் கீழ் ஒரே உலக ஆட்சியை அமைத்துவிட விரும்பியவன்போல் வந்திருக்கிறான். கயிலாசமும் ஆட்டம் கண்டு, பார்வதி தேவியும் பயந்து பரமேஸ்வரனின் காலைக் கெட்டியாகப் பிடித்துக்கொள்வதையும் கண்டுகொள்கிறோம்.

ஆனால் நிலைமையை முற்றவிடாமல், ஆரம்பத்திலேயே ஈஸ்வரன் தன் காலின் கட்டை விரலினால் மலையை ஓர் அழுத்து அழுத்துகிறார். கீழே உள்ள 'ஈஸ்வரனோ' பாரம் தாங்காமல் திணறி, திக்குமுக்காடித் தன்னுடைய இருபது கைகளாலும் மலை தன்மேல் விழுந்துவிடாமல் செய்துகொள்ளப் பெரும்பாடு படுகிறான்.

'நிறுத்தும் ஐயா! ஏதோ பிரத்யட்சமாய்ப் பார்க்கிற மாதிரி கதைக்கிறீரே! ஏதோ ஒரு பழங்கதையை' - என்கிறீர்களோ? ஆம், பிரத்யட்சமாக இவ்வளவும் பார்க்கிறோம், இதற்கு மேலும் பார்க்கிறோம், நாம் தரிசனம் செய்யும் கயிலாச சிற்பத்திலே.

இது, திருப்பூந்துருத்தி ஸ்ரீ புஷ்பவனநாதர் கோயிலில் உள்ள சிற்பம்தான். கோபுரத்தின் உட்புறம் நுழையும்போதே வடக்குப் பார்த்துத் தென்புறத்தில் இருக்கும் கயிலாச சிற்பம்தான்.

கயிலாசத்தின் மீதுள்ள பூதகணங்கள் தடுமாறுவதையும் சிற்பம் காட்டிவிடுகிறது. மலை மேலுள்ள யானை, சிங்கம் முதலியனவும் தங்களுக்கு ஆபத்து நேர்ந்துவிட்டதோ என்று அஞ்சி ஓலமிட்டு ஓடுகின்றன. இந்தக்



காட்சியையும் கண்ணெதிரே காட்டுகிறார் சிற்பி.

பரமேஸ்வரன் பக்கத்தில் ஒரு லிங்கம் இருக்கிறது. கீழே ராவணனின் சாரதி ரதத்தில் நின்றுகொண்டு, எந்த நிமிஷமும் புறப்படத் தயாராக இருப்பதையும் பார்க்கிறோம்.

இந்தச் சிற்பத்தை இன்னும் கவனித்துப் பார்த்தால், அரக்கன் உக்கிரமாக மலையை எடுக்க முயல்வதையும், இறைவன் புன்சிரிப்புடன் அதைச் சமாளிப்பதையும் பார்க்கலாம்.

காலனை வென்ற கோலம்

கையிலாசச் சிற்பத்துக்கு நேர் எதிரே ஈஸ்வரனின் விஸ்வரூபத்தையும், அதனால் கால சம்ஹாரம் ஏற்படுவதையும் பார்க்கிறோம். இந்தக் காட்சியையும், சிற்பி கண்ணெதிரே காட்டியிருக்கிறார். ஈஸ்வரனின் உக்கிர தாண்டவ கோலமே, பார்த்துப் பயந்துவிடும்படி அவ்வளவு தத்ரூபமாக அமைந்திருக்கிறது.




பூவின் நாயகன்

சிறிது பின்னமான சிற்பச் செல்வங்களைப் பெரும்பாலும் பாழாக்கிவிடாமல், இந்தக் கோயிலின் உட்புறத்துப் பிராகாரத்தில் நாம் பார்த்து ரசிக்கும்படி சுவரில் வைத்திருக்கிறார்கள். ஆனால், அற்புத வேலைப்பாடுகளோடுகூடிய இந்த மகிஷாசுரமர்த்தினியை மட்டும் எல்லோரும் பார்த்து ரசிக்க முடியாதபடி வைத்துவிட்டார்கள்.

தெற்குப் புறத்து வெளி மதிலின் வெளிப்புறம் தென்னந்தோப்பில் சுவரில் இருப்பதால்தான் இந்த மகிஷாசுரமர்த்தினியை ஸ்ரீபுஷ்பவனேஸ்வரர் கோயிலுக்குத் தரிசனம் செய்ய வருவோர் லேசாகப் பார்த்துவிட முடியவில்லை. இனிமேலாவது இந்த அழகிய சிற்பத்தைக் கோயிலுக்குள் எடுத்துக் கொண்டுவந்து கலா ரசிகர்கள் பார்த்து அனுபவிக்குமாறு வைப்பார்கள் கோயில் அதிகாரிகள் என்று நம்புகிறோம்.

இந்தச் சிற்பத்தில் அபயஹஸ்தம் பின்னமாகி இருக்கிறது. ஆனால், பின்னமானதுகூடத் தெரியாமல் செய்து விட்டார்கள் இங்கே.



கோயிலின் தோற்றம்

இதோ கோயிலின் முழுத் தோற்றத்தையும் அடுத்தடுத்த பக்கங்களில் காண்கிறோம். இதே கோயிலில் சைவ சமயாசாரியர் நால்வரில் ஒருவரும், தேவாரம் பாடிய மூவரில் ஒருவருமாகிய அப்பர் ஸ்வாமிகள் பணி செய்திருக்கிறார். எத்தகைய பணி தெரியுமா? பிராகாரங்களில் உள்ள புல்-பூண்டுகளைச் சுத்தம் செய்யும் திருத்தொண்டினையும் மேற்கொண்டவர் 'அப்பர்' என்கிற திருநாவுக்கரசர் பெருமான்.

இந்தப் பக்கத்தில் உள்ள படத்தில் மூன்றாவது கோபுரம், அதற்குள் முன் விலகியிருக்கும் நந்தி, பக்கத்தில் வசந்த மண்டபம், மரங்களின் நடுவில் மூன்று கலசம் தெரியும் ஏகௌரியம்மன் கோயில் முதலிய காட்சிகளைப் பார்க்கிறோம்.

அடுத்த பக்கத்தில் அம்மன் கோயில் கர்ப்பக்கிரக விமானத்தையும், ஸ்ரீகாசி விஸ்வநாதர் கோயில் வெளிக் கோபுரத்தையும் நந்தவனத்துக்குச் செல்லும் வழிகளையும் காண்கிறோம்.

மேலும், ஏகௌரி சிற்பத்தை மூன்றடி உயரத்தில் உட்கார்ந்த கோலத்தில் அங்கே பார்க்கிறோம். துர்க்கைக்குப் பதிலாக 'ஏகௌரி' என்ற பெயருடன் தனியாகவுள்ள கோயிலில் எழுந்தருளியிருக்கும் இத்தேவி, பக்தர்களின் பிணிகளையும் இடர்களையும் தீர்த்துவைப்பதாக நம்புகிறார்கள்.

* * *

'**தி**ருப்பூந்துருத்தி' என்ற இந்த ஸ்தலம் திருவையாற்றினை உள்ளிட்ட சப்த ஸ்தலங்களில் ஒன்று. காவிரியின் தென் கரையிலுள்ள பதினோராவது ஸ்தலம்.

ஆற்றிடைக் குறையை 'அரங்கம்' என்று கூறுவதுபோல், 'துருத்தி' என்றும் கூறுவது உண்டு. திருவரங்கம் என்ற ஸ்ரீரங்கம் ஆற்றிடைக் குறை என்பது பிரசித்தம். ஒரு காலத்தில் திருப்பூந்துருத்தியும் ஆற்றிடைக் குறையாக இருந்ததுபோலும்!

பெரிய புராண ஆசிரியரான சேக்கிழார் பெருமான், 'பொன்னி (காவேரி) வலம் கொண்ட திருப்பூந்துருத்தி' என்று பாடி இருக்கிறார்.

'உலையூது கருவியாகிய உலை மூக்கும் துருத்தி!' என்று சொல்லப்படுகிறது. உலை மூக்கை லிங்கமாகப் பூஜித்ததால் 'பூந்துருத்தி' என்ற பெயர் வந்தது என்பாரும் உண்டு.

இதற்கு ஒரு கதையும் சொல்கிறார்கள்.

ஒரு சோழராஜா, சிவாலயத்துக்குக் கும்பாபிஷேகம் செய்த பின்பே உண்பதாக விரதம் பூண்டிருந்தாராம். குறிப்பிட்ட தினத்தில் லிங்க வடிவு பூர்த்தியாகவில்லை. சிற்பிகள், அரசனின் ஆணைக்கு அஞ்சி உலையூதும் துருத்தியில் மணலை நிரப்பி லிங்க வடிவாக்கிப் பிரதிஷ்டை செய்தார்களாம். அபிஷேகம் முடிந்து அரசனும் போய்விட்டான்.

சிற்பிகள், லிங்க வடிவம் பூர்த்தியடைந்த பிறகு துருத்தியை எடுக்க முயன்றனர்; முடியாததால் திகைத்துப் போயினர். இறைவன் அரசனுக்குக் கனவில் தோன்றினார். அரசன் விழித்து விரைந்து வந்து பார்த்தான். துருத்தியும் லிங்க



வடிவமாய்ப் பிரசன்னமாக இருந்தது கண்டு, இறைவனின் திருவருளை வியந்து திரும்பினான் என்ற ஐதிகமும் உண்டு.

இந்திரன் முதலான தேவர்கள் வைகாசி பௌர்ணமியன்று தெய்வ மலர்களைக் குடலை குடலைகளாகக் கொண்டுவந்து அர்ச்சித்ததால் இந்த ஸ்தலம் ஒரே புஷ்ப வனமாகி இறைவனும் 'புஷ்பவனநாதர்' என்றும், 'புஷ்பவனேஸ்வரர்' என்றும் பெயர் பெற்றார் என்பர்.

இந்த இறைவனைப் 'பூவின் நாயகன்' என்பார் அப்பர் ஸ்வாமிகள், தேவாரத்திலே.

பூவின் நாயகன்
பூந்துருத் திந்நகர்த்
தேவன் சேவடிக்
கீழ்நாம் இருப்பதே!

என்பது அப்பர் வாக்கு.

இப்பெரியார் திருவையாற்றில் கயிலைக் கோலம் தரிசித்த பின் திருப்பூந்துருத்தியில் மடம் அமைத்துக்கொண்டு ஆலயத் தொண்டும் பாடல் தொண்டும் செய்து வாழ்ந்தார். அந்த மடம், இன்றும் சிதைந்த நிலையில் காணப்படுகிறது.

அப்பர் கைத்தொண்டு செய்த ஸ்தலம் என்பதால், மிதிக்க அஞ்சித் திருஞான சம்பந்தர் கோபுர வாசலில் நின்றபடியே தரிசிக்க விரும்பினாராம். அதற்காக நந்தியை இறைவன் விலகச் செய்தாராம். நந்தி விலகியுள்ள காட்சியை இன்றும் நாம் பார்க்கும்படி அமைத்திருக்கிறார்கள்.







காவல் தெய்வங்கள்

ஸ்ரீ புஷ்பவனேஸ்வரர் சந்நிதியின் தெற்குப் பக்கத்தில் இருக்கிறார் இந்த அதிசய துவாரபாலகர். பொதுவாகத் துவாரபாலகர்கள் பயங்கரமாகத்தானே தோற்றம் அளிப்பது வழக்கம்? ஆனால், இவரைப் பார்த்தால் பயம் ஏற்படுவதில்லை.

இந்தத் துவாரபாலகரோ, கிருஷ்ணன் மலையைத் தூக்குவது போன்ற தோரணையில் அமைக்கப் பெற்றிருக்கிறார். பழங்காலத்துச் சிற்பம்.


பொரிந்துபோன கல்லைப் பார்த்தவுடன் தெரிந்துகொள்கிறோம், இவர் காலங்கண்ட துவாரபாலகர் என்று.

மற்றத் துவாரபாலகர்களை இப்போதுள்ள இரண்டாவது கோபுரத்தின் அடியில் காண்கிறோம்.

முதலில் இந்த இரண்டு கோபுரங்களுக்கும் இடையே ஒரு கோபுரம் இருந்திருக்கிறது. அதனடியில்தான் முன்பு இந்தத் துவார பாலகர்கள் காவல் புரிந்துகொண்டு இருந்தார்கள். இரண்டாவது கோபுரத்தை இடித்த பிறகு, இப்போதிருக்கும் கோபுரத்தின் அடியில் இவர்கள் அடைக்கலம் புகுந்து இருக்கிறார்கள்.

வடக்குப் பக்கம் இருக்கும் துவாரபாலகர் மீது நம் திருஷ்டி விழுந்து, அக்காட்சியில் இருந்து நம் கண்ணை விலக்கிக்கொள்ள முடியாமல் செய்துவிடுகிறது.

ஜடையின் வேலைப்பாடுகள் எவ்வளவு அழகாக இருக்கின்றன என்பது, மற்ற


சில்பி

இருவேறு விதமான தோற்றங்களின் மூலமாக நமக்குக் காட்டப்படுகிறது. இந்தச் சிலையில் பயங்கரத்தோடு கூடிய சிரிப்பையும் நம்மால் பார்க்க முடிகிறது.

ஏழு அடி உயரமுள்ள இந்த இரு துவாரபாலகர்களிலும், இந்தக் கோயிலில் உள்ள மிக அழகிய வேலைப்பாடுகளை நாம் பார்த்து ரசிக்க முடிகிறது.

பக்கவாட்டில் காட்டியிருக்கும் இந்தத் துவாரபாலகரின் பாவம் தான் எவ்வளவு அழகாக இருக்கிறது!

இந்தப் பக்கத்தில் உள்ள துவார பாலகரில் சில மாறுதல்களைக் காண்கிறோம். கங்கை கொண்ட புரத்துச் சிற்பம் மாதிரி இங்கும் யானையை ஒரு பாம்பு விழுங்குகிறது. கதாயுதத்தில் பல்லி ஒன்று ஏறுவதையும் பார்க்கிறோம். தூக்கி மிதித்துக்கொண்டிருக்கும் காலின் கீழுள்ள புற்றிலிருந்துதான் பாம்பு வெளி வந்திருக்கிறது.

மணிகளினால் ஆன மாலை ஒன்று தொங்குகிறது. இங்கும் சிங்கம் ஒன்று கால்களின் கீழே பயங்கரமாய் காட்சியளிக்கிறது.

இந்த அருமையான ஸ்தலத்துக்கு இசைந்த ரீதியில் துவாரபாலகர்கள் அமைந்திருப்பதும் பொருத்தம் தானே!



தியாக சௌந்தரியம்...

மூலஸ்தான விமானம் பாதி வரை கற்களால் ஆனது. வடக்குப் புறத்தில் விமானத்தின் மேலுள்ள சிற்பத்தைத்தான் முதலில் பார்க்கிறோம்.



துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனம்

இறைவன், பாம்பை ஏந்தியிருக்கும் கோலத்தைப் பாருங்கள். அபயம் அளிப்பதையும் பாருங்கள். சிஷ்ட பரிபாலனமாக அபயதானம் செய்யவும், அதேசமயம் துஷ்ட நிக்கிரகமாகப் போரில் பிரயோகம் செய்யவும் தயாராக இருப்பது போலக் காட்சி அளிப்பது தெரிகிறது அல்லவா?

ஒரு புறமாகச் சாய்ந்துகொண்டு நாகத்தைக் கையில் தூக்கி ஏந்தியிருக்கும் கோலத்தை உற்று நோக்கினால் ஈசனுக்கு எதிரே யாரோ அபயம் கேட்பதுபோலவும், அதற்காக விரோதியை வதம் செய்யத் தயாராக இருப்பதுபோலவும் தோன்றுகிறது என்பதில் ஐயமில்லை.



துஷ்ட நிக்கிரகமும் சிஷ்ட பரிபாலனமும் ஒரே நாணயத்தின் இருபுறமே ஆகும் என்பதும், இரண்டும் ஈசன் அருளின் இருபுறம்தான் என்பதும், இந்து சமயக் கொள்கை. சிஷ்ட பரிபாலனம் அல்ல பக்த பரிபாலனத்தை அறக்கருணை என்றும் துஷ்ட நிக்கிரகத்தையும் அசுர சுபாவங்களையும் ஒழிப்பதையும் மறக் கருணை என்றும் விசேஷமாய்ச் சிவநேசச் செல்வர்கள் வற்புறுத்தவது உண்டு.

ஜடாமகுடம்

இத்தகைய பேரருளாளனாகிய பெருமான், தனது சர்வலோக ஆட்சிக்கு அறிகுறியாக நீள்முடியாகிய கிரீடம் தரித்திருக்கிறான் என்கிறது ஸ்ரீவைஷ்ணவம். சைவமோ, இறைவன் ஜடாமுடி தரித்திருக்கிறான் என்கிறது.

ஜடாமகுடம் துறவின் அறிகுறி. 'துறந்த செல்வமே நிறைந்த செல்வம்' என்பது, வேதாந்த சித்தாந்தக் கொள்கைகள் ஒருமுகமாய் ஒப்புக்கொள்ளும் உண்மை. இத்தகைய ஜடாமகுடத்தின் அழகு, இங்குள்ள சிற்பங்களில் பன்மடங்கு அதிகமாக இருப்பதைக் காணலாம்.

ஜடாமுடியின் அழகு என்றால் சிவபெருமானின் தியாக சௌந்தரியத்துக்கு அறிகுறி அல்லவா? திருமாலின் செல்வம் 'உடைமை' என்றால், சிவபெருமானின் தனிப் பெருஞ்செல்வம் 'துறவு.' சர்வாங்க சுந்தரனாகிய திருமாலின் அழகு 'ரூப ஸம்பத்து' என்றால், சிவபெருமானின் அழகு ஜடைமுடியை அணியாகக் கொண்ட 'தியாக சௌந்தரியம்.'

நித்திய கல்யாணம்

நேரே பின்புறம் விமானத்தின் மேல் மேற்கே பார்த்து இந்தக் கல்யாணக் கோல தம்பதிகள் (எதிர்ப் பக்கத்தில்) காட்சி அளிக்கிறார்கள். என்ன ஒய்யாரமாகக் கையை ஊன்றியவண்ணம் காணப்படுகிறாள் தேவி! ஒரு கை, தூக்கி வைத்துக்கொண்டிருக்கும் காலின் மேல் வைக்கப் பெற்றிருக்கிறது.

தியாக மூர்த்தியான சிவபெருமானுக்குத் தியாக சௌந்தரியமும் நித்திய கல்யாண வைபவமும் ஒரே நாணயத்தின் இருபுறம் போலத்தான். அது வைராக்கியத் திருக் கோலம் என்றால், 'யோக வடிவம்' என்றால், இந்தக் கல்யாணத் திருக்கோலம் 'போக சொரூபம்', அருளின் திருக்கோலம்.

மூலஸ்தானத்து விமானத்தில் கிழக்குப்புறம் ரிஷபத்தின் மேல் கையை வைத்துக்கொண்டு தம்பதி சமேதராக நிற்கும் பரமேஸ்வரனைப் பாருங்கள்.




தேவி நிற்பதில்தான் எத்தனை கோணல்கள்! இப்போதுதான் புது மணமாகிப் புருஷனுக்குச் சமீபத்தில் நிற்பவள்போல் நாணிக் கோணி அல்லவோ நிற்கிறாள்!

இந்த நித்திய கல்யாண வைபவம்தான் இந்த உலக வாழ்க்கையைக் குதூகலமாக நடத்தி வைக்கிறது. 'இறைவன், இப்படிப் பெண்ணிடம் பிரியமாக இல்லாவிட்டால் இந்த உலக வாழ்க்கையே ஒழிந்துபோகும்' என்பர் மணிவாசகப் பெருமான்.

அழகார்ந்த நாயகி

ஸ்வாமியைப் 'புஷ்பவன நாதர்' என்று, அந்த விசேஷ சௌந்தரியத்தையும் சேர்த்துப் போற்றுவதுபோல், அம்மையை 'அழகார்ந்த நாயகி' என்றும் 'சௌந்தர நாயகி' என்றும் போற்றுகிறார்கள். தேவிக்குத் தனியே கோயில் உண்டு. இரண்டு பிராகாரங்கள் உடையது.

இந்த அம்மன் கோயிலின் அர்த்தமண்டபத்தில் கிழக்குப் பக்கம் பழைய சௌந்தர நாயகி அம்மனை வைத்து இருக்கிறார்கள். மூக்கு சிறிது பின்னமாகி இருப்பதால், வெளியில் வைத்திருக்கிறார்கள். இடை அழகு இங்கேதான் பூர்ணமாக அமைந்திருக்கிறது. நான்கு அடி உயரத்தில் கம்பீரமாகப் புன்னகையுடன் காட்சி அளிக்கிறாள்.



மூன்று கோலங்கள்


சிவபெருமானுடைய அர்த்தநாரீஸ்வர சொரூபம், சில மகத்தான சைவ சமய உண்மைகளை வெளியிடுகிறது. அப்பர் ஸ்வாமி தமது திருப்பூந்துருத்திப் பதிகத்தில் - முதலாவது பதிகத்தில் இரண்டாவது பாட்டிலேயே -


'மாமலை மங்கை ஓர் பால் குறியுடையான்'

என்று அர்த்தநாரீஸ்வர சொரூபத்தை ஞாபகப்படுத்துகிறார்.

இங்கே பார்க்கும் அர்த்தநாரீஸ்வரச் சிற்பங்களில் இடது பக்கத்தில் இருப்பது, ஸ்ரீ புஷ்பவனேஸ்வரரின் பின்புறம் லிங்கோத்பவர் இருக்க வேண்டிய இடத்தில் மேற்குப்புறம் பார்த்து இருக்கிறது.

மற்றது, இரண்டாவது பிராகாரத்தின் வடக்குப் பக்கத்து மதிலில் யாகசாலை மண்டபத்துக்கு எதிரே தெற்குப் பார்த்து இருக்கிறது.





இவை ஒவ்வொன்றிலும் ஓர் அழகைச் சிற்பிகள் காட்டியிருக்கிறார்கள். கோயிலின் வெளியே இருப்பதில் இடையழகும், தேகத்தின் நெளிவுகளும் இயற்கையாக இருக்கின்றன. ஆனால், மற்றதில் ரிஷபத்தின்மேல் வைத்திருக்கும் கையும் நீலோற்பல மலரை வைத்திருக்கும் கையும் இயற்கையாக அமைந்துவிட்டன.

இரண்டு சிற்பங்களிலும், கிரீடங்களில் இடது பக்கத்தில் சாதாரணமாக ஒரே அமைப்பாக இருக்கிறது. ஆனால், மற்றதில் ஈஸ்வரனுள்ள பாகத்தில் ஜடை அழகும், மற்றப் பாதியில் அம்மனுக்கு உள்ள அழகும் வேறுபட்டுக் காண்கின்றன.


'மாதினை மதித்தான் ஒரு பாகமாக் காதலால்'

என்று அப்பர் ஸ்வாமிகளின் பூந்துருத்திப் பதிகம் ஒன்றில் வரும் அர்த்தநாரீஸ்வர வருணனைக்குப் பொருத்தமாக இருக்கிறது.

வஸ்திரக் கட்டின் அழகு, இடது பக்கத்துச் சிற்பத்தில்தான் பூர்ணமாகத் தென்படுகிறது. அங்கு உள்ள ரிஷபம், மூலஸ்தான விமானத்தில் மேல்புறம் இருக்கிறது.

பிட்சாடனர்

கர்ப்பக்கிரகத்துக் கோமுகியின் மேல் சாதாரணமாகப் பிரம்மா இருக்க வேண்டிய இடத்தில் பிட்சாடனர் இருக்கிறார். 'இருக்கிறாரா என்ன? நடந்தல்லவா வருகிறார் நம்மை நோக்கி?' என்று சொல்லத் தோன்றுகிறது.



தலையாலே பலி தேரும் தலைவனைத்

தலையே நீ வணங்காய்!

என்று அப்பர் ஸ்வாமிகள் பாடிய திரு அங்கமாலை பாடித் தலைவணங்கலாம் என்று தோன்றுகிறது.

இதுவரை பார்த்த பிட்சாடனர்களில் உள்ள தேக நெளிவுகள் இச்சிற்பத்தில் இல்லை. கிரீட அமைப்புதான் இச்சிற்பத்தின் விசேஷ அம்சமாக அமைந்துவிட்டது.

தட்சிணாமூர்த்தி

இங்கே வீணாதர தட்சிணாமூர்த்தியைத் தரிசிக்கிறோம். இதுவரை தட்சிணாமூர்த்தி என்றதும் சின்முத்திரையுடன் உபதேசம் செய்பவரைத்தான் கண்டிருக்கிறோம்.

இங்கு ஆனந்தமாக வீணையின் நாதத்தை ரசிக்கும் ரீதியில் பார்க்கிறோம். வீணாகானத்தை அனுபவிக்கும் ஆனந்தம், முகத்திலும் பிரதிபலிக்கிறது.

அப்பரின் திருத்தாண்டகத்திலே வீணாதர தட்சிணாமூர்த்தியைப் பூந்துருத்தியில் கண்டதாகப் பாடியிருக்கிறார்:

பற்றாலின் கீழ்அங்(கு)

இருந்தான் தன்னை,

பண்ணார்ந்த வீணை

பயின்றான் தன்னை,

புற்றா(டு) அர(வு)ஆர்த்த

புனிதன் தன்னை,

புண்ணியனை, பூந்துருத்திக்

கண்டேன் நானே!

வீணாதர தட்சிணாமூர்த்தியை இந்த க்ஷேத்திரத்தில் கண்டதாக அப்பர் பாடியிருக்கிறார். சின்முத்திரை காட்டிச் சொல்லாமல் சொல்லி உபதேசம் செய்யும் குருமூர்த்தியை,

கல்லா தன எல்லாம்

கற்பித் தானை,

காணா தன எல்லாம்

காட்டி னானை

என்று இந்த ஸ்தலத் தாண்டகத்திலே அப்பர் வழிபடுகிறார்.



இப்படிக் *'காணாதன எல்லாம் காட்டி'* உபதேசிப்பதற்கு மௌனம் போதாதென்று தட்சிணாமூர்த்தி *'பண்ணார்ந்த வீணை'* பயின்றார் போலும்!

இடது பக்கப் படத்தில் கோயிலின் உட்புறத் தோற்றத்தையும், இரு விமானங்களுக்கும் நடுவே வீணாதர தட்சிணாமூர்த்தி சந்நிதியையும் தரிசிக்கிறோம்.

திருவையாற்றை போலவே மூலஸ்தானத்துக்கு இருபுறங்களிலும் தட்சிண கயிலாசம், உத்தர கயிலாசம் (வட கயிலாயம்) என்ற இரண்டு சிறு கோயில்களும் இங்கே உண்டு.

'சிதம்பர' சிற்பங்கள்!

கோயில் என்றாலே 'தில்லை' என்ற சிதம்பரத்தைத்தான் குறிக்கும். இது, தமிழகத்தின் பழைய கோயில்களில் ஒன்று. ஒரு காலத்தில் தில்லை மரங்கள் அடர்ந்த வனமாக இருந்ததாம், இந்தத் தில்லை ஸ்தலம். இந்த ஸ்தலத்துக்குத் 'தில்லைவனம்', 'வியாக்கிரபுரம்' முதலான பல பெயர்கள் உண்டு.


சிவ க்ஷேத்திரங்கள் பலவற்றிலும் சிறந்து விளங்குவது சிதம்பர க்ஷேத்திரம். இதனை 'விசேஷ க்ஷேத்திரம்' என்றும், 'இதய ஸ்தானம்' என்றும் சொல்கிறார்கள்.

மற்ற ஸ்தலங்களில் உள்ள தெய்வங்கள் எல்லாம் இந்த இதய ஸ்தானத்தில் ஒடுங்கி, மீண்டும் காலையில் அந்தந்த ஸ்தலத்துக்கு அந்தந்தக் கலைகள் செல்லும் என்பது சிவபக்தர்களின் நம்பிக்கை.

அந்தந்தக் கலைகள் எல்லாம் இரவு அர்த்தஜாமத்தில் மீண்டும் வந்து சேருவதால் இங்கே அர்த்தஜாம தரிசனம் அதிவிசேஷம் என்பர்.

இங்குள்ள ஸ்தல லிங்கத்துக்குப் பெயர், 'ஸ்ரீ மூலநாதர்'. மூலநாதர் எழுந்தருளி இருக்கும் இடம் மூலஸ்தானம்.

ஸ்ரீ நடராஜ மூர்த்தியின் நடன தரிசனத்துக்கு முன் வியாக்கிரபாதர், பதஞ்சலி போன்ற முனிவர்கள் அந்தத் தாண்டவ தரிசனம் பெறவேண்டும் என்று







நீண்டகாலமாக இந்த லிங்கத்தைத்தான் பூஜித்து வழிபட்டுத் தவம் கிடந்தனராம். அம்முனிவர்களின் தவத்துக்கு இரங்கித்தான் நடராஜ தரிசனம் ஏற்பட்டதாம்.

40 ஏக்கர் விஸ்திரணம் உள்ள நிலத்தில் அமைந்து இருக்கிறது ஆலயக் கட்டடம். நான்கு உன்னத கோபுரங்கள், சிறந்த சித்திர வேலைப்பாடுகள் நிறைந்தனவாகக் காண்கின்றன. சிற்ப அலங்காரங்கள் மனோகரமானவை.

ஊர்த்வ தாண்டவ மூர்த்தி

துவஜஸ்தம்பத்துக்குத் தெற்கே உள்ள நிருத்த சபையில் ஊர்த்வ தாண்டவச் சிற்பம் காணப்படுகிறது. காளிக்கும் நடராஜருக்கும் நடந்த நடனப் போட்டியில் கடைசியான கட்டம் இந்தக் காட்சி.

பெருமான் வலது காலைத் தலைமீது தூக்கியபடி நடனம் செய்வது 'ஊர்த்வ தாண்டவம்'. கீழே சிற்பத்தில் காளியின் தோற்றமும் இருக்கிறது.

பாணாசுரன் எட்டுக் கைகளுடன், பஞ்சமுக வாத்தியம் வாசிக்கும் தோரணையில் சிற்பம் கீழே அமைக்கப்பட்டிருக்கிறது.

நடனசபையின் கீழ் வரிசைகளில் நடராஜர் சந்நிதியைப் பார்த்தவாறு நேர் எதிரில் உள்ள சிற்பத்தைத்தான் படத்தில் காட்டப்பட்டுள்ளது.

சிற்பத்தின் உயரம் ஓர் அடிதான் என்றாலும், பெரிய சிற்பங்களில் காட்டியுள்ள வேலைப்பாடுகள் இதிலும் காண்பிக்கப்பட்டுள்ளன.

நடன கணபதி

கோயிலில் நடராஜர் விசேஷமாக இருந்தாலும் முதலில் பிள்ளையாரின் அனுக்கிரகம் பெற்றுத்தான் மற்றக் காரியங்கள் நடைபெறுகின்றன. ஆறுகால பூஜைகளுக்கும் முதலில் இந்தக் கணபதிக்கு நைவேத்திய திபாராதனைகள் ஆனபிறகுதான் நடராஜருக்கு நடைபெறுகின்றன.

ஆனந்தத் தாண்டவத்தின்போது அங்குள்ள எல்லோரும் மெய்ம்மறந்து தாண்டவம் ஆடினார்களாம். அப்போது கணபதி மாத்திரம் சும்மா இருந்திருக்க முடியுமா? விநாயகரும் நடனமாடினார் என்பது இந்த நடன விநாயகர் மூலமாகத் தெரிய வருகிறது.

சிற்பத்தின்மேல் காட்டி இருக்கிறது, மேக மண்டலத்தில் தேவகணங்கள், முனிகணங்கள் முதலானோர் இந்த நடனத்தை அனுபவிப்பதாக.

நடன சபையிலே..!

ஸ்ரீ நடராஜர் கோயிலில், சிற்பக் கலைக் கஞ்சியங்கள் நிறைந்து காணப்படுவது 'நடன சபை' என்ற நிருத்த சபையில்தான். இது, ஸ்ரீ நடராஜ சந்நிதிக்கு முன் உள்ளது. இது, இங்குள்ள ஐந்து சபைகளில் ஒன்று.

சித்சபையிலே நடராஜர் எழுந்தருளி இருக்கிறார். இது சிற்றம்பலம். பெருமான் திருமஞ்சனமாடும் இடம் 'கனகசபை' என்ற 'பொன்னம்பலம்'. உத்ஸவ மூர்த்திகள் எழுந்தருளி இருக்கும் இடம் 'தேவசபை' என்ற 'பேரம்பலம்'. ஆயிரங்கால் மண்டபத்தை 'ராஜ சபை' என்பர்.

அழகு தாங்கும் மண்டபம்

'நிருத்த சபை' என்ற மண்டபம் முழுதும், ரதத்தைக் குதிரைகள் கட்டி இழுப்பதுபோலப் பின்னால் அமைந்த சக்கரங்களுடன் தோற்றம் அளிக்கிறது.

குதிரை முதலிய அழகிய சிற்பங்கள் பின்னமுற்று இருக்கின்றன. ஒவ்வொரு சிறு சிற்பத்திலும் சிறு சிறு பின்னங்கள் தென்படுகின்றன.


எட்டுக் கால்களை உடைய இரு பெரிய தூண்கள் இங்கு நடன சபை முன் கம்பீரமாய் காட்சியளிக்கின்றன.


சிற்பக்கலை ஆராய்ச்சி நிபுணராகிய 'பெர்குஸன்' நிருத்த சபையை, 'எங்கும் காண்பதற்கு அரிய சித்திர வேலைப்பாடு அமைந்த ஐம்பத்தாறு தூண்கள் தாங்குகிற மண்டபம்' என்று குறிப்பிடுகிறார்.

ரிஷபமும் தாமுமாய்

ஸ்ரீ விருஷபாங்க மூர்த்தியைப் பூர்ணமாக இங்கே தரிசிக்கிறோம். அதாவது, விருஷப சின்னத்தை உடைய மூர்த்தியை நடன சபையின் மேல் பக்கத்தில் காண்கிறோம்.

இதுவரை பார்த்த விருஷபாங்க மூர்த்திகளில் இதுதான் மிகவும் அழகாய் அமைந்திருக்கிறது.





பார்வதி சமேதராக உள்ள இம்மூர்த்தியை மேலேயிருந்து சூரிய-சந்திரர்களும் தேவர்களும் தரிசித்து மகிழ்கிறார்கள்.

ரிஷபம், கம்பீரமாய்ப் பக்கத்தில் நின்று கொண்டிருக்கிறது.

அம்மனுடைய அபயஹஸ்தத்திலும் மூக்கிலும் பின்னம் ஏற்பட்டிருக்கிறது.

ஆடுக ஆடுகவே!

இந்த நிருத்த சபையில் நடனப் பெண்மணிகளின் அநேக பாவங்களை உடைய தோற்றங்களைக் காண்கிறோம்.

இந்த நடனப் பெண்மணி, நடன சபையின் முன் நாம் முன்பு பார்த்த பாணாசுரனுக்குச் சமீபத்தில் இருக்கிறாள். இந்த வரிசைகளிலேயே மிகவும் அழகிய நடனக் காட்சி இது.

நட்டுவனார், பக்கத்தில் பாவத்துடன் தாளம் போட்டுக்கொண்டிருக்கிறார்.

உயரம் ஓர் அடிதான் என்றாலும், பெரிய சிற்பங்களில் காணப்படும் சிறிய நுட்ப வேலைகளும் இதில் மலிந்து காணப்படுகின்றன.

* * *

கீழ் வரிசைகளில் யாளிகள் அழகாய் வரிசையாய்க் காண்கின்றன.

இங்குள்ள ஒவ்வொரு நுட்ப வேலையும் கலை ஆர்வத்தால் அனுபவித்து இயற்றப் பெற்றிருக்கிறது.

நடன மண்டபத்தின் பூர்ண அழகை நாம் பார்க்க முடியாமல் மேல் பக்கமுள்ள நடன வரிசைகள் மறைக்கப்பட்டிருக்கின்றன.



அன்னையும் நடன கோஷ்டியும்

இயற்கை அன்னை, உலகத்துக்கு அபயம் கொடுத்த வண்ணமாக இருக்கிறாள். போருக்கும் (வலது பக்கத்தில்) தயாராகவே இருக்கிறாள். இந்த உண்மையை வெளியிடுகின்றாள் துர்க்காதேவி.

அன்னை பயங்கரி, அபய சுந்தரி

விஷ்ணு அம்சமானதால் சங்கு-சக்கரம் தரித்திருக்கிறாள். ரட்சக மூர்த்தியின் இந்தச் சின்னங்களுடன், கத்தி, கேடயம், வில், அம்பு முதலிய போர்க் கருவிகளையும் இருபுறம் உள்ள கைகளிலும் தரித்திருக்கிறாள்.


பக்கத்தில் நின்றுகொண்டு இருக்கும் சிங்கத்தைப் பாருங்கள். தேவியின் வாகனம், அன்னை பயங்கரியின் பயங்கர அறிகுறி, கர்ஜித்துக்கொண்டு இருக்கிறது.

காலம் வந்து கைகூடும்போது ஞாலம் நடுங்கச் சீறுகின்ற சக்திக்குறி இந்த மிருகேந்திரனின் கர்ஜனை.

கர்ஜித்தவண்ணம் தலைவியின் கட்டளைக்குத் தயாராக நின்றுகொண்டு இருக்கிறது சிங்கம்.

சிங்கத்தின் பயங்கரமான கண்களைத்தான் பாருங்கள்; திறந்த வாயையும் கூர்மையான கோரப்பற்களையும் பாருங்கள்.





சிங்கம் பாயத் தயாராக இருக்கிறது என்பதைத்தான் எவ்வளவு கலைத்திறனுடன் காட்டியிருக்கிறான் சிற்பி! 'உதைந்து' நிற்கும் அந்த முன்கால்களைக் கவனியுங்கள்.

பயந்து ஓட்டம் பிடிக்க வேண்டாம், சிற்பம்தானையா! பயங்கர அழகுக்குச் சிறந்த உதாரணம்.

சிற்பிகளின் பக்தி சிரத்தை

நடன சபையிலுள்ள யாள வரிகளின் அழகே, பார்த்தவுடன் சிற்ப விசித்திரங்களின் சிறப்பை நமக்குத் தெரிவித்துவிடுகிறது.

இச்சபையில் ஒரு சிறிய இடத்தில்கூட வேலைப்பாடுகளில் அசிரத்தை காணப்படவில்லை.

தத்தமக்குத் தெரிந்த வேலைத்திறன் முழுமையும் காட்டி ஒருவருக்கொருவர் போட்டியிட்டு இவ்வேலைப்பாடுகளை அமைத்திருக்கிறார்கள் - ஐயமில்லை.

எல்லாம் நடராஜப் பெருமான் மீதுள்ள பக்தி சிரத்தையின் விளைவுதான். கூலி பெற்று வயிற்றுப் பெருமானை ஆராதிப்பதற்காகச் செய்த வேலைப்பாடுகள் அல்ல என்பதும் பார்த்தவுடனே தெரிந்துவிடும்.

சிற்பங்களின் உயர்வை எடுத்துக் காட்டுவதற்காகத்தான் துர்க்கையின் பின்னால் மற்ற இடங்களிலுள்ள கொடி வேலையையும் சேர்த்துக் காட்டி இருக்கிறது.

நடன கோஷ்டி

துர்க்கைச் சிற்பத்துக்குச் சமீபத்தில் ஸ்ரீ நடராஜரை நோக்கியவாறு நடனக் கலைக்கே தலைவராக உள்ள அப்பெருமானின் அருள் பெற ஆவல் கொண்டு ஆடுகின்ற நடனச் சிறப்பைப் பாருங்கள்.

உடம்பில் உள்ள நெளிவுகளும் பாவங்களும் ஆடை ஆபரணங்களும் நடன ரசிகர்களைப் பரவசமாக்குகின்றன.

இடையில் கட்டியிருக்கும் கச்சைகளும், சுருண்ட கூந்தலோடுகூடிய நெற்றியும், பெரிய கொண்டையும் உடையவளாய், காலில் சலங்கை 'கலீர் கலீ'ரென நடனம் ஆடுகிறாள், நடராஜாவின் அருளை முன்னிட்டு.

ஆம், அந்தக் காலில் சலங்கையின் 'கலீர்' சத்தம் அப்படியே காதில் ஒலிப்பது போன்ற ஒரு பிரமையும் ஏற்படக்கூடும் நடன கலா ரசிகர்களுக்கு.

இந்த நர்த்தனத்தை அனுசரித்து இவளுடைய சகபாடியும் மத்தளம் வாசித்துக்கொண்டேகூட ஆடுகின்ற அந்த அழகையும் கண்டு மெய்ம்மறந்து லயித்துப் போகிறோம்.

நடராஜப் பெருமானின் திருமுன்னர் சிற்பக் களஞ்சியமாக விளங்கும் நிருத்த சபையை, 'எங்கும் காண இயலாத சித்திர வேலைப்பாடு அமைந்த தூண்களால் தாங்கப்படுகின்ற மண்டபம்' என்று இந்தியச் சிற்பக் கலையின் பரம ரசிக நிபுணரான பெர்குஸன் வியந்து பாராட்டுவதில் எவ்வளவு உண்மை இருக்கிறது!

நடன கோஷ்டி சாட்சி சொல்கிறது. துர்க்காதேவியும் சாட்சி சொல்கிறாள். 'அப்படியேதான் என்று சிங்கமும் கர்ஜிக்கிறது.

நடன சபையின் நடுநாயகம்

முன்பு நாம் பார்த்த பாணாசுரனைத் தான் (அடுத்த பக்கத்தில்) சூழ்நிலையுடன் பார்க்கிறோம். இந்தச் சூழ்நிலைதான் இசைமயமாய் எத்தகைய நடன சோபையுடன் திகழ்கிறது!

ஈடுபாடு


தாளமும் மிருதங்கமும் கொண்டுள்ள கோஷ்டியைப் பாணாசுரனுக்கு இருபுறமும் பார்க்கிறோம்.

வலது பக்கம் பாருங்கள். தாளம் போட்டுக்கொண்டு ஆனந்தமாகத் தன்னையும் மறந்திருக்கும் அந்த ஆளைத்தான். எவ்வளவு இயற்கையான பாவம்!

ஒரு தனியழகு

இப்பக்கத்தில் உள்ள ஒவ்வொரு சிற்பமும் ஜீவ களையுடன் - அதாவது




சில்பி

சிற்ப ஜீவனுடன் - ஒரு தனி அமைப்பில் அமைந்து இந்த நடன சபைக்கே ஒரு தனியழகு தந்திருக்கிறது.

ஸ்ரீ நடராஜரின் எதிரே உள்ள இந்த நடன சபைக்கே நடுநாயகமாக விளங்குவது இந்தப் பாணாசுரச் சிற்பம்தான். இது, கீழ் வரிசைகளில் உள்ள யாள வரிகள் இருபுறமும் ஒன்று சேர்வதில் இருந்தே தெரிகிறது.

பரவச நிலை

மேல் வரிசைகளில் அதோ பூத கணங்களுக்குத்தான் என்ன ஆனந்தம் பாருங்கள்!

தங்களுக்கு நேர் எதிரே நித்தியத் தாண்டவம் ஆடிக்கொண்டு இருக்கும் ஆனந்த நடராஜாவைப் பார்த்துக்கொண்டு இருக்கின்றன அந்தப் பூதகணங்கள். உடல்நிலை இடம் கொடுக்கும் வரை தங்கள் உடம்பில் நெளிவுகள் காண்பித்துக் கொண்டு ஆனந்தமயமாக இருக்கின்றன. ரசிகரின் பரவச நிலைக்கு அருமையான சான்று.

நடன கோஷ்டி

இங்கே கொடிவேலைகளின் மேன்மையைச் சிற்பிகள் பிரமாதமாய் காண்பித்து இருக்கிறார்கள்.

ஒவ்வொரு கொடி சுற்றி இருப்பதின் நடுவிலும் ஒரு மாதோ அல்லது பூதமோ தாண்டவமாடக் காண்கிறோம்.

இடது பக்கம் கோடியிலுள்ள கொடியின் மேல் பக்கம், சக்கர வடிவத்தில் இருவர் தங்கள் கை-கால்களை முறையே சுற்றிப் பிடித்துக்கொண்டு தங்கள் திறமைகளைக் காண்பித்தவண்ணம் இருக்கிறார்கள்.

உடுக்கையைத் தன் ஒரு கையில் பிடித்து அதற்கு நாதம் சரியாக ஏற்படச் செய்துகொண்டு மற்றக் கையில் வாசிப்பதையும், நடனத்துக்கு ஏற்றவாறு பாவங்கள் அமைந்திருப்பதையும் பார்க்கிறோம்.

அசைவதற்குத் தகுந்தவாறு கச்சைகள் இருபுறமும் காற்றில் பறக்க, சலங்கை ஒலியுடன் நடனமாடும் அழகிய கூந்தலை உடைய அந்த யுவதியின் அமைப்பினைத் தான் என்னென்பது?

* * *

சிவபெருமானது பூர்ண விளக்கம் அமைந்துள்ள இடம் இத்தலமேயாகும் என்பதையும், தலமுறை தொகுத்த உமாபதி சிவம் இத்தலத்தையே முதன்முதல் வைத்துள்ளார் என்பதையும், வித்துவான் ஸ்ரீ.ச.தண்டபாணி தேசிகர் இயற்றியுள்ள 'சிதம்பரம்' என்னும் அழகிய நூல் குறிப்பிடுகிறது. இக்கோயிலில் உள்ள 'நடன சபை' என்ற நிருத்த மண்டபத்தை, கலைத் தெய்வத்தின் பூர்ண விளக்கம் அமைந்துள்ள இடங்களின் முன்னணியில் வைத்துப் பேசலாம்.

உக்கிரம், ஹாஸ்யம், உவகை

நிருத்த சபையிலே மேல் பக்கத்தில் விருஷபாங்க மூர்த்தியின் கீழ் வரிசை அழகை எதிர்ப்பக்கத்தில் பூர்ணமாய் அனுபவிக்கிறோம்.

உக்கிர அழகு

முதலில் காளிதேவியின் சம்ஹாரக் கோலத்தைத் தரிசிக்கிறோம். இதே கோலத்தை இடது பக்கத்து முதல் பூக்கொடியின் நடுவே மிகச் சிறிய அளவில் கண்ணுற்று வேலைத்திறத்தைக் கவனிக்கிறோம்.

நகைச்சுவை அழகு

இந்த உக்கிரக் காட்சிகளைப் பார்க்கும் நாம், பக்கத்திலேயே நர்த்தனக் காட்சிகளையும் காண்கிறோம்.

கிழவனும் குமரியும் சேர்ந்து நடனமாடும் காட்சியைப் பாருங்கள். கிழவனுடைய தாடியைப் பற்றிக்கொண்டு தன் இஷ்டப்படியெல்லாம் ஆட்டிவைக்கிறாள் குமரி.


இந்த ஹாஸ்ய அழகு அந்த உக்கிர அழகை எப்படி எடுத்துக்காட்டுகிறது பாருங்கள்!


குதூகல அழகு

இதன் பக்கத்துப் புஷ்பக்கொடிகளின் மேலே விநாயக சொரூபத்தைக் காண்கிறோம். இதன் கீழே பூதகணத்தையும் பார்த்துவிட்டு, அருகே வலது பக்கத்துக் கோடியில் கோலாட்டம் ஆடும் யுவதிகளைக் கண்டுகளிக்கிறோம்.

மேலே பூதகணங்கள் கும்மாளம் அடிக்கும் வரிசைகளையும், கீழே யாளி வரிசைகளையும் பார்க்கிறோம்.

என்ன கும்மாளம்! என்ன குதூகலம்! என்ன கோலாட்டம்!





அந்தமிலா ஆனந்தம்

அணிகொள்தில்லை கண்டேனே!

என்ற மணிவாசகத்தில் காணும் ஆனந்தத்தை இவர்களும் கற்றுக்கொண்டு தான் இப்படிக் களிக்கிறார்களோ!

ஆண்டியின் அழகு

நடராஜப் பெருமான் எழுந்தருளி இருக்கும் சித்சபையின் பிராகாரத்திலே சண்டிகேஸ்வரர் கோயிலின் பின் தெற்கு நோக்கியவாறு இருக்கும் பிட்சாடன மூர்த்தியைப் (முந்தைய பக்கத்தில்) பாருங்கள். நான்கு அடி உயரத்தில் மிகவும் அழகிய சிற்பச் செல்வம்.

தாருக வனத்து ரிஷி பத்தினியை, வலது பக்கத்தில் உள்ள அன்னப்பாத்திரத்தை ஏந்தியிருக்கும் பூதத்துக்கு அனமிட்டவாறு காண்கிறோம்.

இக்கோயிலில் பிட்சாடனரின் வேலைப்பாடுகள் பெரிதும் மெச்சத் தக்கவை.

ஜடா மண்டலத்தின் அழகு இங்கே பிட்சாடன மூர்த்தியின் ஒரு சிறப்பியல்பாக அமைந்திருக்கிறது. ஆண்டி வேஷத்தில் ஆண்டவனின் துறவுப் பெருமைக்கும் சர்வ சக்தியாகிய மகா யோக சக்திக்கும் அறிகுறியான ஜடாமகுடம் அல்லவா?

உலகெ லாம்உணர்ந்(து)

ஓதற்(கு) அரியவன்

நிலஉ லாவிய

நீர்மலி வேணியன்...

என்று பெரிய புராணம் காப்பாகப் போற்றுகின்ற பெருமைக்குச் சான்றாக அமைந்திருக்கும் ஜடா மண்டலம் இது.

உக்கிரம், ஹாஸ்யம், உவகை ஆகிய உணர்ச்சிகள் சிற்ப வேலைப்பாடுகளில் எவ்வளவு தெளிவாகவும் பொருத்தமாகவும் வெளிப்பட்டிருக்கின்றன பாருங்கள்! அப்படியே இறைவனது எளிமையும் பெருமையும் வெளிப்படுகின்றன பிட்சாடன ரூபத்திலே.


பாதுகாக்க வேண்டிய பொக்கிஷ சாலை


நிருத்த சபையில் உள்ள சிற்பச் செல்வங்களைப் பார்த்துவிட்டு இந்தச் சபா மண்டபத்தின் முழுத் தோற்றத்தையும் பார்ப்போமானால், அற்புத வேலைப்பாடு அமைந்த நகையைப் பார்த்துவிட்டு, அதற்கென்றே அழகு பெற அமைத்திருக்கும் ஒரு நகைப்பெட்டியை ரதத்திலே தூக்கி வைத்திருப்பதையும் பார்ப்பதுபோன்ற ஓர் உணர்ச்சி ஏற்படுகிறது.

தேரிலே பொக்கிஷம்

வேறு எங்கும் காண அரிதாக உள்ள சிற்ப பொக்கிஷங்களுக்கு இசைந்ததோர் அழகிய பொக்கிஷ சாலை இது! - என்று வியக்கத் தோன்றுகிறது.

இந்த நிருத்த சபா மண்டபத்தின் இரு பக்கங்களிலும் குதிரைகள் பூட்டப் பெற்று இழுக்கப்படும் ஒரு தேரைப்போல்





சக்கரங்களுடன் அமைந்திருக்கிறது, நடராஜப் பெருமானின் சந்நிதி முன்பு, கொடி மரத்துக்குத் தெற்கே. பின்னே இருப்பது தெற்குச் சந்நிதி கோபுரம்.

இந்த நிருத்த சபையின் முழுத் தோற்றத்தையும் காண்கிறோம் நாம், முன்னே இருக்கும் எட்டுச் சிங்கத் தூண்களிலிருந்து.

இந்தச் சபா மண்டபத்தில் கலைச் செல்வங்கள் மலிந்து கிடப்பதால், இதை எக்காரணம் கொண்டும் பாழாக்கவிடாமல் பின் சந்ததியர்களுக்கும் ஒரு குல தனமாக, ஒரு சேமநிதியாகப் பாதுகாத்து வைக்க வேண்டியது, கோயில் நிர்வாகிகளின் கடமையாகும்.

இங்குள்ள சிற்பச் செல்வங்களில் சிலவற்றின் அருமை தெரியாதபடி பின்னாளில் கட்டிய மண்டபங்கள் இவற்றை மூடியிருக்கின்றன.

ஒரு சிறிய அறையில் செல்வம் குவிந்து கிடப்பதுபோலக் கிடக்கின்றன, வேறெங்கும் காணக் கிடையாத சித்திர வேலைப்பாடுகள், சிற்ப நுட்பங்கள், கலை விசித்திரங்கள், ஐம்பத்தாறு தூண்கள் தாங்கும் இம்மண்டபத்திலே.

மகிஷாசுரமர்த்தினி

இந்த நிருத்த சபையின் வியக்கத்தக்க கலைச்செல்வங்களில் ஒன்று, கீழ்க்கோடியில் முன்பக்கத்தில் உள்ள மகிஷாசுரமர்த்தினி. அவள் எருமைத் தலை அசுரனோடு போர் புரியும் உக்கிரத்தைத்தான், வேகத்தைத்தான், அந்த ஆயுத ஆபரணங்களைத்தான் பாருங்கள்!

சங்கு-சக்கரம், கத்தி-கேடயம், வில்-அம்பு, பாசம்-மணி முதலான ஆயுதங்களை, மாதர் ஆபரணங்களைத் தரித்து மகிழ்வது போலத் தரித்திருக்கிறாள். இத்தகைய ஆயுதங்களுடன் தேவி பாய்ந்து சண்டை செய்யும் காட்சியைத்தான் சிற்பி எவ்வளவு அழகாய்க் காட்டியிருக்கிறார்!

போர் துரிதமாக நடக்கிறது என்பதையும் சிற்பி ஒருவாறு காட்டியிருக்கிறார். கச்சைகள் காற்றில் பறப்பதில் இருந்தே இந்தப் போரின் வேகத்தை ஊகித்துக்கொள்ளலாம் அல்லவா?

உயரம் ஒரே அடி; இந்தச் சிறிய அளவுக்குள் நிறைந்து கிடக்கின்றன சிற்ப நுட்பங்கள்.

இத்தகைய சிற்பங்களைப் பாதுகாப்பது கோயில் பூஜை முறைகளைப்போல், அவ்வளவு முக்கியமான காரியம் என்று கோயில் நிர்வாகிகள் கருத வேண்டும். தமிழைப் பாதுகாப்பதுபோல், சமயத்தைப் பாதுகாப்பதுபோல், சிவஞான நூல்களைப் பாதுகாப்பதுபோல் நிருத்த சபையையும் பாதுகாப்பது சிவநேசர் கடமை.

சமய நுணுக்கங்களைப்போல் சிற்ப நுணுக்கங்களையும் ஒருவாறு தெரிந்து கொள்வது பக்த ரசிகர்களுக்கு அவசியம். நமது சமய ஞானத்தை நன்கு உணர்ந்து கொள்ளக் கலைஞானம் இன்றியமையாதது. சிற்பங்களும் கூத்தப்பெருமான் திருவடிக்கு அன்பும் பக்தியும் அளித்துள்ள காணிக்கைகளே!

மகிஷாசுரமர்த்தினியின் சிற்ப நுட்பங்கள், நமது சாஸ்திர நுட்பங்களுக்கு அழகுக் கலையால் செய்திருக்கும் அருமையான வியாக்கியானங்கள் எனக் கூறலாம். இந்த நிருத்த சபையின் அமைப்பிலேயே சாஸ்திர நுட்பமும் சமய நுட்பமும் காணும் ரசிகர்களும் உண்டு.

பாம்பு–புலி, வைத்தியம்



ஒரு சமயம், நாகராஜாவாகிய ஆதிசேஷன், தன்மீது சயனித்து இருந்த மகாவிஷ்ணுவின் பாரத்தைத் தாங்க முடியாமல் தவித்தானாம். "ஏனையா இப்படி? நான் வழக்கமாய் உம்மைத் தாங்குகிறவன்தானே; இப்போது மட்டும் நீர் இவ்வளவு பளுவாக இருப்பதற்குக் காரணம் என்ன?" என்று விஷ்ணுவையே கேட்டுவிட்டான்.

அப்போது பெருமாள் பெரு மகிழ்ச்சியுடன், "ஸ்ரீ தாண்டவமூர்த்தியின் நடனத்தை அனுபவித்த அந்த ஆனந்த அதிசயத்தை இப்போது நினைத்துப் பார்த்தேன். அதனால் பூரித்துப்போன அதிசயந்தான் அப்பா இது!" என்று பதில் சொன்னாராம்.

உடனே 'அந்த ஆனந்த அதிசயத்தை நாமும் அனுபவித்துப் பார்க்க வேணும்' என்ற ஆசை, ஆதிசேஷனுக்கு ஏற்பட்டதாம். திருமாலிடம் விடை பெற்றுக்கொண்டு, கயிலை மலையின் சாரலை அடைந்து, 'ஆனந்தத் தாண்டவம் தரிசிக்க வேண்டும்!' என்று தவம் கிடந்தான்.

சிவபெருமான் தோன்றி, "நமது ஆனந்தத் தாண்டவத்தைத் தாங்குமிடம் தில்லைவனம். ஆதலின் அங்கே போ" என்று சொல்லி மறைந்தார்.

ஆயிரம் முகங்களுடன் பூலோகத்துக்குச் சென்றால், பூலோகவாசிகள் அச்சம் அடைவரே என்று, ஐந்து முகங்களுடன் அத்திரி முனிவரின் புத்திரனாக விரும்பி, அம்முனிவர் சந்தியா வந்தனம் செய்யும்போது அவர் கையில் போய் விழுந்ததாகவும், 'அஞ்சலி' என்று சொல்லி அர்க்கியம்விடும் சமயத்தில் அவர் கையில் விழுந்ததால் 'பதஞ்சலி' என்று பெயர் பெற்றதாகவும், இப்புராண கதை வளர்ந்திருக்கிறது.

ராஜ சபை என்னும் ஆயிரங்கால் மண்டபத்தில் ஆயிரம் முகங்களுடன் தம் ஆயிரம் சிஷ்யர்களுக்கு ஆயிரம் விதமாகத் திரை மறைவிலிருந்து வியாகரண மகாபாஷ்யத்தைக் கூறினாராம் இப்பதஞ்சலி. வித்தையில் ஆதிசேஷன் என்கிறார்கள் அல்லவா? பதஞ்சலியின் மகா பாண்டித்தியம் இப்படி ஒரு புராணக் கற்பனையாகி இருப்பதற்கும், அத்தனிப்

பெரும் புலமை குறித்த ஆனந்த அதிசயமே காரணமாகி இருக்கலாம்.

பதஞ்சலி முனிவர், தில்லைவனத்தின் மேல் 'நாகசேரி' என்ற தீர்த்தத்தை உண்டாக்கி, அதன் கரையில் ஒரு சிவலிங்கத்தை ஸ்தாபித்து வழிபாடு செய்து வந்ததால் அந்த இடம் இப்போது 'அனந்தேச்சுரம்' என்று வழங்கப்படுகிறது என்பர் தருமபுர ஆதீனப் புலவரான ஸ்ரீ.ச.தண்டபாணி தேசிகர், தமது 'சிதம்பரம்' என்ற நூலிலே.

அனந்தேச்சுரத்துக்குப் பின்புறமுள்ள பெரிய குளம்தான் 'நாகசேரி'. 'ஆதிசேஷன் பதஞ்சலி வடிவம் தாங்கி, பாதாளத்தில் இருந்து மேல் வந்த பிலத்துவாரத்தை உடையது' இக்குளம் என்றும், மேலே சொன்ன புத்தகம் தெரிவிக்கிறது.



பதஞ்சலி, வியாக்கிரபாதர் என்ற அன்பருடன் நட்புக்கொண்டார். இந்த விரண்டு பேரன்பர்களின் பிரார்த்தனைக்கு இணங்கி ஸ்ரீநடராஜப் பெருமான் தை மாதத்தில் குரு புஷ்யத்தில் (அதாவது தைப்பூசம் வியாழக்கிழமையோடு கூடிய சித்தயோக தினத்திலே) தமது ஆனந்தத் திருக்கூத்துக் காட்சியைக் காட்டி அருளினாராம்.

இரு பெருந்தெய்விக அன்பர்களும் தரிசித்துப் பெரும்பேறு பெற்றனர்.

இப்புனிதமான திருநாளை ஆண்டு தோறும் ஸ்ரீபதஞ்சலி - வியாக்கிரபாத அனுக்கிரக சங்கீத சபையார் கொண்டாடி வருகிறார்கள்.

உண்மையில் பதஞ்சலி, ஒருவர் அல்லர்; இப்பெயரைப் பெற்று விளங்கியவர்கள் பலர். 'வடமொழியில் மஹாபாஷ்யம் இயற்றிய பதஞ்சலியும், யோக சூத்திரம் இயற்றிய பதஞ்சலியும் வேறாவர்' என்று வித்வான் ஸ்ரீ.ச.தண்டபாணி தேசிகர் கூறுவது உண்மைதான்.

'மஹாபாஷ்ய பதஞ்சலி கி.மு.150-லும், யோக சூத்திரப் பதஞ்சலி கி.பி.7-ம் நூற்றாண்டிலும் இருந்தவர்கள் என்று தக்க ஆதாரங்களுடன் டாக்டர். ஏ.பி.கீத் என்பவர் சொல்கிறார்' எனத் தேசிகர் காட்டி இருப்பதும் சரிதான்.

'மன்று தொழுத பதஞ்சலி' எனத் திருமூலர் திருமந்திரத்தில் குறிக்கப்படுபவரே ஆனந்தக் கூத்தரின் தொண்டர். இவர் வியாகரண பதஞ்சலியும் இல்லை; யோக பதஞ்சலியும் இல்லை என்ற ஸ்ரீதேசிகரின் அபிப்பிராயத்தையும் ஒப்புக்கொள்ளலாம். இவர், திருமூலர் காலத்தவர் என்கிறார் ஸ்ரீதேசிகர்.

புலிக்கால் முனி

இவர், வண்டு ஸ்பரிசிக்கு முன்பே பூக்களைப் பரிசுத்தமாக எடுத்து இறைவனை பூஜிக்க விரும்பினார். பனிக்காலத்திலும் மரங்களில் வழுக்காமல்

பிடித்து ஏறுவதற்காகப் புலிக்கால், புலிக்கைகளை இவர் இறைவன் அருளால் பெற்றுக்கொண்டாராம். இதனால் இவர் 'புலிக்கால் முனி' என்று பொருள்படும் 'வியாக்கிரபாதர்' என்னும் வடமொழிப் பெயர் பெற்றாராம்.

ஆனந்தத் திருக்கூத்துக் காட்சியை இவர் கண்டு அனுபவித்த அந்த ஆனந்த அதிசயத்தைச் சிற்பத்திலே வியாக்கிரபாதரின் மகிழ்ச்சி நிறைந்த முகத்தில் நாமும் கண்டு அனுபவிக்க முடிகிறது. பூக்கொய்யும் அலகும் குடலையும் தத்ரூபமாய்க் காட்டப் பெற்றிருக்கின்றன.


கிழக் கோபுரத்தின் இடது புறத்தில் வியாக்கிரபாத முனிவரின் சிலையும், வலது புறத்தில் பதஞ்சலி சிலையும் இருக்கின்றன.

******

இரட்டை வைத்தியர்களான அசுவினி தேவர் சிலையும் வியாக்கிரபாதர் சிற்பத்தின் பக்கத்திலே தெற்கு நோக்கியவாறு கிழக் கோபுரத்தின் இடது புறத்தில் காணலாம்.

ஒரு கையில் சாஸ்திரம் (ஓலைச்சுவடி) வைத்துக்கொண்டு சின் முத்திரையுடன் உபதேசிக்கும் காட்சியைச் சிற்பத்தில் தத்ரூபமாய்க் காண்கிறோம்.

தேவதைகளுக்கு வேண்டிய அலங்காரங்களின் பூர்த்தியையும் இச்சிற்பத்தில் பார்க்கிறோம்.



பிட்சாடனரின் ராஜாங்கம்


மிகவும் அழகாய் விசேஷ பாவங்களுடன் காட்சி தருகிறார் பிட்சாடன மூர்த்தி, சிற்ப உலகிலே. சிதம்பரத்திலும் பிட்சாடனச் சிற்பங்கள் சிறப்பாகவே அமைந்துள்ளன.



'இரக்கப் புறப்பட்டாலும் சிறக்கப் புறப்பட வேண்டும்' என்பர். சிவபெருமானும் அப்படியே புறப்பட்டாராம், பூத கணங்களுடன் ராஜாங்கமாக.

சிறப்பிலும் சிறப்பு

இங்கே நான்கு கோபுரங்களிலும் பிரமாண்டமானா ஆக்ருதியில் காட்சி அளிக்கிறார் பிச்சை எடுக்கும் பெருமான். இந்தச் சிற்பங்களிலே பெரிதும்



போற்றத்தக்கது கிழக் கோபுரத்தில் ஸ்ரீ சுப்பிரமணிய ஸ்வாமி விமானத்தின் பின் மறைந்திருக்கும் பிட்சாடனச் சிற்பம்.

பிட்சாடன மூர்த்தி போகும்போது, தாருக வனத்து ரிஷிபத்தினிகள் வசீகரிக்கப் பெற்று, தங்கள் நிலை உணராது பின் தொடர்ந்தார்கள் அல்லவா? அந்தக் காட்சியை இங்கே தத்ரூபமாய்க் காணலாம்.

காலடியின் சமீபத்தில் இருபுறமும் பூதகணங்கள் நடந்து வந்துகொண்டு இருக்கின்றன.

ஒரு பக்கத்தில் ஒரு ஸ்திரீ அகப்பையில் அன்னத்தை அள்ளிப் பூதகணம் தலையில் தாங்கி இருக்கிறதே, அதில் போடும் பாவனையில் காணப்படுகிறாள்.

மற்றப் பக்கத்தில் உள்ள ஸ்திரீ, பிட்சாடனரின் நடை அழகையும் ரூப லாவண்யத்தையும் வியந்து மூக்கின்மேல் விரலை வைத்துப் பிரமித்தவாறு இருப்பதையும் பார்க்கிறோம். 'நடந்தது கிடந்தது என் உள்ளம் நண்ணியே!' என்றுதான் பிரமிக்கிறாளா?

மேல் மாடங்களில் பெண்கள், கீழே போகும் இந்த அதிசயக் காட்சியைப் பார்த்தவண்ணம் மெய்ம்மறந்து இருக்கிறார்கள்.

இந்தச் சிற்பத்தின் பூர்ண அழகை எப்படி வருணிப்பது என்று ரசிகர்கள் திகைப்படைவார்கள். ஒய்யாரமாகச் சாய்ந்து நடக்கும் அந்த அழகுதான் என்னே! தேகத்தின் வளைவுகளிலேதான் எவ்வளவு அழகு!

தோளின் மேல் சூலாயுதத்தோடு மயில் தோகையும் தொங்குகிறது. மயில் இறகின் இயற்கை அமைப்புத்தான் எவ்வளவு அழகாக இருக்கிறது!

ஜடை அலங்காரம்

தட்சிணாமூர்த்தி, பிட்சாடனர் முதலிய சிற்பங்களில் சிற்பியின் திறனைப் பூர்ணமாய்க் காண்பிக்கச் சந்தர்ப்பம் அளிக்கத்தக்கது, முகத்தைச் சுற்றியுள்ள ஜடை அலங்காரம்.

ஒரு கவி பிட்சாடனர் விழாவைத் தரிசித்தார், சிதம்பரத்திலேதான். ஒரே இசைக்கடல் முழங்கியது இன்பமயமாக. யானை முதலான காட்சிகளும் கண் விருந்தாயின.

புலவர் பாடினார்: 'தில்லை நாதரே, தேவரீர் பிச்சையெடுத்துண்ணப் புறப்பட்டும் எக்காளம் மேளதாளங்கள் எல்லாம் முழங்குகின்றனவே, எதற்காக? யானைதான் எதற்காக? ஏதோ ராஜாங்க தர்பாராக இருக்கிறதே தவிர, பிச்சைக்காரனுக்கு உரிய சூழ்நிலையொன்றும் காணப்படவில்லையே!' என்று பொருள்படும்படியாக.

'மேளம் ஏன்? ராஜாங்கம் ஏன்?' என்று முடிகிறது அந்த வெண்பா. 'வசை பாடும் காளமேகம்' என்று சொல்லப்படும் காளமேகப் புலவர் நிந்தாஸ் துதியாகப் பாடியது.

திருவிழாக்களிலும் கவிதையிலும் தோன்றும் பிட்சாடனரின் ராஜாங்க சேவை சிற்ப உலகில் அழகு மாட்சியாகப் பிரதிபலிக்கிறது.


சில சிற்ப வினோதங்கள்



ஸ்ரீ மூலநாதர் சந்நிதிக்கும் நவக்கிரகங்களின் சந்நிதிக்கும் நடுவே 'சங்கு ஊதிப் பிள்ளை'யைத் தரிசிக்கிறோம். இவர் யார்?

பிள்ளை வரம் கொடுக்கும் பிள்ளை!

கோயில்களில் யாள வரிகளைப்போல் பூத வரிகளில் சாதாரணமாகப் பூதகணங்கள் சங்கு ஊதிக்கொண்டும், மத்தளம் அடித்துக் கொண்டும், நடனமாடிக்கொண்டும் இருப்பதைப் பார்த்திருக்கிறோம். அதேபோலச் சங்கு ஊதியவண்ணம் காணப்படுகிறார் 'சங்கு ஊதிப்பிள்ளை!'



குழந்தைப் பேறு வேண்டி ஜனங்கள் தித்திப்புப் பட்சணங்களை நைவேத்தியம் செய்து, இவரை ஆராதிக்கிறார்கள்.

பூக்களினால் ஆன மாலை கொண்டு நெற்றியின் மேல் தலையைச் சுற்றி அலங்கரித்திருக்கிறது. சொருகு கொண்டை அழகாக இருக்கிறது. அதிலும் பூக்கள் வைக்கப்பட்டு இருக்கின்றன.

உக்கிரமும் அபயமும்

அபய ஹஸ்தம் காட்டி ஈஸ்வர அம்சத்துடன் நின்றுகொண்டிருக்கும் கோலத்தில் ஒரு சிற்பம் கீழக் கோபுரத்தின் தெற்குப் பக்கத்தில் அசுவினி தேவர்களின் சமீபத்தில் இருக்கிறது.

இந்தக் கீழக் கோபுரம், கி.பி.1250-ல் ஆண்ட மதுரைச் சுந்தரப் பாண்டிய தேவனால் கட்டப்பட்டது. அதன்பின் இதைச் செப்பனிட்டவர் பச்சையப்ப முதலியார்.

இந்தக் கோபுர வாசல் வழியாகத்தான் ஸ்ரீ மாணிக்கவாசகர் நடராஜப் பெருமானை வழிபட எழுந்தருளினாராம்.


சிவனார் காட்சி அளிப்பது, கோரப் பற்களுடனும் மூன்று கணகளுடனும் உக்கிர ரூபத்திலேதான். எனினும், அபய ஹஸ்தத்துடன் காட்சி அளிக்கிறார்.

வழக்கம்போல் சிற்பங்களில் காணும் நுட்ப வேலைப்பாடுகளை இதிலும் காண்கிறோம்.

வல்லப கணபதி

இந்தச் சிற்பத்தின் மேல்பக்கத்தில், தேவ கோஷ்டத்தில் வல்லப கணபதியுடன்கூடிய கொடி வேலையைக் காண்கிறோம்.

வல்லப கணபதியைச் சுற்றி முத்தாரங்களும், அவற்றின்மேல் பூதகணங்களும் மற்றும் மேலே சுற்றி யாள வரியும், பிரபையைச் சுற்றி இருப்பதுபோல் இருக்கின்றன.



குறும்பு முனியும் குறுமுனியும்

சிற்பங்கள் எவ்வளவு பெரிய அளவில் இருந்தாலும் நடன சபையில் உள்ள சிற்பச் செல்வங்களுக்கு மிஞ்சியன இங்கு இல்லை என்பது நிச்சயம். மறுபடியும் நடன சபையின் முன்பு போய் நிற்கிறோம்.


சிரத்தை விளைத்த சிற்பங்கள்

மேலண்டையில் உள்ள இடத்தைத்தான் படத்தில் பார்க்கிறோம். நடன சபை அல்லது நிருத்த சபை என்ற பெயருக்கு ஏற்றவாறு இங்குள்ள உருவங்கள் நடனமாடுகின்றன. நடனத்துக்கு இசைந்தவாறு ஒலிக்கின்றன பக்கவாத்தியங்கள்.

பூக்கொடியின் நடுவே நடனங்கள் நடக்கின்றன பலவித பாவங்களில். கொடி வேலையின் திறனை இங்கே பூர்ணமாய்க் காணலாம். மேலே பூதகணங்கள் நடனமாடிக் கொண்டும், வாத்தியங்கள் வாசித்துக் கொண்டும் இருக்கின்றன.

மனித ஆக்ருதியில் உள்ள சிற்பத்தில் காட்டியிருக்கும் வேலைப்பாடுகளை ஓர் அடி உயரமுள்ள சிற்பத்தில் பூர்ணமாய்க் காட்டியிருக்கிறார்கள். இத்தகைய வேலைப்பாடுகளை நான்கு அங்குலத்தில் உள்ள கொடியின் நடுவே உள்ள சிற்பத்திலும் காணும்போது நாம் வியக்காமல் இருக்க முடியுமா?

பக்தி சிரத்தை விளைத்துள்ள அதிசயம்தானே இத்தகைய வேலைப்



பாடுகள்? இந்தச் சிற்ப மேதைகளின் வாழ்க்கைத் தேவையெல்லாம் உண்டியும் உடையும்தான்; உள்ளமோ பக்தியின் உறையுள்; சிற்பஸ்ரீயின் கோயில்.

நா(ர)த மாமுனி

கிழக்குக் கோபுரத்தின் வடக்குப் பாகத்தில் தரிசனம் அளிக்கிறாரே கையிலுள்ள யாழில் நாதத்தை எழுப்பிய வண்ணம், அவரைத்தான் மூன்று லோகங்களுக்கும் ஒரு கலகக்காரர் என்கிறார்கள். இந்தத் திரிலோக சஞ்சாரியைக் 'குண்டுணி நாரதர்' என்கிறார்கள்.

கலகம் பிறந்தால் நியாயம் பிறக்கும் என்று கலகம் மூட்டுகிறார் நாரதர் என்றுகூடச் சொல்வதுண்டு.


இக்காலத்தில் பத்திரிகைள் செய்துகொண்டிருக்கும் அரிய சேவையைப் (கலகம் விளைத்து 'நியாயம்' தியாகம் வளர்க்கும் சேவை மட்டுமல்ல) புராண காலத்தில் நாரத மாமுனி செய்து வந்ததாகவும் நம்பத் தயாராக இருக்கிறோம்.

எது எப்படி இருந்தாலும் நாரத கானம்போல் நாரதர் கலகமும் உலகத்துக்கு நன்மையாகத்தான் முடிந்து கொண்டிருந்ததாம்.

நாரத கானமும் - நாரதர் கலகமும்கூட - நம் தென்னாட்டுச் சிற்பங்களைப்போல் பக்தியின் விளைவுதான். நாரதர் உள்ளம் எப்போதும் ஈஸ்வர நாமத்தையே ஒலித்துக்கொண்டிருந்தது. அதன் ஒலிபரப்பே நாரத கீதம் - நாரத வாக்கியம்.

பாருங்கள், சிற்பத்திலே நாரதரின் வலது கை யாழை மீட்டி உள்ளத்தில் உள்ள அன்பிற்கும் பக்திக்கும் இசை உருவம் தந்து கொண்டிருப்பதை.





தாடி மீசையும் ஜடா முடியும், அந்தப் பருத்த தொந்தியும், இடையிலே கட்டித் தொங்குகிற ஆடையும் எல்லாம் நாரத மாமுனிக்குப் பொருத்தமானவை. இவரா குண்டுணி முனி, குறும்பு முனி?

தமிழ்க் குறுமுனி


கீழக் கோபுரத்தில் நுழையும்போது சுப்பிரமணிய ஸ்வாமி கோயிலின் வடக்குப் புறத்தில் காண்கிறோம், அகஸ்தியரை, - இடது கையில் கமண்டலத்துடனும் வலது கையில் சீடர்களுக்கு உபதேசம் செய்யும் சின்முத்திரையுடனும், முகத்திலே புன்முறுவலுடனும். ஜடா முடி அழகு, நாரத மாமுனியின் அந்த ஜடை அழகை நினைப்பூட்டுகிறது.

மீசை இருபுறமும் வளைந்து தொங்குகிறது, சீனாக்காரரின் மீசையை ஒருவாறு நினைப்பூட்டிய வண்ணம், 'மலையை அடக்கிக் கடலைக் குடித்த' தமிழ்க் குறுமுனி சீனாவுக்கும் போய் வந்தாரோ, என்னவோ?

சூரியனும் சோமாஸ்கந்தரும்

மேலைக் கோபுரத்தில் சூரிய பகவானை இரு கையில் பூ ஏந்தியவாறு தரிசிக்கிறோம். தலையைச் சுற்றி ஒரே பிரகாசம்.

இங்கே பின்புறமாகச் சிங்க வாகனம் காணப்படுகிறது. சில இடங்களிலே வாகனங்களில் வித்தியாசம் காண்கிறோம். இடையைச் சுற்றிச் சிங்கமுகம் உள்ள அணிகளைப் பார்க்கிறோம்.



சோமாஸ்கந்தர்

இந்தச் சிற்பம், கிழக் கோபுரத்தில் நுழையும்போது முன் பக்கத்தில் பிள்ளையார் கோயிலுக்கு மேலே கோபுரத்தில் இருக்கிறது.

இதுவரை இந்தத் 'தென்னாட்டுச் செல்வங்கள்' வரிசையில் சோமாஸ்கந்தர் வந்ததில்லை. 'சோமாஸ்கந்தர்' என்றால் உமாதேவியோடும் ஸ்கந்தர் அல்லது கந்தப்பெருமானோடும்கூடிய சிவபெருமான்.

இந்தச் சிற்பத்தில் ஈஸ்வரனுக்கும் ஈஸ்வரிக்கும் இடையே ஸ்கந்தர் சிறு பிள்ளையாக நின்றுகொண்டு இருக்கிறார், கையில் தாமரைப் பூவை ஏந்திக்கொண்டு.

மேக மண்டலத்தில் இருந்து தேவர்கள் கண்டு ஜய கோஷம் செய்கிறார்கள். இதையும் சிற்பத்தில் தெளிவாகக் காட்டி இருக்கிறது.

பக்கத்தில் உமை ஒரு கையில் நீலோத்பல மலருடனும், ஒரு கையைக் கீழே ஊன்றிக்கொண்டும் அழகாய்க் காணப்படுகிறாள்.


இச்சிற்பத்தின் கதை

இச்சிற்பத்தைப் பார்த்ததும் புராண கதை நினைவுக்கு வருகிறது. தேவர்கள் சூரபத்மன் ஆகிய அசுரர்களுக்கு அஞ்சிக் கயிலையங்கிரி சென்று தேவி சமேதராக எழுந்தருளியிருந்த சிவபெருமானை வணங்கி அசுரர்களை வதைக்க, 'உம்மைப்போன்ற ஒரு புதல்வனை அருளவேண்டும்' என்று வேண்டிக்கொண்டனர். அப்படியே சிவபெருமானும் அருள் செய்யக் குமரேசர் தோன்றினார். இக்குமாரரைத் தேவியாருக்கும் தமக்கும் இடையே வைத்துக்கொண்டார்.

இக்காட்சி கண்டுதான் தேவர்கள் ஜய கோஷம் செய்கிறார்கள் சிற்பத்திலே. சிவபெருமானின் ஜடாமுடியைச் சுற்றிப் பிரபை அழகாய்க் காட்சி அளிப்பதையும் சிற்பத்தில் கண்டுகளிக்கிறோம்.

ஒரே கல்லில் செதுக்கியுள்ள பிரமாண்டமான சிற்பம் கோபுரத்திலே தக்க உயரத்தில் இருந்துகொண்டு கிழிருந்து கோபுரத்தைப் பார்க்கும் கலா ரசிகர்களுக்கும் பெருங்களிப்பூட்டும் ஒரு சிற்பச் செல்வமாகத் தோற்றம் அளிக்கிறது.

சிவபெருமானுக்கும் தேவிக்கும் இடையே ஸ்கந்தரின் தோற்றம் கண்டு தேவர்களுக்கு வெற்றி முழக்கம் செய்யத் தோன்றியதுபோல், இந்த சோமாஸ்கந்த - சிற்பத்தைக் கலையின் ஒரு வெற்றியாகக் கண்டு கலா ரசிகர்களுக்கும் ஜய கோஷம் செய்யத் தோன்றுகிறது.



சிரித்துப் புரம் எரித்த சேவகம்

இதோ பாருங்கள் இடது கையில் கதாயுதம் தாங்கி இருப்பவரை; வலது கையை இடையில் வைத்துக்கொண்டிருக்கிறார்.

மற்ற இரு பக்கங்களிலும் உள்ள கைகளை நோக்குங்கள். கட்டளை மீறி நடப்பவர்களைத் தண்டிக்கும் தோரணையில் அக்கைகளை வைத்துக்கொண்டிருக்கிறார் அல்லவா? பொறுப்பான சேவகமும் அதிகாரமும் இவருக்கு உண்டென ஊகிக்கலாம்.

துவாரபாலகர்

முகத்தைத்தான் பாருங்கள்; எவ்வளவு உக்கிரமாக இருக்கிறது! தலையிலே ஜடாமகுடம்; ஜடை இருபுறமும் அழகாய்த் தோளைச் சுற்றியிருப்பதும் உக்கிர கம்பீர்யத்துக்கே அணி செய்வதுபோலக் காண்கிறது.

நாகத்தினால் ஆன கர்ண குண்டலத்தைத்தான் பாருங்கள். பருத்த தொந்தியைச் சுற்றிலும் இரு நாகங்கள் பின்னிக்கொண்டு இருப்பதையும் பாருங்கள்.

கதையில் சுற்றியுள்ள பாம்பின் தலையும் பின்னமுற்று இருக்கிறது. கதையின் மேல் வைத்திருக்கும் கையும் பின்னம் அடைந்திருக்கிறது.

யக்ஞோபவீதம் பாம்பில்லை; புஷ்பத்தினால் ஆனதுதான். இப்படிக் கொஞ்சும் அழகும் அஞ்சும் அழகுமாக இசைந்து, ரசிகர் பார்த்துப் பார்த்து ரசிக்கக்கூடிய ஓர் அழகிய சிற்பமாக அமைந்திருக்கிறது.

கீழைக் கோபுரத்தின் மேல் புறத்தில் வாசலின் இடது புறமாக இத்துவாரபாலகர் காட்சி அளிக்கிறார்.

திரிபுராந்தக மூர்த்தி

அடுத்த பக்கத்தில் காணப்படும் சிற்பம், கீழைக் கோபுரத்தின் முன் பக்கத்தில் வடவண்டைக்கோடியின் மேலே இருக்கிறது. திரிபுராந்தக மூர்த்தியின் போர்க்கோலம், வெற்றிக்கோலம் இது. பக்கத்தில் உமாதேவி.

ரதத்தைப் பிரம்மா ஓட்டுவதாகவும், நான்கு வேதங்களும் நான்கு குதிரைகளாக ரதத்தை இழுப்பதாகவும் கதை. இந்தக் கதைக் காட்சியைச் சிற்பத்திலே காணலாம்.


ஈசன் காலடியில், அசுரன் மிதிபடுவதையும் சிற்பம் காட்டுகிறது. சிரித்துப் புரம் எரிக்கும் சிவபெருமானின் இந்தக் காட்சியைத் தேவர்கள் மேக மண்டலத்திலிருந்து கண்டு துதிக்கிறார்கள்.



புரம் எரித்த கதை

திரிபுரம் என்றால், பொன், வெள்ளி, இரும்பு - அதாவது செம்பொன், வெண்பொன், கரும்பொன் என்னும் மூன்று உலோகங்களில் அமைந்த மதில்களோடுகூடிய முப்புரம். மூன்று லோகங்களிலும் பறந்துபோய் அழிக்கவல்ல ஆற்றல் உள்ளன.

திரிபுரவாசிகளான அசுரர்கள் தங்கள் திரிபுரத்தோடு எங்கும் சென்று எல்லோரையும் பயமுறுத்தி வைகுண்டம் முதலான லோகங்களிலும் தங்கள் நாசக் கைத்திறனைக் காட்டி வந்தனர்.



துஷ்ட அசுரர்கள் சிவபூஜையும் செய்து வந்ததால், சிவபெருமான் அவர்களைத் தண்டிக்கவில்லையாம். எனவே, விஷ்ணு அந்த அசுரர்களுக்குத் தவறான போதனைகளைச் செய்து சிவநெறியின்றும் அவர்களைத் திருப்பிவிட்டார்.

பிறகு, சிவபெருமான் திரிபுரத்தாரை வெல்வதற்குத் தேரையும் வேறு போர்க் கருவிகளையும் தயாரிக்குமாறு தேவர்களுக்குக் கட்டளையிட்டார்.

சந்திர, சூரியர்கள் தேர்ச் சக்கரமாயினர். 14 லோகங்களும் 14 தேர்த்தட்டுகளாயின; எட்டுத் திக்கில் உள்ள மலைகள் தேர்த்தூண்களாயின; அலைகடல் திரைச் சீலையாயிற்று.

இத்தேரில் நான்மறைகளையும் நான்கு குதிரைகளாகப் பூட்டி ஓட்ட, பிரம்மதேவனே சாரதியாக அமர்ந்துவிட்டார். மேருமலை வில்லாக, வாசுகி என்ற பாம்பு நாணாகவும், அமைய, விஷ்ணுவே பாணமாகிவிட்டார். அக்னிதேவன் அம்பின் கூர்மையான வாயாக ஜொலிக்க, வாயு அம்பில் கட்டிய சிறகாயிற்று.

இந்த ரதத்திலே சிவபெருமான் சென்று திரிபுரத்தை அணுகினார். 'வில்லை வளைத்து அம்பு போட வேண்டு'மென்று தேவர்கள் பிரார்த்தித்தனர். அப்போது வில், அம்பு முதலான அந்தக் கருவிகளும் 'ஆஹா, ஓஹோ, நாங்கள் திரிபுர தகனம் செய்யப் போகிறோம்!' என்று இறுமாந்து இருந்தன.

உடனே பெருமான் இடது பக்கத்தில் வீற்றிருக்கும் தேவியைக் கடைக்கணித்தார்; சிரித்தார். புரங்கள் மூன்றும் பற்றி எரிந்து சாம்பலாகி உதிர்ந்துவிட்டன. நல்லவேளை, கனாவில் தேர், சாரதி முதலானவர்களுக்கு ஆபத்து ஒன்றும் ஏற்படவில்லையே!

அசுரர்களிலும் மூவர் தப்பிப் பிழைத்து விட்டனர். அவர்கள் மாயவனின் மாய உரைகளுக்குச் செவி சாய்க்காது சிவனடியே சிந்தை செய்துகொண்டிருந்தவர்கள். இவர்களைத் துவாரபாலகர்களாக நியமித்து அருளினார் சிவபெருமான்.

பொறுப்பான இந்தச் சேவகம் கிடைத்ததும், உள்ளத்திலே பெரும் பக்தியும் வெளித் தோற்றத்தில் திரிபுராந்தக மூர்த்தியின் அந்த உக்கிர வீரமும் கொண்டு, தங்கள் காவல் பணியைச் செய்து வருகிறார்களாம்.

அழகில் செதுக்கிய அதிசயங்கள்



இதோ வெண்சாமரத்துடன் நிற்கிறாளே, - சாமரத்தைக் கொண்டு சேடி என்று ஊகம். அந்தச் சவரியை உற்று நோக்குங்கள். கவரிமானின் ரோமக் கற்றை இங்கு இயற்கையாகப் பிடியுடன் காட்டப்பட்டுள்ளது.

அழகு கோணாமல், நாணாமல்

காதில் மகர குண்டலங்கள், கழுத்தைச் சுற்றி அழகாக முத்தாரங்கள். இடையிலுள்ள வஸ்திரக் கட்டும் கவர்ச்சியாக இருக்கிறது.

கிரீடமும், காதைச் சுற்றி அலங்காரமும் அழகை அதிகப்படுத்துகின்றன. 'சாமரத்துடன்கூடிய தேவி' என்று சொல்லும்படியாக நிற்கிறாள் சேடி, நாணாமல், மணம் கோணாமல்.


மேலைக் கோபுரத்தில் வடக்குப் பாகத்தில் சாப்பாட்டுக் கட்டடத்துக்குப் பக்கத்தில் இருக்கிறது இச்சிற்பம்.

காலம் பார்க்கும் கோலம்

மேலைக் கோபுரத்தில் தெற்குப் பக்கம் தட்சிணாமூர்த்தி சிற்பத்தின் கீழே சாக்ஷாத் எமதர்மராஜாவையே சந்திக்கிறோம், பதறாமல், மனம் சிதறாமல். 'மரணத்தின் அதிதேவதை' என்று புராண மனோபாவம் புனைந்துள்ள கற்பனைக்கு ஒரு கலையுருவம்.

'எமபாசம், எமபாசம்' என்று பயத்தை ஏற்படுத்துகிறார்களே, கடும் பசியிலும் கொடும் பஞ்சத்திலும் பார்த்துப் பயப்படுகிறோமே, உயிரை வதைத்து இழுக்கும் அந்தப் பாசம்தான் வலது கையில் காணப்படுகிறது. உயிர் மீது வீசத் தயாராக வைத்திருப்பதுபோலத் தோன்றுகிறது.

நிலத்தில் ஊன்றிய கதையின் மேல் இடது கையை வைத்துக்கொண்டிருக்கிறார் எமராஜா.



பின்னே இவர் சவாரி செய்யும் குதிரை! பிரசித்தி பெற்ற எருமைக்கடா வாகனம்தான்.

ஒரு கணம்கூட உயிர் உடம்பில் அனாவசியமாக நீடித்திருக்க விரும்பாதவர் போல், அந்தக் குறித்த நேரத்துக்காகக் காத்துக்கொண்டு நிற்பவர்போல் சிற்பம் அமைக்கப்பட்டிருக்கிறது.

வாகனமும், இயற்கையான மந்த புத்தியை விட்டு எஜமானர் உத்தரவுக்காக 'உத்தாரம் தாருமையா!' என்று தயாராகக் காத்துக் கொண்டிருப்பதுபோலக் காண்கிறது.

கோரப்பற்களும் விரித்த சடையும், பயங்கர அழகு கொஞ்சி விளையாடும் ஏதோ ஒரு காட்சியை நினைப்பூட்டுவதுபோலப் பொலிகின்றன.

பரந்த தோள், காலனின் சக்திக்கு அறிகுறி. சக்திமயமான பயங்கர தார்மிக அழகு, காலத்தை நோக்கும் இக்காலனின் கோலம்.


மறுபடியும் நடன சபையில்

இங்கு, ரதத்தின் உடைந்துபோன சக்கரத்தையும் குதிரையையும் பார்க்கிறோம்.

உடைந்த நிலையில் இவற்றைப் பார்க்கும்போது உண்மையாக இவற்றைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு நமக்கு ஏற்படுகிறது.

உண்மையிலேயே குதிரையும் சக்கரமும் நன்றாக இருந்திருந்தால் எப்படி இருந்திருக்கும் என்று நமது மனத்தைப் பழைய காலத்துக்குச் 'சவாரி' விடுகிறோம். சக்கரத்தில் உள்ள அச்சின் ஆணி சிற்பத்தில் பின்னமுற்று இருப்பதை நோக்கும்போது, தேரைச் செய்தவுடன் பறந்துபோக யத்தனித்ததாகவும், அதனால் பின்னப்படுத்தினார்கள் என்றும் சில பிரதேசங்களில் கதை விடுகிறார்களே, அதுபோல இங்கும் இந்தச் சிற்பச் செல்வங்களுடன்கூடிய ரதத்துக்கும் நேர்ந்துவிட்டதோ என்று எண்ணத் தோன்றுகிறது.

சக்கரத்தைச் சுற்றி ஓரத்திலுள்ள கொடி வேலைகளின் நடுவே ஒவ்வொரு



ரிஷியும் தவத்தில் இருப்பதுபோலக் காட்டியிருக்கிறது.

குதிரைச் சிற்பத்தின் கீழேயுள்ள நடன கோஷ்டியைக் காண்கிறோம். இதுபோல் நடன சபையைச் சுற்றியுள்ள நடன கோஷ்டிகளை நாம் முன்பு கண்டுகளித்தோம்.

குதிரைக்கு முன்பு தெரிவதுதான் எட்டுச் சிங்கத்தூண். இது மாதிரி இரண்டு தூண்கள் இச்சபைக்கு முன்னே இருக்கின்றன.

சிங்கத்தின் வாயிலிருந்து ஒரே கல்லில் செய்த கற்சங்கிலிகளை மேலே காண்கிறோம். ஏன், சிங்கமும் கற்சங்கிலிகளும் ஒரே கல்லில்தான் செதுக்கப் பெற்றுள்ளன.

* * *

சென்னையில் இருந்து சுமார் 150 மைல் தூரத்திலே இத்தகைய சிற்ப அதிசயங்கள் இருக்கின்றன என்பதைத்தான் நமது தற்காலக் கல்விமான்கள் அறிந்திருக்கிறார்களா? சிதம்பரத்துக்குப் போய் வந்தவர்களும், 'ஸ்டேஷனுக்கும் கோயிலுக்கும் முக்கால் மைல் தூரம் இருக்கும்; அண்ணாமலை நகருக்கு ஒன்றரை மைல் தூரம்; ஸ்டேஷனில் ஒரு சிற்றுண்டிச் சாலை இருக்கிறது' என்பவை போன்ற செய்திகளையே அறிந்திருக்கிறார்கள். க்ஷேத்திர மகிமை அறிந்தவர்களும்கூட, சிற்ப மகிமையை அறிந்தவர்கள் இல்லையே!

மென்மையழகும் வன்மையழகும்

புராணமும் புராண மனோபாவமும் கலை உலகத்திலே எத்தனை அழகுகளுக்கும் உண்மைகளுக்கும் உருவம் தந்திருக்கின்றன! நிலத்துக்கு ஒரு தேவி; நீருக்கு ஒரு தேவன்; கனலுக்கும் ஒரு பகவான்; காற்றுக்கும் ஒரு பகவான் - இவையெல்லாம் நமது நாட்டு பௌராணிக மனோபாவம்.

திகைக்கிறவர்கள் திகைக்கட்டும்; பகைக்கிறவர்கள் பகைக்கட்டும். நமது நாட்டில் மட்டுமல்ல, கிரீஸ் முதலான நாகரிக நாடுகளிலும் அழகுக் கலைகளை உருவாக்கியுள்ளது புராணம்.

கூற்றுக்கும் (அதாவது மரணத்துக்கும்) உயிரும் உருவமும், ஒரு தரும நியதியும்கூடத் தந்திருக்கிறது புராண மனோபாவம். இப்படியெல்லாம் கூற்றுக்குக் கலை உயிரும் கலை உருவமும் தந்த மனோபாவம், காற்றை எப்படிக் கற்பனை செய்திருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறார்களா?

வாயு பகவான்


இதைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்றால், சிதம்பர நடராஜப் பெருமானின் திருக்கோயிலில் கிழக் கோபுரத்தின் வடமேற்குப் பாகத்தில் போய்த் தேடிப் பாருங்கள்.

ஆம், தேடித்தான் கண்டுகொள்ள வேண்டும். எல்லோரும் பார்த்து ரசிக்க முடியாதவாறு கோபுரத்தை ஒட்டிய ஓர் அறையில் காட்சி தருகிறார் வாயு பகவான்.

வாயுவுக்கு மான் வாகனம் கொடுத்துள்ளது புராணம். ஓடும் மிருகங்களில் மான் முக்கியமானது அல்லவா?

அதிவேகமாக ஓடும் மானை 'அது பறக்கிறது வாயு வேகத்திலே!' என்று





வியக்கிறோம். அந்த மானை வாயுவுக்கு வாகனமாக்கி வைப்பது மனோபாவ உலகில் பொருத்தம்தானே?

பின்னால் மான் வாகனத்துடனும் கையில் ஒரு கொடியுடனும் சிற்பத்தில் வாயு பகவான் (இடது பக்கத்தில்) காணப்படுகிறார். ஏன் இந்தக் கொடி?

காற்றில் அசைந்துகொண்டு இருக்கிறது கொடி. அசைவைக் காட்டவே கையில் கொடி கொடுக்கப்பட்டுள்ளதோ என்ற எண்ணம் உண்டாகிறது.

ஆடும் கொடியும், ஓடும் மானும் காற்றுத் தேவனுக்குத் தக்க அறிகுறி - இல்லையா?

ஆனால், மானும் கொடியும் மென்மை அழகைத்தானே வெளியிடக்கூடும்? காற்று என்றால், பூந்தென்றல் மட்டுமா? - புயல் காற்றும் சேர்ந்ததுதானே?

மந்தமாருதம்போல் சண்ட மாருதமும் வாயுபகவானின் ஆணைக்கு உட்பட்டது தானே? இந்த உண்மையைச் சிற்பி எப்படிக் காட்டுகிறார், பாருங்கள்.

வளைந்த புருவமும் பயங்கரமான பார்வையும் அமைத்துக் கோரப்பற்களையும் கொடுத்திருக்கிறார் சிற்பி. அசுர ஆவேசங்கள் போன்ற புயல் காற்று, சுழித்தடிக்கும் சுழல் காற்று, புழுதிக் காற்று, சூறாவளிக் காற்று முதலான புரட்சி வகைகளையெல்லாம் வாயுதேவனின் ஆட்சிக்கும் மாட்சிக்கும் உட்படுத்தத்தான்!

பார்ப்பதற்குப் பயங்கரமாகச் சமைத்திருக்கிறது வாயுதேவனைச் சிற்பியின் கைத்திறன். புயலை நோக்கும் திகில், நினைவுக்கு வரவேண்டும் அல்லவா?

ஆகாயம், அஞ்ச மலைகளையும் குலுக்கிவிடுமோ! என்று நம்மை நடுங்கச் செய்கிறதே, அதே வாயுவுக்கும் அதிபதி இவர் என்ற நினைப்புடன் பயங்கர உணர்ச்சியையும் ஒருவாறு அனுபவித்த வண்ணம் மெச்சுகிறோம் இந்தச் சிற்பத்திறனை.

இப்படி வாயு பகவானை அமைத்து இருப்பதில், சிற்ப அழகு இருக்கிறது; கலைச்சுவை இருக்கிறது; புராண மனோபாவமும் பொருந்தியிருக்கிறது.

அர்த்தநாரீஸ்வரர்

கீழக்கோபுரத்தில் உள்ள அழகிய சிற்பங்களில் மென்மையழகும் வன்மையழகும் ஒருங்கே வாய்ந்ததில் அர்த்தநாரீஸ்வர சொரூபமும் ஒன்று. இந்தக் கோபுரத்தில் முக்கால் பாகம் சிற்ப அழகு மயம்தான்.

இக்கோயிலில் உள்ள நான்கு கோபுரங்களிலும் கீழக்கோபுரம் முக்கியமானது. இக்கோபுர வாயிலாகத் தானே மணிவாசகப் பெருமான் - அழகு கொழிக்கும் திருவாசக மணிகளை அள்ளி வழங்கிய பெரியார் - நடராஜப் பெருமானை வழிபட எழுந்தருளினார். இக்கோபுரத்தில் அர்த்தநாரீஸ்வரர் போன்ற அழகிய சிற்பங்களைப் பார்ப்பது பொருத்தம்தான்.

இச்சிற்பத்தின் மேல் கையை வைத்தால், இது இருக்கும் வழவழப்பிலே, முரட்டுக் கல்லில் இருந்து இப்படிச் செதுக்கியிருக்கிறது என்று சொல்ல முடியாமல் திகைக்கிறோம், வியக்கிறோம்.

இடது பக்கம் சக்தியின் பாகம் என்பதை, நெளிந்தும் வளைந்தும் நிற்கும் தோற்றமே அறிவிக்கிறது. கையின் மென்மையைப் பார்த்தும் தெரிந்துவிடுகிறது.

கையில் தேவலோகத்து நீலோத்பல மலரை ஏந்துகிறாள். காலின் பகுதியில் வஸ்திரக் கட்டும், புடவையில் இருக்கும் கோடும் வெகு நேர்த்தி.

வலது பாகம் ஈஸ்வர அம்சம் என்பதை இடையில் உள்ள புலித்தோலில் இருந்தும், முழங்காலில் மணி கட்டியிருப்பதில் இருந்தும் அறிகிறோம்.

ரிஷப வேலைப்பாடு நிற்கும் தோரணை வெகு அழகு; வெகு கம்பீரம்.

கழுத்தில் மணிகளாலும் பூக்களாலும் ஆன மாலைகள். முன் இரண்டு கால்களையும் மேலே சிங்கமுகம் கவ்வியபடி இருக்கின்றன.

தலையைச் சுற்றிப் பிரபை. மேலே இருபுறமும் மேக மண்டலத்தில் இருந்து தேவர்கள் அர்த்தநாரீஸ்வர ஐக்கிய பாவத்தை மகிழ்ச்சி - ஆரவாரத்துடன் போற்றுகிறார்கள்.

பல்வேறு அர்த்தநாரீஸ்வர சொரூபங்களைப் பார்த்திருக்கிறோம். சிற்ப வேலைப்பாடுகளில் ஒன்றுக்கொன்று மாறுபட்டாலும், ஒரே தத்துவத்தை எவ்வளவு அழகாக வெளியிடுகின்றன!

ஏறுமயில் ஏறி வந்து...

ஸ்ரீ நடராஜப் பெருமானின் கோயிலுக்கு வடமேற்கு மூலையில் - அதாவது வடக்குக் கோபுர வாசல் மேல்புறத்தில், ஸ்ரீசண்முகப் பெருமான் வள்ளி-தேவசேனா சமேதராகக் காட்சி அளிக்கிறார். ஆம்; இங்கே மூலஸ்தான முருகக் கடவுள் ஆறு திருமுகங்களுடன் ஆறு அடி உயரத்தில் தரிசனம் தருகிறார்.

பன்னிரு கைகளில் ஆயுதங்களுடன் மயில் மேல் கம்பீரமாகக் காட்சியளிக்கும் இப்பெருமான், ஸ்ரீநடராஜ மூர்த்தியின் ஆனந்தத் தாண்டவம் காண விரும்பி வந்திருப்பதாக ஐதிகம்.

பாண்டிய மன்னன் ஒருவன் இங்கே பல்வகைத் திருப்பணிகள் செய்திருப்பதால் இக்கோயிலைப் 'பாண்டிய நாயகம்' என்றும், 'பாண்டிய நாயகர் கோயில்' என்றும் சொல்கிறார்கள்.


'முருகன்' என்றால் அழகனல்லவா? இந்த அழகனைத் தரிசித்த பின் இக்கோயிலில் மலிந்து கிடக்கும் சிற்ப அழகுகளைக் கண்டு களிக்க வேண்டும்.

நடன சபையில் காண்பதுபோல் இந்தக் கோயிலிலும் நாட்டியப் பெண்மணிகளின் சிற்பங்கள் விசேஷமாகக் காணப்படுகின்றன.

நடன கோஷ்டி

மண்டபங்களின் சுற்றுப்புறங்களிலும் இத்தகைய சிற்பங்கள் உண்டு. ஆனால், அவற்றைக் கண்டுகளிக்கிறோம் என்று சொல்வதற்கில்லை; கண்டு ரசிக்க முடியாதபடி சுற்றும் நந்தவனங்கள் இருக்கின்றன.

நடனப் பெண்மணியின் கோஷ்டியை, கோயிலினுள் ஏறும்போது வடக்குப் பக்கத்தில் கீழே காண்கிறோம். உடம்பில் உள்ள நெளிவுகளை - ஏன், உடல் பின்புறமாகத் திரும்பியும் முகம் முன்புறம்



திரும்பியிருக்கும் அந்த நிலையையும் - கண்டு வியக்கிறோம்!

கொண்டையழகும், மார்பில் அணிந்திருக்கும் அணிகளும், நடன மங்கைக்கு உள்ள வஸ்திரக்கட்டும் தத்ரூபமாக இருக்கின்றன. இடையைச் சுற்றி மத்தளத்தைக் கட்டிக்கொண்டு வாசிக்கும் வயதானவரையும், இளமையோடு முதிர்ந்த அனுபவமுள்ள நட்டுவனாரையும் இருபுறமும் காண்கிறோம்.

பயங்கர அழகு

இக்கோயிலில் நுழையும்போது காணும் தோற்றமும் கவனிக்கத்தக்கது. மயில் - மண்டபத்தையும் துவஜஸ்தம்பத்தையும் காண்கிறோம். ஏறும் படிக்கட்டுகளின் இருபுறமும் யானை, யாளி சிற்பங்கள். இச்சிற்பங்களின் அழகிய தோற்றத்தைப் படங்களில் காணலாம்.

கோயிலின் தெற்குப் புறமுள்ள யானை உருவத்தையும், யாளியின் மேல் உட்கார்ந்து கொண்டு எதிரியுடன் சண்டை போடும் காட்சியையும் பார்க்கிறோம். துதிக்கையோடுகூடிய இந்த யாளி எதிரியைச் சுருட்டிக்கொண்டு தன்னுடைய ஒரு காலால் அவனைக் கிழித்தெறியும் பயங்கர அழகையும் பார்க்கிறோம்.

தேர் போன்ற மண்டபம்


இம்மண்டபம் ஒரு தேர்போல் ஆக்கப்பட்டுள்ளது. சக்கரங்கள் பூட்டிய தேரைக் குதிரைகள், யானைகள் முதலியன இழுப்பது போல் அமைந்திருக்கிறது.


ஆனால், சக்கரங்களையும் அவற்றுக்கு அருகேயுள்ள குதிரைகளையும் நாம் இப்போது காண முடியாது. பின்னமான சில பாகங்களைத்தான் பார்க்க முடிகிறது.


யானை போகும் வேகத்தையும் மணியையும் கண்டு இந்த ரதம் போகும் வேகத்தை ஒருவாறு மனோபாவத்தால் உணர்ந்துகொள்கிறோம்.

படிக்கட்டின் இருபுறம் உள்ள யானைகளை இங்கே காணமுடிகிறது. மேலுள்ள அணி-மணிகளின் பூர்ணமான வேலைப்பாடுகளைத்தான் சிற்பி எவ்வளவு அற்புதமாய்க் காட்டியிருக்கிறார்!

யானை தன் துதிக்கையில் ஒரு குதிரையைத் தூக்கிக்கொண்டு கோபத்துடன் வீரிட்டுப்போகும் காட்சி வெகு அற்புதமாக அமைந்திருக்கிறது.




சில்பி



பிரமிக்கத்தக்க பயங்கர அழகு

நடனப் பெண் உள்ள பக்கத்தின் யாளியைத்தான் முழுப்படம் காட்டுகிறது. இங்கேயும் யாளி துதிக்கையில் ஒரு வீரனைத் தூக்கிக்கொண்டிருக்கிறது.

ஆனால், கோரமான பற்களோடுகூடிய வாயில் போட்டுக்கொள்ளப் போகும் பாவனையையும், இந்தப் பிடியில் இருந்து ஒருவாறு சமாளித்துக்கொண்டு வீரன் தன் கத்தியால் யாளியின் நெஞ்சிலே குத்த முயலும் காட்சியையும் இங்கே பார்க்கிறோம். இந்த வீரனுக்குக் கீழே யாளிப் பறவை ஒரு வீரனை வாயில் விழுங்க முயல்வதையும், அவன் திணறிக்கொண்டு எழும்பிக் குதிப்பதையும் காண்கிறோம்.

நல்லவேளை, கோரக் காட்சிகள் தத்ரூபமானாலும் சிலாரூபம்தானே! அச்சம் இல்லாமல் அணுகிச் சென்று வேலைப்பாடுகளை அனுபவிக்க முடிகிறது.

பாருங்கள், யானையின் பிடரி அழகையும் அதில் உள்ள வரிகளையும்கூட; பிரமிக்கத் தக்க கைத்திறன்.


தெவிட்டாத அழகு

இம்மண்டபத்தின் தூண்களும் நடன சபையில் உள்ளதுபோல் பல விசித்திரங்களுடன் அழகுக்கு அழகு செய்கின்றன.

இம்மண்டபத்தின் உட்புறத்தின் மீது கந்த புராணச் சித்திரங்களும், திருமுறை ஆசிரியர்களின் திருவுருவங்களும் அழகையே கொண்டு வனைந்ததுபோல் தீட்டப் பெற்றிருக்கின்றன.

அண்ணாந்து பார்க்கும் சிரமம் தோன்றாது பார்த்துக்கொண்டே இருக்கலாம். இந்த அழகுகளும் இந்த மண்டபத்தின் சிற்ப வேலைகளுடன் சேர்ந்து ஒரே அழகுப் பொக்கிஷமாய்க் காண்கின்றன. இதைக் காண நாள்தோறும் மக்கள் வருகிறார்கள்.

அருளிலும் அழகு, அச்சத்திலும் அழகு!




கங்காதர மூர்த்தி

கீழக் கோபுரத்தின் வடக்கே உள்ள நந்தவனத்தில், கங்கையை வரவழைக்கும் சிற்பம் இருக்கிறது. சிவபெருமான் தம் ஜடையில் ஒரு பெண்ணை ஒளித்து வைத்திருக்கிறார் என்று பார்வதி கோபம் அடையும் தோரணையும், இறைவன் சமாதானம் செய்யும் பாவனையும் இயற்கையாக அமைந்திருக்கின்றன.

இரண்டு உருவங்களிலும் இடையே பின்னம் ஏற்பட்டிருக்கின்றது. இந்த விதமாக அழகிய சிற்பங்கள் பின்னமுற்று இக்கோயிலில் சிதறிக் கிடக்கின்றன. கிழக் கோபுரத்தின் தெற்குப் பாகத்தில் தட்சிணாமூர்த்தி இருக்கும் இடத்தின் கீழே இந்த அழகிய, பின்னமடைந்த சிற்பங்களைக் காணலாம்.

கங்கையை வரவழைக்கும் மூர்த்தியின் கீழே இருபுறமும் 'புருஷா மிருகங்கள்' இருக்கின்றன. கோரப் பற்களோடுகூடிய மனித முகமும், பிடரி மயிருடன் சிங்கத்தின் கால்களுமாய்க் காட்சி அளிக்கின்றன.



(அருள் செய்யும் அழகைச் சந்திரசேகர மூர்த்தியிடம் காண்கிறோம். இது. சிஷ்ட பரிபாலன அழகு. துஷ்ட நிக்கிரகமும் ஓர் அழகுதான். விரும்பித் தரிசிக்கத்தக்க அழகல்ல. ஈஸ்வரனுடைய அழகு பயங்கரமாகவும் ஜொலித்து அருள் செய்வதுதான்.

சந்திரசேகரரின் கருணை மந்த மாருதம்போலே, கஜ சம்ஹார மூர்த்தியின் கருணை சண்ட மாருதம் போலே)

எதிர்ப்பக்கத்தில் உள்ள சிற்பங்கள், கிழக் கோபுரத்தின் முன்புறத்து விநாயகர் கோயிலின் தென்புறமாக இருக்கின்றன.

சந்திரசேகர மூர்த்தி

அபயவரத ஹஸ்தங்களுடன் சந்திர சேகரர் காட்சி அளிக்கிறார். சந்திரனில் ஒரு கலையைச் சிரசில் தாங்கி அபயம் கொடுக்கிறார்.

ஒரு பக்கம் தம்புராவுடன் நாரத மகரிஷியையும், மற்றப் பக்கம் ஜடா முடியுடன் இறைவனையும் காண்கிறோம்.

சிரசின் இரு புறங்களிலும் மேக மண்டலத்தில் தேவர்கள் இக்காட்சியைத் தரிசித்தவண்ணம் காணப்படுகிறார்கள்.

கஜ சம்ஹார மூர்த்தி

பக்கத்தில் இருக்கும் சிற்பம் கஜ சம்ஹார மூர்த்தி. யானை உருவத்துடன் ஹிம்சை செய்து வந்த ஓர் அசுரனைக் கொன்று, அந்த யானைத் தோலை மேலே போர்த்திக் கொண்டு, தலைமேல் ஒரு காலை வைத்துக் கொண்டு, ஒரு கையில் யானைத் தந்தத்தையும் வைத்துக்கொண்டு பயங்கர ஆரவாரம் செய்யும் திருக்கோலத்தில் காட்சியளிக்கிறார்.


பார்வதிதேவியே பயந்தவண்ணம் காண்கிறாள். தேவியின் இடையில் ஸ்கந்தர் காணப்படுகிறார்.

ஆயிரங்கால் மண்டபத்திலே...

கோயிலின் வடக்கு மூலையில் இருக்கும் ஆயிரங்கால் மண்டபத்துக்கு ‘ராஜ சபை’ என்றும் பெயர். இம்மண்டபத்தில் ஆனி, மார்கழி மாதங்களில் ஸ்ரீ நடராஜப் பெருமானை எழுந்தருளச் செய்து, அபிஷேக அலங்காரங்கள் செய்கிறார்கள்.

பதஞ்சலி மகா பாஷ்யத்தை உபதேசித்த சகல வித்யாபீடமும் இது. மாணிக்கவாசகர் ஊமைப்பெண்ணைப் பேசச் செய்த பெருஞ்சபையும் இதுதான்.

பதஞ்சலி, வியாக்கிரபாத ரிஷிகளும் தேவர்களும் கண்டு வணங்குமாறு ஸ்ரீ நடராஜர் வந்த தினம் என்பர், தைப் புஷ்ய தினத்தை. இம்மண்டபத்திலே இத்தினத்தை ஸ்ரீ பதஞ்சலி வியாக்கிரபாத அனுகிரக சங்கீத சபையார், தை மாதம் விமரிசையாகக் கொண்டாடுவார்கள்.



சில அதிசய அழகுகள்

சிவகங்கையின் தெற்குப் படிக்கட்டு மண்டபத்திலிருந்து வடக்குக் கோபுரம் தெரிகிறது; தூண்களின் நடுவே ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்மன் கோயிலின் முன் கோபுரத் தோற்றமும் தெரிகிறது.


சிவகங்கைச் சுற்று மண்டபங்களின் மேல்புறம் நந்தியும் விநாயகரும் அழகு செய்கின்றனர். இக்கோயிலின் பல பகுதிகளிலும் சிற்பங்கள் நல்ல வேலைப் பாடுகளுடன் மலிந்து கிடக்கின்றன.

படத்தில் முன்புறம் ஆயிரங்கால் மண்டபத்துக்கு ஏறும் படிக்கட்டுகளின் ஓரத்திலும் வேலைப்பாடுகளைக் காண்கிறோம்.

கால சம்ஹார மூர்த்தி

கீழக் கோபுரத்தின் தெற்குப் பக்கத்திலுள்ள நந்தவனத்தில் மரங்களிடையே கால சம்ஹார மூர்த்தியைக் காணலாம். சாதாரணமாக எல்லோரும் பார்த்துவிட முடியாதபடி இந்த மூர்த்தி நந்தவனத்தினுள்ளே மரங்களிடையே மறைந்திருக்கிறார்.

காலகாலனாகிய ஈஸ்வரனின் உக்கிர தாண்டவ கோலத்தை, அடுத்து வரும்



பக்கத்தில் பூர்ணமாகக் காணலாம். பதினாறு வயதுள்ள மார்க்கண்டேயனின் தீவிர பக்தி காரணமாகத் தோன்றிய கால காலத் தோற்றம் இது.

காலின் கீழே காலதேவனின் பரிதாபகரமான முடிவுதான் எவ்வளவு தத்ரூபமாய், எவ்வளவு அழகாய்க் காண்கிறது! இந்த எமராஜாவின் காலின் கீழே எம தூதனின் உருவமும் காணப்படுகிறது.

மேலே இந்தக் காட்சியைக் கண்டு பரவசமாகக் கைகூப்பி நிற்கும் மார்க்கண்டேயனின் உருவம் தோற்றம் அளிக்கிறது.

பயங்கரமான காட்சிகளிலும், பரிதாபகரமான காட்சிகளிலும் பக்தி பரவசக் காட்சிகளிலும் ஒருங்கே அழகு காட்டவல்லது சிற்பியின் கைத்திறன்; அழகு காட்டி அந்த அந்தக் காட்சிகளை அப்படி அப்படியே தோற்றுவிக்கவல்லது. இந்தக் கலைத் தத்துவத்தை நன்கு வெளியிடுகிறது கால சம்ஹார தாண்டவத் திருக்கோலம்.

இறைவனின் சூலம் ஏந்திய கையில் பாம்பு சுற்றிக்கொண்டு படம் விரித்து ஆடுவது, இக்காட்சியின் உக்கிரத்தை அதிகப்படுத்திக்காட்டுகிறது.

நாட்டியச் சிற்பங்கள்

கால சம்ஹார மூர்த்தியின் படத்துக்குக் கீழே இருக்கும் நடன கோஷ்டியின் சிற்பங்களைக் கிழக் கோபுரத்தினுள்ளே இருக்கும் பச்சையப்ப முதலியாரின் உருவச் சிலைக்கு வலது புறத்தில் காணலாம்.

இந்த நாட்டியப் பெண் - வரிசையிலும் எதிரிலும்தான் நாட்டிய நூலிலுள்ள பாவங்களைக் காண்கிறோம். இந்த நாட்டிய சுந்தரியின் தலை ரோமம் கிரீடம்போல் அலங்கரிக்கப் பெற்றுப் பூக்களால் சுற்றப் பட்டு அழகாய் விளங்குகிறது.

இங்குள்ள நடன பாவங்களிலே இதில்தான், நிற்கும் அழகும் வலது பாதத்தைத் தூக்கி வைக்கும் ஒய்யாரமும் பிரமிக்கத்தக்க நிலையில் அமைந்துள்ளன. தனது கோஷ்டியில் இருந்து சபையை நோக்கி வரும் காட்சியை இங்கே சிற்பத்தில் காட்டியிருக்கிறது.

இந்தச் சிற்பத்தோடு சேர்ந்திருக்கும் நாட்டியமணியை ஸ்ரீசிவகாமசுந்தரி கோயில் வெளிப்பிராகாரத்தின் வடமேற்கு மூலையிலுள்ள நாட்டிய வரிசைகளில் காணலாம். இதே பெண்ணின் மற்றொரு தோற்றத்தைத்தான் முழுப்படத்தின் முதல் உருவத்தில் காண்கிறோம். இந்தப் பெண் இருக்கும் வரிசையில்தான் இதன் பக்கத்திலுள்ள நாட்டிய மங்கையும் இருக்கிறாள்.

திருஞானசம்பந்தர்

'**சி**வஞானத்தின் திருவுருவம்' என்று அடியவர் போற்றும் திருஞானசம்பந்தப் பெருமான், இரு கைகளிலும் பொற்றாளங்களை வைத்துக்கொண்டு நிற்கும் அழகிய காட்சியைச் சிவகாமசுந்தரி அம்மன் கோயிலில் வெளியே உள்ள விநாயகருக்குச் சமீபத்தில் காண்கிறோம்.

இச்சிற்பம் முத்துகளாலேயே அலங்கரிக்கப் பெற்றிருப்பதுபோலத் தோன்றுமாறு வேலைப்பாடு அமைந்திருக்கிறது.

கொள்ளை கொள்ளும் அழகு


இதன் பக்கத்தில் படத்திலே காட்டியிருக்கும் யௌவனப் பெண்ணின் தோற்றத்தை, துவஜஸ்தம்பம் இருக்கும் மண்டபத்தில் தெற்குப் பக்கமுள்ள ஓரத்துத் தூணில் காணலாம்.


இந்த யௌவன சுந்தரியின் தேக அமைப்பும், முழங்கால் வரை தொங்கும் ஜடை அலங்கார அழகும், இந்தச் சிற்பத்தைப் பார்ப்பவரின் உள்ளங்களைக் கொள்ளைகொள்ளுமாறு அதிசயமாக அமைந்துவிட்டன.

இம்முழுப் படத்தின் இருபுறமும் உள்ள பூக்கொடி வேலையின் முழுத் திறமையும் துவஜஸ்தம்ப மண்டபத்தில் காணலாம்.

* * *

'**நா**ன் பொருட்களைச் சித்திரிக்கவில்லை; கருத்துகளைச் சித்திரிக்கிறேன்' என்றார் ஓர் ஓவிய நிபுணர். நமது ஓவிய மரபிலோ புற அழகைக் காட்டிலும் உள் அழகை, அதாவது கருத்து அழகைச் சித்திரிப்பதே சிறப்பியல்பு.





இந்தக் கலைத் தத்துவத்தை உள்ளத்தில் கொண்டு கால சம்ஹார மூர்த்தியின் உக்கிர அழகையும், நாட்டியச் சிற்பங்களின் நயங்களையும் உற்று நோக்க வேண்டும்.

புற அழகும் புறக்கணிக்கப்படவில்லை. உள்ளழகு புற அழகிலே நிழலாட வேண்டும் என்ற கொள்கையை நமது சிற்பிகள் தங்கள் உயர்தரச் சிற்பங்களில் மறப்பதில்லை.

இந்த உண்மையை அறியாதவர்களே, 'நமது சிற்ப - சித்திரங்கள் நிஜ உலகத்தோடு ஒட்டி நிற்பதில்லை!' என்கிறார்கள். ஸ்தூலமாய்க் காண்பதைக் காட்டிலும், கருத்துலகோடு இசைந்து காண்பதுதானே உண்மையான காட்சி?





கோயிலில் கலையுலகம்

சூர சம்ஹாரம்

மேலக்கோபுரத்தில் உள்ள சிற்பங்களில், அந்தப் பக்கமாகப் போகிறவர்களின் கண்ணிலே படுவது, எண்ணெய்க் காப்புடன் உள்ள சூர சம்ஹார சிற்பம்தான். பன்னிருகைப் பெருமானுக்குப் பத்து கைகளே காணப்படுகின்றன.

ஒரு காலைக் கீழே உதைத்துக்கொண்டும், மற்றக் காலை மயில் மீது வைத்துக்கொண்டும், அம்பறாத்தூணில் இருந்த அம்பை வெகு லாகவமாக எடுத்துப் பிரயோகிக்கும் அழகைப் பார்த்துப் பார்த்து அனுபவிக்க வேண்டும். இது கண்டு, எதிரியின் சேனைகள் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே ஓடும் காட்சிதான், இந்தச் சிற்பத்தில் எவ்வளவு அழகாய்க் காட்டப் பெற்றிருக்கிறது!

மயிலின் மீது வைத்திருக்கும் கால், பின்னப்பட்டு இருக்கிறது; இங்கே படத்தில் சேர்த்துக் காட்டி இருக்கிறது.

சில நுட்ப வேலைப்பாடுகள்


கிழக் கோபுரத்தின் வழியாக உள்ளே நுழைந்தவுடன் கோபுரத்தை ஒட்டிய மதில் சுவரின் பக்கத்தில், தெற்கு நோக்கியவாறு தட்சிணாமூர்த்தி, வீணாதர தட்சிணாமூர்த்தி, சண்டிகேச அனுகிரக மூர்த்தி ஆகிய மூர்த்திகளைக் காண்கிறோம். மிகவும் அழகிய நுட்ப வேலைப்பாடுகளோடுகூடிய சிற்பங்கள்.


'கோபுரத்தைப் பொம்மை தாங்குகிறதா?' என்று கேட்கிறோமே, இத்தகைய ஓர் அழகிய தோற்றத்தைக் கீழக் கோபுரத்தின் உட்பக்கத்தில் நாற்புறமும் இரண்டு சிங்கங்களுக்கு மத்தியில் பூதம் தாங்குவதாகத் தோற்றுவித்திருக்கும் காட்சியிலே கண்டு களிக்கிறோம்.


இன்னும் சில காட்சிகள்

கீழக் கோபுரத்தைக் காணும்போது, கால சம்ஹார மூர்த்திக்குப் பக்கத்திலுள்ள பைரவரையும் பார்க்கிறோம். கோபுரத்தில் உள்ளே நுழையும்போது சுப்பிரமணிய ஸ்வாமி கோயிலின் பக்கத்திலுள்ள துவார பாலகரையும் காண்கிறோம்.

கோபுரத்தின் வடக்கே ஊர்த்வ தாண்டவக் கோலத்தில் காளிக்கும் நடராஜருக்கும் நடக்கும் போட்டியின் முடிவையும் காண்கிறோம். இங்கு ஈசன் ஒரு கையில்







உடுக்கை பிடித்துக்கொண்டு, மற்றக் கையினால் நடனத்துக்குத் தகுந்தாற்போல வாசிப்பதையும், ஒரு கையினால் தாளம் போடுவதையும் காண்கிறோம். காலின் கீழே தோற்றுப்போய் நிற்கும் காளி உருவம் காணப்படுகிறது.

தோற்ற காளி, வடக்கு எல்லையில் கிழக்கு முகமாய்க் காவல் செய்கிறாள். கோர சொரூபம் நீங்கி நான்கு தலைகளுடன் காணப்படுகிறாள்.

மேற்கு நோக்கியவாறு காளிக்கு எதிரே பைரவர் கோயிலையும் படத்தின் வலது புறத்தில் காண்கிறோம்.

இத்தகைய சிற்பங்களோடுகூடிய ஸ்ரீநடராஜப் பெருமானின் கோபுரத்தை மீண்டும் தரிசித்தவண்ணம், 'கோபுர தரிசனம் பாபவிமோசனம்' என்ற வாக்கை நினைத்துக்கொள்கிறோம். ஆம்; கலையுலகில் அழகின்மை பாவம்; அசிரத்தை பாவம்; அலட்சிய புத்தி பாவம். கலையின்மையோ, கலைக் கொலையோ, பாவத்திலும் பாவம்!

இத்தகைய பாவங்களுக்கெல்லாம் விமோசனமாகக் கோபுர தரிசனம் செய்து விட்டுப் பிரிய முடியாமலே விடை கொள்கிறோம்.



முதல் பாகம் முற்றும்

விகடன் பிரசுரம்

தென்னாட்டுச் செல்வங்கள்

THENNATTU SELVANGAL (Volume 1)

இரண்டு பாகங்களும் சேர்த்து ₹650



ISBN 978-81-8476-440-6

9788184764406